# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

# ஆண்டறிக்கை

# 2016

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

## எமது தூர நோக்கு

இலங்கை பிரசைகளின் நலனுக்காக பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்காகக் கொண்டு பொதுத் துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

## எமது செயற்பணி

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்தல்

## எமது குறிக்கோள்கள்

1. வளங்களை தம்வசம் வைத்துள்ள நிறுவனங்களின் முகாமைத்துவங்கள் அவர்களுக்குள்ள பொதுக கணக்களிப்பொறுப்பினை உறுதிப்படுத்தி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கின்றனவா என்பது தொடர்பில சுயாதீன பரிசோதனையொன்றை மேற்கொள்தல்
2. பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகிய இரண்டு பாராளுமன்ற கண்காணிப்புக குழுக்களிற்கும் உதவுதல
3. முகாமைத்துவ அறிக்கைளினூடாக பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் அவர்களது கணக்களிப்பொறுப்பினை முன்னேற்றிக் கொள்வதற்கு கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனங்களிற்கு உதவுதல்

## எமது விழுமியங்கள்

மேன்மை
புத்தாக்கம்
தலைமைத்துவம்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செய்தி

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு உரித்தாகவுள்ள பொது நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டினை பயனுள்ளதாகவும் வினைத்திறனாகவும் பேணிவருவதற்காக சுதந்திரமான பரிசோதனையினை நடாத்துதல் மற்றும் அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் என்பன அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணியாக உள்ளது. இப் பணியினை நிறைவேற்றுவதுடன் சம்பந்தப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான எனது அறிக்கையினை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற எனது அறிக்கைகளின் ஏழாவது தொகுதியாக இந்த ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் ஏனைய அறிக்கைகளை பின்வரும் ஏழு தொகுதிகளின் கீழ் வெவ்வேறாக சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.*

| | | |
|---|---|---|
| *முதலாம் தொகுதி* | - | *அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள்* |
| *இரண்டாம் தொகுதி* | - | *அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள்* |
| *மூன்றாம் தொகுதி* | - | *நியதிச்சட்டமற்ற நிதியங்கள்* |
| *நான்காம் தொகுதி* | - | *வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்* |
| *ஐந்தாம் தொகுதி* | - | *மாகாண சபைகள்* |
| *ஆறாம் தொகுதி* | - | *உள்ளூராட்சி அதிகாரசபைகள்* |
| *எட்டாம் தொகுதி* | - | *விசேட கணக்காய்வு அறிக்கைகள்* |
| *ஒன்பதாம் தொகுதி* | - | *அரச கம்பனிகள்* |

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் செயலாற்றலும் நியதிச்சட்ட வகிபாகமும் பொது மக்கள் மத்தியில் விரிவான விவாதத்திற்கு உட்பட்டிருந்தமையால் இந்த ஆண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திற்கு வேலைப்பழுவுள்ள ஆண்டாக அமைந்திருந்தது. அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச்

சட்டத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அதனது பதவியணியினருக்கும் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவரது சுதந்திரத்தினை செயற்பாட்டுப் பரப்புகளில் மாத்திரமன்றி நிதி மற்றும் நிர்வாகத்திலும் பாதுகாக்க வேண்டும் என்பது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வுச் சேவைகள் ஆணைக்குழு 2015 திசெம்பர் மாதத்தில் ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையிலுள்ள பதவியணியினரின் நியமனங்கள், பதிவியுயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் பதிவிநீக்கங்கள் இந்த ஆணைக்குழுவினால் இடம்பெறவேண்டியிருந்தது. இருப்பினும்,தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிராமை காரணமாக இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவையினை தாபிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. ஆகையால் இலங்கை கணக்காய்வுச் சேவையினதும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையினதும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இலங்கை கணக்காய்வுச் சேவையின் உறுப்பினர்களாலும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள உறுப்பினர்களாலும் நிறைவேற்றப்பட்ட சேவைகளின் பெறுமதியான பங்களிப்பு அமைச்சரவையால் இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளமை மற்றும்இலங்கை அரசாங்க கணக்காய்வுச் சேவை என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கும் புதிய இணைந்த சேவைக்கு மேற்குறித்த இரண்டு சேவையினைதும் உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்பதற்கும்அங்கீகாரம் வழங்கியிருந்தமை என்பன திணைக்களம் அடைந்து கொண்ட பாரிய வெற்றிகளாகும். அரசாங்கத்தால் அல்லது கூட்டுத்தாபனமொன்றால் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்றால் 50 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குமூலதனத்துடன் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமை ஏனைய பிரதான மாற்றமாகும்.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த கணக்காய்வு சட்டமூலம் சட்டமா அதிபர், சட்ட வரையுனர் மற்றும் பல்வேறு துறைகளிலுள்ள ஏனைய உயர்தொழிலாளர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வரையப்பட்டது. கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்போது காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட மிகை அறவீட்டு அதிகாரத்தினை ஒட்டுமொத்த அரச துறைக்கும் விரிவாக்குவதற்கான பிரேரணை முன்மொழியப்பட்டுள்ளது. கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு உயர்தொழில் புரிவோரிடமிருந்து ஏற்படுகின்ற அழுத்தங்கள் அடங்கலாக நிலையாக மாறுகின்ற மற்றும் அதிகரித்த கேள்வி கொண்ட சூழலில் மேற்குறித்த சவால்களை எதிர்கொண்டு திணைக்களத்தை மறுசீரமைத்தல் மிக முக்கியமானதாக உள்ளது. நெருக்கமான கண்காணிப்பை உறுதிப்படுத்தி மீளாய்வு செய்வதற்கும் கணக்காய்வின் நோக்கெல்லையை விரிவாக்குவதற்கும் ஏற்ற வகையில் 59 பிரிவுகளின் கீழ் கணக்காய்வு மற்றும் உதவியாளர் சேவைகளை ஒழுங்கமைத்து நிறுவனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் கவனம் செலுத்துகின்ற முக்கியமான விடயங்களையும் அவ்வாறே பொதுத் துறை எதிர்நோக்கியுள்ள பிரதான சிக்கல்களையும் திணைக்களம் சிறப்பாக புரிந்துகொண்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் பல்வேறு செயற்பாடுகளை அமுல்படுத்தியுள்ளது. கணக்காய்வு அறிக்கைகளை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் வழங்குவதற்காக திணைக்களத்தின் செயற்திறனை தொடர்ச்சியாக அதிகரிப்பதிலும் மீளாய்வு செய்வதிலும்திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இறுதியாக அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வுச் சுதந்திரம் திணைக்களத்தின் வினைத்திறனில் முக்கியத்துவம் வாய்ந்த காரணி என்பது தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது.

கணக்காய்வுத் திணைக்களத்தின் கடமைக்காக தம்மை அர்ப்பணித்துள்ள பதவியணியொன்றுடன் வேலை செய்தல் எனக்கு கிடைத்த கௌரவமாக உள்ளதுடன் அவர்களது கடமைகளை வினைத்திறனாக செயலாற்றலுடன் நிறைவேற்றுவதற்கு அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், பொது முயற்சிகள் குழுவினதும் பொதுக் கணக்குகள் குழுவினதும் தலைவர்கள் மற்றும் அதன் அங்கத்தவர்கள், துணையாக நின்று கணக்காய்வுப் பணிகளில் ஈடுபட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்கள், இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம், கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள், திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளிற்கு உதவியாக இருந்த சனாதிபதியின் செயலாளர் அடங்கலான சனாதிபதி செயலகத்தின் பதவியணியினர், நிதி அமைச்சின் செயலாளர் அடங்கலான பதவியணியினர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழு உள்ளிட்ட நிர்வாகத்திற்கு உதவிபுரிந்த ஏனைய அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் திணைக்களத்தின் பௌதீக மற்றும் மனித வள மேம்பாட்டிற்கு பங்களித்த சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாராளுமன்றத்தினதும் பொது மக்களினதும் தேவைகளிற்கு அமைவாக எனது கணக்காய்வுகள் காணப்படுவதனை உறுதிப்படுத்துவதில் நான் மிக்க ஆர்வத்துடன் செயற்படுகின்றேன்.

**எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

2017 ஒக்தோபர்

# உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| எமது நிறுவனம் | 01 |
| சட்டரீதியான நிறைவேற்றல்கள் | 03 |
| எமது நிறுவனக் கட்டமைப்பு | 11 |
| பதவியணியினர் பயிற்சி | 17 |
| தகைமை பெற்ற கணக்காய்வாளர் களை சேவையில் ஈடுபடுத்துதல் | 21 |
| பாராளுமன்றத்திற்கு உதவுதல் | 21 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படும் மிகை அறவீடு | 24 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்படும் செயலாற்றல் கணக்காய்வு | 24 |
| புலனாய்வுக் கணக்காய்வு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள் | 39 |
| 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் | 47 |
| | |
| **2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்** | 59 |
| - இலங்கை மத்திய வங்கியின் அரசாங்க பொதுப்படுகடன் திணைக்களத்தினால் 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகளை வழங்குதல் மீதான விசேட கணக்காய்வு அறிக்கை | 60 |
| - 2009 ஆம் ஆண்டு முதல் 2016 யூன் வரை நுரைச்சோலை லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்திற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி கொள்வனவு | 66 |
| - வரையறுக்கப்பட்ட லங்கா சதொசவினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி செயற்பாடு மீதான விசேட கணக்காய்வு அறிக்கை | 69 |
| **கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு (துறை ரீதியாக)** | 74 |
| திரட்டு நிதியம் | 75 |
| பொதுப் பாதுகாப்பு | 95 |
| அரசாங்க முயற்சிகள் | 101 |
| உள்ளூராட்சி | 110 |
| வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள் | 117 |
| அரசாங்க வங்கிகள் | 122 |
| விவசாயம் | 140 |
| பெருந்தோட்டக் கைத்தொழில் | 146 |
| காணி | 156 |
| கல்வி | 161 |
| தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் | 173 |
| சுற்றாடல் | 178 |
| வெளிநாட்டு அலுவல்கள் | 182 |

| | |
|---|---|
| வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் | 184 |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி | 188 |
| சுகாதாரமும் போசாக்கும் | 197 |
| ஊடகத்துறை | 204 |
| சட்டமும் ஒழுங்கும் பாராளுமன்ற அலுவல்களும் | 208 |
| துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை நடவடிக்கைகள் | 212 |
| பெருந்தெருக்கள் | 220 |
| திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி | 227 |
| அனர்த்த முகாமைத்துவம் | 238 |
| விளையாட்டு அலுவல்கள் | 244 |
| பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் | 250 |
| சுற்றுலா அலுவல்கள் | 256 |
| நகர அபிவிருத்தி | 260 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் | 266 |
| வீடமைப்பும் நிர்மாணங்களும் | 271 |
| போக்குவரத்து | 276 |
| இளைஞர் விவகாரம் | 289 |
| சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல் | 296 |
| விஞ்ஞான தொழில்நுட்பமும் ஆராய்ச்சிகளும் | 300 |
| தொடர்பாடல் | 305 |
| உயர் கல்வி | 311 |
| மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 317 |
| பெற்றோலிய வள அபிவிருத்தி | 321 |
| கிராமிய பொருளாதார அலுவல்கள் | 329 |
| நகராக்கத் திட்டமிடல்கள் மற்றும் நீர் வழங்கல் | 337 |
| நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் | 343 |
| நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனச்சீவராசிகளின் பாதுகாப்பு | 345 |
| அரசாங்க சேவைகளிற்கான ஓய்வூதிய நலன் | 348 |
| **மாகாண சபைகளிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு** | 352 |
| மேல் மாகாண சபை | 353 |
| மத்திய மாகாண சபை | 356 |
| வடமத்திய மாகாண சபை | 359 |
| தென் மாகாண சபை | 364 |
| கிழக்கு மாகாண சபை | 367 |
| வட மாகாண சபை | 371 |
| சப்ரகமுவ மாகாண சபை | 376 |
| வடமேல் மாகாண சபை | 380 |
| ஊவா மாகாண சபை | 384 |

## எமது வரலாறு

முன்னர் சிலோன் என அழைக்கப்பட்ட இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஆரம்பத்தினை பிரித்தானியர் காலத்தின் ஆரம்பப்பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். கிடைக்கக்கூடியதாகவுள்ள ஆவணங்களிலிருந்து 1776 இல் இலங்கையில் பிரித்தானியர்கள் குடியேற்றம் இடம்பெற்று மூன்று ஆண்டுகளின் பின்னர் அதாவது 1799 இன் ஆரம்ப பகுதியில் சிசில் ஸ்மித் என்பவர் கணக்காளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. அன்று முதல் இலங்கையின் உயர் கணக்காய்வு நிறுவனமாக 40 கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் சுதந்திர நிறுவனமொன்றாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் தொழிற்பட்டு வருகின்றது.

## கணக்காய்விற்காக எமக்குள்ள அதிகாரம்

பொதுத் துறை நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கான அதிகாரம் முதன்மையாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலிருந்து கிடைத்துள்ளது.

அரசாங்கம் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி மன்றமொன்று ஐம்பது சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றில் வைத்திருக்குமாயின் அக் கம்பனிகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த அதிகாரம் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் கீழ் மேலும் விரிவுபடுத்தப்பட்டு கீழுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> *“கணக்காய்வாளர் தலைமை அதிபதி அரசாங்கத்தின் எல்லாத் திணைக்களங்கள்,சனாதிபதிக்கான செயலாளர் அலுவலகம், பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம்,அமைச்சரவையின் அலுவலகங்கள், நீதித்துறைச் சேவை ஆணைக்குழு, அரசியலமைப்புப் பேரவை, 41 (ஆ) என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள்,நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்,பாராளுமன்ற செயலாளர் நாயகம், உள்ளூராட்சி அதிகார சபைகள், பொதுக் கூட்டுத்தாபனங்கள்,ஏதாவது எழுத்துமூல சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் வேறு பொறுப்பு முயற்சிகளும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அல்லது பதிவுசெய்யப்பட்டதுமாக கருதப்பட்டுள்ள எந்தக் கம்பனிகளில் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை அரசாங்கம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபை வைத்திருக்கின்றதோ அக் கம்பனிகள் எவற்றையும் அவற்றின் கணக்குகளையும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.”*

அரசியலமைப்பினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரம் கீழே காட்டப்பட்டுள்ள நியதிகளால் மேலும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

- அரச கூட்டுத்தாபனங்களிற்கான கணக்காய்வு ஏற்பாடுகளை வழங்குகின்ற 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II
- மாகாண சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டம் (23 ஆம் பிரிவு)
- மாநகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு
- நகர சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181 ஆம் பிரிவு
- பிரதேச சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்கும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் (172 ஆம் பிரிவு)
- கமத்தொழில் அபிவிருத்திச் சபைகளைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 2000 இன் 46 ஆம் இலக்க கமத்தொழில் அபிவிருத்திச் சபைகள் அதிகாரச் சட்டம் (58 ஆம் பிரிவு)
- விளையாட்டுச் சங்கங்களைக் கணக்காய்வு செய்வதற்கு ஏற்பாடுகளை வழங்கும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுச்

சங்கங்கள் அதிகாரச்சட்டம் (9 ஆம் பிரிவு).

தேவைப்படுமிடத்து பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேறு எவையேனும் கடமைகளையும் புரிவதற்கு அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்குகின்றது. தனது செயற்பாடுகளையும் கடமைகளையும் புரிகையில் தமது கடமையில் உதவி செய்வதற்கு தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை ஈடுபடுத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அரசியலமைப்பு அதிகாரம் வழங்கியுள்ளது. அத்துடன் கணக்காய்வு தொடர்பான ஏனைய தொழில்நுட்ப, தொழில்சார், விஞ்ஞான ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு விசேட நிபுணர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 154 (5) ஆம் உறுப்புரையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எந்த ஒரு நபராவது கடமை வெளிப்பாடு, பணிகள் என்பவற்றை ஆற்றுகையில்பொதுத் துறை நிறுவனங்கள் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் சகல புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பெறுவதற்கும் களஞ்சியங்கள் மற்றும் எனைய சொத்துக்கள் என்பவற்றை அணுகுவதற்கும், கணக்காய்வினை மேற்கொள்வதற்கும்அவ்வாறான கடமைகள், பணிகள் என்பவற்றை ஆற்றுவதற்குத் தேவையான தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெறுவதற்கும் அதிகாரத்தினை வழங்கியுள்ளது.

## எமது சேவை பெறுனர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லை அரசியலமைப்பினால் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச்சட்டத்தில் கம்பனிகளையும் உள்ளடக்கி அது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள எமது சேவை பெறுனர் அடிப்படை பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| அமைச்சுக்கள் | 51 |
| திணைக்களங்கள் | 95 |
| மாவட்டச் செயலகங்கள் | 25 |
| கூட்டுத்தாபனங்கள் | 211 |
| அரசாங்க கம்பனிகள் | 128 |
| (பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப் பரப்பிற்குள் கொண்டுவரப்பட்டவை) | |
| பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சியளித்தல் நிறுவனங்கள் | 75 |
| அரசாங்க வங்கிகள் | 08 |
| நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 69 |
| வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்கள் | 127 |
| ஏனைய சுயாதீன நிறுவனங்கள் | 19 |
| மாகாண சபைகள் | 09 |
| உள்ளூராட்சி மன்றங்கள் | 335 |
| கமநல சேவை நிலையங்கள் | 559 |
| விளையாட்டுச் சங்ககங்கள் | 46 |

## எமது நோக்கெல்லை

தனது தற்றுணிபின் பிரகாரம், கணக்காய்வின் நோக்கெல்லையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தீர்மானிப்பார். இது தொடர்பில் அவர் தற்போதுள்ள நியமங்கள் அதாவது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICASL), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச அமைப்பு (INTOSAI), அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களது ஆசிய அமைப்பு (ASOSAI),தொடர்பான விதிகளும் சிறந்த செயல் முறைகளும் ஆகியவற்றாலும் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) ஆகியவற்றாலும் வழிநடாத்தப்படுகின்றார்.

இவற்றிற்கும் மேலாக, அரச கூட்டுத்தாபனங்களைப் பொறுத்தவரை 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கருதப்பட வேண்டிய கணக்காய்வின் நோக்கெல்லை மிகத் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கான விபரமான அறிக்கை, கூட்டுத்தாபனம் ஒன்றின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்படும் அறிக்கை,பாராளுமன்றத்திற்கான பிறிதொரு அறிக்கை என்ற வகையில் 03 முக்கிய நியதிச்சட்ட அறிக்கைகள் வழங்கப்படுகின்றன. நிதிஅதிகாரச்சட்டத்தில் விபரிக்கப்பட்டவாறு அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள்,சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் தொடர்பிலான கணக்காய்வு நோக்கெல்லையில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

- தகவல் தெரிவிப்பதற்கான நோக்கில் கூட்டுத்தாபன செயற்பாடுகளை

தொடர்ச்சியாக மதிப்பிடக்கூடிய வகையில் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பன உரிய விதத்தில் போதியளவில் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும் அவ்வாறான முறைமைகள் நடைமுறைகள் புத்தகங்கள் பதிவுகள் ஏனைய ஆவணங்கள் யாவும் பயனுள்ள வகையில் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதும்,

- அரசாங்க கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் அக் கூட்டுத்தாபனச் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிற்கிணங்க உள்ளனவா மற்றும் கூட்டுத்தாபன நிர்வாகத்தில் நியாயம் நிலவுகின்றதா என்பதும்,
- நிதிகளின் கடப்பாடு மற்றும் நிதிகளின் பயன்பாடு சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் உள்ளனவா என்பதும்,
- பணம் வைத்திருத்தலும் சொத்துப் பாதுகாப்பும் திருப்திகரமாக உள்ளனவா,
- கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் கூட்டுத்தாபனக் காலப் பகுதிக்குரிய விவகாரங்களது உண்மையானதும் நேர்மையானதுமான தன்மையை வெளிப்படுத்துமாறு கணக்கீடு, நிதியளிப்பு, பெறுமதியிடல் போன்ற அடிப்படைகளுக்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதும்,
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தேவையெனக் கருதப்படுகின்ற அவ்வாறான ஏனைய விடயங்கள்

## எமது சுதந்திரம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுதந்திரம் அரசியலமைப்பினால் விரிவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்பின் (INTOSAI) உயர் கணக்காய்வு நிறுவனங்களின் (SAI) சுதந்திரம் மீதான அடிப்படைக் கோட்பாடுகளுடன் இணங்கும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***"கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவிவகித்தலும் வேண்டும்."***

நோய்வாய்ப்படல் அல்லது உடல் அல்லது உள ரீதியான இயலாமை காரணமாக மாத்திரம் சனாதிபதியினால் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டு அவரை பதவிநீக்கம் செய்யலாம்.

அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை மேலும் தெரிவிப்பது யாதெனில்,கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சம்பளம் பாராளுமன்றத்தாலேயே நிர்ணயிக்கப்பட்டு அது திரட்டிய நிதிக்குச் சாட்டுப்படுவதுடன் அவரது பதவிக்காலத்தில் குறைக்கப்படவுமாகாது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி எந்தவொரு அமைச்சரினதும் அல்லது அரசாங்க அலுவலகத்தினதும் மேற்பார்வைக்கு உட்படுவதில்லை.

## சட்டரீதியான நிறைவேற்றுதல்கள்

### சட்டரீதியான நிறைவேற்றுதலுக்கான தேவைப்பாடுகள்

கணக்காய்வாய்வாளர் தலைமை அதிபதியின் பணியாற்றும் சுதந்திரம் இற்றை வரை அரசியலமைப்பின் வாயிலாகப் பாதுகாக்கப்பட்டபோதும், அவரது நிதிசார் மற்றும் நிர்வாகச் சுதந்திரம் என்பன இவ்விடயங்கள் மீதான அரசியலமைப்பு மற்றும் நீதித்துறை ஏற்பாடுகளின் மூலம் நிறைவேற்றுநர்களால் மட்டுப்படுத்தப்படுகின்றது. மனிதவளம் மற்றும் நிதி ஆகிய மூலவளங்களுக்கு நிறைவேற்றுநர் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதி தங்கியிருப்பதானது பாராளுமன்றத்தின் பொருட்டு மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளது உண்மையான, சுதந்திரமான தன்மைக்கு ஊறுவிளைவிப்பதாகும். ஏனெனில் எந்தவொரு நிறுவனத்திற்கோ தனிநபருக்கோ முற்றாக கடப்பாடு இன்றியும் சர்ச்சைக்குரிய பழிவாங்கல்களுக்கு உட்படாதவராயும் அவர் இருத்தல் வேண்டும்.பணிகளையும் நிதியையும் உள்ளடக்கியவாறான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு சட்டங்களின் வாயிலாக பாராளுமன்றத்தால் விரிவான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது. தற்போது தனது வரவு, செலவுத் திட்டத்திற்குப் பொதுத்

திறைசேரியிலேயே அவர் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அவரது திணைக்களத்திற்கான மூலவள ஒதுக்கீடு திணைக்களம் எதிர்நோக்குகின்ற இடர்களுடன் பிணைந்தவையாக காணப்படவில்லை. ஏனைய முன்னேறிய பொதுநலவாய நாடுகள் போல் அல்லது இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது வரவு, செலவுத் திட்டம் நீதித்துறைக் குழு ஒன்றினால் பரிசீலிக்கப்படுவதோ அல்லது அங்கீகரிக்கப்படுவதோ இல்லை. அவரது வரவு, செலவுத் திட்டத்தின் மீதான நிறைவேற்றுநர்களது கட்டுப்பாடுகளிலிருந்து அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதுமில்லை.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினதும் அவரது பதவியணியினரதும் நிர்வாகச் சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது. கண்காய்வாளர் தலைமை அதிபதியினது பதவியணியினரது நியமனம், பதவி உயர்வு இடமாற்றம், ஒழுக்காற்று விடயங்கள், சம்பளம் மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் என்பன முன்னர் சனாதிபதியின் செயலாளரில் தங்கியிருந்தது. பின்னர் அரசியலமைப்பின் பதினேழாவது திருத்ததையடுத்து அந்த அதிகாரங்கள் அரசசேவை ஆணைக்குழுவிடம் (PSC) ஒப்படைக்கப்பட்டுள்ளன. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முழுமையான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்காமையால் தற்போதைய ஏற்பாட்டின் கீழும் தனது பதவியணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி இடர்களை எதிர்நோக்குகின்றார். நீதித்துறைச் சேவை ஆணைக்குழு எனும் விசேட அமைப்பின் கீழ் வரும் நீதித்துறைச் சேவை போன்று சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டிய விசேட சேவை ஒன்றாகக் கணக்காய்வுச் சேவையும் கருதப்படுதல் வேண்டும்.

மேலும், அரசியலமைப்பின் படி "அரசாங்க உத்தியோகத்தர் தொடர்பான விசேட பட்டியலில்" கணக்காய்வாளர் தலைமை அதிபதியும்சேர்த்துக் கொள்ளப்படாமையால், தாபன விதிக்கோவையில் விபரிக்கப்பட்டுள்ள சகல அரசாங்க நிர்வாகப் பிரமாணங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அவரது பதவியணியினருக்கும் ஏற்புடையனவாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரம் இதனால் மேலும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றது. இவ்வாறான நிர்வாகக் குறைபாடுகள் அவரது கணக்காய்வு பணிகளுக்கு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடத்தக்க தடைகளாக இருந்துள்ளன.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சர்வதேச அமைப்பின் ("இன்டொசாய்") 1977 இன் "லீமா பிரகடனத்தில்" அரசாங்க கணக்காய்வுச் சுதந்திரத்திற்கான மூலதத்துவங்கள், முறைகள் மற்றும் தொழில்சார் விதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் 30 ஆண்டுகளிற்குப் பின்னர் அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுதந்திரம் தொடர்பிலான XIX ஒன்றுகூடலின் போதான மெக்சிகோ பிரகடனத்தில் (2007மெக்சிகோ) அரசாங்க நிறுவனங்களின் சிறந்த கணக்காய்விற்காக அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களிற்கான சுதந்திரத்திற்கு பின்வரும் 8 விடயங்கள் அத்தியாவசியமானது என இனங்காணப்பட்டுள்ளன.

**கொள்கை 1**

*அர்த்தமுள்ளதும் பயனுள்ளதுமான அரசியலமைப்பிற்கு இணங்க / நியதிச்சட்டரீதியான / சட்டரீதியான கட்டமைப்பொன்று மற்றும் அந்த கட்டமைப்பினுள் நடைமுறையில் அமுல்படுத்தப்படும் ஏற்பாடுகள் காணப்படுகின்றமை.*

அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய சுவாதீனத்தின் அளவினை விரிவாக காட்டும் வகையிலான சட்டங்களை இயற்றுதல் அவசியமாகின்றது.

**கொள்கை 2**

*அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ( கல்வியியல் நிறுவனங்களின்) அங்கத்தவர்கள் தமது கடமைகளை சாதாரணமாண முறையில் நிறைவேற்றும் போது அவர்களின் பதவிகளின் பாதுகாப்பு மற்றும் சட்டச் சூழலின் சுவாதீனத்துவம்.*

பின்வரும் நிலைமைகளுக்கு கட்டுப்படும் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் தலைவர்களினதும் கல்வியல் நிறுவனங்களின் அங்கத்தவர்களின் நியமனம், மீள் நியமனம், வேலை வாய்ப்பு, பதவி நீக்கம் மற்றும் ஓய்வூதியம் பெறல் தொடர்பான நிபந்தனைகள் குறித்த சட்டங்களை

இயற்றுதல் மூலம் விசேடமாக காண்பிக்கப்பட வேண்டும்.

- அரசியலமைப்பில் உறுதிபடுத்தப்படும் நடைமுறையின் மூலம் சுவாதீனத்துவத்தை சான்றுறுதிப்படுத்தும் நியமனங்கள், மீள் நியமனங்கள் அல்லது பணி நீக்கம் (அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சுவாதீனத்துவம் மற்றும் தொடர்புடைய ISSAI II வழிகாட்டி கோவை மற்றும் சிறந்த நடைமுறைகள்).
- தமது கட்டளைகளை (Mandate) எதிர்ப்புகளின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தும் அச்சமின்றி நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான முறையில் போதியளவான நீண்ட மற்றும் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையுடன் மேற்கொள்ளப்படும் நியமனங்கள்;
  மற்றும்
- தமது கடமைகளை உரிய முறையில் நியாயமான முறையில் நிறைவேற்றும் போது கடந்த காலத்தில் அல்லது தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனுமொரு பணியொன்றை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படும் முறைப்பாடொன்றின் போதான தடைகாப்பு. (Immune)

**கொள்கை 3**

*அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பணிகளை நிறைவேற்றும் போது போதியளவில் பரவலாக்கப்பட்ட கட்டளை (Mandate) மற்றும் பூரணமான விருப்புரிமை.*

பின்வரும் பணிகளை கணக்காய்வு செய்யும் அதிகாரம், அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட வேண்டும்.

- பொது நிதி, வளங்கள் அல்லது சொத்துக்களை பெற்றுக்கொண்ட நபரொருவர் அல்லது நலனாளியொருவரால் அவற்றை பாவனைக்கு உட்படுத்தல் தொடர்பான அதனது நாளாந்த தன்மை தொடர்பில் கவனம் செலுத்தாது கணக்காய்வுக்கு உட்படுத்துதல்.
- அரசாங்கத்திற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல்.
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் கணக்குகள் தொடர்பில் சட்டரீதியான மற்றும் நியாயத்தன்மை;
- நிதி முகாமைத்துவத்தின் மற்றும் அறிக்கையிடலின் தரம்; மற்றும்
- அரசின் அல்லது அரச நிறுவனங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சிக்கனம், செயற்திறன் மற்றும் விளைதிறன்.

சட்டரீதியாக அவ்வாறு செயற்படுமாறு குறிப்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களால் அரசினது அல்லது அரச நிறுவனங்களின் கொள்கைகளை கணக்காய்வுக்கு உட்படுத்த கூடாதெனினும், அவர்களது கணக்காய்வு நடவடிக்கையானது கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பணிக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் அந்த நிறுவனங்களுக்குரிய முறையில் அரசியலமைப்பு ரீதியில் விதிக்கப்படும் சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டியதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பினூடாக அல்லது நிறைவேற்று ரீதியாக மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகளில் அல்லது தலையீடுகளில்

இருந்து அந்த கணக்காய்வு நிறுவனம் விடுதலையளிக்கப்படும்;

- கணக்காய்வு பிரச்சினைகளை தேர்ந்தெடுத்தல்;
- அவர்களது கணக்காய்வினை திட்டமிடல், நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உட்படுத்துதல், நடாத்துதல், அறிக்கையிடல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்;
- தமது அலுவலகங்களின் ஒழுங்கமைப்பு மற்றும் முகாமைத்துவம்;
- அங்கீகரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் தமது கட்டளையின் (Mendate) ஒரு பகுதியாகும் சந்தர்ப்பங்களின் போது தமது தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்;

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களால் தாம் கணக்காய்வு செய்யும் ஒழுங்கமைப்புக்களின் முகாமைத்துவத்தினுள் ஏதேனுமொரு விதத்திலான தலையீடொன்று அல்லது தலையீடொன்று இடம்பெறுவதாக தென்படும் வகையில் செயற்படலாகாது.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தம்மால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனங்களுடன் மிகவும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள கூடாதென உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் பிரகாரம் அவர்கள் நோக்கங்களுக்கமைய செயற்பட்டவாறு உள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமது கடமைகளை நிறைவேற்றும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் பூரணமான விருப்புரிமையின் அடிப்படையில் செயற்படக்கூடியதாக இருக்க வேண்டும். அவர்கள் அரசின் நிதியங்களின் பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதற்கு பாடுபடும் அரச அல்லது அரச நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்கள் தொடர்பான சர்வதேச அமைப்பிலும் சர்வதேச கணக்காளர் சம்மேளனத்தினாலும் ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை விதிக்கும் நிறுவனங்களிலும் உத்தியோகபூர்வ ஆவணங்களை அடிப்படையாக கொண்ட பொருத்தமான பணிகள் மற்றும் கணக்காய்வு நியமங்களைப் போன்று ஒழுக்கநெறிக் கோட்பாடுகளும் அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் சட்டங்கள் மூலம் அல்லது சட்டங்களை உருவாக்குவதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்த செயலாற்றல் அறிக்கையொன்றினை அல்லது அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தினால் சட்ட மன்றத்திற்கு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அந்த நிறுவனத்தால் அந்த அறிக்கைகள் பொது மக்களுக்கு அறிந்து கொள்வதற்கு இடமளிக்க வேண்டும்.

**கொள்கை 4**
*தடைகளின்றி தகவல்களை பெறக்கூடியதாக இருத்தல்.*

அதி உயர் கணக்காய்வு நிறுவனத்திற்கு சொந்தமான சட்டரீதியான பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து ஆவணங்கள் மற்றும் தகவல்களை உரிய நேரத்தில், செம்மைத்தன்மையுடன், நேரடியாக மற்றும் சுதந்திரமாக பெற்றுக்கொள்வதற்கு போதியளவான அதிகாரங்கள் அந்த நிறுவனத்திடம் காணப்பட வேண்டும்.

**கொள்கை 5**
*தமது பணிகள் தொடர்பில் அறிக்கையிடுவதற்கான உரிமையும் கடப்பாடும்*

தமது கணக்காய்வு பணியின் பெறுபேறுகளை அறிக்கையிடல் தொடர்பில் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வரையறைகளை விதிக்கக்கூடாது. தமது கணக்காய்வு பணிகளின் பெறுபேறின் கீழ் வருடத்திற்கு ஒரு தடவையாவது அறிக்கையிடுவதற்கு அவர்களுக்கு சட்டத்தினால் கட்டளையிடப்பட வேண்டும்.

**கொள்கை 6**
*கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கம் மற்றும் கால நிர்ணயத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் மற்றும் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளித்தல்.*

- தமது கணக்காய்வு அறிக்கைகளின் உள்ளடக்கத்தினை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கருத்துக்களை பொருத்தமான முறையில் கவனத்திற் கொண்டு தமது கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றதுஇ
- கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டிய ஆகக்குறைந்த தேவைப்பாடுகளை குறிப்பிடலும் பொருத்தமான சந்தர்ப்பங்களின் போது முறையான கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்காக அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கான குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் அறிவித்தலொன்று சட்டரீதியான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அறிக்கையிடுவதற்கு தேவையான விடயங்கள் குறிப்பாக சட்டத்தினால் நிரணயிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது தவிர்ந்த தமது கணக்காய்வு அறிக்கைகளின் கால நிர்ணயத்தை தீர்மானிக்கும் சுதந்திரம் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படுகின்றது.
- ஒட்டுமொத்தமான முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது அரசினால் விசாரணையொன்று இல்லாத போது கணக்காய்விற்காக விசேட கோரிக்கையொன்று மேற்கொள்ளப்படும் போது அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு அவற்றை நிறைவேற்ற முடியும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் அறிக்கைகளை சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் உரிய அதிகாரிகளுக்கு முறையாக சமர்ப்பிப்பதன் மூலம் கையளித்ததன் பின்னர் அவற்றை வெளியிட்டு பகிர்ந்தளிக்க வேண்டும்.

**கொள்கை 7**
*அதி உயர் கணக்காய்வு நிறுவனத்தின் பரிந்துரை தொடர்பில் விளைவுடைய பின்தொடர் பொறிமுறையொன்று காணப்படுதல்.*

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்கள் தமது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளினை மீளாய்வு செய்து பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு மீள்திருத்த படிமுறைகளை எடுப்பதற்கு உரிய முறையில் சட்ட மன்றங்களுக்கு அல்லது அதன் ஆணைக்குழுவிற்கு அல்லது கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களைப் போன்றே உரிய முறையில் சட்டமன்றம், அதன் ஆணைக்குழுவொன்று அல்லது

கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபை போன்றவற்றின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள் உரிய முறையில நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்கு உரித்தான உள்ளக பின் தொடர் முறைமையொன்று காணப்படுகின்றது.

- பின்தொடர் நடவடிக்கைகளை அங்கீகரிப்பதற்கு உரித்தான அரசியலமைப்பு அதிகாரங்கள் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களிடம் காணப்படும் போதும் அந்த கணக்காய்வு நிறுவனங்களுக்குரிய பின்தொடர் அறிக்கைகள் உரித்தாகும் வகையில் சட்டமன்றத்திற்கு அல்லது அதனது ஆணைக்குழுவொன்றிற்கு அல்லது கணக்காய்வினை மேற்கொண்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.

**கொள்கை 8**

*நிதி மற்றும் முகாமைத்துவம் / நிர்வாக தன்னுரிமை மற்றும் பொருத்தமான மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்படுதல்.*

- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு தேவையான மற்றும் சராசரி மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் காணப்பட வேண்டும். இந்த வளங்களை பெற்றுக்கொள்வதனை கட்டுப்படுத்துவதற்கோ செயற்படுத்துவதற்கோ நிர்வாகிகள் முன்வரக்கூடாது. அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தனது பாதீட்டினை அவர்களாலேயே முகாமை செய்து பொருத்தமான முறையில் ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும்.
- சட்டமன்றம் அல்லது அதன் ஆணைக்குழுவொன்று அதி உயர் கணக்காய்வு நிறுவனம் தமது கட்டளையினை (Mandate) நிறைவேற்றுவதற்கு தேவையான உரிய வளங்களை கொண்டுள்ளதனை உறுதிப்படுத்தும் பொறுப்பினை ஏற்க வேண்டும்.
- அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வளங்கள் அவரகளின் கட்டளைகளை (Mandate) நிறைவேற்றுவதற்கான படிமுறைகளை எடுப்பதற்குரிய அளவில் இல்லாதிருப்பின் அது தொடர்பில் நேரடியாக சட்டமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை அந்த கணக்காய்வு நிறுவனத்திற்கு காணப்படுகின்றது.

அரசியலமைப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதி மாத்திரம் தொடர்பில் குறிப்பிடுவதுடன் அவரது பதவியணியினரைக் குறித்துக் குறிப்பிடவில்லை. ஆகையால் ஏனைய நாடுகளிலுள்ளவாறு தனிப்பட்ட அதிகாரச்சட்டமொன்றினூடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணியனரது அதிகாரமும் பொறுப்பும் வரையறுத்துக் கூறப்படுதல் வேண்டும்.

அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளை மாத்திரமே கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பரிசோதிக்க முடியும். இருப்பினும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ள முழுமையாக அல்லது பகுதியளவில் அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரத்தின் கீழ் வருவதில்லை. பொது முயற்சிகளால் அல்லது திறைசேரியினால் 50 சதவீதத்திற்கும் மேல் மூலதனத்திற்குப் பங்களிப்புச் செய்யப்பட்ட அவ்வாறான 200 இற்கும் மேற்பட்ட கம்பனிகள் காணப்படுகின்றன. அத்துடன் குறிப்பிடத்தக்களவு கம்பனிகள் பொது முயற்சிகளால் தாபிக்கப்பட்டுமுள்ளன. மேலும், பொது முயற்சிகளிலிருந்து நிதிகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் அடங்கலான தனியார் நிறுவனங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி விசாரணை செய்ய முடியாதுள்ளது.

### அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் ஊடாக அரசியலமைப்பின் 153 மற்றும் 154 ஆம் உறுப்புரைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் எதிர்கொள்ளப்பட்ட நிர்வாக மற்றும் நிதிசார் சுதந்திரத்திலுள்ள குறைபாடுகளை நீக்கும் நோக்குடன் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளிற்கு பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் தகைமைபெற்ற கணக்காளராக இருத்தலும் வேண்டும். அவர் அரசியலைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் நன்னடத்தையுடையவராக இருக்கும் காலத்தில் பதவி வகித்தலும் வேண்டும்.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினை தாபித்தல். பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக அல்லது அதற்கு மேற்பட்ட பதவியினை வகித்த கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஓய்வுபெற்ற இரண்டு அங்கத்தவர்கள் மற்றும் இலங்கை உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர் அத்துடன் இலங்கை நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற வகுப்பு I இன் அலுவலர் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர். அரசியலமைப்புப் பேரவையின் பரிந்துரைக்கமைய 3 ஆண்டுகள் நிரந்தர பதவிக்காலத்திற்காக சனாதிபதியினால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிர்வாகச் சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சார்ந்த உறுப்பினர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் உறுப்பினர்களின் பதவிநீக்கம் என்பவற்றிற்கான அதிகாரம் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்படுகின்றது.*

- *முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ அத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசாங்கத்தினால் பொது வளங்கள் வழங்கப்பட்ட நிறுவனங்கள் அடங்கலான சகல பொதுத்துறை நிறுவனங்களினதும் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும்.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியும் அவரது பதவியணியினரும் அவர்களது சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக "பகிரங்க உத்தியோகத்தர்" என்ற வரைவிலக்கிணத்திலிருந்து நீக்கப்படுகின்றனர்.*

- *தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த பாதீடு ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுனர்களின் எவ்வித தலையீடுகளுமின்றி மேற்கொள்வதற்கு போதியளவு நிதிகள் வழங்கப்படுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்பட்ட பின்னர் தேசிய பாதீட்டில் கூட்டிணைப்பதற்காக நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.*

### முன்மொழியப்பட்டுள்ள தேசிய கணக்காய்வுச் சட்டமூலம்

பொது நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாட்டுக்கு பலப்படுத்தலை வழங்குதல், பொது வளங்களின் பயன்பாட்டில் வகைகூறலை உறுதிப்படுத்துதல், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அதிகாரத்திலும் தொழிற்பாடுகளிலும் சுதந்திரத்தினை மேம்படுத்துதல்; பொது வளங்களின் பயன்படுத்தலில் சிக்கனம், வினைத்திறன் மற்றும் பயனுறுதியினை முன்னேற்றுதல் என்பவற்றிற்கான அதிகாரங்கள் விபரிக்கப்பட்ட கணக்காய்வுச் சட்டமூலமொன்று முன்மொழியப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வுச் சட்டமூலம் சட்டமா அதிபருடனும் சட்ட வரைஞருடனும் மேற்கொள்ளப்பட்ட அநேக கலந்துரையாடல்களின் பின்னர் வரையப்படுள்ளது. இது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்களின் கருத்துரைக்காக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட சட்டமூலத்திலுள்ள பிரதான பண்புகள் கீழே தரப்படுகின்றன.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வொன்றின் நோக்கெல்லையினை கணக்குகளின் பரிசோதனைகள், நிதிகள், நிதி நிலைமை மற்றும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனங்களின் பொது நிதியினதும் ஆதனங்களினதும் நிதிக் கட்டுப்பாடு மற்றும் அவற்றினது கணக்காய்வுப் பொறுப்புடன் தொடர்புடையபணத்திற்கான பெறுமதிக் கணக்காய்வு (செயலாற்றல்) சுற்றாடல் கணக்காய்வுகள் மற்றும் தொழில்நுட்பக் கணக்காய்வுகள் அல்லது கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்தின் வேறு எவையேனும் விசேட கணக்காய்வுகள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்திட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கி விரிவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவரது தற்றுணிபின் பிரகாரம் எந்தவொரு பொது நபராலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்ற எந்தவொரு விடயத்தினையும் விசாரணை செய்து அதில் அவர் அவசியம் எனக் கருதுகின்றவற்றை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவார்.

- 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையினால் நிச்சயிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு நியமங்களை தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கணக்காய்வுகளிற்கும் பிரயோகித்தல் வேண்டும்.

- கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு உதவுவதற்குத் தவறுதல் குற்றமொன்றாகும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அதிகாரம் எழுத்துமூல அல்லது இலத்திரனியல் பதிவேடுகள், புத்தகங்கள், ஆவணங்கள் அல்லது இரகசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.*

- *கணக்காய்வு கிரயத்தினை அறவிட்டுக் கொள்ளும் நோக்குடன் எந்தவொரு ஆளினதும் அல்லது நிறுவனத்தினதும் கணக்குகளை கணக்காய்வு செய்தமைக்கான கட்டணமொன்றை விதிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படும்.*

- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயத்தின் படி கொடுக்கல்வாங்கலொன்று ஏதேனும் சட்டத்திற்கு, பிரமாணத்திற்கு அல்லது விதிகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டும் அதில் ஈடுபட்டவர்கள் மோசடி, கவனயீனம், விரயம் அல்லது தவறிழைத்தல் செய்திருந்தமை காரணமாக அந்த கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அதில் ஏதேனுமோர் கொடுக்கல்வாங்கல் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளில் தவறாக உள்ளடக்கப்பட்டு அல்லது கணக்குகளிலிருந்து விடுபட்டிருப்பின் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலை, நிதிசார் அல்லது ஏனைய விடயத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுமதிக்காதிருப்பதற்கு அதிகாரம் வழங்கப்படுவதுடன் கூட்டாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ பொறுப்புடைய ஆளுக்கு அல்லது ஆட்களிற்கு எதிராக அவ்வாறான கொடுக்கல்வாங்கலின் பெறுமதிக்கு குறையாத தொகையொன்றினை (மிகை அறவீடாக) கணக்காய்வாளர் தலைமை அதிபதி விதிக்க அதிகாரம் வழங்கப்படுகின்றது.

- மிகை அறவீட்டை விதிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றால் திருப்திப்படாத எவரேனும் ஆளொருவர், அத்தகைய தீர்மானத்திற்கு எதிராக முறைப்பாடொன்றை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு உரித்துப் பெறுவதுடன் ஆணைக்குழுவினால் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

- *கணக்காய்வு அறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக கால அட்டவணை நிச்சயிக்கப்படவுள்ளது.*

- *நாட்டின் அதியுயர் கணக்காய்வு நிறுவனமாக தேசிய கணக்காய்வு அலுவலகமொன்று தாபிக்கப்படவுள்ளதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்திலுள்ள சகல உத்தியோகத்தர்களும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவர்.*

- *தேசிய கணக்காய்வு அலுவலகத்தினை கணக்காய்வு செய்வதற்காக தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரை ஆணைக்குழு நியமிக்கும் என்பதுடன் அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.*

- *பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்குள்ள பொறுப்புக்கள் இச் சட்டத்தினால் நிச்சயிக்கப்படும்.*

- *உள்ளகக் கணக்காய்வுகளின் தேவைப்பாடும் அவற்றின் தொழிற்பாடுகளும் இச்சட்டத்தினால் வரையறுத்துக் கூறப்படும்.*

- *குடியரசின் வருடாந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பில் குறிப்பிடப்படுகின்றது.*

- *கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் காணப்படுதலும் வினைத்திறனான தொழிற்பாடுகளும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

- *கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தகவல்களை வழங்கும் ஆட்களின் பாதுகாப்பு குறித்து விளக்கப்பட்டுள்ளது.*

- கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது பதவியணியிலுள்ள எந்தவொரு அங்கத்தவரும் அவரது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக அல்லது அரசியலமைப்பின் கீழுள்ள சட்டரீதியான தொழிற்பாடுகளை ஆற்றுவதற்காக அவரால் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்வதற்கு தவறிய குற்றத்திற்காக சட்டரீதியான நடவடிக்கையிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

## எமது நிறுவனக் கட்டமைப்பு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் தலைவர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாக காணப்படுவதுடன்,திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 124 (2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார். திணைக்களத்தின் தற்போதைய நிறுவகக் கட்டமைப்பு பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இணையாக ஒவ்வொரு மட்டத்திலும் குறித்தளவு எண்ணிக்கையான உத்தியோகத்தர்களுடன் அதன் அமைப்பில் 04 மட்டங்களைக் கொண்டதாகும்.

முதலாம் மட்டம் மூன்று மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளை உள்ளடக்குவதுடன் அவர்களால் மத்திய அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாம் மட்டம் 15 பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளின் கீழ் பிரதான 44 பிரிவுகளை உள்ளடக்கியதாகும். இந்த 44 பிரிவுகளுக்கும் பொறுப்பாக 44 உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் செயற்படுகின்றனர். இப் பிரிவுத் தலைவர்களிற்கு ஒப்படைக்கப்படுகின்ற கிளைகளின் கிளைத் தலைவர்களாக கணக்காய்வு அத்தியட்சகர்கள் அல்லது கணக்காய்வுப் பரீட்சகர் சேவையிலுள்ள மூத்த உத்தியோகத்தர் ஒருவர் காணப்படுகின்றார். அவர்களிற்கு குறிப்பிட்டளவு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர்கள் மூன்றாவது மட்டத்தில் உள்ளனர். அதற்கமைய குறித்துரைக்கப்பட்ட விதத்தில் தங்களது கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டுள்ள கணக்காய்வுக் கிளைகள் செயற்பட வேண்டிய முறையினை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான முழுமையான பொறுப்பு பிரிவுத் தலைவருக்கு ஒப்படைக்கப்படுகின்றது. கிளைத் தலைவர்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதகர் சேவையிலுள்ள உதவி உத்தியோகத்தர்களை வினைத்திறனாகவும் பயனுள்ள விதத்திலும் சேவையில் ஈடுபடுத்தி அவர்களிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி கிளைத் தலைவர்களுக்கு உதவி வழங்கும் அந்த உத்தியோகத்தர்கள் நான்காம் மட்டத்தில் உள்ளனர். இலங்கை கணக்காய்வு நியமங்கள், நியதிச்சட்டங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்டத் தேவைப்பாடுகளிற்கு இணங்க பரிசோதனைகள், அவதானிப்புக்கள் மற்றும் தமது அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க களப் பரிசோதனைகளை நிறைவேற்றுவதன் ஊடாக அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்க நிறுவனங்களில் கணக்காய்வினை மேற்கொண்டு தமது கிளைத் தலைவர்களுக்கு உதவுகின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டாம் மட்டத்திற்கு உரித்தான பிரதான 44 பிரிவுத் தலைவர்களிலிருந்து ஒன்பது பிரிவுகளின் 12 தலைவர்கள் பிராந்திய மட்டத்தில் அலுவலகங்களிற்கு பொறுப்பாக செயற்படுகின்றனர்.

திணைக்களத்தின் நிர்வாக நடவடிக்கைகளும் நிதி நடவடிக்கைகளும் பணிப்பாளர் (நிர்வாகம்) இன் கீழுள்ள தாபனக் கிளையினாலும் பிரதான கணக்காளரின் கீழுள்ள கணக்குகள் பிரிவினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வின் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய நிறுவனக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.


Auditor General
Add.AG(CGSE)
Add.AG(CGMD)
Add.AG(PZIA)
DAG(PEN)
AAG(PER) SA'S AE'S
AAG(JPA) SA'S AE'S
AAGHSM) SA'S AE'S
AAG(TIP) SA'S AE'S
AAG(FLS) SA'S AE'S
DAG(TQC)
AAG(TRD) SA'S AE'S
AAGRQC) SA'S AE'S
AAGITE) SA'S AE'S
AAG(CMU) SA'S AE'S
AAG(LEG) SA'S AE'S
DAG(FBD)
AAG(BAF) SA'S AE'S
AAG(POS) SA'S AE'S
AAG((AVA) SA'S AE'S
DAG(CGL)
DAG(SBE)
AAG(WSS) SA'S AE'S
AAG(EDU) SA'S AE'S
AAGHED) SA'S AE'S
AAG(LOR) SA'S AE'S
AAG(SUR) SA'S AE'S
AAG(TCM) SA'S AE'S
DAG(OPE)
AAG(IEN) SA'S AE'S
AAG(HUD) SA'S AE'S
AAG(RCT) SA'S AE'S
DAG(SOF)
AAG(MED) SA'S AE'S
AAG(CAS) SA'S AE'S
AAG(POE) SA'S AE'S
AAG(VTY) SA'S AE'S
DAG(ADM)
DAGFFP)
AAG(FFP) SA'S AE'S
AAG(EGN) SA'S AE'S
AAG(DEF) SA'S AE'S
AAG(DMG) SA'S AE'S
DAG(JPC)
AAG(TRE) SA'S AE'S
AAG(LEW) SA'S AE'S
AAG(AGL) SA'S AE'S
AAG(PLA) SA'S AE'S
DAG(SIN)
AAG(SIN) SA'S AE'S
AAG(CTP) SA'S AE'S
AAG(CEN) SA'S AE'S
DAG(MDP)
AAG(IMU) SA'S AE'S
AAG(EHA) SA'S AE'S
AAG(PUR) SA'S AE'S
Cheef Accountan
Accountan MAS
Directo(Admin)
AD(Admin) MAS
DAG(WNS)
AAG(WNP1) SA'S AE'S
AAG(WNP2) SA'S AE'S
AAGNWP) SA'S AE'S
AAG(NWL) SA'S AE'S
AAG(SNP) SA'S AE'S
AAG(SNL) SA'S AE'S
DAG(NNE)
AAG(NCL) SA'S AE'S
AAG(NNP) SA'S AE'S
AAG(NNL) SA'S AE'S
AAG(ENP) SA'S AE'S
AAG(ENL) SA'S SA'S
DAG(USC)
AAG(UVP) SA'S SA'S
AAG(UVL) SA'S SA'S
AAG(CLP) SA'S SA'S
AAG(CLL) SA'S SA'S
AAG(SGP) SA'S SA'S
AAG(SGL) SA'S SA'S

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் வகிபாகம் தொடர்பில் மதிப்பாய்வொன்றை மேற்கொண்ட பின்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 நவம்பர் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட புதிய ஊழியர்கோப்பின் பிரகாரம், இலங்கை கணக்காய்வுச் சேவை உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை 350 ஆக உயர்த்தப்பட்டதுடன் கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் உத்தியோகத்தர்கள் 1,200 ஆக காணப்பட்டனர். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை கணக்காய்வு ஆணைக்குழுவினை செயற்படுத்துவதற்காக தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்காமையால் அந்த ஆணைக்குழு செயற்பட்டிருக்கவில்லை. அதன்காரணமாக திணைக்களத்தின் பதவியணிக்காக வரையப்பட்டுள்ள சேவை பிரமாணக் குறிப்பினை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், ஏற்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புதல் பழைய சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி நிலைமையின் கீழ், ஆண்டின் 2016 இன் ஆரம்பத்திலும் 2016 இன் இறுதியிலும் அவ்வாறே 2017 மே 31 ஆந் திகதியிலும் உள்ளவாறான திணைக்களத்தின் ஒவ்வொரு பதவியிலும் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை கீழே அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது.

| பதவி | 2016 சனவரி 01 இல் உள்ளவாறு | | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | 2017 மே 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டபதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடம் | அங்கீகரிக்கப்பட்டபதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடம் | அங்கீகரிக்கப்பட்டபதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடம் |
| **கணக்காய்வு பதவியணி** | | | | | | | | | |
| மேலதிக கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 3 | 3 | - | 3 | 2 | 1 | 3 | 2 | 1 |
| பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 15 | 9 | 6 | 15 | 9 | 6 | 15 | 9 | 6 |
| உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 44 | 21 | 16 | 44 | 32 | 12 | 44 | 31 | 13 |
| கணக்காய்வு அத்தியட்சகர் | 288 | 116 | 172 | 288 | 160 | 128 | 288 | 219 | 69 |
| கணக்காய்வு பரிசோதகர் | 1200 | 791 | 412 | 1200 | 1022 | 184 | 1200 | 941 | 259 |
| **கணக்காய்வு சாராத பதவியணி** | | | | | | | | | |
| பணிப்பாளர் - நிர்வாகம் | 1 | 1 | - | 1 | 1 | - | 1 | 1 | - |
| பிரதான கணக்காளர் | 1 | 1 | - | 1 | 1 | - | 1 | 1 | - |
| ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 4 | 2 | 2 | 4 | 2 | 2 | 4 | 2 | 2 |
| அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் இணைந்த தரங்கள் | 184 | 147 | 37 | 183 | 151 | 32 | 183 | 160 | 23 |
| கனிஷ்ட ஊழியர்கள் | 183 | 139 | 44 | 183 | 143 | 40 | 183 | 157 | 26 |
| **மொத்தம்** | **1923** | **1230** | **693** | **1922** | **1523** | **399** | **1922** | **1523** | **399** |

*அட்டவணை 01 – பதவியணி நிலைமை – 2016 திசெம்பர் 31 மற்றும் 2017 மே 31*

மேலே குறிப்பிட்டவாறு, திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு பதிவியிலும் வெற்றிடங்கள் பாரியளவில் நிலவுதல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் பாரிய தடையினை ஏற்படுத்தியிருந்தது. அதற்கமைய காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதுடன் தொடர்புடைய பின்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் திணைக்கள மட்டத்தில் தற்போது எடுக்கப்பட்டுள்ளது.

- புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களிற்கு 25 சாரதிகளை ஆட்சேர்த்தல்

- அலுவலக உதவியாளர் சேவையிலுள்ள 10 வெற்றிடங்கள், சுற்றுலா விடுதிக் காப்பாளர் பதவியிலுள்ள 10 வெற்றிடங்கள், நீர்க்குளாய் தொழிலாருக்கான 1 வெற்றிடம் மற்றும் மின்சார தொழிலாருக்கான 1 வெற்றிடம் என்பவற்றை நிரப்புவதற்கு 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- 2017 ஆம் ஆண்டில் 174 கணக்காய்வுப் பரிசோதகர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.

## சேவைப் பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக்கொள்ளல்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பதவியணி, இலங்கை கணக்காய்வுச் சேவை மற்றும் கணக்காய்வுப் பரிசோதகர் சேவை உத்தியோகத்தர்களை உள்ளடக்குகின்றது. அப்போது காணப்பட்ட நிலமையின் கீழ், 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் இந்த இரு சேவைகளிற்காகவும் தனித்தனியான சேவைப் பிரமாணக் குறிப்புகள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் பதவியணியனரால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பிரேரணைகள் மற்றும் கோரிக்கைகளை ஆராய்வதற்காக சனாதிபதியின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை தலைவராகக் கொண்டு இரண்டு முன்னாள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகளையும் சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஒருவரையும் உள்ளடக்கியிருந்தது. குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளைக் கவனத்திற்கொண்ட பின்னர், இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து “இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை” என்ற பெயரில் புதிய சேவையொன்றை தாபிப்பதற்கான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2014 திசெம்பர் 23 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது.

மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை கணக்காய்வுச் சேவையினையும் கணக்காய்வு பரிசோதகர் சேவையினையும் ஒன்றிணைத்து தாபிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள “இலங்கை பொதுக் கணக்காய்வுச் சேவை” அரசாங்கத்தினால் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன்படி புதிய சேவைக்கான சேவைப்பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அரசாங்க கணக்காய்வு ஆணைக்குழு தாபிக்கப் பட்டிருப்பினும், அதனை செயல்வலுப்படுத் துவதற்காக தேசிய கணக்காய்வு சேவை அதிகாரச்சட்டம் 2016 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருக்காமையால் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ள சேவை பிரமாணக் குறிப்பை அங்கீகரித்துக்கொள்ள முடியாதுள்ளது. புதிய சேவை பிரமாணக் குறிப்பினை நிறைவேற்றுவதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் தொழிற்பாடுகளையும் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றுவதற்காக மிக உயர்தொழில் தரத்தில் பதவியணியினரை பேணுவதற்கான வாய்ப்பினை இது வழங்கும். அத்துடன்,புதிய சேவையின் நியமன மற்றும் ஒழுக்காற்று அதிகாரி கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவாக உள்ளமையால் அத்தொழிற் பாடுகளை தாமதமின்றி நிறைவேற்றுவதற்கான இயலுமை, திணைக்களத்தின் செயலாற்றலை உயர்த்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

## பதவியணியினர் பயிற்சி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி தனது நியதிச்சட்ட கடமைகளை மேற்கொள்ளும் போது அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச அமைப்புக்களின் (இன்ரோசெ மற்றும் அசோசை) வழிகாட்டல் மற்றும் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் செயலாற்றல், சுற்றாடல், தகவல் தொழில்நுட்ப மற்றும் முறைமை, பெறுகைகள், பொது முயற்சிகள் மற்றும் தடவவியல் துறைகள் போன்றவற்றை உள்ளடக்கும் வகையிலான கணக்காய்வை மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் அதேநேரம் அத்தகைய கடமைகள் தற்போதைய நிறுவனரீதியான மற்றும் சமூக தேவைகளுடன் வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றப்படும் விதத்தில் வேண்டப்படுகிறது. அதற்கிணங்க, செயற்பாட்டிலிருந்த இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பத்தொன்பதாவது திருத்தத்துடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 50 சதவீதம் அல்லது அதற்கு அதிகமாக அரச பங்குரிமையுள்ள 100 வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் (அரச மற்றும் தனியார்) கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நோக்கெல்லையில் புதிதாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நியதிச்சட்ட நோக்கெல்லை மேலும் விரிவாக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியானவர் 1182 கணக்காய்வு உத்தியோகத்தர்களையும் 306 உதவிச் சேவைகளிற்கான உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய பதவியிணரை தற்போது வேலைக்கமர்த்தியிருந்தார்.

கணகாய்வாளர் தலைமை அதிபதியின் நியதிச்சட்ட நோக்கெல்லை விரிவாக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பதவியணியினர்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அவர்களுடைய அறிவு மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான போதியளவு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி சந்தர்ப்பங்கள் கடந்த 10 வருடகாலங்களாக வழங்கப்பட்டிருக்காமையால் வினைத்திறனான கடமைகளை நிறைவேற்றுதல் பெரிய சவாலாக மாறியிருந்தது.

ஆகையால் அத்தகைய சவால்களை எதிர்கொள்கையில் கணக்காய்வு உத்தியோகத்தர்களை கற்கைரீதியான, விஞ்ஞானரீதியான / தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களை வழங்கும் தேவையின் முக்கியத்தை கவனத்திலெடுப்பதன் மூலம் நடைமுறைக்கு பொருந்தக்கூடிய அறிவு மற்றும் திறன்களை கணக்காய்வு உத்தியோகத்தருக்கு வழங்கும் நோக்குடன் தற்போதைய திணைக்களத்தின் நிர்வாகமானது அவர்களுடைய தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியை (சீபிடீ) உறுதிப்படுத்துவதற்காக 80 மணித்தியாலங்களை விட குறையாக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறியின் பூர்த்தியாக்கலின் அத்தியாவசியத்தன்மையை அங்கீகரித்திருந்தது.

அதற்கிணங்க அலுவலர்களின் தேவைப்பாடுகளுடன் திணைக்களத்தின் பயிற்சிப்பிரிவால் வதிவிடம் மற்றும் வதிவிடமற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஒழுங்கமைத்தலினூடாக தேவையான உதவியை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை பின்பற்றப்பட்டிருந்தது. அதற்காக

திணைக்களத்தின் திறனான மற்றும் தகுதியான அலுவலர்களையும் அதேநேரம் வெளிவாரி விரிவுரையாளர்களையும் வளமிக்க நபராக உதவியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விரிவுரையாளர்கள், கலந்துரையாடல்கள், குழு இலக்குகள் மற்றும் களச் சுற்றுலாக்கள் போன்ற பயிற்சி முறைகளை பயன்படுத்துவதுடன் பயிற்சிகளை நடாத்துவதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன்களை அபிவிருத்தி செய்தல்.
- உத்தியோகத்தர்களின் வினைத்திறனையும் செயலாற்றலையும் உயாத்துதல்
- உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்தல்.
- கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் விவேகத்தை வழங்குதல்.
- நிதிசார்ந்த மற்றும் சேவை சட்டங்கள் தொடர்பான அறிவை வழங்குதல்
- குழு ஆற்றலை அபிவிருத்தி செய்தல்
- உத்தியோகத்தர்களின் மனோபாவத்தை மாற்றுவதற்குத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைவதற்காக, திணைக்களத்தின் பயிற்சிப்பிரிவானது அனைத்து நிலையிலுள்ள கணக்காய்வு அலுவலர்களையும் உள்ளடக்கும் வகையில் 2016 ஆம் ஆண்டில் 13 விடயங்களின் கீழ் 2,269 அலுவலர்களுக்காக 39 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது. இதற்கு மேலதிகமாக, 4 சந்தர்ப்பங்களில் திணைக்களத்தின் 31 கணக்காய்வு உத்தியோகத்தர்களற்றவர்களிற்காக பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, பொது நிதி தொடர்பான நல்லாட்சியை வலுப்படுத்தும் நோக்கத்துடன், வெளியிலுள்ள பொது நிறுவனங்களிலுள்ள அலுவலர்களிற்கிடையில் விழிப்புணர்வையூட்டுவதற்கான 03 மாகாணங்களை உள்ளடக்குவதற்காக மீளாய்வாண்டின் போது 387 அலுவலர்களுக்காக 3 பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 02 இல் காட்டப்படுகின்றன.

உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணையாக, பொதுத்திறைசேரிச் செயலாளரின் அனுமதியுடன் மலேசியாவில் தேசிய கணக்காய்வு பயிற்சி நிறுவகத்தில் நடைபெற்ற செயலாற்றல் கணக்காய்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் அலுவலர்களை ஈடுபடுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2016 நவம்பரில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வு அத்தியட்சகர், கணக்காய்வுப் பரீட்சகர் பதவிகளின் 80 உத்தியோகத்தர்கள் முதல் தடவையில் பங்குகொள்வதற்கு சாத்தியமிருந்ததுடன் மற்றும் 80 உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய 95 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது நடைபெற்ற 15 பயிற்சித்திட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். விபரங்கள் அட்டவணையில் 02 இல் தரப்பட்டுள்ளன.

| | நிகழ்ச்சித்திட்டங்களின் விபரம் | நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் | | | | | | நாட்க ளின் எண்ணி க்கை | மனித நாட்களின் எண்ணி க்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிகழ்ச்சித் திட்டங்க ளின் எண்ணி க்கை | பகுதித் தலைவர் கள் | கணக்கா ய்வு அத்தியட் சகர் | கணக்காய் வு பரீட்சகர் | கணக்காய் வற்ற உத்தியோக த்தர் | மொத் தம் | | |
| | **உள்நாட்டு பயிற்சிகள்** | | | | | | | | |
| 1. | நிதிசார் கணக்காய்வு | 1 | – | 9 | 21 | | 30 | 3 | 90 |
| 2. | புதிய உத்தியோகத் தர்களின் பயிற்சிகள் | 1 | | | 40 | | 40 | 10 | 400 |
| 3. | பெறுகை மற்றும் நிர்மாணக் கணக்காய்வு | 10 | 10 | 145 | 135 | 4 | 294 | 34 | 941 |
| 4. | செயற்திட்டக் கணக்காய்வு | 2 | | 25 | 48 | | 73 | 4 | 146 |
| 5. | மிகை அறவீடு செய்முறை மற்றும் உள்ளுராட்சி கணக்காய்வு | 2 | 6 | 24 | 83 | | 113 | 12 | 466 |
| 6. | நியமங்கள் தொடர்பான பயிற்சிகள் | 5 | | 29 | 51 | | 80 | 30 | 366 |
| 7. | கணனி பயிற்சி | 1 | | 2 | 32 | | 34 | 2 | 68 |
| 8. | பயிற்சிவிப்பாளர்களிற்கான பயிற்சி | 1 | 4 | 16 | 20 | | 40 | 3 | 120 |
| 9. | நிர்வாகம் மற்றும் மேற்பார்வை தொடர்பான பயிற்சி | 3 | | 2 | 1 | 3 | 6 | 6 | 18 |
| 10. | நேரான யோசனை மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 3 | 107 | 464 | 673 | 20 | 1264 | 3 | 1264 |
| 11. | நல்லாட்சி தொடர்பாக விழிப்புணர்வூட்டல் | 9 | 6 | 36 | 182 | 387 | 611 | 6 | 611 |
| 12. | பிரதேச தலைவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகள் | 2 | 83 | | | | 83 | 4 | 168 |
| 13. | ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 4 | | 9 | 6 | 4 | 19 | 5 | 28 |
| | மொத்தம் | 43 | | | | | **2,687** | **119** | **4,686** |
| | | | | | | | | | |
| | **வெளிநாட்டு பயிற்சிகள் :** | | | | | | | | |
| 1. | செயலாற்றல் கணக்காய்வு | 2 | 4 | 17 | 60 | | 81 | 20 | 820 |
| 2. | துாதரகங்களின் கணக்காய்வு | 3 | 4 | | | | 4 | 29 | 48 |
| 3. | தகவல் தொழில்நுட்ப பயிற்சி | 1 | | | 1 | | 1 | 12 | 12 |
| 4. | இலத்திரனியல் ஆட்சி | 1 | | 1 | | | 1 | 26 | 26 |
| 5. | ஏஎஸ்எஸ்ஓஎஸ்ஏஐ/எஸ்ஏஐ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 3 | 1 | 2 | | | 3 | 13 | 13 |
| 6. | அரச கணக்காய்வு முகாமைத்துவம் | 1 | | 1 | | | 1 | 20 | 20 |
| 7. | அரச கணக்கீட்டு மற்றும் நிதி முகாமைத்துவம் | 1 | | 1 | | | 1 | 21 | 21 |
| 8. | ஊழலற்ற தந்திரோபாயங்கள் | 1 | | 1 | | | 1 | 6 | 6 |
| 9. | நாடுகளை அபிவிருத்தி செய்வதற்கான நிதிசார் மற்றும் பொருளாதார நிர்வாகம் | 1 | | | | 1 | 1 | 30 | 30 |
| 10. | பட்டப்பின் படிப்பு | 1 | | 1 | | | 1 | 365 | 365 |
| | **மொத்தம்** | **15** | | | | | **95** | **542** | **1,361** |

அட்டவணை 2- 2016 ஆம் ஆண்டில் திணைக்கள ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்












உரிய செயலாற்றல் கணக்காய்வு பயிற்சியினூடாக அலுவலர்களினுள் விருத்தி செய்யப்பட்ட அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்கை பயன்படுத்துவதன் மூலம் நிதிக்கணக்காய்வின் வரையறைகளிற்கப்பால் இருக்கின்ற செயலாற்றல் கணக்காய்வை உள்ளடக்குகின்ற அதேநேரம் அதிகப்படியான செயற்திறனான கணக்காய்வை நோக்கி அரச கணக்காய்வை செயற்படுத்துவதற்கு தேவையான மனிதவளங்களின் அபிவிருத்திக்காக இந்தப் பயிற்சிகள் முக்கியமான பயனுறுதிவாய்ந்த தாகவுள்ளது.

## தகைமை பெற்ற கணக்காய்வாளர் களை சேவையில் ஈடுபடுத்தல்

நிலவும் பற்றாக்குறைகளின் காரணமாக ஏற்பட்ட வளங்களுக்கிடையேயான இடைவெளியை நிரப்புவதற்காக அரச வங்கிகளின் கணக்காய்வு போன்ற விசேட சந்தர்ப்பங்களின் போதும் தேவைப்படும் விசேட சேவைகளுக்காகவும் தகுதிவாய்ந்த கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்தல் அவசியமாகின்றது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் பிரகாரம் தகைமை பெற்ற கணக்காய்வாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு, கணக்காய்வு நிறுவனம், உரிய அமைச்சு, மற்றும் கண்காய்வு கம்பனியின் பிரதிநிதிகளும் உள்ளடங்கும் வகையில் திணைக்களத்தின் கணக்காய்வு கட்டணங்கள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய கணக்காய்வு கம்பனிகளுக்கு அவர்களால் வழங்கப்பட்ட கணக்காய்வு சேவைகளுக்காக 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 61.24 மில்லியன் மற்றும் ரூபா 37.94 மில்லியன் எனுமாறு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தகைமை பெற்ற கணக்காய்வாளர்களின் சேவையினை பெற்றுக்கொள்ளும் போது அவர்களால் முன்னர் வழங்கப்பட்ட சேவைகளின் நிலைமை, கம்பனியிலுள்ள பங்குதாரர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுடன் சேவையில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு பயிலுநர்களின் எண்ணிக்கை போன்ற விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாக கம்பனியின் நியமத்தினை காண்பிக்கும் விடயமொன்றாக அவர்களின் சர்வதேச தொடர்புகள் மற்றும் அவர்களால் வழங்கப்படும் தொழில்சார் சேவைகளின் நிலைமை போன்ற விடயங்கள் அவர்களை தெரிவு செய்யும் பிரமாணக் குறிப்புகளினுள் உள்ளடங்கியிருந்தது.

சாதாரணமான ஒரு கணக்காய்வு கம்பனிக்கு ஆகக்கூடியதாக 5 வருட காலத்திற்காக தொடர்ச்சியாக ஒரு கணக்காய்வு பணி கையளிக்கப்படும்.

3 பிரதான அரச வர்த்தக வங்கிகள் மற்றும் அவற்றின் தெரிவு செய்யப்பட்ட கிளைகள் மற்றும் பத்தொன்பதாம் அரசியலமைப்பின் திருத்தங்களின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விடயப்பரப்பில் உள்ளடக்கப் பட்டிருந்த 50 சதவீதம் அதற்கு அதிகமான அரச உரிமையுடைய கம்பனிகள் உள்ளடங்கலாக 2016 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் முறையே 180 நிறுவனங்கள் மற்றும் 139 நிறுவனங்களை கணக்காய்வு செய்வதற்காக பிரசித்தமாக தொழிலில் ஈடுபட்டுள்ள கணக்காய்வு கம்பனிகள் முறையே 87 மற்றும் 89 எண்ணிக்கையானவை எனக்கு ஒத்துழைப்பினை நல்கின.

## பாராளுமன்றத்திற்கு உதவுதல்

அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம், பொது நிதி மீதான முழுமையான கட்டுப்பாட்டினை பாராளுமன்றம் கொண்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமானது, பொது முயற்சிகளின் நிதிப் பராமரிப்பும் சிக்கனமும், செயற்பாட்டு வினைத்திறனும் செயற்திறனும் மீது பாராளுமன்றத்துக்கு நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கும் கடமைப்பொறுப்புடன் அரசாங்கத்தின் வெளிவாரிக் கணக்காய்வாளராக செயற்பட்டு பொதுக் கணக்களிப்பொறுப்பு முறைமைக்கு பிரதான பங்களிப்பினை மேற்கொள்கின்றது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள், பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 125 மற்றும் 126 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ளன முறையே அரசாங்க கணக்குகள் குழு (COPA) மற்றும் பொது முயற்சிகள் குழு (COPE) என்பவற்றின் கவனத்திற்கு எடுக்கப்படுகின்றன. பொதுக் கணக்குகளை பரிசோதிப்பதன் ஊடாக பொது நிதிகள் மற்றும் வளங்களினது பயன்படுத்தலைக் கருத்திற்கொண்டு

சட்டமியற்றுவோருக்கு உதவுவதலே இந்த இரண்டு குழுக்களினதும் வகிபாகமாகும். ஆகையால், பொதுத்துறையின் கணக்களப்பொறுப்பு மற்றும் பயனுள்ள நல்லாளுகையினை உறுதிப்படுத்துதல் தொடர்பில் சிக்கலான வகிபாகமொன்று இந்த இரண்டு குழுக்களிற்கும் உள்ளன. இலகுவாக கூறுவதாயின், கூட்டுத்தாபனம் அல்லது பொது முயற்சியொன்றிலுள்ள கணக்காய்வுக் குழுவிற்குரிய ஒத்த சில பண்புகளை COPE மற்றும் COPA கொண்டுள்ளன.

நிலையக் கட்டளை 125 இன் படி, பொதுச் செலவினத்தை சமாளிப்பதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட பணத் தொகைகளின் பகிர்வினைக் காட்டுகின்ற கணக்குகள் மற்றும் குழு தேவையெனக் கருதி பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்ட ஏனைய கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து பரிசோதித்தில் COPA இன் கடமைப்பொறுப்பாக உள்ளது. COPA பொதுவாக எந்தவொரு திணைக்களம், உள்ளூராட்சி அதிகாரசபை மற்றும் அவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியியல், நிதிசார் நடைமுறைகள், செயலாற்றல் மற்றும் முகாமைத்துவம் மீது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் எவையேனும் எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளுடன் சேர்த்து பரிசோதித்தில் நிலையக் கட்டளை 126 இன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள COPE இன் கடமையாகும். அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் எவையேனும் எழுத்திலமைந்த அதிகாரச்சட்டத்தினால் அரசாங்கம் கையேற்ற வணிக முயற்சிகளினதும் குழுவினால் பணிப்புரை வழங்கப்பட முடிந்த அவ்வாறான நிறுவனங்களினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், பாதீடுகளும் வருடாந்த மதிப்பீடுகளும், நிதியிடுதல்களும் முகாமைத்துவமும் மீது COPE ஆனது அவ்வப்போது பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். இரண்டு குழுக்களிற்கும் உரித்தான அங்கத்தவர்களின் உப குழுக்களை நியமிப்பதற்கு COPE மற்றும் COPA இற்கு அதிகாரமுள்ளதுடன் எந்தவொரு நபரையும் அழைத்து வினவுவதற்கும் அதிகாரமுள்ளது. அத்துடன், எந்தவொரு ஆவணத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஏனைய ஆவணத்தினை பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள் மற்றும் ஆதனங்களிற்கு பிரவேசிப்பதற்குமான அதிகாரம் அவற்றுக்கு உள்ளது.

பாராளுமன்றத்திலுள்ள ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சியினை பொருத்தமான விதத்தில் பிரதிநிதித்துவம் செய்வதற்கு ஏற்றவாறு அவற்றினை போதியளவில் உருவாக்குவதற்காக தற்போது இரண்டு குழுக்களும் தலா இருபத்தியாறு அங்கத்தவர்களை கொண்டுள்ளன. அரசாங்க கணக்குகள் குழு மற்றும் அரசாங்க பொது முயற்சிகள் குழு ஆகிய இரண்டு குழுக்களினதும் பரிசோதனைகளின் பின்னர் அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்றுத்தரப்பினர் ஏற்றுக்கொள்கின்றனரா என்பது மாத்திரமன்றி அந்த பரிந்துரைகள் பயனுள்ள விதத்திலும் முழுமையாகவும் அமுல்படுத்தப்பட்டு, மிக முக்கியமாக நிதி செயற்திறன் மற்றும் சேவைகளின் தர நிலைமை தொடர்பில் நேர்மறையான மாற்றம் இடம்பெற்றுள்ளதா என்பதனை பரிசோதித்து, அமுலாக்கப்படுகின்ற செயன்முறை குறித்து குழுக்களிற்கு மீண்டும் அறிக்கை சமர்ப்பித்தல் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கடமைப்பொறுப்பிற்குள் உள்ளடங்குகின்றது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அல்லது அவரது பிரதிநிதிகளால் விசேடமாக கணக்காய்வில் நேரடியாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் உதவியுடன் குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது. குழுக்களின் செயற்பாடுகளிற்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி முக்கியமான பணியொன்றை மேற்கொள்வதுடன் மீளாய்வுக்குரிய விடயம் தொடர்பில் தேவைப்படுகின்ற அனைத்து தகவல்களையும் அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்தி குழுக்களிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

பின்புலத்திலுள்ள தகவல்களை வழங்குதல் மற்றும் விவாதிக்கப்படுகின்ற விடயத்துடன் தொடர்புடைய கருத்துக்களை தெரிவிப்பதன் மூலம் குழுக்களிற்கு உதவுதலே கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பணியாகும். கணக்குகள் குழுக்களின்

விசாரணையின் போது தகவல்களை வழங்குதல், குழுக்களிற்கு கருத்துரை தெரிவித்தல் மற்றும் குழுக்களின் உறுப்பினர்களால் கேட்கப்படுகின்ற வினாக்களிற்கு விடையளித்தலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. வினவப்பட வேண்டிய வினாக்கள் தொடர்பில் நடைமுறையொன்றை அல்லது எவையேனும் கலந்துரையாடப்பட வேண்டிய பிரச்சினை தொடர்பான பின்புலத் தகவல்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதி முன்மொழிகின்றார்.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய அரசாங்க நிறுவனத்தின் செயற்பாட்டுச் செயலாற்றலை பரிசோதிப்பதற்காக குறித்த அரசாங்க நிறுவனத்திற்கு ஏறத்தாழ ஒரு மாதகால அவகாசம் குழுவினால் வழங்கப்படுகின்றது. கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் நாளதுவரையாக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். குழுவில் கலந்துரையாடப்படுவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சிறு குறிப்பொன்றை தயாரித்துக்கொள்வதற்கு ஏற்றவிதத்தில் பதிலளித்தலொன்றை கணக்காய்விற்கு உட்படுத்தப்படும் நிறுவனம் தயாரித்துக்கொள்தல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பரிந்துரைகளை கணக்காய்விற்கு உட்படுத்தப்படுகின்ற நிறுவனத்தினால் அமுல்படுத்தப்பட்டமை தொடர்பான செயன்முன்னேற்றம் மீதான தகவல்கள் நியாயமானவை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அனைத்துப் பதில்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தினால் மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. மீளாய்வின் நிறைவின் பின்னர் தொடர்புடைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது ஆளுகைச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் கருத்திலெடுக்கப்பட்டு கணக்காய்வு அறிக்கை மூலம் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களைக் கொண்டு சிறியளவிலான கலந்துரையாடல் குறிப்பொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்படுகின்றது. ஆகையால். குழுவின் உறுப்பினர்களிற்கு அந்த கணக்காய்வு அவதானிப்புக்களிலிருந்து கணக்காய்வுக்கு உட்பட்டுத்தப்பட்ட நிறுவனத்தின் தற்போதைய நிலைமையினை தெளிவாக புரிந்துகொள்ள முடியும். மேலும், முன்னர் நடாத்தப்பட்ட கூட்டங்களில் வழங்கப்பட்ட பணிப்புரைகளை அமுல்படுத்தலின் செய்னமுன்னேம் அந்த கலந்துரையாடல் குறிப்பில் வேறாக உள்ளடக்கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் அரசாங்க கணக்குகள் குழுவினால் 67 நிறுவனங்களை பரிசீலிப்பதற்காக 67 குழுநிலைக் கூட்டங்களும் பொது முயற்சிகள் குழுவினால் 43 நிறுவனங்களை பரிசீலிப்பதற்காக 60 குழுநிலைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. 2015 பெப்ரவரி முதல் 2016 மே வரை இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட திறைசேரி முறிகள் மீது விசேட கணக்காய்வொன்றை மேற்கொண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பொது முயற்சிகள் குழுவினால் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய, விபரமான கணக்காய்வு அறிக்கையொன்று 2016 யூன் 29 ஆந் திகதி பொது முயற்சிகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகத்தர்களின் உதவியுடன் பொது முயற்சிகள் குழுவினால் அதனைத்தொடர்ந்து 15 விசேட குழுநிலைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு உத்தியோகத்தர்களிடமிருந்து சாட்சியங்களைப் பெற்று ஆவணங்களையும் அறிக்கைளையும் பரிசோதித்து விசேட அறிக்கையொன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினதும் அவரது உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. பொது முயற்சிகள் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு மேலதிக புலனாய்விற்காக விசேட சனாதிபதி ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

விசேடமாக, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளை தரப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலமைந்த வினாக்கொத்தொன்றை உருவாக்குவதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்

உத்தியோகத்தர்களால் அரசாங்க கணக்குகள் குழுவிற்கு உதவப்பட்டது. ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வழங்கப்பட்ட பதில்களின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திய பின்னர் அவற்றை மதிப்பிடுவதற்காக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் குழுவிற்கு உதவியளித்தனர்.

## கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விதிக்கப்படும் மிகை அறவீடு

இலங்கையில் 335 உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படுவதுடன், 23 மாநகர சபைகள், 41 நகரசபைகள் மற்றும் 271 பிரதேச சபைகள் அவற்றுள் உள்ளடங்கும் இந்த உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் உரிய கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்டங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும்.

அந்த கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச் சட்டங்களில் சட்டத்திற்கு முரணாக கொடுப்பனவு விடயங்கள், கவனயீனம் அல்லது மோசடியினால் ஏற்பட்ட நட்டம் மற்றும் கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், குறிப்பிடப்படாத விடயங்களை மிகை அறவீடு செய்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்த அதிகாரத்தின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 11 வருட காலப்பகுதியினுள் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான 888 சார்பினருக்கு ரூபா 70.92 மில்லியன் தொகையான 133 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 3.47 மில்லியன் அல்லது 4.89 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் மிகை அறவீட்டினை அறவீடு செய்யும் நடைமுறை தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்படும் செயலாற்றல் கணக்காய்வு

தெரிவு செய்யப்பட்ட விஷேட துறைகள் தொடர்பாக அரச நிறுவனங்களின் செயற்பாடுகளில் சிக்கனம், செயற்திறன், வினைத்திறன் மற்றும் சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்படுத்தல் தொடர்பான பரிந்துரைகள் உட்பட அறிக்கையிடல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

அரச நிறுவனங்களில் வெவ்வேறு துறைகள் தொடர்பாக ஏனைய கணக்காய்வு கிளைகளிலிருந்து சமர்பிக்கப்படும் முன்மொழிவுகள் மற்றும் இந்த செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவின் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற பொருளாதார சமூக மற்றும் சுற்றாடல் தாக்கம் போன்ற விஷேட துறை ஊடாக சுற்றாடல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிதிக் கணக்காய்வு அறிக்கைகளுக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்றன. இத்துறைக்குரிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பயிற்சியளித்தலும் மேற்கொள்ளப்படுகின்றது.

செயலாற்றல் கணக்காய்வு செயற்பாடுகள் தொடர்பில் அலுவலக மயப்படுத்தப்பட்ட பாதீட்டு முறைமையொன்றை செயற்படுத்தல் மற்றும் ஒவ்வொரு அலுவலகத்திற்கும் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (Ken Performance Indicators) நிர்ணயித்தல் மிகவும் முக்கியமானதாக இருந்த பொதிலும் இலங்கையில் தற்போது அலுவலகத்தை

அடிப்படையாகக் கொண்டு பாதீட்டு முறைமையும் செயலாற்றல் குறிகாட்டி நிச்சயிக்கப்பட்டு செயற்படுத்தப்பவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு துறைக்குரிய செயலாற்றல் குறிகாட்டிகள் எம்மால் தீர்மானிக்கப்பட்டு செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இக்காலப்பகுதிக்கு ரித்தாக மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகளின் அவதானிப்புக்கள் பொறிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### லங்கா மினரல் சேன்ட் லிமிடட் நிறுவனத்தால் இலங்கையின் கணிய மணல் படிவு பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் அறிக்கை.

உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் தேவையான அநேகமான உற்பத்திகளை செய்வதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருளான கறுப்பு தங்கம் (Black Gold) என்ற பொருள்பட பெயரால் அறிமுகப்படுத்தப்படும் உலகின் ஏனைய நாடுகளில் காணப்படும் கணிய மணலுக்கு ஒப்பாக மிகவும் உயர்ந்த கணிய உள்ளடக்கங்களைக் கொண்டதாக ஆய்வுகளிலிருந்த கண்டுபிடிக்கப்பட்டுள்ள பெறுமதியான கணிய மணல் படிவு இலங்கையில் காணப்படுகின்றது.




புகைப்படம் 01 புல்மோட்டை இயந்திர கூடத்தின் ஒரு பகுதி

இந்தக் கணிய மணல் அமைப்பினுள் உள்ளடங்கும் இல்மனைட் மற்றும் ரூடைல் பிரதானமாக டைடேனியம் டயொக்சைட் மற்றும் டைடேனிய உலோகத்தை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படுவதுடன், பூச்சு பிளாஸ்டிக், கடதாசி கைத்தொழிலுக்கு இந்த டைட்டேனியம் டயொக்சைட் அத்தியவசியமான மூலப்பொருளாகும். டைடேனியம் உலோகம் ஆகாய விமானங்களை உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருளாகவும் வேல்டிங்கூறு உற்பத்திக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. சேர்கோன் என்ற பெயருடைய கணிய மணல் பீங்கான் பொருட்கள் மற்றும் ஆரோக்கிய சுகநலன் பொருட்கள் உற்பத்திக்காகவும் கட்டிட கைத்தொழில் அடுப்பு கைத்தொழிலுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.




புகைப்படம் 02 இலங்கையில் கணிய மணல் படிவு அமைவிடங்கள்

1950 ஆம் ஆண்டின் போது இக் கணிய மணல் படிவு இலங்கையில் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர் 1957 ஆம் ஆண்டின் போது கணிய மணல் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் 1992 ஆம் ஆண்டின் போது 100 சதவீத பங்கு மூலதனத்துடனான அரசுக்கு சொந்தமான அரச கம்பனியொன்றாக மாற்றப்பட்டது. இந்த அரச கம்பனியால் உழைக்கப்படும் இலாபத்திலிருந்து பொது திறைசேரிக்கு பங்கிலாபம் செலுத்தப்படுவதுடன் 2011 ஆம் அண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 2,415 மில்லியன் இலாபத்தை பொதுத்திறைசேரிக்கு செலுத்தக் கூடியளவிலான போதிய செயற்பாட்டு இலாபத்தினை உழைத்திருந்தது.

கடந்த முப்பது ஆண்டு யுத்தத்தின் போது தொடர்ச்சியாக செயற்பட்ட புல்மோட்டையில் அமைந்துள்ள இத் தொழிற்சாலை நாட்டிற்கு அன்னியச் செலாவனியையும் பொது திறைசேரிக்கு பங்கிலாபத்தையும் உழைத்து தந்து நாட்டிற்கு பொருளாதார பலத்தை தந்த நிறுவனமொன்றாகும்.

### கணிய மணல் அகழ்வு வேலைகள்

கம்பனியால் குச்சவெளி, பிரதேச செயலகப் பிரிவின் பொடுவாகாட்டு மற்றும் தெவிக்கல்லு பிரதேசங்களிலும், கோகிலாய் பிரதேச செயலகப் பிரிவின் புல்மோட்டை பிரதேசத்திலிருந்தும் கணிய மணல் அகழ்வதற்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் பொருவாகாட்டு பிரதேசத்திலிருந்து புல்மோட்டை வரை மணல் போக்குவரத்து செய்யும் பாலம் பழுதடைந்த காரணத்தினால் அப்பிரதேசத்தில் மணல் அகழ்வு இடம் பெற்றிருக்கவில்லை. தெவிக்கல்லு பிரதேசத்தில் மணல் அகழ்விற்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொண்ட பிரதேசத்தில் ஹொட்டெல் தொகுதியொன்று நிர்மாணிக்கப்படுவதால் அப் பிரதேசத்தில் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை.



புகைப்படம் 03 மணல் போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தியுள்ள பாலம்

கணிய மணல் கம்பனி தாபிக்கப்பட்டதன் பின்னர் தொடர்ந்தும் கணிய மணல் அகழ்வு காரணமாக புல்மோட்டை படிவிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய உயர் தரத்துடன் கூடிய கணிய மணல் அளவு குறைவடைந்து காணப்படுகின்றது. கடற்கரையில் கணிய மணல் அகழ்வின் பின்னர் மீண்டும் கடற்கரை மணலினால் மூடப்படுவது (Re filling) இயற்கையான நிகழ்வொன்றாக இருப்பதால் அதற்காக சில காலம் தேவைப்படுகின்றது. எவ்வாறாயினும் தொடர்ந்தும் இப் பிரதேசத்தினுள் மணல் அகழ்வதால் புல்மோட்டை கடற்கரையிலிருந்து தரைப்பகுதிக்கு மணல் அகழ்வு நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு நேர்ந்திருந்தது. தொழிற்சாலையின் நடவடிக்கைகள் உயர் இயலளவில் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்காக பிரதான மூலப்பொருளான கணிய மணல் குறையாமல் காணப்பட வேண்டும். இந்நிலைமையால் மணலில் இருக்க வேண்டிய குறைந்த கணிய மணல் உள்ளடக்கம் (40 சதவீதம்) இல்லாமல் இருந்தாலும் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே மணல் அகழ்வு முறைகளில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் சுற்றாடல் சட்ட திட்டங்கள் மீறப்படும் வகையில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.



புகைப்படம் 04 அகழ்வு செய்யப்பட்ட மணல் எடுத்துவரப்படல்

கோகிலாஸ் களப்பிலிருந்து வட பகுதியில் முல்லைத்தீவு வரையிலும் கோகிலாஸ் கல்லிருந்து தென் பகுதிக்கு நயாறு மற்றும் வெள்மலை வரையிலும் மிகவும் சிறந்த கனிய மணல் காணப்படுவதாக கம்பனியால் இனங்காணப்பட்டிருந்தது.



புகைப்படம் 05 கம்பனிக்குக் கையேற்கப்பட்ட கோகிலாய் காணி



புகைப்படம் 06 கோகிலாய் கடற்பரப்பில் உள்ள பரவியுள்ள கனிஎ மணல்

கம்பனியுடன் உள்ள இயந்திர தொழிற்சாலை 50 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாக இருந்தாலும் அக்காலப்பகுதியில் புல்மோட்டை கனிய படிவிலிருந்து தொடர்ச்சியாக மணல் அகழ்வதால் உற்பத்தி குறைவடைந்ததன் காரணமாக புதிய தொழிற்சாலையை தாபிக்கும் தேவைப்பாட்டின் பேரில் கோகிலாய் பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் 17.6938 ஹெக்டேயர் அளவிலான பிரதேசம் 2013 பெப்ரவரி 13 ஆந் திகதிக்கு கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. நிர்மாணிப்பதற்காக காணியை கையேற்க முன்னர் ரூபா 39.34 மில்லியன் பெறுமதியான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. இச் செயற்திட்டத்திற்காக அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு சிக்கல்கள் இருந்த போதிலும் 2015 யூன் மாதம் முதல் தொழிலாளர் பதவிகளுக்காக 120 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் அப்பிரதேசத்தில் கையேற்கப்பட்ட

கனிய மணலுடன் கூடிய காணி கணக்காய்வு திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன.

### கனிய மணலுக்காக பெறுமதி சேர்த்தல்

கனிய பொருள் ஆரம்ப தன்மையுடன் ஏற்றுமதி செய்வதனை ஊக்குவிக்காமல் கனியத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியீடுகளை உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்வதனை ஊக்குவிக்கும் நோக்கில் கம்பனிக்கு கனிய மணல் அகழ்விற்காகவும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காகவும் தேவையான அனுமதிப்பத்திர வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக கம்பனியின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வது சர்ச்சைக்குரியதாக இருந்தது. அவ்வாறே இந்த உற்பத்தியின் பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நுழைவதற்கு தேவையான கூடுதலான கனிய உள்ளடக்கத்துடன் கூடிய கனிய மணலை பெற்றுக் கொள்வது சர்ச்சைக்குரியதாக இருந்தது.

பெறுமதி சேர்க்கும் செயற்பாட்டிற்கு நுழையாமையால் புவிச் சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் இந்தக் கம்பனிக்கு வருடாந்த அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாதிருந்த போதிலும், ஏனைய தனியார் நிறுவனமொன்றிற்கு 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தமை இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது. அவ்வாறே கனிய மணலுக்காக பெறுமதி சேர்த்தல் செயற்பாடு சுற்றாடல் ரீதியாக

பாரிய தாக்கமொன்று இடம் பெறக்கூடிய செயற்பாடொன்றாக இருப்பதால் அது தொடர்பாக கூடுதலான கவனம் செலுத்தி தொடர்ச்சியாக உற்பத்தி நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஏனைய உரிய அரச நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு அவசியமானதென அவதானிக்கப்பட்டது.




இல்மனைட் மற்றும் ரூடைல் இலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பெறுமதி சேர் உற்பத்தி




சேர்கோன் இலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி

## உற்பத்தி செயற்பாடு

உற்பத்தி செயற்பாடு 5 பிரதான தொழிற்சாலைகளின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் இல்மனைட், ரூடைல், சேர்கோன் என 3 பிரதான உற்பத்திகளாக இருந்ததுடன் அந்த உற்பத்தி மேற்கொள்ளப்படும் போது உருவாகும் உப உற்பத்திகளாக நன்மெக்னடிக் ஹெவி மினரல் Nutmagantic heavy mineral) மற்றும் ஹைடை இல்மனைட் உட்பட குரூட் மொனசைட் Crude Monozite) என்பவற்றைக் குறிப்பிடலாம்

கடந்த தசாப்தத்தில் இந்த உற்பத்திகளில் நிலைமை கீழே உரு 01 மற்றும் 02 இல் காட்டப்பட்டுள்ளன.







உரு 01 மற்றும் 02

இவ்வாறு கம்பனியின் பிரதான உற்பத்திகள் உருவாகும் முறைமையிலிருந்து குறைவடைவதும் ஏனைய உப உற்பத்தி உருவாக்கத்திலிருந்து அதிகரித்தல் போன்ற இரண்டும் கைத்தொழிலின் நிலைத்திருதன்மைக்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. இதற்காக பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

- 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொழிற்சாலையில் காணப்படும் இயந்திரங்கள் தற்போது உற்பத்தி இயலளவில் (Design capacity) 25 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையில் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.

- ஒவ்வொரு தொழிற்சாலைகளில் காணப்படும் பிரதான பிழைகள் குறைப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டமை
- தொழிற்சாலைகளுக்கு இடையே காணப்பட வேண்டிய நியம உள்ளீடு மற்றும் உள்ளவாறான வெளியீடு மற்றும் முடிவுப்பொருளுடன் ஒப்பிடும் போது பாரியளவு விலகல் காணப்பட்டமை.
- ஒவ்வொரு உள்ளீடு, வெளியீடுகளில் இருக்க வேண்டிய இரசாயண நியமங்களில் விலகல் காணப்பட்டமையால் உற்பத்தியின் தரம் இல்லாதிருத்தல்.
- கூடுதலான இலாபத்தை உழைப்பதற்கு முடியுமான உற்பத்திகளை இனங்கண்டு அவற்றின் உற்பத்தி அளவினை அதிகரிப்பதற்கு கம்பனி தவறியிருந்தது.
- 2015 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டினுள் காணப்பட்ட 181 நாட்களில் 117 நாட்களில் 142 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

தொழிற்சாலை நாளாந்தம் 24 மணி நேரமும் இரண்டு சேவை நேரங்களின் கீழ் செயற்பட்டு வந்தது. கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியாக உற்பத்திக்கு பங்களிப்புச் செய்த காலம் உற்பத்தியில் ஈடுபடாத காலத்திற்கு இடையே ஒப்பிடும் பொது மொத்த காலத்தில் அரைப்பங்கு இயங்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. உற்பத்தி செயற்பாட்டிற்கு தேவையான தொடர்ச்சியான மின்சக்தி வழங்கல் காணப்படாமை மற்றும் சுத்தமான நீர் காணப்படாமை போன்ற விடயங்கள் மற்றும் போதியளவு மூலப்பொருள் இல்லாமை உற்பத்தி செயற்பாடு செயலற்று இருப்பதற்கு தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.




உரு 03 உற்பத்தி காலம் வீணாக காணப்படுதல்

## கணிய மணல் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல்

கம்பனியால் 2007 ஆம் ஆண்டு வரையிலும் கணிய மணல் உற்பத்தி நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. பின்னர் தரகர் ஊடாக ஏற்றுமதி செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 பெப்ரவரி 19 ஆம் திகதி 03/02/03/எம்எஸ்எல்பீஎஸ் ஆம் இலக்க மஹவலி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் 03 மாதங்களில் நேரடி ஏற்றுமதிக்காக அனுப்பப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் சந்தை ஆராய்ச்சியை மேற்கொண்டு புதிய கொள்வனவாளர்களை கண்டுபிடிப்பதற்கு ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சந்தை ஆராய்ச்சியை மேற்கொண்டு சந்தைப்படுத்தல் திட்டம் முறையாக திட்டமிடப்படாதிருந்ததுடன் உள்ளவாறான விற்பனை பாதிடப்பட்ட விற்பனையுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் இல்மனைட், ரூடைல் மற்றும் சேர்கோண் ஆகிய உற்பத்திகளின் விற்பனை முறையே 18 சதவீதம் முதல் 58.5 சதவீதம் மற்றும் 56.7 சதவீதமாக மதிப்பிடப்பட்டிருந்த நிலையை விட குறைவாக இருந்தது.

"Industrial Mineral" என்ற இணையத்தளத்தில் பதிவு செய்யப்பட்டு அதில் காட்சிப்படுத்தப்பட்டு கணிய மணல் உற்பத்திகளில் சர்வேதச சந்தை விலை விபரங்களை கருத்திற் கொண்டு இடைத்தரகர்களுக்கு கணிய மணல் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் சர்வதேச சந்தை விலைகள் மற்றும் விற்பனை விலைகளுக்கு இடையே விலகலும் காணப்பட்டன. ஸ்பைரல் பைன் கொன்சன்ரேட் (Spiral fire concentrate) மற்றும் தேறிய மொத்த சேர்கோன் போன்ற உப உற்பத்திகளை விற்பனை செய்வதும் கம்பனிக்கு இலாபகரமானதாக இருக்கவில்லை. கணிய மணலின் தரம் சர்வதேச சந்தை தரத்தில் இல்லாதிருந்ததுடன் கம்பனிக்குச் சொந்தமாக புல்மோட்டை இறங்கு துறைமுகம் சேதமடைந்தமை கொட்டபே துறைமுகம் டோக்கியோ சீமேந்துக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டமை போன்ற காரணங்களால் கணிய மணலை கொழும்பு துறைமுகத்தில் கப்பலேற்ற வேண்டியேற்பட்டமையால் மேலதிக போக்குவரத்து செலவினமொன்றை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. கொட்பே வளவின் சொத்துக்கள் 2013 ஆம் ஆண்டில் ரூபா 32.32 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அவை விற்பனை செய்யப்படாமையால் தற்போது சேதமடைந்து அழிவடைந்தும் காணப்பட்டன.

## இலங்கையின் மாற்று சர்வதேச விமான நிலையமொன்றாக மத்தள தெரிவு செய்யப்பட்டமை மற்றும் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள்

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக இலங்கையின் சர்வதேச விமான சேவைகள் 1967 ஆம் அண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கு முன்னர் விமானப் சேவைகள் இரத்மலான விமான நிலையத்துடன் ஊடாகவே நடைபெற்றது. அவ்வாறே இந்தியா மற்றும் மாலைதீவுகள் போன்ற அண்மித்த நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த விமான நிலையங்களில் மாற்று விமான நிலையங்களாக பயன்பட்டிருந்ததுடன், இலங்கையில் காணப்பட்ட பயங்கவாத நிலைமை மற்றும் 2000 ஆண்டு நீர்கொழும்பு கதிரானேயில் இடம்பெற்ற விமான விபத்தின் பின்னர் மாற்று விமான நிலையமொன்றின் தேவைப்பாடு

அதிகளவில் உருவாகியிருந்தது. இதனால் சர்வதேச விமான நிலையத்திற்காக பொருத்தமான பிரதேசமொன்றை தெரிவுசெய்யும் போது அப்போது இருந்த அரசுகளினால் பலாலி, கொக்கல, ஹிங்குரக்கொடை, குடாஓயா மற்றும் வீரவில உட்பட வெவ்வேறு இடங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அவ்விடங்கள் தொடர்பான ஆரம்ப ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தல் அளவீட்டு நடவடிக்கைகள் மற்றும் அடிக்கல் நடுதல் விழா போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 52.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பொதுமக்களின் எதிர்ப்பு, அரசுகள் மாறியமை போன்ற பல்வேறு காரணிகளின் பேரில் அப்பிரதேசங்களில் விமான நிலைய நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தன. அவ்விடயங்களையும் கருத்திற்கொண்டு மாற்று சர்வதேச விமான நிலையமொன்று நிர்மாணிப்பதற்கான பொருத்தமான இடமொன்றை தெரிவுசெய்தல் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

இலங்கையின் தென்மாகாணத்தின் இளைஞர்களின் தொழிலின்மை மற்றும் பொருளாதார பின்னணி போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் புரட்சி மற்றும் வன்முறை செயற்பாடுகள் அரசாங்களுக்கு எதிராக உருவாகியமையால் அப்போதை அரசினால் தென் மாகாணத்திற்கு முன்னரிமை அளித்து பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு 1994 ஆம் ஆண்டில் அம்பாந்தோட்டை நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச துறைமுகமொன்றையும் சர்வதேச விமான நிலையமொன்றையும் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் அபிவிருத்திக்கு இலகுவாகும் வகையில் விமான நிலைய நிர்மாணத்திற்காக தேவையான காணியை கையேற்பதில் வசதிகள் காரணமாக ஆரம்பத்தில் வீரவில பிரதேசமும் பின்னர் பிரதேச மக்களின் எதிர்ப்பு காரணமாக மத்தள பிரதேசம் விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விமான நிலைய நிர்மாண நடவடிக்கைகள் 209 மில்லியன் அமெரிக்க டொலர் மக்கள் சீனக் குடியரசின் சலுகை கடன் திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு இணங்கப்பட்டு இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சீனக் குடியரசுக்கும் இடையே 2009 திசெம்பர் 23 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 2000 ஹெக்டேயர் பரப்பளவிலான காணியை பயன்படுத்தி நிர்மாண நடவடிக்கைகள் 2009 நவம்பர் 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் அதற்காக 243.7 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டிருந்தது.



விமான நிலைய கட்டிட வளவு



விமான நிலையத்தின் விமான ஓடுபாதை

இதற்காக தெரிவு செய்யப்பட்ட காணி இப்பிரதேசத்தின் அபய பூமிக்கு அண்மித்த வகையில் அமைந்திருந்தமையால் சுற்றாடல் ரீதியாக உருவாகிய சிக்கலாக இருந்ததுடன் வன விலங்குகளினால் ஓடு பாதைக்கு எதிர்நோக்கிய தடைகள் உட்பட வன விலங்குகளின் இயற்கை வாசஸ்தலங்கள் கையேற்றமையாலும் உருவான சிக்கல்களாகும்.



விமான நிலையக் காணி



விமான நிலைய நுழைவு வீதி

விமான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2013 மார்ச் 18 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டதுடன், வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் கம்பனியின் கீழ் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றது. மத்தள சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 நவம்பர் மாதம் வரை 14 சர்வதேச விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்க முடியாமல் மத்தள விமான நிலையத்திற்கு அனுப்பியிருந்த சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அங்கு அதிகளவில் கட்டுநாயக்க காலநிலை சீரற்றதாக இருந்ததடன், அதற்கு மேலதிகமாக எரிபொருள் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் மற்றும் விமானங்களின் பிழைகளும் இதற்கு காரணங்களாக இருந்தன.

மத்தள சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் 03 உள்நாட்டு விமானங்களும் 03 வெளிநாட்டு விமானங்களும் பிரயாணத்தை ஆரம்பத்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் இறுதி அளவில் அது ஒரு விமானம் மாத்திரம் விமான பயணத்தை ஆரம்பித்திருந்தது.

செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 03 தரப்பட்டுள்ளது.

| விடயம் | 2013 | 2014 | 2015 யூன் மாதம் வரை |
|---|---|---|---|
| மத்தள சர்வதேச விமான நிலையத்தினூடாக பிரயாணம் செய்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளின் எண்ணிக்கை (வருகை மற்றும் வெளியேறல்) | 36,137 | 40,386 | 4,945 |
| **உழைத்த வருமானம் (ரூபா. மில்லியன்)** | 48 | 136 | 49 |
| **மொத்த செலவினம் (ஊழியர் சம்பளம் /பராமரிப்பு நடவடிக்கைகள்/மின்சாரம்/ நீர் போன்றன** | 2,153 | 2,865 | 1,323 |

அட்டவணை 03 மத்தள விமான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள்
மூலம் - வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி

2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்துடன் நட்டத்துடன் நடாத்திச் செல்லப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு விமானங்கள் வருவதை நிறுத்தப்பட்டிருந்ததுடன் விமான நிலையத்தின் செயற்பாடுகள் ஒரு விமானத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதால் 2015 ஆம் ஆண்டில் வருமானம் வீழ்ச்சியடைந்திருந்திருந்தது. விமான நிலையம் இரவு பகலாக திறந்து வைப்பதற்கு நேர்ந்தமையால் நிர்வாக மற்றும் பராமரிப்புச் செலவினம் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டியிருந்தன.



வசதிகளை உருவாக்கக்கூடிய காணி

2015 ஆம் அண்டில் இலங்கையில் நெல் களஞ்சியப்படுத்துதல் பிரச்சினை ஏற்பட்டமையால் தற்காலிகமாக மத்தள விமான் களஞ்சியக் கட்டிடத் தொகுதியைப் பயன்படுத்துவதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையடன் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைககள் கம்பனி 2015 செப்தம்பர் 01 ஆந் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டு அதற்கு மாதாந்தம் ரூபா 835,132 கொடுப்பனவு செய்வதற்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அங்கிருந்த பெறுமதியான உபகரணங்கள் அகற்றப்படாமல் நெல் களஞ்சியப்படுத்த வழங்கப்பட்டிருந்ததாக கண்டறியப்பட்டது.



வெறுமையாக் காணப்படும் கருமபீடம்

அவ்வாறே வருடாந்தம் உழைக்கப்பட்ட வருமானம் எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட குறைவாக இருந்தமையால் அது தனது செயற்பாட்டு செலவினத்தை தீர்ப்பதற்கோ போதியதாக இல்லாதிருந்தது. ஆண்டொன்றுக்கு 2 சதவீத வட்டியுடன் 5 வருட சலுகை காலத்தின் பேரில் மக்கள் சீனக் குடியரசிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகை 2015 ஆம் ஆண்டிலிருந்து 15 வருடங்களுக்குள் தவணை மூலம் கொடுத்து தீர்க்கப்பட வேண்டும். இதன் பிரகாரம் சலுகைக் காலத்தினுள் 0.5 சதவீத பொறுப்புக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவ கட்டணங்களாக ரூபா 1,989.82 மில்லியன் தொகை திறைசேரியால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, அவ்வாறே 2015 ஆம் ஆண்டின் செப்தெம்பர் மாதம் முதலாவது கடன் தவணையாக 8.4 மில்லியன் அமெரிக்க டொலர் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் சேவைகள் (இலங்கை) கம்பனியின் குறுங்கால டொலர் வைப்பினைப் பயன்படுத்தி செலுத்தப்பட்டிருந்தன.

பாரியளவில் பணத்தை செலவு செய்து நவீன உபகரணங்களுடன் கூடிய நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததால் விமான நிலையத்தை ஆக்கபூர்வமான பொருளாதார கேந்திரமொன்றாக உருவாக்குவது அவசர மற்றும் அத்தியவசிய தேவையொன்றாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

## இலங்கையின் இலத்திரனியல் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

இலத்திரனியல் மற்றும் மின் உபகரண பாவனை ஊடாக மக்கள் வாழ்க்கையை மிகவும் இலகுபடுத்துகின்றது. எவ்வாறாயினும் இந்த உபகரணங்களின் பாவனையில் அதிகரிப்புடன் உருவாகும் கழிவுப் பொருட்களின் அளவும் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதுடன் அவற்றை முறையாக முகாமை செய்யப்படாமையால் சுற்றாடலுக்கு பாதகமான நிலைமை ஒன்றை ஏற்படுத்துகின்றது.



இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்களின் உள்ளடங்களாக காணப்படும் இரசாயன பதார்த்தங்களில் உள்ளடங்கியுள்ள வன் உலோகங்கள் சுற்றாடலுடன் சேர்வதால் தோல் நோய்கள், சுவாசப் புற்றுநோய், நரம்பு தளர்ச்சி, சிறுநீரக நோய்கள், கண் நோய்கள் போன்ற பலவிதமான நோய்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றன. அதற்கு மேலதிகமாக இலத்திரனியல் கழிவுப்பொருட்களுடன் சுற்றாலுக்கு சேரும் உபபாகங்களும் முறையாக முகாமை செய்யப்படாமையால் அனைத்து உயிர்களுக்கும் பல சுற்றாடல் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு நேர்ந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் முன்னுரிமையாக கவனம் செலுத்தி அதற்காக கொள்கைகள் மற்றும் பிரமாணங்களையும் தயாரித்து இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் கண்டுள்ளன. அதற்கான ஒரு தீர்வாக உற்பத்தியாளராலேயே இலத்திரனியல் கழிவுப் பொருட்களின் பொறுப்பை ஏற்றுக்கொள்வது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலத்திரனியல் உபகரணங்களின் பயன்பாட்டின் பின்னர் அப்புறப்படுத்தும் போது அக் கழிவுப் உற்பத்தியாளரின் கைக்கு அனுப்பிவைக்கப்பட்டு உற்பத்தியாளராலேயே முறையான நடைமுறைகளுக்கு இணங்க அவை முகாமைத்துவப்படுத்தப்படுகின்றன.

இலங்கையில் உருவாகும் இலத்திரனியல் கழிவுப் பொருட்களில் CFL மின்குமிழ், செல்லிட தொலைபேசிகள், தொலைக்காட்சிகள், மின்சூள், கணனிகள் போன்ற உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அகற்றப்படுவதும் உள்ளடக்கப்படுகின்றன. இந்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களில் பாதகமான பாதிப்புக்கள் காரணமாக பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களினுள் தெரிந்திருத்தல் குறைவாக இருப்பதால் அவற்றை முறையாக முகாமை செய்வதற்கு உள்ள அக்கரை குறைவடைந்துள்ளது. இலத்திரனியல் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக பொதுவான கழிவுகளுடன் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படல், எரித்தல் மண்ணில் இட்டு புதைத்தல் போன்ற முறைகள் அறியாத்தன்மையால் என்பது தெளிவாகின்றது.

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரசட்டத்தின் 23 (அ) மற்றும் (ஆ) பிரிவின் கீழ் இலத்திரனியல் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளதுடன். 2008 இன் 1

ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) கட்டளையின் 15 ஆவது கட்டளையில் இது தொடர்பாக மேலதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வழிகாட்டலின் பிரகாரம் அதிகாரசபையால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழும் அதிகாரசபையால் நிச்சயிக்கப்பட்டு குறிப்பிடப்படக் கூடிய ஏதேனும் நியமங்கள் மற்றும் ஏனைய நியதிகளுக்கு இணங்காமல் அல்லாது அதன் உப அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை உருவாக்குதல், சேர்த்தல், போக்குவரத்து செய்தல், களஞ்சியப்படுத்தல் அழித்தல், மீள் சுழற்சிப்படுத்தல் அல்லது வெளியேற்றல் அல்லது கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக இடமொன்றை உருவாக்குதல் அல்லது வசதிகள் வேரேனும் நபரினால் வழங்கக் கூடாதென குறிப்பிடப்பட்டிருந்தது.

மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுப்பொருள் வகைக்குரிய கணனிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் மின்விசிறிகள், காற்றுச்சீராக்கிகள், செல்லிடத் தொலைபேசிகள், மின் அடுப்புக்கள், சோறு சமைக்கும் அடுப்பு, நிழற்பட பிரதி உபகரணங்கள், கெசட் இயந்திரங்கள் போன்ற அநேகமான பல உருப்படிகள் உரித்தாகியிருந்த போதிலும் தேசிய சுற்றாடல் கட்டளைகளுக்கு இலத்திரனியல் கழிவுப் பொருளாக பாவனையிலிருந்து அகற்றப்பட்ட உள்ளடக்கங்கள், உடைந்த மற்றும் தரமற்ற வகையில் காணப்படும் மீள் ஒளியேட்டும் விளக்குகள் / மின்சார விளக்குகள் மற்றும் அப்புறப்படுத்தப்படும் கணனிகள் மற்றும் உபபாகங்கள், செல்லிடத் தொலைபேசிகள் போன்ற உபகரணங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தன.



இலங்கையில் செல்லிடத் தொலைபேசி இறக்குமதியாளர்கள் மாத்திரம் 1,080 இருப்பதுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரை இறக்குமதி செய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசிகளின் அளவு 16.2 மில்லியனாக இருந்தன. இந்த பாவிக்கப்பட்ட இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது மாத்திரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சட்டவிதிகளை உரித்தாக்கப்பட்டிருந்தது. பயன்படுத்தப்படாத உபகரணங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக எவ்வித கட்டுப்பாடொன்றும் செயற்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் பயன்படுத்தப்படாத உபகரணங்களில் மிகவும் தரங் குறைந்த சில மாதங்களுக்குள் கழிவுப்பொருளாக மாறும் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் அது நாட்டில் உருவாகும் இலத்திரனியல் கழிவுப்பொருள் அளவினை அதிகரிப்பதில் நேரடியாக பங்களிப்புச் செய்கின்றன.




இலத்திரனியல் கழிவுப்பொருட்கள் முறையான நடைமுறைகளின் பிரகாரம் முகாமை செய்யப்படுகின்ற 12 சேகரிப்பு நிறுவனங்கள் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன. அதற்கு மேலதிகமாக CFL மின்குமிழ் மீள் சுழற்சி செய்யப்படும் பாரிய இயலளவுடன் கூடிய தனியார் நிறுவனமொன்று ஹோமாகமவில் பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. அந் நிறுவனம் தொடர்பாக பொது மக்கள் உட்பட அரச நிறுவனங்களும் போதியளவில் அறிந்திருக்காமையால் இலத்திரனியல் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக தொடர்படுவது வெற்றிகரமாக இடம்பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்நிறுவனம் மேல்மாகாணத்தில் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய மாகாணங்களில் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றியிருந்தன.



இலத்திரனியல் கழிவுப் பொருட்களை சேகரிப்போருக்கு கழிவுப் பொருட்கள் மீள் சுழற்சிப்படுத்தல் வசதிகள் இல்லாமை காரணமாக பெறுமதி உலோகங்களை வேறாக்குவதற்கு முடியுமான கழிவுப்பொருட்களை மாத்திரம் சேகரித்து ஏற்றுமதி செய்வதற்கு சேகரிப்பாளர்கள் கூடிய விருப்பத்தினை காண்பித்திருந்தனர். இதனால் குறைந்த பெறுமதியுடன் முக்கியமல்லாத எனினும் பாதகமான கழிவுப்பொருட்களை மீண்டும் முறையற்ற விதத்தில் சுற்றாடலுக்கு சேர்வது அநேகமாக இடம்பெறுகின்றது.



இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக நுகர்வோர் நேரடியாக தொடர்புபடும் பிரதான இடம் காட்சிகூடமாக இருப்பதால் இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும் போது அவற்றை முறைப்படி வெளியேற்றுவதிலுள்ள முக்கியத்துவம் அவற்றை வெளியேற்ற வேண்டிய நடைமுறை அவ்விடத்திலேயே காட்சிப்படுத்தலை கட்டாயப்படுத்தல் அல்லது அவை வெளியேற்றப்பட வேண்டிய நடைமுறை என்பவற்றை அவ்விடங்களிலேயே காட்சிப்படுத்துவதைக் கட்டாயப்படுத்துவது விற்பனையாளர்களின் பிரதான பொறுப்பொன்றாக இருப்பதை உறுதிப்படுத்தும் நடைமுறையொன்றை தயாரித்தலும் அதன் மூலம் நேரடியாக பாவனையாளரை கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாட்டின் பங்களிப் பாளராக்க முடியும்.

## புலனாய்வு கணக்காய்வு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகள்

ஆளொருவர் அல்லது குழுவொன்றினால் முறைகேடாகவோ அல்லது சட்டத்திற்கு முரணான வகைக்கு சாதகமான அல்லது நலனொன்றோ பெற்றுக்கொள்வதற்கு உள்ள இடர் தொடர்பான அது தொடர்பான அடிப்படையை பரீட்சித்தல் புலனாய்வுக் கணக்காய்விலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது மோசடிகள் கண்டுபிடித்தல் மற்றும் அவற்றைத் தவிர்ப்பதற்கு கட்டுப்பாட்டு முறைமையைப் பலப்படுத்துவது தொடர்பில் புலனாய்வு கணக்காய்வின் போது கருத்திற் கொள்ளப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினெட்டாவது உறுப்புரை திருத்தத்தின் மூலம் அரச நிதியளித்தலை முறையாக முகாமை செய்வதற்காக அரச கணக்காய்வு பலப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வு நிறுவனங்களின் கடமைகளுக்குரிய கோவைகளைப் பரீட்சிப்பதற்கு மேலதிகமாக புலனாய்வை விரிவுபடுத்தும் நோக்கில் பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஆணைக்குழுக்களின் வேண்டுகோள்கள், கணக்கு குழு பிரதிநிதி, நிறுவனத் தலைவர்களின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்தும் அரச நிதி முகாமைத்துவத்தை செயற்திறனாக மேற்கொள்வது தொடர்பிலும் புலனாய்வுக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதனுடன் அண்மித்ததாக திணைக்களத்தினால் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும், பௌதீக வளங்கள் துரித அழைப்பு இலக்கங்கள், மின்னஞ்சல் போன்றவற்றை மேம்படுத்துவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

விஷேட புலனாய்வு பிரிவினால் மீளாய்வாண்டின் போது முக்கியமானதும் துரிதமாக கவனத்தை செலுத்த வேண்டிய பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 26 பிரதிநிதித்துவங்கள் தொடர்பாக ரூபா 3.86 மில்லியன் செலவினங்களைப் பரீட்சித்த போது அரசிற்கு ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 2.31 பில்லியனாக இருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளுக்குரிய முக்கியமான அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## இலங்கை தரைப்படையால் பாரா III கப்பலை கைதவிர்த்தல்

வடக்கை விடுவிக்கும் மனித நேய செயற்பாட்டின் போது முள்ள வாய்க்கால் கடற் பரப்பில் அகப்பட்டிருந்த பழுதடைந்த நிலைமையில் காணப்பட்ட பாரா III கப்பலை இலங்கை தரைப்படையினால் இரும்பிற்காக ரூபா 80.3 மில்லியனுக்கு விற்பனை செய்வதற்கு 2013 செப்தெம்பர் 12 ஆந் திகதி 30 நபரொருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசிற்குரிய இப்பெறுவனவு இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரையின் பிரகாரம் திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் அதற்கு முரணாக அப்பணம் ''இராணுவத் தளபதி நலன்புரி நிதியம்'' என்ற பெயரில் குறுக்கோடிடப்பட்டு காசோலை மூலம்

செலுத்த வேண்டுமென அந்த உடன்படிக்கையின் 5.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

- 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி அளவில் இதற்காக ரூபா 47 மில்லியனில் ரூபா 32 மில்லியன் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆவது உறுப்புரைக்கு முரணாக இராணுவத் தளபதி நலன்புரி நிதியத்திற்கும் ரூபா 15 மில்லியன் நமக்காக நாம் நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட்டிருந்தன.

- இராணுவத் தளபதி நலன்புரி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 32 மில்லியன் தொகை 2016 நவம்பர் 17 ஆந் திகதி திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் நமக்காக நாம் நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 15 மில்லியன் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.
- இராணுவத் தளபதியின் அங்கீகாரத்தின் பேரில் அப்புறப்படுத்தப்பட்ட 20 தொன் இரும்பிற்காக ரூபா ஒரு மில்லியன் செலுத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனை உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 225 தொன் இரும்பிற்காக அவ்வாறு செய்யப்படாமை காரணமாக ரூபா 22.5 மில்லியன் நட்டம் இடம் பெற்றிருந்தது.
- குறித்த உடன்படிக்கையினுள் போதியளவு நிபந்தனைகள் உள்ளடக்கப்படாமையால் இலகுவாக வெட்டி அகற்றக்கூடிய கடலுக்கு வெளிப்புறத்தில் காணப்பட்ட இருப்பினை மாத்திரம் கொள்வனவாளரால் அப்புறப்படுத்தியிருந்த போதிலும் கப்பல் அகற்றுதல் இடை நிறுத்த கொள்வனவாளருக்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

## 2018 பொது நலவாய நாடுகளின் விளையாட்டு விழாவினை நடாத்துவதை இலங்கைக்கு பெற்றுக் கொள்ளல்.

சீ.டபிள்யூ.ஜீ. அம்பாந்தோட்டை 2018 தனியார் கம்பனியை தாபிப்பதற்காக விளையாட்டு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரால் 2010 திசெம்பர் 16 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2010 திசெம்பர் 29 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அதன் பிரகாரம் மேற்குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் 06(ii) பிரிவின் பிரகாரம் கூட்டிணைக்கப்பட்ட சீடபிள்யூஜீ. அம்பாந்தோட்டை 2018 தனியார் கம்பனியின் பங்குகளிலிருந்து 51 சதவீதம் இலங்கை அரசிங்கும் எஞ்சிய 49 சதவீத பங்குகளின் உரித்து அரசிற்குரிய நிறுவனங்களுக்கு உரித்தாகும் வகையில் பங்குகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள நிறுவனங்களால் அதன் ஆரம்ப பங்கு மூலதனத்திற்காக ரூபா 128.00 மில்லியன் பணம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு பங்கு மூலதனமாக கருதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உரிய முத்திரைக் கட்டணமான ரூபா 640,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக அங்கீகாரம் உரிய கம்பனி பணிப்பாளர் தீர்மானத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- விளையாட்டு அமைச்சிலிருந்து ரூபா 100 மில்லியனும் விளையாட்டு அமைச்சின் தேறிய விளையாட்டு நிதியத்திலிருந்து ரூபா 10 மில்லியனும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடமிருந்து ரூபா 8

மில்லியனும் இலங்கை டெலிகொம் கம்பனி ரூபா 10 மில்லியனுமாக ரூபா 128 மில்லியன் பங்கு மூலதனத்திற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மூலம் ஈடுபடுத்தப்பட்டிருந்த பணம் மாத்திரம் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வருடாந்த கணக்குகளில் முதலீடுகளாக உள்ளடக்கப்பட்டிருந்தன.

- கம்பனி பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 128 மில்லியன் பங்கு மூலதனம் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேற்படி சீ.டப்ளியூ.ஜீ. அம்பாந்தோட்டை 2018 தனியார் கம்பனியை தாபிப்பதற்காக (118,000,000/128,000,000x100) 92 சதவீதமான பங்கு மூலதனம் முழுவதும் அரச நிதிகள் மூலம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே தனியார் நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொண்ட பணமாக இருந்த போதிலும் அவற்றை அரசின் கம்பனிக்கு பெற்றுக்கொள்ளும் போதும் பணத்தை செலவிடும் போதும் அதற்காக அரசின் சட்ட விதிகளுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும் இணங்க மிகவும் சிக்கனமாக செலவிடப்பட வேண்டியிருந்ததுடன் அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கைகளும் ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது நடவடிக்கை எடுத்தல் கட்டாயமாக இருப்பதுடன் மேற்படி கம்பனியால் மேற்கொள்ளப் பட்டிருந்த ரூபா 696.70 மில்லியன்செலவினம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை.

## இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தினால் 2016 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 190 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். பிரதி பொது முகாமையாளர் தொழிற்பாட்டு பதவிக்காக தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவர், கூட்டுத்தாபனத்தில் இருக்கும் போது விண்ணப்பம் கோராமல் பணிப்பாளர் சபையினதும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் ஒன்று இல்லாமலும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யாத ஒருவரை ஆட்சேர்ப்பு செய்ததன் மூலம் அப்பதவிக்கு இரண்டு உத்தியோகத்தர்களை நியமித்ததன் பேரில் அங்கீகாரமின்றி ரூபா 3.62 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பணிப்பாளர் சபையினது அங்கீகாரமும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் அங்கீகாரம் ஒன்று இல்லாமல் கூட்டுத்தாபனத்தின் மனிதவள முகாமைத்துவ பதவிக்காக உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தருக்கு மேலதிக சம்பள ஏற்றங்கள் மற்றும் படிகளாக ரூபா 474,907 செலுத்தப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனத்தின் நிதி முகாமைத்துவ பதவிக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்த ரொருவருக்கு மேலதிக சம்பள ஏற்றங்கள் மற்றும் படிகளாக ரூபா 975,851 செலுத்தப்பட்டிருந்தது.

தலைவரின் அந்தரங்க செயலாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சம்பள நிலைக்கு மேற்பட்ட சம்பள அளவில் வைக்கப்பட்டு சம்பளம் மற்றும் படிகளின்

பேரில் ரூபா 1.16 மில்லியன் நிதி நட்டமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. சட்ட ரீதியற்ற வகையில் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் பேரில் சம்பள ஏற்றங்கள் மற்றும் படிகளாக ரூபா 437,836 ஆன நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.

### இலங்கை கடற்படை

இலங்கை கடற்படையினால் 2015 ஒக்தோபர் 15 இல் அங்கீகாரமொன்று இல்லாமல் 420 தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக அண்ணளவாக ஆண்டொன்றிற்கு ரூபா 95 மில்லியன் அளவில் செலுத்தப்பட்டிருந்தது. சிவில் நிர்வாக பணிப்பாளர் அலுவலகத்தின் சிவில் நிர்வாக பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடங்களாக இருந்தமை மற்றும் பதவி நிலை உதவியாளர் மற்றும் பிரதான எழுதுனர் பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்கள் பெயரிடப்படாமை அடிப்படையில் முறையான மேற்பார்வையொன்றின் மூலம் உரிய பிரிவின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையாலும் பதவியணியினருக்கிடையே சர்ச்சைக்குரிய நிலைமையொன்று உருவாகியிருந்தது.

## வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனம்

### வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனம் உள்நாட்டு பெரிய வெங்காயம் கொள்வனவு

வருடாந்த பெரிய வெங்காய தேவையை உள்நாட்டு பெரிய வெங்காயம் அறுவடை மூலம் முறையாக முகாமை செய்வதினூடாக நிறைவேற்றுததற்கும் உள்நாட்டு வெங்காய கைத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அறுவடைக்காக உயர்ந்த விலையொன்றினை வழங்குவதற்கு சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலைத் தளம்பலை குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு வெங்காயத்தைக் கொள்வனவு செய்தல், வெங்காயத்தை தெரிவு செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் களஞ்சியப்படுத்த போதியளவில் இல்லாத சந்தர்ப்பத்தில் லங்கா சதோச ஊடாக நாளாந்தம் விற்பனை செய்தல், களஞ்சியப் பொருட்களை 04 மாத காலம் வைத்துக் கொள்வதற்காக தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துதல் மற்றும் அதற்காக நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியங்களை தொழில்நுட்ப பிரகாரம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டங்களின் செயற்படுத்தலை பரீட்சித்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

- வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் கொள்வனவிற்காக பொருத்தமான நடைமுறையொன்றும் பெரிய வெங்காயம் கொள்வனவிற்குரிய கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
- 2014/2015 பெரும்போகத்திற்காக உள்நாட்டு பெரிய வெங்காயத்தினை கொள்வனவு செய்யும் போது அந்த உற்பத்திகளின் தரம் தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- செயலாற்றல் செயற்பாட்டுக் குழுவினால் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்திற்கு செலவாகும் உற்பத்திக் கிரயம் போன்றவை தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் ஒரு கிலோகிராமிற்கு ரூபா 60 என்ற உத்தரவாத விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் ஒரு கிலோ கிராம் ரூபா 90 வீதம் கொள்வனவு செய்ய நேர்ந்திருந்தது. இதனால் 2014 நவம்பர் 26 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 13 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தின் மூலம் கொள்வனவு

செய்யப்பட்டிருந்த 4,522,342 கிலோகிராமிற்காக ரூபா 135.67 மில்லியன் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- கொள்வனவு செய்யப்பட்டிருந்த பெரிய வெங்காயத்தை 04 மாதங்கள் காலம் வைத்திருக்க கூடிய வகையில் களஞ்சியப்படுத்தவதற்காக தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியங்களில் பெரிய வெங்காயத்தை களஞ்சியப்படுத்துவதற்குப் பொருத்தமான விதத்தில் தொழில்நுட்ப முறைககளைப் பயன்படுத்தாமை மற்றும் விற்பனை செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையொன்று பயன்படுத்தாத காரணத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட 1,121,136 கிலோ கிராம் பழுதடைந்தமையால் ரூபா 100.90 மில்லியனான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.
- அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் ரூபா 65 இற்கும் ரூபா 60 இற்கும் விற்பனை செய்ய அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிலும் குறைந்த விலையில் விற்பனை செய்தமையால் வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்திற்கு ரூபா 44.31 மில்லியனான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது.
- வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனம் உள்நாட்டு பெரிய வெங்காயத்தை கொள்வனவு செய்யும் காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட 959,541 கிலோகிராம் பெரிய வெங்காயத்தை கொள்வனவு செய்திருந்ததுடன் அதற்காக ரூபா 63.22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் விளையாட்டு அமைச்சிற்காக கரம்போட் மற்றும் தாம்போட் இறக்குமதி செய்தல்

வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் விளையாட்டு அமைச்சிற்காக 2014 நவம்பர் 20 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 05 ஆச் திகதி வரையான காலப்பகுதியில் 14,000 கரம்போட் மற்றும் 11,000 தாம்போட் தீர்வை வரியின்றி இறக்குமதி செய்வதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 39.06 மில்லியன் பணத்தை 2016 மே மாதம் வரையிலும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இது தொடர்பான வேண்டுகோள் விளையாட்டு அமைச்சின் செயலாளரினால் 2014 நவம்பர் 07 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்திற்கு விடப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முன்னர் 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி மற்றும் 21 ஆந் திகதி அவ்விளையாட்டு பொருட்களை பெற்றுக் கொள்வதன் மாதிரிப்பட்டியல் பெற்றுக் கொள்ளப்பட்டு நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்தது. பூரண அரச கம்பனியொன்றான வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் இக்கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் இந்திய நிறுவனமொன்றிலிருந்து குறித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நாணயக் கடிதம் திறக்கப்பட்டிருந்தது.
- கட்டளையிடப்பட்ட ரூபா 26.80 மிலலியன் பெறுமதியான 14,000 கரம்போட் உள்ளடக்கப்பட்ட 14 கொள்கலன்களும்

ரூபா 12.26 மில்லியன் பெறுமதியான 11,000 தாம்போட் உள்ளடக்கப்பட்ட 03 கொள்கலன்களும் 2014 நவம்பர் 17 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 06 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மெக்லம் இருப்பு பகிர்ந்தளித்தல் கிளைக்கு கிடைத்திருந்தன அப்பெறுவனவிற்காக பொருள் பெறுவனவுக் குறிப்பு (GRN) வழங்கப்படாதிருந்ததுடன் இருப்பு பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இப்பொருள் இருப்பு விளையாட்டு அமைச்சிற்கு கையளிக்கப்படாமல் விளையாட்டு அமைச்சின் அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரொருவரிடம் நேரடியாக வழங்கப்பட்டதாக பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்தது.

- விளையாட்டு அமைச்சிற்கு தீர்வை வரியின்றி இறக்குமதி செய்யப்பட்ட கரம் போட் மற்றும் தாம் போட் என்பவற்றை விளையாட்டு அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் முறையான அங்கீகாரமின்றி துறைமுக அதிகாரசபைக்குரிய மாபிம களஞ்சியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

### வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் கடனுக்கு விற்றலும் பணத்தை அறவிடலும்

வரையறுக்கப்பட்ட லங்கா சதோச நிறுவனத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 501 மில்லியன் பெறுமதியான பொருட்கள் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்தன. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 112 விற்பனை நிலையங்களில் 337 கடன்பட்டோரிடமிருந்து ரூபா 218 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. அப்பணத்தை அறவிடுவதற்கு 2016 செப்தெம்பர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அக்கடன்பட்டோர் மீதியில் ரூபா 1 மில்லியனில் இருந்து ரூபா 5 மில்லியன் வரையான வீச்சிலான 11 கடன்பட்டோரும் ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட 8 கடன்பட்டோரும் இருந்தனர். மேலும் மக்பெட், திஸ்ஸமஹாராம, கதிர்காமம், வொக்ஷேல் வீதி, தெபராவெவ மற்றும் குருணாகல் ஆகிய கிளைகள் மூலம் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 11.37 மில்லியன் பெறுமதியான பொருட்களுக்காக அறவிடப்பட வேண்டிய பணத்தை பல பணிப்பாளர் சபை கூட்டங்களின் போது நன்கொடையாக கருதுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

### அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் Botulinum Toxin கொள்வனவு

அரச வைத்தியசாலைகளுக்கு தேவையான Botulinum Toxin 100 ml மருந்துகளில் 750 vials 2014 செப்தெம்பர் மாதம் வரை வழங்குமாறு 2014 மார்ச் 12 ஆந் திகதி அரச மருத்துவ வழங்கல் பிரிவினால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. அக் கட்டளைகள் முறையாக செயற்படுத்தப்படாமையால் 2015 ஆம் ஆண்டின் போது 05 வைத்தியசாலைகளுக்கு அம் மருந்துகளை வழங்குவதற்காக ரூபா 4.76 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த ஊசி வகை 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த விலை விபரங்களின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்ததால் ஒரு ஊசிக்காக ரூபா 18,536.72 வீதம் ரூபா 2.56 மில்லியன் ஆக இருந்தது. முறைப்படி கொள்வனவுச் செயற்பாடு மேற்கொள்ளப்படாமையால் 05 வைத்தியசாலைகளுக்காக ரூபா 2.20

மில்லியன் கூடுதலாக கொடுப்பனவு செய்ய நேர்ந்தது.

### கொழும்பு மாநகர சபை

#### உணவுப் பயன்பாடு நிறுவனங்களைப் பதிவு செய்தல்

1980 இன் 26 ஆம் இலக்க உணவு அதிகாரச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2012 ஜனவரி 26 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் பேணிச் செல்லப்படும் அனைத்து வகை உணவுகளை கையாளும் வியாபாரமொன்றினாலும் பயன்படுத்தப்படுகின்ற நீர் மாதிரி, உணவு மாதிரி மற்றும் உணவுகளை கையாளுவோர் நல்ல சுகாதார நிலைமையில் இருப்பதாக பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியால் பரீட்சித்து பரிந்துரைத்ததன் பின்னர் அனுமதிப்பத்திரத்தை வழங்க வேண்டும். அவ்வாறான 285 வியாபார நிலையங்கள் எவ்வித பரிசோதனையுமின்றி பிரதேச சுகாதார மருத்துவ உத்தியோகத்தரால் பரீட்சித்து பரிந்துரைகள் வழங்கி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

#### இரசாயன பொருட்கள் காலாவதியாதல்.

உணவு மற்றும் நீர் மருத்துவ பரிசோதனை மாதிரிகளைப் பரீட்சிப்பதற்கு நகர பரிசோதனை ஆய்வுகூடத்தில் போதியளவு நவீன இயந்திரங்களும் இரசாயன பதார்த்தங்களும் காணப்பட்டன. உணவுப் பாவனையில் ஈடுபடுவோரின் மருத்துவ பரிசோதனை 2015 மே மாதத்திலிருந்து 2016 செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தோடு உணவு மாதிரிகளின் பரிசோதனைகளும் 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4.89 மில்லியன் பெறுமதியான 21 உருப்படிகளும் பெறுமதி மதிப்பிட முடியாதிருந்த 30 உருப்படிகளும் காலாவதியாகி இருந்தன.

### இலங்கை புகையிரத திணைக்களம்

#### வைஸ்ரோய் விஷேட புகையிரதத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்தல்

இலங்கை புகையிரத திணைக்களத்திற்குரிய வைஸ்ரோய் விஷேட புகையிரதம் என்ற பெயரில் அழைக்கப்படும் 04 பெட்டிகளுடன் கூடிய நீராவி என்ஜினுடன் கூடிய புகையிரதமொன்றை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக இலங்கை புகையிரத திணைக்களம் வரையறுக்கப்பட்ட கம்பனியுடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2016 மே 01 ஆந் திகதி வரையிலும் முன்னைய காலப்பகுதிக்காக அவ்வரையறுக்கப்பட்ட கம்பனியிடமிருந்து புகையிரத கட்டணங்களாக ரூபா 9.79 மில்லியனும் திருத்தக் கட்டணங்களாக ரூபா 6.12 மில்லியனுமாக மொத்தம் ரூபா 15.91 மில்லியன் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. கம்பனியால் அக்கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. அப்பணத்தை அறவிடுவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுக்காமல் மீண்டும் 2016 மே 02 ஆந் திகதி முதல் 2021 மே 01 ஆந் திகதி வரை 05 ஆண்டு காலப்பகுதிக்கு 2016 யூன் 07 ஆந் திகதி அக்கம்பனியுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திட்டிருந்தது.

#### புகையிரத கூடங்களை தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கல்

புகையிரத்தில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு மிகவும் உயர்ந்த சேவைகளை வழங்குவதற்காக விஷேட சொகுசு புகையிரத கூடங்களை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்தது. இது தொடர்பாக இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து அந்த விஷேட சொகுசு போக்குவரத்து சேவைகளை நிறைவேற்றுவதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு புகையிரத பெட்டிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அந்த குத்தகை உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட திகதி முதல் 6 மாதங்கள் அளவில் சேவை வழங்குவதை அந்த இரு கம்பனிகளும் புறக்கணித்திருந்தது. இதனால் ரூபா 34.87 மில்லியன் கொள்விலையான 12 புகையிரத பெட்டிகள் அக்காலப்பகுதியில் விளைவற்றுக் காணப்பட்டன. இக் கூடங்கள் முதலாம் வகுப்பு நுழைவுச் சீட்டு கட்டணங்களின் பிரகாரம் ஓட்டத்தில் ஈடுபடுத்துவதால் ரூபா 22.08 மில்லியன் வருமானமொன்று உழைக்க முடியுமாக இருந்த போதிலும் அவ்வருமானம் திணைக்களத்தினால் இழக்கப்பட்டிருந்தது.

## திணைக்களத்தின் T1 515 ரேல்கார் வண்டியை குத்தகைக்கு வழங்கல்

சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு சொகுசு சேவையொன்றை வழங்குவதற்காக திணைக்களத்திடம் காணப்படும் 32 பேர் பிரயாணிக்க கூடிய TI 515 ஆம் இலக்க ரேல் கார் வண்டி வாடகை கட்டணத்தின் பேரில் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அக்கம்பனியால் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் ரேல் காரை மேம்படுத்துவதற்காகவும் புனரமைப்பதற்காகவும் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் திணைக்களத்தினால் ரூபா 2.32 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் அச் செலவினத்தை கம்பனியிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## ''ரேல் டிரவல்ஸ்'' அலுவலகத்திற்காக கொழும்பு கோட்டை புகையிரத நிலையக் கட்டிடத்தில் இடவசதிகளை வழங்குதல்

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் கட்டிட வளவில் சுற்றுலா தகவல்களை வழங்குவதற்காக "ரேல் டிரவல்ஸ்" என்ற பெயரில் அலுவலகமொன்றை பேணிச் செல்வதற்காக வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு 1987 ஆம் ஆண்டு முதல் 565 சதுர அடியுடன் கூடிய கட்டிட இடவசதிகள் வழங்கப்பட்டிருந்தன. 2011 ஆகஸ்ட் 30 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய குத்தகை வாடகை ரூபா 1.32 மில்லியனாக இருந்தது. அந் நிலுவை குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீண்டும் 2011 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை 05 ஆண்டுகளுக்கு புகையிரத பொது முகாமையாளரின் தற்றுனிவின் பேரில் தீர்மானிக்கப்பட்ட ரூபா 40,000 ஆன மாதாந்த வாடகையின் கீழ் அக்கம்பனிக்கு மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

# 2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள்

## வருடாந்த நிதிக்கூற்றுக்கள்

வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட சொத்துக்களை வருடாந்த நிதிக்கூற்றுக்களின் அறிமுகப்படுத்தலின் ஊடாக நிதிக்கூற்றுக்களில் கூட்டிணைத்தலின் மூலம் அவற்றின் கட்டுப்பாடு, நாட்டின் சார்பாக அரசாங்கத்தினால் வைத்திருக்கப்படும் சொத்துக்களை கணிப்பிடுதல் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைப்பதன் மூலம் அவற்றின் பாதுகாப்புக்கு உறுதிப்படுத்தலை வழங்குகின்றமையை குறிப்பிட்டாக வேண்டும். அத்துடன் இம்முறைமையில் வருமானம் மற்றும் செலவினம் அட்டுறு அடிப்படையில் கணிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்யப்படுவதனால் வருமானங்களை சேகரிப்பதற்கும் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

### வருடாந்த ஒதுக்கீடுகள்

முன்னைய ஆண்டிற்கான 1,186 மில்லியன் ஏற்பாட்டுடன் ஒப்பிடுகையில் திணைக்களத்திற்கான 2016 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடு ரூபா 1,390 மில்லியன் ஆகும்.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டச் சபைகள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச்சட்ட நிதியங்கள் என்பவற்றிலிருந்து கணக்காய்வுக் கட்டணங்களாக ரூபா 169 மில்லியன் சேகரிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் போது திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட ரூபா 120 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 49 மில்லியன் மேலதிகமாக சேகரிக்கப்பட்டிருந்தது.

### திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

சொத்துக்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் செயற்பாடுகளின் வினைத்திறன் என்பவற்றை அளவிடுவதற்கான கருவியொன்றாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான ஆரம்பப் படி 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. காலனித்துவக் காலம் முதல் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு வந்திருந்த நிறுவனம் என்ற வகையில் முதல் முறையாக திணைக்களத்தில் இம்முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் அரசாங்கக் கணக்குகள் திணைக்களத்தின் அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2013 ஜனவரி 24 ஆந் திகதிய எஸ்ஏ/ஏஎஸ்/ஏஏ சுற்றறிக்கையின் மூலம் இம்முறைமை சகல அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் 2013 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையின் அறிமுகத்தினைத் தொடர்ந்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதன் அரம்பப் படியாக திணைக்களம் அரசாங்கத் துறைக்கு முன்னுதாரணமொன்றை வழங்கியுள்ளது.

### கணக்கீட்டுக் கொள்கைகள்

#### 1. அறிக்கையிடல் நிறுவகம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் ஸ்தாபிப்பு தொடர்பாக எவ்வித குறித்துரைக்கப்பட்ட சட்டமும் இல்லை. எவ்வாறெனினும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஒருவர் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154(1) மற்றும் (3) ஆம் உறுப்புரைகளில் விதந்துரைக்கப்பட்டவாறு அரசாங்க நிறுவகங்களிற்கு கணக்காய்வுச் சேவைகளை வழங்குவதே கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதான பணியாகும். இந்த நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானதாகும்.

#### 2. அறிக்கையிடல் காலப்பகுதி

அறிக்கையிடல் காலப்பகுதி சனவரி 01 இல் தொடங்கி திசெம்பர் 31 இல் முடிவடையும் தினக்குறிப்பேட்டு ஆண்டாகும்.

#### 3. தயாரிப்பிற்கான அடிப்படை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சகல பெறுமதிகளும் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. சகல பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

## 4. வருமானம்

திணைக்கள வருமானத்தின் பிரதான மூலங்களாக திறைசேரியிடமிருந்து கிடைத்த மீண்டெழும் செலவினத்திற்கான மானியம், கணக்காய்வுக் கட்டணங்கள், கடன்களின் வட்டி, கட்டிடவாடகை, சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களைக் கருத முடிவதுடன் இவை அட்டுறு அடிப்படையில் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. வருமானங்கள் அவற்றின் பெறுவனவைக் கருத்திற்கொண்டு நியாய அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளன.

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள், உள்ளூராட்சி அதிகார சபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நியதிச் சட்ட நிதியங்களிற்கு கணக்காய்வுக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. கட்டணமானது அவை உரித்தான காலப்பகுதிக்குரிய வருமானமாக இனங்காணப்படுகின்றன. கணக்காய்வுக் கட்டணப் பெறுமதியானது கணக்காய்விற்காகச் செலவிடப்பட்ட காலத்தையும் குறித்த கணக்காய்விற்காக செலவிடப்பட்ட ஏனைய நேரடிக் கிரயத்தையும் சார்ந்து தீர்மானிக்கப்படுகின்றது.

கடன்கள் மீதான வட்டி, கட்டிட வாடகைகள், சுற்றுலா விடுதிக் கட்டணங்கள், சொத்துக்களின் விற்பனையிலிருந்தான இலாபம், தண்டப்பணங்கள் மற்றும் கட்டணங்களிற்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஏனைய திணைக்களங்களின் தலைவர்களாக உள்ள போதிலும், திணைக்களத்துடன் தொடர்புபட்ட அந்த வருமானங்கள் சேகரிக்கின்ற உத்தியோகத்தர் கணக்காய்வாளர் தலைமை அதிபதியாவதனாலும் அவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானங்கள் மொத்த வருமானத்தில் சிறிய சதவீதமொன்றாக காணப்படுவதனாலும் அந்த வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன. காசு அடிப்படையில் திறைசேரியின் மீண்டெழும் செலவினத்திற்கான மானியங்கள் கணக்கீடு செய்யப்படுகின்ற போதிலும், நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு பெறவேண்டிய மீண்டெழும் செலவினத்திற்கான மானியமாக கணக்கீடு செய்யப்படுகின்றது.

## 5. செலவினம்

சகல மீண்டெழும் செலவினங்களும் அட்டுறு அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்படுகின்றன.

## 6. வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் அவை இடம் பெற்ற திகதியில் நிலவிய செலாவணி விகிதத்தைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவிற்கு பரிமாற்றப்படுகின்றது. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவில் இருந்து விளையும் அந்நிய செலவாணி இலாபங்களும் நட்டங்களும் நிதிச் செயலாற்றல் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

## 7. காசும் காசுக்குச் சமமானவைகளும்

காசும் காசுக்குச் சமமானவைகளும் கைகளில் உள்ள காசையும் உயர் திரவத் தன்மையுடைய வங்கியுடனான குறுங்கால வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

## 8. கடன்பட்டோரும் ஏனைய பெறவேண்டியவைகளும்

கடன்பட்டோரும் பெறவேண்டியவைகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணிப்பிடப்படுகின்றன. அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அடிப்படை நிபந்தனைகளின் படி காசினை அல்லது பெறவேண்டிய மீதியினை திணைக்களம் அறவிட முடியாதுள்ளமைக்கு சான்றுகள் காணப்படமாயின் பெறவெண்டிய தொகைகள் நட்டமாக கருதப்படுகின்றன.

## 9. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் என்பதில் காணி, கட்டிடம், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள், கனணி

உள்ளடங்கலான அலுவல உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள், சிறு அச்சகம், மின்சார பாரந்தூக்கி என்பன உள்ளடங்கியுள்ளன. ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. மீதிகள் முன் கொண்டுவரப்பட்டு முதற் தடவையாக 2009 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2010 சனவரி 01 அன்று நிலவிய காணிகளும் கட்டிடங்களும் நில அளவைத் திணைக்களத்தின் திட்டங்களின் படியும் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட பெறுமதியிலும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன. அரசாங்க மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ளப்பட்ட மீள் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு சகல மோட்டார் வாகனங்களும் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டதுடன் தளபாடங்கள், கணனிகள் மற்றும் ஏனைய விடயங்கள் மதிப்பீட்டாளர்களின் சுதந்திரமான ஓர் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டன.

திணைக்களத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடிய அல்லது எதிர்காலத்தில் சேவைகளை திணைக்களத்திற்கு உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பின் அவை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் என நிச்சயிக்கப்படுவதோடு அவ்விடயங்களின் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் இனங்காணப்படுகின்றன. கிரயம் இன்றி கையேற்கப்பட்ட அல்லது பெயரளவுக் கிரயத்தில் கையேற்கப்பட்ட சொத்தின் கிரயம் அச் சொத்து கையேற்பட்ட திகதியில் உள்ளவாறான சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

## 9.1 கைதவிர்ப்புக்கள்

சொத்துக்களின் முன்கொண்டுசென்ற தொகையினை விற்பனை வருமானத்துடன் ஒப்பிடுவதன் மூலமே கைதவிர்ப்பின் மீதான இலாபம் அல்லது நட்டம் தீர்மானிக்கப்படுகிறது. கைதவிர்ப்பின் மீதான இலாபமும் நட்டமும் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 9.2 பிந்திய நிகழ்வுக் கிரயம்

திணைக்களத்திற்கு எதிர்கால பொருளாதார நலனை வழங்கக்கூடியதாக அல்லது எதிர்காலத்தில் சேவைகளை உட்பாய்ச்சக் கூடியதாக இருப்பதுடன் அவ்விடயங்களின் கிரயத்தினை நம்பகரமான முறையில் அளவிட முடியுமாயின் மாத்திரமே ஆரம்பக் கொள்வனவை அடுத்து ஏற்பட்ட கிரயங்கள் மூலதனமாக்கப்படுகின்றன.

## 9.3 பெறுமானத்தேய்வு

சகல பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு நேர்கோட்டு முறையின் அடிப்படையில் அவற்றின் கிரயத்திலிருந்து தேறத்தக்க பெறுமதியினைக் கழித்து வரும் தொகைக்கு பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் பகிர்ந்தளிக்கக்கூடிய விதத்தில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது. சொத்துக்களின் பிரதான வகுதிகளிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பயன்தரக்கூடிய ஆயுட்காலமும் பெறுமானத் தேய்வு வீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | ஆயுட்காலம் (ஆண்டுகள்) | பெறுமானத்தேய்வு வீதம் (சதவீதம்) |
|---|---|---|
| கட்டிடங்கள் | 50 | 2.0 |
| சிறிய அளவான அச்சகம் | 20 | 5.0 |
| மின்சாரத் தூக்கி | 20 | 5.0 |
| மோட்டார் வாகனங்கள் | 8 | 12.5 |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 5 | 20.0 |
| கணனிகள் மற்றும் வன்பொருட்கள் | 4 | 25.0 |

## 10. செலுத்த வேண்டியவைகள்

ஐந்தொகைத் திகதியில் உள்ள பெறுமதியில் செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்குக் கொண்டுவரப்படுகின்றன. செலுத்த வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

## 11. வருடாந்த மதிப்பீடுகள்

வருடாந்த ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப் பட்ட வருடாந்த மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டிருப்பவையே பிரதான மதிப்பீட்டுத் தொகைகளாகும். குறைநிரப்பு மதிப்பீடுகள் அல்லது நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் கீழான மாற்றங்களுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னரான தொகைகளே இறுதித் தொகைகளாக காட்டப்பட்டுள்ளன.

## 12. தீர்ப்புகளும் மதிப்பீடுகளும்

கொள்கைகள் பிரயோகிக்கப்படுவதனையும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினதும் வருமானங் கள் மற்றும் செலவினங்களினதும் தொகைகளை அறிக்கையிடுவதனையும் பாதிக்கின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் இந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுகின்றன. இந்த மதிப்பீடு களும் ஒருங்கிணைந்த எதிர்வுகூறல்களும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நியாயமானவையாக நம்பப்படுகின்ற ஏனைய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அமைந்ததாகும்.

## 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று

| மதிப்பீடு 2016 | | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|---|
| *ரூபா.000* | | | *ரூபா.000* | *ரூபா.000* |
| | **வருமானம்** | | | |
| 120,000 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 1 | 136,504 | 104,025 |
| 320 | வாடகை | | 493 | 280 |
| 9,000 | வட்டி | | 8,957 | 9,384 |
| - | தண்டப்பணமும் கோரப்படாதவைகளும் | | 21 | 15 |
| 4,000 | ஏனையவை கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் மீதான இலாபம் | 2 | 8,152 | 3,053 |
| 133,320 | **மொத்த செயற்பாடு வருமானம்** | | 20,808 | 3,255 |
| 1,107,210 | மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரி மானியம் | 3 | 174,935 | 120,012 |
| 1,240,530 | **மொத்த வருமானம்** | | 1,025,749 | 1,134,428 |
| | **செலவினம்** | | 1,200,684 | 1,254,440 |
| 1,046,800 | தனியாள் ஊதியங்கள் | 4 | 960,036 | 1,015,033 |
| 30,400 | பிரயாணச் செலவினம் | 5 | 29,935 | 14,663 |
| 25,800 | வழங்கல்கள் | 6 | 28,154 | 18,133 |
| 12,850 | பேணுகைகள் | 7 | 12,081 | 16,510 |
| 84,000 | சேவைகள் | 8 | 80,326 | 68,283 |
| 11,500 | மாற்றீடுகள் | 9 | 11,384 | 10,379 |
| 26,180 | பயிற்சியும் இயலளவு கட்டியெழுப்புதலும் | | 26,022 | 1,889 |
| - | பெறுமானத்தேய்வு | 10 | 56,050 | 85,715 |
| - | மீண்டெழும் செலவினம் - இயலளவைக் கட்டியெழுப்புதல் செயற்திட்டம் | 11 | 24,904 | 24,904 |
| 1,237,530 | **மொத்த செலவினம்** | | 1,228,892 | 1,255,509 |
| 0 | **செலவினத்தை மிகைத்த வருமானம்/(பற்றாக்குறை)** | | (28,208) | (1,069) |

## 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2016 திசெம்பர் 31 | | 2015 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 10 | | 1,080,36 7 | | 1,123,327 |
| கணக்காய்வு முறைகளின் அபிவிருத்தி | 11 | | 126,476 | | 151,380 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| காசு மீதி | | | – | – | |
| பதிவேட்டுப்பொருட்கள் | **12** | 6,007 | | 5,225 | |
| அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள் | 13 | 214,319 | | 218,238 | |
| பெறவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | 14 | 184,299 | | 214,429 | |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | | **404,625** | | **437,892** |
| **மொத்த சொத்துக்கள்** | | | **1,611,46 8** | | **1,712,599** |
| | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்த வேண்டிய செலவுகள் | 15 | 1,092 | | 2,232 | |
| வைப்புகள் - செலுத்தவேண்டியவை | | 19,473 | | 24,990 | |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | | **20,565** | | **27,222** |
| **திரட்டிய நிதியம்** | | | | | |
| சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | | **217,422** | | 218,491 | |
| ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை) | | (28,208) | | (1,069) | |
| திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | | | **189,214** | | **217,422** |
| **பங்களிப்பு** | | | | | |
| திறைசேரி | 16 | 629,448 | | 639,118 | |
| அரசாங்கத் துறை இயலளவு கட்டியெழுப்புதல் செயற்திட்டம் | 17 | 772,241 | 1,401,68 9 | 828,837 | 1,467,955 |
| **வரி செலுத்துனர்களின் மொத்த உரிமைத்துவம்** | | | **1,611,46 8** | | **1,712,599** |

**எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**எஸ்.எஸ். லியனகே**
**பிரதான கணக்காளர்**

**2017 ஒக்தோபர் ஆந் திகதி**

## நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகள்

குறிப்பு இல. 1 கணக்காய்வுக் கட்டணம்

| மதிப்பீடு 2016 | விபரம் | 2016 | 2015 |
|---|---|---|---|
| ரூபா.000 | | ரூபா.000 | ரூபா.000 |
| | **பெறுவனவுகள்** | | |
| **120,000** | அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 63,256 | 32,787 |
| - | உள்ளூராட்சி மன்றங்கள் | 20,985 | 26,307 |
| - | கமநல சேவை நிலையங்கள் | 1,160 | 1,225 |
| **120,000** | **மொத்தம்** | **85,401** | **60,319** |
| | **பெறப்பட வேண்டியவை** | | |
| - | அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் | 34,661 | 20,850 |
| - | உள்ளூராட்சி மன்றங்கள் | 15,334 | 19,986 |
| - | கமநல சேவை நிலையங்கள் | 1,108 | 2,870 |
| - | **மொத்தம்** | **51,103** | **43,706** |
| 120,000 | **முழு மொத்தம்** | **136,504** | **104,025** |

| குறிப்பு இல. 02 | சொத்துக்களின் கைதவிர்ப்பு | | |
|---|---|---|---|
| மதிப்பீடு 2016 | **விபரம்** | 2016 | 2015 |
| ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 |
| | **வாகனங்களின் கைதவிர்ப்பு** | - | 6,349 |
| - | வாகனங்களின் விற்பனைப் பெறுமதி | - | (3,212) |
| - | முன்கொண்டு சென்ற தொகை | - | **3,137** |
| - | வாகனங்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்) | | |
| | | | |
| - | **தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு** | | |
| - | தளபாட உபகரணங்களின் விற்பனைப் பெறுமதி | 18,558 | 133 |
| - | முன்கொண்டு சென்ற தொகை | 0 | (46) |
| - | தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்) | **18,558** | **87** |
| | **கனணிகள் மற்றும் வன் பாகங்களின் கைதவிர்ப்பு** | | |
| - | கனணிகள் மற்றும் வன் பாகங்களின்விற்பனைப் பெறுமதி | 2,250 | 31 |
| | முன்கொண்டு சென்ற தொகை | 0 | - |
| - | தளபாட உபகரணங்களின் கைதவிர்ப்பு இலாபம்/(நட்டம்) | **2,250** | **31** |
| - | சொத்துக்களின் கைதவிர்ப்பு இலாபம் | **20,808** | **3,255** |

**குறிப்பு இல. 03 மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரி மானியம்**

| மதிப்பீடு 2016 | **விபரம்** | 2016 | 2015 |
|---|---|---|---|
| ரூபா.000 | | ரூபா.000 | ரூபா.000 |
| **1,240,530** | திறைசேரியிடமிருந்து கிடைத்த கட்டுநிதி | 940,762 | 1,023,809 |
| - | பெறுமானத்தேய்விற்காக பெறவேண்டிய கட்டுநிதி | 56,050 | 85,715 |

| | | | |
|---|---|---|---|
| - | கணக்காய்வு முறை அபிவிருத்திக் கிரயம் | 24,904 | 24,904 |
| 1,240,530 | **மீண்டெழும் செலவினத்திற்கான திறைசேரிப் பங்களிப்பு** | **1,021,716** | **1,134,428** |

## குறிப்பு இல.04 ஆளணி வேதனங்கள்

| மதிப்பீடு 2016 | விபரம் | 2016 | 2015 |
|---|---|---|---|
| ***ரூபா.000*** | | *ரூபா.000* | *ரூபா.000* |
| 451,800 | சம்பளங்களும் கூலிகளும் | 447,334 | 384,461 |
| **5,000** | மேலதிக நேர மற்றும் விடுமுறைதினக் கொடுப்பனவுகள் | 4,619 | 3,196 |
| **590,000** | ஏனைய படிகள் | 508,083 | 627,376 |
| **1,046,800** | **மொத்தம்** | **960,036** | **1,015,033** |

## குறிப்பு இல.05 பிரயாணச் செலவினம்

| மதிப்பீடு 2016 | விபரம் | 2016 | 2015 |
|---|---|---|---|
| ***ரூபா.000*** | | *ரூபா.000* | *ரூபா.000* |
| **10,500** | உள்நாடு | 10,488 | 10,945 |
| **19,900** | வெளிநாடு | 19,447 | 3,718 |
| 30,400 | **மொத்தம்** | **29,936** | **14,663** |

## குறிப்பு இல.06 வழங்கல்கள்

| மதிப்பீடு 2016 | விபரம் | 2016 | 2015 |
|---|---|---|---|
| ***ரூபா.000*** | | *ரூபா.000* | *ரூபா.000* |
| **14,500** | எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 16,989 | 9,080 |
| **10,800** | எரிபொருள் | 10,665 | 8,599 |
| **500** | உணவுகள் மற்றும் சீருடைகள் | 500 | 454 |
| 25,800 | **மொத்தம்** | **28,154** | **18,133** |

## குறிப்பு இல.07 பராமரிப்புச் செலவினம்

| மதிப்பீடு 2016 | விபரம் | 2016 | 2015 |
|---|---|---|---|
| ***ரூபா.000*** | | *ரூபா.000* | *ரூபா.000* |
| **6,500** | மோட்டார் வாகனங்கள் | 5,970 | 7,727 |
| **5,350** | பொறிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 5,114 | 4,714 |
| **1,000** | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 997 | 4,069 |
| 12,850 | **மொத்தம்** | **12,081** | **16,510** |

## குறிப்பு இல.08 சேவைகள்

| மதிப்பீடு 2016 | விபரம் | 2016 | 2015 |
|---|---|---|---|

| ரூபா.000 | | ரூபா.000 | ரூபா.000 |
|---|---|---|---|
| **23,350** | போக்குவரத்து | 18,707 | 9,491 |
| **17,000** | தபால் மற்றும் தொடர்பாடல் | 16,806 | 16,144 |
| **15,000** | மின்சாரம் மற்றும் நீர் | 13,410 | 12,201 |
| **650** | வாடகைகள் மற்றும் உள்ளூர் வரிகள் | 608 | 339 |
| **31,000** | ஏனையவை | 30,795 | 30,108 |
| 87,000 | **மொத்தம்** | **80,326** | 68,283 |

## குறிப்பு இல. 09 மாற்றல்கள்

| மதிப்பீடு 2016 | விபரம் | 2016 | 2015 |
|---|---|---|---|
| ரூபா.000 | | ரூபா.000 | ரூபா.000 |
| **650** | சந்தாக்கள் மற்றும் உதவு தொகைகள் | **649** | 270 |
| **10,850** | அரசாங்க உத்தியோகத்தர் கடன்களிற்கான வட்டி | **10,734** | 10,109 |
| 11,500 | **மொத்தம்** | 11,384 | **10,379** |

## குறிப்பு இல. 10 பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள்

| | காணி | கட்டிடம் | வாகனங்கள் | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் | தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | சிற்றளவு அச்சகம் | மின் தூக்கியும் மின் பிறப்பாக்கியும் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| கிரயம் | | | | | | | | |
| **2016 ஜனவரி 01 இல் மீதி** | 256,147 | 775,685 | 119,513 | 133,597 | 98,845 | 26,023 | 15,830 | 1,425,640 |
| **சேர்த்தல்கள்** | - | 5,518 | 406 | 204 | 13,691 | - | | 19,819 |
| **கைதவிர்ப்புகள்** | - | - | - | (15) | (58) | - | - | (73) |
| **2016 திசெம்பர் 31 இல் மீதி** | **256,147** | **781,203** | **119,919** | **133,786** | **112,478** | **26,023** | **15,830** | **1,445,386** |
| பெறுமானத் தேய்வு | | | | | | | | |
| **2016 ஜனவரி 01 இல் மீதி** | - | 55,375 | 53,531 | 125,497 | 67,412 | 5,205 | 2,022 | 309,042 |
| **கைதவிர்க்கப்பட்ட சொத்துக்களின் தேய்வு** | - | - | - | (15) | (58) | - | - | (73) |
| **ஆண்டிற்கான தேய்வு** | - | 15,624 | 14,990 | 1,198 | 22,496 | 1,301 | 441 | 56,050 |
| **2016 திசெம்பர் 31 இல் மீதி** | - | **70,999** | **68,521** | **126,680** | **89,850** | **6,506** | 2,463 | **365,019** |
| 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய தொகை | **256,147** | **710,204** | **51,398** | 7,106 | **22,628** | **19,517** | **13,367** | **1,080,367** |

## குறிப்பு இல. 11 கணக்காய்வு முறையினை அபிவிருத்தி செய்தல் கிரயம்

| விபரம் | 2016<br>ரூபா.000 | 2015<br>ரூபா.000 |
|---|---|---|
| **2016 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | 151,380 | 176,284 |
| **2016 ஆம் ஆண்டிற்கான காலக்கழிவு (மொத்தக் கிரயத்தில் 10 சதவீதப் படி)** | (24,904) | (24,904) |
| 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | **126,476** | **151,380** |

## குறிப்பு இல. 12 பதிவேட்டுப் பொருட்கள்

| விபரம் | 2016<br>ரூபா.000 | 2015<br>ரூபா.000 |
|---|---|---|
| **கட்டிட பராமரிப்புப் பொருட்கள்** | - | 273 |
| **ரோனர்** | 3,397 | - |
| **எழுதுகருவிகளும் அலுவலக தேவைகளும்** | 1,560 | 4,396 |
| **டயர்களும் டியூப்களும்** | 856 | 556 |
| **சுத்திகரிப்புப் பொருட்கள்** | 194 | - |
| மொத்தம் | **6,007** | **5,225** |

## குறிப்பு இல. 13 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்கள்

| விபரம் | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 |
| **திணைக்களத்தில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தத் தொகை** | 211,655 | 210,890 |
| **திணைக்களத்திலிருந்து இடமாற்றத்தில் சென்றஉத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மொத்தத் தொகை** | 330 | 3,284 |
| **ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியவை** | 1,339 | 3,069 |
| **பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோர்கத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியவை** | 662 | 456 |
| **பதவி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோர்கத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டியவை** | 333 | 539 |
| மொத்தம் | **214,319** | **218,238** |

## குறிப்பு இல. 14 பெறவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள்

| **விபரம்** | **2016** | **2015** |
|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 |
| **அபிவிருத்தி மன்றங்கள்** | 30 | 30 |
| **மாநகர சபைகள்** | 20,229 | 25,044 |
| **நகர சபைகள்** | 34,087 | 46,054 |
| **பிரதேச சபைகள்** | 17,454 | 23,105 |
| **அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள்** | 101,583 | 108,056 |
| **கமநல சேவை நிலையங்கள்** | 10,852 | 12,140 |
| **பொருளாதார நிலையங்கள்** | 64 | - |
| **மொத்தம்** | **184,299** | **214,429** |

## குறிப்பு இல.15 – செலுத்தவேண்டிய செலவினங்கள்

| | 2016 | 2015 |
|---|---|---|
| விபரம் | ரூபா.000 | ரூபா.000 |
| புகையிரத ஆணைச்சீட்டு – விடுமுறை | 301 | 351 |
| புகையிரத ஆணைச்சீட்ட – பயணச் செலவினம் | 2 | 3 |
| ஏனைய செலவினம் | 270 | 138 |
| தபால் கட்டணங்கள் | 23 | 15 |
| தொலைபேசிச் சிட்டைகள் | **330** | 500 |
| மின்சாரச் சிட்டைகள் | 2 | 1,026 |
| நீர்ச் சிட்டைகள் | 110 | 76 |
| வாகன பராமரிப்பு | 3 | 46 |
| எழுதுகருவிகளும் அலுவலகத் தேவைகளும் | - | 3 |
| பொறி மற்றும் இயந்திர பராமரிப்பு | - | 74 |
| பதவியணியினர் பயிற்சி | 51 | - |
| மொத்தம் | **1,092** | **2,232** |

## குறிப்பு இல. 16 மூலதன செலவினம் மற்றும் பொது வைப்புக் கணக்கிற்கான அரசாங்க மானியம்

| விபரம் | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 |
| அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்களிற்காக | 214,319 | 218,238 |
| வைப்புக் கணக்கிற்காக | (19,473) | (24,990) |
| நிலையான சொத்துக்களிற்காக | 434,602 | 445,870 |
| மொத்தம் | **629,448** | **639,118** |

## குறிப்பு இல. 17 அரசாங்கத் துறை இயலளவு கட்டியெழுப்புதல் செயற்திட்டம்

| விபரம் | 2016 | 2015 |
|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 |
| நிலையான சொத்துக்களிற்காக | 645,765 | 677,457 |
| கணக்காய்வு முறைக்காக | 126,476 | 151,380 |
| மொத்தம் | **772,241** | **836,086** |

# 2016 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கைகள்

## இலங்கை மத்திய வங்கியின் அரசாங்க பொதுப்படுகடன் திணைக்களத்தினால் 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகளை வழங்குதல் மீதான விசேட கணக்காய்வு அறிக்கை

மேற்படி அறிக்கை 2016 யூன் 29 ஆந் திகதி கௌரவ சபாநாயகர் அவர்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த பிரதான அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கி திறைசேரி பிணையாக ஓராண்டுக்குக் கூடிய முதிச்சிக்காலம் கொண்டவையாக திறைசேரி முறிகளை வெளியிடப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியினால் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரை திறைசேரி முறிகளை விற்பனை செய்வதற்காக 2 முறைகள் பின்பற்றப்பட்டிருந்தன. அவையாவன, ஏலமிடல் முறை (Auction) மற்றும் நேரடி வழங்கல் முறை என்பனவாகும். 2015 சனவரி மாதம் முதல் நேரடி முறையினை தற்காலிகமாக நிறுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் முழுமையாக செயற்படுத்தப்பட்டிருந்த 2015 ஏப்ரல் மாதம் வரையிலுமான 15 மாத காலப்பகுதியில், நேரடி முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த மாதங்களும், ஏலமிடல் முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்த மாதங்களும், இந்த இரண்டு முறைகளும் பயன்படுத்தப்பட்டிருந்த மாதங்களும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த 15 மாதங்களின் போது வழங்கப்பட்ட ஒட்டுமொத்த முறிகளில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டவை நேரடி முறையினைப் பயன்படுத்தி வழங்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி இடம்பெற்ற திறைசேரி முறிகளின் வழங்குதல்.

- 2015 மார்ச் மாதத்திற்கான அரசாங்கத்தின் ஒட்டுமொத்த நிதித் தேவை ரூபா 261.683 பில்லியன் ஆகக் காணப்பட்டது. இத் தொகை திறைசோ உண்டியல்களை வழங்குவதன் மூலமும் திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலமும் நிதியிடப்பட வேண்டியிருந்தது. நிதித் தேவையை பூர்த்தி செய்வதற்காக ரூபா 89.683 பில்லியன் தொகையினை திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலமும், ரூபா 172 பில்லியன் தொகையினை திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலமும் பெற்றுக்கொள்வதற்கிருந்தது. நிதித் தேவையில் 2015 மார்ச் 02 ஆந் திகதிக்கு மாத்திரமான அரசாங்கத்தின் நிதித்தேவை ரூபா 13.55 பில்லியன் நிதியிடப்பட வேண்டியிருந்தது.

- மேற்குறிப்பிட்ட ரூபா 172 பில்லியனில் ரூபா 1 பில்லியனை திறைசேரி முறிகளை முதலாந்தர ஏலத்தில் விற்பனை செய்வதன் மூலமும், எஞ்சிய தொகையினை நேரடி முறையின் மூலமும் பெற்றுக்கொள்வதற்கும், 2015 மார்ச் 02 ஆந் திகதிக்கு மாத்திரமான நிதித்தேவையான ரூபா 13.55 பில்லியன் தொகையில் ரூபா 1 பில்லியனை முதலாந்தர ஏலத்தில் விற்பனை செய்வதன் மூலமும், எஞ்சிய தொகையினை நேரடி முறையின் மூலமும் பெற்றுக்கொள்வதற்கும்,

உள்நாட்டு பொதுப்படுகடன் முகாமைத்துவக் குழுவினால் (DDMC) 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி 1300 மணிக்கு நடாத்தப்பட்டிருந்த கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இத் தீர்மானத்திற்காக மத்திய வங்கி ஆளுநரின் அங்கீகாரம் 2015 மார்ச் 02 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. இதன் போது அவதானிக்கப்பட்ட மிக முக்கியமான விடயம் யாதெனில் 2015 மார்ச் 27 ஆந் திகதி 0830 மணி முதல் 1100 மணி வரை ஏலமிடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் வரையிலும், அந்த ஏலமிடல் மூலம் 2015 மார்ச் 02 ஆந் திகதிக்குத் தேவையான ரூபா 13.55 பில்லியன் நிதித் தேவை மற்றும் 2015 மார்ச் மாதத்திற்கான நிதித்தேவையினை உள்ளடக்கிய உள்நாட்டு பொதுப்படுகடன் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரையும் மத்திய வங்கி ஆளுநரின் அங்கீகாரமும், ஏலமிடல் முடிவடைந்து கேள்விச் சபையின் தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமையாகும்.

- அதற்கமைய 2015 மார்ச் 02 ஆந் திகதிக்கான நிதித் தேவையை பூர்த்திசெய்து கொள்வதற்கு 2015 பெப்ரவரி 25 மற்றும் 26 ஆந் திகதிகளில் முறையே இணையதளத்திலும் செய்திப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களிற்கமைய, 16 முதலாந்தர வணிகர்களிற்கு 30 ஆண்டுகளில் முதிர்வடையக்கூடிய ரூபா 1 பில்லியன் திறைசேரி முறிகளை 12.5 சதவீத வட்டி வீத்தில் வழங்குவதற்கு கூறுவலைகள் கோரப்பட்டிருந்தன.

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் 16 முதலாந்தர வணிகர்களால் ரூபா 20.708 பில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதியுடைய கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை கிடைத்திருந்த கூறுவிலைகளின் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. அத்துடன், அத் தொகையில் ஏறத்தாழ 75 சதவீதம் அளவுக்கு அல்லது ரூபா 15.531 பில்லியன் ஓர் தனிப்பட்ட முதலாந்தர வணிகராலும் அவருக்காக மற்றுமொரு முதலாந்தர வணிகரான இலங்கை வங்கியினாலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- பொதுப் படுகடன் திணைக்களத்தினால் திறைசேரி முறிகள் கேள்விச் சபைக்குச் சமர்ப்பிப்பதற்காக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் ரூபா 2.608 பில்லியன் தொகையை ஏலமிடல் மூலம் பெறுவது சிறந்ததென பரிந்துரைக்கப்பட்டிருந்தது. பொதுப் படுகடன் திணைக்களத்தின் அத்தியட்சகரால் மேற்படி அறிக்கையின் அடிப்படையில், "அரசாங்கத்தின் மேலதிக நிதித்தேவை கருத்திலெடுக்கப்பட்டதன் பின்னர், ரூபா 10 பில்லியன் வரை நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கு மத்திய வங்கியின் ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டிருந்தது". என்பதாக தனது கையெழுத்தினால் குறிப்பு எழுதப்பட்டிருந்தது. அதற்கமைய, திருத்தப்பட்ட பரிந்துரை திறைசேறி முறிகள் கேள்விச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

- கோரப்பட்ட அளவிலும் பார்க்க பத்து மடங்குக்கு மேல் அதிகமாக அல்லது ரூபா 10.058 பில்லியன் வரை கூறுவிலைகளை ஏற்றுக்கொள்வதற்கு 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி ஏலமிடப்பட்ட பின்னரும் 1230 மணி முதல் 1310 மணி வரை இடம்பெற்ற

2/2015 ஆம் இலக்க திறைசேறி முறிகள் கேள்விச் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இங்கு அவதானிக்கப்பட்ட மிக முக்கியமான விடயம் யாதெனில் ஏலம் இடம்பெற்ற பின்னர் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமையாகும். இது உள்நாட்டு பொதுப்படுகடன் முகாமைத்துவக் குழுவினால் ரூபா 12.550 பில்லியன் தொகையினை நேரடி முறையில் பூர்த்திசெய்வதற்கு எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்திலிருந்து முற்றுமுழுதாக விலகியிருந்தது. கேள்விச் சபையின் தீர்மானம் மத்திய வங்கியின் ஆளுநரால் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் எடுக்கப்பட்டிருந்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறுவிலைகளின் நிறையளிக்கப்பட்ட திரும்பல் வீதம் 11.7270 ஆன போதிலும், ஏலமிடலுக்கு இரண்டு தினங்களிற்கு முன்னர் அல்லது 2015 பெப்ரவரி 25 ஆந் திகதிக்கு முன்னர் முடிவடையும் வாரத்தில் இரண்டாந்தரச் சந்தையின் சராசரி திரும்பல் வீதம் 10.03 மாத்திரமேயாகும்.

- இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் நேரடி முறையினை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2015 மார்ச் 06 ஆந் திகதிய MB/ER/5/3/2015 ஆம் இலக்க நாணயச் சபை விஞ்ஞாபனத்தின் படி இலங்கை மத்திய வங்கியினால் திறிசேரி முறிகளை வழங்குகையில் பயன்படுத்துகின்ற நேரடி முறையினை தற்காலிகமாக இடைநிறுத்துதல் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநரினால் நாணயச் சபையினை அறிவுறுத்துதல் மாத்திரம் செய்யப்பட்டிருந்தது.

- வீதாசாரங்களை நிலையானதாக் குவதற்கு ஊழியர் சேமலாப நிதியம் (EPF), தேசிய சேமிப்பு வங்கி நிதிகள் முகாமைத்துவக் கம்பனி (NSB) மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (SLIC) ஆகியவற்றுக்கு முறிகளை வழங்குவதற்கு விசாரித்தறியுமாறான கருத்தினை வழங்கும் குறிப்பொன்றையும் 20, 30 மற்றும் 50 ஆண்டுகள் என்ற அடிப்படையில் ஒரு வகையிலான ரூபா 10 பில்லியன் வீதமான ரூபா 40 பில்லியன் முறிகளை வழங்கி நிதியினை சேகரித்துக்கொள்ளும் படியான குறிப்பொன்றையும் எழுதி உள்நாட்டு பொதுப்படுகடன் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரால் 2015 மார்ச் 02 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்போது நேரடி முறையினைக் கைவிடுவது தொடர்பில் எந்தவொரு விடயமும் அங்கீகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

- முறிகளின் ஏலவிற்பனையை ரூபா 1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தியிருப்பின் அந்த ஏலத்தின் போது பெறப்பட்டிருந்த கூறு விலைகளை குறைவாக நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதத்திலிருந்து உயர்வாக நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதம் வரை வகைப்படுத்திய பின்னர் முதலாந்தர வணிகர்களின் நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதம் 10.4652 இற்கு ரூபா 01 பில்லியன் தொகையினை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் நிறையளிக்கப்பட்ட வருவாய் வீதம் 11.7270 வரை அதிகரித்திருக்க மாட்டாது.

- முதலாந்தர ஏலத்தினை ரூபா 1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தியிருப்பின் அத்திகதியில் கிடைத்திருந்த ரூபா 20.708 பில்லியன் மொத்தமான எல்லாக் கூறுவிலைகளினதும் சமர்ப்பித்தலிருந்து 75 சதவீதமான அளவுக்காக கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள முதலாந்தர வணிகர்களிற்கு முறிகளை கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் காணப்பட்டிருக்கவில்லை. அன்றைய தினம் ஏலத்தின் மூலம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1 பில்லியன் தொகையினை ரூபா 10.058 பில்லியன் வரை அதிகரிப்பதற்கு தீமானிக்கப்பட்டிருந்தமை காரணமாக மேற்குறிப்பிட்ட முதலாந்தர வணிகர்களிற்கு அன்றைய தினம் வழங்கப்பட்டிருந்த மொத்த முறிகளின் பெறுமதியில் 50 சதவீதம் அல்லது ரூபா 5 பில்லியன் தொகையினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன்போது அந்த ரூபா 5 பில்லியனில் ரூபா 2 பில்லியனை நேரடியாகவும் ரூபா 3 பில்லியனை முதலாந்தர வணிகரான இலங்கை வங்கியின் ஊடாக மறைமுகமாகப் பெற்றுக்கொள்வதற்கும் அந்த முதலாந்தர வணிகர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

- மேற்படி முறிகளை வழங்குகையில் இடம்பெற்றிருந்த மற்றொரு முக்கியமான விடயம் என்னவெனில் இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற மற்றும் முதலாந்தர ஏலத்தில் முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு முடியுமான நிறுவனமொன்றான ஊழியர் சேமலாப நிதியம் உயர்வான வருவாய் வீதத்துடன் முதலாந்தர சந்தையிலிருந்து ஒப்பீட்டளவில் குறைந்த அளவில் முறிகளைப் பெற்றுக்கொண்டு குறைந்த வருவாய் வீதத்துடன் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்திருந்தமை காரணமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த நிதிசார் அனுகூலத்தை இழந்திருந்தமையாகும்.

- 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி முறிகளை வழங்குதல் எதிர்பார்க்கப்பட்டவாறு ரூபா 01 பில்லியனுக்கு வரையறுக்கப்பட்டிருப்பின் அப் பெறுமதியினை உள்ளடக்கும் விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கூறுவிலைகளிற்கு ஏற்ப பிணைமுறியொன்றின் கூறுவிலைப் பெறுமதியான ரூபா 104.5073 வரை மாத்திரம் முறிகள் வழங்கப்பட்டிருப்பின் ரூபா 1,403 மில்லியன் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு முடிந்திருக்கும். அவ்வாறு அப் பெறுமதிக்கு முறிகளை வழங்குதல் வரையறுக்கப்பட்டிருக்காமை காரணமாக கீழேயுள்ள அட்டவணையில் காண்பிக்கப்பட்டவாறு அரசாங்கத்திற்கு ரூபா 889,358,050 மதிப்பிடப்பட்ட பாதகம் ஏற்பட்டிருந்தது.

- இந்த ஏலவிற்பனை தொடர்பில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 01 பில்லியன் தொகையான முறியின் பெறுமதிக்கு எதிராக ரூபா 10.058 பில்லியன் கூட்டுத்தொகையான கேள்விமனுவை ஏற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்காக மத்திய வங்கி ஆளுநரின் நடவடிக்கை (முன்வைக்கப்பட்ட மொத்த கேள்வி மனுக்களின் அளவான ரூபா 20 பில்லியன் தொகையையும் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை எனக்

கேட்டிருந்தமை,ரூபா 10 பில்லியனிற்கு செல்லாமை ஏன் என வினவியிருந்தமை) பெருமளவில் தாக்கமளித்துள்ளமையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் உப குழுவால் இவ் ஏலவிற்பனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட வாய்மொழி சான்றுக் குறிப்புகளில் உள்ள விடயங்கள் காரணமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2016 மார்ச் 29 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறி விநியோகம்

- 2016 மார்ச் 10 ஆம் திகதி மற்றும் மார்ச் 24 ஆம் திகதிகளில் முறிகளின் விற்பனைக்காக நடாத்தப்பட்டிருந்த ஏலவிற்பகைள் இரண்டும் எதிர்பார்க்கப்பட்ட விகிதத்தைப் பார்க்கிலும் கூடுதலான விகிதத்தைக் காண்பித்து கேள்வி மனுக்களை முன்வைத்ததன் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இச் சந்தர்ப்பங்களின் போது நேர் முறைக்கு நிதி பெற்றுக்கொள்ளப்படுவது தொடர்பாக கவனம் எடுக்கப்பட்டிருந்தமை குறித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- 2016 மார்ச் 29 ஆம் திகதிய ரூபா 10 பில்லியன் படி பல்வேறு முதிர்வுக் காலங்களைக் கொண்டு முதிர்வடையும் 04 முறிகளுக்கு அதாவது ரூபா 40 பில்லியன் தொகையான முறிகளின் விநியோகத்திற்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன.
- இங்கு அவதானிக்கப்படும் ஒரு முக்கிய விடயம் ரூபா 40 பில்லியன் வரையறைக்கு கோரப்பட்டதுடன் அவ் விலைகளில் மேலும் மேலதிகமான ரூபா 37.732 பில்லியன் (முகப்பெறுமதி) அதாவது ரூபா 77.732 பில்லியன் (முகப்பெறுமதி) வரை முறிகள் விநியோகிக்கப்பட்டமையாகும். இவ்வாறு விலைமனுக்கள் கோரப்பட்ட பெறுமதிக்கு மேலதிகமாக விநியோகிக்கப்பட்டிருந்த முறிகளில் 60 சதவீதமானவற்றை மேற்குறிப்பிட்ட முதலாந்தர வணிகர் உரித்தாக்கிக்கொண்டிருந்தார். அந் நிறுவனத்தால் பல்வேறு வட்டி விகிதங்களில் மேற்குறித்த முறிகளில் 4 வகையானவற்றை உரித்தாக்கிய விகிதத்தை விளக்குகையில் பின்வரும் அட்டவணையின் படி குறைந்த வருவாய் விகிதத்தின் கீழ் முதல் முறியிலிருந்து 0.5 சதவீதத்தை மாத்திரமே உரித்தாக்கிக்கொண்ட மேற்குறிப்பிட்ட முதலாந்தர வணிகர், உயர் வருவாய் விகிதத்தின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள ஏனைய மூன்று முறிகளில் இருந்து 35 சதவீதத்திலிருந்து 44 சதவீதம் வரையான அளவைப் பெற்றுக்கொள்ளும் திறன்கொண்டிருந்தமையாகும். அதாவது கழிவின் அளவு அதிகரிக்கையில் கூடுதலான முறிகளின் அளவைப் பெற்றுக்கொண்டிருந்தமையாகும்.
- இம் முறி விநியோகிக்கப்பட்ட தினத்திற்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஏல விற்பனைகள் இரண்டும் நிராகரிக்கப்பட்ட அடிப்படையான வருவாய் விகித அதிகரிப்பு இவ் ஏலவிற்பனையின் போதும் இவ்வாறே அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் உயர் வருவாய் விகிதங்களுக்கு அதாவது 14.0742 சதவீதம் வரை வருவாய் விகிதத்திற்கு இம் முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன.
- மேற்குறித்தவாறு 4 முறிகளின் மூலம் ரூபா 77.73 பில்லியன் தொகையான முகப் பெறுமதி கிடைக்கக் கூடியவாறு முறிகளை விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் கழிவு

விகிதத்திற்கு முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 59.325 பில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது.

- இங்கு கண்டறியப்பட்ட மிக முக்கிய விடயம் முதன்மைச் சந்தையில் முறிகள் கொள்வனவு செய்யக்கூடிய நிறுவகமான ஊழியர் சேமலாப நிதியத்தால் 2016 மார்ச் 29 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட முறிகளில் இருந்து வருவாய் விகிதம் 12.20 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 9.736 பில்லியன் பெறுமதியான முறிகள் இரண்டாம் சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையாகும். ஊழியர் சேமலாப நிதியம் இம் முறிக்காக 2016 மார்ச் 29 ஆம் திகதியில் உள்ளவாறு முதன்மைச் சந்தைக்கு விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த போதிலும், மிகக் குறைவான முறிகளின் அளவிற்கே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவை அனைத்தும் வெற்றியடைந்திருந்தன. இவ்வாறு முறிகளை நேரடியாக முதலாந்தரச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்துகொள்வதற்குப் பதிலாக இரண்டாந்தரச் சந்தையில் கொள்வனவு செய்திருந்தமை பிரச்சனைக்குரியதாகும். மேலும் மத்திய வங்கியின் நிதிச் சந்தையின் பொறுப்பில் நிலவும் நிறுவனமான ஊழியர் சேமலாப நிதியம் இவ்வாறு செயற்படுவது தொடர்பாக மத்திய வங்கியால் கவனம் செலுத்தப்பட்டிராமையும் பிரச்சனைக்குரிய நிலையாகும்.
- இம் முறிகளை விநியோகிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெயரளவுப் பெறுமதியான ரூபா 40 பில்லியன் தொகைக்காக ரூபா 77.732 பில்லியன் வரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு செய்யப்படாது முறி விநியோகப் பெயரளவுப் பெறுமதியான ரூபா 40 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டிருப்பின் பின்வரும் அட்டவணையில் கணிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 784,898,755 தொகையான மதிப்பீட்டு நட்டத்தைத் தவிர்த்திருக்க முடியும்
- 2015 பெப்ரவரி 27 ஆம் திகதிக்குப் பின்னர் அதுவரை இடம்பெற்ற முறைகள் மாற்றப்பட்ட பின்னர் முதலாந்தர வணிகர்களால் இரண்டாந்தரச் சந்தையில் நிலவுகின்ற விகிதாசாரங்களுடன் ஒப்பிடுகையில் கூடுதலான விகிதாசாரத்தில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போக்கு உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட போக்கானது பல்வேறுபட்ட காரணிகளின் தாக்கத்தால் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட முறிகளின் விநியோகத்திற்கு உரித்தான கொள்கை ரீதியான தீர்மானமும் இதற்குத் துணைபுரிந்தமையை எதிர்வுகூறுவது சிக்கலானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

### பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

- 2015 பெப்ரவரி 27 ஆம் திகதியும் 2016 மார்ச் 29 ஆம் திகதியும் நடாத்தப்பட்ட திறைசேரி முறிகளின் இரண்டு ஏலவிற்பனைகளின் போது தவிர்க்கப்படக் கூடியதாக இருந்த ரூபா 1,674,256,805 கூட்டுத்தொகையான மதிப்பீட்டு நட்டத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை தொடர்பாக அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

- மத்திய வங்கி ஆளுநரால் தமது பணிகளை மேற்கொள்கையில் மத்திய வங்கி ஆளுநரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற உயர்தொழில் முறைக் கவனிப்புடன் (Professional Due Care) அவர் செயற்பட்டதாக நிரூபணமாகவில்லை.

## 2009 ஆம் ஆண்டு முதல் 2016 யூன் வரை நுரைச்சோலை லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்திற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி கொள்வனவு

2009 ஆம் ஆண்டு முதல் 2016 யூன் வரை நுரைச்சோலை லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்திற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி கொள்வனவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நிலக்கரி கொள்வனவு தொடர்பில் விசேட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீளாய்வாண்டின் போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

2016 யூலை 20 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற மின்வலு துறை கண்காணிப்புக் குழுவின் கலந்துரையாடலில் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2016 யூன் வரையான காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி கம்பனியினால் (Lanka Coal Company (pvt) Limited) இலங்கை மின்சார சபையின் (Ceylon Electricity Board) நுரைச்சோலை லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான நிலக்கரி கொள்வனவுடன் சம்பந்தப்பட்ட அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதி கோரப்பட்டதற்கு இணங்க இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. அதன்பிரகாரம் ஆறு நீண்டகால கொள்வனவுகள் (Term Contract), ஐந்து உடனடிக் கொள்வனவுகள் (Spot Contract) மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திடமிருந்து (Ceylon Shipping Corporation Ltd.) இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட / பெற்றுக்கொள்ளப்பட்ட நிலக்கரியுடன் தொடர்புடைய விடயங்கள் பரிசோதிக்கப்பட்டது. இக் கொடுக்கல் வாங்கல்களின் இணக்கப்பாட்டுப் பரிசோதனையின் அடிப்படை ஆவணமாக அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை மற்றும் அதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

6 நீண்டகால கொள்வனவுககளிற்கும் 5 உடனடிக் கொள்வனவுகளுக்கும் அமைச்சரவை தீர்மானங்கள், கேள்வி ஆவணங்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்வனவுக் குழு அறிக்கைகள் கேள்வி பிணை மற்றும் செலாற்றல் பிணைமுறி, உடன்படிக்கைகள் வழக்குத் தீர்ப்புக்கள், கொள்வனவு மேன்முறையீட்டு சபை அறிக்கைகள், விசேட குழு அறிக்கைகள், ஏனைய வெவ்வேறு ஆவணங்கள் பரிசீலனைகள் உட்படுத்தப்பட்டிருந்தன.

மேற்படி செயற்பாடுகளுக்குரிய பல்வேறு வகையில் கிடைத்த தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கணக்காய்வு குழுவிற்குரிய தரப்பினர்களுடன் பல தடவைகள் கலநந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் நுரைச்சோலை லக்விஜய மின்வலு உற்பத்தி நிலையத்தில் இடப்பரிசோதனையொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

2006 ஏப்ரல் 05 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீரத்தின் பிரகாரம் நிலக்கரி அனல் மின்சார நிலையத்திற்காக தேவையான

நிலக்கரி கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக இலங்கை நிலக்கரி கம்பனி 2008 சனவரி 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

நுரைச்சோலை அனல் மின்வலு நிலையத்தின் முதலாம் கட்ட மின்வலு உற்பத்தி 2011 பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களின் மின்வலு உற்பத்தி முறையே 2013 ஏப்ரல் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குத் தேவையான வருடாந்த மொத்த நிலக்கரி தேவை 2,250,000 மெ.தொ ஆக காணப்பட்டது. பொதுவாக ஏப்ரல் முதல் செப்தெம்பர் வரை நுரைச்சோலை பிரதேசத்தில் கச்சான் காலம் நிலவுகின்றமை காரணமாக நிலக்கரியினை தரையிறக்க முடியாத நிலை காணப்படுவதால். வருடாந்த நிலக்கரி தேவையினை ஒக்தோபர் முதல் தொடர்ந்துவரும் ஆண்டின் மார்ச் மாதம் வரையான காலத்தில் சேகரித்து நிலக்கரி களஞ்சியப்படுத்தப்படுகின்றன.

இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களின் படி லக்விஜய மின்வலு நிலையத்தின் ஆரம்பம் முதல் 2016 ஒக்தோபர் 31 வரை உற்பத்தி செய்யப்பட்டிருந்த மொத்த மின்சார அலகுகளின் எண்ணிக்கை 15,744 கிகாவொட் மணித்தியாலங்களாகும். தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற அனல் மின் கிலோ வொட் ஒன்றிற்காக ரூபா 21.44 செலவு ஏற்படுவதுடன், லக்விஜய மின்வலு நிலையத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்ற கிலோ வொட் மணித்தியாலமொன்றிற்கு செலவாகின்ற நேர்க் கிரயம் ரூபா 5.23 ஆகும். மின்வலு நிலையத்தினால் ஈட்டப்பட்டுள்ள மொத்த வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,823 மில்லியனாக காணப்பட்டதுடன் மின்வலு நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ஏற்பட்டிருந்த செலவினம் ஐக்கிய அமெரிக்க டொலர் 1,346 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய தற்போது ஈட்டப்பட்டிருந்த மொத்த செலவினத்தினை விஞ்சிய வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர் 477 மில்லியனாக இருந்தது.

2008 மார்ச் 27 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நீண்டகால வழங்கல் கொள்வனவின் கீழ், லங்கா நிலக்கரி கம்பனியினால் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2006 யூன் வரையான காலத்தில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 06 நீண்டகால வழங்கல் கொள்வனவுகளில் 02 Noble Resources Pte. கம்பனிக்கும் Swiss Singapore Overseas (Pvt) கம்பனிக்கும் ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 03 வெவ்வேறு காரணங்கள் காரணமாக இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த 4 ஆவது கொள்வனவானது கூறுவிலை கோரப்படாது இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

அவசர தேவைப்பாட்டிற்காக 06 உடனடி வழங்கல் கொள்வனவு நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் மூன்றாவது கொள்வனவு இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 05 கொள்வனவுகள் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் Liberty Commodities கம்பனி மற்றும் Adani Global Pvt. கம்பனி கையளிக்கப்பட்டிருந்தன.

எவ்வித கொள்வனவு நடைமுறைகளையும் பின்பற்றப்படாது மூன்று சந்தர்ப்பங்களில் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் வழங்குனராக கருதப்பட்டு நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் லங்கா நிலக்கரி கம்பனியின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ஒரு சந்தர்ப்பத்தில் கொள்வனவு நடைமுறையினை பின்பற்றாது நிலக்கரி கொள்வனவு

செய்யப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை நிலக்கரி கம்பனி மீளாய்வாண்டு காலப்பகுதியில் 483.53 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியான 6,775,199 மெற்றிக் தொன் நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இங்கு ஒரு வழங்குனரிடமிருந்து மீளாய்வு காலப்பகுதியில் 52 மாதங்களில் 338.36 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியான 4,298,692 மெற்றிக் தொன் நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வு காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலக்கரியின் கிரயம் 145.14 மில்லியன் ஐ.அ. டொலராக இருந்தது.

கேள்வி ஆவணங்களில் குறைபாடுகள், கேள்வியை ஏற்கும் காலம் எப்போதும் நீடிக்கப்படல், அத்திருத்தங்களை கேள்விதாரர்களுக்கு தொடர்புபடுத்துவதில் பலவீனங்கள், அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்காமை, கொள்வனவு வழிகாட்டல் கோவைகள் பின்பற்றப்படாமை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் அமைச்சினால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்வனவுக் குழுவின் செயற்பாடுகளின் நீண்ட தாமதங்கள் தொடர்பாக நிறுவனத்திற்கிடையே முறையான தொடர்புகள் காணப்படாமை, தேவையான சந்தர்ப்பங்களில் சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளாமை, கேள்வி மீளமைக்கப்பட்டதன் பின்னர் நிபந்தனைகளை மாற்றுதல், ஏற்படும் சுற்றாடல் சேதங்கள் தொடர்பாக கவனம் குறைவடைதல், இடம்பெறும் சுற்றடால் சேதங்கள் தொடர்பாக கவனம் குறைதல், ரூபா 1,130 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் தொடர்பாக ஆக்கபூர்வமானசெயற்பாடுகள் எடுக்கப்படாமை போன்ற பிரதான குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

இந்த பலவீனங்களைத் தவிர்ப்பதற்கும் குறைபாடுகளை சரிசெய்வதற்கும் செய்யப்பட்ட பரிந்துரைகள் விபரமாக அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக கொள்வனவுச் செயற்பாடுகளின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் பொதுவான நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தவறியதன் காரணமாக ரூபா 4,145.43 மில்லியன் மதிப்பிடப்பட்ட நட்டம் / வருமானம் இழக்கப்பட்டிருந்தமையால் மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு வரையறுக்கப்பட்ட லங்கா நிலக்கரி கம்பனி, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்களும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் அமைச்சரவை மூலம் நியமிக்கப்படும் நிரந்தர கொள்வனவுக் குழுவினால் தனது நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது உரிய தொழில் துறை பரிசோதனையொன்றுடன் (Profcssional due care) நடவடிக்கை எடுக்கப்பட்டமை உறுதிப்படுத்தவில்லையென கணக்காய்வின் போது முடிவெடுக்கப்பட்டது. பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இணங்காணப்பட வேண்டியதுடன் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான நட்டங்கள்/ மேலதிக கிரயம்/ வருமானம் இழக்கப்பட கூடாத வகையில் கொள்வனவுச் செயற்பாட்டினை முறைப்படுத்தப்பட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிலக்கரி கம்பனியை தொடர்ந்தும் பேணிச்செல்ல வேண்டுமொ என்பது சிக்கலான விடயமொன்றாக இருப்பதுடன் சட்ட விரோதமான மோசடியொன்று இடம்பெற்றிருந்தால் அதற்குரிய விசேட நிறுவனத்தின் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

# வரையறுக்கப்பட்ட லங்கா சதொசவினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட அரிசி இறக்குமதி செயற்பாடு மீதான விசேட கணக்காய்வு அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கை மீளாய்வாண்டின் போது பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 15,996 மில்லியன் கிரயமான 257,559 மெற்றிக் தொன் அரிசி நாணயக் கடிதங்களைத் திறத்தல் ஊடாகவும் பிற்கொடுப்பனவு கொடுப்பனவு முறைமையின் கீழும் இந்தியா மற்றும் பங்களாதேசம் என்பவற்றிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, ரூபா 1,199 மில்லியன் பெறுமதியான இறக்குமதி செய்யப்பட்ட அரிசி 18,134 மெற்றிக் தொன்களும் உள்ளூர் சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விபரங்கள் அட்டவணை 04 இல் காணப்படுகின்றன.

| பிற்கொடுப்பனவு முறைமை அல்லது நாணயக் கடித இல. | நாணயக் கடிதம் திறக்கப்பட்ட திகதி | நாணயக் கடிதப் பெறுமதி (ஐ.அ.டொலர்) | அரிசி வகை | விநியோகஸ்தர் | பெறப்பட்ட தொகை (மெற்றிக் தொன்) | சீஐஎவ் (CIF) பெறுமதி (ரூபா) | கிலோகிராம் ஒன்றிற்கான சீஐஎவ் பெறுமதி (ரூபா) | நிதிகளை வழங்குதல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. **உள்நாட்டு கொள்வனவு** | | | | | | | | |
| **உள்நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை கொள்வனவு செய்தல்** | | | | 14 வழங்குனர் | 18,134 | 1,199,495,609 | | லங்கா சதொச |
| 2. **லங்கா சதொசவால் நேரடியாக அரிசி இறக்குமதி செய்யப்படல்** | | | | | | | | |
| **பிற்கொடுப்பனவு முறை (DP)** | | | நாட்டரிசியும் சம்பா அரிசியும் | 07 வழங்குனர் | 29,262 | 1,851,055,933 | | லங்கா சதொச |
| **42002140026193** | 2014.09.22 | 455,000 | நாட்டரிசி | Omvishkar Exports | 1,040 | 62,634,808 | 60.23 | மக்கள் வங்கி |
| 3. **அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் வெளிநாட்டு சந்தைகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தல்** | | | | | | | | |
| **42002140024186** | 2014.09.01 | 21,500,000 | வெள்ளைப் பச்சையரிசி | United Foods (pvt) Ltd | 50,002 | 2,843,606,997 | 56.87 | மக்கள் வங்கி |
| **BTD-M 064568** | 2014.12.10 | 11,250,000 | நாட்டரிசி | බංග්ලාදේශ රජය | 25,000 | 1,504,335,376 | 60.17 | இலங்கை வங்கி |
| 4. **பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டு சந்தைகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தல்** | | | | | | | | |
| **BTD-M 63519** | 2014.10.29 | 1,994,018 | நாட்டரிசி | ACP Industries Ltd | 4,887 | 268,319,420 | 54.90 | இலங்கை வங்கி |
| **BTD-M 63519 (காலநீடிப்பு(** | 2015.02.17 | 18,056,000 | பொன்னி சம்பா அரிசி | ACP Industries Ltd | 37,704 | 2,500,017,885 | 66.31 | இலங்கை வங்கி |
| **BTD-M 63537** | 2014.10.30 | 2,403,837 | பொன்னி சம்பா அரிசி | ACP Industries Ltd | 4,926 | 323,514,220 | 65.68 | இலங்கை வங்கி |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **BTD-M 63537 (காலநீடிப்பு(** | 2015.02.13 | 21,996,163 | பொன்னி சம்பா அரிசி | ACP Industries Ltd | 43,384 | 2,861,893,578 | 65.97 | இலங்கை வங்கி |
| **42002140033283** | 2014.12.03 | 12,150,000 | வெள்ளைப் பச்சையரிசி | United Foods (pvt)Ltd | 30,000 | 1,630,038,846 | 54.33 | மக்கள் வங்கி |
| **42002140033274** | 2014.12.03 | 15,300,000 | பொன்னி சம்பா அரிசி | Trident Chemphar Ltd | 31,354 | 2,151,117,709 | 68.61 | மக்கள் வங்கி |
| மொத்தம் | | | | | **275,693** | **17,196,030,381** | | |

அட்டவணை: 04 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அரிசியின் இறக்குமதி
மூலம்: வரையறுக்கப்பட்ட லங்கா சதொச

அட்டவணையில் காட்டப்பட்ட ஒவ்வொரு கொள்வனவு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட முறையான கொள்வனவு நடைமுறையை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளாத போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையிலுள்ள வழிகாட்டல்களை பின்பற்றிருக்க வேண்டும். எவ்வாறாயினும், அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையிலுள்ள வழிகாட்டல்கள் மேற்குறிப்பிடப்பட்ட அரிசி கொள்வனவு செயன்முறையில் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.
- அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.1(அ) வழிகாட்டலின் பிரகாரம், ரூபா 500,000 ஐ விஞ்சிய கொள்வனவுகளிற்காக முறையான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட அரிசிக் கொள்வனவில் விநியோகஸ்தர்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.
- 2014 ஆம் ஆண்டில் அரிசி இறக்குமதிச் செயன்முறை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமலும் கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகி தெரிவுசெய்யப்பட்ட உள்நாட்டு விநியோகஸ்தர்களிடமிருந்து வெவ்வேறு விலைகளில் ரூபா 1,199 மில்லியன் பெறுமதியான 18,134 மெற்றிக் தொன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை லங்கா சதொச கொள்வனவு செய்திருந்தது.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் சந்தையில் அரிசி விலையை நிலையாக பேணுவதற்காக உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சிய முறைமையை பயன்படுத்தி பாதுகாப்பு இருப்பாக அரிசியை பேணுவதற்கு 5,000 மெற்றிக் தொன்கள் வீதம் 50,000 மெற்றிக் தொன்கள் அரிசி இறக்குமதிக்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் 50,000 மெற்றிக் தொன் வெள்ளை அரிசி கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகி வரிசை அமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்ட விநியோகஸ்தரிடமிருந்து ஒரு தடவையில் கொள்வனவு செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. மேலும், ஒரு தடவையில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இருப்புக் காரணமாக உணவு ஆணையாளர் திணைக்களத்தின் களஞ்சியங்களிற்கு மேலதிகமாக உயர் கிரயத்தை மேற்கொண்டு தனியார் துறையின் களஞ்சியத்தை பயன்படுத்துவதற்கான அவசியத்தை இது ஏற்படுத்தியிருந்தது.

- 257,559 மெற்றிக் தொன் அரிசியில், 75,002 மெற்றிக் தொன் மாத்திரம் அமைச்சரவை அங்கீகாரத்துடன் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 9,735 மில்லியன் பெறுமதியான 152,255 மெற்றிக் தொன் அரிசி அமைச்சரவை அங்கீகாரமில்லாமல் பொதுத் திறைசேரியின் ஒத்துழைப்பில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. மேலும், லங்கா சதொசவால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 1,914 மில்லியன் பெறுமதியான 30,302 மெற்றிக் தொன் அரிசி இருப்புக்களிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் தலைவரின் அறிவுறுத்தல்கள் மீது கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.
- இந்தியன் கம்பனியொன்று 100,000 மெற்றிக் தொன் அரிசியை விநியோகிப்பதற்கு இணங்கியிருந்தது எனவும் உரிய கம்பனியிடமிருந்து அரிசி கொள்வனவிற்காக உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக திறைசேரியின் பிரதிச் செயலாளர் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் அனுப்பப்பட்ட கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு லங்கா சதொசவின் தலைவரிற்கு அறிவித்திருந்தார். இருந்த போதிலும், அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அறிவித்து இரண்டு நாட்களின் பின்னர், கொள்வனவு நடைமுறைக்கு முரணாக 50,000 மெற்றிக் தொன் பொன்னி சம்பா அரிசியையும் 50,000 மெற்றிக் தொன் நாட்டரிசியையும் கொள்வனவு செய்வதற்காக திறைசேரி பிரதிச் செயலாளர் கட்டளையிட்டிருந்தார்.
- கட்டளையிடப்பட்ட 100,000 மெற்றிக் தொன் அரிசி இருப்பு 2014 திசெம்பர் 31 இற்கு முன்னர் விநியோகிக்கப்பட வேண்டுமென இந்தியன் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அத் திகதியில் திறக்கப்பட்ட நாணயக்கடிதங்கள் இரண்டு காலாவதியாகியிருந்ததுடன் 2015 பெப்ரவரி வரையிலும் 9,813 மெற்றிக் தொன் அரிசி மாத்திரமே பெறப்பட்டிருந்தது, மேலும், நாணயக் கடிதங்களின் காலப்பகுதியை நீடிப்பதற்கும் நாணயக் கடிதங்களின் மீதிப் பெறுமதிக்காக பொன்னி சம்பா அரிசியை இறக்குமதி செய்வதற்கும் அதற்கிணங்க பொதுத் திறைசேரிக்கு அறிவிப்பதற்கும் அமைச்சர் 2015 பெப்ரவரி 12 இல் அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.
- நாணயக்கடிதங்களின் மீளாய்வு தொடர்பில் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட வேண்டுமென அமைச்சர் அறிவுறுத்தியிருந்த போதிலும் அதற்கு முரணாகவும் அதிகாரமின்றியும், அதாவது தொடர்ந்துவரும் நாளான 2015 பெப்ரவரி 13 இல் அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) ஆகவிருந்த லங்கா சதொச பணிப்பாளரின் கையொப்பத்துடன் நாணயக் கடிதங்களின் காலப்பகுதியை 2015 ஏப்ரல் 20 வரை நீடிப்பதற்கு வங்கிக்கு அறிவித்திருந்ததுடன் ரூபா 5,362 மில்லியன் கிரயமான 81,088 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
- 2014/15 பெரும்போகத்தின் நெல் அறுவடை சந்தையால் பெற்றுக்கொள்ளப்படுகின்றதால் காலாவதியான நாணயக்கடிதங்கள் எதனையும் மேலும் நீடிப்பதை தவிர்க்குமாறு திறைசேரி அறிவித்திருந்த போதிலும் நாணயக்கடிதக் காலப்பகுதியை நீடிப்பதற்கு அப்பொழுதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

- செல்லுபடியாகாத நாணயக்கடிதத்தை திறப்பதற்கு திறைசேரியின் பிரதிச் செயலாளரால் வழங்கப்பட்ட அறிவித்தலிற்குப் பதிலாக, பெயரளவு மாதிரிப்பட்டியலின் பிரகாரம், லங்கா சதொச ஏனைய தரப்பினரிற்கு மாற்றக்கூடியதாக நாணயக்கடிதங்களை திறந்திருந்தது. ஆகையால், விநியோகஸ்தரால் ஆரம்பத்தில் இணங்கப்பட்டவாறு அவர்களின் பயிரிடப்பட்ட காணிகளிலிருந்து அரிசியை விநியோகிப்பதற்குப் பதிலாக இடத்தரகராக ஏனைய கம்பனிகளுடாக அரிசியை விநியோகிப்பதற்கு கம்பனிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது.
- நாணயக் கடிதத்திற்காக காலநீடிப்பு வழங்கும் போது ஏற்கனவே கட்டளையிட்ட அரிசியின் அளவு அதேபோல் ஏற்கனவேயுள்ள களஞ்சியங்களில் காணப்பட்ட களஞ்சிய இட வசதிகள் தொடர்பில் எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால், துறைமுகத்தால் பெறப்பட்ட 90,901 மெற்றிக் தொன் இருப்பில், 42,992 மெற்றிக் தொன் இருப்பு அல்லது அண்ணளவாக 47.3 சதவீதம் துறைமுகத்திலிருந்து விடுவிப்பதற்கு நீண்டகாலம் எடுத்திருந்தது. இதனால், அவற்றிற்காக துறைமுக அதிகாரசபைக்கு செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டியவை தாமதக்கட்டணம் அதேபோல் ஏனைய செலவினம் என்பன ரூபா 694 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்தது.
- துறைமுக வளவில் கொள்கலன்களிலும் அதேபோல் நீண்ட காலமாக சாதகமற்ற சூழல் நிலைமைகளின் கீழ் துறைமுகத்திலிருந்து அரிசிக் கொள்கலன்களை விடுவித்த பின்னர் தனியார் கொள்கலன் நிலையங்களிலும் அரிசி வைக்கப்பட்டிருந்தமையால் பொருத்தமற்ற மனித நுகர்வையும் இந்த அரிசி இருப்புக்களில் வீழ்ச்சியையும் விளைவித்திருந்தது. மேலும், கணக்காய்வுத் திகதியான 2016 நவம்பர் 16 அளவில் கொள்கலன் நிலையங்களிற்கான நில வாடகையாக ரூபா 15.64 மில்லியன் தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது.
- தேர்தல் காலப்பகுதியின் போது அரிசி விலையின் அசாதாரண அதிகரிப்பின் போக்கினை கட்டுப்படுத்துவதற்காக அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், ரூபா 1,630 மில்லியன் பெறுமதியான 30,000 மெற்றிக் தொன் வெள்ளை அரிசி மற்றும் ரூபா 2,151 மில்லியன் பெறுமதியான 31,354 மெற்றிக் தொன் பொன்னி சம்பா அரிசி அமைச்சரவை அங்கீகாரமின்றியும் கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகியும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த அரிசி இருப்புக்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அப்பொழுதும் லங்கா சதொசவால் ஏற்கனவே கட்டளையிடப்பட்ட 193,460 மெற்றிக் தொன் அரிசி இருப்பின் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.
- இறக்குமதி செய்யப்பட்ட 257,559 மெற்றிக் தொன் அரிசியின் ரூபா 15,997 மில்லியன் பெறுமதிக்கு மேலதிகமாக, ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த சுங்கத் தீர்வை, வங்கிக் கடன்கள் மீதான வட்டிகள், அகற்றல் கட்டணங்கள், துறைமுகக் கட்டணங்கள் மற்றும் களஞ்சிய வாடகை போன்ற அவற்றின் மீதான பல்வேறு செலவினம் ரூபா 11,015 மில்லியன் கூட்டுமொத்தமாகும். அதில் ரூபா 1,503 மில்லியன் தொகை அகற்றும் முகவரிற்கு முற்பணங்களாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட பணத் தொகையில் ரூபா 303 மில்லியன் 2016 ஒக்தோபர் 18 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 14,087 மில்லியன் கூட்டுமொத்தமான கடன்கள் அரிசி இறக்குமதிக்காக நாணயக்கடிதத்தை திறப்பதற்காக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பரில் அதற்காக செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 1,939 மில்லியன் தொகையானதுடன் அதுவரை கடன் தொகையில் ரூபா 7,786 மில்லியன் தொகை மேலும் செலுத்தப்பட வேண்டியிருந்தது.
- இறக்குமதி செய்யப்பட்ட 257,559 மெற்றிக் தொன் அரிசி இருப்பில் 176,208 மெற்றிக் தொன் அரிசி ரூபா 9,666 மில்லியன் கிரயத்தில் சதொச விற்பனை நிலையங்களால் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் 22.36 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 57,600 மெற்றிக் தொன் அரிசி மிருகங்களின் உணவாக ரூபா 2,189 மில்லியன் கிரயத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது.
- அரிசி இறக்குமதி செயன்முறையில் ஏற்படுத்தப்பட வேண்டியிருந்த கிரயம் ரூபா 27,012 மில்லியன் தொகையானதுடன் அரிசி விற்பனையிலிருந்தான வருமானம் ரூபா 11,855 மில்லியனாக இருந்தமையால் ரூபா 15,157 மில்லியன் நட்டத்தை சுட்டிக்காட்டுகின்றது

# கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு

# (துறை ரீதியாக)

# திரட்டு நிதியம்

அரசாங்க நிதிக் கட்டுப்பாட்டுக்குரிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் XVII ஆம் அத்தியாயத்தின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க நிதி தொடர்பான முழுமையான கட்டுப்பாட்டினையும் பாராளுமன்றம் கொண்டுள்ளது. அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசினால் சேகரிக்கப்படுகின்ற வருமானம் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் அரசியலமைப்பின் 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் திரண்ட நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 1,156 பில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,323 பில்லியனுமாக மொத்தமாக ரூபா 2,479 பில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. காணப்படும் சட்டங்களின் மூலம் அங்கீகாரம் கிடைக்கப்பெற்று, திரட்டு நிதியத்திற்கு செலவினப் பொறுப்பாக இருக்க வேண்டிய விஷேட சட்டச் சேவை செலவினத்தின் கீழ் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 648 பில்லியனும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 544 பில்லியனுமாக மொத்தமாக ரூபா 1,192 பில்லியன் தொகையும் அதற்கு மேலதிகமாக ரூபா 228 பில்லியன் நிதி ஏற்பாடும் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் செலவினத்திற்கான மொத்த வருடாந்த நிதி ஏற்பாடும் ரூபா 3,899 பில்லியனாக இருந்தது. விபரட் அட்டவணை 05 இல் காண்பிக்கப்படுகின்றது.

.

| சேவைகள் | நிதி ஏற்பாடு | | |
|---|---|---|---|
| | மீண்டெழுபவை ரூபா.பில்லியன் | மூலதனம் ரூபா.பில்லியன் | மொத்தம் ரூபா.பில்லியன் |
| அரசாங்கத்தின் வழங்கல் மற்றும் சேவைகளுக்காக | 1,156 | 1,323 | 2,479 |
| விஷேட சட்ட சேவைகளுக்காக | 648 | 544 | 1,192 |
| விஷேட சட்ட சேவைகளுக்காக (மேலதிக) | 167 | 61 | 228 |
| **மொத்தம்** | **1,971** | **1,928** | **3,889** |

அட்டவணை 05 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிதிஏற்பாடு
மூலம்:- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

மீளாய்வாண்டிற்கான திருத்தம் செய்யப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 3,899 பில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் போது ரூபா 3,475 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடு ரூபா 424 பில்லியனால் அதாவது 12.20 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாட்டில் ரூபா 3,106 பில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 793 பில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 20.34 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் நிதிஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 271 பில்லியனுடன் ஒப்பீடு செய்த போது சேமிப்புக்களில் ரூபா 522 பில்லியன் தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. 416 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 521 பில்லியன் தொகையான தேறிய நிதிஏற்பாட்டில் எதுவும் பயன்படுத்தப்படாமல்

அது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2261 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட சேமிப்பு அவதானிக்கப்பட்டதுடன், அந்த சேமிப்புக்களின் திரண்ட கூட்டுமொத்தம் ரூபா 711 பில்லியனாக இருந்தது அது மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் 18.24 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. சேமிப்பு தொடர்பான விபரம் அட்டவணை 06 இல் காண்பிக்கப்படுகின்றது.

| தேறிய நிதிஏற்பாட்டின் சதவீத வீச்சாக சேமிப்பு | தேறிய நிதிஏற்பாடு ரூபா.பில்லியன் | பயன்பாடு ரூபா.பில்லியன் | சேமிப்பு ரூபா.பில்லியன் |
|---|---|---|---|
| 25 சதவீதத்திற்கு குறைவு | 3,003 | 2,921 | 82 |
| 26 சதவீதம் - 50 சதவீதம் | 207 | 132 | 75 |
| 51 சதவீதம் - 75 சதவீதம் | 123 | 47 | 76 |
| 76 சதவீதம் - 99 சதவீதம் | 45 | 6 | 39 |
| 100 சதவீதம் | 521 | - | 521 |
| **மொத்தம்** | **3,899** | **3,106** | **793** |

அட்டவணை 06 தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு
மூலம் :- திறைசேரியின் கணனி அச்சிடலின் அட்டவணை 33.

மீளாய்வாண்டின் போது சில அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு போதியளவான கட்டுநிதி திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டிராமையின் காரணமாக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை முழுமையாக பயன்படுத்துவதற்கு முடியாமல் நிதிஏற்பாடு எஞ்சியிருந்ததாக உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஒதுக்கீட்டு கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கட்டுநிதி வழங்கப்படாமையினால் ஆண்டின் இறுதிவரையில் மீண்டெழும் நிதிஏற்பாடு ரூபா 14 பில்லியன் தொகையும், மூலதன நிதிஏற்பாடு ரூபா 38 பில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 52 பில்லியன் நிதிஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு முடியாமல் சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு மொத்த நிதிஏற்பாட்டில் 6.68 சதவீத அளவினைக் கொண்டிருந்தது.

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் கல்வி அமைச்சின் 126-2-4-1-1407 ஆம் செலவின விடயத்தின் கீழ் அரசாங்க முதலீட்டை பேணிச் செல்லும் கிரயத்திற்காக (காணி மற்றும் கட்டிடம்) ரூபா 121 பில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த மீண்டெழும் நிதிஏற்பாடு முகப்பெறுமதியாக மாத்திரம் இருந்ததுடன் அவ்வாறான நிதிஏற்பாடு உரிய அமைச்சினால் கோரப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அந்த நிதிஏற்பாட்டில் எந்த தொகையும் பயன்படுத்தபடாமலிருந்ததுடன் அது கல்வி அமைச்சின் மொத்த நிதிஏற்பாட்டின் சேமிப்பில் 88 சதவீதமாக இருந்தது.

அவ்வாறே, சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்கு 111-01-05-0-1407 (11) செலவின விடயத்தின் கீழ் அரசாங்க முதலீட்டைப் பேணிச்செல்லும் கிரயமாக (காணி மற்றும் கட்டிடம்) ரூபா 17.8 பில்லியன் மீண்டெழும் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த மீண்டெழும் நிதிஏற்பாடு பெயரளவுப் பெறுமதியாக மாத்திரம் இருந்ததுடன், உரிய அமைச்சினால் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட சர்ந்தப்பத்தின் போது அவ்வாறான நிதிஏற்பாடு கோரப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அந்த நிதிஏற்பாட்டிலிருந்து எந்தவொரு செலவினமும் செய்யப்படாதிருந்ததாக

திறைசேரியினால் உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அது சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் மொத்த நிதிஏற்பாட்டின் சேமிப்புக்களில் 42 சதவீத அளவினைக் கொண்டிருந்தது.

மீளாய்வாண்டிற்குரிய கடன் கொடுப்பனவுகள் தவிர, மூலதன நிதிஏற்பாடுகள் ரூபா 1,185 பில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 594 பில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 50.13 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் மூலதன நிதிஏற்பாடுகளின் பயன்பாடு ரூபா 684 பில்லியனுடன் ஒப்பிடும்போது அது ரூபா 90 பில்லியனால் குறைவடைந்திருந்தது. அதாவது முன்னைய ஆண்டின் போது மொத்தச் செலவினத்தில் 29 சதவீதமான மூலதன நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் போது மொத்தச் செலவினத்தில் 25 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறே மீயாய்வாண்டின் மீண்டெழும் செலவினத்திற்கான நிதிஏற்பாடு ரூபா 1,971 பில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,771 பில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 89.85 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினமான ரூபா 1,673 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 98 பில்லியனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டில் ரூபா 2,357 பில்லியன் தொகையான மொத்தச் செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 2,365 பில்லியன் வரை ரூபா 8 பில்லியனால் அதிகரித்திருந்தது. மீயாய்வாண்டின் கடன் செலுத்துகைகள் தவிர மொத்தச் செலவினம் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19.97 சதவீதமாக இருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்த செலவினம் அதாவது மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களும் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினம் குறைவடைந்திருந்தது. விபரம் அட்டவணை 04 இல் காண்பிக்கப்படுகின்றது. அவ்வாறே ஒட்டுமொத்த செலவினம் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக கவனத்தில் கொள்ளும் போது கடந்த 02 வருட காலப்பகுதியை விடக் குறைவடைந்திருந்தது. விபரம் அட்டவணை 05 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு. 04 ஒட்டுமொத்த செலவினம்
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்




உரு. 05 ஒட்டுமொத்த செலவினம் மதிப்பீடு செய்யப்பட்ட உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை

மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டி செலுத்துவதற்காக ரூபா 611 பில்லியன் அதாவது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 34.5 சதவீத அளவு செலவிடப்பட்டிருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 84 பில்லியனால் அதாவது 15.94 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதற்கு மேலதிகமாக ஆளணி வேதனங்களுக்காக ரூபா 453 பில்லியன் தொகையும் மானியம் மற்றும் நிதியுதவிகளுக்காக ரூபா 557 பில்லியன் தொகையும் மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் சேவைச் செலவினங்களுக்காக ரூபா 149 பில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன. மொத்த மீண்டெழும் செலவினம் தொடர்பாக மேற்கூறப்பட்ட செலவினங்கள் உயர்ந்த பங்களிப்பைக் கொண்டுள்ளதுடன் ஒட்டு மொத்த மீண்டெழும் செலவினங்களையும் தீர்ப்பதற்காக ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் போதியளவாக இருக்கவில்லை. அவ்வாறே மூலதன செலவினங்களுக்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 594 பில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மீண்டெழும் செலவினத்தின் ஒரு பகுதி, அரச முதலீடு, மற்றும் கடன் தவணைப் பணம் செலுத்துவதற்கான உள்நாட்டுக்கடன், வெளிநாட்டுக்கடன் மற்றும் உதவிகள் பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியாக கணிசமான தொகையொன்றைச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் அது வருடாந்தம் அதிகரித்து செல்கின்ற கிரயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டின் மீண்டெழும், மூலதன மற்றும் கடன் மீளச் செலுத்துதல் என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 3,106 பில்லியனாக இருந்ததுடன் ஒட்டுமொத்த செலவினத்தில் 23.86 சதவீதம் கடன் செலுத்துவதற்காகவும், 19.67 சதவீதம் கடன் வட்டி செலுத்துவதற்காகவும் செலவிடப் பட்டிருந்தது. இனங்காணப்பட்ட 16 பிரிவுகளுக்கிடையே 2016 ஆம் ஆண்டின் மொத்தச் செலவினம் மேற்கொள்ளப்பட்ட முறை உரு 06 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு. 06 ஒட்டுமொத்த செலவினங்களும் இனங்காணப்பட்ட 16 துறைகளின் பங்களிப்பு.
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## அரசாங்க வருமானம்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டிற்கான கடன் பெறுவனவு தவிர மதிப்பிடப்பட்ட அரசாங்க வருமானம் ரூபா 1,668 பில்லியனாக இருந்தது. அது முன்னைய ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருமானமான ரூபா 1,441 பில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 227 பில்லியன் அதாவது 15.75 சதவீத அதிகரிப்பாக இருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 31 பில்லியனால் விஞ்சி ரூபா 1,699 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டுடின் போது சேகரிக்கப்பட்ட வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 305 பில்லியன் அதாவது 21.88 சதவீத அதிகரிப்பொன்று பெறப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாகக் கவனத்தில் கொள்ளும் போது முன்னைய ஆண்டில் 12.47 சதவீதமாக இருந்த போதும், 2016 ஆம் ஆண்டின் போது அந்த சதவீதத்தை விஞ்சி 14.35 சதவீதத்தை பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது. விபரம் உரு 07 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 07 அரசாங்க வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக,
மூலம் :- இலங்கை குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## அரச வருமான வகைப்படுத்தல்.

அரசாங்க வருமானம் “வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம்” பிரதான இரண்டு வகையின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், வரி வருமானம் மீண்டும் வருமான வரி, உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி மற்றும் சர்வதேச வியாபார அடிப்படையிலான வரி என வகைப்படுத்தப்பட்டு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்கான வருமான வரியாகச் சேகரிப்பதற்கு ரூபா 261 பில்லியன் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 259 பில்லியன் தொகையை மாத்திரம் சேகரிக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறே உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 846 பில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 841 பில்லியன் மாத்திரம் சேகரிக்கக் கூடியதாக மாத்திரம் இருந்தது. சர்வதேச வியாபாரத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற வரிகளில் ரூபா 367 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீயாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 364 பில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வரி வருமானங்களில் ரூபா 1,474 பில்லியன் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் 99.32 சதவீதம் அதாவது ரூபா 1,464 பில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது வரியல்லா ஏனைய வருமானங்களில் ரூபா 194 பில்லியன் சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 41 பில்லியனால் விஞ்சி ரூபா 235 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் வருமான மதிப்பீடு மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை காண்பிக்கின்ற விபரம் உரு 08 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 08 மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## வரி வருமானம்.

அரசாங்க வருமானத்தில் வருமான வரியாக ரூபா 259 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 263 பில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 4 பில்லியனால் வருமான வரி குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,464 வரி வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்த போதும், நுகர்வோருக்கு சாட்டக்கூடிய வரியாக கருதக்கூடிய மறைமுக வரி மூலமாக ரூபா 1,205 பில்லியன் வருமானமொன்று அதாவது மொத்த வரி வருமானத்தில் 82.31 சதவீதத்தை பிரதிநித்துவப்படுத்தியது. முன்னைய ஆண்டில் அந்த விகிதாசாரம் 79.49 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் வரி வருமானம் நுகர்வோருக்கு சாட்டப்படுவதைக் குறைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்கது.

மறைமுக வரியாக இனங்காணக்கூடிய உள்நாட்டு நுகர்வு மற்றும் இறக்குமதி அடிப்படையிலான வரி வருமானம், அரசாங்க வருமானக் கட்டமைப்பில் 70 சதவீதத்திற்கு அண்ணளவான மிகவும் உயர்ந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட வருமானத்தில் 18 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதமொன்று மதுபானம் மற்றும் சிகரட் போன்ற பொருட்களின் அடிப்படையில் விதித்துள்ள வரிகளை உள்ளடக்கி இருந்ததுடன் 16 சதவீதத்திற்கு மேற்பட்ட சதவீதமொன்று மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளையும் உள்ளடக்கியிருந்தது.

மேற்கூறப்பட்ட பிரகாரம் அரசாங்க வருமானக் கட்டமைப்பில் மறைமுக வரியைக் கருதப்படக்கூடிய வருமானத்தில் உயர்ந்த பங்களிப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக கீழே குறிப்பிடப்படுகின்ற காரணிகளில் போதியளவான தாக்கமொன்று ஏற்பட்டிருந்த போதிலும், அந்த தாக்கங்களின் நிதி ரீதியான பெறுமதியைக் கணிப்பிடுவதற்காக வருமானம் சேகரிக்கின்ற திணைக்களத்தால் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வருமானம் சேகரிக்கின்ற திணைக்களங்களின் சரியான செயலாற்றலை அளவிடுவதற்காக சேகரிக்கப்படுகின்ற வருமானத்தின் அதிகரிப்பு மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டமை போதியதாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- அரசினால் உயர் வரி வீதத்தை விதித்தல்.
- விஷேட சர்ந்தப்பங்களின் போது ஏற்படுகின்ற இறக்குமதியாளர்களின் அதிகரிப்பின் காரணமாக ஏற்படுகின்ற வரி வருமானத்தின் அதிகரிப்பு.
- பொருட்கள் மற்றும் சேவைகளில் வெளிநாட்டு சந்தை விலை உயர்ந்வடைந்து சென்றமையினால் ஏற்படுகின்ற வரி வருமானத்தின் அதிகரிப்பு.

- அந்நிய செலாவணி நாணயமாற்று விகிதத்தின் வீழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட இறக்குமதி கிரயம் அதிகரிப்பதன் அடிப்படையில் வருமானம் அதிகரித்தல்.

மேலும், வெளிநாட்டு வியாபார உடன்படிக்கை மற்றும் ஏனைய சட்டங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற வரி கைவிடல்கள், சலுகை வழங்கல் மற்றும் வரி விடுதலையளித்தல் என்பவற்றின் காரணமாக அரசாங்க வருமானத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக விரிவான தகவல்களும் உரிய திணைக்களங்களின் செயலாற்றலை அளவீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## பாதீட்டு நிலுவை

மீளாய்வாண்டில் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு நிலுவை ரூபா 1,488 பில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டில் மதிப்பிடப்பட்ட பாதீட்டு நிலுவையை விட ரூபா 317 பில்லியன் அதாவது 27 சதவீத அதிகரிப்பாகும். 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 666 பில்லியனாக இருந்ததுடன் அது மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு நிலுவையை விட ரூபா 822 பில்லியன் அதாவது 55.24 சதவீத குறைவாகும். 2013 இன் 15 ஆம் இலக்க முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் 3 (அ) பிரிவின் பிரகாரம் பாதீட்டு நிலுவை மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு வரையறுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாண்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு நிலுவை மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12.57 சதவீதமாக இருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது அந்த சதவீதம் 9.78 சதவீதம் முதல் 2013 ஆம் ஆண்டு வரையில் அது 7.6 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டு முதல் அந்த சதவீதம் 2016 ஆம் ஆண்டு வரையில் 12.57 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. உரு 9 இல் காண்பிக்கப்படுகின்றது. அவ்வாறே 2010 ஈம் ஆண்டில் உள்ளபடியான பாதீட்டு நிலுவை ரூபா 473 பில்லியனாக இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு வரையில் அது ரூபா 963 பில்லியன் வரை அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டளவில் அது ரூபா 666 பில்லியன் வரை குறைவடைந்திருந்தது. உரு 10 இல் காண்பிக்கப்பட்டுள்ளது..




உரு. 09 உள்ளபடியான பாதீட்டு நிலுவை
மூலம்: குடியரசின் நிதிக்கூற்றுக்கள்




உரு. 10 மதிப்பிடப்பட்ட பாதீட்டு நிலுவை பாதிடப்பட்ட உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக
மூலம்: குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பாதீட்டு நிலுவை ரூபா 297 பில்லியனால் அதாவது 30.84 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், தேறிய வெளிநாட்டுக் கடன் பெறுவனவுகள் ரூபா 369 பில்லியன் முதல் ரூபா 429 பில்லியன் வரை ரூபா 60 பில்லியனால் அதாவது 16.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே, தேறிய

உள்நாட்டுக் கடன் பெறுவனவு முன்னைய ஆண்டில் ரூபா 528 பில்லியன் முதல் மீளாய்வாண்டின் போது ரூபா 445 பில்லியன் வரை ரூபா 83 பில்லியனால் அதாவது 15.7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் பாதீட்டு நிலுவையை தீர்த்துக்கொள்வதற்கான வெளிநாட்டுக் கடன் பெறுவனவு அதிகரித்திருந்தது.

### மீண்டெழும் செலவினத்தைத் ஈடுசெய்து கொள்வதற்கு வருமானம் போதியளவில் காணப்படாமை.

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினம் ரூபா 1,771 பில்லியனாகவும் அரசாங்கத்தின் மூலதனச் செலவினம் ரூபா 594 பில்லியனாகவும் இருந்தது. எனினும், அரசாங்கத்தினால் உழைக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 1,699 பில்லியனாக இருந்தமையின் காரணமாக அந்த வருமானம் 2016 ஆம் ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்து கொள்வதற்கும் போதியளவினதாக இருக்கவில்லை. அதன் பிரகாரம், ஒட்டு மொத்த அரசாங்க வருமானத்தை விஞ்சி ரூபா 72 பில்லியன் மீண்டெழும் செலவினம் ஏற்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அரசாங்க வருமானம் மீண்டெழும் செலவினத்தை தீர்த்து கொள்வதற்கு போதியளவில் இல்லாதிருந்தமை வரைபடம் 11 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 11 அரசாங்க வருமானம் மீண்டெழும் செலவினத்தை ஈடுசெய்துகொள்வதற்கு போதியளவில் இல்லாமை.
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

### அரசாங்கக் கடன்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கடனை உள்ளடக்கிய முழுமையான நிதிக் கட்டுப்பாடும் பராளுமன்றத்திற்கு உரித்தாக வருவதுடன் குடியரசின் சகல கடன்களுக்காகவும் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறவேண்டும். அதன் பிரகாரம் 2016 இன் 23 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 2015 இன் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் 2.1(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்காகவும் அரசாங்கம் சார்பாகவும் இலங்கையிலோ அல்லது அதற்கு வெளியிலோ கடன் பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டுக் கடன் ரூபா 574 பில்லியன் தொகையும், உள்நாட்டு வங்கியல்லாக் கடன் ரூபா 2,517 பில்லியன் தொகையுமாக ரூபா 3,091 பில்லியன் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 3,350 பில்லியன் கடன் அளவுடன் ஒப்பிடும் போது ரூபா 259 பில்லியனால் அதாவது 7.73 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அரசாங்கம் உள்நாட்டுக் கடன் தொடர்பில் கூடிய கவனமொன்று காண்பித்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது, ரூபா 2,517 பில்லியன் தொகையான உள்நாட்டுக் கடன் அளவை முன்னைய ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 2,794 பில்லியன் கடன் அளவுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 277 பில்லியனால் அதாவது 9.91 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

| விபரம் | 2011<br>ரூபா பில்லியன் | 2012<br>ரூபா பில்லியன் | 2013<br>ரூபா பில்லியன் | 2014<br>ரூபா பில்லியன் | 2015<br>ரூபா பில்லியன் | 2016<br>ரூபா பில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| **வெளிநாட்டுக் கடன் பெறுவனவு** | **287** | **366** | **183** | **423** | **556** | **574** |
| **உள்நாட்டுக் கடன் பெறுவனவு** | | | | | | |
| திறைசேரி உண்டியல் | 1,116 | 1,553 | 1,135 | 1,066 | 1,533 | 1,635 |
| திறைசேரி பிணை முறி | 538 | 639 | 802 | 858 | 926 | 668 |
| வெளிநாட்டு புழக்கப்பண வங்கி அலகுகள் | 5 | 3 | 3 | 1 | - | 17 |
| அபிவிருத்தி பிணைமுறி | 60 | 60 | 238 | 95 | 335 | 197 |
| **மொத்த உள்நாட்டுக் கடன் பெறுவனவு** | **1,719** | **2,255** | **2,178** | **2,020** | **2,794** | **2,517** |
| **ஆண்டின் போது பெறப்பட்ட மொத்தக் கடன் அளவு** | **2,006** | **2,621** | **2,361** | **2,443** | **3,350** | **3,091** |

அட்டவணை :- 07 கடந்த சில ஆண்டுகளின் அரசாங்கக் கடன் பெறுவனவு
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 8,794 பில்லியனாக இருந்ததுடன் அது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,684 பில்லியன் கடன் மீதியுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 1,110 பில்லியனால் அதாவது 14.45 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் பெறப்பட்டிருந்த அரசாங்கக் கடன் தொடர்பான விபரம் அட்டவணை 08 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விடயம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி<br>2015<br>ரூபா பில்லியன் | <br>2016<br>ரூபா பில்லியன் |
|---|---|---|
| திறைசேரி உண்டியல் | 633 | 792 |
| திறைசேரி பிணை முறி | 3,187 | 3,567 |
| ரூபாய்க் கடன் | 24 | 24 |
| இலங்கை அபிவிருத்தி பிணை முறி | 613 | 572 |
| வெளிநாட்டு மீண்டெழும் நிதியில் உள்நாட்டுக் கடன் | 22 | 42 |
| இலங்கை கனிய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் திறைசேரி பிணைமுறி | - | 105 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | 5 | 16 |
| **மொத்த உள்நாட்டுக் கடன்** | **4,484** | **5,118** |
| **மொத்த வெளிநாட்டுக் கடன்** | **3,200** | **3,676** |
| **மொத்த அரசாங்கக் கடன் மீதி** | **7,684** | **8,794** |
| மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி | 11,183 | 11,839 |
| தீர்க்கப்படாத அரசாங்கக் கடன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | 68.71 | 74.28 |

அட்டவணை 08- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் இலங்கை அரசாங்கத்தினால் செலுத்த வேண்டிய கடன் மீதி
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் தீர்க்கப்படாத அரசாங்கக் கடன் மீதி ரூபா 8,794 பில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை அரசாங்கத்தினால் உடன்படிக்கை செய்யப்பட்டு பெறப்பட்டிருந்த மூன்று அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட மற்றும் ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட 07 வெளிநாட்டுக் கடன் உடன்படிக்கைக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மீதி ரூபா 332 பில்லியனாக இருந்ததுடன் திறைசேரி பிணைமுறி மீதி ரூபா 487 பில்லியன் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத மொத்த அரசாங்கக் கடனின் அளவு ரூபா 9,613 பில்லியனாக இருந்தது.

அரசாங்கத்தின் மொத்த தீர்க்கப்படாத கடன் மீதிகளையும் உள்ளடக்கிய மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 9,864 பில்லியனாக இருந்ததுடன் அது ரூபா 11,839 பில்லியன் தொகையான 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 83.32 சதவீதமாக இருந்தது. அவ்வாறே அது முன்னைய ஆண்டின் 79.68 சதவீதத்துடன் ஒப்பிடும் பொது 3.64 சதவீத அதிகரிப்பாகும். 2013 இன் 15 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) (திருத்த) அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 2003 இன் 3 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச்சட்டத்தின் 2(ஆ) பிரிவின் பிரகாரம் 2013 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பமாகின்ற நிதியாண்டு முதல் அரசாங்கத்தின் மொத்த பொறுப்புக்கள் அந்தந்த நிதியாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 80 சதவீதத்தை விஞ்ச முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிதி முகாமைத்துவ (பொறுப்புக்கள்) அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அந்த உச்ச பொறுப்புக்களின் எல்லையை விஞ்சியிருந்தது. விபரம் அட்டவணை 09 இல் காண்பிக்கப்படுகின்றது.

| பொறுப்புக்கள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்களி பெறுமதி * | |
|---|---|---|
| | 2015<br>ரூபா பில்லியன் | 2016<br>ரூபா பில்லியன் |
| வங்கி மேலதிகப் பற்று | 198 | 168 |
| மத்திய வங்கி முற்பணம் | 151 | 83 |
| அரசாங்கக் கடன் | 7,685 | 8,794 |
| நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படாத பொறுப்புக்கள் :- | | |
| - ஐந்தொகைக்கு வெளியே கணக்கு வைக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் | 338 | 332 |
| - திறைசேரி பிணைமுறி மீதி குறைத்து கணக்கீடு செய்தல் | 509 | 487 |
| - திறைசேரி உண்டியல் மீதி குறைத்துக் கணக்கீடு செய்தல் | 30 | - |
| மொத்த பொறுப்புக்கள் | **8,911** | **9,864** |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 11,183 | 11,839 |
| மொத்த பொறுப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | 79.68 | 83.32 |

* பொதுத் திறைசேரியின் பிணையின் அடிப்படையில் பொது முயற்சிகளிலிருந்து பெறப்பட்ட கடனுக்காக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 563,337 மில்லியன் தொகையான பிணைகளின் பெறுமதி பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

அட்டவணை 9 :- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய குடியரசின் பொறுப்புக்கள்
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த அரசாங்கக் கடன், மத்திய வருடாந்த சனத்தொகையுடன் ஒப்பிடும் போது ஒரு தனிநபரின் கடன் அளவு ரூபா 417,865 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் ஒரு தனிநபரின் கடன் அளவான ரூபா 373,462 உடன் ஒப்பிடும் போது ரூபா 44,403 இனால் அதிகரித்திருந்தது.

மீளாய்வாண்டின் அரசாங்க வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 305 பில்லியனால் அதாவது 21.9 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், அந்த மொத்த அரசாங்க வருமானமும் ஆண்டில் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தவணைப் பணத்தையும் கடன் வட்டியிலிருந்து 60.1 சதவீதத்தையும் தீர்ப்பதற்காக மாத்திரம் போதியளவாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,129 பில்லியன் அதாவது 39.9 சதவீதத்தை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாகப் பெறப்பட்ட கடனை பயன்படுத்த வேண்டியேற்பட்டிருந்தது. அவ்வாறே ஆண்டில் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி செலுத்துதல்கள் அரசாங்க வருமானத்தில் 166.4 சதவீதமாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அது அரசாங்க வருமானத்தில் 213.7 சதவீதமாக இருந்தது. விபரம் அட்டவணை 10 இல் காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | 2011 ரூபா பில்லியன் | 2012 ரூபா பில்லியன் | 2013 ரூபா பில்லியன் | 2014 ரூபா பில்லியன் | 2015 ரூபா பில்லியன் | 2016 ரூபா பில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| அரசாங்க வருமானம் | 943 | 997 | 1,066 | 1,128 | 1,394 | 1,699 |
| கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை | 1,917 | 2,542 | 2,255 | 2,136 | 2,979 | 2,828 |
| அரசாங்க வருமானத்தின் சதவீதமாக கடன் தவணைப்பணம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின் மொத்தம் | 203.29 | 254.96 | 211.54 | 189.36 | 213.70 | 166.45 |

அட்டவணை 10:- அரச கடன் தவணைப்பணம் மற்றும் வட்டிகளைச் செலுத்துவதற்கு அரசாங்க வருமானம் போதியளவாக இல்லாமை
மூலம் :- குடியரசின் நிதிக்கூற்றுக்கள்

## வரிச் சலுகை மற்றும் வரி விலக்கு

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அரச மற்றும் தனியார் நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அடிப்படையில் ரூபா 44,639 மில்லியன் தொகையும், பல்வேறு தரப்பினர்களுக்காக சலுகை வரி அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 6,619 மில்லியன் தொகையும், 04 வெளிநாட்டு வியாபார உடன்படிக்கையின் அடிப்படையில் ரூபா 6,975 மில்லியன் தொகையும் மற்றும் வெளிநாட்டு தூதுவராலயங்களுக்காக ரூபா 23,084 மில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 81,317 மில்லியன் தொகையான வரிச்சலுகை இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

## இலங்கை சுங்கம்

இலங்கை சுங்கத்தின் வருமானம் சேகரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை சுங்கத்திற்குக் கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை வரி வருமானம் ரூபா 21,316 மில்லியனாக அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அந்த நிலுவை வருமானத்தில் 85 சதவீத அளவிலான தொகையொன்று 2015 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வரி வருமானமாகும். அவ்வாறே இந்த நிலுவை வரி வருமானத்தில் ரூபா 15,644 மில்லியன் அதாவது 73 சதவீதம் அரசாங்கத்தின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுகின்ற 9 அரசாங்க நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டியிருந்தது. குறித்த பிரகாரம் நிதிஏற்பாட்டைப் பெற்று உரிய நிலுவை வரியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பல்வேறு சுங்கத் தவறுகளுக்காக விதிக்கப்பட்டுள்ள தண்டங்களிலிருந்து ரூபா 945 மில்லியன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்தது. அந்த நிலுவை தண்டப்பண வருமானங்களில் 5 வருடங்களை விட பழைய நிலுவை வரி வருமானம் உள்ளடங்கியிருந்தது.

- இலங்கையில் சிகரட் புகையிலை விற்பனையில் தனியுரிமைத் தன்மையை உரித்தாக்கிக் கொண்ட கம்பனியொன்றினால் புகையிலையின் அடிப்படையில் சேகரிக்கப்படுகின்ற உற்பத்தி வரி இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற புகையிலையின் அடிப்படையிலான வரி வருமானம், இலங்கை அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வருமானத்தில் 5 சதவீதத்தை விட அதிக பெறுமதியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், அரசாங்கத்தால் புகையிலையின் அடிப்படையில் அறவிடப்படுகின்ற வரி விகிதத்தில் அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், உற்பத்தி செய்யப்படுகின்ற சகல புகையிலைகளுக்கும் உரிய அதிகரிக்கப்பட்ட வரி வருமானம் குறித்த பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைத்திராத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டன புகையிலைக்கான வரி திருத்தம் செய்யப்பட்ட திகதி அல்லது அதற்கு முன்னுள்ள அண்மித்த தினங்களில் மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லறை விற்பனையாளர் முன்னைய விலையின் கீழ் கணிசமான அளவில் புகையிலை இருப்புக்களைச் சேகரிப்பதற்கும், பின்னர் அவற்றை புதிய விலையின் கீழ் சந்தைக்கு விநியோகித்ததன் காரணமாகவும் அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய கணிசமான வரி வருமானமொன்று தனியார் தரப்பினரால் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த வரி நட்டத்தைக் குறைப்பதற்காக எடுக்கப்படக்கூடிய உரிய படிமுறைகள் உரிய வரிச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த சட்டங்களை அமுல்படுத்தவதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினர் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் இறங்கு மேடையூடாக சட்டரீதியற்ற வகையில் வணிகரீதியான வடிவிலான பொருள் இறக்குமதிகள் அடிக்கடி ஏற்படுவதுடன் அந்த பொருட்களுக்காக முறையான திட்டமொன்றின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது 60 விமானப்

பயணிகள் மாத்திரம் 1,533 சந்தர்ப்பங்களில் வணிக ரீதியிலான பொருட்களை இறக்குமதி செய்திருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட சேலைகள், சல்வார்கள் மற்றும் ஏனைய ஆடை வகைகள் தொடர்பாகவும், ஏனைய சிறிய அளவிலான பெறுமதி கூடிய பொருட்களுக்காகவும், ஏற்றுக்கொள்ளக் கூடிய விலைப்பட்டியலேனும் சமர்ப்பிக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டன. அவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உத்தியோகத்தர்களினால் பரிசோதனைக்குள்ளாக்கப்பட்ட பிரயாணப் பொதிகள் தொடர்பாக வேறு உள்ளக பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- விமான நிலையத்தில் அமைந்துள்ள சுங்கத் தீர்வையற்ற விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகளைத் தீர்மானிப்பதற்கான பொருத்தமான திட்டமுறையொன்று பொறுப்புவாய்ந்த தரப்பினரால் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக விற்பனைக் கடைகளின் உரிமையாளர்களின் விருப்பத்தின் பேரில் பொருட்களின் விலை தீர்மானிக்கப் படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த விற்பனைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களுக்காக சுங்கவரி அறவிடுதல் கைவிடப்பட்டமையின் காரணமாக அரசினால் கணிசமான அளவில் வரி நட்டமொன்று பெறப்பட்டிருந்த போதும், அந்த சலுகைகள் விமானப் பயணிகளுக்கு கிடைத்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறையான திட்டமொன்றும் காணப்படவில்லை.

- இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்கள் குறித்த நியமங்களுக்கு இணங்க காணப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலங்கை சுங்கத்தினால் அதற்காக பொறுப்புவாய்ந்த நிறுவனத்தின் உதவிகளைப் பெறவேண்டியிருந்தது. அந்த நிறுவனத்திடமிருந்து சான்றிதழ் கிடைக்கும் வரை உரிய பொருட்கள் தனிப்பட்ட பிணைகளின் அடிப்படையில் இறக்குமதியாளரின் கட்டிடத் தொகுதிக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதும், அந்த பொருட்கள் சந்தைக்கு விநியோகிக்கப்பட முடியாதிருந்தது. எனினும் அவ்வாறு தனிப்பட்ட பிணையின் அடிப்படையில் விடுவிக்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக இலங்கை சுங்கத்தின் மேற்பார்வை திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை. இவ்வாறு பொருட்கள் விடுவிக்கப்பட்ட 1,200 சந்தர்ப்பங்களில் 937 சந்தர்ப்பங்களும் தொடர்பில் இலங்கை சுங்கத்தின் மேற்பார்வை யொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. முன்னர் பெறப்பட்ட தனிப்பட்ட பிணைகள் தீர்க்கப் படாதிருக்கும் போது மீண்டும் தனிப்பட்ட பிணையின் அடிப்படையில் பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

- கொழும்புத் துறைமுகம், கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் அரச வாணிப பல்நோக்குக் கூட்டுத்தாபனம் ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுங்கத்தீர்வையற்ற வெளிநாட்டு மதுபான விற்பனைக் கடைகளின் செயற்பாடுகள்

தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரின் போதியளவான மேற்பார்வையொன்று இடம்பெறாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அதன் காரணமாக, சுங்கத் தீர்வையற்ற வெளிநாட்டு மதுபானங்கள் சந்தைக்கு வருவதுடன் அதன் மூலம் உள்நாட்டு மதுபானத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய வரி வருமானத்திற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிலைமையை சரிசெய்வதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களை உள்ளடக்கிய கொள்கலன்கள் முறையாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதிருந்தமை முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. இறக்குதி செய்யப்பட்ட பொருட்களை உள்ளடக்கிய கொள்கலன்கள் ஆழமான பரீட்சிப்பிற்கு உள்ளடக்கப்படாமையின் காரணமாக,

- சட்டவிரோத போதைப் பொருட்கள் போன்றவை இறக்குமதி செய்யப்படுகின்றமை
- வெளிப்படுத்தப்படாத பொருட்கள் இறக்குமதி செய்வதன் மூலம் வரி மோசடி ஏற்படுகின்றமை
- வெளிப்படுத்தப்பட்ட அளவினை விட அதிகரித்த அளவில் பொருட்கள் இறக்குமதி செய்து சுங்கவரி மோசடி செய்தமை.
- பிழையான வகைப்படுத்தல் குறியீட்டின் கீழ் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வரி மோசடிகளில் ஈடுபடுகின்றமை.
- குறித்த நியமத்திற்குப் புறம்பாக பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வரி மோசடிகளில் ஈடுபடுகின்றமை.
- வெளிப்படுத்தப்பட்ட பொருட்களுக்குப் பதிலாக வேறு பொருட்களை இறக்குமதி செய்தல்.
- பொருட்களில் காணப்பட வேண்டிய உப பாகங்கள் குறைவாக அல்லது அதிகரித்து பயன்படுத்தப்பட்டு பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமை போன்ற பல எண்ணிக்கையிலான சுங்க பிழைகள் ஏற்படுகின்றமை சுங்க உத்தியோகத்தர்களின் புலனாய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதனால் தற்போது நடாத்தப்படுகின்ற பரிசோதனை முறைமை மிகவும் முறையானதாக இருக்க வேண்டியமை சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

கப்பல் பொருட்கள் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக போதியளவான பதவியணியினர் நியமிக்கப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை உள்ளடக்கிய 203,712 கொள்கலன்களைப் பரீட்சிப்பதற்காக உரிய பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 101 ஆக இருந்தது.

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வருமான சேகரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை வரித் தொகையை காலரீதியில் தீர்த்துக் கொள்வதற்காக முறையான திட்டமொன்று பின்பற்றப்படாமையின் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை வரி வருமானம் ரூபா 295,296 மில்லியனாக இருந்தது. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந்த நிலுவை வரித் தொகையிலிருந்து வரி முறைப்பாடுகள் மற்றும் நீதிமன்ற ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராத ரூபா 85,708 மில்லியன் தொகையை துரிதமாக தீர்த்து வைப்பதற்கான இயலுமை காணப்பட்ட போதிலும், அதுவும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

- பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பாக வரியிறுப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வரி அறிக்கையின் அடிப்படையில் பணம் செலுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்களின் போது கணனி முறைமையூடாக சுயமாக மதிப்பீட்டு அறிக்கை விநியோகிக்கப்பட்டு நிலுவை வரியாக அறிக்கையிடுதல், தண்டப்பணம் கணிப்பீடு செய்யும் முறைமையொன்று 2012 மார்ச் 31 ஆந் திகதி வரை திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் அந்த முறைமை நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக பெறுமதிசேர் வரிக்கும் சேதசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கும் உரிய 2012 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் வரியிறுப்பாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 15,283 மில்லியன் கூட்டுத்தொகையான வரி அறிக்கைக்காக பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த நிலுவை வரித் தொகை மற்றும் அதன் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ரூபா 9,238 மில்லியன் தொகையான தண்டப்பணமுமாக ரூபா 24,521 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை மீதியொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்தால் அறவிடப்படாதிருந்ததுடன் அதனை நிலுவை வரியாக அறிக்கையிடுவதற்கேனும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் அடைய வேண்டிய மேலதிக வரி சேகரித்தல் இலக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் சில உத்தியோகத்தர்கள் உரிய இலக்கை அடையாதிருந்தமை உரிய அறிக்கைகளின் பிரகாரம் உறுப்படுத்தப்பட்டிருந்தது. இந்த இலக்கை திணைக்களத்தின் ஊக்குவிப்புப்படி உத்தேசத் திட்டத்திற்காகவும், பிரதானமாக அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறு பூர்த்தி செய்யப்படாத இலக்குகளின் பெறுமதி அதாவது மேலதிக வரியாக அரசாங்க வருமானத்திற்கு சேகரிக்கப்படாத தொகை ரூபா 4,652 மில்லியனாக இருந்தது. எனினும், உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படி வழங்கும் போது இந்த இலக்கு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக அறிக்கையிட்டு ஊக்குவிப்புப் படியும் செலுத்தப்பட்டிருந்தது.

- உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்தாமல்

புறக்கணிக்கப்படுகின்ற வரித் தொகை நீதிபதிகளின் தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் தவணையாக அறவிடக்கூடிய இயலுமை உள்ளது. எனினும், அதற்கு முரணானதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் 35 பிரதேச அலுவலகங்களால் 2016 மே மாதம் வரையிலும் ரூபா 8,914 மில்லியன் நிலுவை வரித் தொகை தவணையாக செலுத்தவதற்காக 918 வரியிறுப்பாளர்களுக்கு இடவசதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வாறு அரசாங்க வருமானம் காலரீதியில் சேகரிக்கப்படாமை அரசாங்க வருமான முகாமைத்துவத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது.

- வரியிறுப்பாளர்களால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட காசோலைகள் மதிப்பிழக்கும் போக்கு வருடாந்தம் உயர்ந்து சென்றமை காணப்பட்ட போதும், அதனை சரிசெய்வதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் மதிப்பிழந்த காசோலைகளுக்கான பணத்தை அறவீடு செய்தலும் மெதுவான போக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்ட சர்ந்தப்பங்களும் அவதானிக்கப்பட்டன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அவ்வாறு மதிப்பிழந்து காணப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கை 5,936 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 1,976 மில்லியனாக இருந்தது.

- திணைக்களத்தில் சட்டப்பிரிவொன்று பிரத்தியேகமாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பிரிவின் மூலம் பிரதான அலுவலகத்திலும், பிரதேச அலுவலகங்களிலும் காணப்படுகின்ற நிலுவை வரிகளுக்குரிய வழக்குகள் தொடர்பாக இணைப்பொன்றை ஏற்படுத்துவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தொடுக்கப்பட்டிருந்த சில வழக்குகள் முறையான திட்டமொன்று பின்பற்றப்பட்டு கையளிக்கப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்கான போதியளவான சான்றுகள் சட்ட பிரிவில் காணப்படவில்லை. மேலும், பிரதேச அலுவலகங்களால் கையளிக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட சில வழக்குகள் உள்ளபடியாக தொடுக்கப்பட்ட வழக்குகள்தானா என உறுதிப்படுத்துவதற்கும் போதியளவான சான்றுகள் சட்டப்பிரிவில் காணப்படவில்லை. அந்த வழக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்புக்களின் பிரகாரம், நிலுவை வரித்தொகை நியமங்களுக்கு இணங்க உரிய தரப்பினரால் செலுத்தப்படுகின்றதா என்பது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளும் சட்டப்பிரிவினரால் கையாளப்பட்டிருக்கவில்லை. பெறக்கூடியதாக இருந்த தகவல்களின் படி, அவ்வாறு கையளிக்கப்பட்டுள்ள 413 வழக்குகளுக்ககுரியதாக மாத்திரம் அறவிட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவை வரித் தொகை ரூபா 1,771 மில்லியனாக இருந்தது.

- திணைக்களத்திற்கு கிடைக்கின்ற வரி முறைப்பாடுகள் தொடர்பாக துரிதமாக நடவடிக்கை எடுக்காமையினால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் காலரீதியில் கிடைக்கப் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் திணைக்களத்தின் கீழுள்ள பாரியளவிலான வரி செலுத்துபவர்களின் 6 பிரிவுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது 2012/2013 ஆம் ஆண்டு முதல் 2014/2015

ஆம் ஆண்டு வரையான 3 மதிப்பீட்டு வருடங்களுக்குரியதாகக் கிடைத்த 594 வரி முறைப்பாடுகளில் 9 இற்கு மாத்திரம் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. பெறக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பெறுமதி ரூபா 53,804 மில்லியனாக இருந்ததுடன் தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் பெறுமதி ரூபா 67 மில்லியனாக இருந்தது.

- பாராளுமன்றத்தின் மூலம் சட்டமாக்கப்பட்ட சில கட்டளைச் சட்டங்களின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்காமையினால் அரசாங்கத்திற்கு காலரீதியில் பெறவேண்டிய வரித்தொகை உரித்தற்றுப் போதல் அல்லது தாமதித்து மேற்கொள்ளப்படுகின்ற சர்ந்தப்பங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம், 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கெசினோ தொழிலுக்காக அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 3,490 மில்லியன் வரி வருமானமொன்று கிடைக்கப்பெறாதிருந்ததுடன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடவேண்டி மாளிகை வரிக்காகவும் தேவையான சட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- அரசாங்க வருமான முகாமைத்துவம் தொடர்பாக வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற பாதீட்டு முன்மொழிவுகள் தொடர்பாக திணைக்களத்தின் ஒத்துழைப்பு போதியளவான மட்டத்தில் காணப்படவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது அரசாங்க வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பாக 18 பாதீட்டு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் செயற்படுத்தப்படுகின்ற மட்டத்தில் 4 முன்மொழிவுகள் மாத்திரம் காணப்பட்டன. அதன் பிரகாரம், உத்தேச வருமான இலக்கை அடைந்து கொள்ளும் போது வருடாந்த பாதீட்டு முன்மொழிவுகள் மூலம் போதியளவான பங்களிப்பொன்று இடம்பெற்றிருக்வில்லை.

## மதுவரித் திணைக்களம்

மதுவரித் திணைக்களத்தின் வருமானம் சேகரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- இலங்கையில் செறிவான மதுபானப் பாவனையை அதைரியப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மதுபானத்தின் அடிப்படையில் உயர்ந்த வரி விகிதம் விதிக்கப்பட்டிருந்த போதிலும், பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், செறிவு கூடிய மதுபான உற்பத்தி மற்றும் பாவனை தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்கின்றமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டில் 43.9 மில்லியன் லீற்றராகக் காணப்பட்ட செறிவான மதுபான உற்பத்தி 2015 ஆம் ஆண்டின் போது 51.8 மில்லியன் லீற்றர் வரையும், மீண்டும் அது 2016 ஆம் ஆண்டின் போது 55.5 மில்லியன் லீற்றர் வரையும் அதிகரித்திருந்தன. அவ்வாறே 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 105,263 மில்லியனாகக் காணப்பட்ட மதுவரி வருமானம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 120,238 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், 2011

ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை செறிவான மதுபானங்களுக்கு அறவிடப்படுகின்ற வரி விகிதம் மிகவும் வேகமாக அதிகரித்திருக்கும் போது மதுபானப் பாவனையில் அதிகரிப்பொன்று அறிக்கையிடப்பட்டமைக்கு தாக்கமளித்த காரணங்கள் தொடர்பாக போதியளவான புலனாய்வொன்று திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மதுவரித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அறவிடவேண்டியிருந்த தாமதக் கட்டணத்துடன் மொத்த நிலுவை வரி வருமானம் ரூபா 2,545 மில்லியனாக இருந்தது. அந்த நிலுவை வரி வருமானத்தில் 57 சதவீதமும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற நிலுவை வரி வருமானமாக இருந்தது.

- இலகுவாகவும் சரியாகவும் மதுவரி வருமானத்தை சேகரிப்பதற்கும் கணக்கு வைப்பதற்கும் பொருத்தமான கணனி வலைப்பின்னல் முறைமையொன்று திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- திணைக்களத்தால் மதுபானம் ஏற்றுமதி செய்யப்படும் போது வழங்கப்படுகின்ற ஏற்றுமதி வரி மானியத்தை பெற்றுக்கொள்வதற்காக ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சுங்க ஆவணங்கள் மாத்திரமே அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. இதன் பிரகாரம் உள்ளபடியாக ஏற்றுமதி செய்யப்பட்ட அளவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முறைமையொன்று திணைக்களத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச்சட்டத்தின் 2 ஆவது பிரிவின் பிரகாரம், இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சகல சிகரட்டுக்களுக்கும், சுருட்டுக்களுக்கும், பீடிகளுக்கும் மற்றும் சகல குழாய் புகையிலை ஒவ்வொரு கிலோகிராமிற்காகவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற நியதிகளின் மூலம் அமைச்சரினால் நிர்ணயிக்கப்படுகின்ற அந்தந்த அளவுகளின் அடிப்படையில் வரியொன்று விதித்து அறவிட வேண்டியிருந்தது. திணைக்களத்தால் புகையிலை வரி சிகரட் இற்காக மாத்திரமே அறவிடப்படுகின்றது. இதன் பிரகாரம் திணைக்களத்தால் புகையிலை வரி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்காதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

- பீடி உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற பீடி இலை வகையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி கொள்வதற்கும் திட்டமொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- சிகரட் ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரம் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுவதுடன் ஏற்றுமதி செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட அளவு உள்ளபடியாக ஏற்றுமதி செய்யப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கான முறைமையொன்று திணைக்களத்தால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- மதுபான உற்பத்தி கம்பனிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வருமானம் சேகரிக்கும் பணி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் தொடர்ச்சியாக களப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் வருமானம் சேகரித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- திணைக்களத்தின் தற்போதைய கணனி முறைமை தொடர்பாக தனியார் கம்பனியொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் “ஈ” மோட்டரின் செயற்திட்டம் தொடர்பான ஆரம்ப முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதனை அமுல்படுத்துவதற்காக 2009 ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 741 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும், 2012 ஒக்டோபர் 18 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலமும் இந்த பணிக்காக பொருத்தமான கம்பனியொன்று திறந்த போட்டிக் கேள்வி நடைமுறைகளின் கீழ் தெரிவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

- கணனி முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை மாற்றியமைத்து பாரியளவில் இடம்பெறுகின்ற பிழைகள், ஊழல்கள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கு / வெளிப்படுத்துவதற்கு முடியுமான வகையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையானதும் கட்டாயமுமான விடயமாக இருந்த போதிலும், இது தொடர்பாக போதியளவான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயலாற்றலொன்றை அடைந்து கொள்வதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களம் தவறியிருந்தது. இதன் காரணமாக காணப்படுகின்ற கணனி முறைமையில் தகவல்களை பிழையாக மாற்றுதல், சுங்க குறிப்புக்களை மாற்றி பிழையாக பதிவு செய்தல் என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு மோசடிச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றமை / ஏற்படுத்தப்படுகின்றமையினால் கணிசமான வருமானமொன்று அரசாங்கத்தால் இழக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

- மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்தை அச்சிடுவதற்காக BOT அடிப்படையின் கீழ் 07 வருட காலத்திற்கு 2009 மார்ச் 27 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தனியார் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் அதன் நடவடிக்கைகள் 2016 மார்ச் 26 ஆந் திகதி மீண்டும் திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டு திணைக்களத்தால் பேணிச்செல்லப்படவேண்டியிருந்தது. எனினும், அவ்வாறு செய்யாது 2016 மார்ச் 26 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டு மீண்டும் அக் காலம் 2017 மார்ச் 26 ஆந் திகதி முதல் 2018 மார்ச் 26 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. இதனால் தொழில்நுட்ப அபிவிருத்தியால்

ஏற்பட்ட கிரய நலன்கள் சாரதி அனுமதிப்பத்திரகாரர்களுக்கு கிடைக்காதிருந்தமையும், அரசாங்க வருமானத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானமொன்று, தனியார் தரப்பினரால் உரித்து கோரப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டன. இந்த உடன்படிக்கையின் கீழ் 2016 ஆம் ஆண்டில் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடுவதற்காக மாத்திரம் உரிய ஒப்பந்தகாரருக்கு ரூபா 968 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- திணைக்களத்தில் பதிவு செய்த வாகனங்களுக்கு இலக்கத்தகடு அச்சிடுவதற்குரிய ஒப்பந்தம் 2010 மே 01 ஆந் திகதி முதல் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தனியார் ஒப்பந்தக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியின் பின்னர் மீண்டும் கேள்வி கோரி அதற்காக புதிய ஒப்பந்தகாரரொருவர் தெரிவு செய்யவேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் பழைய ஒப்பந்தகாரரின் சேவைக்காலம் 2015 மே 01 ஆந் திகதி முதல் 2017 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரை சில சர்ந்தப்பங்களில் அவ்வப்போது பழைய விலைக்கே நீட்டிக்கப்பட்டிருந்தது. இதனால் தொழில்நுட்ப அபிவிருத்தியின் காரணமாக, குறைந்த விலைக்கு இலக்கத் தகடு அச்சிடுவதனால் ஏற்படுகின்ற கிரய நலன்களைப் பெற்றுக்கொள்ளும் சர்ந்தப்பம் வாகன உரிமையாளர்களுக்கு உரித்தற்றுப்போயிருந்தது. தற்போதைய ஒப்பந்தகாரர் அறவிடுகின்ற விலையினை விட ஒரு இலக்கத் தகடுக்காக ரூபா 300 குறைவாக இலக்கத் தகடு வழங்குவதற்கு கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

# பொதுப் பாதுகாப்பு

இலங்கையின் இறைமையை உறுதிப்படுத்தல் மற்றும் வான், கடல் மற்றும் தரை என்பவற்றினைப் பாதுகாப்பது இத்துறையின் நோக்கமாக இருந்தது. இக்குறிகோள்களை அடைந்து கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள ஐந்து திணைக்களங்களாலும் எட்டு நியதிச்சட்ட சபைகளாலும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- இலங்கையின் சட்ட ரீதியான ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- நாட்டின் ஆகாய, கடல் மற்றும் தரைப் பாதுகாப்பினை பேணுதல்.
- தேசிய பாதுபாப்புடன் தொடர்புடைய ஆராய்ச்சி அபிவிருத்தியை நடாத்துதல்.
- இலங்கையின் தேசிய உரிமைக்கும் கௌரவத்திற்கும் பங்களிப்பினை வழங்குதல்.
- பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பிலான நிகழ்ச்சித்திட்டங்களினதும் கருத்திட்டங்களினதும் கொள்கைகளையும் வகுத்தமைத்தல்.
- சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவுதற்கு தேவையான சந்தர்ப்பத்தில் பொலிசாருக்கு உதவியளித்தல்.
- நாட்டின் சொத்துக்களுக்கும் உயிர்களுக்கும் பாதுகாப்பளித்தல்.
- சிறிய ஆயுதங்களை சட்டரீதியாக கட்டுப்படுத்தல்.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பாக கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன

### சுடுகலன் அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல்

1996 இன் 22 ஆம் இலக்க துப்பாக்கிகள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற துப்பாக்கி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் தொடர்பாக 2000 ஆம் ஆண்டின் பின்னர் திருத்தங்கள் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காமையால் உருவாகியிருந்த ரூபா 1.26 மில்லியனான அனுமதிப்பத்திர வருமானம் உட்பட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 2.58 மில்லியனாக இருந்தது. துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்கள் தொடர்பான அதிகாரச்சட்டத்தின் காண்பிக்கப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சினால் தற்போது செயற்படுத்தப்படுகின்ற 22 செயற்பாடுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உள்ளக செயல்விதிக் கோவையின் மூலம் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்வதற்காக முறையான நடைமுறையொன்றை உரிய பிரிவினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

தேசிய பாதுகாப்பு மற்றும் வெவ்வேறு சமூக விரோத செயற்பாடுகள் தொடர்பாக இடம்பெறும் செயற்பாடுகளுக்கு எதிராக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 3 செயற்பாடுகளுக்காக புதிய செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல் பத்திரங்கள் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 450 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 244 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் மானியங்கள் மற்றும் மீள்நிரப்பபக் கூடிய விசேட மானியங்களின் கீழான மேரிடைம் செயற்திட்டத்திக்கான நிதிஏற்பாடுகளிலிருந்து ரூபா 8.50 மில்லியன் நி.பி 66 மூலம் மேரிடைம் பாதுகாப்பு இயலளவினை மேம்படுத்தும் செயற்திட்டமான வேறொரு செயற்திட்டமொன்றுக்காக மாற்றப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கீழ் எவ்வித செலவினமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பாதிடப்பட்ட செயற்திட்டமொன்றின் நிதிஏற்பாடு தேவைப்பாடொன்றில்லாமல் ஏனைய செயற்திட்டமொன்றுக்காக முறையான திட்டமொன்றில்லாமல் மாற்றப்பட்டிருந்தமை இதன் படி அவதானிக்கப்பட்டது.

## இலங்கை கடற்படைக்காக மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமை

இலங்கை கடற்படைக்கு 37 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. இந்திய இறக்குமதி ஏற்றுமதி வங்கி கடனின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது 133.10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் கிரயத்தில் நவீன வகையான இரண்டு கடல் கண்காணிப்பு படகுகளை கொள்வனவு செய்வதற்கு இலங்கை கடற்படை, இந்தியா கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கப்பல் தயாரிப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கொடுப்பவிற்காக இலங்கை கடற்படையால் ரூபா 7,040 மில்லியனான நிதிஏற்பாடு விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 பாதீட்டிலிருந்து அச்செலவின விடயத்தின் கீழ் ரூபா 8,145 மில்லியனான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,355 ஆன நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## இலங்கை விமானப் படையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளுரிய நலன்கள்

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பௌதீக மனித வளங்கள் உட்பட நிதியத்தைப் பயன்படுத்தி விமானப் படைக்குச் சொந்தமான தனியார் நிறுவனமொன்றாக நடாத்திச் செல்லப்படும் ஹெலிவூட்டர்ஸ் கம்பனி 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான 7 ஆண்டு காலப்பகுதியில் ரூபா 43.7 மில்லியன் இலாபம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை விமானப்படையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீட்டு நலன்களாக எவ்வித இலாபப் பங்கும் இலங்கை வான்படைக்கு கிடைத்திருக்கவில்லை.

## உள்ளக நிதியத்தின் மூலம் உழைக்கப்பட்ட வருமானம்

2011 நவம்பர் 30 ஆந் திகதிய 852 ஆம் இலக்க விமானப் படை தளபதி மற்றும் விமானப் படை கட்டளை இலக்கம் 5 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை வான்படைத் தலைமையகத்திலிருந்து பல்வேறு முகாம்கள் மற்றும் பிரிவுகளில் 97 உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந் நிதியங்களின் செயல்நடவடிக்கைகளுக்காக நிதியத்தின் மூலம் செய்யப்படுகின்ற இலாபம் உழைக்கும் செயற்திட்டங்களுக்காக இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149(அ) உறுப்புரையின் பிரகாரம் ஏதேனும் எழுத்துமூலம் சட்டமொன்றின் கீழ் குறிப்பிடப்படாத குடியரசிற்கு கிடைக்கும் அனைத்து பெறுவனவுகளும் திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்நிதியத்தின் மூலம் உருவாக்கப்பட்ட

வருமானம் அரச நிதியத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்காக போதனா வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்கு தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனுக்கு வட்டி செலுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 4,554.31 மில்லியனான நிதிஏற்பாடு திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,486.39 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 67.92 மில்லியன் திறைசேரி அங்கீகாரமின்றி பல்கலைக்கழகத்தின் ஏனைய நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

## பாதுகாப்பு சேவைகள் கட்டிட நிர்மாணம்

கேட்போர் கூடம், தொலைத்தொடர்பு கட்டிடம், பாதுகாப்பு கட்டிடம் மற்றும் முப்படை அங்கத்தவர்களின் தங்குமிட கட்டிடங்கள் போன்றவற்றுடன் கூடிய 4,700,000 சதுர அடி அளவிலான 10 மாடிகளுடன் 08 கட்டிடங்களுடன் கூடிய அங்குரேகொடை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பாதுகாப்பு சேவைகள் தலைமையகம் 10,250 படைப்பிரிவு சேவை உத்தியோகத்தர்களுக்கு அலுவலக இடவசதிகளையும் 6,850 பேருக்கு தங்குமிட வசதிகளையும் வழங்கும் நோக்காகக் கொண்டு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக ஊழியப்பங்களிப்பை முப்படை உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு வந்தன. 2012 ஆம் ஆண்டின் போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்நிர்மாணத்திற்காக ரூபா 25 பில்லியன் மதிப்பீடு பின்னர் காலரீதியில் விடயத்திற்குப் பொறுப்பான திருத்தங்கள் காரணமாக ரூபா 53.29 பில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. புதிய கிரய மதிப்பீட்டிற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2016 ஒக்தோபர் 04 ஆந் திகதி கிடைத்திருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன

- மீளாய்வாண்டிற்காக செயற்திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,546 தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,987 மில்லியன் அதாவது 53 சதவீதம் மாத்திரம் பயன்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,869 மில்லியன் முன்கொண்டு வரப்பட்ட பொறுப்புக்கள் காணப்பட்டதாக செயற்திட்ட பிரிவினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

- செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளுக்காக கேள்வி ஆவணங்கள் தயாரிப்பதில் தாமதம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நடவடிக்கைகளில் தாமதம் மற்றும் ஒப்பந்த அளிப்பிலான தாமதம் காரணமாக 21 பெறுகை செயற்பாடுகள் 244 நாட்கள் முதல் 1081 நாட்கள் வரையான காலவீச்சில் தாமதமாகியிருந்தது. மேலும் உத்தரவாதக் காலத்தை நீடிப்பதற்கு நேர்ந்த காரணத்தினால் 05 வழங்குனர் ஒப்பந்தகாரர்களால் காலத்தை நீடிக்கும் வேண்டுகோள் மற்றும் விலை தளம்பல்களுக்காக ரூபா 222.88 மில்லியன் மேலதிக தொகைக்காக வேண்டுகோள் விடப்பட்டிருந்தது.

## ஆள் அடையாள செயலகக் கட்டிடங்கள் செயற்திட்டம்

20 மாடிகளைக் கொண்ட ஆள் அடையாள செயலகக் கட்டிடம் 2012 ஜூலை மாதம் முதல் 03 வருடங்களில் பூர்த்தி செய்யும் அடிப்படையில் சர்வதேச ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்தது. இதற்காக 02 அரச வங்கிகள் மற்றும் 02 தனியார் வங்கிகள் மூலம் 2015 ஆகஸ்ட் மாதம் முதல் 15 வருடங்களில் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் ரூபா 7,550 மில்லியன் கடன் 2012 ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிர்மாணவேலை 2015 ஜூலை 31 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

- உரிய கடன்தொகை மீளச் செலுத்தும் காலம் ஆரம்பமாகிய 2015 ஆகஸ்ட் 01 ஆந் திகதியின் பின்னரும் மேலும் ரூபா 337.31 மில்லியன் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் அரையாண்டு செலுத்த வேண்டிய கடன் தவணை ரூபா 267.61 மில்லியன் முதல் ரூபா 278.87 மில்லியன் வரையிலும் வட்டி வீதம் 8 முதல் 13.12 சதவீதம் வரையான வீச்சில் அதிகரித்திருந்தன.

- கட்டிடத்தின் உரித்தைக் கையளித்தல் மற்றும் வாடகை பணத்தை அறவிடுவது தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவினால் கட்டிடத்தின் மதிப்பிடப்பட்ட பராமரிப்புச் செலவினமான ரூபா 11,597.31 மில்லியன் மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஒரு சதுர அடிக்காக ரூபா 37.65 வாடகை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் கட்டிடத்தின் 16 மாடிகள் 05 நிறுவனங்களினால் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எந்தவொரு நிறுவனத்துடனும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடவோ அல்லது வாடகை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## தந்திரோபாய ரீதியான பாதுகாப்பு தொலைதொடர்பு வலைப்பின்னல்

பாதுகாப்பு அமைச்சினால் முப்படைகளிடையே காணப்படும் நவீன தெலைதொடர்பு முறைமைக்கு சமமான விதத்தில் தொடர்ச்சியான பாதுகாப்பான மற்றும் மாற்று தொலைதொடர்பு வலைப்பின்னல் ஒன்றும் வழங்குவதனை நோக்கமாக கொண்டு தந்திரோபாய ரீதியான பாதுகாப்பு தொலைதொடர்பு வலைப்பின்னலொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

- மொத்த கிரய மதிப்பீடு ரூபா 1,192 மில்லியன் ஆக இருந்த போதிலும் ரூபா 1,297.25 மில்லியன் வரையும், திருத்தப்பட்டிருந்தது. அதற்காக உரிய தரப்பினரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 590 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 20.32 மில்லியன் மாத்திரம் எதிர்பார்க்கப்பட்டிருந்த செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.
- 2014 ஆம் ஆண்டு முதல் 2016 வரை மத்தியகால செலவின சட்டகத்தினுள் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தொலைதொடர்பு கோபுரங்கள்

நிர்மாணிப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் நில பரிசோதனை நடவடிக்கைகள் தாமதம் காரணமாக கோபுர நிர்மாண பெறுகை நடவடிக்கைகள் தாமதிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக நுண் அலைவரிசை வானொலி தொடர்பாடல் முறைமை கொள்வனவிற்கான பெறுகை செயற்பாடுகளும் தாமதிக்கப்பட்டிருந்தன. மேலும் இதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 22 மின்பிறப்பாக்கிகளில் 12 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய இடங்களில் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

### சாலாவ முகாம் அமைந்தள்ள ஆயுதக் களஞ்சியத்தில் இடம்பெற்ற வெடிப்பினால் ஏற்பட்ட நட்டங்கள்.

2016 யூன் 05 ஆந் திகதி இலங்கை தரைப்படையின் சாலாவ முகாமில் அமைந்துள்ள ஆயுதக் களஞ்சியத்தில் இடம்பெற்ற வெடிப்பினால் ஏற்பட்ட நட்டங்கள் தொடர்பாக நி.பி.104 (3) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட அண்ணளவான நட்டம் ரூபா 12,735.45 மில்லியன் என ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் கண்டறியப்பட்டது. பாதுகாப்பு அமைச்சினால் இந்த சம்பவம் தொடர்பாக பரிட்சித்து அறிக்கையிடுவதற்கு நியமிக்கப்பட்ட ஆரம்ப பரிசோதனை நீதிமன்ற சபையினால் பரிசோதனை நடவடிக்கை 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் நட்டத்தை குறிப்பாக வெளியிட முடியாமல் இருந்தது.

### இலங்கை தரைப்படையால் பாரா III கப்பலை இரும்பிற்காக கைதவிர்த்தல்

வடக்கை விடுவிக்கும் மனித நேய செயற்பாட்டின் போது முள்ளி வாய்க்கால் கடற் பரப்பில் அகப்பட்டிருந்த பழுதடைந்த நிலைமையில் காணப்பட்ட பாரா III கப்பலை இலங்கை தரைப்படையினால் இரும்பிற்காக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 80.3 மில்லியன் கூறுவிலை சமர்ப்பித்த உள்ளூர் கேள்விதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்தக்காரரால் வெட்டி அகற்றப்பட்ட இரும்பின் அளவிற்காக ரூபா 47 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், அச்செயற்பாடு இடைநிறுத்தப்பட்டிருந்தது. கப்பலை விற்றதால் கிடைத்த ரூபா 15 மில்லியன் நமக்காக நாம் நிதியத்திற்கும் ரூபா 32 மில்லியன் இராணுவத் தளபதி நலன்புரி நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பின்னர் அரசின் வருமானத்திற்கு 2016 நவம்பர் 17 ஆந் திகதி செலவு வைக்கப்பட்டிருந்தது.

கடலில் மூழ்கிய கப்பலின் நீருக்கு வெளியேயுள்ள பகுதிகளை வெட்டி அகற்றுவதனை விட நீரில் மூழ்கிய பகுதியை வெட்டி அகற்றுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய கூடிய கிரயமொன்றுடன் கூடிய தொழில்நுட்ப முறைமைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட்டு அதற்குரிய நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாத காரணத்தினால் இலகுவாக வெட்டி அகற்றக்கூடிய பகுதியை அகற்றி சிரமமான பகுதிகளை கைவிடுவதற்கு கொள்வனவாளருக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய பகுதியை அகற்றுவதனை விட அவ்வாறே வைத்திருப்பதால் மீன்வளங்கள் பெருகுவதால் பொருளாதார ரீதியாக சாதகமாக இருப்பதால் கப்பலின் எஞ்சிய பகுதியை அவ்வாறு வைத்திருப்பதாக பின்னர் விளக்கமளிக்கப்பட்டிருந்தது. அதற்காக நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய சுற்றாடல் அறிக்கையையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 30

ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கைப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### சொத்துக்களை கையேற்றலும் கைதவிர்த்தலும்.

இலங்கை கடற்படையால் 1995 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பாவிக்க முடியாத நிலைமைக்கு உட்பட்டிருந்த முறையே 239.97 மில்லியன் பெறுமதியான 101 இயந்திர துப்பாக்கி (Machine Gun) மற்றும் ரூபா 47.97 விமான துப்பாக்கி (Anti – Aircraft Gun) பரிசோதனை என்பவற்றில் சபையொன்றின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்டு கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்ற வகையில் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. 1999 ஆம் ஆண்டின் போது 2.03 மில்லியன் ஸ்ரேலிங் பவுன் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்ட கப்பலொன்று 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் வடமேல் மாகாண கடற்படை கட்டளை பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதனை கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை கடற்படையால் ஏனைய நிறுவனங்களிடமுள்ள 5,821 ஏக்கர் காணி, 219 கட்டிடங்கள் மற்றும் 55 மோட்டார் வாகனங்கள் என்பவற்றை முறையாக கையேற்காமல் இலங்கை கடற்படையின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### மோட்டார் வாகனங்களின் பராமரிப்பு, நவீனமயப்படுத்தல் மற்றும் திருத்த வேலைகள்.

வவுனியா விமானப்படை முதல் முகாமில் 2 எம்டிஆர் மற்றும் டபிள்யூ பிரிவின் மூலம் மோட்டார் வாகனங்களை பராமரித்தல், நவீனமயமாக்குதல் மற்றும் திருத்தியமைத்து மீண்டும் தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2016 திசெம்பர் 02 ஆந் திகதி வரையிலும் திருத்த வேலைகளுக்காக 55 மோட்டார் வாகனங்கள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் 19 மோட்டார் வாகனங்கள் அளவில் திருத்தியமைக்கப்பட்டு மீள கையளிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே, அதன் நடவடிக்கைகளை முறையாகவும் செயற்திறனாகவும் பேணிச் செல்வதற்கு தேவையான பதவியணியில் 33 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதன் காரணமாக 10 மோட்டார் வாகனங்களின் எஞ்சின்களின் திருத்த வேலைகள் ரூபா 4.74 மில்லியனான கிரயத்தில் தனியார் நிறுவனமொன்றுக்கு 2016 யூன் 05 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது.

# அரசாங்க முயற்சிகள்

பொது முயற்சிகள் என்பது தமது பெயரில் உடன்படிக்கை செய்வதற்கு அதிகாரமுள்ள, வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி மற்றும் செயற்பாட்டு அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள, இலாபமீட்டுதல் அல்லது கிரயத்தை ஈடுசெய்யும் விதத்தில் சாதாரண வணிகச் செயற்பாடுகளில் ஏனைய தரப்பினர்களிற்கு பொருட்கள் சேவைகளை விற்பனை செய்கின்ற மற்றும் அரசாங்கத் துறையிலுள்ள தரப்பினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனமொன்றாகும் என அறிமுகப்படுத்தலாம். பயன்பாட்டுச் சேவைகளை வழங்குகின்ற வர்த்தக முயற்சிகளும் நிதி நிறுவனங்களும் பொது முயற்சிகளில் உள்ளடங்குகின்றன. சில அரசாங்க முயற்சிகள் சமூக சேவைகளை வழங்குவதற்கான பொறுப்புடன் குறித்த தரப்பினருக்கும் சமூகப் பிரிவினருக்கும் விலையினை அறவிடாது அல்லது குறிப்பிடத்தக்க குறைந்த கட்டணத்தின் கீழ் பொருட்கள் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் செயற்பட்ட போதிலும், சாதாரணமாக இலாபமீட்டும் செயற்பாடாகவே உள்ளது. அதற்கமைய, அவற்றின் சொத்துக்களின் மீது திரும்பலொன்றை உழைத்தல் எதிர்கால அபிவிருத்திக்கு தேவையாக உள்ளது. ஒழுங்குபடுத்தல், மேம்படுத்தல் மற்றும் கல்விசார் அரசாங்க முயற்சிகள் பாரம்பரியமாக வர்த்தகத் துறையில் உள்ளடங்குவதில்லை என்பதுடன், அந்த முயற்சிகள் இலாபமீட்டாத அமைப்புக்கள் எனக் கருதப்படுவதுடன், இலாபத்தன்மை நீங்கலான ஏனைய நியதிகளைப் பயன்படுத்தி அவற்றின் செயலாற்றல்களை பரீட்சித்தல் வேண்டும். பின்வரும் தலைப்புக்களின் கீழ் இலங்கையிலுள்ள அரசாங்க முயற்சிகளை விரிவாக வகைப்படுத்த முடியும்.

- விசேடவகை வணிக முயற்சிகள்
- நியதிச்சட்ட மற்றும் நியதிச்சட்ட ரீதியற்ற நிதியங்கள்
- அரசுக்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனிகள்
- ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணித்தல் நிறுவனங்கள்
- பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சியளித்தல் நிறுவனங்கள்
- ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்

மின்சாரம், நீர், பெற்றொலிய உற்பத்திகள், தொலைத் தொடர்பு மற்றும் விமான சேவைகள் போன்ற பொருளாதாரத்தின் முக்கியமான பகுதிகள் பொது முயற்சிகளால் தந்திரோபாய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன. பொருளாதாரத்தின் ஒட்டு மொத்த உரிமைத்துவம் மற்றும் போட்டித்தன்மை என்பன தொடர்பில் சகல அரசாங்க முயற்சிகளினதும் நிறுவன ரீதியான கட்டுப்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அரசாங்க கம்பனிகள் தவிர்த்து 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 344 பொது முயற்சிகளின் மொத்த சொத்துக்களின் தொகுப்பு முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவற்றுடன் ஒப்பிட்டு உரு 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு12 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு 2016 இல் பொது முயற்சிகளின் மொத்தச் சொத்துக்கள்

2016 ஆம் ஆண்டில் பொது முயற்சிகளிற்கு ஏறத்தாழ ரூபா 55.4 பில்லியன் அரசாங்க மீண்டெழும் மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அது அரசாங்கத்தின் மீண்டெழும் செலவினத்தில் 3.13 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன், நேரொத்த முன்னைய ஆண்டில் அவை முறையே ரூபா 64.3 பில்லியன் மற்றும் 3.84 சதவீதமாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக மூலதனச் செலவினத்திற்காக மீளாய்வாண்டில் ஏறத்தாழ ரூபா 230.2 பில்லியன் மூலதன மானியங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அது அரசாங்கத்தின் மொதத் மூலதன செலவினத்தில் 17.24 சதவீதமாக காணப்பட்டது. நேரொத்த முன்னைய ஆண்டில் அவை முறையே ரூபா 212.6 பில்லியன் மற்றும் 13.90 சதவீதமாகக் காணப்பட்டன.

## செயலாற்றல் மதிப்பீடு

பொது முயற்சிகளின் கணக்காய்வு நிதிசார் மற்றும் இணங்கியொழுகுதல் கணக்காய்வுகளுடன் மட்டும் வரையறுக்கப்பட்டவையல்ல ஆனால் அவற்றின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வினைத்திறன், சிக்கனம் மற்றும் பயனுறுதி என்பவற்றையும் கருத்திற் கொண்டதாகும்.

பொது முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி மீதான கணக்காய்வு சில நியமங்கள் மற்றும் பிரமாணங்களின் அடிப்படையில் நடாத்தப்படுகின்றன. இலாபமே செயலாற்றலின் பிரதானமான பிரமாணம் அல்ல என்பதுடன் பொது நிதிகளின் சிக்கனமான மற்றும் வினைத்திறனான பயன்பாடு மற்றும் குறிக்கோள்களை அடைதல் என்பன மீது முகாமைத்துவத்தின் செயலாற்றல் மிக முக்கியமானதாகும். குறிக்கோள்களில் பொது முயற்சிக்குப் பொது முயற்சி வேறுபடுகின்றது. எந்தக் குறிக்கோள்களிற்காக ஒருபொது முயற்சி நிறுவப்பட்டதோ அதன் அளவுக்குக் கொண்டுவருவதற்காக பொது முயற்சியின் நிதி மதிப்பீட்டுப் பகுப்பாய்வு செயற்படுத்தப்படுகின்றது. கணக்காய்வின் முதற்தர கடமைகளில் ஒன்று, ஒரு முயற்சியின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான பிரமாணத்தை இனங்காணுவதாகும். உதாரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற உற்பத்தி முயற்சியின் விடயத்தில குறிக்கோள் மற்றும் முதலீட்டு இயலளவு, கிரயங்கள் மற்றும் காலப்பட்டியல்கள், நுகர்ச்சியின் சாதாரண அளவுகள், விளைவு, உற்பத்தித்திறன், கிரமான வருவாயின் வீதம் போன்றன செயலாற்றலை அளவிடுவதற்கான அளவுகோலாக காணப்படுகின்றன. பொது முயற்சிகளிடமுள்ள நீண்டகால மற்றும் குறுங்கால மூலதனத்தினதும் செயற்பாட்டு திட்டங்களினதும் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் ஏனைய முக்கயமான பண்புகளாகும்.

பௌதீக செயலாற்றலை மதிப்பாய்வு செய்கையில் பொருத்தமான சூழ்நிலையில்

நிறுவனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட இயலளவு ஒரு ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுகோலாக உள்ளது. எவ்வாறிருந்த போதிலும், தரப்படுத்தப்பட்ட இயலளவைப் பயன்படுத்துவது, மூலப்பொருட்கள், மற்றும் பயன்பாட்டுச் சேவைகள், விளைவுகள் மற்றும் நிராகரித்தல் அதேபோல பேணுதல் என்பவற்றுக்கான பொருத்தமான பராமரிப்பு மற்றும் நுகர்ச்சியுடன் சேர்த்து மதிப்பிடப்படுகின்றது. செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு முக்கிய பயன்பாடு, நுகர்வுகள், உற்பத்தித் திறன், விளைவுகள் முதலியவற்றின் நியமான அளவின் அடைப்படையில் நியம அல்லது இலக்குக் கிரயத்தை தீர்மானிப்பதாகும். நிறுவனக் கட்டுப்பாடு, பொது முகாமைத்துவம், நிதிமுகாமைத்துவம், கொள்வனவு முகாமைத்துவம், நிர்மாண முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக பொது முயற்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்கள் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த வழிகாட்டல்கள் முயற்சியின் செயலாற்றல் மற்றும் முறைமைகளை மதிப்பீடு செய்வதற்கான இன்னொரு அடிப்படையை வழங்குகின்றது. உள்ளக மற்றும் புறநிலை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய தொழில்நுட்பக் கற்கைகள் மற்றும் நியமங்கள் இந்த வழிகாட்டல்களிற்கு அடிப்படையிலமைந்த ஏனைய நியதிகளாக உள்ளன.

செயலாற்றல் கணக்காய்வு நடைமுறைத் தேவையாக உள்ளது. நிதிக் கணக்காய்வில் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்குகளின் சரியான தன்மை தொடர்பில் சான்றுறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதனைப் பரீட்சித்தல் செயலாற்றல் கணக்காய்வின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த மூன்று காரணிகளிற்கும் மேலாக தற்போது சுற்றாடல் தாக்கம் தொடர்பாகவும் பரிசோதிக்கப்படுகின்றது. செயலாற்றல் கணக்காய்வுக்காக பல்வேறு பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

- பணப்பெறுமதிக் கணக்காய்வு
- முகாமைத்துவக் கணக்காய்வு
- செயற்பாட்டுக் கணக்காய்வு
- 3 "Es" கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் தற்கால கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக நிதிக் கணக்காய்விற்கு நிகரான இடமொன்று செயலாற்றல் கணக்காய்விற்கும் வழங்கப்பட்டு அதன் மூலம் பொது முயற்சிகளிற்கு வழங்கப்படுகின்ற நிதிகளும் ஏனைய வளங்களும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் விரிவாக பகுப்பாய்வு செய்யப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் பொது முயற்சிகள் தொடர்பில் வழங்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயாலற்றல் கணக்காய்விற்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், தற்போது சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பாரிய சிக்கலை ஏற்படுத்தியுள்ள மற்றும் பொது மக்களின் கவனம் திரும்பியுள்ள சர்ச்சைக்குரிய சில சம்பவங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றினால் நாட்டிற்கும், பொதுமக்களிற்கும், சுற்றாடலுக்கும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் சில செயலாற்றல் கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் செயற்படுத்தப்படுகின்ற வெளிவாரிக் கணக்காய்வு கணக்களிப்பொறுப்பின் ஒரு கருவியாக உள்ளது. பொது முயற்சிகளின் முகாமைத்துவம், அவற்றின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி என்பவற்றை முன்னேற்றுவதற்கு உதவுவதே பொது முயற்சிக் கணக்காய்வின் முக்கியமான நோக்கமாகும். நிதி மற்றும் தொழிற்பாட்டுக் குறைபாடுகள், முறைமைகளின் போதாத தன்மை அல்லது வினைத்திறனின்மை, குறைவான செயலாற்றல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை, என்பவற்றை வெளிப்படுத்துவதன் மூலமும் செயலாற்றலின் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்களை அடைய முடியாமைக்குரிய காரணங்களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலமும் இது எய்தப்படுகின்றது. நிதிச் செயலாற்றல் பௌதீக செயலாற்றலுடன் சம்பந்தப்பட்டுள்ளதுடன் விளைத்திறன் மற்றும் சிக்கன செயற்பாடுகள் மற்றும் வளங்களின் முகாமைத்துவம் போன்ற விடயங்கள் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்படுகின்றன. நிறுவனங்களின் முகாமைத்துவத்துடன் எனது உத்தியோகத்தர்களினால் நடாத்தப்பட்ட

முறையான கூட்டங்களில் அவசியமாகவுள்ள முறைமைகள் மற்றும் செயற்பாடுகளை முன்னேற்ற வேண்டிய தேவை குறித்து கலந்துரையாடப்படுகின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாதகமான கண்டுபிடிப்புகளிற்கு பொதுமுயற்சிகளின் முகாமைத்துவமும் பணிப்பாளர் சபையும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்தல் முக்கியமானதாகும். ஒரே விடயம் தொடர்பில் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படுகின்ற பாதகமான காண்புகள் மீண்டும் மீண்டும் இடம்பெறுதல் முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்படுவதற்கான அதிக வாய்ப்புக்கள் என்பதைக் காட்டுகின்றது.

## நிதிச் செயலாற்றல்

கிடைக்கக்கூடியதாகவுள்ள தகவல்களின் படி 338 பொது முயற்சிகளிற்குரிய தகவல்கள் கீழே அட்டவணை 11 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | நிறுவனத்தின் விபரம் | நிறுவன எண்ணிக்கை | நட்டத்தில் இயங்கிய நிறுவனங்கள் | இலாபத்தில் இயங்கிய நிறுவனங்கள் | தகவல்கள் சமர்ப்பிக்காத நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| (i) | ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாக நோக்கற்ற நிறுவனங்கள் | 65 | 17 | 27 | 21 |
| (ii) | நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 53 | - | 23 | 30 |
| (iii) | ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள் | 25 | 1 | 18 | 06 |
| (iv) | விசேட வணிக முயற்சிகள் | 54 | 6 | 33 | 15 |
| (v) | பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவனங்கள் | 62 | 17 | 23 | 22 |
| (vi) | அரசாங்கத்திற்குச் சொந்தமான வரையறுக்கப்பட்ட கம்பனிகள் | 79 | 13 | 42 | 24 |
| | **மொத்தம்** | **338** | **54** | **166** | **118** |

அட்டவணை 11 - 338 பொது முயற்சிகள் தொடர்பான தகவல்கள்

மேற்படி தகவல்களின் படி 54 பொது முயற்சிகளின் நிதி விளைவுகள் பற்றாக்குறையை காண்பிப்பதுடன், அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 17,576 மில்லியனாகும். குறிப்பிடத்தக்களவு நிதிப்பற்றாக்குறையுடைய நிறுவனங்களாக பனை அபிவிருத்திச் சபை, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை மற்றும் 17 பல்கலைக்கழகங்கள் ஆகியன காணப்பட்டன. முன்னைய ஆண்டின் நிதி விளைவுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் தேசிய அடிப்படைக் கற்கைகள் நிறுவனம், ரணவிரு சேவா அதிகாரசபை, இலங்கை மன்றக் கல்லூரி போன்றன நிதிப் பற்றாக்குறையினை குறைத்துக்கொள்வதில் வெற்றிகண்டிருந்தன.

அத்துடன், 166 நிறுவனங்கள் ரூபா 383,821 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி மகையினை ஈட்டியிருந்தன. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகத்தின் நிதி மிகையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியினைக் காண்பித்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய இரத்தினக்கல் தங்கநகைகள் அதிகாரசபை மற்றும் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தின் நிதி விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்திருந்தன.

## நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

பொது முயற்சிகளின் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தகவல்களின் பொழிப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக பொது முயற்சிகளால் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக்கூற்றுக்கள் தருகின்றனவா என்பது பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுதந்திரமான உறுதிப்படுத்தலை வழங்குகின்றார். நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் வடிவில் இந்த உறுதிமொழி வழங்கப்படுகின்றது. பொது முயற்சிகளின் நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றல் நிதிக்கூற்றுக்கள் ஊடாக நியாயாபூர்வமாக பிரதிநிதித்துவப்படுகின்றனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது தற்போது சம்பந்தப்பட்ட சர்வதேச கணக்கீட்டு நியாயங்களுடன் இணங்கியதாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் அல்லது நிதி அறிக்கையிடும் நியமங்களுடன் இணங்கிய வகையில் அவை உள்ளனவா அல்லது இல்லையா என்பதைபற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முடிவு அபிப்பிராயத்தினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

பொருட்படுத்தக்கூடிய தவறுகள் அல்லது இணக்கமின்மை மற்றும் நோக்கெல்லை வரையறைகளும் கணக்காய்வின் போது எழுகின்ற சட்டரீதியான தன்மைகளை கருத்திற்கொண்ட பின்னர் நான்கு வகையான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவையாவன

முனைப்பழியற்ற அபிப்பிராயம்
நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படாதவிடத்து வழங்கப்படுகின்றது.

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் (தவிர்த்த அபிப்பிராயம்)
நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இனக்கமின்மைகள் காணப்படுமிடத்தும் அவை நிறுவனத்தின் நிதி விளைவினை திரிவுபடுத்தப்படுமளவிற்கு தாக்கம் செலுத்தாதிருப்பின் வழங்கப்படுகின்றது.

பாதகமான அபிப்பிராயம்
நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு முடியாதவாறு நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருப்பின் இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

மறுப்பு அபிப்பிராயம்
தெரிவிசெய்யப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், அவை கையாளப்பட்ட முறை அல்லது நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களின் போதுமான தன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கும் கணக்காய்விற்கும் இடையே பொருண்மையான / புருடத்துவ இனக்கமின்மை மற்றும் தவறான கூற்றுக்கள் காணப்படுமிடத்து இந்த அபிப்பிராயம் வழங்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கையில் அது மிகவும் நியாயமானதாக காணப்படுவதற்காக கணக்காய்வின் போது பயன்படுத்த முடியுமான கணனிமுறைக் கணக்காய்வு மென்பொருளினதும் உதவி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. கணக்குகளை பரிசோதித்து பெற்றுக்கொள்ளடுகின்ற மாதிரிகளின் அடிப்படையிலும் ஒட்டுமொத்த பொருண்மையான விடயங்களின் சதவீதமாக திருத்தப்படாதுள்ள தவறான கூற்றுக்களின் கூட்டுத்தொகை சீராக்கப்பட்டு அதன் விளைவின் அடிப்படையிலும் கணக்காய்வு அபிப்பிராயம் தீர்மானிக்கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டிற்காக 337 பொது முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் மீது வழங்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழேயுள்ள அட்டவணை 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அபிப்பிராயத்தின் வகை | 2016 | 2015 |
|---|---|---|
| முனைப்பழியற்ற | 70 | 83 |
| முனைப்பழியுள்ள | 108 | 184 |
| மறுப்பு | 06 | 11 |
| பாதகமான | 09 | 13 |
| தீர்மானிக்கப்படாதவை | 144 | 46 |

*அட்டவணை 12 பொது முயற்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயங்கள்*

## நிலையான சொத்துக்களின் பதிவேடுகளின் பேணுகை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் (பீபீ) எனப்படுவது உற்பத்தியின் போது அல்லது சேவை வழங்கலின் போது பயன்படுத்தப்படுகின்ற மற்றும் ஏனைய தரப்பினருக்கு வாடகைக்கு விடுவதற்காக அல்லது நிர்வாக நடவடிக்கைகளிற்காக வைத்திருக்கப்பட்டுள்ள சொத்துக்களாவதுடன் அச் சொத்துக்கள் ஒரு அறிக்கையிடல் காலத்திற்கும் மேற்பட்ட காலப்பகுதிக்கு பயன்படுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற நிலையான சொத்துக்களாகும். அத்துடன், நடைமுறைச் சொத்துக்கள் எனப்படுபவை செயற்பாட்டுச் சுற்றோட்டத்தில் விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அல்லது அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் பன்னிரண்டு மாத காலத்தில் தேறுமென எதிர்பார்க்கப்படுகின்ற சொத்துக்களாகும். சகல நிலையான சொத்துக்களிற்கும் திருத்தமாக இலக்கமிட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை உரியவாறு பேணாதிருப்பின் சொத்துக்களை சரிவர இனங்காண்பதற்கு முடியாது போவதுடன், அவை தொடர்பான பௌதீக மெய்மையாய்வும் தோல்வியில் முடியவடைகின்றமை அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு நிலையான சொத்து தொடர்பான விபரங்களை வைத்திருக்கும் நடைமுறையால் சொத்துக்களின் கட்டுப்பாடு உறுதிப்படுத்தப்படுவதுடன் சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்படுவதனை தடுப்பதற்கும் நிறுவனத்திற்கு உதவியாக அமைகின்றது. பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்தல், குத்தகை மற்றும் காப்புறுதி நடவடிக்கைகளிற்காக வசதியளித்து சொத்துக்களின் சரியான பெறுமதியினை வைத்திருக்கும் செயற்பாடாகவும் உள்ளது.

நிலையான சொத்துப் பதிவேடு முகாமைத்துவத்தின் தேவைகளுக்கு உகந்த வகையில் சரியான பூரணமான மற்றும் விளக்கமான அறிக்கைகளை உருவாக்குகின்றது. கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு உரித்தாக அல்லது அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள பணங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் பாதுகாப்பாக பேணப்படுவதற்கு போதியளவில் முறைப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனையும் அவை அவ்வப்போது மெய்மையாய்வு செய்யப்படுவதனையும் உரிய பிரமாணங்கள் மற்றும் அறிவுறுத்தல்களிற்கு இணங்குகின்றன என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். இருப்பினும் அநேக நிறுவனங்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை பேணாதிருப்பதுடன், நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வினையும் மேற்கொள்ளாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

அநேகமான அரசாங்க நிறுவனங்களில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட சொத்துக்கள் விளைவற்றுக் காணப்படுவதுடன், அச் சொத்துக்கள் 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்க்கப்படாமை காரணமாக அச் சொத்துக்களைவ ிற்பனை செய்வதன் மூலம் கிடைத்திருக்க வேண்டிய வருமானம் அரசாங்கத்திற்கு இழப்பாகியிருந்ததுடன், அச்

சொத்துக்களை பாதுகாப்பதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் மேலதிக செலவினத்தை செய்ய வேண்டியேற்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், தேசிய வறுமை ஒழித்தல் இயக்கச் சபை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை என்பன இந்த நிலைமைக்கு உதாரணங்களாகும்.

பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களால் பூர்த்தியாக்கற் சான்றிதழ் வழங்குவதில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாக நடைபெறும் வேலைகளை நிலையான சொத்துக்களின் மூலதனமாக்கலில் குறிப்பிடதக்க தாமதங்கள் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமை நீர்வழங்கள் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர்ச்செயற்திட்டங்கள் மற்றும் இலங்கை மின்சார சபையால் பூர்த்திசெய்யப்பட்ட மின் சக்தி செயற்திட்டங்களில் பிரதானமாக அவதானிக்கப்பட்டது. இதே நிலைமை வீதி அபிவிருத்தி அதிகாரச சபையால் (ஆர்டிஏ) பூர்த்தியாக்கப்பட்ட தேசிய அதிவேக வீதிகள் மற்றும் ஏனைய வீதி செயற்திட்டங்கள் தொடர்பிலும் அவதானிக்கப்பட்டது. இந்த வீதிகளின் கிரயங்கள் மூலதனமாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் இந்த நிலைமை பின்னர் சீராக்கப்பட்டிருந்ததுடன் ஆர்டிஏ இன் நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட்டு பிரதிபலிக்கப்பட்டிருந்தன.

அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழு என்பவற்றுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான பதிவேடுகள் பூரணமற்று காணப்பட்டதுடன் அவற்றின் உள்ள தன்மை மற்றும் உரித்துடைமையை உறுதிபடுத்துவதற்காக கணக்காய்விற்கு அவற்றின் அமைவிடம் மற்றும் பரப்பளவுடன் விபரமான பட்டோலையை வழங்குவதற்கு முடியாது இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இருப்பினும், குறிப்பிடத்தக்களவு நிறுவனங்கள் தமது சொத்துக்களை கட்டாயமாக நியாய பெறுமதி அடிப்படையில் கொண்டு வருவதற்காக புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றி தமது சொத்துக்களை இணங்கண்டு அரசாங்க பிரதான விலை மதிப்பீட்டாளரைக் கொண்டு பெறுமதியினை மதிப்பீடு செய்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

## நிறுவனங்களால் செலுத்தப்படும் உழைக்கும் போதே செலுத்தும் வரி

சில பொது முயற்சிகள் வருமான வரிச் சட்டங்களிலுள்ள அடிப்படை நியாயத்துவத்திற்கு முரணாக ஊழியர்களிடமிருந்து அறவிடாது தமது சொந்த நிதிகளிலிருந்து ஊழியர்களிற்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரியை (பீஏவைஈ) செலுத்தியிருந்தன. இது தொடர்பில் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளிற்கு மேலதிகமாக 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பிரமாணங்களிற்கு இணங்க வரி செலுத்த வேண்டியுள்ள ஊழியர்களின் உழைப்புக்களிலிருந்து உ.போ.செ. வரியினை அறவிடுதல் வேண்டும். வரி செலுத்த வேண்டியுள்ள ஊழியர்களின் உழைப்புக்களிலிருந்து உ.பெ.செ. வரியினை அறவிட்டு அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் பணிப்பாளர் சபையினதும் உயர் முகாமைத்துவத்தினதும் பொறுப்பாகும். இருப்பினும் 155 பொது முயற்சிகளினால் உ.போ.செ. வரிச்சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி தமது உழைப்பினை பயன்படுத்தி உ.போ.செ. வரியினை செலுத்தியிருந்தன. சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக 2015 ஆம் ஆண்டில் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 3,421.9 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டில் செலுத்திய தொகை ரூபா 3,347 மில்லியனாக காணப்பட்டது. அதன் பிரகாரம் உ.பொ.செ வரியின் நோக்கம் நிறைவேறாதிருந்தமை இதன் மூலம் அவதானிக்கப்பட்டது.

## வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்காக 290 பொது முயற்சிகள் தமது நிதிக்கூற்றுக்களை 2017 செப்தெம்பர் 30 அளவில் கணக்காய்விற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தன. எனினும் 2016 திசெம்பர் 31 இல் நிதி ஆண்டு முடிவடைந்தது 09

மாதங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட 54 நிறுவனங்களால் அந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2002 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் திர்மானத்திற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் கிடைத்த திகதியிலிருந்து 30 நாட்களிற்குள் குறித்த பொது முயற்சிக்கு கணக்காய்வு அறிக்கையினை சமர்ப்பிக்கக் கூடிய விதத்தில் பொது முயற்சிகளினால் அவற்றின் வருடாந்த நிதிக்கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் குறித்த நிதி ஆண்டு முடிவுற்று 60 நாட்களிற்கிடையில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அவற்றின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உரிய நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குகிடையில் பாராளுமன்றித்தில் முன்வைத்தல் வேண்டுமென்றும் திறைசேரிச் செயலாளரின் 2002 மே 24 ஆம் திகதிய பீஎவ்/பீஈ.21 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையினால் வலியுறுத்தப்பட்டிருந்தது.

## தொழில்சார் பதவியணியினரை சேர்த்தல் மற்றும் தக்க வைப்பதற்கான சுய அதிகாரமின்மை

வர்த்தக தீர்மானங்களை மேற்கொள்கையிலும் பயிற்சிபெற்ற பதவியணியினரை சேர்த்துக்கொள்ளல் மற்றும் தக்கவைத்துக் கொள்கையிலும் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு அங்கீகார தேவைப்பாடுகள் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகளிற்கும் பாதகமாக தாக்கம் செலுத்துகின்றன. இந்த வரையறைகள் காரணமாக அதிகமான முயற்சிகள் உயர்ந்த சம்பளங்ளுடன் ஒப்பந்த அடிப்படையில் உயர் தொழிலாளர்களை சேர்த்துக்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. தனியார் துறையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைந்த சம்பள அளவுத்திட்டம் காரணமாக விசேடமாக கணக்காளர்கள், பொறியியலாளர்கள் விலைமதிப்பீட்டாளர்கள் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கும் தொழில்சார் தகுதி வாய்ந்தவர்களை தக்கவைத்துக் கொள்வதற்கும் பொது முயற்சிகள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

## அரசாங்கத்திற்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகள்

பொது முயற்சிகளாக அரசாங்கத்திற்குச் சொந்தமான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் சிலவும் நாட்டில் உள்ளன. அக் கம்பனிகளின் பங்குகளின் பெரும் பகுதி அரசாங்கத்திற்கு (பொதுத்திறைசேரி) சொந்தமாக உள்ளது. இந்தக் கம்பனிகள் கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் கம்பனிகள் சிலவேளை முற்றாக அரசாங்கத்திற்கு சொந்தமானதாகவோ அல்லது பொது தனியார் கூட்டுமுயற்சியாக செயற்படுகின்ற பங்குமூலதனத்தில் குறித்த சதவீதம் அரசாங்கத்திற்குச் சொந்தமாகக் கொண்டவையாகும். முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான முயற்சிகளைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளில் பலவற்றைத் தவரிப்பதற்கு தனியார் துறையின் ஈடுபாடு கட்டுப்பாட்டுக் கருவியாக செயற்படுத்தப்படுகின்றது. பொதுத் திறைசேரியின் பங்குபற்றுதலின்றி குறித்த தனியார் முயற்சியினால் மூலதனம் ஈடுபடுத்தப்படுகின்ற துணைக் கம்பனி அல்லது உப கம்பனியாக பொது முயற்சிகளினால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகளும் காணப்படுகின்றன.

சில கம்பனிகள் பரிசீலனைக்காக அழைக்கப்பட்ட போது பொது முயற்சிகளின் குழு முன்னிலைகளில் தோன்றுவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தன. அரசாங்கத்தினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொதுவளங்கள் முற்றாகவோ அல்லது பகுதியளவிலோ வழங்கப்படுவதுடன் எழுத்து மூல அதிகாரச்சட்டத்தினாலோ அல்லது அதன் கீழோ நிறுவப்பட்ட எவையேனும் அல்லது அதிகாரசபையை உள்ளடக்குவதற்கு வரைபு கணக்காய்வு மசோதாவில் திருத்தம் ஏற்கனவே பிரேரிக்கப்பட்டுள்ளது. அண்மைய ஆண்டுகளில் சில சமயங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறாமலும் கூட பொது முயற்சிகளால் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை கூட்டிணைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

பங்குகளில் 100 சதவீதம் அரசாங்கத்திற்கோ அல்லது ஒரு பொது முயற்சிக்கோ உடைமையாக உள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின்

பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திற்கு உள்ளதுடன் இலாபத்தில் பங்கு பெறுவதற்கு தனியாள் எவருக்கும் உரித்தில்லை. அது உண்மையில் அரசாங்க கூட்டுத்தாபனமொன்று என்ற வகையில் அரசாங்கத்தினால் பங்குகள் சாதாரணமாக விற்பனை செய்யப்படுவதன் மூலம் சாதாரண “தனியார் துறை” கம்பனியாக அதனை மாற்றுவதில், போதுமானதாக இருப்பதனை ஒத்திருக்கும். பங்குகளில் 50 சதவீதத்திலும் குறைவாக விற்பனை செய்கையில் கூட கம்பனியின் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அதிகாரம் அரசாங்கத்திடமே உள்ளது. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்குகள் விற்பனை செய்யப்படுகையிலும் கூட அரசாங்க தாபனக் கொள்கைகளிற்கு செல்வாக்குச் செலுத்துவதற்கு போதுமானளவு அதிகாரம் உள்ளது. எனினும் அதிகளவான பொதுக் கூட்டுத்தாபனங்கள் துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையில் பெரும்பான்மையானோரை அதன் அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்குகின்ற போதிலும் அவற்றின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நிர்வாகத்திற்காக நடைமுறைப்படுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## ஏனைய இலாப நோக்கற்ற பொது முயற்சிகள்

ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி மற்றும் ஏனைய பயிற்சி நிறுவகங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் என்பவற்றைக் கொண்டதாக இந்த முயற்சிகள் உள்ளன. இந்த நிறுவனங்களின் பிரதான வருமான மூலமாக இருப்பது வருடாந்த அரசாங்க மானியம் அல்லது சில பொருட்கள் மற்றும் சேவைகளில் அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட வரியாகும். இந்த 152 நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களின் படி, 2016 ஆம் ஆண்டில் பொதுத்திறைசேரியால் இந்த நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 43.8 பில்லியன் தொகையான மீண்டுவரும் மானியங்களைக் கருத்திற்கு எடுத்த பின்னர் ரூபா 40.8 பில்லியன் கூட்டுமொத்த வரிக்கு முந்திய மிகைகளை உழைத்திருந்தன. எனினும், பொதுத்திறைசேரியால் இந்த நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட மீண்டுவரும் மானியங்களைக் கருத்திற்கு எடுத்த பின்னரும் கூட 35 நிறுவனங்கள் ரூபா 2.8 பில்லியன் தேறிய பற்றாக்குறையினை ஈட்டியிருந்தன.

# உள்ளூராட்சி

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் 335 இல் 23 மாநகர சபைகள் நகர சபை கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 252) ஏற்பாடுகள் மூலமும், 41 நகர சபைகள் நகரசபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) ஏற்பாடுகள் மூலமும், 271 பிரதேச சபைகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் ஏற்பாடுகள் மூலமும் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்படுவதுடன், இந்த உள்ளூராட்சி நிறுவனங்களினது 2016 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைச் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்த கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயங்கள் தொடர்பான பொழிப்பொன்று கீழே அட்டவணை 13 இல் காண்பிக்கப்படுகின்றது.

| உள்ளூராட்சி நிறுவனங்களின் வகை | கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சபைகளின் எண்ணிக்கை | 2017.09.30 இல் உள்ளவாறான கணக்குகளைச் சமர்ப்பித்த சபைகளின் எண்ணிக்கை | கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்த சபைகளின் எண்ணிக்கை | 2017.09.30 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற | மறுப்பு | பாதகம் |
| மாநகர சபை | 23 | 23 | 14 | 14 | - | - | - |
| நகர சபை | 41 | 41 | 35 | 34 | - | - | 01 |
| பிரதேச சபை | 271 | 271 | 231 | 229 | 01 | - | 01 |
| **மொத்தம்** | 335 | 335 | 280 | 277 | 01 | - | 02 |

அட்டவணை 13 :- உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வு அபிப்பிராயம்.

உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்ட சில முக்கியமான அவதானிப்புக்கள் பொழிப்பழிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

- கலன்பிந்துனுவெவ பிரதேச சபையினால் ஹுறுழுநிகவெவ பட்டதுன அருகிலுள்ள வாய்க்கால் ஊடாக பாலமொன்று நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 1.95 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும், பாலத்திற்கு நுழைந்ததன் பின்னர் பாலத்திலிருந்து வெளிச்செல்வதற்கு வீதியொன்று காணப்படாமையினால் அந்த செயற்திட்டத்துக்காக செலவிடப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது.

- அஸ்வயா பெந்திபெவ மற்றும் இஹலகம கிராமங்களுக்கு குடிநீரை வழங்குவதற்கான நீர் செயற்திட்டம் பிரதேச செயலகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டு 2009 ஆண்டின் போது கலந்பிந்துனுவெவ பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் காணப்பட்ட குறைபாடுகள் பிரதேச செயலகத்தின் மூலம் பூர்த்தி செய்து கொள்வதற்கு சபை தவறியமையினால் அந்த நீர் செயல்திட்டங்களுக்கு

செலவிட்ட ரூபா 18.13 மில்லியன் பணமும், ரூபா 3.45 மில்லியன் பெறுமதியான நீர்க்குழாய் உபகரணங்களும் விளைவற்றுக் காணப்பட்டது.

- உள்ளூராட்சி அமைச்சிலிருந்து 2015 ஆம் ஆண்டின் போது நொச்சியாகம பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 7.97 மில்லியன் பெறுமதியான 8-10 தொன் வீதி செப்பனிடும் இயந்திரத்தை பிரதேசங்களுக்கு போக்குவரத்து செய்வதற்காக பொருத்தமான வாகனமொன்று இல்லாமையினால் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2017 மே 22 இல் உள்ளவாறு 321 இயந்திர மணித்தியாலங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- நிக்கவெரட்டிய பிரதேச சபையின் சிகிச்சை நிலையக் கட்டிடத்திலுள்ள 09 கடைகளில் இருந்து 04 வருடங்களாக அறவிட வேண்டியிருந்த ரூபா 3.43 மில்லியன் முற்கொடுப்பணவுப் பணத்தை அறவிடுவதற்காக சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- அநுராதபுரம் மாநகரசபை அதிகாரப் பிரதேசத்தில் 03 வீதிச் செயற்திட்டங்களுக்கு கிரவல் இட்டு புனரமைப்பதற்காக ரூபா 5.83 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டங்களை பௌதீக ரீதியில் பரீட்சித்த போது நிறைவேற்றப்படாத 08 வேலை விடயங்களுக்காக ரூபா 3.66 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- புத்தளம் மாவட்டம் செயலகத்தினால் 2016 ஆம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது அரையாண்டுகளுக்காக விநியோகிக்கப்பட்ட மாவட்ட விலைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட ஒரு கியூப் கிரவலின் விலை ரூபா 1,000 ஆக இருந்த போதிலும், நாத்தாண்டிய பிரதேச சபையினால் 01 கியூப் கிரவலுக்காக ரூபா 2,300 முதல் ரூபா 3,600 வரை 04 விலைகளின் கீழ் 964 கியூப் கிரவல் கொள்வனவு செய்யப்பட்டு அதற்காக ரூபா 3.16 மில்லியன் செலுத்தப்பட்டமையால் ரூபா 2.19 மில்லியன் அதிகரித்து செலுத்தப்பட்டிருந்தது.

- 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்கள் மற்றும் கட்டிட கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் 11 ஆவது பட்டோலையின் பிரகாரம் தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிக்கும் போது அறவிட வேண்டிய கட்டணம் உரிய பிரகாரம் அறவிடப்படாமையினால் சபை அதிகாரப் பிரதேசங்களில் ஸ்தாபிக்கப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களிலிருந்து பெல்மதுள்ள பிரதேச சபைக்கு ரூபா 2.66 மில்லியன் வருமானமும், நிவத்திகல பிரதேச சபைக்கு ரூபா 1.21 மில்லியன் வருமானமும் இழக்கப்பட்டிருந்தது.

- சப்ரகமுவ மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலா அமைச்சின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் இரத்தினபுரி மாநகர சபையினால் 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 04 சர்ந்தப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2.83 மில்லியன் செலவில் களுகங்கை அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நகர பூங்கா காடு வளர்ந்து அழிவடைந்திருந்தது. அது

உரிய பிரகாரம் பராமரிக்கப்பட்டு பிரதேச மக்களின் நலன்புரிச் சம்பவங்களை கவனத்தில் கொண்டதாக மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளரினால் 2010 செப்தெம்பர் 21 ஆந் திகதி இரத்தினபுரி மாநகர சபையின் நகர பிதாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் உரிய நகர பூங்காவை ஆக்கபூர்வமானதாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் பொறுப்பு வாய்ந்தவர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தது.

- 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரசட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனையிலிருந்து கிடைக்கின்ற பணத்தில் 01 சதவீத அளவு சபையின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 03 காணி ஏல விற்பனைகளுக்குரிய குறிப்பிட்ட அளவை விட குறைவாக அறவிட்டமையின் காரணமாக குருவிட்ட பிரதேச சபை நிதியத்திற்கு ரூபா 764,444 தொகை இழக்கப்பட்டிருந்தது.

- குருவிட்ட பிரதேச சபைக்குரிய புதிய சந்தை தொகுதியின் 05 கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்ட 2009 ஆம் ஆண்டு முதல் வாடகை செலுத்தாது புறக்கணித்தமையின் காரணமாக, 2014 ஜுலை 30 ஆந் திகதி அந்தக் கடைகள் முத்திரை வைக்கப்பட்டு சபைக்கு கையேற்கப்பட்டிருந்தது. எனினும், வாடகையாளருடன் உடன்படிக்கை செய்திருக்காமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 4.44 மில்லியன் கூட்டுத்தொகையான நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணங்களை அறவீடு செய்தல் தொடர்பாக சட்டரீதியான வழிமுறைகளை எடுக்கும் இயலுமை காணப்படாதிருந்ததாக காண்பித்து நிலுவை வாடகையை பதிவழிப்பதற்காக சப்ரகமுவ மாகாண பிரதம அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்தது.

- குருவிட்ட பிரதேச சபைக்குரிய குருவிட்ட த பினான்ஸ் புதிய குடியிருப்புக்களில் ஐக்கிய நீர் செயற்பாட்டிற்கு கிணறுகளை அமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் 02 சர்ந்தப்பங்களின் போது சபை நிதியிலிருந்து ரூபா 1.58 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், கிணற்றில் காணப்பட்ட அதிக துருப்பிடித்தலுடன் காணப்பட்ட கிணற்றைச் சுற்றியுள்ள கொங்கிறீட் தட்டுக்களில் உள்ள இரும்புக்கம்பி கொங்கிறீட் தட்டிற்கு வெளியே வெளிப்படுத்தப்பட்டிருந்தமையால் துருப்பிடித்தலுக்கு உட்பட்டிருந்தமை மற்றும் கிணற்றுக்குள் குளத்தின் இரு பக்கங்களிலிருந்து நீர் வடிந்து வருகின்றமையால் கிணற்றின் தண்ணீர் குடிப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்டமையினால் செலவிடப்பட்ட பணம் பயனற்றதாகியிருந்தது.

- 2016 மே 21 ஆந் திகதி வெசக்புற பஸலொஸ்வக்க போயா தினத்தில் 163,110 லீற்றர் உள்நாட்டு குடிபானங்கள் அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு முரணாக பலாங்கொடை நகரசபைக்குரிய பலாங்கொடை விருந்தினர் விடுதியினுள் வைத்திருந்ததனால், இரத்தினபுரி உதவி மது வரி ஆணையாளரினால் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ரூபா 1.52 மில்லியன் தண்டப்பணமொன்று சபைக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த தண்டப் பணம் 09 தவணைகளில் செலுத்துவதற்கு ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின்

பிரகாரம் 2017 யூன் 19 ஆந் திகதி வரையிலும் 04 தவணைகளில் ரூபா 793,571 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த தண்டப்பணத்தை சம்பவத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்காக சபையினால் பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தினால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து தம்புள்ள பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற கெப் வாகனமொன்று 2015 ஏப்ரல் 13 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது. இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் நடத்தப்பட்டிருந்த பரிசோதனையின் பிரகாரம் வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 7.99 மில்லியன் நட்டத்தில் ரூபா 7.19 மில்லியன் சபையின் தலைவரிடமிருந்தும், ரூபா 798,761 தொகை வாகனத்தின் சாரதியிடமிருந்தும் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

- தம்புள்ள பிரதேச சபையினால் தம்புள்ள நகரத்தின் மொத்த வியாபார சந்தையை நிர்மாணிப்பதற்காக ரூபா 11.27 மில்லியன் தொகையினை ஒப்பந்த பெறுமதியில் 1995 ஆம் ஆண்டில் ஒரு வருட ஒப்பந்த காலத்துக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், 1999 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரினால் 2001 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 1.44 மில்லியன் தொகையான இறுதிப்பட்டியலுக்கு சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் ஒப்பந்தகாரர் வழக்கு தொடர்ந்திருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய வழக்கு தீர்ப்பின் பிரகாரம் அந்த பட்டியல்களுக்காக ரூபா 5.51 மில்லியன் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 4.09 மில்லியன் நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

- தெரணியகல பிரதேச சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற நீர் உத்தேசத் திட்டங்களிலிருந்து வழங்கப்படுகின்ற நீர் சுத்திகரிக்கப்படாமல் பகிர்ந்தளிக்கப்பட்டமையினால் அதில் பாதகமான பக்டீரியா உள்ளடங்கியிருந்ததாக தெரணியகல சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் பரிசோதனை அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படுனின்றது.

- 1984 நவம்பர் 20 ஆந் திகதிய 1984/19 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டு முத்திரைக் கட்டணம் சேகரித்தமைக்காக மாத்தறை மாநகர சபையின் 11 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1.37 மில்லியன் தரகுப்பணம் செலுத்தப்பட்டது.

- 2015 பெப்ரவரி 07 ஆந் திகதி அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 24.93 மில்லியன் பெறுமதியான மோட்டர் கிறேடர் இயந்திரம் அத்திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித அபிவிருத்தி பணிகளுக்கும் பயன்படுத்தப்படாமல் சுடலைக்கூட வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது.

- ஶ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபையினால் வெலிக்கட பொலிஸ் அருகில் சபைக்குச் சொந்தமான

காணியில் நகரசபை கட்டிடம் நிர்மாணிப்பதற்காக உள்ளக வடிவமைப்பு மற்றும் மதிப்புரை சேவைகளைப் பெற்றுப்கொள்வதற்கு 2014 செப்தெம்பர் 03 ஆந் திகதி கேள்வி நடைமுறைகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு 2015 ஆம் ஆண்டு முதல் 2016 திசம்பர் மாதம் வரை ரூபா 23.16 மில்லியன் (வரி தவிர்த்து) தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 16.93 மில்லியன் தொகை (வரி தவிர்த்து) கொடுப்பனவுக்கான பட்டியலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், 2015 மே 07 ஆந் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வெலிக்கட பொலிஸ் அருகிலுள்ள காணியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட சபைக் கட்டிடம் அந்த நிலத்திலேயே நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மதியுரைச் சேவை ஒப்பந்த உடன்படிக்கை கால அட்டவணையின் பிரகாரம் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு கேள்வி கோரி ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டு நிர்மாண வேலைகள் அவருக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 யூலை 31 ஆந் திகதி வரையில் மேற்கூறப்பட்ட கட்டிடத்துக்கு கேள்வி கோரி நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

- ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபைக்கு எவ்வித சட்டரீதியான உரித்துமற்ற 02 ஏக்கர் 01 றூட் 34 பேர்ச் அளவான அரசாங்கத்திற்கு சொந்தமான சதுப்பு நிலமாகக் காணப்பட்ட காணியினை சபையின் வேலைப் பிரிவு, வாகனப் பராமரிப்பு பிரிவு, மற்றும் களஞ்சிய தொகுதிக்கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு, ரூபா 46.97 மில்லியன் பெறுமதியில் தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு 2014 ஆகஸ்ட் 21 ஆந் திகதி கையளித்து 2015 மே 27 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2015 சனவரி மாதத்தின் போது ரூபா 9.39 மில்லியன் முற்பணத் தொகை மற்றும் 2015 பெப்ரவரி மாதத்தின் போது முதலாவது பகுதி கொடுப்பனவாக ரூபா 8.26 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத்திகதியில் ஒப்பந்தத்தில் வேலையின் பெறுமதி ரூபா 11.94 மில்லியன் ஆனமையால் ஒப்பந்ததாரருக்கு ரூபா 5.72 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 2017 யூலை 12 ஆந் திகதி வரையில் தரையின் வெளியே காணமுடியாத அத்திவாரமொன்றில் 42 கொங்கிறீட் தூண்களுக்காக கம்பி நடப்பட்டிருந்ததுடன் கட்டிடச் சூழல் காடு வளர்ந்து மூடப்பட்டிருந்தது. நடப்பட்டிருந்த கம்பி துருப்பிடித்து இருந்ததுடன் தற்போது வரையில் ஒப்பந்தகாரரின் வேலைத்தளம் கைவிடப்பட்டிருந்தது.

- சேருவில பிரதேசசபை சுடலைக்கூட தேவை தொடர்பாக உரிய சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளாது புறநெகும செயற்திட்டத்தின் கீழ் (NELSIP) ரூபா 16 மில்லியன் செலவினத்தில் 2014 ஆம் ஆண்டில் சுடலைக்கூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் அதன் மூலம் 05 பூதவுடல்கள் மாத்திரம் தகனம் செய்யப்பட்டிருந்தது.

**கழிவுப்பொருள் முகாமைத்துவம் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாதிருந்தமை சில உள்ளுராட்சி நிறுவனங்கள் தொடர்பாக கீழே குறிப்பிடப்படுகின்ற அவதானிப்புக்களிலிருந்து தெளிவாகின்றது.**

- கெக்கிராவ பிரதேச சபையினால் நாளாந்தம் 08 தொன் அளவிலான கழிவுப்பொருள் இருப்புக்கள் சேகரிக்கப்பட்ட போதும், கழிவுகள் மீள் சுயற்சி செய்யும் செயல்திட்டமொன்று அமுல்படுத்தப்படாமையினால் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் வகைப்படுத்தப்படாமல் 03 இடங்களில் முறையற்ற பிரகாரம் அகற்றப்படாமையினால் சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சனைகள் ஏற்படும் ஆபத்தொன்று காணப்பட்டது.

- நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1.78 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்தபோதும், செயற்திட்டத்திற்கு பொருத்தமான காணியொன்றை கைப்பற்றுவதற்கு பிரதேசசபை தவறியதன் காரணமாக அந்த நிதி ஏற்பாடு மீள கைப்பற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் தற்காலிக காணியொன்றில் அகற்றப்படும் நிலையில் சுற்றாடல் அழிவொன்றைப் போல் பல்வேறு தொற்று நோய்கள் பரவும் போக்கொன்றும் ஏற்பட்டிருந்தது.

- வனாத்தவில்லு பிரதேச சபை ரூபா 2.95 மில்லியன் கிரயமொன்றைச் செய்து நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பசளைத் தளத்தின் நாளாந்த உர உற்பத்தி செயற்பாடுகளுக்குத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை ஈடுபடுத்தப்படாமையினால் உரிய செயல்திட்டம் செயற்படாத நிலைக்கு உள்ளாகியிருந்தது.

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் “பிளிசறு” தேசிய கழிவுப்பொருள் முகாமைத்துவ செயல்திட்டத்தின் நிதி உதவியின் அடிப்படையில் ரூபா 8.86 மில்லியன் செலவில் இம்புள்பே பிரதேச சபையினால் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2016 பெப்ரவரி மாதத்தின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த நிலையத்திற்கு வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருள்களிலிருந்து உக்குகின்ற கழிவுப்பொருட்கள் அண்ணளவாக 720 தொன்கள் சேதனப்பசளை உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கான முறைமையொன்று 2017 யூன் மாதம் வரையிலும் தயாரிக்கப்படாமையினால் செயல்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிளிசறு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 18.09 மில்லியன் செலவில் றுவன்வெல்ல பிரதேச சபையினால் இதல்பொல கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையம் 2014 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது உக்குகின்ற கழிவுகளை மாத்திரம் தயாரிக்கும் நிலையமொன்றாக இருப்பதனால், உக்காத கழிவுகள் அதன் அருகில் குவிக்கப்பட்டுள்ளமையால் ஈக்கள் பெருகுவதன் மூலம் கிராமவாசிகளுக்கு தொற்று நோய்கள் பரவுகின்றமையால் மக்களின் எதிர்ப்பு எழுந்ததன் அடிப்படையில் நிலையத்தை மூடியிருந்ததுடன், மீளாண்வாண்டின்

இறுதி வரையிலும் அதனை அமுல்படுத்த முடியாதிருந்தது.

- மாவனல்ல பிரதேச சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலைய வளவில் கலி பவுசர் மூலம் எடுத்துச்செல்லப்பட்ட மலக்கழிவுகள் பொருட்கள் அகற்றப்படாமையினால் நீண்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ஒதுக்கப்படாத பிரதேசங்களில் உறிஞ்சிச் செல்வதற்கு அருகில் காணப்பட்டதுடன், சிறு மழையின் போது உறிஞ்சப்பட்டவைகள் கழிவு முகாமைத்துவ நிலையத்திற்கு அருகிலுள்ள எல்லைக்கு வழிந்தோடக்கூடிய ஆபத்தொன்று காணப்பட்டது. மேலும், கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ நிலைய வளவிலும் மலக்கழிவுப் பொருள் வழிந்தோடுவதாலும் அதன் நடவடிக்கைகள் இடையூறுகளுக்கு உட்படுதல் மற்றும் சுற்றாடலுடன் திறந்து காணப்படுகின்றமையால் ஊழியர்களின் சுகாதாரத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது.

- மாத்தறை மாநகர சபை கழிவுகளை சேகரிப்பதற்காக 2016 ஆண்டின் போது ரூபா 103.92 மில்லியன் செலவிட்டிருந்தது. 2009 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 13.60 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட சேதனைப் பசளை நிலையம், அமைந்துள்ள கட்டிடம், உயிரியல் வாயு உற்பத்தி நிலையம் என்பவற்றை நிர்மாணிப்பதற்கு 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 64.36 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்தது. சேதனைப் பசளை நிலையம் மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு ஈடுபடுத்தப்படாமையினால் வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற 12,600 தொன் கழிவுப்பொருட்கள் முறையற்ற வகையில் அகற்றப்பட்டிருந்தது.

- ஹக்மன பிரதேச சபையினால் சேதனப் பசளை உற்பத்தி தளமொன்றை நிர்மாணிப்பதற்காக 2012 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 1.00 மில்லியன் செலுத்தி 3 றூட் 37.8 பேர்ச் காணியொன்று கொள்வளவு செய்யப்பட்டிருந்தது. 2017 யூன் 20 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணியில் உரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கழிவுகளை சேகரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7.39 மில்லியனும் கடந்த 05 வருடங்களில் ரூபா 25.25 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டுள்ள போதிலும், அதில் எந்தவொரு வருமானத்தையும் உழைப்பதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

- கம்புறுபிட்டிய பிரதேச சபையினால் மீளாய்வாண்டின் போது கழிவுப்பொருட்கள் சேகரிப்பதற்கு ரூபா 6.17 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் அபிவிருத்திக்காக மாகாண குறித்தொதுக்க நிதி ஏற்பாட்டின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1.00 மில்லியன் தொகை உரிய வேலைக்கு பயன்படுத்தப்படாமல் சபையின் பழைய கட்டிடத்தின் கூரையை பழுதுபார்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

# வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டிற்கான நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம், அரச கடன் பெறல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது அரச உள்நாட்டு மூலங்களிலிருந்து ரூபா 945 பில்லியன் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூபா 574 அரச கடனாக பெறப்பட்டிருந்தது. வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் ரூபா 218 பில்லியன் பிணை முறிகளை வெளியிடுவதன் மூலம் மற்றும் ரூபா 102 பில்லியன் அந்நிய செலவாணி கட்டுப்பாட்டு நிதி வசதிகளின் கீழ் பெறப்பட்டிருந்தது. மேலும், வெளிநாட்டு உதவி மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்களாக ரூபா 254 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் போது அரச வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து மற்றும் கடன் வழங்கும் முகவர் நிறுவனத்துடன் புதிய வெளிநாட்டு நிதியீட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கைகள் 56 கைச்சாத்திடப்பட்டிருந்தன. அதனூடாக எதிர்வரும் வருடங்களில் ஐ.அ.டொ 3,078.80 மில்லியன் தொகை பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 29 நிதிய உதவி உடன்படிக்கைகள் மூலம் எதிர்வரும் வருடங்களில் கிடைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஐ.அ.டொ 240.50 மில்லியன் தொகையும் அதனுள் உள்ளடங்கும். இந்த கடன் மற்றும் உதவிகளாக கிடைக்கும் பணத்தில் 33 சதவீதம் நீர்வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காகவும், 26 சதவீதம் பொருளாதார மற்றும் நிதி ஒத்துழைப்பு பிரிவிற்காகவும் முதலீடு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவ்வாறே, பெருந்தெருக்கள் மற்றுட் வீதி அபிவிருத்திக்காக 16 சதவீதத்தினை முதலீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

மீளாய்வாண்டளவில் 146 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு இருந்ததுடன், 113 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் வருடாந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து மற்றும் கடன் வழங்கல் பிரதிநித்துவ நிறுவனங்கள் மூலம் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டற்களினூடாக கிடைத்திருந்த ஐ.அ.டொ 1,586.60 மில்லியன் தொகையான கடன் மற்றும் ஐ.அ.டொ 53.80 மில்லியன் நிதியேற்பாடுகள் மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்திய கடன் முறைமை, சீன அரசின் உதவிகள் மற்றும் ஏனைய இரு தரப்பினர் கடன் முன்மொழிவு முறைமைகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டவாறு இருந்த செயற்திட்டங்களுக்குரிய கடன் உடன்படிக்கைகளில், வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகள் அத்தியாவசியாமானதொரு தேவைப்பாடாக குறிப்பிடப்பட்டிராமையால் அந்த செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டில் வெளிநாட்டு செயற்திட்டங்கள் மற்றும் அவற்றின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் தொடர்பான நிலைமை பின்வரும் அட்டவணை … மற்றும் அட்டவணை 14 இல் காட்டப்பட்டுள்ளது.

| வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினர் / கடன் வழங்கும் முகவர் நிறுவனம் | நடைமுறைப்புடுத்தப்படும் வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் எண்ணிக்கை | கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்த செயற்திட்டற்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 35 | 30 |
| உலக வங்கி | 21 | 19 |
| யப்பான் | 17 | 14 |
| சீனா | 14 | 11 |
| ஐக்கய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 11 | 4 |
| விவசாய அபிவிருத்திக்கான உள்நாட்டு நிதியம் | 4 | 4 |
| குவைத் | 4 | 3 |
| கோரியா | 4 | 3 |
| ஏனையவை | 36 | 23 |
| மொத்தம் | **146** | **111** |

அட்டவணை :- 14 வெளிநாட்டு செயற்திட்ட கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்.

மீளாய்வாண்டில் நடைமுறைபடபடுத்தவாறு இருந்த பாரியளவிலான வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் சிலவற்றின் செயலாற்றல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

- ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் உதவியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் கூட்டிணைந்த வீதி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டினுள் 3,313 கிலோ மீற்றர்கள் அளவான பிரதேசம் மற்றம் 742 வீதிகளை புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் பணிகள் 2014 யூன் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்படடிருந்ததுடன், 2024 மார்ச் 30 ஆந் திகதி வரையான 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

இதன் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மாகாண மற்றும் கிராமிய வீதிகளை புனரமைப்பதற்காக 42 பொதிகளின் கீழ் ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், விடய பரப்பில் பிற்பட்ட காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களின் காரணமாக 15 பொதிகளின் கீழ் மாத்திரம் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. 2017 யூலை 31 ஆந் திகதியளவில் 84.74 கிலோ மீட்டர்கள் அளவான மாகாண மற்றும் கிராமிய வீதிகள் 25 இனை புனரமைக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

- இலங்கை தொழில் கற்கைகள் துறையில் தரம் மற்றும் சர்வதேச அங்கீகாரம் ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் உதவியின் கீழ் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழான 09 நிறுவனங்களுடாக திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு அரச நிறுவனங்களிடையே எந்தவொரு தொடர்பும் இல்லாதிருந்தமையின் காரணத்தால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கையின் அரச துறையின் நிறுவனங்களால் தற்போது நடாத்தப்படும் தொழிற்பயிற்சி பாடநெறிகளின் தரத்தை அதிகரிப்பதற்கும் சர்வதேச அங்கீகாரத்தினை அதிகரிப்பதற்கும் இந்த பாடநெறிகளை மீண்டும் மீளாய்வு செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமொன்றாகும். எவ்வாறாயினும், தற்போது நடைமுறைப்படுத்தப்படும் 2,484 தொழில்சார் பாடநெறிகளிடையே 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 242 பாடநெறிகள் மாத்திரம் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

- கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் நகர அபிவிருத்திக்கான சர்வதேச அபிவிருத்தி சங்கத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ஐ.அ.டொ 147 மில்லியனுக்கு சமனான ரூபா 19,257 மில்லியன் தொகையான கடன் தொகையினை பயன்படுத்தி உபாய மார்க்க நகர அபிவிருத்தி செயற்திட்டம், மாநகர சபைகள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டரை வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், செயற்திட்டத்திற்கான விரிவான செயலடநடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராமையால், அதன் பணிகள் மந்தமான நிலையில் காணப்பட்டன. மேலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசன திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை மற்றும் உரிய நகர சபைகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாக நியமிக்கப்பட்ட செயற்திட்ட மேவுகைக் குழுவானது நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட்டிராமை இந்த செயற்திட்டதின் பணிகள் மந்தடைவதற்கு காரணமாக இருந்தது.

- இலங்கையின் காலநிலை மாற்றங்களுக்கு தாக்குபிடிக்கக்கூடிய விதத்தில் பொருளாதாரத்துடனான நாடொன்றாக மாற்றும் நோக்கில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ஐ.அ.டொ 110 மில்லியனுக்கு சமனான ரூபா 14,383 மில்லியனாக கடன் பணத்தை பயன்படுத்தி, காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுத்தலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம், நீர்ப்பாசன மற்றும நீர் வளங்கல் முகாமைத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கையின் மண்சரிவு மற்றும் ஏனைய இடர்களை குறைக்கும் நடவடிக்கைகளுக்காக போதியளவான தொழில்நுட்ப அறிவுடைய நபர்களின் பற்றாக்குறை, செயற்திட்ட பணிகள் மந்தமடைவதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

- ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்டிருந்த ஐ.அ.டொ 59 மில்லியன் தொகையான கடன் உதவியின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த உள்ளுராட்சி நிறுவனங்களை முன்னேற்றும் செயற்திட்டத்தின் கீழ் ஒப்பந்தங்கள் தொடர்பான பௌதீக முன்னேற்றம், அந்த நிர்மாண ஒப்பந்தம் கையளிப்பதற்கு தாமதமடைந்த காரணத்தினால், மந்தமடைந்திருந்தது. மேலும், செயற்திட்டத்தின் நிதிகளை

பயன்படுத்தி திவுலப்பிட்டிய, ரத்தொட்ட, வில்கமுவ, கல்கமுவ, திரப்பனே மற்றும் இபலோகம ஆகிய பிரதேச சபைகளால் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிர்வாக மற்றும் வணிக ரீதியான பணிகளுக்கான கட்டிடங்கள் இரண்டரை வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்காமல் விளைவற்றுக் காணப்பட்டது. 2012 யூலை மாதத்தின் போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் 2017 யூன் மாதம் அளவில் பூர்த்தி செய்ய வேண்டியதாக காணப்பட்டது.

மேற்படி அவதானிப்புக்களுக்கு மேலதிகமாக, 2016 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட செயற்திட்ட செயலாற்றல் தொடர்பான பொதுவான குறைபாடுகள் சில பின்வருமாறு.

- கடன் வழங்கும் வெளிநாட்டு முகவர் நிறுவனங்களால் வெளிநாட்டு செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியங்களின் பயன்பாடு குறைவான மட்டத்தில் காணப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு பயன்படுத்தப்படாத நிதியங்களுக்காக மேலதிக வட்டித் தொகையினை செலுத்த நேர்ந்திருந்ததுடன், செயற்திட்டக் காலத்தை நீடிப்பு செய்யும் அபாயமொன்று நிலவியமை, பணவீக்க தாக்கங்களின் காரணமாக மதிப்பிடப்பட்ட கிரயத்தின் அடிப்படையில் செயற்திட்ட பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தமை போன்ற பாதகமான விளைவுகள் உருவாகும் என்பது அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு நிதியங்களின் பயன்பாடு குறைவான மட்டத்தில் நிலவிய சில செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணை 15 இல் காண்பிக்கப்படுகின்றது.

| செயற்திட்டத்தின் பெயர் | வெளிநாட்டு முகவர் நிறுவனம் | நிதியிடலுக்கு இணங்கிய தொகை | 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான | |
|---|---|---|---|---|
| | | | பயன்பாடு | எடுத்திருந்த காலம் |
| | | ஐ.அ.டொலர் | ஐ.அ.டொலர் | வருடங்கள் |
| உபாயமார்க்க நகர அபிவிருத்தி செயற்திட்டம் | ச.அ.ச | 212.00 | 11.00 | 02 ½ |
| காலநிலை மாற்றங்களுக்கு முகம்கொடுத்தலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் | ச.அ.ச | 110.00 | 29.00 | 02 |
| கடற்கரை பாதுகாப்பு மற்றும் நீர் வளங்களின் திட்டமிடல் செயற்திட்டம் | ச.அ.ச | 83.00 | 39.90 | 02 |
| இரண்டாம் சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டம் | ச.அ.ச | 190 | 9.36 | 3 ½ |

| | | | | |
|---|---|---|---|---|
| கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஆ.அ.வ | 200 | 72.33 | 03 |
| மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | ஆ.அ.வ | 150 | 9.10 | 1 ½ |
| தேற்கு அதிவேக வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | ஆ.அ.வ | 70 | 11.79 | 2 ½ |
| உலர் வலய நகர நீர் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டம் | ஆ.அ.வ | 125 | 72.81 | 07 |
| தேசிய விவசாய முயற்சியாண்மை அபிவிருத்தி செயற்திட்டம் | விவசாய அபிவிருத்திக்கான உள்நாட்டு நிதியம் | 25.00 | 12.30 | 03 |

அட்டவணை 15 வெளிநாட்டு நிதியப் பயன்பாடு 2016

- வெளிநாட்டு செயற்திட்டங்களின் செயற்பாட்டு கால எல்லை நிறைவடைந்ததன் பின்னரும் சில செயற்திட்டங்கள் முகாமைத்துவ அலகினால் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் கருதுகோளினை அடிப்படையாகக் அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. நிதி அமைச்சினால் செயற்திட்டத்தின் இறுதி நிதியாண்டின் போது நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டிய விதம் தொடர்பில் முறையான ஆலோசனை வழங்கப்பட்டிராமையின் காரணத்தால் இந்த நிலைமை உருவாகியிருந்தது. மேலும், வெளிநாட்டு நிதிகளைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற சொத்துக்கள் செயற்திட்டத்தின் நடைமுறைக் கால எல்லை முடிவடைந்ததன் பின்னர் உரிய அமுல்படுத்தும் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தல் தொடர்பில் பின்தொடரப்பட்டிராமை பிரதானமான குறைபாடொன்றாகியிருந்தது.

பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் மந்தமடைந்த பல்வேறு வெளிநாட்டு செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன், திட்டமிடலான குறைபாடுகள், மக்களின் எதிர்ப்புக்கள், காணிகளை சுவீகரிப்பதிலான தாமதங்கள், நிர்மாண ஒப்பந்தகாரர்களின் இயலாமைகள், பெறுகைகள் நடைமுறையிலான நலிவுகள், போதியளவான மீளாய்வொன்று இல்லாதிருந்தமை மற்றும் தொழில்நுட்ப அறிவுடைய நபர்களை செயற்திட்டத்தின் முகாமைத்துவத்திற்காக இணைந்து கொள்ளலின் வகதியீனங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் அதற்கு காரணமாக அமைந்திருந்தன. இதன் பிரகாரம் செயற்திட்டங்களின் பணிகளின் மேற்பார்வை தொடர்பில் அபிவிருத்தி விடயப் பொறுப்பு அமைச்சின் கீழான செயற்திட்டங்களின் முகாமைத்துவ மேற்பார்வை திணைக்களத்தின் விடயப்பொறுப்பு பரவலாவதன் தேவைப்பாடு சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது.

# அரசாங்க வங்கிகள்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்(LCBs) மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள் (LSBs) என்பவற்றை வங்கித்துறை உள்ளடக்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கித் துறையில் 25 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் 7 உரிமம் பெற்ற விசேட வங்கிகளும் காணப்பட்டன. மொத்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடையே 12 வெளிநாட்டு வங்கிகளும் காணப்பட்டன. வங்கிச் சேவைகளை முன்னேற்றுதல் மற்றும் நாடு முழுவதற்கும் தமது வலைப்பின்னலையும் நுழைவினையும் விரிவுபடுத்துவதன் மூலம் வங்கித் துறையினால் தொடர்ச்சியான பொருளாதாரச் செயற்பாடுகளிற்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யப்பட்டது. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் புதிதாக 65 கிளைகள் திறக்கப்பட்டிருந்ததுடன் 366 தன்னியக்க ரெலர் இயந்திரங்களும் தாபிக்கப்பட்டிருந்தன.

| 2016 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கிகளினதும் கிளைகளினதும் பரம்பல் | | | | | |
|---|---|---|---|---|---|
| வகுதி | | வங்கி | கிளை | மாணவர் சேமிப்பு அலகுகள் | தன்னியக்க ரெலர் இயந்திரம் |
| LCBs | உள்நாட்டு வங்கிகள் | 13 | 2763 | 2870 | 3523 |
| | வெளிநாட்டு வங்கிகள் | 12 | 221 | | |
| LSBs | தேசிய மட்டத்திலான பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 1 | 255 | 175 | 320 |
| | தேசிய மட்டத்திலான சேமிப்பு வங்கிகள் | 1 | 228 | | |
| | வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 2 | 57 | | |
| | தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 3 | 90 | | |

அட்டவணை 16 மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## சொத்துக்கள்

வங்கித்துறையின் சொத்துக்களின் கட்டமைப்பு 2016 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்திருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் அது ரூபா 9 ரிலியன் ஆகக் காணப்பட்டது. ஒட்டுமொத்த சொத்துக்களின் கட்டமைப்பு பிரதானமாக கடன்கள் மற்றும் முற்பணங்களை உள்ளடக்கியிருந்ததுடன், அது வங்கித்துறையின் சொத்துக்களில் 60 சதவீதப் பெறுமதியினைக் கொண்டிருந்தது. பிரதான இரண்டு அரசாங்க வங்கிகளினது சொத்துக்களின் பெறுமதி, அதாவது இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் முறையே ரூபா 1,669.3 பில்லியன் மற்றும் ரூபா 1,302 பில்லியனாக காணப்பட்டதுடன், அது வங்கித் துறையின் மொத்தச் சொத்துக்களில் 33 சதவீதமாகக் காணப்பட்டது.

**வங்கித்துறையின் மொத்த சொத்துக்கள் (ரூபா பில்லியன்)**




உரு 13: மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## செயற்பாடற்ற கடன்கள்

வங்கித்துறையின் ஒட்டுமொத்த செயற்பாடற்ற கடன் விகிதம் (என்பீஎல்) 2015 ஆம் ஆண்டின் 3.2 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டளவில் 2.6 சதவீதம் வரை ரூபா 6.9 பில்லியனால் குறைவடைந்திருந்தது. பிரதான இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் செயற்பாடற்ற கடன்கள் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் முறையே ரூபா 29.8 பில்லியன் மற்றும் ரூபா 17.3 பில்லியன் ஆகக் காணப்பட்டன. அவ்வாறே செயற்பாடற்ற கடன் விகதங்கள் முறையே 2.9 மற்றும் 1.95 சதவீதமாகக் காணப்பட்டன.

**வங்கித்துறையின் செயற்பாடற்ற கடன்**
**(ரூபா பில்லியன்)**




உரு 14: மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

**வங்கித்துறையின் மொத்த செயற்பாடற்ற கடன் விகிதம்**
**(ரூபா பில்லியன்)**




உரு 15- மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## பொறுப்புக்களும் உரிமைத்துவமும்

வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் தொடர்ந்தும் பொறுப்புக்கள் என்ற வகையில் பிரதான நிதி மூலமாக அமைந்திருந்ததுடன் அது வங்கித் துறையின் மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் மூலதனத்தில் 69.6 சதவீத பெறுமதியாகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு பிரதான அரச வங்கிகளான இலங்கை வங்கியினதும் மக்கள் வங்கியினதும் வைப்புக்களின் அளவு முறையே ரூபா 1,257 பில்லியன் மற்றும் ரூபா 1,077.8 பில்லியனாக காணப்பட்டதுடன் அது வங்கித் துறையின் மொத்த வைப்புக்களில் 37 சதவீத பெறுமதியாக காணப்பட்டது.

வங்கித்துறையின் ஒட்டுமொத்த கடன் பெறுதல்கள் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் 3.5 சதவீத பாதகமான வளர்ச்சியினைக் காண்பித்திருந்ததுடன். வெளிநாட்டுக் கடன் பெறுதல்கள் ரூபா 47.8 பில்லியனாலும் ரூபா கடன் பெறுதல்கள் ரூபா 14.2 பில்லியனாலும் குறைவடைந்திருந்தமையே இதற்கான காணமாகும். இருப்பினும், ஒட்டுமொத்த கடன் பெறுதல்களிற்கான உயர் பெறுமதியாகிய 60.7 சதவீதத்தினை வெளிநாட்டுக் கடன் பெறுதல்கள் வழங்கியிருந்தன. இரண்டு பிரதான அரச வங்கிகளின் கடன் பெறுதல்கள் ரூபா 429.2 பில்லியனாகக் காணப்பட்டது. அது 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் பெறப்பட்டிருந்த ரூபா 297.4 பில்லியன் வெளிநாட்டுக் கடன் பெறுதல்களையும் ரூபா 131.8 பில்லியன் ரூபா கடன் பெறுதல்களையும் உள்ளடக்கியிருந்தது.

**வங்கித்துறையின் பொறுப்புக்கள் மற்றும் மூலதனம்**
**(ரூபா பில்லியன்)**




உரு 16 - மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## வைப்புக்கள்

இலங்கை ரூபாவினால் வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்களின் அதிகரிப்பு காரணமாக காலப்பகுதியினுள் வங்கித் துறையின் வைப்புக்களின் அடிப்படை அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் 13.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் நாளதுவரையான வைப்புக்களில் 23.8 சதவீத வளர்ச்சி அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் விளைவாக, 2015 ஆம் ஆண்டில் மொத்த வைப்புக்களில் 57.0 சதவீதமாகக் காணப்பட்ட நாளதுவரையான வைப்புக்கள் 2016 ஆம் ஆண்டில் 60 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

இரண்டு பிரதான அரச வங்கிகளின் நாளதுவரையான வைப்புக்கள் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,300.3 பில்லியனாகக் காணப்பட்டது.




உரு 17 - மூலம்: இலங்கை மத்திய வங்கி (திருத்தியமைக்கப்பட்ட அல்லது தற்காலிகமான)

## இலங்கை மத்திய வங்கி

பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினையும் நிதி முறையிமையில் உறுதிப்பாட்டினையும் சான்றுறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி தாபிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு பண உறுதிப்பாட்டிற்காக நாணயக் கொள்கையினை நிச்சயிப்பதற்கு நாணயச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் மூலம் பண நிரம்பல் காணப்படுகின்றது என்பதனை உறுதி செய்வதற்கும் பணத்தின் கிரயத்தினை கட்டுப்படுத்துவதற்காகவும் நாணயச் சபை முயற்சித்தல் வேண்டும். பண நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் விலை உறுதிப்பாட்டில் தாக்கம் செலுத்துகின்ற பிரதான காரணியாக உள்ளது. பணவீக்கத்தின் ஊடாக காசு ஒதுக்கத்துடன் சம்பந்தப்படுகின்ற விரிந்த பண நிரம்பலின் மாற்றங்களிற்கு தாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலம் விலை உறுதிப்பாட்டினை பெற்றுக்கொள்ள முடியும். காசு ஒதுக்கம் என்பது நாணயக் கொள்கையின் செயற்பாட்டு இலக்காகும். கொள்கை ரீதியான வட்டி விகிதம், திறந்த சந்தை நடவடிக்கைகள் (OMO) மற்றும் வர்த்தக வங்கிகளின் வைப்புக்களின் அடிப்படையிலமைந்த நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைகளே (SRR) தற்போது பயன்படுத்தப்படுகின்ற பிரதான நாணயக் கட்டுப்பாட்டு முறைகளாகும்.

நிலையான வைப்புக்கள் விகிதம், நிலையான கடன் விகிதம் மற்றும் நியதிச்சட்ட ஒதுக்கு விகிதம் போன்ற கொள்கை விகிதங்கள் 2016 ஆம் ஆண்டில் முறையே 6 சதவீதம், 7.5 சதவீதம் மற்றும் 6 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகவும், 8.5 சதவீதம் மற்றும் 7.5 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 856.1 பில்லியன் வரை ரூபா 182.7 பில்லியனால் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. காசு ஒதுக்கத்தில் உள்ளடங்கியுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புக்களானது 2016 ஆம் ஆண்டில் ரூபா 121.6 பில்லியனிலிருந்து ரூபா 303.3 பில்லியன் வரை குறிப்பிடத்தக்களவில் அதிகரிப்பதற்கு நியதிச்சட்ட ஒதுக்குத்தேவையிலேற்பட்ட அதிகரிப்பே பிரதான காரணியாக அமைந்திருந்தது. அவ்வாறே காசு ஒதுக்கத்தில் உள்ளடங்கியுள்ள சுற்றோட்டத்திலுள்ள காசு ரூபா 552.8 பில்லியன் வரை ரூபா 61.1

பில்லியனால் அதிகரித்திருந்தது. இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையிலுள்ள பொறுப்புப் பக்கத்தினை நோக்குகையில் காசு ஒதுக்கம் அதிகரிப்பதற்கு 2016 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் (NFA) ரூபா 7.7 பில்லியனால் குறைவடைகையில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் (NDA) ரூபா 207.3 பில்லியனால் அதிகரித்திருந்தமை முழுமையாகத் தாக்கமளித்திருந்தது. தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் உள்ளடங்கியுள்ள, இலங்கை மத்திய வங்கியினால் திறந்த சந்தை நடவடிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அரசாங்க பிணைகள் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 351.4 பில்லியன் வரை ரூபா 248.6 பில்லினால் அதிகரித்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 102.8 பில்லியனாகக் காணப்பட்டது.

இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியினை உறுதியாக பேணிவருவதற்காகவும் அதன் தற்போதைய சர்வதேச கொடுக்கல் வாங்கல்கல் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்காகவும் சர்வதேச சென்மதி நிலுவையின் எந்தவொரு எதிர்கூறப்பட்ட பற்றாக்குறையினையும் நிவர்த்தி செய்வதற்காக போதியளவு வெளிநாட்டு ஒதுக்கு என்ற வடிவில் இலங்கை மத்திய வங்கியின் சொத்துக்களை பேணுவதற்கு நாணயச் சபை முயற்சித்தல் வேண்டும். 2016 ஆம் ஆண்டில் வெளிநாட்டு நிதிச் சொத்துக்களில் உள்ளடங்கியிருந்த அந்நியச் செலாவணி மற்றும் வங்கி மீதிகள் குறைவடைந்திருந்தமை காரணமாக 2016 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூபா 544.2 பில்லியன் வரை ரூபா 7.7 பில்லியனால் குறைவடைந்திருந்ததுடன், 2015 ஆம் ஆண்டில் அது ரூபா 125.3 பில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியும் 2016 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக தேய்வடைந்திருந்தது. ரூபாவின் பெறுமதி அமெரிக்க டொலருக்கு எதிராக 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட ரூபா 144.1 இலிருந்து 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 149.80 வரை 3.8 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியானது 2015 இல் ரூபா 131 இலிருந்து ரூபா 144.1 வரையிலான 9.1 சதவீதமாக காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிக்கு உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தைக்கு தலையீடு செய்தல் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் சந்தையிலுள்ள கேள்வி மற்றும் நிரம்பலுக்கேற்ப நாணயப் பரிமாற்றினை தீர்மானிப்பதற்கு இடமளிப்பதற்கு 2015 செப்தெம்பர் 03 ஆந் திகதி மத்திய வங்கியினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் என்பன காரணமாக அமைந்திருந்தன.

## இலங்கை வங்கி

இலங்கை வங்கியானது மாலே, சென்னை மற்றும் சீசல்ஸ் இலுள்ள வெளிநாட்டுக் கிளைகளை வைத்துள்ள ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் பெற்ற அரச வர்த்தக வங்கியாகும். 2016 ஆம் ஆண்டில் சேர்த்தக்கொள்ளப்பட்ட 2 கிளைகளுடன் 580 கிளைகளை தன்னகத்தே கொண்டு உள்நாட்டு வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் வங்கியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 7,569 ஆகக் காணப்பட்டதுடன், ஊழியப் படையில் 63 சதவீதமானோர் 35 வயதக்குக் குறைந்த வாலிப வயதினர்களாக காணப்பட்டனர்.

வங்கி 2016 ஆம் ஆண்டில் ரூபா 53.95 பில்லியன் தேறிய வட்டி வருமானத்தை ஈட்டியிருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16 சதவீதக்

குறைவாகும். இருப்பினும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 31.2 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அது 23 சதவீத அதிகரிப்பாகும். ரூபா 1.67 ரிலியன் சொத்து அடிப்படையொன்றுடன் ரூபா 1 ரிலியன் வாடிக்கையாளர்களிற்கு கடன்களும் முற்பணங்களும் வழங்கப்பட்டிருந்ததுடன், அது மொத்தச் சொத்துக்களில் 60 சதவீதமாகக் காணப்பட்டது. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 சதவீத அதிகரிப்பாகும். மேலும், வங்கியின் செயற்பாடற்ற முற்பணங்களின் விகிதாசாரம் 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட 4.3 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 2.9 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. அத்துடன், வங்கியின் வைப்பு அடிப்படை ரூபா 1.08 ரிலியன் இலிருந்து 1.3 ரிலியன் வரை 2016 ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்திருந்தது.

வங்கியின் திரவச் சொத்துக்களின் விகிதம் 28.2 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 21.6 சதவீதம் வரை குறைவடைந்திருந்ததுடன், அது மிகக்குறைந்த தேவையான 20 சதவீதத்தினை எட்டியிருந்தது. மூலதனப் போதுமை விகிதம் (தரம் II) 13.1 சதவீதத்திலிருந்து 12.3 சதவீதம் வரை 2016 ஆம் ஆண்டில் குறைவடைந்திருந்ததுடன், அது மிகக்குறைந்த தேவையான 10 சதவீதத்தினை எஞ்சியிருந்தது.

இலங்கை வங்கி பங்கிலாப செலுத்தும் விகிதத்தை 70 சதவீதமாக பேணிவந்து ரூபா 17.3 பில்லியன் பங்கிலாபத்தை இலங்கை அரசாங்கத்திற்குச் செலுத்தியிருந்தது. அது முன்னைய ஆண்டின் ரூபா 11 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 57 சதவீத வளர்ச்சியாகும்.

## மக்கள் வங்கி

வங்கியின் சொத்து அடிப்படை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமடையாது இருந்ததுடன் 2016 திசெம்பர் இறுதிப்பகுதியில் 68.4 சதவீத பங்கினைக் கைப்பற்றி சொத்துக்களின் ஏகாதிபத்தியத்தை கடன் சொத்துக்கள் கொண்டிருந்தது. அதற்கு இணையாக ஆண்டின் போது தொகுதியின் சொத்துக்களின் பிணைப்பு ரூபா 1,444.4 பில்லியன் வரை 11.6 சதவீதத்தினால் அதிகரித்து மிகவும் பலமான நிலையினை அடைந்திருந்தது. அதுமாத்திரமன்றி, தொகுதியானது இந்த ஆண்டில் வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா ரிலியன் என்ற இலக்கினை கடந்திருந்தது.
நிதியினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் வங்கியினால் சாதகமான மூலதன இணைப்பு பேணப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் வைப்புக்களின் அடிப்படை ரூபா லிரியனை அண்மித்திருந்தது.
வங்கியினால் 2016 ஆம் ஆண்டில் 19 சதவீத இலாப இலாப எல்லை அடையப்பட்டு ரூபா 14.9 பில்லியன் இலாபமும் உரிமை மீதான 27.5 சதவீத திரும்பலையும் அடைந்திருந்தது.
உரிமம்பெற்ற வங்கிகளிற்கான நியமத் தேவையின் படி 5 சதவீதத்திற்குக் குறையாத I ஆந் தர மூலதன போது விகிதத்தையும் ஒட்டுமொத்தமாக 10 சதவீதத்திற்குக் குறையாத மூலதனப் போதுமை விகிதத்தினையும் பேணிவருதல் வேண்டும். 2016 திசெம்பர் இறுதியளவில் வங்கியின் I ஆந் தர மூலதன போது விகிதமும் ஒட்டுமொத்த மூலதன போதுமை விகிதமும் முன்னைய ஆண்டின் முறையே 9.9 சதவீதம் மற்றும் 12.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முறையே 9.8 சதவீதம் மற்றும் 12.1 சதவீதமாக குறைவடைந்திருந்தது.
பாசல் 111 குறைந்தபட்ச மூலதனத் தேவை மற்றும் ஏற்றத்தாழ்வு விகித சட்டகத்தினை செயற்படுத்துதல் 2017 யூலை 01 ஆதல்

நடைமுறைக்கு வருகின்றது. மிகத் தாக்குப்பிடிக்கும் விதத்தில் வங்கித் தொழிலிற்காக பங்களிப்புச் செய்கையில் இந்த உத்தேச மாற்றங்களை அமுல்படுத்துவதற்கு வங்கி தயாராகவுள்ளது.

## தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கி 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தினால் இலங்கையிலுள்ள அரசுடையமான வங்கியாக தாபிக்கப்பட்டிருந்ததுடன். 1988 இன் 36 ஆம் இலக்க வங்கிகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிமம்பெற்ற விசேட வங்கி என்ற அந்தஸ்த்து வழங்கப்பட்டிருந்தது. அதிகாரச்சட்டத்தின் 2(அ) பிரிவு மற்றும் அதற்கான திருத்தங்களிற்கு அமைய, விசேடமாக மட்டுப்படுத்திய ஆற்றல்களைக் கொண்ட இலங்கை மக்களிடையே சேமிப்பினை மேம்படுத்தி அதன் மூலம் சேகரிக்கப்படுகின்ற சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்தலே வங்கியின் குறிக்கோளாக காணப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கி 2016 ஆம் ஆண்டின் போது சில புதிய கிளைகளை திறந்திருந்ததுடன், அதற்கமைய 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட மொத்த கிளைகளின் எண்ணிக்கை 250 ஆகும். அத்துடன், சேமிப்புக்களை சேகரிக்கும் நோக்கில் 2,858 பாடசாலை வங்கி அலகுகள் காணப்பட்டதுடன், ஆண்டின் போது அவ்வாறான 571 அலகுகளின் அதிகரிப்பு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது வங்கியின் மொத்த வைப்பு அடிப்படை ரூபா 61.5 பில்லியனால் அல்லது 10 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், 2016 இன் இறுதியளவில் அது ரூபா 657.3 பில்லியனை அண்மித்திருந்தது.

வங்கியின் மொத்த சொத்து அடிப்படை ரூபா 63.6 பில்லியனால் அல்லது 7.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருந்ததுடன், 2016 திசெம்பர் அளவில் ரூபா 911 பில்லியனை தாண்டியிருந்தது. ஆண்டின் போது வங்கிகளிற்கும் ஏனைய வாடிக்கையாளர்களிற்கும் வழங்கப்பட்டிருந்த கடன்கள் ரூபா 52 பில்லியனால் அதிகரித்திருந்தமை சொத்துக்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணியாக அமைந்திருந்தது. அது ஆண்டின் போது 10 சதவீதமான வைப்புக்களின் வளர்ச்சியினால் நிதியிடப்பட்டிருந்தது. 2015 இல் அறிவிக்கப்பட்டிருந்த 3.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் செயற்பாடற்ற கடன்களின் விகிதம் 1.7 சதவீதமாக அறிவிக்கப்பட்டு ஆண்டின் போது வங்கியின் சொத்துக்களின் தரம் (Asset Quality) முன்னேற்றமடைந்திருந்தது.

வங்கி ரூபா 13 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபத்தை 2016 ஆம் ஆண்டில் அறிவித்திருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.1 சதவீத அதிகரிப்பாகும். இருப்பினும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 1.5 பில்லியனால் அல்லது 5.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

வங்கியின் மூலதனப் போதுமை விகிதம் குறைவடையும் போக்கினை காண்பித்திருந்த போதிலும், அவை நியமத் தேவைப்பாடுகளைக் காட்டிலும் உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டிருந்தன. ஆரம்ப மூலதனப் போதுமை விகிதமும் ஒட்டுமொத்த மூலதனப் போதுமை விகிதமும் முறையே 12.53 (குறைந்தது 5 சதவீதம்) மற்றும் 14.68 சதவீதம் (குறைந்தது 10 சதவீதம்) ஆகக் காணப்பட்டன. அத்துடன், வங்கியினால் மூலதனப் போதுமை விகிதத்தை பேணிவருவதற்காக தனிப்பட்ட இடமொன்றாக

(ீசளையவந ீடயஉநஅநெவ) 2016 திசெம்பர் மாதத்தில் ஆண்டிற்கு 13 சதவீத விகிதத்தில் ஒன்று ரூபா 100 வீதப்படி முன்னுரிமை, பிணையற்ற, மீட்கப்படத்தக்க ரூபா 6 பில்லியன் பெறுமதியான தொகுதிக்கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. 2016 திசெம்பர் 29 ஆந் திகதி இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 2016 இன் 1 ஆம் இலக்க பணிப்புரையின் பிரகாரம் 2017 யூலை 01 ஆந் திகதி முதல் தேசிய சேமிப்பு வங்கியினால் 6.25, 7.75 மற்றும் 11.75 மூலதனப் போதுமை விகிதங்கள் பேணிவரப்படுதல் வேண்டும்.

### அரச ஈட்டு முதலீட்டு வங்கி

அரச ஈட்டு முதலீட்டு வங்கி 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், தொடர்புடைய திருத்தங்கள் மற்றும் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் மற்றும் வீடமைப்பு அபிவிருத்திக்கு உதவுதல் வங்கியின் பணியாக உள்ளது.

2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் வங்கியின் மொத்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 28 பில்லியனை தாண்டியிருந்ததுடன், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 3.6 சதவீத அதிகரிப்பாகும்.

2016 ஆம் ஆண்டில் ரூபா 1 பில்லியனால் அல்லது 3 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்திருந்த வங்கியின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியானது ஆண்டின் இறுதியளவில் ரூபா 35 பில்லியனை தாண்டியிருந்தது. வாடிக்கையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்த கடன்கள் ரூபா 1.6 பில்லியனால் அதிகரித்திருந்தமையே சொத்துக்கள் அதிகரிப்பதற்கு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

வங்கியினால் ரூபா 706 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.68 சதவீத அதிகரிப்பாகும். இருப்பினும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 6 பில்லியனால் அல்லது 0.34 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (எச்டிஎவ்சீ வங்கி)

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி 1997 இன் 07 ஆம் இலக்க (2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட) இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்ததுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் மூலம் உரிமம் பெற்ற விசேட வங்கியாகவும் மாற்றப்பட்டது. அதிகாரச்சட்டத்தின் 12(அ) மற்றும் திருத்தங்களின் பிரகாரம் அனைத்து இலங்கையர்களினதும் வீடமைக்கும் கனவை நனவாக்குவதற்காக வீடமைப்பு நோக்கத்திற்கான நிதி வசதிகளை வழங்குவதில் சந்தையில் தலைவராக உருவாகுவதே வங்கியின் குறிக்கோளாக உள்ளது.

2016 ஆம் ஆண்டில் புதிதாக கிளைகள் திறக்கப்படாதிருந்ததுடன், மொத்தக் கிளைகளின் வலைப்பின்னலானது அந்த ஆண்டின் இறுதியளவில் 39 ஆகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் வங்கியின் கடன் கலப்பு ரூபா 26.68 பில்லியனாக காணப்பட்டதுடன், வங்கியின் கடன் கலப்பானது 13.39 சதவீதத்தால்

அதிகரித்து 2016 இன் இறுதியளவில் அது ரூபா 30.26 பில்லியனாக காணப்பட்டது. அதன் காரணமாக வங்கியின் வட்டி வருமானம் முன்னைய ஆண்டின் ரூபா 4.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் ரூபா 5.4 பில்லியன் வரை 17 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்திருந்தது. வங்கியின் வைப்பு அடிப்படையானது, 2015 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 28.59 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.3 சதவீதத்தினால் அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 32.12 பில்லியனாக மாற்றமடைந்திருந்தது.

வங்கியின் ஒட்டுமொத்த சொத்த அடிப்படை ரூபா 3.69 பில்லியனால் அல்லது 8.8 சதவீதத்தால் அதிகரித்து 2016 இன் இறுதியளவில் அது ரூபா 45.6 பில்லியனாக காணப்பட்டது. சொத்துக்கள் அதிகரிப்பதற்கான பிரதான பங்களிப்பிற்கு கடன் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்டிருந்த 13 சதவீத வளர்ச்சியே காரணமாகும். 2015 ஆம் ஆண்டின் 18.38 செயற்பாடற்ற கடன்கள் (என்பிஎல்) விகிதம் 2016 இல் 17.58 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை ஆண்டின் சொத்துக்களின் தரத்தின் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்திருந்தது.

2016 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வரிக்கு முன்னரான இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.8 சதவீத குறைவை அறிவித்து ரூபா 660 மில்லியனாக காணப்பட்டது. இருப்பினும், தேறிய வட்டி வருமானது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 157 மில்லியனால் அல்லது 7.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

மூலதனப் போதுமைத்தன்மை, குறைந்தபட்ச மூலதனத் தேவை மற்றும் பங்குதாரர்களிற்கு பெறுமதியை உருவாக்குதல் முதலாந்தர முன்னுரிமையாவதுடன், மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலத்தினுள் பங்குதார்களின் நிதியம் 10.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. பங்கொன்றுக்கான சொத்தின் பெறுமதி ரூபா 51.98 இலிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 57.68 வரை 10 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. இருப்பினும் பலவீனமான உழைப்பாற்றல் காரணமாக 2016 ஆம் ஆண்டில் பங்கொன்றுக்கான உழைப்பு ரூபா 7.87 இலிருந்து ரூபா 6.10 வரை குறைவடைந்திருந்தது. பிரதான மூலதன விகிதமும் (Tier 1) மொத்த மூலதன விகிதமும் (Tier 2) குறைந்தபட்ச நியதிச்சட்ட தேவைப்பாடான 5 சதவீதத்தினையும் 10 சதவீதத்தினையும் தாண்டியிருந்ததுடன், அவை முறையே 13.11 சதவீதம் மற்றும் 11.76 சதவீதமாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், 2014 சனவரி 17 ஆந் திகதிய நிதித்துறை நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்கான பிரதான திட்டத்திற்கமைய வெளியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் இல. 02/17/402/0073/002 இன் கீழ் அடிப்படை மூலதனம் 2016 சனவரி 01 ஆந் திகதியளவில் ரூபா 5,000 மில்லியனாக காணப்படுதல் வேண்டும்.

## பிராந்திய அபிவிருத்தி வங்கி

பிரதானமாக நுண்பாக நிதி நிறுவனங்களிற்கும் சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாண்மைகளிற்கும் நிதியுதவிகளை வழங்கி அபிவிருத்திப் பணியின் மேம்படுத்துதல் மற்றும் பெண்களின் முன்னேற்றத்தின் ஊடாக இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கான வசதிகளை வழங்குதல் என்ற குறிக்கோள்களுடன் 2010 ஆம் ஆண்டில் 06 பிராந்திய அபிவிருத்தி வங்கிகளை ஒன்றிணைத்து பிராந்திய அபிவிருத்தி வங்கி தாபிக்கப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் வங்கியின் தேறிய வட்டி வருமானம் ரூபா 1,025 மில்லியன் அல்லது 15 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபமானது 21 சதவீதத்துடன் அதிகரிப்புடன் ரூபா 641 மில்லியன் வரை 2016 இல் அதிகரித்திருந்தது. அத்துடன், 2016 இன் இறுதியில் செயற்பாடற்ற கடன் விகிதம் 2.85 சதவீதம் வரை குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. கடன் மற்றும் முற்பணங்களும் வாடிக்கையாளர்களின் வைப்புக்களும் முறையே 21 சதவீதம் மற்றும் 22 சதவீதத்தினால் ஆண்டின் இறுதியில் அதிகரித்திருந்தன. இருப்பினும், இடர் அடிப்படையில் நிறையளிக்கப்பட்டிருந்த மொத்தச் சொத்துக்களிற்கு எதிரான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டு விகிதமான 10 சதவீதம் பேணப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் 2016 ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்டது.

## லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் வங்கியின் மொத்த வட்டி வருமானம் ரூபா 85 மில்லியன் அல்லது 15 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 34 சதவீதத்துடன் 2016 ஆம் ஆண்டிற்கான இலாபம் ரூபா 285.7 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா 271 மில்லியன் அல்லது 10 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இருப்பினும், ஆண்டின் இறுதியளவில் செயற்பாடற்ற கடன் விகிதமானது 39.2 சதவீதம் வரை தொடர்ந்தும் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. வாடிக்கையாளர்களின் வைப்புக்கள் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் 19 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## பிரதான கணக்காய்வு காண்புகள்

## இலங்கை மத்திய வங்கி (CBSL)

இலங்கை மத்திய வங்கியினால் கட்டிடங்களை வாடகைக்கு விடுதல்

நாணயச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம்,“சீபீஎஸ்எல் ஆனது அதன் கோரிக்கைகளில் எவற்றையேனும் திருப்திப்படுத்துவதற்கான அவ்வாறான ஆர்வம் தவிர்ந்த எந்தவொரு வியாபாரத்தில் அல்லது நேரடியாக ஆர்வம் கொண்ட வர்த்தக, கைத்தொழில் அல்லது வேறு கையேற்றலில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்”. இந்த ஏற்பாட்டுக்கு முரணாக சீபீஎஸ்எல் இற்குச் சொந்தமான பின்வரும் கட்டிடங்கள் குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்திக் கொள்ளப்படாது வெளித் தரப்பினர்களிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கியினால் 2016 ஆம் ஆண்டில் வாடகை வருமானமாக ரூபா 426.6 மில்லியன் ஈட்டப்பட்டிருந்தது.

மதியுரைச் சேவைகள் மற்றும் ஆலோசனை மன்றத்திற்கான கொடுப்பனவுகள்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசித்து காணாமல் போனோர் தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக ஆலோசனை மன்றம் என்ற வகையில் மூன்று சர்வதேச நிபுணர்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் சனாதிபதி 2014 யூன் 28 ஆந் திகதி நியமித்திருந்தார்.
இலங்கை மத்திய வங்கியினால் எவ்வித மீள்நிரப்புதல் அடிப்படையுமின்றி மேற்படி ஆலோசனை மன்றத்தினதும் அவர்களது பதவியணியினதும் மீளாய்ண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 145

மில்லியன் மற்றும் ரூபா 111.5 மில்லியன் தொகையான மதியுரைக் கட்டணங்கள், வதிவிட மற்றும் ஏனைய கட்டணங்கள் போன்ற செலவினங்கள் சீபீஎஸ்எல் இனால் செய்யப்பட்டிருந்தன. ஆலோசனை மன்றத்தின் ஆலோசனைக் கட்டணமாக 2016 ஆம் ஆண்டில் ரூபா 21 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி செலவினங்கள் எவ்வித மீள்நிரப்புதலுமின்றி சீபீஎஸ்எல் இனால் செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்குறித்த மதியுரைஞர்களிற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் இடையே எவ்வத உடன்படிக்கைகளும் காணப்பட்டிருக்கவில்லை. மேற்படி மதியுரைஞர்களின் கடமைகள் சீபீஎஸ்எல் இன் குறிக்கோள்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

குறைபாடுகளுடன் கூடிய செயற்பாடுகளும் நிதி மோசடிகளும்

முதலாந்தர வணிகருடன் இலங்கை மத்திய வங்கியினால் அதன் நிதிகளை வர்த்தகம் செய்யக்கூடிய பின்னோக்கிய மீள்கொள்வனவு (tradable reverse repo) முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளெடுக்கப்பட்ட பிணையங்கள் தொடர்பில் எவ்வித பிணைகளையும் மீண்டும் ஒப்படைக்காது கருதுகோளான பிணையங்கள் முதலாந்தர வணிகரால் மீளெடுக்கப்பட்டமை காரணமாக இந்த முதலீடுகள் தொடர்பில் லங்கா சிகியுரிடி சிஸ்ரம் (Lanka Security System) இல் பூச்சிய மீதி காண்பிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 04 எடுக்கப்பட்ட நாணயச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள் இன்றி மேற்படி முதலீடுகளில் மீண்டும் மீண்டும் முதலீடு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. இந்த முதலாந்தர வணிகருடன் இலங்கை மத்திய வங்கியின் நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகள் இன்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்த முதலீடுகளின் பெறுமதி 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.9 பில்லியனாகும்.

2012 திசெம்பர் 10 மற்றும் 2012 திசெம்பர் 14 ஆம் திகதிகளில் முன்னர் மேற்கொண்டிருந்த பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த குறித்த வணிகரின் வரம்பு மீறுதல்கள் தொடர்பில் (சில வாடிக்கையாளர்களிற்கு போதியளவு பிணையங்களை ஒதுக்கியிருக்காமை மற்றும் ஐஎல்எவ் வசதியினை பெற்றுக்கொள்வதற்காக வாடிக்கையாளர் பிணையங்களை பயன்படுத்தியிருந்தமை) 2013 யூன் 06 ஆந் திகதி பல எச்சரிக்கை கடிதங்களையும் நெறிப்படுத்தலையும் சீபீஎஸ்எல் வழங்கியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. முதற்தர வணிகரினால் புரியப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் பல்வேறு சுட்டிக்காட்டுதல்கள் காணப்பட்ட போதிலும், சீபீஎஸ்எல் இனால் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக இதனையொத்த முறையற்ற செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டிலும் இந்த வணிகரினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன், இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவினால் 2015 மே 20 மற்றும் 21 ஆந் திகதிகளில் இந்த முதலாந்தர வணிகர் தொடர்பாக களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட இக் களப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டிருந்தது.

### இலங்கை வங்கி

- 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வங்கியின் கடன் மற்றும் முற்பணங்களின் மீதி ரூபா 1,047,190 மில்லியனாகும். மேற்படி கடன் மீதியில்

ரூபா 319,952 மில்லியன் அல்லது 31 சதவீதத்தை அரசாங்க அதிகாரத்தரப்பினரும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளும் கொண்டிருந்ததுடன், எஞ்சிய ரூபா 727,237 மில்லியன் அல்லது 69 சதவீதத்தை அரச சார்பற்ற நிறுவனங்கள் கொண்டிருந்தன. அரசாங்க கடன்களில் ரூபா 30,998 மில்லியன் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ளமை காரணங்களுடன் இனங்காணப்பட்டிருந்ததுடன், அதற்கான போதுமான சான்றுகள் காணப்பட்ட போதிலும், அவை நட்ட இழப்புக்களின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேற்படி மீதியினுள் ரூபா 12,635 மில்லியன், ரூபா 7,742 மில்லியன், ரூபா 9,772 மில்லியன், ரூபா 496 மில்லியன் மற்றும் ரூபா 352 மில்லியன் என்ற வகையில் முறையே நகர அபிவிருத்தி அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட சதொச, நெற் சந்தைப்படுத்தும் சபை, அக்கரபத்தன பெருந்தோட்டக் கம்பனி மற்றும் இலங்கை கைப்பணிகள் சபை என்பவற்றிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தன. நெற் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,802 மில்லியன் நீங்கலாக ஏனைய அனைத்துக் கடன்களும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திறைசேறி உத்தரவாதத்தால் அல்லது ஏனைய பிணைகளால் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை.

- வங்கியினால் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 235,458 மில்லியன் இனங்காணப்பட்ட கடன் அளவு அரசு சார்பற்ற நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறான பொருண்மையான கடன் பெறுமதி இலங்கை வங்கியின் மாலபே கிளையினால் தெற்காசிய தொழில்நுட்ப மருத்துவ (தனியார்) கம்பனிக்கு (South Asian Institute of Technology and Medicine (pvt) Ltd. SAITM) இற்கு வழங்கப்பட்டிருந்தது. 2011 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் படி, வங்கியானது போதனா வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளிற்காக ரூபா 600 மில்லியனை வழங்குதல் வேண்டும். இருப்பினும், 2017 யூன் 05 ஆந் திகதி போதனா வைத்தியசாலை, பட்டப்பின் படிப்பு நிறுவனம் மற்றும் பொறியியல் பீட நிர்மாண நடவடிக்கைகளிற்காக ரூபா 1,820 மில்லியனை வங்கி வழங்கியிருந்தது. அதற்கும் மேலாக, ரூபா 925.5 மில்லியன் தொகை பல்கலைக்கழகத்தினதும் வைத்தியசாலையினதும் தொழிற்படு மூலதனத் தேவைக்காக வழங்கப்பட்டிருந்தது.

அலுவலக அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கை இல. 28/2015 இன் படி, வழங்கப்படக்கூடிய உச்ச எல்லை வர்த்தக ஆதனங்களை கையேற்பதற்கான செலவில் 60 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும், வங்கியினால் வைத்தியசாலையின் ஆதனங்களின் சந்தைப் பெறுமதியில் 87.4 சதவீதமும் பல்கலைக்கழகத்தின் ஆதனங்களின் சந்தைப் பெறுமதியில் 94.81 சதவீதமும் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி கடன் வசதிகளிலிருந்து ரூபா 1,625 மில்லியன் வைத்தியசாலை ஆதனத்தினை ஈடாகப்பெற்று வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆதனத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து 2012 மார்ச் 13 ஆந் திகதி 30 ஆண்டுகளிற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 5 ஏக்கர் 28

பர்ச் விஸ்தீரணமுள்ள குத்தகைக் காணியும் உள்ளடங்கியிருந்தது. இருப்பினும், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 130 மில்லியன் குத்தகைப் பெறுமதி செலுத்தப்பட்டிருந்ததுடன், மேற்படி கடனை வழங்குகையில் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 414 மில்லியன் என வங்கியினால் கருதப்பட்டிருந்தது.

நிலமை இவ்வாறிருக்கையில், SAITM நிறுவனத்திற்கு 2017 மார்ச் மாதம் முதல் கடன் தவணைப்பணத்தை செலுத்துவதற்கு முடியாது போயிருந்ததுடன், அக்கடன் செயற்பாடற்ற கடன் என வகைப்படுத்தப்படுவதனைத் தவிர்ப்பதற்காக வங்கியினால் 2017 மே 02 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் பல வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அவையாவன, தற்போதைய கடன்களிற்காக 2017 மார்ச் முதல் செப்தெம்பர் வரையான 7 மாதங்களிற்கு நிவாரணக் காலத்தை அங்கீகரித்தல், தற்போதைய கடன்களிற்கு வட்டியினைச் செலுத்துவதற்காக 4 சதவீத வருடாந்த சலுகை வட்டி வீதத்தில் ரூபா 103 மில்லியன் கடனை அங்கீகரித்தல் மற்றும் வைத்தியசாலையினதும் பல்கலைக்கழகத்தினதும் தொழிற்படு மூலதனத் தேவையினை பூர்த்திசெய்வதற்காக 12.5 சதவீத வருடாந்த சலுகை வட்டி வீதத்தில் ரூபா 300 கடனை அங்கீகரித்தல் என்பனவாகும். மேற்படி இரண்டு கடன்கள் குறித்த சலுகைக் காலங்கள் மற்றும் SAITM நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் தனிப்பட்டோர் பிணைகளின் மீது வழங்கப்பட்டிருந்தன. மேலும் SAITM நிறுவனத்தின் கோரிக்கைக்கு அமைய, 2017 பெப்ரவரி மாதம் அறவிடப்பட்ட ரூபா 27 மில்லியன் கடன் தவணைப்பணத்தை மீளளிப்பதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது. இக் கடன் வசதிகள் மாலபே கிளையின் மொத்தச் செயற்பாட்டுக் கடன்களில் 45.5 சதவீதமாகக் காணப்பட்டதுடன், இவ்வாறான நிலைமை கடன் அறவிடுதல் இடரினை அதிகரிக்கின்றது.

- இலங்கை வங்கிக்குச் சொந்தமான 6 மாடிகளைக் கொண்ட 261,610 சதுர அடி பரப்பளவைக் கொண்ட கட்டிடமொன்று யோர்க் வீதியில் அமைந்துள்ளது. அந்த மொத்தப் பரப்பளவில் 163,890 சதுர அடியில் நகரக் கிளையும் மேல் மாகாண வட அலுவலகமும் 2013 ஆம் ஆண்டு வரை இயங்கி வந்திருந்ததுடன் எஞ்சிய 97,720 சதுர அடிகள் வரையறுக்கப்பட்ட ஹெடேல்ஸ் கொழும்பு (1963) (Grand Oriented Hotel) நிறுவனத்தினால் இதுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதிய விலை மதிப்பீட்டு அறிக்கையின் படி, காணியினதும் கட்டிடத்தினதும் பெறுமதி ரூபா 3,413 மில்லியனாகும். இருப்பினும், 2013 ஆம் ஆண்டு முதல் கட்டிடத்தின் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட குறிப்பிடத்தக்களவு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் திணைக்களத்தினால் அக் கட்டிடத்தின் கட்டமைப்பு தொடர்பில் 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அறிக்கையின் படி, மோசமாக சேதமடைந்து வருகின்ற பல இடங்கள் சுட்டிக்காட்டப்பட்டு, கட்டிடம் தொடர்பில் 15 பரிந்துரைகள் பிரேரிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், மேற்படி இரண்டு அலுவலகங்களிற்குமான வாடகையாக ரூபா 359 மில்லியன் கிரயமொன்று 2013 ஆம் ஆண்டு முதல் வங்கியினால் செய்யப்பட்டிருந்தது.

மூன்று கம்பனிகள் இலங்கை வங்கியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாதும் வாடகையினை செலுத்தாதும் கட்டிடத்தின் கட்டிடத்தின் முதலாம் மாடியிலுள்ள 3 பிரிவுகளில் குடியிருந்து வருகின்றமை 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட எமது பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும், மேற்படி சிக்கலைத் தீர்ப்பதற்காக முகாமைத்துவம் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

### மக்கள் வங்கி

- வங்கியினால் புத்தளம் பிரதேச பிரதான அலுவலகம், உடுபுஸ்ஸல்லாவ கிளை மற்றும் எவரிவத்த கிளை ஆகியவற்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 3,601,897 செலவிடப்பட்ட பின்னர், இந்த பாதிடப்பட்ட செயற்திட்டங்களை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அச் செலவினம் வருமானக்கூற்றிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

- வங்கியின் பொறியியல் திணைக்களத்தினால் திருகோணமலை கிளை, திருகோணமலை பிரதேச பிரதான அலுவலகம், பேருவலை கிளை மற்றும் மாத்தளை கிளை ஆகியவற்றை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 10,725,573 செலவிடப்பட்ட பின்னர் நிர்மாண பொறியியல் நடவடிக்கைகள் பீபல்ஸ் லீசிங் பிரொபெடி டிவலப்மென்ட் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக திருகோணமலை கிளைக்குரிய ரூபா 2,536,340, திருகோணமலை பிரதேச பிரதான அலுவலகத்திற்குரிய ரூபா 6,378,155 மற்றும் பேருவலை கிளைக்குரிய ரூபா 202,356 செலவினம் வருமானக் கூற்றிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன், மாத்தளை கிளைக்குரிய ரூபா 1,608,722 செலவினம் தொங்கல் கணக்கில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி அதிகாரச்சட்டத்தின் படி, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமானது 20,000,000 சாதாரண பங்குகளிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. வங்கி 999,960 பங்ககளை வழங்கியிருந்த போதிலும், வழங்குவதற்காகவுள்ள மூலதனம் ரூபா 7,152 மில்லியனாக காணப்பட்டதுடன், அது அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தையும் விஞ்சிய 143,040,000 பங்குகளிற்கு சமமானதாகும். இருப்பினும், வழங்குவதற்காக கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள ரூபா 7,152 அங்கிகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்தை மக்கள் வங்கியின் அதிகாரச்சட்டத்தை திருத்தியமைப்பதன் மூலம் அதிகரிக்க வேண்டியுள்ளது.

- வங்கியினால் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்ட பேருவல, ஹதரியலந்த, ஹக்மன, கொடிகாமம், மதுகம மற்றும் நாவுல்ல கிளைகளிற்குரிய ரூபா 634,655,694 பெறுமதி மூலதனமாக்கப்படாது நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

### தேசிய சேமிப்பு வங்கி

- சுவெப் கிரயம் (swap cost) என வங்கியினால் 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 403.23 மில்லியன் மற்றும் ரூபா 842.67 மில்லியன் முறையே கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் மற்றும்

பொதுத் திறைசேரி ஆகியவற்றிலிருந்து கிடைக்க வேண்டியவையாக காண்பிக்கப்பட்டிருந்தது. சுவெப் கிரயம் (swap cost) தொடர்பில் எவ்வத ஆவணச் சான்றுகளோ அல்லது கடன் உடன்படிக்கைகளில் எவ்வித நிபந்தனைகளோ இல்லாமையால் இப் பெறுமதியினை அறவிடுதல் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிச்சயமற்றதாக காணப்பட்டது.

- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மோசடியான பணம் மீளப்பெறுதல்கள் ரூபா 95.5 மில்லியனாக காணப்பட்டதுடன், அது ரூபா 1.2 மில்லியன் அல்லது 1.27 சதவீத அதிகரிப்பை காண்பிக்கின்றது. இதில் ரூபா 95 மில்லியன் ஓராண்டிற்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டதுடன், ரூபா 8.8 மில்லியன் 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது. மேலும், நிலுவையான மீதிகளிடையே கேகாலை மற்றும் நீர்கொழும்பு கிளைகள் தொடர்பிலான ரூபா 0.19 மில்லியன் மற்றும் ரூபா 0.05 மில்லியன் என்பன முறையே 21 ஆண்டுகள் மற்றும் 14 ஆண்டு காலமாக நிலுவையாக காணப்பட்டிருந்தன

- 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி அதிகாரச்சட்டத்தின் 47(4) ஆம் பிரிவின் பிரகாரம், உரிமை கோரப்படாத வைப்புக்களில் ஒதுக்கத்திற்கு மாற்றிய தொகையிலிருந்து வாடிக்கையாளர்களிற்குச் செலுத்திய தெகை, திறைசேரிச் செயலாளரினால் திரட்டிய நிதியத்திலிருந்து கூடிய விரைவில் வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். வங்கியினால் 2000 – 2016 காலப்பகுதியில் ரூபா 1,115.43 மில்லியன் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை வரையிலும் திறைசேரிச் செயலாளரினால் எவ்விதத் தொகையும் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை வங்கித் துறையின் மொத்த வைப்பு அடிப்படை 143 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், குறித்த காலப்பகுதியில் தேசிய சேமிப்பு வங்கி 85 சதவீத அதிகரிப்பையே பெற்றுக்கொண்டிருந்தமையின் விளைவாக 7 ஆண்ட காலத்தினுள் தேசிய சேமிப்பு வங்கியின் சந்தைப் பங்கு 13.7 சதவீதத்திலிருந்து 10.4 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. மேலும், வங்கித் துறையின் மொத்தச் சொத்து அடிப்படைக்கமைய, தேசிய சேமிப்பு வங்கியின் சந்தைப் பங்கு 2014 ஆம் ஆண்டில் 11 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், அதன் பின்னர் 11 சதவீத்திற்கு குறைவாக காணப்பட்டமையால் குறைவடையும் போக்கை காண்பித்தது. எவ்வாறாயினும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வங்கியினால் உரிமம்பெற்ற விசேட வங்கி என்ற வகையில் சந்தைப் பங்கினை 75 சதவீதத்திற்கும் மேற்பட்டதாக பேணிவருவதற்கு முடிந்திருந்தது.

- ஐக்கிய அமெரிக்க மொலர் 250 மில்லியன் பெறுமதியான சர்வதேச முறிகளை வழங்குதலுடன் தொடர்புடைய வழங்கல் ஆவணங்களின் பிரகாரம், முறிகளை வழங்குவதன் மூலம் கிடைக்கின்ற பணமானது உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்ற அரசாங்க முயற்சிகள், அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது கட்டுப்பாட்டிலுள்ள செயற்திட்டங்களிற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக கிடைக்கப்பெற்ற பணத்தொகை கிடைத்திருந்த திகதி முதல் திறைசேறி

முறிகள் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

- 2016 திசெம்பர் 31 ஆந் திகதியன்று வங்கியினால் ரூபா 280,718 தொகை கடன் வசதியாக வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 4,774 மில்லியன் அல்லது 1.70 சதவீதமானவை செயற்பாடற்ற கடன் மீதியென காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியன்று காணப்பட்ட மொத்த அடகுக் கடனில் ரூபா 2,348 மில்லியன் அல்லது 12.37 சதவீதம் செயற்பாடற்ற கடன் என அறிவிக்கப்பட்டிருந்தது.

- வங்கியின் தலைமை அலுவலகத்திற்காக 18 மாடிகள் கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டு முதல் ரூபா 35.23 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. இப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டில் எவ்வித நிர்மாணங்களும் மேற்கொள்ளப்படாது 2016 திசெம்பர் 31 ஆந் திகதியன்று இச் செலவினம் நடைபெற்றவரும் வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

- 2016 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் என ரூபா 8,614,361 காண்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது முறையே ரூபா 58,137,838 மற்றும் ரூபா 42,526,685 தொகை இக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டும் செலவு வைக்கப்பட்டுமிருந்த போதிலும், அவற்றில் அநேக வரவு மற்றும் செலவு வைத்தல் பதிவுகள் முன்னைய ஆண்டிற்குரியவையாக காணப்பட்டதுடன், அவை தொடர்பில் போதிய தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. அதற்கமைய, ரூபா 24,225,514 வரவு மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. போதியளவு தகவல்கள் இன்மை காரணமாக இப் பெறுமதியினை அறவிடுவதற்கான இயலுமை நிச்சயமற்றதாகும்.

- 2016 திசெம்பர் 31 ஆந் திகதியன்று செலுத்த வேண்டியிருந்த பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கணக்குகளில் ரூபா 13,199,560 அசாதாரண வரவு மீதி காணப்பட்டது. இந்த மீதிகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன், அதற்கமைய அத்திகதியில் உள்ளவாறான இந்த மீதியினை அறவிடுதல் நிச்சயமற்றதாகும்.

- 2016 திசெம்பர் 31 ஆந் திகதியன்று “தேறப்படுவதற்கான காசோலைகள்” கணக்கில் ரூபா 12,407,870 அசாதாரண வரவு மீதி காணப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களிலுள்ள ஏனைய கடன்பட்டோர் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

- கடன்கொடுத்தோர் கணக்கிற்கு ஒதுக்கப்படாத மீதியாக ரூபா 168,317,332 நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டது. இருப்பினும், அதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் படி, அந்த மீதி ரூபா 148,743,268 ஆனமையால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் ரூபா 19,574,064 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

- 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கிணக்கம் செய்யப்படாத வங்கிக் கணக்குகளிற்கிடையிலான வேறுபாடு ரூபா 1,856,831 ஆக இருந்தது.

- நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்ட ரூபா 799,884 பெறுமதியொன்று ஏனைய கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கிச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

- நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 30,891,485 பெறுமதியுடைய மூன்று

கணக்ககளின் மீதிக்காக கணக்காய்விற்குப் போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.

- 2016 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வங்கியின் திரவத்தன்மை உரிமம்பெற்ற விசேட வங்கித்துறையினைக் காட்டிலும் குறைவாகக் காணப்பட்டது. விபரம் அட்டவணை 16 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

.

| திரவத்தன்மை விகிதம் | 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | அ.ஈ.மு.வங்கி சதவீதமாக | உ.பெ.வி.வங்கி துறை சதவீதமாக | அ.ஈ.மு.வங்கி சதவீதமாக | உ.பெ.வி.வங்கி துறை சதவீதமாக |
| **திரவத்தன்மை சொத்துக்கள்/வைப்புக்கள்** | 22.82 | 61 | 23.64 | 67.2 |

அட்டவணை16 திரவத்தன்மை விகிதம் அரச ஈட்டு முதலீட்டு வங்கி மற்றும் உரிமம் பெற்ற விசேட வங்கிகள்

அதற்கமைய, ஆண்டின் போது வங்கியின் திரவத்தன்மை விகிதம் தொழிலிற்கான சாராசரியினைக் காட்டிலும், குறைவாக காணப்பட்டதுடன், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 5.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

- 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை உரிமம் பெற்ற விசேட வங்கித் துறையின் அடிப்படையிலமைந்த வங்கியின் சந்தைப் பங்கின் அடிப்படை புள்ளி (Base Points) 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. இருப்பினும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த அடிப்படை புள்ளி (Basis Points) 16 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

- 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைக் கடன் ரூபா 28,528 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 7,815 மில்லியன் செயற்பாடற்ற கடனாக இனங்காணப்பட்டிருந்தது. அது மொத்தக் கடனில் 27 சதவீதத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்தது.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணயினர் எண்ணிக்கை ஐந்து ஊழியர்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 4,918 மில்லியன் பெறுமதியான வங்கியின் தேறிய சொத்துக்களின் அளவு மற்றும் செயற்பாட்டு நடைமுறைகளின் சிக்கலான தன்மைகளிற்கமைய, உள்ளகக் கட்டுப்பாட்டின் முக்கியமான பரப்புக்களை மேவுகை செய்வதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணியினர் போதுமானதாக காணப்படவில்லை. மேலும், வங்கியின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2016 சனவரி 01 ஆந் திகதியிலுந்து வெற்றிடமாக் காணப்பட்டது.

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபன வங்கி (எச்டிஎவ்சீ)

- 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 9.2 (ஆ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் கூடிய அமைப்பு வரைபடமொன்றும் வங்கியிடம் காணப்படாதிருந்ததுடன், அது பொதுத் திறைசேரியில் பதிவுசெய்யப்பட்டிருக்கவுமில்லை.

- 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தியின், அனைத்து அரசாங்க முயற்சிக்கும் ஆட்சேர்ப்புத் திட்டமொன்றும் ஒவ்வொரு பதவிக்குமாக பதவியுயர்வுத் திட்டமொன்றும் காணப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திட்டங்கள் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒத்திசைவுடன் பணிப்பாளர் சபை மற்றும்

வரிசை அமைச்சு ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அத் தேவைப்பாடுகளுடன் வங்கி இணங்கி ஒழுகியிருக்கவில்லை.

- கையேற்கப்பட்ட சொத்துக்களில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 14.42 மில்லியன் மொத்த மீதியினையும் அறவிடாது விற்பனை செய்திருந்தமையால் ரூபா 9.36 மில்லியன் நட்டம் வங்கிக்கு ஏற்பட்டிருந்தது.

- 1997 இன் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சடட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், வங்கியின் வழங்கிய மூலதனம் ரூபா 1,000 மில்லியனாக காணப்படுதல் வேண்டுமாயினும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கியின் வெளியிடப்பட்ட மூலதனம் ரூபா 962.09 மில்லியனாகும்.

- 2012 இன் 2 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டத்தின் 4(1)(IV) ஆம் பிரிவின் கீழுள்ள 6.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், வெளித் தரப்பினரிடமிருந்து சேவையினைப் பெற்றுக்கொள்கையில் கேள்வி நடைமுறையினை பின்பற்றுதல் வேண்டும். வங்கி அதற்காக 2014 இல் உருவாக்கியிருந்த கொள்கையின் பிரகாரமும், முத்திரையிடப்பட்ட கூறுவலைகளைக் கோருவதன் மூலம் வெளித்தரப்பினரிடமிருந்து சேவையினைப் பெற்றுக்கொள்தல் வேண்டுமென்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதனைப் பின்பற்றாது கடன்களை அறவிடும் நடவடிக்கைக்காக நிறுவனமொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

- சீபெங் நிதியத்தில் ரூபா 25.00 மில்லியன் முதலீடு செய்யப்பட்டமைக்காக முதலீட்டு பிரதிபலன்கள் 2015 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்திருக்கவில்லை.

- 2016 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம், விரிவான கொள்வனவுத் திட்டம் மற்றும் கொள்வனவு கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## பிராந்திய அபிவிருத்தி வங்கி

- பிராந்திய அபிவிருத்தி வங்கி அதிகாரச்சட்டத்தில் குசுறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக மொத்த இலக்கிடப்பட்ட கடனான ரூபா 73,735 மில்லியனில் ரூபா 38,014 மில்லியன் அல்லது 52 சதவீதம் இலக்கிடப்பட்டிருந்தது. வங்கி விவசாயம், கைத்தொழில், வியாபாரம் மற்றும் வர்த்தகம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளிற்காக ரூபா 21,428 மில்லியன் கடனையும், சிறிய மற்றும் நடுத்தரளவிலான நுண்பாக நிதி நிறுவனங்களிற்கு ரூபா 9,342 கடனையும் வழங்கியிருந்தது. மேலும், நுகர்வுக் கடன்கள், வீடமைப்புக் கடன்கள், வைப்புக்களின மீது வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் பதவியணியருக்கான கடன்கள் என்ற வகையில் ரூபா 27,166 தொகையினையும், அடகுக் கடனாக ரூபா 13,471 மில்லியனையும் வழங்கியிருந்தது. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி விடுவித்திருந்த மொத்தக் கடன்கள் ரூபா 71,407 மில்லியனாகும்.

- பாதீட்டு பிரேரணையான லிய இசுற கடன் திட்டத்தின் மூலம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15,199 எண்ணிக்கையான ரூபா 2,443.93 மில்லியன் பெறுமதியுடைய கடன்கள் வட்டியின்றி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், அதற்குத் தேவையான நிதி அரசாங்கத்தினால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62.92 மில்லியன் செயற்பாடற்ற கடனாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 23.12 மில்லியன் நட்டமாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

- 2006 இன் 10 ஆம் இலக்க வருமான வரி அதிகாரச்சட்டத்தின் 114 ஆம் பிரிவின் பிரகாரம், உழைக்கும் போதே செலுத்தும் வரி ஊழியர்களின் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு கழிக்கப்படாது 2016 ஆம் ஆண்டிற்காக ஊழியர்களின் உ.போ.செ. வரிச் செலவினமாக ரூபா 20.4 மில்லியனை வங்கி செலவிட்டிருந்தது.

## லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

- பிரதான வங்கிச் செயற்பாடுகளின் மீதுள்ள குறைந்தளவிலான கவனயீர்ப்பை வெளிப்படுத்தி 2016 ஆம் ஆண்டிற்கான மொத்த வட்டி வருமானமான ரூபா 707 மில்லியனில் ரூபா 339 மில்லியன் அல்லது 48 சதவீதம் மாத்திரம், கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கான வட்டி வருமானத்தை பிரநிதித்துவம் செய்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் முதலீட்டின் மீதான வட்டி வருமானம் ரூபா 368 மில்லியன் அல்லது 52 சதவீதமாகக் காணப்பட்டது. ஆகையால், முதலீட்டுச் செயற்பாடுகள் மீதான வட்டி வருமானத்தை உழைக்கும் ஆற்றல் காணப்படாதிருந்திருப்பின் வங்கிக்கு செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டிருக்கும்.

- வங்கியின் வைப்பு அடிப்படைய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 420.8 மில்லியன் வரை குறைவடைந்திருந்ததுடன். முன்னைய ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதக் குறைவு காண்பிக்கப்பட்டது. 5 ஆண்டு காலப்பகுதியினுள் வங்கியின் சந்தைப் பங்கு 1 சதவீதத்திற்கும் குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன்கள் மற்றும் வைப்புக்களின் சந்தைப் பங்கு முறையே 5.5 சதவீதத்தினாலும் 27 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

- வங்கியின் செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள், மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் ரூபா 1,467 மில்லியன் அல்லது 39.2 சதவீதமாகக் காணப்பட்டது. ஆகையால், ரூபா 919 மில்லியன் அல்லது 63 சதவீத நட்ட வகைப்படுத்தல் செய்யப்பட்டிருந்தது.

# விவசாயம்

நாட்டினுள் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக உணவு உற்பத்தியினை அதிகரித்தல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது.

- விவசாய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.
- விவசாய பல்வகைமை மற்றும் உற்பத்தியினை அதிகரித்தல்.
- கூட்டெரு பல்வகைமை மற்றும் உற்பத்தியினை அதிகரித்தல்.
- மண் பாதுகாப்பு அதிகாரச்சட்டம், காடழிப்பதை கட்டுப்படுத்தும் அதிகாரச்சட்டம், விதைகள் அதிகாரச்சட்டம், கன்றுகள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம், பசளை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கிருமிநாசினிகள் அதிகாரச்சட்டத்தின் நிர்வாகம்.
- விவசாயக்கல்வி, ஆராய்ச்சிகள் மற்றும் வியாபித்த சேவைகள்
- பாரம்பரிய வயல்களின் அபிவிருத்தி
- விவசாய முயற்சியாண்மை, அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் மற்றும் அதி தொழில்நுட்ப பணிகளின் அபிவிருத்தி

விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு திணைக்களங்களிடமிருந்து மற்றும் நியதிச்சட்ட சபை மற்றும் 12 நிறுவனங்களால் மேற்குறிப்பிடப்பட்ட பணி நிறைவேற்றப்பட வேண்டியதாக காணப்பட்டது. அந்த நிறுவனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

## ‘‘கமதொர’’ நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

விவசாய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்களின் பிரயோக அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவினை அதிகரிப்பதற்காக முழு இலங்கையும் உள்ளடக்கும் வகையில் ‘‘கம்தொர’’ எனும் பெயரிலான விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளிலும் இதற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராததுடன், வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டத்திலும் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், விவசாய அமைச்சின் வருடாந்த பாதீட்டில் பசளை மானியங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் ரூபா 62 மில்லியன் தொகை நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் நிதியேற்பாடு மேற்கொண்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## ‘‘விவசாய வாரம்’’ நிகழ்ச்சித்திட்டம்

விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழான நான்கு நிறுவனங்களால் ‘‘விவசாய வாரம்’’ நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இதன் போது 252 பால் கொடுக்கும் தாய்மாருக்கான தானம் வழங்குவதற்காக ரூபா 1.97 மில்லியன் தொகையும், மகளிர் விவசாய சம்மேளனத்திற்காக ரூபா 8.9 மில்லியன் மற்றும் மாவட்ட மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 14.4 மில்லியன் தொகை விவசாய அபிவிருத்தி திணைக்களத்தால் செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக கொவி சத்திய நிகழ்ச்சித்திட்டத்திற்காக விவசாய அமைச்சினால் ஊடக அனுசரணை நடவடிக்கைகளுக்காக ரூபா 16.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## குளம், ஏரி, வாய்க்கால்கள், நீர் விநியோக கட்டமைப்பு மற்றும் விவசாய வீதிகளை புனரமைப்பு செய்தல்

கைவிடப்பட்ட குளங்களை சுத்திகரித்தல், விவசாயிகளுக்கு தேவையான நீரினை தொடர்ச்சியாக விநியோகப்பதற்காக ஏரிகளை புனரமைத்தல் மற்றும் நீர் விநியோக கட்டமைப்பு, காய்வாய்கள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மீளாய்வாண்டின் போது ரூபா 2,000 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 1,971 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அந்த செலவினங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கம்பஹா மாவட்டத்தில் மினுவாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் ஏரி அமைப்பதற்காக ரூபா 2.05 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந்த செயற்திட்டம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.
- அனுராதபுரம் மாவட்டத்தின் இலுப்பன்கடவல முதல் இதிகஸ்பொத்தான வரையான விவசாய வீதியினை ரூபா 1.53 மில்லியன் செலவிட்டு புனரமைப்பதற்கு திட்டமிடப்பட்டவாறு நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.
- மேல் இதிகஸ் பொத்தான மஹாலதலாவ விவசாய வீதி ரூபா 1.03 மில்லியனுக்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அது திட்டமிடப்பட்டவாறு நீர்ச் சுரங்கத்தின் பக்கச்சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நீர் செல்லும் சுரங்கம் உடையும் அபாயத்துடன் காணப்பட்டது.
- 4 மாவட்டங்களின் விவசாய வீதிகளின் மதிப்பீடுகளின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டிராததுடன், வாய்க்கால்களை முறைப்படி பராமரிக்கப்படாமையால் அவற்றில் புதர் மண்டியிருந்தது.

## உர மானியங்களை செலுத்துதல்

2016 ஆம் ஆண்டிற்கான உர மானியத்தை செலுத்துவதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 35 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் சிறுபோகத்திற்காக ரூபா 6.47 பில்லியன் மற்றும் பெரும் போகத்திற்காக ரூபா 6.85 பில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. வங்கி மூலம் உதவு தொகைகளை செலுத்தும் போது இலங்கை வங்கியூடாக 454 விவசாயிகளுக்காக ரூபா 2.41 மில்லியன் தொகை விவசாயிகளல்லாத ஏனைய நபர்களின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. ராஜாங்கனை வம் இவுர

விவசாய சேவைகள் நிலையத்தின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள ஒரு பெண் விவசாயிக்காக செலுத்த வேண்டிய ரூபா 10,000 தொகைக்கு பதிலாக ரூபா 2.81 மில்லியன் தொகை தவறுதலாக பற்று வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2016 ஆம் ஆண்டில் சிறு போகத்தில் பயிர் செய்யாத 12 மாவட்டங்களின் 740,110 ஹெக்டேயர்கள் பரப்பளவான இடத்திற்காக ரூபா 1,045.25 மில்லியன் மற்றும் 2016 ஆம் ஆண்டின் சிறுபோகத்திற்காக ரூபா 3,554.39 மில்லியன் 2016 யூன் 30 ஆந் திகதியின் பின்னர் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக உர மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கம் எய்தப்பட்டிருக்கவில்லை.

### கைவிடப்பட்ட வயல்களின் பயிர்ச்செய்கை

2016 ஆம் ஆண்டிற்காக 25 மாவட்டங்களின் 30,000 கைவிடப்பட்ட வயல்களின் பயிர்ச்செய்கைக்காக ரூபா 1,320 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 30,000 கைவிடப்பட்ட வயல்கள் மற்றும் 902 சிறு நீர்ப்பாசன முறைமைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 5,950 கைவிடப்பட்ட வயல்கள் அல்லது 20 சதவீதம் மற்றும் 587 நீர்ப்பாசன முறைமைகள் அல்லது 65 சதவீதம் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. 16 மாவட்டங்களின் எந்தவொரு கைவிடப்பட்ட வயலும் அறுவடை செய்யப்பட்டிருக்கவில்லை.

### மேலதிக அலுவலக இடவசதிகளைப் பெற்றுக்கொள்ளல்

2015 செப்தம்பர் 27 ஆந் திகதிய 15/130/702/007 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பாராளுமன்ற கணக்குகள் குழு முமைமையை மீளமைப்பதற்காகவும் மேலதிக அலுவலக இடவசதி தேவைப்பாட்டினையும் பெற்றுக்கொள்வதற்காக விவசாய அமைச்சில் தாபிக்கப்பட்டிருந்த விவசாய மாளிகை கட்டிடத்தினை பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்காக இராஜகிரியவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 9 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்று வெளிவாரி தரப்பினரொருவரிடமிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த கட்டிடம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரமின்றி இரண்டு மாடிகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஏப்ரல் மாதம் முதல் 2017 யூலை மாதம் வரையிலும் வாடகையாக ரூபா 315.00 மில்லியன் தொகையும், அதற்கான பெறுமதிசேர் வரி, மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டுகளுக்காக தேசத்தை கட்டியெழுப்பும் வரிக்காக ரூபா 53.64 மில்லியன் தொகையும், மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்கள் இரண்டிற்காகவும் செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகைக்காக ரூபா 504.00 மில்லியன் தொகையான முற்பணமும் உள்ளடங்கலாக ரூபா 872.64 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்தது. இந்த கட்டிடத்தினை அலுவலக சூழலுக்கு பொருத்தமானதாக உருவாக்குவதற்காக 2017 யூலை மாதம் வரையிலும் மேலும் ரூபா 148.00 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 15 மாத காலமாக கட்டிடம் பயன்படுத்தப்பட்டிராததுடன், அதற்காக ரூபா 6.18 மில்லியன் தொகையான சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

### அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப நிறுவனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

- அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் 2000 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதன் பின்னர் மீளாய்வாண்டு வரையான 16 ஆண்டுகள்

காலப்பகுதியினுள் இயந்திரப் பொறியியலாளர் பிரிவின் கீழ் 37 பல்வேறு விதமான தொழில்நுட்ப இயந்திரங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றுள் 03 இயந்திரங்கள் மாத்திரம் உரித்துறுதி பெறப்பட்டிருந்ததுடன், அந்த உற்பத்திகளில் 92 சதவீதமான இயந்திரங்களுக்கான நிறுவனத்தின் தேவைப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. அந்த 37 இயந்திரங்களில் 24 வகையான இயந்திரங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் துறையினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2015 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் இரசாயன ஆய்வு கூடத்தினை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 61.1 மில்லியன் தொகையான உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது முறையான தொழில்நுட்ப மதிப்பாய்வொன்றினை மேற்கொள்ளாமை மற்றும் பெறுகைகள் நடைமுறையான முறையான நடைமுறைப்படுத்தப்படாமையால் நிறுவனத்திற்கு ரூபா 16.6 மில்லியனுக்கும் அதிகமான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், இரசாயன ஆய்வுகூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரங்களிடையே பூரணமான வாயு சீராக்கல் நிலைமையொன்றினை பேணுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 15.22 மில்லியன் தொகையான புயள ஊாசழஅயவயபசயிா ஆயளள ளுிநஉவசழஅநவநள உபகரணம் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நிறுவனத்தின் எந்தவொரு பணிக்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## விவசாய மற்றும் விவாய காப்புறுதி முன்மொழிவு முறைமை

நெற் பயிர்ச்செய்கை காப்புறுதியினை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி 1973 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இந்த முன்மொழிவு முறைமை இன்றளவில் விவசாய பூங்கா பயிர்கள் மற்றும் மூலிகைச் செடிகள், கால்நடை வள, மீன்பிடி வனப்பயிர்ச்செய்கை, விவசாய உபகரணங்கள், களஞ்சிய மற்றும் மூன்றாம் தரப்பினருக்கான காப்புறுதியினை வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு சலுகை வழங்குவதற்கான நோக்காக கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மீன்பிடி மற்றும் வனப்பயிர்ச்செய்கை உற்பத்தியுடன் தொடர்புடையதான காப்புறுதி ஆரம்பிக்கப்பட்டிராததுடன், இலக்கிடப்பட்ட 275 களஞ்சியங்களில் ஒரு களஞ்சியம் மாத்திரம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. கால்நடை வளங்கள், இருப்பு, விவசாய உபகரணங்கள், சுவசெத காப்புறுதி முறைமைகளின் பௌதீக மற்றும் நிதிசார் இலக்குகளை அடைதல் 50 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே மூன்றாம் தரப்பினருக்கான காப்புறுதி முறைமையின் கீழ் இலக்கிடப்பட்ட வருமானம் ரூபா 27.95 மில்லியனாக இருந்த போதிலும், உள்ளபடியான வருமானம் ரூபா 8.47 மில்லியனாக இருந்தது. அவற்றுள் செயற்பாட்டு செலவினத்தை கழித்தால் கிடைத்திருந்த தேறிய வருமானம் ரூபா 1.96 மில்லியனாக இருந்தது.

## விவசாய ஓய்வூதிய மற்றும் சமூக நலன்கள் முன்மொழிவு முறைமை

1987 இன் 12 ஆம் இலக்க விவசாய ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன்கள் முன்மொழிவு முறைமை அதிகாரச்சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்த இந்த நிதியத்திற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கத்துவத்தினை

பெற்றுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை 959,254 ஆக இருந்ததுடன், மாதாந்த ஓய்வூதிய நலனாளிகளின் எண்ணிக்கை 141,260 ஆக இருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் முன்மொழிவு முறைமைக்கு அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2014 மார்ச் 14 ஆந் திகதிய 1853/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த புதிய முன்மொழிவு முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாக இருந்த போதிலும், ஓய்வூதியங்களை செலுத்துதல் புதிய முன்மொழிவு முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு, பங்களிப்பு பணம் அறவிடல் பழைய முறைமையின் படி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், 2014 சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையிலும் ரூபா 5,047.72 மில்லியன் கூட்டுத்தொகையான ஓய்வூதிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 63.06 மில்லியன் மாத்திரம் பங்களிப்பு பணமாக சேகரிக்கப்பட்டிருந்தது.

நிதியத்தின் நிதி இடர்பாடு நிலைமையின் கீழ் மாதாந்தம் ஓய்வூதியம் செலுத்துவதற்காக திறைசேரியிடமிருந்து பணம் பெற வேண்டிய நிலைமைக்கு சபை உள்ளாகி, 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,450 மில்லியன் தொகை திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### மீன்பிடி ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலன் முன்மொழிவு முறைமை

1991 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த முன்மொழிவு முறைமையின் கீழ் 2016 திசெம்பர் மாதத்தின் போது அங்கத்துவத்தினை பெற்றுள்ள மீனவர்களின் எண்ணிக்கை 68,915 ஆக இருந்ததுடன், மாதாந்த ஓய்வூதியம் பெறும் எண்ணிக்கை 3,724 ஆக இருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை நிதியத்திற்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல் பாரியளவில் குறைவடையும் போக்கொன்று காணப்பட்டதுடன், அது 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 85 சதவீதமான குறைவொன்றாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது நிதியத்திற்கான பெறுவனவு மற்றும் நிதியத்திலிருந்தான கொடுப்பனவுகளை ஒப்பிடும் போது ரூபா 51.17 மில்லியனால் பெறுவனவுகளை விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஓய்வூதிய நலனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தமையால் 2014 ஆம் ஆண்டின் பின்னர் நிதியம் தேய்வுக்குள்ளாகும் நிலைக்கு உள்ளாகியிருந்ததுடன், அது 2020 ஆம் ஆண்டளவில் பெறுமையடையும் நிலைக்கு உள்ளாக முடியுமென இனங்காணப்பட்டுள்ள போது இந்தி நிதியத்தினை மீளமைப்பதற்கு சபையினால் மீளாய்வாண்டின இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### விவசாயிகளின் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

2002 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை பிரமாணக் குறிப்பொன்றின் மூலம் பரவலாக்கப்பட்ட விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் நலன்புரியினை அதிகரித்தில், சிறு விவசாயிகளுக்கு விவசாய கடன் வசதிகள், சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல், விவசாய மூலதனங்களை உருவாக்குதல், அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்கள், விசேட விவசாய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பயிர்கள் மற்றும் விலங்கின உற்பத்தியைப்போன்று உற்பத்தி பொதியிடலுக்கு தேவையான ஏனைய அனுசரணைகளை பெற்றுக்கொடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக நிதியம்

செயற்படுகின்றது. நிதியத்தின் செயற்படுதன்மை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்டுள்ளமைக்கான பிரதான நோக்கங்களிடையே சிறு விவசாயிகளுக்கு விவசாய மூலதன உருவாக்கம் மற்றும் விலங்கின உற்பத்தி நடைமுறையினைப் போன்றே உற்பத்தி பொதியிடலுக்கு தேவையான ஏனைய அனுசரணைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- மீளாய்வாண்டின் போது இந்த நிதியத்தின் கீழான 41 செயற்திட்டங்களுக்காக ரூபா 142.36 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 27 செயற்திட்டங்களுக்காக ரூபா 44.62 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் செயற்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் உள்ளடங்கலான செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், திட்டமிடப்பட்ட 14 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- கொவிசெத லொத்தர் சீட்டுக்களின் விற்பனை வருமானத்தில் 10 சதவீதம் நிதியத்தின் பிரதான வருமான மூலமொன்றாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2009 ஆம் ஆண்டு முதல் அந்த பணத்தை பொது திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அவ்வாறு பயன்படுத்தப்படாத வருமானம் ரூபா 2,353.06 மில்லியனாக இருந்தது.

- குறுங்கால கடனின் கீழ் 10 வருடங்களை விஞ்சிய ரூபா 21.22 மில்லியன் கூட்டுத்தொகையான 07 கடன் மீதிகளும், நீண்டகால கடனின் கீழான 15 வருடங்களை விஞ்சிய ரூபா 9.11 மில்லியன் கடன் மீதியொன்றும், முற்பணங்களின் கீழ் 03 முதல் 11 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் தீர்க்கப்படாதுள்ள ரூபா 4.12 மில்லியன் கூட்டுத்தொகையான 03 கடன் மீதிகளும், பெற வேண்டிய ஏனைய கடன் வட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள 10 வருடங்களைவிட பழமையான ரூபா 98.48 மில்லியன் தொகையான 04 கடன் மீதிகளும் நிலவின.

# பெருந்தோட்டக் கைத்தொழில்

நாட்டின் துரித அபிவிருத்திக்காக ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு பிரதான பெரும்போகப் பயிர்களின் விளைச்சல், இலாபமீட்டும் தன்மை மற்றும் நிலைத்து நிலைக்கும் தன்மை ஆகியவற்றை மேம்படுத்துதல் ஆகியன இப்பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவாகக் காணப்பட்டது.

மேற்குறிப்பிட்ட எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலனைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு மற்றும் சட்டரீதியான 14 நிறுவனங்கள் மூலம் பின்வரும் தொழிற்பாடுகள் ஆற்றப்பட வேண்டியிருந்தன.

- பெரும்போகப் பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கு தேவையான மண்வள மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
- பெருந்தோட்டத் துறையின் விளைச்சலுக்காக சர்வதேச போட்டியினை அதிகரித்தல்.
- பெரும்போகப் பயிர்களின் அடிப்படையில் அமைந்துள்ள ஒன்றுதிரட்டிய பெறுமதியை அதிகரித்தல் சம்பந்தமான தொழில்களை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தேயிலை மற்றும் இறப்பர் தொடர்பான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்.
- தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்.
- தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை துண்டாக்குதல் தொடர்பான அனுமதிப்பத்திரம் வழங்குதலும் கட்டுப்படுத்தலும்.
- பல்லினப் பயிர் நாற்று மற்றும் பண்ணை முறைமையினூடாக பெருந்தோட்ட நிலங்களை உச்ச அளவில் பயன்படுத்துதலும் அதன் மூலம் உற்பத்தி மற்றும் சேவை வாய்ப்புகளை அதிகரித்தலும்.
- தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தொழில்களின் அபிவிருத்தி மற்றும் அதன்மூலம் ஆராய்ச்சிகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களுக்கு முதலீட்டு மற்றும் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களை அறிமுகப்படுத்தல்.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் மேற்குறிப்பிட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் சுருக்கம் வருமாறு

### பிரதான மூன்று பெரும்போக பயிர்களின் உற்பத்தி குறைவடைதல்

இலங்கையின் பெருந்தோட்டத் துறைக்கு சொந்தமான தேயிலை, தென்னை மற்றும் தெங்கு 2016 ஆம் வருடத்தின் உற்பத்தி முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் முறையே 11.01 வீதத்தினாலும் 10.72 வீதத்தினாலும் 1.47 வீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. விபரம் அட்டவணை 17 இல் காட்டப்பட்டுள்ளது.

| பயிர் | உற்பத்தி | | 2015 இற்கு ஒப்பாக குறைவடைதல் | 2015 இற்கு ஒப்பாக குறைவடைதல் சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2015 | 2016 | | |
| தேயிலை கி.கிராம். மில்லியன் | 328.8 | 292.6 | 36.2 | 11.01 |
| இறப்பர் கி.கிராம். மில்லியன் | 88.6 | 79.1 | 9.5 | 10.72 |
| தென்னை கி.கிராம். மில்லியன் | 3,056 | 3,011 | 45 | 1.47 |

அட்டவணை 17 பிரதான பெரும்போக பயிர் உற்பத்தி குறைவடைதல்
மூலம் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2016

அதேவேளை 2016 ஆம் ஆண்டில் தேயிலை மற்றும் தெங்கு உற்பத்தி, மொத்தத் தேசிய உற்பத்திக்கு வழங்கிய பங்களிப்பு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்திருந்தது. விபரம் அட்டவணை 18 இல் காட்டப்பட்டுள்ளது.

| உற்பத்திப் பயிர் | மொத்தத் தேசிய உற்பத்திக்கு வழங்கிய பங்களிப்பு (சதவீதமாக) | |
|---|---|---|
| | 2015 | 2016 |
| தேயிலை | 0.8 | 0.7 |
| இறப்பர் | 0.3 | 0.3 |
| தென்னை | 0.8 | 0.7 |

அட்டவணை 18 பிரதான பெரும்போக பயிர் உற்பத்தி குறைவடைதல்
மூலம் இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2016

## குத்தகை வாடகை அடிப்படையில் காணி வழங்குதல்

பெருந்தோட்டத் துறை அமைச்சினால் கணக்காய்வுக்காக வழங்கப்பட்ட வருமானக் கணக்கிற்கமைவாக குத்தகை வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த காணிகளில் மொத்தம் ரூபா 450.96 மில்லியன் வருமானம் ஒரு வருடம் முதல் 25 வருட காலப்பகுதியிலிருந்து நிலுவையாக காணப்பட்ட போதிலும் அந் நிலுவை வருமானம் குறிப்பிட்ட வருட இறுதியிலும் அறவிட்டுக் கொள்வதற்கு அமைச்சுக்கு முடியாமல் போயிருந்தது. அகரபத்தன, உடபுஸ்ஸல்லாவ மற்றும் அல்கடுவ ஆகிய 3 நிறுவனங்களுக்கும் சொந்தமான 45 காணிகளுக்கு 1992 ஆம் வருடத்திலிருந்து வாடகை நிலுவையாக இருந்தது.

வருடத்தின் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டிற்கு அமைய ரூபா 900 மில்லியன் வருமானம் ஈட்ட வேண்டியிருந்த போதும் ஆண்டின் இறுதி வரை நிலுவை வருமானம் அறவிடல் உட்பட ரூபா. 767 மில்லியனாகவே காணப்பட்டது. முன்னைய வருடத்தின் உள்ளவாறான வருமானத்தை விட குறிப்பிட்ட வருடத்தின் உள்ளவாறான வருமானம் ரூபா. 121 மில்லியனால் அதிகரித்திருந்தது.

பெருந்தோட்ட கம்பனிகளுக்குச் சொந்தமான 571 தோட்டங்களில் அடிப்படை வசதிகள் போன்ற பொது விடயங்களுக்காக காணி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வழங்கப்பட்டிருந்த காணிகளின் அளவுகளை சரியாக அறிந்து கொள்வதற்காக எல்லை நிர்ணயம் தொடர்பான உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

53 வருடங்களுக்கான தோட்ட வாடகை வழங்குகையில் ஒவ்வொரு பிரதேச பெருந்தோட்ட நிறுவனங்களின் திருத்தப்பட்ட வாடகை ஒப்பந்தங்களுக்கு சில தோட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அத் தொட்டங்களின் மூலம் பெறப்பட வேண்டியிருந்த வாடகை வருமானம் கிடைத்திருக்கவில்லை.

2009 நவம்பர் 11 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்திற்கிணங்க உப வாடகை வழங்கப்படுவதற்கு முன்னர் செழிப்பான பகுதிக்குச் சொந்தமாமான உரிமையாளரின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. 2014 மற்றும் 2015 வருடங்களில் 08 பிரதேச தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான 18 காணித் துண்டுகள் 14 நிறுவனங்களுக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் பகுதி உரிமையாளர் என்ற திறைசேரி செயலாளரின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிற்கு இணங்க வெளிநாட்டுக் கடனுதவி மூலம் முதலீடு செய்யப்பட்ட இரண்டு செயற்திட்டங்களுக்காக ரூபா 885.9 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு செயற்திட்டத்திற்காக மட்டும் ரூபா 306.5 மில்லியன் கடனுதவி கிடைத்திருந்தது. மற்றைய செயற்திட்டம் 2016 ஏப்ரல் 26 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 441.4 மில்லியன் நிதி பாவிக்கப்படமமல் இருந்தது.

## தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்டங்களை துண்டாக்கல்

தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்களைக் கட்டுப்படுத்தல்) சபையின் நோக்கங்களுக்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டு பயிர்ச்செய்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கும் சமகாலத் தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சபையின் மூலம் நிபந்தனைகளுடன் காணிகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் குறித்த நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படுகின்றனரா என்பது தொடர்பாக பணிப்பாளர் சபையினால் கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை.
உள்ளூராட்சி மன்றங்களினால் காணி துண்டாக்களுக்கான அனுமதி வழங்குகையில் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்ற விடயம் பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. 2005 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) (திருத்த) சட்டமூலத்தின் 12(8) மற்றும் 24 பிரிவுகளின் கீழ் தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சபை குறித்த செயற்பாட்டை மேற்கொள்ளும் விதிமுறைகள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. 2009 ஜுன் 10 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்திற்கிணங்க தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு தோட்ட (துண்டாக்கலைக் கட்டுப்படுத்தல்) சபை புறம்பானதொரு நிறுவனமாக அமைக்கப்பட வேண்டிய அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபைக்கான ஒரு தலைவர் நியமிக்கப்பட்டுள்ள அதே வேளை அதற்கான சம்பளம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகளுக்கான மொத்தம் 2016 ஆம் வருடத்திற்கான தொகை ரூபா. 1.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## பெருந் தோட்டக் காணிகளை அளவை செய்தல்

பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயற்பாடுகளின் கீழ் 7 மாவட்டங்களில் வழங்கப்பட்ட 31,435.12 ஹெக்டேயர் காணியில் 16.6 வீதம் அளவை செய்யப்பட்டிருந்தது. அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தொகையாகிய ரூபா. 9.09 மில்லியனில் 22.7 வீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. நில அளப்பது, இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் கடமையாக இருப்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட 12 மாவட்டங்களில் அளவை செய்யப்படாத காணியின் அளவு 52.9 வீதத்திற்கும் 91.0 வீதத்திற்கும் இடையில் காணப்பட்டது.

## வாடகைக்காகப் பெறப்பட்ட கட்டிடம்

2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் 2017 பெப்ரவரி 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு மாதாந்தம் ரூபா 500,000 வீதம் ரூபா 3,000,000 வாடகைக்காக 2016 ஆகஸ்ட் 16 ஆம் திகதி முற்பணம் செலுத்தி பெருந்தோட்ட முகாமைத்துவ கண்காணிப்புப் பிரிவுக்கான கட்டிடமொன்று வாடகைக்காகப் பெறப்பட்டிருந்தது. 2017 ஜனவரி 5 ஆம் திகதி வரை பெருந்தோட்டப் பிரிவினால் அக் கட்டிடம் பயன்படுத்தப்படாமையினால் அன்றைய தினம் வரை செலுத்தப்பட்டிருந்த ரூபா 2.25 மில்லியன் வாடகை பயனற்ற ஒரு செலவாகக் காணப்பட்டது.

## பெறுமதி சேர்க்கப்பட்ட இறப்பர் உற்பத்தி ஏற்றுமதி

2014 ஆம் ஆண்டின் போது 16,305 மெற்றிக் தொன் ஆகவிருந்த இறப்பர் ஏற்றுமதி 2015 இல் 10,374 மெற்றிக் தொன்னாக 36 வீதத்தினால் குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு இறப்பர் ஏற்றுமதி 16,167 மெற்றிக் தொன்னாக 56 வீதத்தினால் அதிகரித்திருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டு ரூபா 5,915 மில்லியனாக இருந்த இறப்பர் ஏற்றுமதி வருமானம் 2015 ஆம் ஆண்டு ரூபா 4,758 மில்லியனாக 19

வீதத்தினால் குறைவடைந்திருந்தது. விபரம் உரு 18 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.




உரு18 இறப்பர் உற்பத்தியும் ஏற்றுமதி வருமானமும்
மூலம்: இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் புள்ளிவபரப் பிரிவின் தகவல்கள்

## இறப்பர் இறக்குமதி அதிகரிப்பு

இலங்கைக்கு இயற்கை மற்றும் செயற்கை இறப்பர் இறக்குமதி செய்தல் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ள அதே வேளை 2014 ஆம் ஆண்டு 68,685 மெற்றிக் தொன் ஆகவிருந்த இறப்பர் இறக்குமதியின் அளவு 2016 இல் 142,476 மெற்றிக் தொன்னாக 107 வீதத்தினால் அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டு ரூபா 17,809 மில்லியனாகவிருந்த இறப்பர் இறக்குமதி செலவு 2016 ஆம் ஆண்டு ரூபா. 30,971 மில்லியனாக 74 வீதத்தினால் அதிகரித்திருந்தது.

## இறப்பர் உற்பத்தி வீழ்ச்சி

இறப்பர் நிலத்தின் அளவையும் இறப்பர் பயிர் நிலங்களின் விளைச்சளையும் அதிகரிப்பதற்கு இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் நிவாரண வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக செயற்படுத்தப்பட்டு வந்துள்ளன. 2014 ஆம் வருடம் முதல் மொத்த இறப்பர் வருமானம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்துள்ளதுடன் 2014 ஆம் வருடம் மெட்ரிக் டொன் 98,573 ஆகவிருந்த இறப்பர் உற்பத்தி 2016 ஆம் வருடம் மெட்ரிக் டொன் 79,100 ஆக 20 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

7000 ஏக்கர் நிலத்தில் இறப்பர் மீள் நடுகை செய்வதற்கும் மற்றும் புதிதாக பயிரிடுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் இறப்பர் விலை குறைவடைந்ததன் காரணமாக இறப்பர் நடுகை 1183 ஏக்கராக அதாவது உத்தேசிக்கப்பட்ட அளவின் 17 வீதமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

மொனராகலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இறப்பர் கன்றுகளை நடும் நோக்கில் 5 இலட்சம் இறப்பர் கன்றுகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டிருந்த போதும் 88,170 கன்றுகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன்படி எதிர்பார்க்கப்பட்ட இறப்பர் கன்றுகளின் எண்ணிக்கையில் 82 வீதத்தினை நடுவதற்கு முடியாமல் போயுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் இறப்பர் நடுகைக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட விவசாயிகளில் 659 பேருக்கு சொந்தமான இறப்பர் 816 ஏக்கர் 1 ரூட் 13 பேர்ச் பலனற்ற இறப்பர் நிலமாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அந் நிலங்களுக்கான மானியமாக ரூபா. 5.01 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

## இறப்பர் பயிரிட்டுள்ள பிரதேசங்களில் துணைப் பயிர்களைப் பயிரிடுதல்

இறப்பர் பயிரிப்பட்டுள்ள பிரதேசங்களில் 830 ஹெக்டேயர் நிலத்தில் துணைப் பயிர்களை நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் அதில் 17 வீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## இறப்பரிற்கான உத்தரவாத விலை செலுத்துதல்

2014 மற்றும் 2015 வருடங்களில் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு இறப்பரிற்கான நிர்ணயிக்கப்பட்ட விலை செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வில் மூன்று வியாபார நிறுவனங்களில் 77,458.9 கிலோகிராம் இறப்பரிற்கு நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் ரூபா 7.44 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இறப்பர் கொள்வனவு இறப்பர் தோட்ட உரிமையாளர்களிடம் மேற்கொள்ளப்பட்டமையை உறுதி செய்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இறப்பர் வியாபாரப் பிரதிநிதி ஒருவருக்கு நிர்ணய விலையாக ரூபா. 16.38 மில்லியன்

செலுத்தப்பட்டிருந்த போதும் அதில் ரூபா 2.01 மில்லியன் பிழையான தகவல்களின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது.

### இறப்பர் நடுகை தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதல்

குறிப்பிட்ட வருடத்தில் இறப்பர் நடுகை தொடர்பான 111 ஆராய்ச்சிகள் நடைபெற்றுக கொண்டிருந்தன. அவ்வாராய்ச்சிகளில் 2011 முதல் 2015 வரையிலான காலப்பகுதியில் 63 ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. சில ஆராய்ச்சிகளுக்காக 18 முதல் 20 வருடங்கள் செலவிடப்பட்டிருந்தன. ஆராய்ச்சிகளுக்காக செலவிடப்படும் காலத்தைக் குறைப்பதற்காக மாற்று நடவடிக்கைகள் இனங்காணப்படாதிருந்ததுடன் நிறைவு பெறாத 48 ஆராய்ச்சிகள் காணப்பட்டன. அவ்வாராய்ச்சிகளில் 5 முதல் 28 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற ஆராய்ச்சிகளை நிறைவு செய்ய வேண்டியிருந்தது. 20 வருடங்களினுள் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆராய்ச்சியின் மூலம் இறப்பர் விளைச்சல் அதிகரித்ததாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் டார்டன் பீல்ட் தோட்டத்தில் வருடாந்த எதிர்பார்க்கப்பட்ட விளைச்சல் 3004 கிலோ கிராமாக இருந்த போதிலும் உண்மையான விளைச்சல் 800 முதல் 900 கிலோ கிராமாக காணப்பட்டது.

### மனித வள முகாமைத்துவம்

இறப்பர் ஆராய்ச்சி சபையின் மனித வள முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2010 திசம்பர் 10 ஆம் திகதிய 1/2010 இலக்கத்தையுடைய வியாபார, தீர்வை வரி மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்குப் புறம்பான வகையில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த தோட்ட அதிகாரியொருவருக்கு தீர்வை வரி நிவாரணம் உள்ளடங்கலாக மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்காக சுங்க வரி மற்றும் ஏனைய வரிகள் நிவாரணமாக ரூபா 8.09 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- ஊழியர்களுக்கான ரூபா 23.30 மில்லியன் பெறுமதியான மருத்துவ பற்றுச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவு குறிப்பிட்ட வருடத்தில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவு முறைமைக்கான திறைசேரி அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் பணிப்பாளர் சபை தீர்மாணத்திற்கமைவாக மருத்துவ உதவிக் கொடுப்பனவுக்காக ரூபா. 5.05 மில்லியன் வேறொரு வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

- 2006 முதல் 2016 ஆம் வருடம் வரை ஊழியர் நம்பிக்கை மற்றும் ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்பு மற்றும் ஒன்றுதிரட்டிய நிதி முறையாகச் செலுத்தப்படாமையினால் மேலதிகக் கொடுப்பனவாக ரூபா. 1.75 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

### துருசவிய நிதியம்

துருசவிய நிதியம் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு மாவட்ட அடிப்படையில் செயலிழந்த 365 துருசவிய சங்கங்கள் காணப்பட்டதுடன் 2000 இன் 33 ஆம் இலக்க துருசவிய நிதிய சட்டத்தின் பிரிவு iii இன் பகுதி 4 அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட துருசவிய சங்கமொன்றின் பதிவினை ரத்துக் செய்து அது தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் செயலிழந்த சங்கங்கள் தொடர்பில் அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2015 ஜுன் 09 ஆம் திகதிய 90:15795 இலக்க முகாமைத்துவக் குழு அறிக்கையின் படி எதிர்கால உத்தேச வேலைத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அத் தீர்மாணங்களுக்கமைய ஒரு அங்கத்தவரிடமிருந்து ரூபா 10 வீதம் மாதாந்தம் ரூபா. 1,00,000 நிதியத்தில் வைப்புச் செய்துகொள்வதற்கு முடியுமான வகையில் அங்கத்தவர் எண்ணிக்கையை 100,000 வரை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- 9 துருசவிய தொகுதி பொதியிடல் நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கைகளில் மாதாந்தம் ரூபா. 2 இலட்சம் வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நிதியம்

நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 7 மாவட்டங்களின் இறப்பர் கௌ்வனவு மத்திய நிலையங்கள் மற்றும் ஒடட்பாலு கிரேப் உற்பத்தி நிலையங்களை ஆரம்பித்து வருடாந்தம் ரூபா. ஒரு மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- பதிவு செய்யப்பட்ட துருசவிய சங்கங்களின் எண்ணிக்கை 707 ஆக இருந்த போதும், 2014, 2015 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் ரோல் சோடி நிவாரணம் வழங்குகையில் நிவாரணத் தொகையில் 50 வீதத்தினை தாங்கிக் கொள்ளக்கூடிய 80 சங்கங்களிடையே மாத்திரம் 03 வருடங்களில் ரோல் சோடி நிவாரணம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## தென்னை அபிவிருத்தி அதிகாரசபை

தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்புக்களை நிறைவேற்றல் சம்பந்தமாக நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது கீழ்வரும் கணக்காய்வு விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- அதிகார சபையினால் 1 கி.கிராம் தீசந்தி உற்பத்திக்காக அறவிடப்படுகின்ற தொகையான 20 சதம் 40 வருடங்களுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த அதேவேளை காலத்திற்கேற்ப அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ரெுக்கவில்லை.
- தேங்காய்ப் பால், தேங்காய்ப் பால் மா, தேங்காய் வெதுப்பி ஆகியவற்றை பாவனையாளர்களிடம் பிரபலமடையச் செய்வதற்கான நிகழ்ச்சிக்காக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9.34 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. நடாத்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுக்கான செலவு ரூபா. 2.28 மில்லியனாக இருந்தது. அதனடிப்படையில் ரூபா. 7.06 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அதற்குப் பதிலாக வேறு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 1985 ஆம் வருடம் தனியார் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையான ரூபா. 26.72 மில்லியனுக்காக செலுத்தப்பட வேண்டியிருந்த வட்டி மற்றும் கடன் தவணை செலுத்தப்படாமலிருந்த போதும் அந் நிறுவனங்களுக்கு 2002 ஆம் வருடம் மீண்டும் வட்டியில்லா அடிப்படையில் ரூபா 25 மில்லியனும் 2004 ஆம் வருடம் ரூபா 6.60 மில்லியனுமாக ரூபா 31.60 மில்லியன் கடனாக வழங்கப்பட்டிருந்தது. இதில் ரூபா. 31.55 மில்லியன் குறிப்பிட்ட வருட இறுதி வரை அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

- அதிகாரசபையினால் ரூபா 1.07 மில்லியன் செலவில் 2014 ஒக்டோபர் மாதம் பொருத்தப்பட்ட 32 சீசீடிவி கெமராக்களில் 19 கெமராக்கள் செயலிழந்து காணப்பட்டன.

- அதிகாரசபையினால் தொழிலாளர் ஆணையாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படுகின்ற தனியார் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்தவர்களாகியுள்ள 91 ஊழியர்களுக்காக 2006 முதல் 2012 வரை ரூபா 2.66 மில்லியனும் மத்தி மத்திய வங்கியின் கீழ் நடாத்தப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்தவர்களாகியுள்ள 116 ஊழியர்களுக்காக ரூபா 3.25 மில்லியனும் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மேற்குறிப்பிட்ட காலத்தினுள் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான அங்கத்தவர் கட்டணம் செலுத்துகையில் வாழ்க்கைப் படி கொடுப்பனவு சேர்த்துக் கொள்ளப்படாததன் காரணமாக அவ்வேளையில் ஊழியர்களினால் செலுத்தப்பட வேண்டியிருந்த வாழ்க்கைப் படி கொடுப்பனவுடன் தொடர்பான 10 வீத ஊழியர் சேமலாபக் கொடுப்பனவான ரூபா 1.18 மில்லியன் அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

## தென்னை ஆராய்ச்சி

தென்னை ஆராய்ச்சி நிலையத்தினால் குறிப்பிட்ட வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2018 இல் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ஆராய்ச்சிச் செயற்றிட்டமொன்று குறிப்பிட்ட வருட இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நடைமுறையிலிருந்த 24 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்கள் வருட இறுதியில் அவற்றின்

பௌதீக செயலாற்றல் 0 வீதத்திற்கும் 50 வீதத்திற்கும் இடையில் காணப்பட்டன.

## தென்னம் இலைகள் வாடுதல் மற்றும் அழுகுதல் நோய்

வெலிகம தென்னம் இலைகள் வாடுதல் மற்றும் அழுகுதல் நோய்த் தடுப்பு வேலைத் திட்டத்திற்காக 2008 முதல் 2016 வரை காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நோய்த் தொற்றின் காரணமாக அகற்றப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 288,683 ஆக இருந்தது. அதற்கான தண்டப் பணமாக ரூபா 305.41 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஏனைய செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 75.36 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் இந் நோய்க்கு ஈடு கொடுக்கக்கூடிய தரமான ஒரு தென்னை வகையை அறிமுகம் செய்யவோ அல்லது கட்டுப்படுத்தவோ தென்னை பயிர்ச்செய்கை சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## கற்பகதரு நிதியம்

2016 ஆகஸ்ட் 01 ஆம் திகதி கற்பகதரு நிதியத்தின் முகாமைத்துவக் குழுவின் முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய பிராந்திய சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாவனைக்கு உட்படுத்தப்படாத நிதியினை மீள அறவிட்டு ஆரம்ப நிலை சங்கங்களுக்கு வழங்குவதற்கு தீர்மாணிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் பிராந்திய சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாவனைக்கு உட்படுத்தப்படாத ரூபா. 18.80 மில்லியன் மீள அறவிடப்பட்டு ஆரம்ப நிலை சங்கங்களுக்கு வழங்குவதற்கு குறிப்பிட்ட வருட இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## ஓயில் பாம் திட்டத்தை இடைநிறுத்தியமை

தென்னை ஆராய்ச்சி நிலையத்தினால் உள்நாட்டு மரக்கறி எண்ணை தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கான மாற்றீடாக 2012 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒயில் பாம் திட்டத்தின் செயற்றிட்டத்திற்கமைவாக ரூபா 31.17 மில்லியன் உத்தேசிக்கப்பட்டு 08 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவற்றின் செயற்றிட்டக் கால எல்லை 2013 தொடக்கம் 2024 வரையிலான காலப்பகுதியாகக் காணப்பட்டது. குறிப்பிட்ட வருடத்தின் ஜுலை மாதத்தில் அத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அது வரை அத் திட்டத்திற்காக ரூபா 3.88 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## புதிய தென்னை இனங்களை அறிமுகம் செய்தல்.

தெங்கு ஆராய்ச்சி நிலையத்தின் இன அபிவிருத்தி பிரிவினால் புதிய தென்னை வகைகளை அறிமுகம் செய்தல் தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2012 வருடத்தின் பின்னர் புதிய தென்னை வகைகள் அறிமுகம் செய்யப்பட்டிருக்கவில்லை. அறிமுகப்படுத்தப்பட்டிருந்த 06 தென்னை வகைகளில் கப்ருவன, கப்செத மற்றும் கப்சுவய ஆகிய தென்னை இனங்கள் பொதுமக்களிடம் பிரபலமடைந்திருக்கவில்லை.

## சிரட்டைக் கரி உற்பத்தி

சிரட்டைக் கரி உற்பத்தியின் போது வெளியாகின்ற வெப்பத்தை சூழலுக்கு விடாமல் அவ் வெப்பத்தைப் பயன்படுத்தி கொப்பரா காய்க்கும் நோக்கில் ரூபா 1.72 மில்லியன் செலவு செய்து தென்னை ஆராய்ச்சி நிலையத்தின் பண்டிரிப்புவ ஆராய்ச்சி நிலையத்தில் வெப்பப் பாதுகாப்புப் பிரிவொன்று 2008 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது 2012 வருடம் முதல் சிரட்டைக் கரி உற்பத்தியினை மேற்கொள்ளாது செயற்பாடின்றிக் காணப்பட்டது.

தென்னை ஏல விற்பனையில் தீர்மானிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக செலுத்துதல்.

தென்னை பயிர்செய்கை சபையினால் 2016 வருடத்தில் உயர்ரக மரங்களின் மூலம் 3,910,110 விதைத் தேங்காய்களுக்கும் (PP) தேர்ந்தெடுக்கப்பட்ட 3,424,931 விதைத் தேங்காய்களுக்கும் (PP2) தென்னை ஏல விற்பனையில் நிர்ணயிக்கப்படுகின்ற உயர்ந்த பட்ச விலையை விட முறையே ரூபா 9 மற்றும் ரூபா 6 என்ற அடிப்படையில் ரூபா 55.74 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கான திறைசேரி அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

## தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் நாற்று ஆகியவற்றிற்கான உரம் கொள்வனவு செய்தல்

2016 ஆம் வருடத்திற்கான தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் நாற்று ஆகியவற்றிற்கான உரம் கொள்வனவு செய்வதற்காக விலைமனு கோரப்பட்டு ஒரு நிறுவனத்திற்கு கொள்வனவு ஆணை வழங்கப்பட்டிருந்தது. 708,175 மெட்ரிக் தொன் உரத்தினை ரூபா 26,393,369 இற்கு கொள்வனவு செய்வதாக 2016 நவம்பர் 01 ஆம் திகதி தெங்கு பயிரிடல் சபை குறித்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்திருந்தது. விலை மனுக் கோரல் ஆவணத்தின் அடிப்படையில் குறித்த தொகை உரமானது 30 நாட்களுக்குள் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதும் அக்காலத்தினுள் 323.15 மெட்ரிக் தொன் உரம் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை உரம் குறித்த நிறுவனத்தினால் குறித்த காலப்பகுதியினுள் விநியோகிக்கப்படாமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை சம்பந்தமாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### உர மானியம் வழங்குதல்

சிறிய தென்னைப் பயிர்ச்செய்கை உற்பத்தியாளர்களிடையே உரப் பாவனையை பிரபலமடையச் செய்யும் வகையில் 2016 ஆம் வருடத்திற்கான உர மானியமாக பெருந்தோட்டத் துறை அமைச்சினால் ரூபா 654 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் 11,678,571 தென்னை மரங்களுக்காக உரம் பெற்றுக்கொடுக்க திட்டமிடப்பட்டிருந்த போதும் 2016 ஆம் வருடத்தில் 8,839,272 மரங்களுக்காக 72,384 விண்ணப்பதாரிகளிடையே ரூபா 495 மில்லியன் தெங்கு பயிரிடல் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

## தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி வீழ்ச்சி

இலங்கையினுள் தேயிலைத் தொழிலை முன்னேற்றல் மற்றும் அபிவிருத்தி செய்தல், இலங்கைத் தேயிலையின் பாவனையை உலகலாவிய ரீதியில் ஊக்கமடையச் செய்தல் ஆகிய பிரதான நோக்கங்களை நிறைவு செய்துகொள்ளும் நோக்கில் பல நிதியுதவித் திட்டங்கள் இலங்கைத் தேயிலை சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்தன. எனினும் 2014 ஆம் வருடம் முதல் மொத்தத் தேயிலை உற்பத்தி குறைந்து கொண்டு சென்றுள்ளதுடன் 2015 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் வருடத்தில் தேயிலை உற்பத்தியில் 11 வீத வீழ்ச்சி காணப்பட்டது. அதேபோன்று 2001 ஆம் வருடம் உலக தேயிலை சந்தையில் (World Percentage Share of Tea Exports) வலுவான ஒரு போட்டியாளராக இலங்கைத் தேயிலை 20.6 வீத ஏற்றுமதிப் பங்களிப்பைச் செய்திருந்தது. எனினும் 2015 ஆம் வருடம் அது 16.9 வீதம் வரை குறைந்திருந்ததுடன் 2015 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் வருடம் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 3.41 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. விபரம் உரு 19 இல் காட்டப்பட்டுள்ளது..




உரு 19 மொத்த தேயிலை உற்பத்தியும் ஏற்றுமதியும் குறைவடைதல்
மூலம்: இலங்கை தேயிலைச் சபையின் ஆண்டறிக்கைகளினதும் புள்ளிவிபரப் பிரிவினதும் தகவல்கள்

## இலங்கைத் தேயிலை உற்பத்தியை மேம்படுத்தல்

குறித்த வருடத்தில் “சிலோன் டீ” நாமத்தினை சர்வதேச ரீதியில் பரவலடையச் செய்யும் உலகலாவிய சந்தைப்படுத்தல் திட்டமொன்றும், “சிங்க இலட்சினை”, “சுற்றாடல் - ஓசோன் நல இலட்சினை” மற்றும் “புவியியல் சுட்டி – ஏழு வலயங்களின் இலட்சினை” ஆகிய 100 வீதம் தூய்மையான இலங்கைத் தேயிலையென உறுதிப்படுத்துகின்ற தர இலட்சினைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் தேயிலை உற்பத்தியை விருத்தி செய்யும் நோக்கில்

2014 – 2016 காலப்பகுதியினுள் ரூபா 8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்க்கப்பட்ட உலகலாவிய விருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திட்டம் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை எதிர்பார்த்த மட்டத்தை அடைந்திருக்கவில்லை.

### மண் பாதுகாப்பு மானியம் வழங்குதல்

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 8 பிராந்திய வலயங்களில் ¼ ஏக்கருக்கும் 1 ஏக்கருக்கும் இடைப்பட்ட தொகுதியில் அடங்குகின்ற அனைத்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் மண் பாதுகாப்பு நிவாரணம் வழங்கி தற்பொழுது உற்பத்தியாகின்ற தேயிலைக் கொழுந்தின் அளவை 10 மில்லியன் கிலோவினால் அதிகரித்து அன்னியச் செலாவனியினை ரூபா 9,010 மில்லியனால் அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2014 மற்றும் 2015 வருடங்களில் குறித்த அனைத்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் மண் பாதுகாப்பு நிவாரணம் வழங்கப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாமல் போயுள்ளது.

### தேயிலையில் கிருமிநாசினிகளின் மிகுதியை பரீட்சித்தல்

தேயிலையில் காணப்படும் கிருமிநாசினிகளின் மிகுதியை பரீட்சிப்பதற்காக இலங்கை தேயிலை சபையினால் ரூபா 44.41 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் 5 வருடங்களுக்கு மேல் விளைவற்ற நிலையில் காணப்பட்டன.

### சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பு குறைவடைதல்

குறித்த வருடத்தில் இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்திக்கான சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்பு 74.5 வீதமாகக் காணப்பட்டதுடன் முன்னைய வருடத்தின் பங்களிப்பானது 72.91 வீதமாகக் காணப்பட்டது. சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.79 கிலோ கிராமினால் அதாவது 9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. சிறு தேயிலை நிலப் பிரிவின் சராசரி விளைச்சல் 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் முறையே ஒரு ஹெக்டயாருக்கு 2123, 2059 மற்றும் 1872 என வீழ்ச்சியடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டின் விளைச்சல் 9 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. உச்ச விளைச்சலைப் பெற்று தேயிலை பயிரிடும் நிலப்பரப்பினை முறையாகப் பேணி வருவதற்காக ஒரு வருடத்தினுள் இருக்கின்ற சிறு தேயிலைத் தோட்ட நிலத்தின் அளவில் 2 வீதமான நிலத்தில் மீள் நடுகை செய்யப்பட வேண்டியிருந்த போதும் குறித்த வருடத்தில் அது 0.61 வீதமாகக் காணப்பட்டது.

### சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் வீழ்ச்சியடைந்தமை.

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையினால் பதிலீட்டுப் பயிர்கள் மற்றும் வருமான மூலங்கள் குறைந்த பிரதேசங்களில் புதிதாக தேயிலை பயிரிடுவதற்காக வழங்கப்பட்ட நிவாரணத் தொகை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் வருடத்தில் ரூபா 81.39 மில்லியனால் அதாவது 64 வீதத்தினால் குறைக்கப்பட்டிருந்தது. அதேபோன்று மண் மற்றும் நீர் பாதுகாப்பு விசேட வேலைத் திட்டத்தின் கீழ் சிறு தேயிலைத் தோட்டங்களில் மண்ணின் வளத்தை அதிகரிப்பதன் மூலம் உர வினைத்திறனை அதிகரிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூபா 32.08 மில்லியனாக இருந்த போதும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையினால் அவ்வொதுக்கீடு குறித்த தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### தேயிலை தொழிலுக்காக செயற்திட்டங்களை அமுல்படுத்தல்.

விளைச்சல் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துகின்ற முக்கிய குறிக்கோளின் அடிப்படையில் துறைகள் தொடர்பான நிதியினை செலவு செய்து தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட 38 ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் பல்வேறு வரையறுக்கப்பட்ட காரணங்களினால் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தேயிலைத் தொழிலில் காணப்படும் பலத்த தொழிலாளர் பற்றாக்குறைக்கான தீர்வாக 2013 ஆம் வருடம் தேயிலை ஆராய்ச்சி நிறுத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இயந்திரமயமாக்கல் திட்டத்திற்காக குறித்த

வருட இறுதி வரை ரூபா 44.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் சரிவுடன் கூடிய நிலங்களில் பயன்படுத்துவதில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக விளைச்சலுக்குப் பாதிப்பாகக் காணப்பட்டதால் அவ்வியந்திரங்களை வினைத்திறனாகப் பயன்படுத்த முடியாமல் போயிருந்தது.

## தேயிலை சக்தி நிதியம்

நிதியத்திற்குச் சொந்தமான 14 தொழிற்சாலைகள், உரம் மற்றும் உள்நாட்டுத் தேயிலை விற்பனை ஆகிய அனைத்துத் துறைகளும் நட்டத்தில் இயங்கியமையால் நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள பலத்த பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுவனத்தை மீள் ஒழுங்குபடுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆம் திகதி 94,425 பங்குதாரர்களுக்குச் சொந்தமான ரூபா 206.01 மில்லியன் பெறுமதியான பங்குகள் காணப்பட்டதுடன் அப் பங்குதாரர்களுக்கு 2007 வருடத்தின் பின்னர் குறித்த வருடத்தின் இறுதி வரை இலாபம் வழங்குகின்ற வகையில் நிதியம் கொண்டு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## தேயிலைத் கைத்தொழிலுடன் தொடர்பான அதிகாரிகளைப் பயிற்றுவித்தல்.

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் தேயிலைத் தொழிற்சாலை அதிகாரிகள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் பாடநெறிகள் குறித்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் வருட இறுதியிலே பாட நெறிகளுக்கான மாணவர்களது வரவு முறையே பதிவு செய்த மாணவர்களது எண்ணிக்கையில் 66 மற்றும் 64 வீதமாகக் காணப்பட்டன. நடாத்தப்பட இருந்த 25 வருமானமீட்டல் தொடர்பான நிகழ்ச்சிகளில் 17 நிகழ்ச்சிகள் மாத்திரமே நடைபெற்றிருந்தன.

## கரும்பு உற்பத்தி.

பொருத்தமான கரும்பு இனங்களை அறிமுகப்படுத்தல், நோய்க் கட்டுப்பாடு, கரும்பு பயிரிடும் முறைகள் மற்றும் சீனி உற்பத்தி வீதத்தினை அதிகரிப்பதற்கான முறைகள் அறிமுகப்படுத்தல் ஆகிய விடயங்கள் குறைந்த வேகத்தில் நடைபெற்று வந்துள்ளமையால் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 33 வருடங்கள் நிறைவடைந்திருந்த போதும் சீனிக்கான மொத்தத் தேவையில் தேசிய சீனி உற்பத்தி 9 வீதமாகக் காணப்பட்டது.

கரும்பு ஆராய்ச்சி நிறுவகத்தின் ஊழியர்களது வைத்திய பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்த நலன்புரித் திட்டத்திற்காக திறைசேரியின் அனுமதி பெறப்படாதிருந்ததுடன் நிறுவகம் பயன்படுத்துகின்ற விடய ஏற்பாட்டு உபசரிப்புகளுக்கான பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் வருடம் வைத்திய பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவாக ரூபா 11.35 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

கரும்பு ஆராய்ச்சி நிறுவகம் குறித்த வருட இறுதியில் 100 வீதம் பௌதீக அபிவிருத்தியை எதிர்பார்த்த 19 ஆராய்ச்சி வேலைத்திட்டங்களில் 17 ஆராய்ச்சி வேலைத்திட்டங்களில் பௌதீக அபிவிருத்தி 5 வீதம் முதல் 75 வீதமாகக் காணப்பட்டது.

தெனியாய ஏலத் தோட்டத்தில் 5.4 ஹெக்டயார், கந்தளாய் 200 ஹெக்டயார் மற்றும் கிளிநொச்சியில் 12 ஹெக்டேயார் ஆகிய சட்டரீதியாக பெறப்படாத நிலங்களில் கரும்பு நாற்று மேடைகளை உருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கரும்பு ஆராய்ச்சி நிறுவத்தினால் ரூபா 20.35 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

1979 இன் 75 ஆம் இலக்க கரும்பு ஆராய்ச்சி அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம்உள்நாட்டு சீனி உற்பத்தி நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட சீனி அளவின் பேரில் செஸ் வரியொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும் கல்ஓயா சீனி தொழிற்சாலையிலிருந்து ரூபா 1.08 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## காணி

நிலைபேறான அபிவிருத்தியினை முன்னிட்டு நில வளத்தினை உச்சமாக பயன்படுத்தல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவாகியுள்ளது. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 4 திணைக்களங்கள் மற்றும் ஒரு சட்டவாக்க சபையினால் பின்வரும் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் அந்த விளைவினை அடைய எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

- நில விடயங்களுக்குரிய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- நிலைபேறான அபிவிருத்தியினை முன்னிட்டு நிலப் பாவனை கொள்கைகளுக்கமைய மேற்கொள்ளப்படுகின்ற கற்கைகளின் அடிப்படையில் உரிய துறைக்கு ஆலோசனை வழங்குதல்.
- அரச காணிகளின் நிர்வாகமும் முகாமைத்துவமும்.
- சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு காணிகளை கைப்பற்றல்.
- தேசிய தேவைப்பாட்டிற்காக காணிகளைக் கைப்பற்றல்.
- அரசாங்க காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு பத்திரங்களை வழங்குதல்.
- அபிவிருத்தி மற்றும் தங்குமிட வசதிகளுக்காக அரச காணிகளை நீண்டகால மற்றும் குறுங்கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்.
- காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான உரித்துறுதிச் சான்றிதழைப் பதிவு செய்தல்.
- தேசிய திட்டமிடலை இலக்காகக் கொண்டு காணிகளை அளத்தல், வரைபடங்கள் தயாரித்தல் மற்றும்,
- நாட்டின் அனைத்து காணிகள் தொடர்பிலும் தரவுக் கட்டமைப்பொன்றினைத் தயாரித்தல்.

காணிகள் அமைச்சின் கீழான 4 திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபையொன்றினை உள்ளடக்கிய நிறுவனங்களால் மேற்குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்ற வேண்டியதாக இருந்தது. அந்த செயற்பொறுப்புக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப பட்ட குறைபாடுகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### காணிகள் வங்கியினை தாபித்தல்

காணிகள் வங்கியினை தாபிப்பதற்காக காணிகள் அமைச்சின் கீழ் ரூபா 500 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்துவதற்காக ரூபா 195 மில்லியன் தொகையான கட்டுநிதி திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அவ்வாறு விடுவிக்கப்பட்ட கட்டுநிதியில் 55.5 சதவீதமான நிதியேற்பாடுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் 22 காணிகள் பதிவாளர் அலுவலகங்களின் வராலாற்று அறிக்கைகளை கணனி மயப்படுத்துவதற்கான பணி நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அதன் முன்னேற்றம் 41 சதவீதமாக இருந்தது.

## அரச தேவைப்பாடுகளுக்காக காணிகளை சுவீகரித்தல்

பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக தனியார் காணிகளை அரசிற்கு கையேற்பதற்கு தேவையான சட்டரீதியான நடைமுறைகளை பின்பற்றுதலி, சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்குரிய நட்டஈட்டினை செலுத்துவதற்காக நிதியேற்பாடுகளை விடுவித்தலும், சுவீகரிப்பு பணிகளை நடைமுறைப்படுத்தும் போது சுவீகரிப்பு உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்தலும் அமைச்சின் காணிகளை சுவீகரிக்கும் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. காணிகள் சுவீகரிப்பு பிரிவினால் மீளாய்வாண்டின் போது 244 காணிகளை சுவீகரிப்பதற்கு அமைச்சு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதியளவிலும் 134 காணிகள் அல்லது திட்டமிடப்பட்ட அளவில் 55 சதவீதம் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதினுள் தற்போது அமுலில் உள்ள காணிகளை சுவீகரிக்கும் கோவைகளின் எண்ணிக்கை 18,841 ஆக இருந்த போதிலும், அவற்றுள் 401 கோவைகள் செயலற்று கைவிடப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த கால எல்லையினுள் 1168 கோவைகளின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 38(அ) இடை நிறைவேற்று கட்டளை வெளியிடப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 236 கோவைகளுக்கு நட்டஈடு செலுத்தி முடிவு செய்யப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டின் போது காணிகளை சுவீகரிப்பதற்காக நட்டஈட்டுத் தொகையான ரூபா 697.59 மில்லியன் தொகையும் வட்டியாக ரூபா 160 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த வட்டியில் ரூபா 49 மில்லியன் தொகையும் 1976 - 1995 காலப்பகுதியினுள் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காகவும் ரூபா 71 மில்லியன் தொகையும் 1996 - 2005 காலபப்குதியினுள் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காகவும் 2006 - 2014 காலப்பகுதியினுள் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக எஞ்சிய ரூபா 40 மில்லியனுமாக இருந்தது.

## பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையின் காணிகள் வளத்தின் உரித்தினை தீர்ப்பனவு செய்து எதிர்கால சந்ததியினரை பாதுகாக்கும் நோக்குடன் பிம்வசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டினுள் வெளியிடுவதற்கு இலக்கிடப்பட்டுள்ள உரித்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கை 100,000 ஆக இருந்த போதிலும், அளவையாளர் திணைக்களத்தினால் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய 06 மாத காலம் கடந்ததன் பின்னர் திருத்தப்பட்ட இலக்கானது 45,000 ஆக மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது பதிவு செய்யப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை 35,031 ஆக இருந்ததுடன், அந்த திருத்தப்பட்ட இலக்குகளை அடைவதற்காக தவறியிருந்தது. மேலும் பதிவு செய்யப்பட்ட உரித்துறுதி சான்றிதழ்களின் அளவான 35,031 இல் நபர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த உரித்துறுதி சான்றிதழ்களின் எண்ணிக்கை 21,872 ஆக இருந்தது. இதன் காரணமாக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கையில் 52 சதவீதம் மாத்திரம் நபர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

## காணிகள் தகவல் முகாமைத்துவ கட்டமைப்பு

அரச காணிகளின் முகாமைத்துவ நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொள்வதற்காக காணிகள் தகவல் முகாமைத்துவ முறைமையை

நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் அரசாங்க காணிகள் தகவல் முறைமை 332 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் E- Slims செயற்திட்டத்தின் கீழ் 689,120 காணித்துண்டுகளின் தரவுகள் கணனிமயப்படுத்தப்பட்டிருந்தன. 2016 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 1,000,000 காணித் துண்டுகளின் தரவுகள் தகவல் கட்டமைப்பிற்கு உட்புகுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தகவல்களை உட்புகுத்துதல் 498,622 காணித் துண்டுகளானமையால் இலக்கிற்கு ஒப்பான செயன்முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்தது.

அரச காணிகளை தகவல் கட்டமைப்பிற்கு உட்புகுத்துவதற்காக உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்காக கணனி ஆய்வுகூடமொன்றினை தயார்படுத்தல் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் அந்த ஆய்வுகூடத்தினை தயார்ப்படுத்துவதற்கு 2015 ஆம் ஆண்டின் போது 9 மாதங்களுக்கு அதிகமாக காலம் எடுத்திருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த காணி ஆய்வுகூடத்திற்காக 2016 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அச்சீட்டு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1.56 மில்லியன் தொகையும், கணனி இயந்திரங்களுக்காக ரூபா 0.67 மில்லியனுமாக ரூபா 6.57 மில்லியன் கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஆய்வுகூட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையால் அந்த உபகரணங்கள் மற்றும் கட்டிடம் விளைவற்றிருந்தது.

### அரசாங்க காணிகளின் குத்தகை வருமானம்

அரச காணிகள் வளத்தினை உயரிய மட்டத்தில் முகாமை செய்வதனூடாக அரச வரி வருமான கட்டமைப்பினை பலப்படுத்தவதற்கு தங்குமிட, விவசாய மற்றும் வணிக நடவடிக்கைகளுக்காக அரசாங்க காணிகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு, நபர்களுக்கு குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அரச வருமானம் சேகரிக்கப்படுகின்றது. எனினும் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை வரி வருமானத்தில் 75 சதவீதமான அளவிளை அறவிடுவதற்கு காணிகள் ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 சனவரி 01 ஆந் திகதி வரையிலும் அந்த நிலுவை வருமானத்தில் 17 சதவீதம் மாத்திரம் மீளாய்வாண்டினுள் அறவிடக்கூடியதாக இருந்தது.

### காணி உரித்தினை பதிவு செய்தல்

உரித்தினை பதிவு செய்யும் நடைமுறையில் எழும் பல்வேறு சிக்கல்கள் காரணமாக நடைமுறையின் பல்வேறு படிமுறைகளின் போது அளவிடப்பட்ட காணித் துண்டுகளுக்குரிய கோவைகளை தற்காலிகமாக பிற்போடப்படுதல் இடம்பெறுகிறது. 2016 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் செப்தம்பர் மாதம் வரையிலும் 22,485 காணித்துண்டுகளுக்குரிய கோவைகளின் அளவானது பின்தள்ளப்பட்டிருந்ததுடன், முன்னைய வருடங்களில் பின்தள்ளப்பட்ட கோவைகளும் உள்ளடங்கலாக 8331 கோவைகள் மாத்திரம் காணி உரித்துக்களை தீர்ப்பனவு செய்யும் திணைக்களத்தினால் தீர்வு வழங்கப்பட்டு, உரித்தினை பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சேர்க்கப்பட்டிருந்தது.

### அளவைக் கட்டளைகளை நிறைவேற்றுதல்

மீளாய்வாண்டின் போது நில அளவையாளர் நாயகம் திணைக்களத்திற்கு பூர்த்தி செய்வதற்கு நிமித்தமாக இருந்த மொத்த அளவைக் கட்டளைகளின் எண்ணிக்கை 32,924 ஆக இருந்ததுடன், அவற்றுள் 18,413 அளவைக் கட்டளைகள் அல்லது மொத்த அளவைக் கட்டளைகளின் 49 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஊக்குவிப்புப் படிகளாக ரூபா 245 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் 10 சதவீதமான அளவினைக் கொண்டிருந்தது. நடைமுறையில் அளவீட்டு பணிகளுக்காக மிகவும் வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் ஆற்றல்களை திணைக்களத்தினுள் நில அளவையாளரொருவரின் மாதாந்த மாதிரியுருக்களின் (மேசஅள) எண்ணிக்கை 20 ஆக இருந்ததுடன், காலரீதியான அவை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### கட்டிடங்களை நிர்மாணித்தல்

நிலை அளவையாளர் திணைக்களத்தினால் ரூபா 62.34 மில்லியன் செலவிடப்பட்டு திருகோணமலை, வவுனியர், கெக்கிராவ, குச்சவெளி, தியதலாவ மற்றும் கடுமான பிரதேசங்களிலுள்ள திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அந்த நிர்மாண நடவடிக்கைகளின் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (ICTAD) ஏற்பாடுகளும் அத்துமீறப்பட்டிருந்தது. குறைந்த விலையுடைய ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்பட்டிராமையால், அரசாங்கத்திற்கு ரூபா 3.47 மில்லியன் தொகையினை கூடுதலாக செலுத்த நேர்ந்திருந்தது. ஒப்பந்ததாரர் கோரியுள்ள தொகையினை மிகைத்து ரூபா 3.49 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. வவுனியா மற்றும் குச்சவெளி பிரதேசங்களில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது ரூபா 2.70 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், திருகோணமலை மாவட்டத்தின் நில அளவையாளர் அலுவலகத்தினை நிமாணிக்கும் போது ரூபா 1.05 மில்லியன் தொகை தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

### உபகரணங்களை கொள்வனவு செய்தல்

மீளாய்வாண்டின் போது நில அளவையாளர் திணைக்களத்தின் செயலாற்றினை அதிகரிப்பதற்காக ரூபா 76.85 மில்லியன் செலவிடப்பட்டு 25 அளவுகோல்கள், 165 மடி கணனிகள் மற்றும் மேவைக் கணனிகள் மற்றும் 189 Hand Held GPS ஆகியன கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 06 ஊழசஎ கட்டுப்பாட்டு கட்டமைப்புக்கள் தாபிக்கப்பட்டிருந்தன. இந்த வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளிலிருந்து விலகுதல் மற்றும் சுயாதீனத்துவத்திலிருந்து விலகியிருத்தல் ஆகிய அவதானிக்கப்பட்டன. வெளி மாகாணங்களின் அலுவலகங்களிலும் பல்வேறு கொள்வனவுகளுக்காக ரூபா 3.47 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக அந்த கொள்வனவுகளின் போதும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு

காணி உரிமையாளர்களின் சட்டரீதியான கடப்பாட்டினை பெற்றுக்கொடுத்தல் போன்று அவர்களுக்கு நட்டஈட்டினை செலுத்துதல், சுவீகரிக்கப்பட்ட காணிகளை விளைவுடைய முதலீடுகளில் ஈடுபடுத்தல்,

ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல் மற்றும் காணிகளை பாதுகாத்தல் காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பிரதான பணியாக இருந்தது. ஆணைக்குழு அந்த பணிகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- காணிகள் ஆணைக்குழுவிற்கு சொந்தமாக காணப்படும் காணிகளின் அளவினைக் காண்பிக்கும் பதிவு செய்யப்பட்ட சான்றுகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 1972 - 2974 காலப்பகுதியினுள் வெளியீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காணிகளுக்கு உரியதாக 40 வருடங்களை விஞ்சியிருந்த நியதிச்சட்ட தீர்ப்புகளை பெற்றுக்கொடுக்காத நபர்களின் எண்ணிக்கை 235 ஆக இருந்தது. அவற்றுள் 25 சதவீதமானவை வரைபடங்களை சமர்ப்பிக்காமையின் அடிப்படையிலும், 53 சதவீதமானவை வெளிப்படுத்துநர்களை முன்வைக்காமையின் அடிப்படையிலும், அவ்வாறான நியதிச்சட்ட தீர்வுகளை வழங்க முடியாதிருந்தது. நியதிச்சட்ட தீர்வுகள் தாமதமடைந்த போதிலும், காணிகளின் உரித்தினை வெளிப்படுத்தியிராமையால் சபைக்கு கையேற்கப்பட்ட இந்த காணிகள் பிரயோசனமான விதத்தில் பயன்படுத்துவதற்கும் வருமான மீட்டுவதற்குமான சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

- 1972 இன் ஆம் இலக்க காணிகள் மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் நட்டஈடு செலுத்துவதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட உரித்து உறுதி செய்யப்படாத 104 கோவைகள் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்டதுடன், அவற்றுள் 2016 ஆம் ஆண்டின் போது 3 கோவைகளுக்கு மாத்திரமே நட்டஈடு செலுத்த இயலுமானதாக இருந்தது.

- அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தடை செய்யப்பட்ட செயற்திட்டங்களை மீளவும் ஆணைக்குழுவிற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது நியாயமான காரணங்கள் காணப்படுமாயின், ஏனைய அமைச்சரவை தீர்மானங்களின் மூலம் மீண்டும் அவற்றை வலுவூட்ட நடவடிக்கை எடுக்காமையின் காரணத்தால் எந்தவொரு வருமானத்தையும் அறவீடு செய்யாது அந்த செயற்திட்ட நலனாளிகள் காணிகளை பயன்படுத்தியிருந்தனர். இதன் காரணமாக ஆணைக்குழுவிற்கு பாரியளவான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

# கல்வி

தரமான கல்வியை நோக்காகக் கொண்டு பாடசாலை பாடத்திட்டத்தில் அறிவு, ஒழுக்கநெறி, ஆளுமை மற்றும் சிறந்த வாழ்வு ஆகியவற்றை முழுமையாகக் கொண்டமைந்த மனிதவளத்தினை உருவாக்குவதே இத்துறையின் குறிக்கோளாக உள்ளது. இக் குறிக்கோளை அடைவதற்காக அமைச்சின் கீழ் 04 திணைக்களங்களும் 09 நியதிச்சட்ட சபைகள்/ நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களின் மூலம் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுவதன் ஊடாக குறித்த குறிக்கோள்கள் அடையப்பட வேண்டியதாக காணப்பட்டன.

- உலக போட்டித்தன்மைக்கு சுய நம்பிக்கையுடனும் வெற்றி தொடர்பான நம்பிக்கையுடன் பிரவேசிப்பதற்கு இலங்கையின் சிறுவர் மற்றும் இளைஞர் சமூகத்திற்கு இயலுமையை ஏற்படுத்துகின்ற விதத்தில் தேசிய கல்வி முறைமையை நிர்மாணித்தல்
- தேசிய நோக்கங்களை அடையக்கூடிய விதத்தில் கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் மேவுகை செய்தல்.
- தேசிய பாடசாலைகளுக்கு பௌதீக மற்றும் மனிதவளங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்
- இலவச பாடபுத்தகங்கள், சீருடைகள் பாதணிகள் மற்றும் மதிய உணவு ஆகியவற்றை வழங்குதல்
- ஒட்டுமொத்த கல்விக் கட்டமைப்பினுள் மற்றும் மாணவரிடையே கல்வியின் தரம் மற்றும் ஒழுக்கத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல்
- இலங்கை கல்வி நிருவாக சேவையின் நிருவாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவ நடவடிக்கைகள்
- வரலாற்று சிறப்புமிக்க தொல்பொருளியல் கலாசார மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு தேவையன நடவடிக்கை எடுத்தல்
- அரச பதிவேடுகளின் முறையான முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல்

மேற்குறிப்பிட்ட பணிகள் குறித்த நிறுவனங்களால் நிறைவேற்றப்படுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்

கல்வி அமைச்சின் கீழுள்ள 15 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 543.51 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து எவ்வித தொகையும் பயன்படுத்தப்படாது அந்த நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. 2016 இன் வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த 126-2-4-1-1407 ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் அமைச்சினால் வருடாந்த மதிப்பீட்டினைத் தயாரிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்த அரசாங்க முதலீட்டினைப் பேணிச்செல்லும் கிரயம் காணி மற்றும் கட்டிடங்கள் என ரூபா 121,352 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெயரளவில் குறிப்பிடப்பட்டிருந்த இந்த நிதி ஏற்பாட்டிலிருந்து எவ்வதத் தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 23 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிராமையால் அதனை

செலவினமாக கணக்கீடு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கவில்லை என்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

### பரீட்சையின் பெறுபேறுகள்

2016 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றியிருந்த 211,865 விண்ணப்பதாரர்களில் 17,702 மாணவர்கள் அல்லது 8.36 சதவீதமானோர் எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாதிருந்தனர். அனைத்து பாடங்களிலும் A சித்தியைப் பெற்றிருந்தோர் எண்ணிக்கை 6,468 அல்லது 3.05 சதவீதமாகக் காணப்பட்டது. வர்த்தக கற்கைப் பிரிவில் 69.64 சதவீதமானோரும், பௌதீகப் பாட பிரிவில் 53.26 சதவீதமானோரும், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 53.35 சதவீதமானோரும் பல்கலைக்கழகங்களிற்காக தகைமைகளைப் பெற்றிருந்தனர். இரண்டாவது ஆண்டாக தொழில்நுட்பப் பாடப்பிரிவில் உயர்தரத்திற்குத் தோற்றி மீளாய்வாண்டில் உயிரியல் முறைமை தொழில்நுட்ப பாடப்பிரிவிற்கு 60.16 சதவீதமானோரும் பொறியியல் தொழில்நுட்பப் பாடப்பிரிவிற்கு 55.58 சதவீதமானோரும் பல்கலைக்கழகங்களிற்காக தகைமைகளைப் பெற்றிருந்தனர்.

### தேசிய பாடசாலைகளிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளல்

தேசிய பாடசாலைகளில் ஆரம்ப தரங்களிற்கு சமமான வகுப்புக்களில் இருக்க வேண்டிய ஆகக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 45 என்றும், முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்கையில் வகுப்பொன்றுக்காக தெரிவு செய்யப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 40 என்றும் அமைச்சினால் குறிப்பிடப்பட்டிருந்தது. 116 தேசிய பாடசாலைகளினால் அந்த எல்லையினை மீறி 9,639 மாணவர்கள் பாடசாலைகளிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அவற்றில் பிரசித்த பாடசாலைகள் எனக் கருதப்படுகின்ற 32 தேசிய பாடசாலைகளினால் குறித்த எல்லையினை மீறி 5,373 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

### நியமனங்களும் வெற்றிடங்களும்

தாபனவிதிக் கோவையின் பிரகாரம் நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை தற்காலிக தீர்வாக பதிற்கடமைக்கு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க முடியுமான போதிலும், 2017 யூன் மாதமளவில் நாடு முழுவதிலும் அமைந்துள்ள 352 தேசிய பாடசாலைகளில் 228 அதிபர் வெற்றிடங்களிற்கான பதிற்கடமைகளிற்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேசிய பாடசாலைக்கான உரிய பிரதி அதிபர் எண்ணிக்கையினை விஞ்சி 55 தேசிய பாடசாலைகளில் 99 பிரதி அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே, தேசிய பாடசாலைக்கான உரிய உதவி அதிபர் எண்ணிக்கையினை விஞ்சி 28 தேசிய பாடசாலைகளில் 61 உதவி அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் இறுதியளவில் நாடு முழுவதிலும் தொழில்நுட்ப பாடப்பிரிவிற்காக 327 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டன.

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 183 தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட 2,361 ஆசிரியர் பற்றாக்குறையினையும் 163 தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட 1,527 ஆசிரியர் மிகையினையும் குறைத்துக்கொள்வதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### ஒழுக்காற்று விசாரணைகள்

2008 ஆம் ஆண்டு முதல் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை விரயம் மற்றும் பல்வேறு ஒழுக்கமின்மை செயற்பாடுகள் காரணமாக பாடசாலை முறைமையில் தீர்வு காணப்படாதிருந்த ஒழுக்காற்றுப் பிரச்சினைகளின் எண்ணிக்கை 343 ஆக காணப்பட்டது. அவற்றில் 69 அதிபர்களிற்கும், 274 கல்விசார் மற்றும் கல்விசாராத பதவியணியினருக்கும் உரித்தான

பிரச்சினைகள் காணப்பட்டன. கல்வியின் தரம், மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டினை பேணிச் செல்வதற்குத் தேவையான கொள்கை ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல் அமைச்சின் பிரதான பணிகளில் ஒன்றாகும். பாடசாலைகளில் இடம்பெறுகின்ற மாணவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் விரைவாக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டு தண்டனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### விடுமுறைகள்

2016 ஆம் ஆண்டில் 35 தேசிய பாடசாலைகளிலுள்ள 198 கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத பதவியணி உறுப்பினர்கள் முறையான அங்கீகாரமின்றி 5,072 நாட்கள் கடமைகளிற்கு சமூகமளித்திருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் அமைச்சினால் தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2016 ஆம் ஆண்டில் 143 தேசிய பாடசாலைகளிலுள்ள 712 கல்விசார்ந்த மற்றும் கல்விசாராத பதவியணி உறுப்பினர்கள் முறையான அங்கீகாரமின்றி 15,973 நாட்கள் சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த விடுமுறை நாட்களிற்காக சம்பளத்திலிருந்து பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

### இடமாற்றங்கள்

கல்விச் செயன்முறை மிகவும் பயனுள்ள விதத்தில் இடம்பெறுகின்றவாறும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலனோம்பலை உச்சப்படுத்துகின்றவாறும் பாடசாலைகளில் ஆசிரியர் இடமாற்றக் கொள்கையினை தயாரித்து அமுலாக்கும் நோக்கில் 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்த போதிலும், அதிலுள்ள ஏற்பாடுகள் உரியவாறு அமுல்படுத்தப்பட்டிருக்காமையால் 193 தேசிய பாடசாலைகளில் 5,905 ஆசிரியர்கள் 08 ஆண்டுகள் முதல் 27 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இடாற்றம் செய்யப்படாது ஒரே பாடசாலையில் சேவையாற்றி வருகின்றனர்.

### பாடங்களை கற்பிப்பதற்காக நியமனம் செய்தலும் கால அட்டவணைகளை வழங்குதலும்

- 152 தேசிய பாடசாலைகளிலுள்ள 873 ஆசிரியர்கள் அவர்கள் நியமனம் செய்யப்பட்ட பாட விடயத்திற்குப் புறம்பான பாடங்களை கற்பிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விசேடமாக 36 தேசிய பாடசாலைகளில் ஆசிரியர் பயிற்சியினைப் பெற்றிராத 137 ஆசிரியர்கள் ஆரம்ப தரங்களிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர்.
- தேசிய பாடசாலையொன்றின் பிரதி அதிபர்களுக்கு வாரமொன்றிற்கு 10 பாடவேளைகள் ஆகக் குறைந்தளவில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட வேண்டுமெனினும், 101 தேசிய பாடசாலைகளின் 225 பிரதி அதிபர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஒரு பாட வேளையேனும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. 5 தேசிய பாடசாலைகளின் 6 பிரதி அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாடவேளைகளின் எண்ணிக்கை 02 முதல் 06 வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.
- உதவி அதிபர்களுக்கு வாரமொன்றிற்கு 12 பாடவேளைகள் கொண்ட கற்பித்தல் நடவடிக்கைகள் கையளிக்கப்பட வேண்டுமெனினும், 33 தேசிய பாடசாலைகளின் 69 உதவி

அதிபர்களுக்கு ஒரு பாடவேளையேனும் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. 6 தேசிய பாடசாலைகளின் 6 உதவி அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்து பாடவேளைகளின் எண்ணிக்கை 02 முதல் 06 வரையான எண்ணிக்கையுடைய வீச்சில் காணப்பட்டது.

- பாடங்களைக் கறிபித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் முறையே வாரமொன்றிற்கு ஆகக்குறைந்தது. 40 நிமிடங்கள் கொண்ட 35 பாடவேளைகள் கொண்ட கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டுமெனினும், 136 தேசிய பாடசாலைகளின் 769 ஆசிரியர்களுக்கு ஒரு கற்பித்தல் பாடவேளையேனும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 144 தேசிய பாடசாலைகளின் 1,075 ஆசிரியர்களுக்கு 16 கற்பித்தல் பாடவேளைகளுக்கு குறைவான எண்ணிக்கை வழங்கப்பட்டிருந்தது.
- தேசிய பாடசாலையொன்றில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஆசிரியர்களுக்கு வாரமொன்றிற்கு ஆகக்குறைந்தது 40 நிமிட 16 கற்பித்தல் கால வீச்சக்கள் வழங்கப்பட வேண்டுமெனினும் 14 தேசிய பாடசாலைகளின் 59 ஆசிரியர்களுக்கு ஒரு கால அட்டவணையேனும் வழங்கப்பட்டிராததுடன் 12 தேசிய பாடசாலைகளின் 66 ஆசிரியர்களுக்கு 16 கற்பித்தல் கால அளவுகளை விட குறைவான எண்ணிக்கை வழங்கப்பட்டிருந்தது.
- நாட்டின் 9 மாகாணங்களின் விசேடக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 411 ஆக இருந்ததுடன், விசேட கல்விக்கான ஆசிரியர் பயிற்சிகளைப் பெற்ற 355 ஆசிரியர்கள் ஏனைய பாடசாலைகள் மற்றும் வகுப்பறைகளில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### நூலகப் புத்தகங்களை மீளக் கையளிக்காமை

35 தேசிய பாடசாலைகளிலுள்ள 243 ஆசிரியர்கள் சேவை இடமாற்றங்கள், வெளிநாடு செல்லல், ஓய்வுபெறுதல் மற்றும் பதவி விலகுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மீளக் கையித்திருக்காத ரூபா 522,181 பெறுமதியான நூலகப் புத்தகங்களின் எண்ணிக்கை 605 ஆக இருந்தது. அந்தப் புத்தகங்களை அல்லது அவற்றின் பெறுமதியினை அறவிடாது அந்த ஆசிரியர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.

### தனியார் பாடசாலைகளின் மேற்பார்வை

1961 இன் 08 ஆம் இலக்க குறைநிரப்பு பாடசாலை கல்விக் கல்லூரிகள் (மேலதிக ஏற்பாடு) அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் 05 வருடங்கள் முதல் 14 வருடங்கள் வரையான வயது வீச்சினைக்கொண்ட சிறுவர்களிற்கு கல்வியினை வழங்குவதற்காக எந்தவொரு நபருக்கும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. அதற்கு இணங்காத விதத்தில் 214 சர்வதேச மற்றுத் தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கு மேலாகவும் சர்வதேச மற்றுத் தனியார் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்கும் வகையில் சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் அமைச்சின் பிரதான குறிக்கோகளில் ஒன்றாக காணப்பட்டது.

தனியார் பாடசாலைகளில் நிலவுகின்ற மானிட மற்றும் பௌதீக வளங்களின் தரத்தினை மதிப்பீடு செய்வதற்காகவும் பாடங்களை தேசிய கல்விக் கொள்கைக்கு அமைவாக

செயற்படுத்தி மேற்பார்வை மற்றும் கண்காணித்தலிற்காகவும் முறையான கொள்கைகள் மற்றும் நியமங்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### சிசு அருண கல்வி நிதியம்

கல்வி அமைச்சினால் 2001 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளில் திறமையாக காணப்பட்ட போதிலும், வறுமையிலுள்ள குறைந்த வருமானத்திலுள்ள மற்றும் 5 ஆந் தர புலமைப் பரிசில் உதவித்தொகை கிடைக்காத பிள்ளைகளிற்கு பொருளாதார ரீதியாக மாதாந்தம் உதவுதொகையொன்றை வழங்கும் நோக்குடன் 2001 ஆம் ஆண்டில் சிசு அருண கல்வி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நிதியம் ஸ்தாபிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிதியத்தில் ரூபா 3.58 மில்லியன் மீதி காணப்பட்டது. இலக்கிடப்பட்டவாறு பலமைப்பரிசில்களை வழங்குதல் 2017 யூன் 30 வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

### தேசிய கல்விக் கல்லூரிகளின் செயற்பாடுகள்

நில்வலா தேசிய கல்விக் கல்லூரியில் இலங்கை கல்விச் சேவைக்குரித்தான 13 பதவிகளில் 45 வெற்றிடங்களும், கல்விசாரா பதவியணியில் 16 பதவிகளில30 வெற்றிடங்களும் காணப்பட்டன. கல்விசாரா பதவியணியின் 05 பதவிகளில் 06 மேலதிக பதவியணியினர் காணப்பட்டனர். கல்விக் கல்லூரியின் 09 விரிவுரையாளர்கள் 14 வருடங்கள் முதல் 22 வருட கால வீச்சில் இடமாற்றங்களை பெற்றுக்கொள்ளாது அந்த கல்விக் கல்லூரியிலேயே பணியாற்றி வருகின்றனர்.

பேராதனை தேசிய கல்விக் கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 151 ஆனதுடன், உள்ளபடியான பதவியணியினர் 61 ஆகும். அது மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் ஏற்த்தாழ 40 சதவீதமாகக் காணப்பட்டது. தமிழ் மொழி மூலத்தில் எந்தவொரு நிரந்த விரிவுரையாளரும் காணப்படாமையால், இரண்டு வெளிவாரி விரிவுரையாளர்கள் அதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

ஆசிரியர் கல்விச் சேவையின் பதவியுர்வு நடைமுறை உரிய விதத்தில் காலதாமதமின்றி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. தொழில்சார் இயலுமை அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போதியளவில் அப்பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. போதியளவில் கணனி மற்றும் இணையதள வசதிகள் இல்லாமை மற்றும் தொலைபேசி படியினை வழங்குவதற்கு கல்வி அமைச்சுக்கு மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் முடியாதிருந்தமை காரணமாக உத்தியோகத்தர்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

### பிரிவேனா கல்வியன் செயலாற்றல்

1980 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 108/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் பின்வரும் கடமைப்பொறுப்புக்கள் அமைச்சினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 754 பிரிவேனாக்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 66,003 மாணவர்கள் காணப்பட்டனர். கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 6,503 ஆகவும், அங்கீகரிக்கப்படாத

ஆசிரியர்களின் எண்ணிக்கை 306 ஆகவும் இருந்தது. 1980 ஒக்தோபர் 01 ஆந் திகதிய 108/6 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தலிலுள்ள பணிப்புரைகளின் 16.3 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்தம் வருகை தருகின்ற மாணவர்களின் சாராசரி எண்ணிக்கையினை சீராக்குகையில் அன்றை தினத்தில் காணப்பட்ட ஆசிரியர் மிகையினையும் கருத்திற்கொள்ள வேண்டிய போதிலும், ஏறத்தாழ 1,700 ஆகக் காணப்பட்ட ஆசிரியர் மிகையினை கருத்திற்கொள்ளாது 2017 பெப்ரவரி 14 ஆந் திகதி காணப்பட்ட 122 ஆசிரியர்களிற்கும் 77 மதகுரு ஆசிரியர்களிற்குமாக 199 ஆசிரியர்களிற்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

- கணக்குத் தொகைகளின் தகவல்களிற்கமைய 2015 ஆம் ஆண்டிற்காக 60 பிரிவேனாக்களிற்குச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 18.24 மில்லியன் வருடாந்த மானியம் கணக்காய்வின் இறுதி வரையிலும் அமைச்சினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.
- ஒருசில பிரிவேனாக்களில் 500 மாணவர்களிற்கும் மேலாக காணப்பட்ட போதிலும், பிரிவேனாக்களின் கருதுகோள் தரம், பொதுமானதன்மை மற்றும் கட்டமைப்பு அபிவிருத்திக்காக திட்டமிடலொன்றும் மேற்பார்வையும் காணப்படவில்லை.
- பிரிவேனாக்களின் ஆசிரியர்களிற்காக முறையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கவதற்கு வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.
- வட மாகாணத்தின் முல்லைதீவு மாவட்டத்தில் ஒரு ஆரம்ப பிரிவேனாவும், வவுனியா மாவட்டத்தில் ஒரு பிரிவேனா கல்லூரியும் தவிர்த்து வட மாகாணத்தில் பிரிவேனாக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### முகாமைத்துவ பலவீனங்கள்

இரண்டு தனியார் தொலைபேசிக் கம்பனிகளினால் 2005 ஆம் ஆண்டு முதல் பாடசாலை கணனி வலைப்பின்னலுடன் தொடர்புபடுத்தி வழங்கப்பட்டிருந்த இணையதள வசதிகளின் எண்ணிக்கை 1,724 ஆகும். 2016 ஆம் ஆண்டில் அந்த இணையதள வசதிகளை இடைநிறுத்துவதற்கு அமைச்சு தீர்மானித்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் ஒரு தனியார் தொலைபேசி கம்பனிக்குரித்தான 123 இணைப்புக்களும் 910 ரெலிகொம் இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டிருந்ததுடன், எந்தவொரு பாடசாலைக்கும் 2017 யூன் மாத இறுதி வரைக்கும் புதிய இணையதள வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஒரு தனியார் கம்பனியினால் 192 பாடசாலைகளிற்கு வழங்கப்பட்டிருந்த இணைப்புக்களிற்காக ரூபா 1,500 மாதாந்த கட்டணத்தின் கீழ் அவற்றை புதிய இணைப்புக்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்த தகவல்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2006 யூன் 20 ஆந் திகதிய 2006/27 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 ஆந்தர புலமைப்பரிசில் உரித்தாளர்களிற்கு புலமைப்பரிசில்களை வழங்குவதற்கான புதிய வவுச்சர்களை ஒவ்வொரு மாதத்தினதும் 07 ஆந் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகங்களிற்கு கையளிப்பதற்கு அதிபர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படுகின்ற வவுச்சர்களிற்காக உரிய உதவுதொகைக் காசோலைகளை மாதத்தின் 25 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த வங்கிகளிற்கு அனுப்பிவைப்பதற்கு வலயக் கணக்காளர்கள் நடவடிக்கை

எடுத்தல் வேண்டும். 2015 ஆம் ஆண்டிற்காக 09 தேசிய பாடசாலைகளிற்கான ரூபா 211,000 பெறுமதியான மாணவர் உதவு தொகைகளும் 2016 ஆம் ஆண்டிற்காக 28 தேசிய பாடசாலைகளிற்கான மாணவர் உதவு தொகைகளும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## சீருடைகளும் வவுச்சர்களும்

1993 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை பாடசாலை பிள்ளைகளின் சீருடைகளிற்குத் தேவையான துணிகள் வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் சீருடைத் துணி வழங்குவதற்குப் பதிலாக வவுச்சர்களை வழங்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.
மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் அதற்காக ரூபா 2,298.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினத்தின் மூலம் 4,342,381 மாணவர்களிற்கு வவுச்சர்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 529.22 ஆகக் காணப்பட்டது. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 74.98 இனால் அதிகரித்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், சீருடைகளிற்காக துணிகளை வழங்குகையில் 2014 ஆம் ஆண்டிற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகை 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38.77 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அது 2015 ஆம் ஆண்டில் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 14.46 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இருப்பினும், 2016 ஆம் ஆண்டில் வவுச்சர்களை வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை 2015 ஆம் ஆண்டில் சருடைத் துணியினை வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்த தொகையினைக் காட்டிலும் 11.91 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.
- 2016 ஆம் ஆண்டிற்காக அச்சிடப்பட்டிருந்த ரூபா 2,616.57 மில்லியன் பெறுமதியான வவுச்சர்களில் வலயக் கல்வி அலுவலகங்களின் ஊடாக பாடசாலைகளிற்கு ரூபா 2,414.08 மில்லியன் பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்பட்டிருந்தன. வழங்கப்பட்டிருந்த வவுச்சர்களிற்காக வங்கிகளால் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 2,267.61 மில்லியனாக காணப்பட்டமையால் ரூபா 146.47 மில்லியன் பெறுமதியான வவுச்சர்கள் வலயக் கல்வி அலுவலகங்கள், ஆசிரியர்கள் அல்லது மாணவர்களினது கைகளில் வைத்திருக்கப்பட்டிருந்தன. ஒட்டுமொத்தமாக 2016 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்த மொத்த வவுச்சர்களில் ரூபா 348.96 மில்லியன் பெறுமதியான வவுச்சர்கள் எஞ்சியிருந்தன.

## கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை

ஆசிரியர் தகவல்களை உள்ளடக்கிய தரவு அடிப்படையொன்றை (Data Base) தயாரித்துக் கொள்ளல் மற்றும் அதனோடு இணைந்த ஆசிரியர் சேவை முகாமைத்துவம் மற்றும் ஆசிரியர்களிற்கும் அலுவலக முறைமைக்கும் தேவையான சேவைகளை வழங்குதல் போன்ற நோக்கங்களை மையமாகக் கொண்டு, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (EMIS) ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2011 மார்ச் மாதம் முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் அறிவுபடைத்த சமூகமொன்றுக்கான கல்விச் செயற்திட்டம் (EKSP) நிதியத்திலிருந்து ரூபா 64.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

2012 பெப்ரவரி 27 ஆந் திகதி முதலாவது படியாக ஆசிரியர்களிற்கான தரவு முறைமையினை வடிவமைப்பதற்காக ரூபா 900,000 (வரி நீங்கலாக) தொகையும், 2013 யூன் 27 ஆந் திகதி இரண்டாவது படியாக முதலாவது படியில் குறிப்பிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒன்பது மாதிரிகளை வடிவமைப்பதற்காக ரூபா 13,877,100 (வரி நீங்கலாக) தொகையும், மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், தற்போதைக்கு நான்கு ஆண்டகளிற்கும் மேல் பழமைவாய்ந்த இந்த முறைமையினை உரியவாறு செயற்படுத்துவதற்கு 2017 யூன் 30 வரையிலும் முடிந்திருக்கவில்லை.

### பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிட்டு விநியோகித்தல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டில் பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்காக ரூபா 3,888 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 2,985 மில்லியன் தொகை 315 வகையான 30,033,000 பிரதிகளை அச்சிடுவதற்காக 22 தனியார் அச்சகங்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அது மொத்த அச்சிடுதல் செலவினத்தில் 77 சதவீதமாகக் காணப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் முதற்தடவையாக செயற்கை கடதாசியில் அச்சிடப்பட்டிருந்த 7 ஆந் தரத்திற்கான புவியியல் பாடப் புத்தகத்திற்காக ரூபா 129 மில்லியன் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது. சாதாரண கடதாசியில் 8 ஆந் தரத்திற்காக ஒவ்வோர் ஆண்டிலும் 08 தடவைகள் அச்சிடப்பட்டிருந்த போதிலும், அதற்கான செலவினம் ஏறத்தாழ ரூபா 206.43 மில்லியனாக காணப்பட்டது. செயற்கை கடதாசியில் பத்தகங்களை இடரண்டு தடவைகள் மாத்திரம் அச்சிடுகையில் ரூபா 309.49 மில்லியன் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கொள்வனவு நடவடிக்கைகள்

கொழும்பு விசாகா கல்லூரியில் மூன்று மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 97 மில்லியன் இற்கு கேள்வியினை சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இக் கட்டிட நிர்மாண வேலைகளிற்கான மோத்தச் செலவினத்தையும் ஈடுசெய்வதற்காக குறித்த கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்குச் சொந்தமான ரூபா 137 மில்லியன் நிலையான வைப்பினை பயன்படுத்துவதாக குறித்த பாடசாலையின் அதிபர் அமைச்சிற்கு அறிவித்திருந்தார். அதற்கமைய, குறித்த நிர்மாணத்தினை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பணத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட பின்னர் மேலும் ரூபா 40 மில்லியன் தொகையினை சேமித்துக்கொள்ளக்கூடியதாக காணப்பட்ட போதிலும், அது தொடர்பில் கருத்திற்கொள்ளாது 2017 ஆம் ஆண்டிற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 63.5 மில்லியன் அதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

நுகேகொட அனுலா கல்லூரியின் கேட்போர் கூடத்தின் கட்டிட நிர்மாணத்திற்கான மூன்றாவது குறைந்தபட்ச விலையினை சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு 2010 நவம்பர் 19 ஆந் திகதி ரூபா 14.01 மில்லியனிற்கு (பெறுமதிசேர் வரி நீங்கலாக) ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாண வேலைகள் 2010 நவம்பர் 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2011 யூன் 01 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்தது. பல சந்தர்ப்பங்களிலும் கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அத் திகதிகள் முடிவடைந்த பின்னரும் கூட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 8.10

மில்லியனாக காணப்பட்டது. குறித்த கல்லூரியினால் இதற்காக ரூபா 25.60 மில்லியன் அமைச்சில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 17.36 மில்லியன் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதற்காக ஐந்து ஆண்டுகளிற்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும், நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தாமதம் காரணமாக, பொருட்களின் விலைகள் அதிகரித்தமையால் ஏற்பட்டிருந்த நட்டங்கள் மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதிகளிற்கு ஏற்பட்டிருந்த சேதம் காரணமாக இடம்பெற்றிருந்த நட்டங்களிற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களே பொறுப்பாளர்கள் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

கொழும்பு இசிபதன கல்லூரியில் நீச்சல் தடாகமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 43.40 மில்லியனுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு ஒப்பந்த தாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் 2014 யூலை 29 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 280 நாட்களிற்குள் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 ஒக்தோபர் 11 ஆந் திகதி கால நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. செய்யப்பட்ட வேலைகளின் மொத்தப் பெறுமதியான ரூபா 33.04 மில்லியன் தொகை குறித்த ஒப்பந்த தாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றுவதற்கு தாமதம் செய்திருந்த காலத்திற்காக தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டமைக்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

நீச்சல் தடாகமொன்றை நிர்மாணிக்கும் நிதியத்திற்காக கொழும்பு மஹாநாம ஆண்கள் தேசிய பாடசாலையினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 6.00 மில்லியன் தொகை 2007 திசெம்பர் 19 ஆந் திகதி நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அந்த முதலீட்டின் பெறுமதி ரூபா 22.53 மில்லியனாக காணப்பட்டது. 2017 யூலை 21 ஆந் திகதி வரையிலும் குறித்த நீச்சல் தடாகத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### வாகனப் பயன்பாடு

கல்வி அமைச்சிடம் அனைத்து ரகங்களிலும் 147 வாகனங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 17 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத நிலையில் காணப்பட்டன. அவற்றில் 71 வாகனங்கள் அமைச்சிற்கு உரித்தானவையாக காணப்பட்ட போதிலும், அவை அமைச்சில் காணப்படவில்லை. அமைச்சிற்கு உரித்தற்ற 25 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் மற்றும் சம்பளம் செலுத்துதல்

2014 ஒக்தோபர் 22 ஆந் திகதிய 1885/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அதிபர் சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் படி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உள்ளீர்க்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 12,160 ஆகக் காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 16,512 ஆன போதிலும், உள்ளபடியான எண்ணிக்கை 13,517 ஆகக் காணப்பட்டமையால் மேலும் 1,357 பேர் உள்ளீர்க்கப்பட வேண்டியிருந்தது.

அரசாங்க சேவைகளின் சம்பளங்களை மறுசீரமைப்பதற்காக வெளியிடப்பட்ட 2006 ஏப்ரல் 25 ஆந் திகதி 06/2006 ஆம் இலக்க

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் III ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிற்குறிப்பு மற்றும் 2006 நவம்பர் 10 ஆந் திகதிய 06/2006 (II) இலுள்ள 04 ஆம் பந்திக்கு இணங்காத விதத்தில் 2006 சனவரி 01 ஆந் திகதிக்குப் பின்னர் அமைச்சின் தேசிய பாடசாலைகள், கல்விக் கல்லூரிகள் மற்றும் கல்வி பீடங்களிற்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஆய்வுகூட ஊழியர்களையும் நூலக ஊழியர்களையும் குறித்த பதவிகளின் III ஆந் தரத்தில் வைக்கப்பட்டு சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்ப படியில் வைக்கப்பட வேண்டிய போதிலும், II ஆந் தரத்தில் வைத்து சம்பள அளவுத்திட்டத்தின் 12 ஆவது படி வழங்கப்பட்டிருந்தது. காவலர் மற்றும் பாதுகாப்பு சேவையிலுள்ள பதவிகளிற்காகவும் ஆரம்ப சமபள அளவுத்திட்டத்திற்குப் பதிலாக 12 சம்பளப் படி வழங்கப்பட்டிருந்தது.

2007 யூலை 01 ஆந் திகதி முதல் 2009 நவம்பர் 01 ஆந் திகதி வரையான காலத்தில் 324 அமைய பதவிகளிற்காக நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும், ஏறத்தாழ ரூபா 46.61 மில்லியன் சம்பளம் (சம்பள ஏற்றம் நீங்கலாக) மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

2010 நவம்பர் 10 ஆந் திகதிய NSCC/1/84/TU-2 ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர்கோப்பு ஆணைக்குழுச் செயலாளரின் கடிதத்தில், 2008 திசெம்பர் 04 ஆந் திகதி, 2009 சனவரி 06 ஆந் திகதி மற்றும் 2009 மே 18 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதங்களின் மூலம் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள் அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்ததாகவும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாது புதிய நியமனங்கள் வழங்கப்படுவதாகவும் 2009 யூன் 30 ஆந் திகதிய ED/5/67/11/20 ஆம் இலக்க நிமயனத்திலிருந்து இது தெளிவாகின்றது என்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிலை உடனடியாக திருத்தப்படுதல் வேண்டுமெனவும், 2006 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்கள் உரிய சம்பள அளவுத்திட்டங்களில் வைக்கப்படுதல் வேண்டுமெனவும், அந்த தவறான தீர்மானங்களின் காரணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த சம்பளங்களை குறித்த கட்டளைகளை வழங்கிய உத்தியோகத்தர்களிடமிருந்து மிகைஅறவீடாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அந்த பரிந்துரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆணைக்குழுவிற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அறிவுக்குமாறு மேலும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

2009 பெப்ரவரி 30 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகள் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆவது நிபந்தனையின் பிரகாரம், ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தரும் இடமாற்றத்திற்கு உட்படுவதுடன், அவ்வாறான இடமாற்றங்கள் மற்றும் தாபனவிதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளிற்க இணக்கமுறாத வகையில் செயற்பட்டு கல்வி அமைச்சில் பணியாற்றிவருகின்ற கல்விசார் மற்றும் கல்விசாராத 203 பதவியணியினரின் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### வெளித்தரப்பினரினால் அனுபவித்துவருகின்ற சொத்துக்கள்

அமைச்சின் தேசிய பாடசாலைகள், ஆசிரியர் கல்விக் கல்லூரிகள் மற்றும் தேசிய கல்விக் கல்லூரிகளிற்கு உரித்தான 04 பர்ச் முதல் 224 பர்ச் வரையான வீச்சில் விஸ்தீரணமுடைய நகரப்பிரதேசங்களில் அமைந்துள்ள 80 காணிகள் அங்கீகாரமின்றி வெளித்தரப்பினர்களால் அனுபவித்து வரப்படுகின்றன. அதிகூடிய மதிப்பீட்டுப் பெறுமதியுடைய சில காணிகளின் விஸ்தீரணம் மற்றும் நடப்புப் பெறுமதித் தகவல்கள் அமைச்சில் காணப்படவில்லை

### தொல்பொருளியல் இடங்களின் பாதுகாப்பு முன்னேற்றங்கங்

2011 பெப்ரவரி 02 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகரித்திருந்த 2011 சனவரி 18 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மத்திய கலாச்சார நிதியத்தினால் உழைக்கின்ற வருமானத்திலிருந்து தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் 25 சதவீத நிதி ஏற்பாட்டினை தொல்பொருள் மரபுரிமை நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்குதல் வேண்டும். தொல்பொருள் மரபுரிமை நம்பிக்கைப் பொறுப்பினை தாபிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டில் மத்திய கலாசார நிதியத்தின் வருமானம் ரூபா 3,446 மில்லியனாக காணப்பட்டதுடன், தொல்பொருளியல் திணைக்களத்திற்கு கிடைத்திருக்க வேண்டிய தொகை ரூபா 861.5 மில்லியன் ஆக காணப்பட்டது. இந்த வருமானத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் மத்திய கலாசார நிதியத்திலிருந்து 75 செயற்திட்டங்களிற்காக ரூபா 115 மில்லியன் கிடைத்திருந்ததுடன், அது கிடைக்க வேண்டிய வருமானத்தில் 13 சதவீதமாக காணப்பட்டது. அந்த நிதியிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அது நிதியத்தின் வருமானத்தில் 16.5 சதவீதமாக காணப்பட்டது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 37 மில்லியன் தொகைக்குரிய 29 செயற்திட்டங்களிற்காக 2016 ஆம் ஆண்டில் எவ்வித செலவும் செய்யப்பட்டிருக்கவில்லை. 39 செயற்திட்டங்களிற்காக ரூபா 7 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றின் பௌதீக செயன்முன்னேற்றம் 0 முதல் 50 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. 51 செயற்திட்டங்களிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 10 மில்லியன் தொகையின் நிதிசார் செயன்முன்னேற்றம் 0 முதல் 50 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### தொல்பொருள் இடங்களை வர்த்தமானியில் வெளியிடாமை, அனுமதியின்றி கையேற்றல் மற்றும் தொல்பொருள் இடங்களை சேதப்படுத்துதல்

பிரதேச தொல்பொருளியல் அலுவலகங் களிலிருந்து பெறப்பட்ட தகவல்களிற்கமைய, தொல்பொருளியல் இடங்கள் அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்த 8 மாவட்டங்களிற்குரிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத 66 தொல்பொருள் இடங்களும், அனுமதியின் கையேற்கப்பட்டிருந்த 86 இடங்களும், சேதத்திற்குள்ளாக்கப்பட்டிருந்த 85 இடங்களும் காணப்பட்டன. அது தொடர்பான தகவல்கள் கீழே அட்டவணை 19 இல் தரப்பட்டுள்ளன. பொலன்னறுவை, முல்லைதீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| மாவட்டம் | வர்த்தமானியில் வெளியிடப்படாத | அனுமதியின்றிய கையேற்புகள் * | சேதப்படுத்தப்பட்டவை ** |
|---|---|---|---|
| **யாழ்ப்பாணம்** | 15 | 03 | 01 |
| **கிளிநொச்சி** | 15 | - | - |
| **அம்பாறை** | - | 23 | 22 |
| **அநுராதபுரம்** | 03 | 04 | 25 |
| **காலி** | - | 21 | 03 |
| **மொனராகலை** | 16 | 20 | 11 |
| **குருணாகல்** | - | 13 | 15 |
| **திருகோணமலை** | 17 | 02 | 08 |
| மொத்தம் | **66** | **86** | **85** |

அட்டவணை 19 தொல்பொருள் இடங்களை வர்த்தமானியில் வெளியிடாமை, அனுமதியின்றி கையேற்றல் மற்றும் தொல்பொருள் இடங்களை சேதப்படுத்துதல்
மூலம்- பிரதேச தொல்பொருளியல் அலுவலகங் களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள்

கொழும்பு மாவட்டத்திலுள்ள கோட்டே பழங்கால கோட்டை இராச்சியத்தை சூழவுள்ள கோடை பகுதியிலிருந்து அகற்றப்பட்ட வேண்டிய அனுமதியின்றிய நிர்மாணங்களின் எண்ணிக்கை 110 ஆகும்.

## தொல்பொருளியில் இடங்கள் இணையதளத்தில் உள்ளடக்கப்படாமை

1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 40(அ) பிரிவின் பிரகாரம் இலங்கையின் தொல்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்றை பேணுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்பொருட் திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற இணைய தளத்தில் 2012 திசெம்பர் 30 ஆந் திகதியின் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஞாபனச் சின்னங்கள் நாளதுவரையாக்கப் படாதிருந்ததுடன், அதற்கமைய 802 தொல்பொருட்கள் இணைய தளத்தில் பதிவாகியிருக்கவில்லை.

தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தொல்பொருள் காப்பக பதிவேடு தொல்பொருட்கள் இணையதளத்தில் காணப்படவில்லை.

# தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள்

தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் பிரிவினால் தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், ஊழியர் நலன்புரி நிதியம், தனியார் நலன்புரி நிதியம் மற்றும் தனியார் ஓய்வூதிய வழங்கல் முறைகளை நிர்வகித்தல், சர்வதேச தொழிலாளர் நியமங்கள் ஊழியர் நிர்வாகம் மற்றும் நலன்புரி தொடர்பில் கொள்கைகள் தயாரித்தல் மற்றுமு் நடைமுறைப்படுத்தல், சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சமூக பாதுகாப்பு அமைப்புக்களுடன் பரஸ்பர ஒத்துழைப்பை பேணுதல், தொழிற்சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் அரச மற்றும் தனியார் துறைகளின் அனைத்து தொழிற்சங்கங்களினதும் நடவடிக்கைகளை நாட்டின் அபிவிருத்திக்காக ஈடுபடுத்துவதற்குரிய திடமான படிமுறைகளை அறிமுகப்படுத்தல் அமுல்படுத்துதல் மற்றும் தொழில் பாதுகாப்பு கொள்கைகள் அமுல்படுத்துதல் மற்றும் தொழில் வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தொழிலாளர் உறவுகள் மற்றும் தொழிலாளர் முரண்பாடுகளை தீர்த்து வைத்தல், தொழிலாளர் உறவுகளுக்குரிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஏற்பாடுகளுக்குரிய நடவடிக்கை எடுத்தல், தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் என்பன இத்துறையில் எதிர்பார்க்கப்படும் பிரதான பணிகளாக இருந்தன.

இலங்கைக்குரிய ஊழியர் படையணியின் பிரதான அம்சங்கள் சில பின்வரும் அட்டவணை 20 இல் தரப்பட்டுள்ளன.

| | 2015 | 2016 |
|---|---|---|
| குடும்பங்களின் சனத்தொகை | | |
| **நபர்கள்** | 15,282,000 | 15,449,000 |
| ஊழியப்படை | | |
| **நபர்கள்** | 8,214,000 | 8,311,000 |
| **வேலை செய்வோர்** | 7,831,000 | 7,948,000 |
| **தொழிலற்றோர்** | 383,000 | 363,000 |
| **ஊழியப் படை பங்குபற்றல் விகிதம்** | 53.8 | 53.8 |
| **ஆண்** | 74.7 | 75.1 |
| **பெண்** | 35.9 | 35.9 |

அட்டவணை -20 ஊழியப்படையின் பிரதான அம்சங்கள்
மூலம் :- இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2016

### தொழிலாளர் பரிசீலனையில் உள்ள முறைப்பாடுகள் மற்றும் வழக்குகளை கணனிமயப்படுத்தல்

“ஈ” - அரசாங்க கொள்கையின் கீழ் 2010 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்த தொழிலாளர் பரிசீலனையிலுள்ள முறைப்பாடுகள் மற்றும் வழக்குகளை கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து (LISA) சிறப்பான செயல் முன்னேற்றமொன்று 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்தால் அடையப்பட்டிருக்கவில்லை. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 30.16 மில்லியன் பெறுமதியான 314 கணனிகள் தொழில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அது கணனி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படாமல் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது. தொழில் உத்தியோகத்தரினால் தகவல் மற்றும் தரவுகள் இந்த முறைமையில் உள்ளடக்கப்படாமையினால் தொழில் அலுவலகம் ஊடாக அந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு மீண்டும் ரூபா 18.47 மில்லியன் செலவில் 138 கணனிகளும் ஏனைய 245 துணைப் பாகங்களையும் தொழில் திணைக்களம் கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. அதில் ரூபா 51,800 பெறுமதியான 22 துணைப்பாகங்கள் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் அலுவலகங்களில் முறைப்பாடுகள் மற்றும் வழக்குகளின் செயல்முன்னேற்றம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் LISA முறைமையின் தகவல்களுக்கிடையே அனேக சீரின்மைகள் காணப்பட்டன.

### தொழில் அலுவலகங்களில் வழக்கு நடவடிக்கைகளைத் தீர்த்தல்

1999 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 18 வருட காலப்பகுதியில் தொழில் திணைக்களத்தால் தொழில் செய்வோர் மற்றும் தொழில்சார் சட்டவிதிகளை மீறுதல் தொடர்பாக 73,329 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. அதில் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையில் 14,750 வழக்குகள் செயற்படு நிலையில் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 1,803.51 மில்லியன் பெறுமதியுடைய 3680 வழக்குகள் செயலிழந்து காணப்பட்டன. ரூபா 812.20 மில்லியன் பெறுமதியுடைய 2,461 வழக்குகளுக்கு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயலிழந்த மற்றும் திறந்த பிடியாணை வழக்குகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய சட்டரீதியான முறைமையொன்று காணப்படாமை, வழக்குகள் மீள செயற்படுத்துவதற்கு தொழில் உத்தியோகத்தர்களுக்கு முறையான பொறுப்புக்கள் கையளிக்கப்படாமை மற்றும் தொழில் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் போது காணப்படுகின்ற செயற்திறனின்மையினால் அந்த வழக்குகள் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்படாமல் தொழில் அலுவலகத்தில் காணப்பட்டது.

### அம்பாறை சுற்றுலா விடுதி நிர்மாணம்

1954 பெப்ரவரி 12 ஆந் திகதிய 10640 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் கீழ் அம்பாறை பாதுகாக்கப்பட்ட பூமியில் அதாவது கல்ஓய வடகிழக்கு திசைக்குரிய காணியொன்று தொழிலாளர், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சினால் சுற்றுலா விடுதியொன்று 2015 ஆம் ஆண்டு முதல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்காக வனவிலங்குகள் மற்றும் காடுகள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 469 ஆம் அதிகாரத்தின் கீழ் வனவிலங்குகள் பாதுகாப்புத்

திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து எழுத்துமூல அனுமதியொன்று பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.3(i)(அ) பிரிவின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறைவேற்ற வேண்டிய ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகள், சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு, சமூக தாக்கங்கள் தொடர்பான மதிப்பீடு போன்றவை அமைச்சினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்களுக்குரிய கட்டிட வரைபடத்திட்டம் நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காணிப்பகுதியின் உரித்து தொடர்பாக அமைச்சிற்கும் வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கும் இடையே 2017 மார்ச் 23 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், அந்த உடன்படிக்கையின் பிரகாரம் காணியின் பூரண உரிமை வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்தது. அதனால் அமைச்சிற்கு சட்டரீதியாக உரித்தற்ற ஒதுக்கல் பூமியில் அமைந்துள்ள காணியொன்றில் மேற்கொள்ளப்பட்ட இந்த நிர்மாணங்களுக்காக 2017 மே மாத இறுதி வரையில் ரூபா 16.3 மில்லியன் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

### தொழிலாளர் நட்டஈடு செலுத்துதல்

இடரொன்றிற்கு உட்படுகின்ற அல்லது மரணமடைகின்ற ஊழியர்களுக்காக தொழில்தருனர்களிடமிருந்து தாமதமின்றி நட்டஈட்டுப் பணத்தை அறவிட்டு வழங்குவதன் மூலம் ஊழியர் திருப்தியை ஏற்படுத்தும் நோக்குடன் தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் தாபிக்கப்பட்டிருந்தது.

### பராயமடையாதவர்களின் வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட இழப்பீட்டுப் பணம் செலுத்தாமை.

2016 ஆம் அண்டின் இறுதி வரையில் வயது பூரணமடைந்த 427 நலனாளிகளிடமிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 8.05 மில்லியன் பெறுமதியான வைப்புக் கணக்குகளின் மீதி 01 வருடம் முதல் 30 வருடங்கள் வரையிலான வீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த மீதியையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### அறிக்கையிடப்பட்ட விபத்துக்கள் மற்றும் இழப்பீடு செலுத்துதல்

தொழிலாளர் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் உயிரிழப்பு அல்லது உயிரிழப்பற்ற விபத்துக்களின் காரணமாக இழப்பீட்டு விண்ணப்பமாகக் கிடைத்த 763 முறைப்பாடுகள் 2016 ஆம் ஆண்டின் போது விசாரணையில் காணப்பட்டதுடன் அதில் 533 முறைப்பாடுகள் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடுக்கப்பட்ட வழக்குகளாக இருந்ததுடன் அந்த வழக்குகள் 08 மாதம் முதல் 20 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது. நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்காக தொடுக்கப்பட்ட வழக்குகளுக்காக கணிசமான காலப்பகுதியொன்று கடந்தமையால் ஊழியர்களுக்கு அந்த நட்டஈட்டிலிருந்து கைப்பற்றிக் கொள்ளக்கூடியதாக இருந்த நலன்களைப் பெற்று கொள்ள முடியாதிருந்தது.

### தொழில் தருனர்களினால் வைப்பிலிடப்பட்ட நட்டஈடு செலுத்தாமை

தொழில் தருனர்களால் இடரொன்றிற்கு உட்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு

நட்டஈடு செலுத்துவதற்காக இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு ரூபா 3.13 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. ஆணையாளர் அலுவலகத்தால் உரிய தரப்பினர்களுக்கு அந்த நட்டஈடு செலுத்தப்படாமல் 2 வருடங்களுக்கும் 06 வருடங்களுக்கும் இடையிலான காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## சிறுவர் ஊழியத்தை முற்றாக இல்லாதொழிற்கும் செயற்திட்டம்

"சுனிசி மெஹவற" நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 8.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2.00 மில்லியன் இலங்கையின் சிறுவர் ஊழியத்தை முற்றாக இல்லாதொழிக்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கீழ் 08 புகையிரத பெட்டிகளில் அறிவித்தல்களை பிரசுரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் திட்டமிடப்படும் கட்டத்தின் போது முறையான சுத்திய வள ஆய்வு மேற்கொள்ளாமை, சரியான கிரய நலன்கள் மதிப்பிடும் திட்டத்துடன் திட்டம் தயாரிக்கப்படாமையினால் இந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் சிக்கனமற்றதாக இருந்ததாக பின்னர் தீர்மானிக்கப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## ஊழியர் சேமலாப நிதியம்

இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் தனியார் துறையினதும், பகுதி அரசாங்க துறையினதும் மொத்த ஊழியர் எண்ணிக்கை 3,682,695 என அறிக்கையிடப்பட்டிருந்தது. அதில் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பில் உள்ள செயற்படு அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2,400,000 அதாவது 65 சதவீதமாக இருந்தது. ஏனைய அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்திற்கு அங்கத்துவத்தை வழங்குகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை 11 சதவீதம் மாத்திரமாகையால் மிகுதி 24 சதவீதமான அளவு எந்த நிதியத்திற்கும் பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை. அந்த ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவத்தை வழங்குவதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் செயற்படு அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் பங்களிப்புப் பணம் செலுத்துகின்ற தொழில் தருனர்களின் எண்ணிக்கை முறையே 2,500,000 ஆகவும், 77,842 ஆகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. ஊழியர் சேமலாப நிதியத்தில் அந்த எண்ணிக்கை முறையே 2,400,000 மற்றும் 73,973 ஆக இருந்தது. அது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினை விட குறைவான எண்ணிக்கையைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் 100,000 அங்கத்தவர்களையும், 3,869 தொழில்தருனர்களையும் பதிவு செய்துகொள்வதற்கு ஊழியர் சேமலாப நிதியம் தவறியிருந்தது.

நிதியத்திற்குரியதாகக் கிடைக்கின்ற பங்களிப்புப் பணம் தொழில் திணைக்களத்தால் தீர்வு செய்யப்படும் வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 240.21 மில்லியன் கிடைத்திருந்ததுடன் ரூபா 107.75 மில்லியன் தீர்க்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந்

திகதியளவில் ரூபா 356.42 மில்லியன் மேலும் தீர்க்கப்பட வேண்டியிருந்தது.

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் அங்கத்தவர்களின் தனியான கணக்கில் அவருக்குள்ள மொத்த தொகையையும் முடியுமானவரை விரைவாக அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டியிருந்தன. எனினும் நலன்களுக்காக விண்ணப்பித்து 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் 01 வருடம் முதல் 15 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும், கொடுப்பனவு செய்யப்படாதிருந்த சாதாரண நலன் விண்ணப்பங்கள் 186 ஆகவும், மரண நலன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 39 ஆகவும் காணப்பட்டன.

நிரந்தரமான சூழலொன்றினை நோக்கி செயற்படல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கமாகியிருந்தது. இந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக சுற்றாடல் மற்றும் மஹாவலி அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதன் கீழான இரண்டு திணைக்களங்களால் மற்றும் 08 நியதிச்சட்ட சபைகள் நிறுவனங்களால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

- சுற்றாடல் மற்றும் மஹாவலி துறைக்காக கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தி தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக சூழலை பாதுகாத்தல்.
- சூழல் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் விளைவுடைய விதத்தில் அவற்றை நடைமுறைப்படுத்தல்.
- கடல் மாசடைதல் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் நகர திண்மக்கழிவு முகாமைத்துவம்.
- காடுகள், காட்டு விலங்கினங்கள் மற்றும் மரஞ்செடிகளை பாதுகாத்தல் மற்றும் பேணுதல்.
- நாட்டின் பலகைக்கான தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக வணிக ரீதியான காடு வளர்ப்பினை மேம்படுத்தல்.
- இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணக் கைத்தொழில் மற்றும் வியாபாரத்தின் மேம்படுத்தல் மற்றும் கண்காணிப்பு.
- கரையோரப் பேணுகை மற்றும் பாதுகாப்பு

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களால் அந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

## உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம்

உமா ஓயா ஆற்றுப்படுத்துகையின் சூழல் மற்றும் ஏனைய நீர் தேவைப்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த ஆற்றுப்படுத்துகையிலிருந்து நீர் பற்றாக்குறையால் இன்னல்களுக்கு முகங்கொடுக்கும் தெற்கு வலயத்தின் கிரிந்திஓயா நீர்த்தேக்கத்திற்கு 145 கன மீட்டர் மில்லியன் அளவான நீரினை வருடாந்தம் திசைத்திருப்பும் பிரதான நோக்குடன் இலங்கை அரசு மற்றும் ஈரான் அரசுகளுக்கிடையே 2007 நவம்பர் 27 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இதற்காக மதிப்பிடப்பட்ட பணம் ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியினூடாக கிடைக்கும் வெளிநாட்டுக் கடனான ஐக்கிய அமெரிக்க டொலர் 450 மில்லியன், இலங்கை அரசு வழங்கும் ஐக்கிய அமெரிக்க டொலர் 79 மில்லியன் மற்றும் ரூபா 15,474 மில்லியனை கொண்டமைந்திருந்தது.

மீளாய்வாண்டின் இறுதியில் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் மொத்தச் செனவினம் ரூபா 49,736 மில்லியனாக இருந்ததுடன், செயற்திட்டத்தின் பணிகள் மற்றும் திடீரென ஏற்பட்ட நீர்க்கசிவு ஆகியவற்றின் காரணத்தால் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்கும் மக்களுக்காக உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 901 மில்லியன் பணம் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டம் காரணமாக அந்த பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு அவர்களின் வீடுகள், காணிகள், மற்றும் ஏனைய ஆதனங்கள் மற்றும் குடிநீர் தொடர்பில் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நேர்ந்திருந்தது.

## சூழல் நெகிழ்வுத்தன்மையுடைய நிலப் பிரதேசங்களில் உயிர்ப்பல்வகைமையை பேணி அபிவிருத்தி செய்தல் மற்றும் சூழல் கட்டமைப்பு சேவைகள் பராமரிப்பு செயற்திட்டம்

சூழல் சார்ந்த மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், உயிர்ப்பல்வகைமை மற்றும் சூழல்

கட்டமைப்பு சேவைகளின் பாதுகாப்பு இடம்பெறும் விதத்தில் முகாமை செய்யும் பொறிமுறையொன்றாக சூழல் நெகிழ்வுத்தன்மையுடைய நிலப் பிரதேசங்கள் பெயரிடப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட இரு பிரதேசங்களாக கலாவெவ சூழல் நெகிழ்வுத்தன்மையுடைய நிலப்பகுதி மற்றும் வில்பத்து சூழல் நெகிழ்வுத்தன்மையுடைய நிலப் பிரதேசம் ஆகியவற்றை இனங்காணும் நோக்கில் 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 5 வருடங்களுக்கு இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்தின் பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 19.28 மில்லியனாக இருப்பதுடன், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தால் ஐக்கிய அமெரிக்க டொலர் 6.50 மில்லியனும், உலகளாவிய சூழல் வசதிகள் (புநுகு) இனால் ஐக்கிய அமெரிக்க டொலர் 2.63 மில்லியனும், அரச நிறுவனங்களின் கூட்டு நிதியிடல் (புழளநசஅநவெ ஊழ - குனைெஉ ந) மூலம் ஐக்கிய அமெரிக்க டொலர் 10.15 மில்லியன்களும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்ட காட்டு யானைகளின் முகாமைத்துவ கொள்கை தந்திரோபாயங்கள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை திருத்தம் செய்தல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றிற்கான இயலளவு அபிவிருத்தி, எல்லைகள் நிர்ணயிக்கப்படாத காடுகளின் எல்லைகளை அடையாளப்படுத்தல், தொடர்பாடல் வழிமுறைகளை கட்டியெழுப்புதல், கஹல்ல பல்லேகெல முகாமைத்துவ திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அந்தந்த செயற்பாடுகளுக்குரிய களச் சுற்றுலாக்களை மேற்கொள்ளல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### புலம்பெயர்ந்த உயிரினங்கள் உட்புகுவதனையும் பரவலடைதலையும் கட்டுப்படுத்துவதற்கான இயலளவு அபிவிருத்தி செயற்திட்டம்

புலம்பெயர்ந்த உயிரினங்கள் உட்புகுதல் மற்றும் பரவலடையும் அபாயத்தினை கவனத்திற் கொண்டு 2011 ஆம் ஆண்டின் போது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உலகளாவிய சூழல் வசதிகள் (புநுகு) இன் நிதியேற்பாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் மொத்த பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 5.24 மில்லியனாகும். அத்துடன் 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 80.00 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அவற்றில் ரூபா 61.53 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### இலங்கையில் மஹாவலி கங்கையை அண்மிய விவசாய கிராமங்களிலுள்ள விவசாய சமூகத்தினை காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதகமான விளைவுகளுக்கு இசைவாக்கமடையச் செய்யும் செயற்திட்டம்

இலங்கையின் மஹாவலி ஆற்றுப்படுகைக்கு அண்மிய மெதிரிகிரிய, லங்காபுர மற்றும் வலப்பனை பிரதேசங்களின் விவசாய சமூகங்களின் மக்களை காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களுக்கு முகம் கொடுப்பதனை நோக்காக கொண்டு மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றிற்கிடையே 03 வருடங்களுக்காக 2014 ஆகஸ்ட் 11 ஆந் திகதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் ஐக்கிய அமெரிக்க டொலர் 7.99 மில்லியன் தொகையான வெளிநாட்டு நிதியளித்தலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒவ்வொரு வருடத்திற்காகவும் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 20 சதவீதத்தை விட குறைவான அளவிலான நிதிச் செயலாற்றல் அடையப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையில் 02 வருடங்கள் கடந்திருந்த போதிலும், கருத்திற் கொள்ளக்கூடிய அளவிலான பௌதீக முன்னேற்றமொன்றை அடைய முடியாதிருந்தது.

### திண்மக் கழிவகற்றல் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம்

பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரியா கடன் உதவியின் அடிப்படையில் கழிவகற்றல் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐக்கிய அமெரிக்க டொலர் 41.89 மில்லியனாக இருந்தது. அவற்றுள் வருடாந்தம் 0.15 சதவீதமான வட்டியின் அடிப்படையில் 10 வருடம் மீள செலுத்துவதற்கான சலுகைக்காலம் உள்ளடங்கலாக 40

வருடங்களில் செலுத்தி முடிப்பதற்கு உடன்பட்டு கொரியா கடன் உதவியின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் 33.54 மில்லியன் தொகையான கடன் பெறப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் உள்நாட்டு நிதிய ஒதுக்கீடுகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 8.35 மில்லியன் ஆக இருந்தது. அந்த கடன் உடன்படிக்கை 2013 யூலை 23 ஆந் திகதி ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் 04 வருடங்களினுள் கூட்டு முறைமையின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லையிலுள்ள பிரதேசங்களிலிருந்து உருவாகும் கழிவுகளை இறுதியாக அகற்றுவதற்கான வசதிகளை வழங்குவதற்காக 04 சுத்திகரிப்பு குப்பை தாங்கிகள் அனுராதபுரத்தின் கீரிக்குளம், ஹிக்கடுவ, மொன்டோவியாத்த, பாணத்துறை மாலமுல்ல மற்றும் உடுநுவர கொனாதிகாவத்த ஆகிய பிரதேசங்களில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் முறையான சாத்தியவள ஆய்வொன்றினை மேற்கொண்டு சுத்திகரிப்பு கழிவுகளை தேக்கி வைத்தல் மற்றும் வகைப்படுத்தும் செயற்திட்டத்தினை ஆரம்பிக்கும் போதே செயற்பட்டிராததுடன், பாணந்துர மற்றும் உடுநுவர கொனாதிகாவத்த நிர்மாணங்களுக்காக யாழ்ப்பாணம் கீரிமலை மற்றும் மெதிரிகிரிய யுதகனாவ ஆகிய இடங்களில் இந்த கழிவு சேகரிக்கும் நிலையங்களை தாபிப்பதற்கு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 1 ½ வருடம் கடந்திருந்தது.

உரு..................மற்றும்............இல் காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் கால அடிப்படையில் மற்றும் விளைவுள்ள விதத்தில் அடைய முடியாதிருந்தது. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான சுமார் 37 மாதங்கள் கடந்திருந்த போதிலும், கழிவு சேகரிக்கும் நிலையங்களை நிர்மாணிப்பதற்குரிய செயற்திட்டத்தின் பணிகள் திட்டமிடல் கட்டத்தில் காணப்பட்டது.




படம் 05 யாழ்ப்பாணம் கீரிமலை உத்தேச தள நிரம்பல்



படம் 6 மொன்ரோவியாவத்த உத்தேச தள நிரம்பல்

## பிளிசரு செயற்திட்டம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிளிசரு செயற்திட்டத்தின் மூலம் உரிய வளங்களின் பேணுகை மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தல், திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் உரிய நபர்களின் அறிவு மற்றும் ஆற்றலினை அபிவிருத்தி செய்தல் மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல், நிகழ்ச்சித்திட்டங்களை அவதானித்தல், வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல், தேவையான அடிப்படை நிதியேற்பாடுகளை வழங்குதல், திண்மக்கழிவு மீள்சுழற்சி வங்கி முறையை நிறுவுதல், உரிய முறையில் திண்மக்கழிவு முகாமைத்துவத்தினை மேற்கொள்ளாத உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 06 வருடங்களுக்கான நிதியத்தின் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம்

ரூபா 5.6 பில்லியனாக இருந்தது. அவற்றுள் ரூபா 2.68 பில்லியன் திறைசேரி நிதியேற்பாடுகளிலிருந்தும், 2008 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ''பசுமை வரி'' மூலம் ரூபா 2.92 பில்லியன் தொகையினையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இந்த செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 132 கூட்டெரு நிலையங்கள் மற்றும் 03 உயிரியல் வாயு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், 09 நிலையங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவியணியினருக்கான 12 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன.

# வெளிநாட்டு அலுவல்கள்

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரகாரம், தேசிய அபிலாசைகளை சர்வதேச ரீதியில் மேம்படுத்தல், பண்புருப்படுத்துதல், பேணுதல் மூலம் சர்வதேச தொடர்புகளை தேசிய அபிலாசைகளுக்கு இணங்க முகாமை செய்வதற்கு அரசிற்கு ஆலோசனைகளை வழங்குதல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பின்வரும் பணிப்பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- வெளிநாட்டு அலுவல்கள் தொடர்பான அரசியல் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- வெளிநாடுகளில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்தல்.
- சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்களில் ஈடுபடல்.
- இலங்கையில் சர்வதேச நாடுகளின் அரசு மற்றும் சர்வதேச ஒழுங்கமைப்புகளை பிரதிநிதித்துவம் செய்தல்.
- வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பிரச்சார நடவடிக்கைகள்.
- இராஜதந்திர கலந்துரையாடல்கள், வரப்பிரசாதங்கள் மற்றும் கொன்சியுலர் நடவடிக்கைகள்.

மேற்படி பணிகளை தேசிய ரீதியில் அமுல்படுத்துதல் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 15 பிரிவுகளின் கீழ் மெற்கொள்ளப்படுவதுடன், சர்வதேச ரீதியில் அப்பணிகளை மேற்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் 37 வெளிநாட்டு துாதரங்கள், 13 பிரதி உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள், 12 கொன்சியூலர் ஜெனரால் அலுவலகங்கள், ஐக்கிய நாடுகளுக்கான 02 நிரந்தர தூதரகங்கள் மற்றும் பிரதிநிதித்துவ அலுவலகங்கள் என்ற வகையில் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ள தூதரகங்களின் வலையமைப்பொன்று பேணிச்செல்லப்படுகின்றது.

இந்த துறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

### கட்டுநிதிக் கணக்கு மீதிகளை தீர்க்காமை

2013 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய இரண்டு கட்டுநிதிக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா 860.34 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிகளில் ரூபா 423.88 மில்லியன் தொகையான மீதி அமைச்சினால் 2017 மே 31 ஆந் திகதி வரையிலம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு தீர்க்கப்படாத மீதியினுள் 2013 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டுவரப்படும் மீதி ரூபா 226.07 மில்லியனாக இருந்தது.

2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வெளிநாட்டு தூதரகங்களின் அலுவலகங்களினால் தீர்க்கப்படாதுள்ள முற்பணங்களின் மீதி ரூபா 310.80 மில்லியனாக இருந்தது. அந்த மீதிகளில் ரூபா 136.87 மில்லியன் 01 முதல் 04 வருடங்கள் வரையும், ரூபா 81.33 மில்லியன் 04 முதல் 06 வருட காலமாகவும் ரூபா 92.60 மில்லியன் தொகை 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த முற்பண மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### காலாவதியான வைப்புக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியல் உள்ளபடியான அமைச்சின் பொது வைப்புக் கணக்குகளில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 99.61 மில்லியன் தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 (2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வெளிநாட்டு தூதரகங்களுக்கு உரியதாக மற்றும் தூதரகங்களின் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கொள்வனவுகளுக்கு உரியதாக செலத்தப்பட்டிருந்த ரூபா 8.29 மில்லியன் தொகையான குத்தகை தொகை மீண்டும் தூதரகங்களுக்கு கிடைத்திருந்தது. அவ்வாறு கிடைத்திருந்த குத்தகை பணம் 4 வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த

போதிலும், அந்த குத்தகை தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

அவுஸ்திரேலியாவின் கென்பராவில் அமைந்துள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு சொந்தமான அவுஸ்திரேலிய டொலர் 2,589,000 பெறுமதியான 02 கட்டிடங்கள் 2007 மற்றும் 2012 ஆண்டு முதல் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அந்த கட்டிடத்தை விளைதிறனுடன் பயன்படுத்துவதற்கோ அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கையோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2007 ஆம் ஆண்டின் 1.2 மில்லியன் அ. டொலர்களை செலுத்தி மலேசியா உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 1.681 ஏக்கர்கள் பரப்பளவான காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவிதமான கட்டுமானங்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

### நட்டங்களும் இழப்புக்களும்

ஒஸ்லோ தூதரகத்தில் அமைச்சுப் பதவியில் 2013 மே மாதம் முதல் 2016 யூலை ாதம் வரையிலும் கடமையாற்றிய பெண் உத்தியோகத்தர் ஒருவர் 3 வீடுகளில் மூன்று சந்தர்ப்பங்களில் வாசம் செய்திருந்தார். அந்த 3 வீடுகளுக்கு ரூபா 6.16 பெறுமதியான இழப்பு நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அந்த நட்டங்கள் தொடர்பில் பொறுப்புகூற வேண்டிய தரப்பிரை இனங்கண்டு அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வாடகை செலவினமாக அரசாங்க செலவினத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

நிவ்யோர்க் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் பிரதம செயலாளரின் வாடகை வீட்டின் உடன்படிக்கை காலம் முடிவடைவதற்கு முன்னர் அந்த வீட்டிலிருந்து வெளியேறல் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் அந்த வெளியேற்றத்தினை அறிவிக்காமையின் காரணத்தால் மாதாந்த வாடகை கட்டணங்கள் மற்றும் பாதுகாப்பு பிணைகளாக முறையே ரூபா 693,500 மற்றும் ரூபா 440,040 தொகையினை மீள அறவிட முடியாது போயிருந்தது.

# வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்காக கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் வெளிநாட்டு பெறுகைகளின் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு உள்ள பங்களிப்பினை அதிகரித்தல் இத்துறையியலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக உள்ளது. அந்த எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்காக வெளிநாட்டு தொழில் அமைச்சு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் முகவர் (தனியார்) கம்பனி என்பன ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனங்களால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.
- குடிபெயர் தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் வதிவற்ற இலங்கையருக்கான நலன்புரி.
- பதிவு செய்யப்பட்ட தொழில் முகவர் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தலும் நிர்வகித்தலும்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குரிய தொழில்சார் வழிகாட்டல்கள்

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

புலம்பெயர் தொழிலாளர் தொடர்பான குடும்பங்களை ஏற்படுத்துதல்

வெளிநாட்டு தொழில் அமைச்சினால் புலம்பெயர் தொழிலாளர் தொடர்பான குடும்பங்களின் விபரங்களை தொகுத்தல் கணனிமயப்படுத்துதல் மற்றும் எண்ணக்கருக்களை செயற்படுத்துதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் ஒரு கணனி தொகுதியொன்று வீதம் 300 பிரதேச செயலகங்களுக்கு இடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேவையான 300 கணனி தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு வழங்குவதற்காக ரூபா 30 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி 242 கணனிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் தேவையான வலையமைப்பு கவலைகள் இடம்பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக கணக்காய்வு திகதியான 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் 08 மாத காலம் கடந்திருந்த போதிலும் குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அக் கணனிகள் பயன்படுத்த முடியாதிருந்தன.

## தகவல்கள் தரவு வங்கியை ஸ்தாபித்தல்

இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக வெளியேறும் மற்றும் வேலையிலிருந்து மீண்டும் திருப்பி வருகை தரும் இலங்கையர் தொடர்பாக தகவல்கள் தரவு வங்கியொன்று ஸ்தாபிக்கும் செயற்பாடு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2016 சனவரி 08 ஆந் திகதி முதல் 2016 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் தரவு வங்கிக்கு தகவல் சேகரிப்பதற்கு செயற்படுத்தப்பட்ட உழைப்பு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் விளம்பர நடவடிக்கைகளுக்காக பணியகம் ரூபா 8.27 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 563,768 தொழிலாளர்கள் வெளிநாடு சென்றிருந்த போதிலும் அவர்களில் 25 சதவீதத்திற்கு குறைந்தளவு அக்காலப்பகுதியில் தரவு வங்கியில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேற்கொண்ட செலவினம் ஆக்கபூர்வமாக இருக்கவில்லை.

## வெளிநாட்டு தொழில் கட்டளைகளுக்காக தொழிலாளர்களை வழங்குதல்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் நோக்கங்களுக்கு இடையே இலங்கையர்களுக்காக இலங்கைக்கு வெளியே தொழில் வாய்ப்பு சந்தர்ப்பங்களை

அதிகரித்தல் மற்றும் அபிவிருத்திச் செய்தல் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும் பணியகத்திற்கு 2008 ஆம் ஆண்டிலிருந்து அங்கீகாரத்திற்காக கிடைத்த தொழில் கட்டளை அளவில் 16 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையான வீச்சளவில் தொழிலாளர்களை வழங்குவதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தினை ஊக்குவிப்பதற்கு பணியகம் தவறியிருந்தது.

விபரங்கள் பின்வரும் அட்டவணை 21 இல் தரப்பட்டுள்ளது. அவ்வாறே 2008 ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கு கிடைத்திருந்த 1,014,610 அளவிலான தொழில் கட்டளை அளவு பின்வரும் உரு 20 இல் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டளவில் 275,634 வரை துரிதமாக குறைவடைந்திருந்தது.

| ஆண்டு | வெளிநாட்டு தொழில் வாய்ப்பு கட்டளைகளின் அளவு | வெயிநாடு சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை | வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை கட்டளையின் சதவீதமாக |
|---|---|---|---|
| 2008 | 1,014,610 | 160,973 | 16 |
| 2009 | 797,168 | 156,567 | 20 |
| 2010 | 753,382 | 160,498 | 21 |
| 2011 | 660,844 | 146,293 | 22 |
| 2012 | 501,040 | 175,169 | 35 |
| 2013 | 607,336 | 180,463 | 30 |
| 2014 | 419,625 | 176,829 | 42 |
| 2015 | 356,115 | 116,866 | 33 |
| 2016 | 275,634 | 242,930 | 88 |

அட்டவணை 21 வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்கான கட்டளை அளவு மற்றும் வெளிநாடு சென்ற அளவு
மூலம்- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வரைபு ஆண்டறிக்கை




உரு 20 வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்கான கட்டளை அளவு குறைவடைதல்
மூலம்- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வரைபு ஆண்டறிக்கை

### கொரியாவில் வேலை பெறுவோருக்கான மருத்துவ பரிசோதனைகளின் நிர்வாக செலவினம்

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் கொரியாவில் வேலைவாய்ப்பு பெறுவோரின் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இரண்டு வைத்தியசாலைகளுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் தேவையான நிர்வாக சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளுக்காக உரிய மாதத்தின் மருத்துவக் கட்டண வருமானத்தின் 25 சதவீதம் அதன் நிர்வாக கம்பனியொன்றான இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜன்சி (தனியார்) கம்பனிக்கு செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது மருத்துவ கட்டண வருமானத்தில் ரூபா 9.51 மில்லியன் கம்பனியால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் சகலநிர்வாக நடவடிக்கைகளும் பணியகத்தின் ஆட்சேர்ப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் வெளிநாட்டு சந்தைகளுக்கு தொடர்புபடுத்துதல்

பயிற்சி பெற்ற தொழிலாளர்களை கிராம மட்டத்தில் இளைஞர் யுவதிகளை அறிவூட்டுவதற்காக இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களை கேந்திரமாக கொண்டு ஆரம்ப வழிகாட்டல் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக ஒப்பந்த

அடிப்படையில் மாவட்டங்களிலிருந்து முறையே 06 கூட்டிணைப்பு உத்தியோகத்தர்களும் 04 பேருமாக 10 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். ஒருவருக்கு ரூபா 30,000 மாதாந்த படியாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 2.34 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- 2014 நவெம்பர் 12 ஆந் திகதிய 25/2017 ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையின் 7 ஆவது பந்திக்கு முரணாக ஒப்பந்த அடிப்படையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் இல்லாமல் பணிப்பாளர் சபையில் தீர்மானத்தின் பேரில் மேற்படி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

- வெளிநாட்டு தொழில் அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்பாடுகளின் ஒரு பகுதியை நிறைவேற்றுதல் அந்த உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அந்த ஆரம்ப செயற்திட்டத்தின் காலஎல்லை முடிவடைந்திருந்த போதிலும், அதற்குரிய செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சி (தனியார்) கம்பனியின் செயலாற்றல்

இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தொழில்சார், நிர்வாகம் தொழில்நுட்பம் சார்ந்த, தொழிற்பயிற்சி, அரைத் தொழில் பயிற்சி அல்லது அரைப்பயிற்சி அல்லது பயிற்சியற்ற அனைத்து வகைகளுக்குரிய ஊழியர்களுக்காக தொழில் வழங்குதல் அல்லது வழங்குவதை மேற்கொள்வதும் அந்த ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் நிதியச் சட்ட திட்டங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல் என்பவற்றை பிரதானமான நோக்கமாகக் கொண்டு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தினால் அதற்கு பூரணமாக இணைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஏஜன்சி (தனியார்) கம்பனி 1996 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டிருந்தது. குடந்த நான்கு ஆண்டுகளில் வெளிநாடு செல்வதைக `கருத்தில் கொள்ளும் போது அரச கம்பனியொன்றாக கம்பனி அதற்காக வழங்கியிருந்த பங்களிப்பு தொடர்பான விபரங்கள் அட்டவணை 22 இல் காட்டப்பட்டுள்ளது.

.

| ஆண்டு | முகவர் நிறுவனங்களின் ஊடாக வெளிநாடு சென்றோர் எண்ணிக்கை | கம்பனியின் ஊடாக வெளிநாடு சென்றோர் எண்ணிக்கை | ஊழியர்கள் அனுப்பி வைக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை | மொத்த வெளிநாடு செல்தல்களின் சதவீதமாக கம்பனியின் மூலம் வெளிநாடு சென்றோர் |
|---|---|---|---|---|
| **2013** | 180,463 | 460 | 15 | 0.25 |
| **2014** | 176,829 | 529 | 12 | 0.30 |
| **2015** | 116,749 | 374 | 10 | 0.32 |
| **2016** | 88,164 | 820 | 06 | 0.93 |

அட்டவணை 22 வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சி (தனியார்) கம்பனி
மூலம்- வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சி (தனியார்) கம்பனியினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள்

மேற்படி பகுப்பாய்விற்கமைய பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- கம்பனியின் அடிப்படை நோக்கம் வெளிநாட்டு தொழில்சந்தைக்கு தொழிலாளர்களை வழங்குவதாக இருந்த போதிலும் மொத்த சந்தைப்பங்கில் 01 சதவீதத்திற்கு குறைந்த சதவீதமொன்று கம்பனியால் கைப்பற்றப்பட்டிருந்தது.

- 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கம்பனி மூலம் வெளிநாட்டிற்கு அனுப்பிய தொழிலாளர்

எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று தென்பட்ட போதிலும் தொழிலுக்காக தொடர்புபடுத்தப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக 15 இல் இருந்து 06 வரை குறைவடைந்திருந்தது.

- 2016 ஆம் ஆண்டின் போது 820 தொழிலாளர்கள் கம்பனி மூலம் தொழிலுக்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் 787 பேர் அதாவது 96 சதவீதம் 03 நாடுகளுக்கு மாத்திரம் வெளிநாடு சென்றிருந்தனர். ஏனைய நாடுகளிலிருந்து தொழில் வேண்டுகோள் மற்றும் சந்தர்ப்பங்களை அதிகரித்துக் கொள்வது தொடர்பில் கம்பனியால் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

- வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக தொழிலாளர்களை தொடர்புபடுத்தும் போது சந்தையில் தொழில்துறை / வகைகள் சிலவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே வெளிநாட்டு தொழில் வாய்ப்பு வகை 78, 39 மற்றும் 13 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

- 2016 ஆம் ஆண்டின் கம்பனிக்கு கிடைத்திருந்த 22 தொழில் கட்டளைகளில் 3,138 சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் அதில் பல்வேறு தொழில்களுக்காக 820 குடிபெயர்வோர் மாத்திரம் வெளிநாடு செல்வதற்கு முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் 2,318 தொழில் வாய்ப்புக்கள் அதாவது 74 சதவீதத்திற்காக தொழிலாளர்கள் அனுப்புவதற்கு ஏஜன்சி தவறியிருந்தது.

- 2016 ஆம் ஆண்டின் போது தொழில் வகைகளின் பிரகாரம் வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை பகுப்பாய்வு செய்த போது வீட்டுப் பணிப்பெண்கள், தொழிலாளர்கள், விவசாயம் சார்ந்த ஊழியர்கள் பயிற்சியற்ற பிரிவு தொடர்பில் ஏஜன்சி கவனம் செலுத்தியிருந்தது தொழில்சார் தகைமையுடன் கூடிய நபர்களை உள்நாட்டு சந்தையிலிருந்து தேடிக் கொள்வதற்கு போதியளவு வேலைத்திட்டமொன்று ஏஜன்சியால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

# கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி

மக்களின் ஊட்டச்சத்து மட்டத்தை உயர்த்துதல், கடற்றொழில் துறையில் தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், வெளிநாட்டு நாணயம் உழைப்பதனை அதிகரித்தல் மற்றும் கடற்றொழில் சமூகத்தின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதனைப் போல சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் இத்துறையின் குறிக்கோளாக இருந்தன. அக்குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் மற்றம் நீர்வளங்கள் அமைச்சின் கீழ் ஒரு திணைக்களம் மற்றும் 05 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களினால் பின்வரும் கடமைப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

- கடற்றொழில் மற்றும் நீர் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பவற்றைத் தயாரித்தலும் பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும் மதிப்பாய்வு செய்தலும்.
- சமுத்திர உவர் நீர் மற்றும் நன்னீர் மீன் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- அரசாங்கத்திற்குச் சொந்தமான மீன்பிடிப் படகுகளை முகாமைத்துவம் செய்தலும் செயற்படுத்தலும்.
- அடையாளம் காணப்பட்ட பொருளாதார வலயத்துக்குள் மீன்பிடி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- மீன் பிடிக் கைத்தொழிலுக்குத் தேவையான ஐஸ் இயந்திரம், குளிர்காப்பு அறை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளைத் தோற்றுவித்தலும் அமுல்படுத்தலும்.
- உயிருள்ள மற்றும் உயிரற்ற தேசிய நீர் வளங்களை அபிவிருத்தி செய்தல்.
- மீன்பிடிப் படகுகளையும் மீன்பிடி உபகரணங்களையும் உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், பகிர்ந்தளித்தல் என்பன.
- கடல் மீன் பயிர்களை உள்ளடக்கி நீர் வாழ் பயிர்களை அபிவிருத்தி செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திப் பொருட்களை வியாபாரம் செய்தலும் பகிர்ந்தளித்தலும்.
- மீன்பிடித்துறையின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் மற்றும் அதன் பெறுபேறுகளை மீன்பிடிக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக ஈடுபடுத்துவதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்தல்.
- நவீன விஞ்ஞான ரீதியான முறைமைகளை இணைத்து சமுத்திர வள ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.

அந்த நிறுவனங்களால் மேற்குறிப்பிட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது சம்பந்தமாக, வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

### மீன்கள் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்தலும் ஏற்றுமதி செய்தலும்

தீவைச் சுற்றி 1585 கிலோ மீற்றர் அளவான கடற்கரைகளைக் கொண்டிருந்த போதிலும்

தெற்காசிய வலயத்தில் மொத்த மீன் இறக்குமதியில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்களிப்பை வகிக்கும் இலங்கை தெற்காசிய வலயத்தில் பிரதான மீன் இறக்குமதியாளராக மாறியுள்ளது. இறக்குமதிச் செலவானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,443 மில்லியனால் அல்லது 14.45 சதவீதத்தால் அதிகரித்துள்ளதன் காரணமாக தேறிய வெளிநாட்டு நாணயமாற்று உழைப்பு ரூபா 8,370 மில்லியன் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தது.

## சுனாமிக்கு பின்னைய நிகழ்ச்சித் திட்டங்கள்

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் உதவியின் அடிப்படையில் சுனாமிக்குப் பின்னைய நிகழ்ச்சித் திட்டம் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 31.3 மில்லியன் நிதி ஏற்பாடு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடமிருந்து ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 4.79 மில்லியன் நிதி ஏற்பாடு உள்நாட்டு நிதியத்திலிருந்தும் வழங்கப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதன் நிதிசார் செயல் முன்னேற்றம் ரூபா 3,919 மில்லியன் தொகையான செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. இது தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- செயற்திட்டங்களை அமுல்படுத்தும் நிதி நிறுவனமாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கிராமிய அபிவிருத்தி வங்கி என்பவற்றின் மூலம் சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்காக கடன் வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அக்கடன் பணத்திற்கு மேலதிகமாக தொழில் முயற்சியாளராவதற்கான நிதி உதவிப் பணத்தில் ரூபா 4,000 கூட்டுறவுச் சங்க பங்கிற்காகவும் ரூபா 1,000 விஸ்மா பிலஸ் கம்பனியின் பங்கை வழங்குவதற்காகவும் கழித்து மிகுதிப் பணத்தை அங்கத்தவர்களுக்கு வழங்கும் முறைமை கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. எனினும் 7 கூட்டுறவுச் சங்கங்களின் அனைத்து அங்கத்தவர்களும் (2250) விஸ்மா பிலஸ் கம்பனியின் பங்குதாரராக மாறும் குறிக்கோளுடன் நிதியம் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தும் கம்பனியின் உரிமையாண்மை 7 அங்கத்தவர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. 2013 யூலை 31 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் விஸ்மா பிலஸ் கம்பனியின் பங்குதாரர்களின் எண்ணிக்கை 1276 ஆகவும் மொத்த முதலீட்டுப் பெறுமதி ரூபா 1.28 மில்லியன் ஆகவும் காட்டப்பட்டிருந்தும் இந்த அங்கத்தவர்களுக்காக பங்கு மூலதனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கம்பனியின் நலன்கள் 7 அங்கத்தவர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

- சிறிய தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் விஸ்மா பிலஸ் கம்பனியின் மத்தியஸ்தத்தின் அடிப்படையில் திருகோணமலை, பலபிடி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் வரையறுக்கப்பட்ட சிறிய அளவு தொழில்முயற்சியாளர்களின் கூட்டுறவு சங்கங்களின் மூன்று அங்கத்தவர்களாகும் வகையில் 09 அங்கத்தவர்களுக்கு 09 கடைகள் வழங்கப்பட்டிருந்தன. அக்கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் மேற்பார்வை செய்யப்படாததன் காரணமாக கூட்டுறவுச் சங்கத்தின் குறிக்கோளுக்குரிய தொழில்முயற்சி நடவடிக்கைகளில்

ஈடுபடுவதற்குப் பதிலாக உரிய கடைகளை வாடகைக்குப் பெற்ற நபர்களினால் அவர்களின் தேவைப்பாட்டின் பிரகாரம் வருமானம் உழைக்கும் நிலைமை காணப்பட்டது. சிறிய அளவு தொழில் முயற்சியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருந்த விற்பனை நிலையங்களில் இச்சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக அமைச்சின் மத்தியஸ்தம் இடம் பெற்றிருக்கவில்லை.

- இச்சிறிய அளவு தொழில் முயற்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுனாமிக்குப் பிந்திய புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களால் ரூபா 374.82 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் செயற்திட்டத்தில் பங்குபற்றுகின்ற நிதி நிறுவனங்களுக்காக விடுவிக்கப்பட்ட பணத்தின் அளவு, அச் செயற்திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு வங்கியினால் ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் கடன் வழங்கிய விபரம், கடனின் அடிப்படையில் வழங்கப்பட்ட உதவிப் பணம், வழங்கப்பட்ட எண்ணிக்கையும் பணத்தின் விபரமும், வங்கிக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டிருந்ததா, மிகுதி இருக்குமாயின் அப்பணம் எவ்வளவு, கடனை மீள அறவிடுவது என்பன தொடர்பான விபரம் அமைச்சினால் செயற்திட்டத்தின் இறுதியில் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறான நடைமுறைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- ஏழு மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் பெற்றுக்கொண்ட கடனின் பிரகாரம் வங்கியினால் வழங்கப்பட்ட நிதி உதவியில் ஒரு அங்கத்தவரிடமிருந்து ரூபா 4,000 பணம் சங்கங்களின் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,000 விஸ்மா பிலஸ் கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காகவும் கழிக்கப்பட்டிருந்தது. எனினும் அப்பணத்தைப் பயன்படுத்தி கூட்றவுச் சங்கங்களின் அங்கத்துவமும் கம்பனியின் பங்குகளைக் கொள்வனவு செய்த அங்கத்தவர்களுக்கு அவர்களின் பங்குகளின் அடிப்படையில் நலன்களும் வழங்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கான விபரம் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### கடற்கரைகளைப் புனரமைத்தல் மற்றும் வளங்களை முகாமைத்துவம் செய்தல் நிகழ்ச்சித்திட்டம்.

மீளாய்வாண்டின் போது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் மற்றும் நீதியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்நிதி ஏற்பாடுகளில் ரூபா 26 மில்லியன் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 16.10 மில்லியன் பம்பல மீன் இனவிருத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக தேசிய நீர்வாழ் பயிர் அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அந்த அதிகார சபையினால் ரூபா 15.97 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அச்செலவுக்குரிய ஒப்பந்தப் பெறுமதி ரூபா 15.00 மில்லியனாக இருந்தது. ஒப்பந்தப் பெறுமதியை ரூபா 969,060 ஆல் மிகைத்து கொடுப்பனவு செய்வதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஒப்பந்தத்திற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i) ஆம் வழிகாட்டியின் பிரகாரம் முற்பணக்

கொடுப்பனவானது பிணைகளின் அடிப்படையில் உச்ச அளவாக 20 சதவீத வேலை ஆரம்பித்தல் முற்பணம் செலுத்த முடியும் என்ற போதிலும் ஒப்பந்த பெறுமதியில் 43 சதவீதமான ரூபா 7.37 மில்லியன் தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2017 யூலை 31ஆந் திகதி வரையும் வேலையைப் பூர்த்தி செய்தல் சான்றிதழ் செயற்திட்டப் பொறியியலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. களப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக கடற்தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் செய்திட்டத்திற்குரிய நடவடிக்கையல்லாத வேறு நடவடிக்கைக்காக ரூபா 2.96 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு ரூபா 1.70 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் அந்நிதி ஏற்பாடு ரூபா 3.30 மில்லியனை மிகைத்து ரூபா 5.00 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

## நன்னீர் நீர்தேக்கங்களில் இலவசமாக மீன் குஞ்சுகளைப் போடுதல்

நன்னீர் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக நன்னீர் நீர்த்தேக்கங்களில் இலவசமாக மீன் குஞ்சுகளைப் போடுவதற்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரை ரூபா 140 மில்லியன் நிதி ஏஎற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 123.3 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அப்பயன்படுத்தல்களிலிருந்து எதிர்பார்த்த இலக்குகள் அடைந்து கொள்ளப்பட்டதா என்பது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட மீன் உற்பத்திக்கு நேரொத்தவகையில் 2016ஆம் ஆண்டிற்கான மீன் உற்பத்தி 1820 மெற்றிக் தொன்களால் குறைவடைந்திருந்தது.

## மீனவ சமூகத்தை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

மீனவ சமூகத்தை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்ட செயலகத்திற்கு ரூபா 91.85 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 74.32 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திற்கு ரூபா 5.43 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அதன் மூலம் செய்யப்பட்ட பயன்பாடு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடற்தொழில் சமூகத்தை வலுப்படுத்துவதற்காக கடற்தொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4.39 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 1.92 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 44.95 மில்லியன் செலவு செய்யப்பட்டு நன்னீர் மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அப் பொருட்கள் மீனவர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. தங்காலை மீனவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 990 வலைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 2.27 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்கள் மீனவர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டடமையை உறுதிப்படுத் துவதற்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## இணையதள மற்றும் கணனி முறைமை

கடற்றொழில் அமைச்சின் அனைத்து நடவடிக்கைகளையும் கணனி மயப்படுத்துதல் மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தரின் செயலாற்றலை அளவீடு செய்வதற்கும் பரிசோதனை செய்வதற'கும' இயலுமான வகையில் இணையதளப்படுத்திய கணனி முறைமையைத் தோற்றுவிப்பதற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக ரூபா 5.65 மில்லியனுக்கு ஒரு நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2012ஆம் ஆண்டின் போது ரூபா 3.65 மில்லியனும் 2014 ஆம் ஆண்டின் போது ரூப 8.00 மில்லியனுமாக மொத்தம் ரூபா 11.65 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டு வரை அவ்வாறான கணனி முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## குளத்துடன் கிராமம் நிகழ்ச்சித்திட்டம்

குளத்துடன் கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட குளப் பிரிவிற்குள் மீனவ சமூக மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1.49 மில்லியன் செலவு செய்து மீனவ சமூக மண்டபம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் குறிக்கோளானது மீனவ சமூகத்தை மேம்படுத்துவதாக இருந்த போதிலும் அப்பிரதேச மீனவ குடும்பங்கள் வசிக்கும் பிரதேசம் இல்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே தளத்திற்கு சீமெந்து போடுவதற்கு ரூபா 147,960 தொகை கமத்தொழில் அமைப்பிற்கு செலுத்தப்பட்டிருந்தும் தளம் வெடித்து பழுதடைந்து காணப்பட்டதுடன் தளத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை முறையான நியமத்திற்கு இணங்க இடம்பெற்றிருக்கவில்லை.

## மூன்று வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை நிர்மாணித்தல்

கடற்றொழில் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் தங்காலை மற்றும் அம்பாந்தோட்டை பிரதேச செயலகங்களால் மூன்று வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை நிம்மாணிக்கும் நடவடிக்கை உரிய முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அச் செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 2.1 மில்லியன் மொத்த தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## மீன்பிடித் துறைமுகத்தின் நங்கூரமிடும் தளத்தை அபிவிருத்தி செய்தலும் புனரமைத்தலும்

களமெடிய மீன்பிடித்துறைமுகத்தை நிர்மாணித்தல் வேலை 2014 யூலை 09ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2016 யூலை 08ஆந் திகதி வேலையை முடிப்பதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 660.25 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 70 சதவீதமாக இருந்தது.

கயிகாவல நங்கூரமிடும் தளத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை 2014 செப்தெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 83.4 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2014 ஒக்தோபர் 23 ஆந் திகதி வரை அந்நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## பல்லின உயிர்களைப் பாதுகாக்கும் வகையில் நீர்வாழ் பயிர்ச் செய்கையும் நீர்வாழ் பயிர்ச் செய்கை செயற்பாடுகளும்

2006 இன் 23 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1998 இன் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் இனவிருத்தியை பாதுகாக்கும் வகையில் நீர் வாழ் பயிர்ச் செய்கை மற்றும் நீர்வாழ் பயிர்ச் செய்கையை செயற்படுத்துதல் இலங்கை தேசிய உயிர்வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான செயற்பாடாக உள்ளது. அதற்காக பயன்படுத்தப்படுகின்ற நீர் வளங்களையும் நிரந்தரமான மற்றும் தற்காலிக நீர்த்தேக்கங்களின் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்டு மீன்பிடிக் கைத்தொழிலை முகாமைத்துவம் செய்தல், பாதுகாத்தல், மேம்படுத்தல் என்பவற்றிக்காக திட்டமிட்டு சுற்றாடலுக்கு உகந்த பயிர்ச் செய்கை நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்து அமுல்படுத்தும் நடவடிக்கை மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## நன்னீர் நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளைப் போடுதல்

இலங்கை தேசிய நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினால் நன்னீர் நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை இடுதல் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டின் போது 12.6 மில்லியன் அதிகரித்திருந்தது. அதிகாரசபையினால் மீன் குஞ்சுகளை இடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்முன்னேற்றத்தை (அறுவடைக்குப் பிந்திய) அளவிடுதல் மற்றும் மேம்படுத்துவதற்கான மீளாய்வும் ஆராய்ச்சியும் இடம்பெற்றிருக்கவில்லை. இது தொடர்பாக அரசாங்கத்தில் ஒரேயொரு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமாகிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் மூலம் மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக ஆலோசனையும் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்தல்

2014 ஆம் ஆண்டின் போது மீன் குஞ்சுகளின் உற்பத்தி 40.98 மில்லியனாக இருந்ததுடன் நன்னீர் மீன் பிடி மற்றும் நீர் வாழ் பயிர்ச் செய்கை உற்பத்தி 70,600 மெட்ரிக் தொன்களாக இருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மீன் குஞ்சுகளின் உற்பத்தி 25.49 மில்லியனாக அதிகரித்திருந்து. மீன் உற்பத்தி 67,480 மெட்ரிக் தொன்வரை குறைவடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நன்னீர் நீர் வாழ் பயிர்ச் செய்கையானது முறையே 10,390 மெட்ரிக் தொன்களாலும் 3,120 மெட்ரிக் தொன்களாலும் குறைவடைந்திருந்தது. நன்னீர் நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை இடுவதன் மூலம் மீன் உற்பத்தி அதிகரிக்கும் இலக்கு கணிக்கப்பட்டிருக்கவில்லை. நன்னீர் மின் உற்பத்திகளையும் பயன்பாட்டையும் அதிகரித்தல் மற்றும் மீனவ சமூகத்திற்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல், மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களும் தேவைப்பாட்டிற்கு இணங்க இலங்கை தேசிய உயிர்வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## மீன் உற்பத்தியையும் பயன்பாட்டையும் மேம்படுத்தல்

இலங்கை தேசிய நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான குறிக்கோளாகிய நாட்டில் மீன்

உற்பத்தியையும் பயன்பாட்டையும் மேம்படுத்தும் குறிக்கோளுடன் நன்னீர், உவர் நீர், கரையோர மற்றும் ஈழ்கடல் நீர் வாழ் பயிர்ச் செய்கையை மேம்படுத்தல் மற்றும் அதன் மூலம் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தலும் மேம்படுத்தலும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. அக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக 2011, 2012, 2013, மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் திவினெகும கடன் திட்டத்தின் மூலம் 6,450 நலன் பெறுனர்களுக்கு ரூபா 229.04 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்யும் போது ஒவ்வெரு பிரதேசத்திலும் நீர்ப் பற்றாக்குறை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்காமை, நலன்பெறுனர்களுக்கு மீன் குஞ்சுகளை பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படல், நலன்பெறுனர்களுக்கு முறைப்படியாக பயிற்சி அளிக்கப்படாமை, செயற்திட்டங்களின் கிராமிய அல்லது மாவட்ட அமைப்பு அமுல்படுத்தப்படாமை ஆகிய காரணங்களால் அந்நிகழ்ச்சித்திட்டம் வெற்றியளித்திருக்கவில்லை.

### பத்து இலட்சம் மனைப் பொருளாதார பிரிவு தேசிய தொழில்முயற்சி

இலங்கை தேசிய நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினால் திவினெகும சுழற்சி நிதியமாகப் பேணப்படுவதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 6 மாத காலநிவாரண காலத்தின் பின்னர் 10 தவணைப் பணங்களில் 2 ஆண்டுகளுக்குள் 50 சதவீதத்தை மீள அறவிடுவதற்கு நலன்பெறுனர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தது. எனினும் மீள அறவிடுவதற்கான முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொது அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படாமை, முறைப்படியாக தவணைப்பணத்தை அறவிடும் முறைமையை அமுல்படுத்தாமை மீன் அறுவடையை அதிகரித்தல் தொடர்பான மீளாய்வுத் தரவுகள் அதிகாரசபையிடம் இல்லாமை, செயற்திட்டம் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை ஆகிய காரணங்களால் திவினெகும சுழற்சி நிதியம் மூலம் குடும்ப பொருளாதாரப் பிரிவு தேசிய தொழில் முயற்சி வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### வேக்கயா மீன் இனவிருத்தி செய்தல் தொடர்பான தொழிநுட்பத்தை மேம்படுத்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 3.87 மில்லியன் பணம் முதலீடு செய்யப்பட்டு 2005 செப்தெம்பர் 28 ஆந் திகதி நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிரத்தி அதிகாரசபையினால் தனியார் கம்பனி ஒன்றுடன் வேக்கயா மீன் இனவிருத்தி தொடர்பான தொழிநுட்பத்தை மேம்படுத்தும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதிகாரசபைக்கும் தனியார்க் கம்பனிக்கும் இடையே உருவாக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு 02 ஆண்டுகளின் பின்னர் 05 ஆண்டுகளுக்குள் முழுப் பணமும் கம்பனியால் செலுத்தவேண்டிய போதிலும் 2008 திசெம்பர் 24 ஆந் திகதியிலிருந்து செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டத்திடமிருந்து 2016 திசெம்பர் 31 வரை 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பணத்தில் ரூபா 3.18 மில்லியனை அறவீடு செய்வதற்கு இலங்கை தேசிய நீர் வாழ் பயிர்ச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

### நன்னீர் நீர்த்தேக்கங்களில் மீன் அறுவடை சம்பந்தமாக பரிசோதனைகளை நடாத்துதல்

1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீர் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

முகவராண்மை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் அந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் நடவடிக்கைகளை தொடர்புபடுத்தல், பயிற்சி வழங்குதல், என்பன முகவராண்மையின் குறிக்கோளாக இருந்தன. எனினும் நன்னீர் நீர்த்தேக்கங்களின் அறுவடையை மேம்படுத்துவது தொடர்பாக அறுவடைக்கு பிந்திய மேம்படுத்தல் தொடர்பான மீளாய்வு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஆலோசனைகளை வழங்குதல் ஆகிய பிரதான குறிக்கோள்களுக்குரிய செயற்பாடுகள் முகவராண்மையால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. மேலும் அவற்றில் நீர் வளங்களை இனங்காணுதல், மதிப்பீடு செய்தல், முகாமைத்துவம், அபிவிருத்தி என்பவை தொடர்பான நடவடிக்கைகளுக்கான ஆலோசனை, விசேட அறிவு என்பவற்றை வழங்குதல், தொடர்புபடுத்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக முகவராண்மை கவனம் செலுத்துதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### மீன் காணப்படுவது சம்பந்தமான உயிரியல் விஞ்ஞான விடயங்களை அறிந்துகொள்ளல்

2015 ஆம் ஆண்டிற்காக தேசிய நீர் வளங்கள் மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மன்னார் மற்றும் நிலாவெளி பிரதேசங்களில் மீன் காணப்படுவது சம்பந்தமாக இனவிருத்தி விடயங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் செயற்திட்டத்திற்காக ரூபா ஒரு மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 884,292 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அச்செயற்திட்டத்தின் பிரதான நடவடிக்கையான சுற்றாடல் முறைமை சம்பந்தமான வரைபடத்தை தயாரித்தல் மற்றும் இனவிருத்தி தொடர்பான பிரேரணைகளைச் சமர்ப்பித்தல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. கல்பிட்டி பிரதேசத்தில் கடல் ஆமை இனவிருத்தி நிலையம் மற்றும் செயற்திட்டம் சம்பந்தமான விசேட சந்தர்ப்பங்களை அறிமுகப்படுத்தல் சம்பந்தமான செயற்திட்டத்திற்காக ரூபா 600,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 250,131 செலவு செய்யப்பட்டு தரவுகள் சேகரித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

### கடற்கரைக்கு அண்மித்த வலயத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகள்

கடற்கரைக்கு அண்மித்த வலயத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 2012ஆம் ஆண்டின் போது ரூபா 15.69 மில்லியன் செலவு செய்யப்பட்டு “தரணி” படகு மீளாய்வாண்டின் இறுதி வரை உரிய செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2014 நவம்பர் 12ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுக் கூட்டத்தின் போது உரிய படகை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருந்தும் 2016 ஆகஸ்ட் 04ஆந் திகதி வரை அது விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இப் படகு நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை இப் படகிற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளம், மேலதிக நேர வேலைப்படிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றிற்காக ரூபா 8.07 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

### மீன்பிடித் துறைமுகங்களின் செயற்பாட்டு நட்டங்கள்

இலங்கை மின்பிடித்துறைமுக கூட்டுத்தாபனத்தின் கீழ் செயல்படுகின்ற 21 துறைமுகங்களில் 15 துறைமுகங்கள்

மீளாய்வாண்டின் போது ரூபா 170.74 மில்லியன் செயற்பாட்டு நட்டத்தை அடைந்திருந்தன. பூராணவெல்ல, குடாவெல்ல, சிலாபம், தங்காலை, நில்வெல்ல ஆகிய மீன்பிடித்துறைமுகங்களின் செயற்பாட்டு நட்டமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முறையே 104 சதவீதம், 328 சதவீதம், 35 சதவீதம், 18 சதவீதம் மற்றும் 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. நட்டமடையும் துறைமுகங்களில் நட்டமடைவதற்கான காரணத்தை ஆய்வு செய்து இலாபம் அடையும் நிலைமைக்கு கொண்டு வருதல் அல்லது நட்டத்தை குறைவடையச் செய்தல் மற்றும் இலாபம் குறைவாகக் காணப்படும் துறைமுகங்களில் அதனை அதிகரிக்கச் செய்தல் என்பவற்றிற்கான நடைமுறைகளை இனங்கண்டு அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

# சுகாதாரமும் போசாக்கும்

நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்காக பங்களிக்கக் கூடிய தேக ஆரோக்கியமான மக்களை உருவாக்கும் நோக்கில் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை உருவாக்குவதன் மூலம் தரமான சுகாதார சேவையொன்றை உறுதிப்படுத்தல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கங்களாக இருந்தன. இந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தன.

- சுகாதார துறைக்காக கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தலும் அமுல்படுத்தலும்.
- சுகாதார சேவைகள் வழங்குவதற்காக தராதரங்கள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல்.
- மனித வள அபிவிருத்தி.
- முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் முறைமை அபிவிருத்தி.
- வள ஒதுக்கீடு, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திடங்கள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு.
- பிரதான வைத்தியசாலைகளின் நிர்வாகம்.
- தனியார் சுகாதார நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணித்தல்
- தேசிய சுகாதார மற்றும் போசனை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்தலும் செயற்படுத்தலும்.
- சுகாதார பிரிவின் ஆராய்ச்சி சந்தர்ப்பங்களை விரிவுபடுத்தல்.

சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு அதன் கீழுள்ள திணைக்களமொன்றினாலும் 07 நியதிச்சட்ட நிறுவனங்களினாலும் மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தன. அந்நிறுவனங்களால் இச்செயற்பாடுகளை நிறைவேற்றும் போது மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### நிதி ஏற்பாடுகளும் குறைப்பயன்பாடும்.

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் குறைநிரப்பு ஒதுக்கீட்டு மூலம் சுகாதார மற்றும் போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 177,059 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த ஏற்பாடுகளிலிருந்து ரூபா 134,780 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகார் ரூபா 42,279 மில்லியன் அதாவது தேறிய நிதிஏற்பாட்டில் 24 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் சுகாதார மற்றும் போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு உரித்தில்லாத செலவினமொன்றான

அரசின் காணி மற்றும் கட்டிடங்கள் கையேற்றல் மூலதனக் கிரயத்திற்காக (Capital Carring Cost of Government Land and Building) மீண்டெழும் செலவினமொன்றின் கீழ் ரூபா 17,878 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்நிதி ஏற்பாட்டிலிருந்து எவ்வித பயன்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### கடமை அதிகாரத்தை மீறிய நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் வேலை இடைநிறுத்தங்கள் மேற்கொள்ளல்.

சுகாதார மற்றும் போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தையும் ஒன்றிணைத்து மீள் ஒழுங்குபடுத்துவதற்கு 2001 யூன் 21 திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்ததுடன் அரசியலமைப்பின் 57 ஆவது உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை வழங்கி அரச உத்தியோகத்தர்களுக்கான நியமனம், பதவி உயர்வு வழங்குதல், இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று அதிகாரம் என்பன திணைக்களத் தலைவருக்கு கையளிக்கப்பட்டிருந்தன. திணைக்கள தலைவர் சுகாதார அமைச்சின் செயலாளர் என அரச சேவை ஆணைக்குழு 2013 ஒக்தோபர் 24 ஆம் தீர்மானித்திருந்தது. எனினும் சுகாதார சேவைப் பணிப்பாளர் உட்பட பல உத்தியோகத்தர்களால் மேற்குறித்த கடமை அதிகாரங்களை மீறி 09 சந்தர்ப்பங்களில் நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்க கட்டளைகளை வழங்குதல் மற்றும் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### பதவியணியினர் வெற்றிடங்கள்

மருத்துவ உத்தியோகத்தர் வெற்றிடங்கள் காரணமாக 10 மாவட்டங்களுக்குரிய 15 ஆரம்ப சிகிச்சை அலகுகள் மற்றும் 04 பிரதேச வைத்தியசாலைகள் மூடப்பட்டிருந்தன.

### கூடுதலாக செலுத்தப்பட்ட தொலைதொடர்பு படிகள்

அரச உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் வசதிகள் வழங்கதலின் பேரில் 2014 திசெம்பர் 30 ஆந் திகதிய 03/2014 ஆம் இலக்க மற்றும் 2015 மார்ச் 10 ஆந் திகதிய 03/2014(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைகளுக்கும் 2015 செப்தம்பர் 10 ஆந் திகதிய என்பீசீ/9/1/30-17 ஆம் இலக்க தேசிய சம்பள ஆணைக்குழு செயலாளரின் கடிதத்தின் ஆலோசனைகளுக்கும் முரணாக, மருத்துவ சேவையின் II ஆம் தரம் மற்றும் முதலாம் தர மருத்துவர்களுக்கும் தொடர்பாடல் படிகளாக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிற்காகவும் ரூபா 411 மில்லியன் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

### உடன்படிக்கை மீறியதால் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட முடியாமல் போனமை.

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பட்டப்படிப்பு நடவடிக்கைகளுக்காக சம்பளமற்ற விடுமுறை அடிப்படையில் வெளிநாடு சென்றமையாலும் தொழிலுக்காக சம்பளமற்ற விடுமுறை அடிப்படையில் வெளிநாடு சென்றதன் பின்னர் மீண்டும் சேவைக்கு அறிக்கையிடாமல் அல்லது கட்டாய சேவைக்காலத்தில் அரசிற்கு சேவை செய்யாமையால் கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கை பிரகாரம் உரிய வைத்தியர்களிடமிருந்து ரூபா 62.71 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. அதில் வைத்தியர்களின் தற்போதைய முகவரிகளை கண்டுபிடிக்க முடியாமையால் ரூபா 22.57 மில்லியனும் அறவிடப்பட வேண்டிய பெறுமதி, குறைவாக கணிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 4.35 மில்லியன் அறவிட முடியாமலும் காணப்பட்டன.

### சிக்கனமற்ற வெளிநாட்டுப் பிரயாணம்.

தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாத்தின் 11.1 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டுப் பிரயாணங்களின் போது உத்தியோகத்தர்கள் சிக்கன வகுப்பில் பயணம் செய்ய வேண்டிய போதிலும் 06

சந்தர்ப்பங்களின் போது இரண்டு உத்தியோகத்தர்கள் வியாபார வகுப்பில் பிரயாணம் செய்தமையால் அரசின் பணத்திலிருந்து ரூபா 1.58 மில்லியன் மேலதிகமாக செலவிடப்பட்டிருந்தது.

### மருத்துவ வழங்கள் கொள்வனவு.

மருத்துவ பொருட்கள் மீளாய்வுக் குழுவின் பரிந்துரையில்லாமல் எவ்வித மருத்துவ வழங்கலொன்றும் கொள்வனவு செய்யக் கூடாது என அமைச்சரவை தீர்மானித்திருந்த போதிலும் பயன்பாட்டில் காணப்படும் 16,988 மருத்துவ வழங்கள் உருப்படிகளுக்கு இடையே 4,619 அதாவது 27 சதவீதம் குழு அங்கீகாரமின்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### முறையான கால அட்டவணை பிரகாரம் மருந்துகளுக்கு கட்டளையிடாமை.

மருத்துவ வழங்கள் பிரிவினால் மதிப்பிடப்பட்ட உருப்படிகள் கொள்வனவிற்காக 11 மாத வழங்கள் காலத்துடன் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கு கட்டளையிடும் கொள்கையொன்றாக இருந்தது. தாமதமின்றி மருந்துகளை வழங்குவதற்கு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்குரிய மருத்துவ வழங்கலில் மொத்த கட்டளை உருப்படிகளின் எண்ணிக்கை 8,384 ஆக இருந்ததுடன் அதில் 5,178 கட்டளைகளுக்கான உருப்படிகள் அதாவது 62 சதவீதம் குறித்த காலப்பகுதியினுள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இத் தாமதம் காரணமாக ஒவ்வொரு ஆண்டிலும் பாரிய கிரயமொன்றுடன் மருந்துகள் உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது மாத்திரம் உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருத்துவ வழங்களின் மொத்தக் கிரயம் ரூபா 8,292 மில்லியனாக இருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 192 சதவீத அதிகரிப்பொன்றாகும். மருந்துகள் உள்நாட்டு சந்தையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 5,166 மில்லியனான மேலதிக செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது.

### மருத்துவ வழங்கல் தரப் பரிசோதனைக்காக உட்படுத்தப்படல்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் அல்லது உள்நாட்டு சந்தையில் கொள்வனவு செய்யப்படும் அனைத்து மருந்து வழங்கல்களிலும் மாதிரியொன்றினை தரப் பரிசோதனைக்காக உட்படுத்தும் முறையொன்று காணப்படவில்லை. மருத்துவ வழங்கலில் தரம் தொடர்பாக பின்னைய காலங்களில் நிச்சயமற்ற நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவை தரப்பரிசோதனைக்காக தொடர்புபடுத்தப்பட்டிருந்தன.

### தரப் பரிசோதனைக்காக போதியளவு வசதிகள் காணப்படாமை

மருந்து வழங்கலின் நிலைமையைப் பரீட்சிப்பதற்காக தாபிக்கப்பட்டிருந்த தேசிய மருந்து தரப் பரிசோதனை ஆய்வுகூடத்திற்காக போதியளவு ஆய்வுகூட வசதிகள் ஸ்தாபிப்பதற்கும். போதியளவு பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக மீண்டும் பாவனைக்கு பொருத்தமற்றதாகவும் ரூபா 5.16 மில்லியன் கிரயமான 07 மருத்துவ வழங்கல் உருப்படிகள் காலாவதியாகி இருந்தமை மீளாய்வாண்டின் போது 23

பரிசோதனை உருப்படிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

### தரப் பரிசோதனையின் போது தேறாத மருத்துவ வழங்கல்

பாவனையிலிருந்து அகற்றப்பட்ட (withdraw) 30 வகையான மருந்துகளின் கிரயம் ரூபா 602 மில்லியனாக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 258 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### தரமற்றது என்பதனை தாமதித்து அறியத்தருதல்

தரத்தில் தேறாத மருத்துவ வழங்கலை இடைநிறுத்துவதற்கு கட்டளை வழங்குவதற்காக கணனி முறைமை பயன்படுத்தப்படாமல் சுற்றறிக்கை மூலம் மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. தரத்தில் தேறாத மருத்துவ வழங்கல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட 57 சந்தர்ப்பங்களில் 16 சந்தர்ப்பங்கள் 20 நாட்கள் முதல் 140 நாட்கள் வரையான காலப்பகுதிக்கு பின்னர் அம்மருந்துகளின் பயன்பாட்டை இடைநிறுத்தம் செய்வதற்கான கட்டளை உரிய வைத்தியசாலைகளுக்கும் நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

### தரத்தில் சித்திபெறாத மருந்துகளை நோயாளிகளுக்கு விநியோகித்தல்.

அவசர சத்திர சிகிச்சைகளுக்காக பயன்படுத்தப்படும் மருந்துகள். சக்கரை நோய்க்காக வழங்கப்படும் மருந்துகள் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் எதிர்ப்பு மருந்துகள் (Antibiotics) இரத்த பைகள் மற்றும் காயக்கட்டு வகை உட்பட மீளாய்வாண்டின் போது ரூபா 602 மில்லியனான தரத்தில் சித்திபெறாத மருத்துவ வழங்கல் பாவனையிலிருந்து அகற்ற வேண்டுமென கட்டளையிடப்பட்ட சந்தர்ப்பங்கள் வரையிலும் ரூபா 525 மில்லியனான 30 மருத்துவ வழங்கல் உருப்படிகள் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அது தரத்தில் சித்தியடையாத மொத்த மருந்துகளின் பெறுமதியில் 87 சதவீதமாக இருந்ததுடன் அதில் ரூபா 377 மில்லியன் பெறுமதியான 19 உருப்படிகளில் 33 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் நோயாளிகளுக்கு வழங்கி பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

### தரத்தில் சித்திபெறாத மருந்துகளை கிரயத்தை வழங்குனரிடமிருந்து அறவிடாமை

தரத்தில் சித்தி பெறாத மருந்துகளின் கிரயம் மற்றும் 25 சதவீத நிர்வாக செலவினத்தை வழங்குனரிடமிருந்து அறவிடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தரத்தில் சித்திபெறாத மருந்துகளின் மொத்தக் கிரயம் ரூபா 3,374 மில்லியனில் ரூபா 893.6 மில்லியனை மாத்திரம் மருத்துவ வழங்கல் பிரிவு அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட்டிருந்த போதிலும் வழங்குனர்களிடமிருந்து ரூபா 380.3 மில்லியன் மாத்திரமே அறவிட்டிருந்தது. மருந்துக் களஞ்சியங்கள் மற்றும் போக்குவரத்து செய்வதற்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் என்பன உரிய தரத்தில் இருப்பதில்லையெனவும் அதன் காரணமாக மருந்துகள் முழுத் தீவினையும் வந்ததன் பின்னர் சித்தியடைவதில்லை என வழங்குனர் குற்றம் சாட்டியிருந்ததால் எஞ்சிய பெறுமதியை அவர்களிடமிருந்து அறவிட முடியாமல் இருந்தன.

## மருந்து வழங்கல் கொள்கலன்களில் அரச இலட்சினை அச்சிடல்

மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்கப்படும் மருந்து வழங்கல் கொள்கலன்களில் அரச இலட்சிணை பொறிக்கப்பட வேண்டுமென கட்டளை நிபந்தனையொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த உள்ளக கட்டுப்பாடு தந்திரோபாயயொன்றாக இருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அரச இலட்சினை பொறிக்கப்படாதிருந்த ரூபா 97.6 மில்லியன் கிரயத்துடன் கூடிய 4 மருத்துவ வழங்கல் உருப்படிகள் களஞ்சியத்தில் இருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

## செயற்திறனான இருப்புக் கட்டுப்பாடு காணப்படாமை.

மருந்து வழங்கல் பிரிவினால் 03 மாதங்களுக்கு பாதுகாப்பு இருப்பொன்று (Buffer Stock) பேணப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்படாதிருந்த 7,223 மருத்துவ வழங்கல் உருப்படிகள் காணப்பட்டதுடன் அதில் அத்தியவசிய 1607 மருத்துவ வழங்கல் இருப்பு பூச்சியமாக இருந்தமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## மருந்து வழங்கல்கள் பொருத்தமற்ற விதத்தில் களஞ்சியப்படுத்தப்படல்

மருந்து வழங்கல் பிரிவு, பிராந்திய மருத்துவ வழங்கல் நிலையம் (RMSD) மற்றும் வைத்தியசாலைகளில் மருந்து களஞ்சியங்கள் உரிய வெப்ப நிலையில் அல்லாமல் காணப்படுவதுடன் களஞ்சிய வசதிகள் போதியளவில் இல்லாமை காரணமாக மருந்து வழங்கல் பிரிவுகளின் விராந்தைகளில் 08 நாட்கள் முதல் 53 நாட்கள் வரையான காலப்பகுதியில் மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. உரிய வெப்பநிலையில் இல்லாதிருந்த மருந்துகளாவன கண் போன்ற நுணுக்கமான விடயங்களுக்கு பயன்படுத்தும் மருந்துகளும் சிறுநீரக நோய்கள் அறுவை சிகிச்சைகளுக்காக தேவையான மருந்துகளும் காணப்பட்டமை கண்டறியப்பட்டன.

## பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத மருத்துவ வழங்கல் மற்றும் உபகரணங்கள்

தேசிய இடர் முகாமைத்துவ அமைச்சினால் தீர்வை மற்றும் போக்குவரத்து கட்டணங்களாக அதிகளவு பணம் செலவிடப்பட்டிருந்த, வெள்ளம் போன்ற அவசர அனர்த்த நிலைமையின் போது நன்கொடையாக கிடைத்த பெறுமதி கணக்கிட முடியாத மருந்துகள் மற்றும் உபகரணங்கள் என்பன முறையாக களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அம் மருந்துகள் உரிய தரப்பினருக்கு வழங்கப்படாமையால் சேதமடைந்து காணப்பட்டன. நீதிமன்ற நடைமுறைகளின் பின்னர் மருந்து வழங்கல் பிரிவிற்கு இலவசமாக கிடைத்த பெறுமதி கணக்கிடப்படாதிருந்த பாரியளவிலான மருந்து இருப்பொன்று 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் காலாவதியாகியிருந்தன. காலாவதியாகி வருடக் கணக்கில் கடந்திருந்த அவற்றை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## சர்ச்சைக்குரிய தன்மையிலான புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகள்

மார்பு புற்றுநோய்க்கான மருத்துவப் பெயர், Trastuzumab மற்றும் Herticad வியாபார பெயரிலான மருந்தின் தரம் பாதுகாப்பு

(Quality, Safety, efficacy) தொடர்பாக புற்றுநோய் மருத்துவர்களின் எதிர்ப்பினைக் கருத்திற் கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 567.7 மில்லியன் செலவிடப்பட்டு அம்மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் மருந்து மதிப்பீட்டுக்குழு கூட்டங்களின் போது 03 Herticad மருந்து தொடர்பாக கலந்துரையாடாமலும் புற்றுநோய் நிபுணர்கள் சமூகமளிக்காதிருந்த குழுக் கூட்டத்தின் போது அம்மருந்து பதிவு தொடர்பாக பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. மருந்துகளின் மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் அது திருப்திகரமாக இருந்தால் 2016 பெப்ரவரி மாதம் இறுதியின் போது பதிவினை வழங்க முடியுமென்ற இப்பரிந்துரை வழங்கப்பட்டிருந்த திகதிக்கு 05 நாட்களுக்கு முன்னர் இம்மருந்துகளுக்காக பதிவு வழங்கப்பட்டிருந்தது.

## இரண்டாவது சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டம்

சர்வதேச அபிவிருத்தி நிதியத்தினால் நிதியளிக்கப்படுகின்ற ஐந்தாண்டு செயற்திட்டமொன்றாக 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2013 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையான 04 ஆண்டுகளின் போது ரூபா 5,584 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் உள்ளவாறான செலவினம் ரூபா 2,818 மில்லியனாக இருந்தது.

14 வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை பிரிவுகளை புதிதாக நிர்மானிப்பதற்கும் ஏனைய அரசின் 14 வைத்தியசாலைகளில் தற்போது காணப்படும் அவசர சிகிச்சை பிரிவுகளை மேம்படுத்துவதும் செயற்திட்டத்தின் பிரதான இலக்காக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் புதிதாக நிர்மாணிக்கப்படும் 04 அவசர சிகிச்சை பிரிவுகளுக்குரிய ஒப்பந்தங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் காணப்படும் 09 அவசர சிகிச்சை பிரிவுகளின் மேம்படுத்தல் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

தொற்றாத நோய்களை இனங்காண்பதற்காக 40 வயதுக்கு மேற்பட்ட ஆட்களை சுவதிவி நிலையங்களுக்கு தொடர்புபடுத்தும் போக்கின் முன்னுரிமையை மதிப்பீடு செய்தல் செயற்திட்டத்தின் இன்னுமொரு நோக்கமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சுவதிசி நிலையங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 251,368 ஆல் குறைவடைந்து சுவதிவி நிலையங்களுக்கு மக்களை அனுப்புவதற்கு போதியளவு அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டின் போது புதிதாக 13,577 காச நோயாளர்களை இனங்காண்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்பாடுகள் போதியளவில் இல்லாத காரணமாக 9,293 நோயாளிகள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தனர்.

## வலிப்பு நோய் தொகுதியின் நிர்மாண வேலைகள்

இலங்கை தேசிய வைத்தியசாலையின் 08 மாடிகளைக் கொண்ட வலிப்பு நோய் அலகினை தாபித்தல் மற்றும் நாடு முழுவதும் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற் செயற்திட்டத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி சவூதி ரியால் 281.25 மில்லியன் ஆக இருந்தது. 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இச்செயற்திட்டத்திற்காக சவூதி அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட மொத்த கடன்

தொகை சவுதி ரியால் 120 மில்லியன் ஆக இருந்ததுடன் செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், நாடளாவி ரீதியில் வலிப்பு நோய் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சவுதீ ரியால் 13.13 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் தவணை மற்றும் சவுதி ரியால் 2.83 மில்லியன் வட்டியாக மீளச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட தாமதத்தினால் நலன்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது. செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு உரித்தல்லாத தேசிய வைத்தியசாலையின் நரம்பு தொகுதிக்காக மருத்துவ உபகரணங்கள் கொள்வனவிற்கு ரூபா 337.26 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### புற்றுநோயாளர்களுக்காக சக்திவாய்ந்த கதிர்வீச்சு உபகரணங்கள் கொள்வனவு

புற்றுநோயாளர்களுக்காக காலாவதியான கொபோல்ட் (Cobalt) சிகிச்சை முறைமைக்குப் பதிலாக கூடிய சக்தியுடனான கதிர்வீச்சு சிகிச்சை முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது 53.38 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 10 வைத்தியசாலைகளுக்கு 02 கட்டங்களின் கீழ் செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த இச் செயற்திட்டத்திற்கு நிதியளிப்பதற்கு வெளிநாட்டு வங்கியொன்றினால் தமது விருப்ப முன்மொழிவொன்று (Unsolicited Proposal) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன் நிபந்தனைகளுக்கு இணக்கப்பாட்டை வழங்க மத்திய வங்கி நிராகரித்திருந்தது. எனினும் உலக வங்கி கடன் மற்றும் உள்நாட்டு நிதியங்களின் மூலம் நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டு அரச பெறுகை வழிகாட்டிகளுக்கு புறம்பாக நடவடிக்கை எடுத்தும் திறைசேரியால் நிராகரிக்கப்பட்ட முன்மொழிவின் விலை விபரங்களுக்கும் அதே வழங்குனருக்கும் 04 சக்தி வாய்ந்த கதிர்வீச்சு உபகரணங்கள் (Liner Accelerator) அதன் கிரயத்தில் 80 சதவீதமான ரூபா 8.8 மில்லியன் கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இயந்திரங்களை பொருத்தியதன் பின்னர் 20 சதவீதம் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

05 வைத்தியசாலைகளுக்கு இந்த கதிர்வீச்சு உபகரணங்களைப் பொருத்துவதற்காக தேவையான நிர்மாணிப்பதற்கும் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிப்பதன் பேரில் ரூபா 1,103 மில்லியன் ஒப்பந்தம் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக பொறியியல் சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு 2014 யூன் 11 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் மாதம் அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிர்மாணம் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்காக 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. பங்கர் அமைப்பதிலான தாமதம் காரணமாக இந்த 04 உபகரணங்களில் 03 உபகரணங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

# ஊடகத்துறை

மக்களுடன் இணைந்த அபிவிருத்தியை நோக்கி சுதந்திரம் மற்றும் உத்தரவாதத்தினுடைய இலங்கை ஊடகத்துறை கலையை ஏற்படுத்துவது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாகும். அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நியதிச்சட்ட சபைகள் மற்றும் 12 நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்நிறுவனங்களினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக மற்றும் தகவல்துறை விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.

- மக்களை நோக்கிய நல்லாளுகையை கேந்திரமக கொண்ட பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளில் முன்னுரிமையாக ஊடகத்துறையின் பங்களிப்பினை வழங்குவதற்காக தேவையான தந்திரோபாயங்களை தயாரித்தல்.

- மக்களிடம் அறிவு எண்ணக்கரு மற்றும் ரசணை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- மக்களின் சரியான தகவல்கள் அறியும் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- உயர் ஊடக ஒழுக்கமொன்றை ஏற்படுத்துவதற்காக தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.

- அரச உத்தியோகபூர்வ மற்றும் செய்திகளை வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- இலங்கை தொடர்பான உரிய தகவல்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களுக்கு வழங்குதல்.

- வெளிநாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதுவர் இல்லங்களுக்கு தேவையான தகவல்கள் மற்றும் பிரசார சேவைகளை வழங்குதல்.

- வெளியீடுகளுக்குரிய சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் உள்ளடக்கங்களை செயற்படுத்துதல்.

- திணைக்களத்தின் வெளியீட்டிற்குப் பொறுப்பான அரசின் வெளியீடுகளை விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் வழங்குதல் நடவடிக்கைகள்.

- செய்திகள், திரைப்படங்கள் மற்றம் விவரண ரீதியான நிகழ்ச்சிகளை தயாரித்தல் மற்றும் வெளிநாட்டு ஒளிபரப்புகள் உட்பட விளம்பர நடவடிக்கைகள்.

- வர்த்தக, தொலைக்காட்சி மற்றும் வானொலி பிரசாரங்கள் மற்றும் வெளிநாட்டு ஒலிபரப்பு உட்பட பிரசார வேலைகள்.

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாடும் பயன்பாடும்

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சின் 2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் தொலைக்காட்சி ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக இலக்க தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம் மற்றும் தொலைக்காட்சி நிகழச்சித்திட்டங்களின் தரத்தை

மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்திற்காக முறையே ரூபா 1,698 மில்லியன் மற்றும் ரூபா 101.6 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டங்களுக்காக எவ்வித பயன்பாடும் மேற்கொள்ளப்படாமையால் மொத்த நிதிஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன.

### பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுதுமான சொத்துக்கள்

முறையான சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்ளாது நூற்றுக்கு 2.1 சதவீத வட்டி அடிப்படையில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதியன்று வழங்குநருக்கும் தகவல் திணைக்களத்திற்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம், பிரான்ஸ் அரசாங்கக் கடனுதவியின் கீழ் 9,150,000 பிரான்ஸ் பிராங்க் (1,442,601 யூரோ) இற்கு சமமான ரூபா 102.2 மில்லியனிற்கு 2003 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வர்ண ஆய்வுகூடத்திற்கான உபகரணங்கள் 2016 மே மாதம் வரை பயன்படுத்தப்படாமலும் முறையான பராமரிப்பு இல்லாமலும் இருந்தன. இது தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பரிந்துரைக்கமைய பகிரங்க கூறு விலைகளைக் கோருவதன் மூலம் விற்பனை செய்வதற்கான அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் திணைக்களத்தினால் 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### வானொலி சேவைகளை சுயமாக இயங்கச் செய்தல்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் வானொலி சேவைகளை சுயமாக இயங்கச் செய்யும் நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2012 மே 14 ஆந் திகதி வரை அதற்காக ரூபா 3.40 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. சுயமாக இயங்கச் செய்ய வேண்டிய வானொலி சேவைகளின் எண்ணிக்கை 06 ஆக இருந்ததுடன் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 03 சேவைகள் மாத்திரம் சுயமாக இயங்கச் செய்யப்பட்டிருந்தன.

### யப்பானிலிலிருந்து பெற்றுக்கொண்ட நிகழ்ச்சிகளை சிங்களத்திலும் தமிழ் மொழியிலும் குரல் கொடுத்தல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை மேம்படுத்தும் நோக்கில் யப்பானிலிருந்து ரூபா 589 மில்லியனிற்கு 449 நிகழ்ச்சிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் குரல் மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அதற்காக உரிய விதந்துரைகள் தயாரிக்கப்பட்டு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

### வெளிக்களத்தில் தயாரிப்பு வசதிகளை மேம்படுத்துதல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் வெளிக்களத்தில் தயாரிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 16.20 மில்லியன் கிரயத்திலான நடுத்தர மட்டக் கமரா, மின்கலங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்காக உரிய விதந்துரைகளை தயாரிப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

### செயற்படுத்தப்பட்ட திட்டமிடப்பட்ட செயற்பாடுகள்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு

திட்டமிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- ஊழியர் செயலாற்றலினை அடிப்படையாகக் கொண்ட மதிப்பாய்வு முறையொன்றினை அறிமுகப்படுத்தல், ஊழியர்களுக்கு ரம்மியமானதொரு வேலைச் சூழலினை வடிவமைப்பதன் மூலம் 5 எஸ் விருதினை வென்றெடுத்தல் மற்றும் 05 சுற்றுலா விடுதிகளை அறிமுகப்படுத்தல்.

- முதலீட்டுச் சபையின் செயற்திட்டமொன்றின் கீழ் ஊடக நகரொன்றினை தாபித்தல், வானொலி அலைவரிசையொன்றினை நிறுவுதல் மற்றும் புதியதொரு இணையத்தளத்தினை வடிவமைத்து பேணிச் செல்லல்.
- காணப்படும் வருமான உழைப்பு வழிகளுக்கு மேலதிகமாக புதிய வருமானம் உழைப்பு வழிகளை இனங்காணல்

- காணப்படும் ரூபவாஹினி அதிகாரச்சட்டத்தினை மீளாய்வு செய்து திருத்தங்களை மேற்கொள்ளல், நிறுவனத்திற்கு தேவையான புதிய சட்டங்கள் மற்றும் விதிகளை உருவாக்குதல் (formulating) மற்றும் ஒழுக்காற்று நடைமுறையொன்றினை தயாரித்தல்.

## வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் வரிக்கு பின்னரான நட்டம் ரூபா 107.19 மில்லியனாக இருந்ததுடன், இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 433.02 மில்லியனாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 540.21 அல்லது 125 சதவீத வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் ஒளிபரப்பு கால விற்பனை வருமானம் ரூபா 656.66 ஆல் அல்லது 27 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், அதற்கு ஒப்பாக ஏனைய செலவினங்கள் குறைவடைந்திருக்க வேண்டிய போதிலும், நிகழ்ச்சிகள், நிர்வாகச் செலவினம் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற சகல செலவினங்களும் 09 சதவீதம், 02 சதவீதம் மற்றும் 34 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பனி

“இலங்கையின் விசுவாசமான மற்றும் ஆக்கத்திறனான ஊடக வழங்குனர்” என்ற தொலைநோக்கினைக் கொண்ட கம்பனியின் பிரதான வியாபார செயற்பாடு பத்திரிகை மற்றும் சஞ்சிகை அச்சிடல் என்பன பிரபல்யமாக இருந்தன. கம்பனியால் மீளாய்வாண்டின் போது 06 பத்திரிகைகளும் 09 தவணை சஞ்சிகைகளும் பிரசித்தப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் பிரசித்தப்படுத்தப்பட்ட 11 தவணை சஞ்சிகைகளின் அச்சிடல் 2016 ஆம் ஆண்டின் போது கைவிடப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அனைத்து பத்திரிகைகளிலிருந்தும் 07 தவணை சஞ்சிகைகளிலிருந்தும் கிடைத்த விற்பனை வருமானம் ரூபா 67.9 மில்லியனால் குறைவடைந்திருந்தது. 06 பத்திரிகைகளினதும் 07 தவணை சஞ்சிகைகளினதும் அச்சிடல் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 7 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. பாடசலை பாடப் புத்தகங்கள் அச்சிடல் மற்றும் தொலைபேசி விபரக்கொத்து அச்சிடல் என்பன கைவிடப்பட்ட காரணத்தினால் வர்த்தக

அச்சிடல் நடவடிக்கைகளிலிருந்து உழைத்த வருமானம் ரூபா 312.7 மில்லியனிலிருந்து ரூபா 50.7 மில்லியன் வரை 84 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது

கம்பனியின் முழு உரித்தினையும் உடைய துணைக்கம்பனியான வரையறுக்கப்பட்ட லேக்ஹவுஸ் கனெஸ்ட் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ஒப்சேவர் ஜொப்ஸ் (தனியார்) கம்பனி என்பன வங்குரோத்து நிலைமையை அடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி நிதிக்கூற்றுக்களின் கூட்டுத்தொகை முறையே ரூபா 19.4 மில்லியன் மற்றும் ரூபா 11.6 மில்லியன் வீதம் நட்டத்தை காண்பித்திருந்தன.

## இலங்கை பத்திரிகை பேரவை

1973 இன் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகை பேரவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பத்திரிகை மற்றும் பத்திரிகை நிருபர்களினால் உயர்வான பத்திரிகை கலையில் பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படுகின்றமை தொடர்பாக பொறுப்புக்கூறல் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது செய்தித்தாள்களுக்கு எதிராக பொதுமக்களிடத்திருந்தும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் கிடைத்த 105 முறைப்பாடுகளில் 53 முறைப்பாடுகள் ஆண்டின் இறுதியில் தீர்க்கப்படாதிருந்தன

# சட்டமும் ஒழுங்கும் பாராளுமன்ற அலுவல்களும்

சட்டத்தை மதிக்கும் சமூகமொன்றுக்காக சட்டம் மற்றும் சமாதானத்தை பேணிச் செல்வது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக இருந்தது. இப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு சட்டம், சமாதானம் மற்றும் தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சும் திணைக்களமொன்றும் இரண்டு நியதிச் சட்ட நிறுவனங்களும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இந்த நிறுவனங்களால் சட்டம், சமாதானம் மற்றும் தென்பிராந்திய அபிவிருத்தி விடயங்களுக்குரிய திணைக்களம் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்குரிய கொள்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், பின் தொடர் நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், சட்டம், சமாதானத்தை பேணிச் செல்லல் சமூக ஒழுக்கத்தை உறுதிப்படுத்தும் விரிவான மீளமைத்தல் என்பவற்றை உள்ளடக்கிய தந்திரோபாயங்கள் மற்றும் மோட்டார் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தல் போன்றவை இத்துறைகளுக்குரிய பிரதான செயற்பாடுகளாக காணப்படுகின்றன.

## குற்ற முறைப்பாடுகளுக்கான தீர்வுகள்

நாட்டினுள் சட்டம் மற்றும் சமாதானத்தை பாதுகாப்பதின் செயன்முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் பிரதான குறிகாட்டிகளாக இருப்பது நாட்டினுள் அறிக்கையிடும் குற்றங்களின் மற்றும் அறிக்கையிடப்பட்ட குற்றங்களுக்கு தீர்வு வழங்குவதற்குரிய பெறுமதிகளாகும். நபர்களுக்கு எதிரான சிறிய தவறுகளுக்குரிய முறைப்பாடுகள், சிறுவர்களுக்கு எதிரான குற்ற முறைப்பாடுகள் மற்றும் மது தொடர்பான தவறுகளுக்குரிய முறைப்பாடுகளில் தீர்வு வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது. விபரங்கள் அட்டவணை 23 இல் தரப்பட்டுள்ளது.

| குற்றங்களின் வகை | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்பட்ட சதவீதம் | அறிவிக்கப்பட்டவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்பட்ட சதவீதம் |
| பாரிய குற்றங்கள் | 40,188 | 23,575 | 58.66 | 36,937 | 26,869 | 72.74 |
| சிறு தவறுகள் ஆட்களுக்கு எதிராக | 43,870 | 30,292 | 69.05 | 45,579 | 30,481 | 66.88 |
| சிறு தவறுகள் ஆதனங்களுக்கு எதிரான | 30,685 | 14,407 | 46.95 | 33,349 | 15,969 | 47.88 |
| சிறிய முறைப்பாடுகள் | 1,014,812 | 1,014,291 | 99.95 | 1,039,350 | 1,038,942 | 99.96 |
| சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் | 5,911 | 5,102 | 86.31 | 5,709 | 3,294 | 57.70 |
| பெண்களுக்கு எதிரான குற்றங்க | 8,288 | 4,579 | 55.25 | 9,042 | 4,986 | 55.14 |
| மதுவுடன் தொடர்பான தவறுகள் | 113,944 | 109,256 | 95.89 | 120,105 | 111,028 | 92.44 |
| தீங்கு விளைவிக்க கூடிய பொருட்கள் தொடர்பான தவறுகள் | 89,996 | 87,846 | 97.61 | 88,352 | 86,330 | 97.71 |
| மோசடியான தவறுகள் | 1,796 | 1,788 | 99.55 | 1,255 | 1,217 | 96.97 |
| சட்டரீதியான தவறுகள் | 46,290 | 43,869 | 94.77 | 46,171 | 44,177 | 95.68 |

அட்டவணை 23 குற்றங்களுக்குரிய கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் தீர்வு வழங்கப்பட்ட முறைப்பாடுகள் மூலம்- வருடாந்த செயலாற்றல் அறிக்கை – 2016 சட்டம் மற்றும் சாதனம் மற்றும் தென்பிராந்திய அபிவிருத்தி அமைச்சு

## மோட்டார் வாகன விபத்துக்களைக் தவிர்த்தல்.

பொது மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு பாதுகாப்பினை வழங்கும் வகையில் வாகன போக்குவரத்தை முறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் அமைச்சின் பிரதான செயற்பாடாக உள்ளது. நாட்டில் போக்குவரத்திற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களின் அளவு அதிகரித்தமை மற்றும் அதற்கு இணையாக வாகன விபத்துக்களின் அளவு அதிகரிப்பின் வேகம் 1000 வாகனங்களுக்கு 6 ஆக 2014 – 2016 காலப்பகுதியில் நிலையாக காணப்பட்டது. அக்காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்டிருந்த வாகன விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவனையில் 24 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபத்துக்கள் | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| மரண விபத்துக்கள் | 2,260 | 2,600 | 2,824 |
| கடுங்காயமடைந்த விபத்துக்கள் | 7,071 | 8,186 | 8,148 |
| சிறிய காயங்களுடனான விபத்துக்கள் | 12,781 | 13,595 | 14,604 |
| நட்டங்கள் ஏற்படுத்திய விபத்துக்கள் | 13,854 | 13,726 | 13,380 |
| **மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை** | **35,966** | **38,107** | **38,956** |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 2,440 | 2,816 | 3,017 |

அட்டவணை 24: 2014 - 2016 காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்கள்
மூலம்: கணனி மற்றும் புள்ளி விபர பிரிவின் அறிக்கை போக்குவரத்து பொலிஸ் தலைமையகம்

## போதைப் பொருள் கட்டுப்பாடு

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுடன் ஒப்பிடும் போது கைப்பற்றப்பட்டிருந்த ஹெரொய்ன், ஹசிஸ் மற்றும் கொக்கேன் போதைப் பொருட்களின் அளவு முன்னை ஆண்டில் கைப்பற்ற அளவினை விட அதிகரித்திருந்தது. விபரங்கள் அட்டவணை 25 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.

| நிறுவனம் | ஹெறோயின் கி.கி. | | கன்சா கி.கி | | ஹசிஸ் கி.கி | | கொகேன் கி.கி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 |
| போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் (PNB) | 22.6 | 147.7 | 196.3 | 108.3 | - | 4.6 | - | 1,486.3 |
| பொலிஸ் நிலையங்கள் | 16.6 | 48.7 | 5,481.1 | 3,531.8 | 1.2 | 35.6 | 0.1 | 1.5 |
| விசேட அதிரடிப் படை | - | - | 676.1 | 409.8 | - | - | - | - |
| ஏனைய நிறுவனங்கள் | 6.3 | 10.4 | 215.9 | 124.4 | 2.9 | - | 5.5 | 82.9 |
| மொத்தம் | **45.5** | **206.8** | **6,569.4** | **4,174.3** | **4.1** | **40.2** | **5.6** | **1,570.7** |

அட்டவணை 25 போதைப்பொருள் கைப்பற்றல்
மூலம் - ஆண்டறிக்கை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம்

2016 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்டிருந்த ஹெரொய்ன், மற்றும் கொக்கேன் இருப்பின் சராசரி மொத்த விலையின் பிரகாரம் பெறுமதி முறையே ரூபா 1,034 மில்லியன் மற்றும் ரூபா 23,560.5 மில்லியனாக இருந்தன.

### மூலதன நிதியேற்பட்டின் பயன்பாடு.

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த மூலதன ஏற்பாட்டை பயன்படுத்தும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு இருந்தன.

572 முன்னரங்கு கட்டிடங்களை பூர்த்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 985 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 485 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 285 மில்லியனும், விஷேட அதிரப்படைக்கு வழங்கப்பட்ட ரூபா 485 மில்லியனான நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 340 மில்லியன் நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. பொலிஸ் திணைக்கலத்தின் 75 முன்னரங்கு கட்டிடங்களினதும் விஷேட அதிரப்படையின் 13 முன்னரங்கு கட்டிடங்களின் நிர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

பொலிஸ் பயிற்சி நிறுவனத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையிலிருந்து 80 சதவீதமான அளவினை நிறைவேற்றுவதற்காக ரூபா 800 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதில் ரூபா 600 மில்லியன் வேறு நிர்மாணத்திற்காக நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தன கட்டான மற்றும் களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரிகளில் 16 செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்களிற்காக மாத்திரம் ரூபா 44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

பொலிஸ் தகவல் மற்றும் தொடர்பாடல் தளத்தின் அவசர தொடர்பாடல் கட்டிடத்தின் 75 சதவீத வேலைகள் மற்றும் வலையமைப்பு நடவடிக்கைகளில் 75 சதவீதத்தை பூர்த்தி செய்வதற்காக ரூபா 500 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்நடவடிக்கை நிறைவேற்றப்படாமல் முழு நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

### தென்பகுதி அபிவிருத்தி

தென்பகுதி அபிவிருத்தி சபை வரைவு நிறைவேற்றப்படும் வரை தலைவர் மற்றும் ஒன்பது அங்கத்தவர்களுடன் கூடிய உப சபையை நியமிப்பதற்கு 2016 ஏப்ரல் மாதத்தில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தன. தென் மாகாண வீதி அபிவிருத்திக்காக தென்பகுதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 864.69 மில்லியன் நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 483.04 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

### பாராளுமன்ற அலுவல்கள்

மீளாய்வாண்டிற்காக இலங்கை பாராளுமன்றத்தால் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் அறிக்கையின் பிரகாரம், பாராளுமன்றத்தின் செயற்திறன் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 08 ஆவது பாராளுமன்றத்தின் 101 கூட்டத்தடவைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அவற்றுள் 97 கூட்டத்தடவைகள் நடாத்தப்பட்டிருந்தன. அந்த 97 கூட்டத்தடவைகளுக்காக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றல் பின்வரும் அட்டவணை 26 இல் காட்டப்பட்டுள்ளது.

| பங்குபற்றிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை | கூட்டத்தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 51 - 75 | 01 |
| 76 - 100 | 01 |
| 101 - 125 | 13 |
| 126 – 150 | 21 |
| 151 – 175 | 45 |
| 176 - 200 | 11 |
| 201 - 225 | 05 |
| | 97 |

அட்டவணை 26 – கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 150 பேருக்கும் அதிகமானோர் பங்குபற்றிய 61 கூட்டத்தடவைகள் மாத்திரம் மீளாய்வாண்டினுள் நடாத்தப்பட்டிருந்ததுடன், கூட்டப்பட்ட 97 கூட்டத்தடவைகளில் 36 இற்கு 150 இற்கும் குறைவான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர். 200 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்த கூட்டத்தடவைகளின் எண்ணிக்கை 5 ஆகும்.

கௌரவ அமைச்சரொருவருக்கு மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு பாராளுமன்றத்தின் தலைப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் வெகுசன அமைச்சின் ஊடக அமைச்சின் தலைப்பின் கீழும், 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலப்பகுதியினுள், செலவிடப்பட்டிருந்த சம்பளம், படிகள், கொடுப்பனவுகள், பதவியணியினர் செலவினம், போக்குவரத்து, எரிபொருள், எழுதுகருவி, போக்குவரத்து செலவினம், உணவு, அலுவலக பராமரிப்பு செலவினம், தபால் மற்றும் தொலைத்தொடர்பு, மின்சாரம் மற்றும் ஏனைய செலவினங்களாக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த செலவினம் அட்டவணை 27 இல் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | கௌரவ அமைச்சரொரு வருக்காக செலவிடப்பட்டிருந்த மொத்த வருடாந்த சராசரி செலவினம் | கௌரவ பாராளுமன்ற உறுப்பினரொரு வருக்காக செலவிடப்பட்டிருந்த வருடாந்த சராசரி செலவினம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2012 | 30,566,054 | 7,359,408 |
| 2013 | 32,996,514 | 7,233,803 |
| 2014 | 34,506,004 | 7,489,911 |
| 2015 | 32,703,193 | 7,738,108 |
| 2016 | 37,277,857 | 8,575,404 |

அட்டவணை 27 – அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிற்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த சராசரி செலவினம்

# துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை நடவடிக்கைகள்

தேசிய பொருளாதார வளர்ச்சிக்காக கடல்சார் போக்குவரத்துத் துறையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச தேவைப்பாடுகளை நிறைவேற்றும் நோக்குடன் போட்டி நிலைமையினை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் தரமான துறைமுக மற்றும் கப்பல் சேவைகளை வழங்கக்கூடிய வகையில் மிகவும் பொருத்தமான கொள்கை சட்டகத்தினை தயாரித்தல் மற்றும் வினைத்திறனான பொறிமுறையொன்றை உருவாக்குதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோளாகும். அந்த எதிர்பார்ப்பினை நிறைவேற்றுவதற்கு துறைமுக மற்றும் கப்பல் சேவைகள் அமைச்சும் அதன் கீழ் செயற்படுகின்ற இலங்கை துறைமுக அதிகாரசபை, வர்த்தக கப்பற்தறை செயலகம், வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் மற்றும் கப்பற்தறை விமான சேவைத் தகவல்கள் ஆராய்ச்சி (தனியார்) கம்பனி என்பன பின்வரும் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியவையாகக் காணப்பட்டன.

- துறைமுக மற்றும் கப்பற்துறை விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல்.
- அல்மிரால்னியத்திற்குரியவை தவிர்ந்த ஏனைய துறைமுக மற்றும் எண்ணெயைத் தாங்கிகள், உபகரணங்கள், வெளிச்சவீடுகள் மற்றும் கலங்கரை விளக்கங்களின் அபிவிருத்தி மற்றும் நிர்வாகம்
- கப்பற் சேவை வழங்குனர்களிற்கும் பயன்படுத்துவர்களுக்கிடையே காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்து வைத்தல்.
- கப்பல் சேவைகளுக்காக போட்டிமிக்க ஒழுங்குவிதிகளை விதித்தல்.
- கப்பல் வழங்குனர்கள் மற்றும் பயன்படுத்துவோருக்கிடையே மதியுரை சார்ந்த கூட்டிணைப்பினை உறுதிப்படுத்துதலும் ஒத்துழைப்பு வழங்கலும்
- பூன் படகுகள் மற்றும் சமுத்திர பத்திரங்களைப் பொறுப்பேற்றல்
- கப்பல் அலுவல்கள் அபிவிருத்தி நிதியத்தினை பரிபாலித்தல்
- கப்பல் கட்டணம் மற்றும் கப்பல் சேவை நடவடிக்கைகளை நிர்வகித்தல்.
- கரையோரப் பயணிகள் போக்குவரத்து
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை கண்காணித்தல்.

மேற்குறித்த நிறுவனங்களினால் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

### கொள்கல இயக்கச் செயற்பாடுகளின் சர்வதேச வரிசை மற்றும் துறைமுக அதிகாரசபையின் சந்தைப் பங்கு

2016 ஆம் ஆண்டிற்காக உலக துறைமுகங்கள் தொடர்பாக அல்பாலைனர் இனால் வழங்கப்பட்ட அறிக்கை (Alphaliner Report) இன் பிரகாரம் கொழும்புத் துறைமுகம் 5,734,923 இருபது சம அலகுகள் (Twenty Equivalent Unit) கொல்கலன்களை கையாண்டு உலகளவில் 26 ஆவது இடத்தில் நிலைத்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அச்செயற்பாடுகள்

10.6 சதவீத அதிகரிப்பொன்றை அடைந்திருந்தது. எவ்வாறாயினும் துறைமுக அதிகாரசபைக்குரிய சந்தைப் பங்கு 2015 ஆம் அண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 6.75 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## கப்பற் சரக்குச் செயற்பாடுகள்

கொழும்பு, காலி, அம்பாந்தோட்டைம ற்றும் திருகோணமலை ஆகிய பிரதான துறைமுகங்களினால் கடந்த 05 ஆண்டுகளினுள் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை மற்றும் பாரம்பரிய கப்பற் சரக்கு அளவுகள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணை 28 இல் காட்டப்பட்டுள்ளன

| விபரம் | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| வருகைதந்த கப்ல்களின் எண்ணிக்கை | 4,178 | 4,024 | 4,298 | 4,760 | 5,023 |
| கையாளப்பட்ட கொள்கலன்களின் இருபதடி (வுருநுள) எண்ணிக்கை (அலகுகுள் 000) | 4,187 | 4,306 | 4,908 | 5,185 | 5,735 |
| கையாளப்பட்ட பாரம்பரிய கப்பற் சரக்குகளின் அளவு (மெ.தொன் 000) | 6,508 | 5,664 | 6,339 | 7,156 | 7,811 |

அட்டவணை 28 – பிரதான துறைமுகங்களில் கையாளப்பட்ட கொள்கலன்கள் மற்றும் கப்பற் சரக்குகளின் அளவு
மூலம்- இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

2016 ஆம் ஆண்டில் இலங்கைக்க வருகை தந்திருந்த மொத்தக் கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 5,023 ஆன போதிலும், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட இருபது அடிகள் விஸ்தீரணமுடைய கொள்கலன்களின் எண்ணிக்கை 5,734,923 ஆனதுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.6 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே பாரம்பரிய கப்பற்சரக்கு கையாள்கை 2016 ஆம் ஆண்டில் 7,811 (ஆயிரம்) மெ.தொன் ஆகக் காணப்பட்டதுடன் அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.1 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகள்

### கப்பல்களின் வருகை

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் கொழும்பு துறைமுகத்திற்கு வருகைதந்திருந்த கப்பல்கள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணை 29 இல் காட்டப்பட்டுள்ளன.

| கப்பல்களின் வகை | வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| **கொள்கலக் கப்பல்** | 3,092 | 3,142 | 3,239 | 3,643 | 3,804 |
| **பாரம்பரியவை** | 52 | 38 | 28 | 45 | 40 |
| **ஏனையவை** | 726 | 487 | 475 | 509 | 561 |
| **மொத்தம்** | **3,870** | **3667** | **3,742** | **4,197** | **4,405** |

அட்டவணை 29 – கொழும்பு துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகை
மூலம்- இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்திருந்த கொல்கலக் கப்பல்களின் எண்ணிக்கை 161 அல்லது 4 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்திருந்த கொல்கலக் கப்பல்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செயற்படுத்தப்படுகின்ற இறங்குதுறைகளிற்கு இக் கப்பல்களை வரவழைப்பதற்கு துறைமுகம் தவறியிருந்தது. விபரங்கள் மேற்படி அட்டவணை 29 இல் காட்டப்பட்டுள்ளன.

### கொள்கலக் கப்பல்களின் பகுப்பாய்வு

2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கொழும்பு துறைமுகத்திற்கு வருகைதந்திருந்த கொள்கலக் கப்பல்கள் தொடர்பான விபரங்கள் கீழேயுள்ள அட்டவணை 30 இல் காட்டப்பட்டுள்ளன

| இறங்குதுறைச் சேவை வழங்குனர் | வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| **இலங்கை துறைமுக அதிகாரசபை** | 1,972 | 2,084 | 1,926 | 1,616 | 1,460 |
| **எஸ்ஏஜிரீ** | 1,120 | 1,011 | 855 | 1,026 | 1,087 |
| **சீஐசீரீ** | - | 47 | 458 | 1,001 | 1,257 |
| **மொத்தம்** | **3,092** | **3,142** | **3,239** | **3,643** | **3,804** |

அட்டவணை 30 – கொள்கலக் கப்பல்களின் பகுப்பாய்வு
மூலம்- இலங்கை துறைமுக அதிகாரசபையின் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

2015 ஆம் அண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் கையாள்கை நடவடிக்கைகளிற்காக வருகைதந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கை 156 இனால் குறைவடைந்திருந்தது. அதிகாரசபைக்குச் சொந்தமான இறங்குதுறைகளின் ஆழம் போதியதாக இல்லாமை, நங்கூரமிடல் தாமதங்கள் மற்றும் காணப்படுகின்ற கென்றி பாரந்தூக்கிகளின் அகலம் போதியதாக இல்லாமை பொன்றன காரணமாக அதிகாரசபைக்குரிய இறங்குதுறைகளிற்கு கப்பல்களின் வருகை குறைவடைந்திருந்தது.

### இலங்கை துறைமுக அதிகாரசபையின் இறங்குதுறைகளில் கையாள்கைகள் குறைவடைந்திருந்தமை.

2001 முதல் 2016 வரையிலான 10 ஆண்டு காலத்தினுள் கொள்கலக் கையாள்கைகளின் இயலளவினை மொத்த கொள்கலக் கையாள்கைகளின் சதவீதமாக நோக்குகையில் 81 சதவீதத்திலிருந்து 37 சதவீதம் வரை துரிதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இருப்பினும், கொழும்பு துறைமுகத்தில் போட்டியாளராக செயற்படுகின்ற இரண்டு தனியார் கம்பனிகளில் 2013 ஆம் ஆண்டில் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த கம்பனியானது 01 சதவீத்திலிருந்து 35 சதவீதம் வரை துரித வளர்ச்சியினைப் பெற்றிருந்ததுடன், மற்றைய கம்பனி 2001 ஆம் ஆண்டில் 19 சதவீதமாகக் காணப்பட்ட அதனது சந்தைப் பங்கினை 2016 ஆம் ஆண்டளவில் 28 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. கடந்த பத்து ஆண்டுகளினுள் கொள்கலக் கையாள்கை தொடர்பான விபரங்கள் கீழேயுள்ள உரு 21 இல் காட்டப்பட்டுள்ளன.

.




உரு 21 – இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இறங்குதுறை கையாள்கை நடவடிக்கைகள்
மூலம்- இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2016 இன் செயலாற்றல் மீளாய்வு அறிக்கை

மேற்படி தரவுகளின் படி இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கொள்கலன்களை கையாள்வதற்கு உரித்தாகக் காணப்பட்ட சந்தைப்பங்கானது தொடர்ச்சியாக தனியார் துறைக்கு சென்றடைந்திருந்து. அதிகாரசபையின் கொள்கலக் கையாள்கை நடவடிக்கைகள் தொடர்பான இறங்குதுறைப் பயன்பாட்டு விகிதாசாரம் (Terminal Occupancy Ratio) இனைக் கருத்திற்கொள்கையில் 2014, 2015 மற்ற 2016 ஆம் ஆண்டுகளில் அது முறையே 7 68 மற்றும் 63 சதவீதங்களாக காணப்பட்டன. அதற்கமை அதிகாரசபையின் இறங்குதுறைப் பயன்பாட் விகிதாசாரம் தொடர்ச்சியா குறைவடைந்திருந்தது.

## கிழக்கு கொள்கலன் இறங்குதுறையில் கையாள்கை செயற்பாடுகளை ஆரம்பித்திராமை

அதிகாரசபையினால் கொழும்புத் துறைமு விரிவுபடுத்தல் செயற்திட்டத்தின் முதலா கட்டத்தின் கீழான 450 மீற்றர் நிளமும் (Qu Length) 18 மீற்றர் அளவிலான ஆழமு (Water Depth) 800,000 அலகுகள் இயலளவும் கொண்ட கிழக்கு கொள்கலன் இறங்குதுறை ரூபா 11,168.47 மில்லியன் செலவிடப்பட்டு 2016 ஏப்ரல் மாதத்தில் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்து செயற்பாடகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## தேறிய கையாளல் இலாபம் /நட்டம்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய பிரதான துறைமுகங்கள் மூலம் கடந்த 05 ஆண்டுகளில் உழைத்த தேறிய இலாபம் / நட்டம் தொடர்பான விபரங்கள் பின்வரும் உரு 22 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 22 – தேறிய கையாளல் இலாபம் /நட்டம்
மூலம்- இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள்

திருகோணமலை துறைமுகம் கடந்த 04 ஆண்டுகளிலும் தொடர்ச்சியான நட்டத்தை ஈட்டியிருந்ததுடன், திரட்டிய நட்டம் ரூபா 4,129 மில்லியனாக இருந்தது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைககளின் முதலாம் கட்டத்திற்காக ரூபா 73,833.64 மில்லியன் மற்றும் இரண்டாம் கட்டத்திற்காக ரூபா 70,336.77 மில்லியன் என்ற வகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதிவரையிலும் ரூபா 144,170.41 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 129,848.19 மில்லியன் வெளிநாட்டுக் கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், அம்பாந்தோட்டை துறைமுகமானது திறக்கப்பட்ட திகதியிலிருந்து தொடர்ச்சியாக நட்டமடைந்து வந்திருந்ததுடன் அதன் சொத்துக்களும் விளைவற்றுக் காணப்பட்டன. மீளாய்வாண்டின் போது ரூபா 10,860 மில்லியன் நட்டம் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் இறுதி வரையில் அந்நியச் செலாவணி பரிமாற்று நட்டம் உள்ளடங்கலாக ஏற்பட்டிருந்த திரட்டிய நட்டம் ரூபா 46,699 மில்லியனாக இருந்தது.

### ஒலுவில் துறைமுகத்தினை பிரயோசனப்படுத்தாமை

டென்மார்க் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட யூரோ 42.2 மில்லியன் மற்றும் துறைமுக அதிகாரசபையால் ரூபா 531 மில்லியன் செலவிடப்பட்டு ஒலுவில் துறைமுகத்தின் நிர்மாண வேலைகள் 2013 செப்தம்பர் 01 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் துறைமுகத்திற்கு கப்பல்களின் வருகையோ அல்லது செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளலோ மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை. அவ்வாறே, இத்துறைமுகம் 9 மீற்றர்கள் அளவிலான ஆழம் குறைந்த துறைமுகமாக காணப்பட்டமையால் திறந்துவைக்கப்பட்ட பின்னர் எவ்விதக் கப்பல்களும் துறைமுகத்திற்கு வருகைதரவில்லை. அத்துடன், துறைமுகத்தினுள் மணல் நிறைந்து வருவதால் இந்த உள்ளக மணல் நிரம்புவதை தவிர்ப்பதற்காக யூரோ 1.8 மில்லியன் செலவு செய்து 100 மீற்றர் நீளத்துடன் கூடிய மூன்று நீர்த் தடுப்புக்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### அம்பாந்தோட்டை துறைமுகத்தினை நிர்மாணித்தலும் அபிவிருத்தி நடவடிக்கைகளும்

அம்பாந்தோட்டை மாகம்பர துறைமுக வளவினுள் ரூபா 2,652 மில்லியன் பெறுமதியான 2 கென்றி பாரந்தூக்கிகள் (Quay Side Gantry Crane) 2014 யூலை 30 ஆந் திகதி முதல் பொருத்தப்பட்டிருந்தன. மாகம்பர துறைமுக வளவினுள் பிரதானமாக வாகனக் கையாள்கை நடவடிக்கைகள் மாத்திரம் (RD-RO Operation) இடம்பெறுகின்றமையால் ஆண்டின் அதிகமான காலப்பகுதியில் கொள்கலன் கையாள்கை நடவடிக்கைகளிற்குத் தேவையான இந்த 02 பாரந்தூக்கிகளும் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே, 2 கென்றி பாரந்தூக்கிகளுடன் இணைத்து பயன்படுத்தப்படுகின்ற ரூபா 270 மில்லியன் பெறுமதியான இறப்பர் டயர்களுடன் கூடிய பரிமாற்று பாரந்தூக்கிகளும் (Rubber Tyre Transfer Crane) பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன.

அம்பாந்தோட்டை துறைமுக வளவினுள் துறைமுக அதிகாரசபையுடன் இணைந்து துணைக் கம்பனியினால் செயற்படுத்தப்படுகின்ற எண்ணைய் தாங்கி தொகுதியின் கையாள்கை நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்டவாறு இடம்பெறாமையால் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் எண்ணெய்த் தாங்கி தொகுதிக்காக முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,987.64 மில்லியன்

பெறுமதியான சொத்துக்கள் குறைப் பயன்பாட்டில் காணப்பட்டன. அவ்வாறே கப்பல்களிற்கான எண்ணெய் விற்பனை ஆரம்பிக்கப்பட்டது முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எண்ணெய் விற்பனை நடவடிக்கைகளால் ரூபா 2,738.9 மில்லியனான ஒட்டுமொத்த நட்டம் ஏற்பட்டிருந்தது.

### காலித் துறைமுக அபிவிருத்தி செயற்திட்டம் செயற்படுத்தப்படாமை

அரசாங்கத்தின் துரித செயற்திட்டமொன்றாக 2016 இல் இனங்காணப்பட்டிருந்த துறைமுக அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 2006 ஆம் ஆண்டில் கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதற்காக யுனஸ்கொ (UNESCO) அமைப்பின் அங்கிகாரமும் கிடைத்திருந்தது. கடன் காலத்தினை நீடிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும், அது காலநீடிப்புச் செய்யப்படாமையால் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்

கம்பனியினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சிலோன் பிரிஸ் மற்றும் சிலோன் பின்சஸ் என்ற இரண்டு கப்பல்களும் முறையே 2016 மார்ச் மற்றும் 2016 யூலை மாதங்களில் வர்த்தக போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அந்த இரண்டு கப்பல்கள் மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த படகுகளை பயன்படுத்தி லக்விஜய அனல் மின் நிலையத்திற்கு நலக்கரியினை போக்குவரத்துச் செய்தல் உள்ளிட்ட கப்பற்சரக்கு போக்குவரத்து நடவடிக்கைகள், கப்பல் சார்பற்ற பொதுப் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல் (Non Vessel Operating common Carrier), கப்பற் சரக்குகளை அகற்றுதலும் பிரதிநிதித்துவச் சேவைகளை வழங்குதலும், மற்றும் கப்பற் பயிற்சி உள்ளிட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

- கம்பனியினால் 2015/2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 74.31 மில்லியன் இலாபம் பெறப்பட்டிருந்ததுடன், அதற்கு ஒப்பாக 2014/2015 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்டிருந்த இலாபம் ரூபா 124.94 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015/2016 ஆம் கணக்காண்டிற்கான இலாபம் ரூபா 40.5 மில்லியனால் பின்னடைந்திருந்தது. கம்பனியின் நேரடியான செயற்பாட்டுச் செலவினம் 93 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமையே இப்பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.
- கம்பனியின் உழைப்பாற்றலை அதிகரித்து அந்நியச் செலாவணியினை சேமிக்கும் நோக்குடன் கிரயத்தின் அடிப்படையில் அமையப்பெற்ற கப்பற் கட்டத்துடன் நாட்டுக்குத் தேவையான நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் போக்குவரத்தினை கப்பற் கூட்டுத்தாபனத்திற்கு மாத்திரம் உரித்தாக்குவதற்காக அமைச்சரவையினால் 2014 ஆம் ஆண்டில் கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் மசகு எண்ணைய் போக்குவரத்து தொடர்பில் தொடர்புடைய நிறுவனங்களுடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடிந்திராமையால் 2015 சனவரி மாதத்தின் பின்னர் மசகு எண்ணைய் போக்குவரத்து கைவிடப்பட்டிருந்தது.
- பொறுப்பாளர் ஒருவரின்றி கொண்டுவரப்படுகின்ற பயணப் பொதிகளை (Unaccompanied Personal

Baggage) விடுவிப்பதற்காக கம்பனியினால் பண்டகசாலைகளை (Clearance Warehouse) பேணுவதற்கு 2016 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதற்குப் பொருத்தமான இடத்தினை கண்டுபிடித்தல் சிக்கல் காரணமாக அப்பணியினை நிறைவேற்ற முடியாது போயிருந்தது.

- கம்பனியினால் 2016 ஆம் ஆண்டில் மூன்றாம் தரப்பினருடன் இணைந்து சுய சக்தியில் இயங்கக்கூடிய இரண்டு இழுவைப் படகுகளை (Self Propelled Barges) திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறித்த நிறுவனத்துடன் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடிந்திராமை காரணமாக அப்பணியினை நிறைவேற்ற முடியாது போயிருந்தது.
- மூன்றாம் தரப்பினருடன் இணைந்து கப்பல்களிற்காக எரிபொருளை வழங்கும் மிதக்கும் களஞ்சிய வசதிகளை (Floating Bunger Storage) பேணுவதற்கு மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதிலேற்பட்ட தாமதம் காரணமாக அப்பணியினை நிறைவேற்ற முடியாது போயிருந்தது.
- தென்னிந்திய கடற் பிராந்தியத்தில் பயணிகள் போக்குவரத்து சேவைகளை நடாத்துவதற்கு (Passenger Ferry/Cruise Operations) திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் சுற்றுலா கவர்ந்திழுப்பு அற்ற போக்குவரத்தாக அது இருந்தமை காரணமாக அப்பணியினை நடைமுறைப்படுத்த முடியாது போயிருந்தது.
- மீளாய்வாண்டின் போது கம்பனியினால் கடலோர கப்பற் சேவைகளை நடாத்தவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தேவையான தரவுகள் இன்மை சாத்தியவள அறிக்கையினை பூரணப்படுத்தவதற்கு முடியாது போயிருந்தது.

## கப்பற்துறை அபிவிருத்தி நிதியத்தின் பரிபாலனம்

2012 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்படுகின்ற இந்த நிதியத்திற்கு மூன்று அரசாங்க நிறுவனங்களினால் ரூபா 422.64 மில்லியன் அறவிடப்பட வேண்டியிருந்தது. அந்த நிறுவனங்களால் மீதிகள் உறுதிப்படுத்தப்படாதிருந்த இந்த நிலுவைகள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு நிதியத்தினை மூடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## சர்வதேச கடல்சார் அமைப்பின் பிரகடனங்களின் பிரகாரம் உள்நாட்டில் சட்டங்களை இயற்றுதல்.

சர்வதேச கடல்சார் அமைப்பின் பிரகடனங்களின் பிரகாரம் உள்நாட்டில் சட்டங்களை இயற்றுவதற்கான சட்ட வரைவுகளை 2016 யூன் 30 ஆந் திகதியளவில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சர்வதேச கடல்சார் அமைப்பின் பிரகடனங்களிற்கமைவான சட்டங்கள், விதிகள் வழிகாட்டல்களை உரவாக்குவதற்குத் தேவையான சட்ட வரைவுகளை அங்கிகரித்துக்கொள்ளல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பேச்சுவாத்தை மட்டத்தில் மாத்திரமே காணப்பட்டது.

## கப்பல் மற்றும் விமான சேவைத் தகவல்கள் ஆராய்ச்சி (தனியார்) கம்பனி

கம்பனி 2012 ஆம் ஆண்டு முதல் நட்டமீட்டி வந்திருந்தது. அக்காலத்தில் நிலையான வைப்புக்களிலிருந்து கிடைத்த வட்டி வருமானத்தினைத் தவிர்த்து வேறெவ்வித செயற்பாட்டு வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், கம்பனியின் பங்கு மூலதனம் ரூபா 30 மில்லியனாகக் காணப்பட்டது. அந்த மூலதனத்தினை பகுதிபகுதியாக வசூலித்து நிலைய நிர்வாக செலவினத்திற்காக பயன்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தது.
மீளாய்வாண்டின் இறுதியளவில் கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 6.2 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதனை வெளியிடப்பட்ட மூலதனமாகிய ரூபா 30 மில்லியனுக்கு சீராக்கிய பின்னர் ரூபா 23.8 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

# பெருந்தெருக்கள்

உயர் போக்குவரத்துக் கட்டமைப்பொன்றை ஸ்தாபிப்பதன் மூலம் பிரயாண நேரம் மற்றும் கிரயத்தினை குறைத்தல் மற்றும் வீதிப் பாதுகாப்பு மற்றும் சௌகரியத்தினை அதிகரிப்பதனூடாக வீதியினைப் பயன்படுத்துவோரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சும் நியதிச்சட்ட நிறுவனமும் சேர்ந்து பின்வரும் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- நெடுஞ்சாலைகள் விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல்.
- அச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்.
- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்ததாக தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்புபடுத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

### அங்கீகாரமின்றி பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த 73 ஆலோசனையாளர்களை ரூபா 65,000 வீதம் மாதாந்த சம்பளத்தில் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற 12 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களிற்காக 2016 ஆம் ஆண்டில் வேலையிலீடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. இதற்காக அரசாங்கம் மாதமொன்றிற்கு ரூபா 4.74 மில்லியன் செலவினத்தை மேற்கொண்டிருந்தது.

### உள்நாட்டு வங்கி நிதிகள் மூலம் வீதிகளை அகலமாக்குதல் மற்றும் புனரமைத்தல்

1434 கிலோமீற்றர்கள் நீளமான 64 வீதிகள் புனரமைப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை ரூபா 143.51 பில்லியன் தொகையான கடனை உள்நாட்டு வங்கியிடமிருந்து பெற்றிருந்ததுடன் அதற்கான ஒப்பந்தம் உள்நாட்டு ஒப்பந்ததாரர்களால் நிறைவேற்றப்படுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. வீதிப் புனரமைப்பிற்காக ஒப்பந்ததாரரை தெரிவுசெய்யும் போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு வீதிக்கும் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி முன்மொழிவுத்திட்டங்களின் இறுதி ஒப்பந்த விலை நிர்ணயித்தல் விசேடமாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையின் கொள்வனவுக் குழுவினால் (SCAPC) மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதிகாரசபையினால் பெறப்பட்ட 28 வீதிகளை நிர்மாணிப்பதற்காக தேசிய சேமிப்பு வங்கி அங்கீகரித்த ரூபா 55,392.2 மில்லியன் கடனில் வீதிப் புனரமைப்பின் விலகலிலுள்ள ரூபா 28,000 மில்லியன் அதிகாரசபையால் அமைச்சு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு என்பவற்றிற்காக செலவிடப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் திறைசேரியிடமிருந்து ரூபா 28,000 மில்லியன் பெறப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 5,400 மில்லியனும், 2016 ஆம் ஆண்டின்

போது ரூபா 6,250 மில்லியனும் ஆக ரூபா 11,650 மில்லியன் கூட்டுமொத்தமான நிர்மாண நடவடிக்கைகளுக்குரிய விலைப்பட்டியல் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலதிக வேலைகளிற்காக செலவிடப்பட்ட நிதிகளை பெறுவதிலுள்ள தாமதம் காரணமாக நிர்மாணிப்பிற்காக முன்மொழியப்பட்ட வீதிகளின் நீளம், அகலம், கொங்கிறீட் வடிகாலமைப்பு முறைமைகள், மதகுகள், பக்கச் சுவர்கள் மற்றும் வீதிகளின் மேற்பரப்பின் நிர்மாணம் போன்ற செய்யப்பட வேண்டிய வேலைகளின் பகுதியை குறைத்து நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## வீதியை அகலமாக்குதல் மற்றும் புனரமைத்தல் தொடர்பான செயலாற்றல்

### பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராத செயற்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டின் போது பணிகள் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,778.44 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தையுடைய 114 செயற்திட்டங்களின் பணிகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 114 செயற்திட்டங்களில் 39 செயற்திட்டங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் உரித்தற்ற வீதிகளுக்குரிய செயற்திட்டமாக இருந்ததுடன் அதன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 3,206.28 மில்லியன் ஆக இருந்தது.

### 50 சதவீதத்திற்கு குறைவாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்கள்

பௌதீக செயலாற்றல் 50 சதவீதத்தை விடக் குறைந்த ரூபா 4,292.90 மில்லியன் ஒப்ந்தக் கிரயத்தையுடைய 87 செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் அதில் 49 செயற்திட்டங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தற்ற (Non RDA) வீதிகளிற்குரிய செயற்திட்டங்களாகும். அதன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,649.95 மில்லியனானதுடன் அதற்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 302.47 மில்லியனாக இருந்தது. 50 சதவீதத்தை விட குறைவான பௌதீக செயலாற்றலையுடைய 38 செயற்திட்டங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமானதுடன் அதன் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 2,642.95 மில்லியன் ஆனதுடன் ரூபா 300.21 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### ஆண்டினுள் வேலைகள் பூர்த்திசெய்யப்படாத செயற்திட்டங்கள்

2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் வேலை நிறைவேற்றப்படுவதற்கு முன்மொழியப்பட்ட ரூபா 16,771.37 மில்லியன் ஒப்பந்தக் கிரயத்தையுடைய 342 ஒப்பந்தங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்படாமல் இருந்ததுடன் அச் செயற்திட்டங்களின் தாமதங்கள் காரணமாக வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### திருகோணமலை வெளிச் சுற்றுவட்ட வீதியின் நிர்மாணம்

மட்டக்களப்பு – திருக்கொண்டையாறு – திருகோணமலை வீதி (A-15) மற்றும் அம்பேபுஸ்ஸ – குருணாகல் - திருகோணமலை (A-6) வீதி என்பன திருகோணமலை நகரத்திற்கு வெளியே இணைத்து நிர்மாணிக்கப்பட்ட வெளிச் சுற்றுவட்ட வீதிக்காக ஐக்கிய இராச்சிய உருக்குப் பாலங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3,495 மில்லியனக் செலவிட்டு 08 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 வரை 06 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த பொதிலும் இந்த பாலங்களை இணைக்கும் வீதிகளை நிர்மாணித்தல் வீதி அபிவிருத்தி

அதிகாரசபையால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### வீதிகளை அகலமாக்குதல், புனரமைத்தல் மற்றும் வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகள்

2016 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான வீதிகளை அகலமாக்குதல் மற்றும் புனரமைத்தல் நடவடிக்கைகளிற்காக ரூபா 8,065.0 மில்லியன் நிதியேற்பாடு வேண்டப்பட்டிருந்தது. அதில் ரூபா 4,637.6 மில்லியன் நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், போதியளவான நிதியேற்பாடுகள் காணப்படாததனால் 2016 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வேலைகளிற்காக செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களின் பெறுமதி 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,523.45 மில்லியனாக காணப்பட்டது.

### கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகுதல்

2008 ஆம் அண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டுவரை வீதிகளை அகலமாக்குதல் மற்றும் புனரமைப்பதற்காக ரூபா 56,771.69 மில்லியன் கூட்டுத்தொகையான 2773 ஒப்பந்தங்கள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளிற்கு முரணாக தனியார் கம்பனியொன்றிற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்தங்களின் பெறுமதி நெடுஞ்சாலை விலை வீதப் பட்டியலிலுள்ள (HSR) அடிப்படை விலை வீதங்களின் அடிப்படையில் மேந்தலைக் கிரயங்களை உள்ளடக்கி 28 சதவீத இலாப எல்லையுடன் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2008 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய வீதி அபிவிருத்தி அதிகாரசபை சுற்றறிக்கைக்கிணங்க அவ் ஒப்பந்தங்கள் தொடர்பாக உப ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு சாத்தியமற்றிருந்த போதிலும் அக் கம்பனி நேரடியாக ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருக்கவில்லை. பதிலாக விலைமனுக்கள் எதனையும் கோராமல் வெளி ஒப்பந்ததாரர்களிற்கு உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

வீதிப் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக 2004 ஆம் ஆண்டிலிருந்து 2017 மார்ச் மாதம் வரை கம்பனியிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 5,079.53 மில்லியன் பெறுமதியான இமுல்சன் (Emulsion) கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. நெடுஞ்சாலை விலை வீதப் பட்டியலில் (HSR) குறிப்பிடப்பட்ட கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு விலையை தீர்மானித்தல் கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகி இமுல்சன் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### கடன்பட்டோரிடமிருந்து நிதிகளை அறவிடுதல் மற்றும் முற்பணங்களை தீர்ப்பனவு செய்தல்

1987 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியிலிருந்து தொடர்ந்து காணப்பட்ட ரூபா 1,264.96 மில்லியன் கூட்டுமொத்தமான கடன்பட்டோர் மீதிகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை. நிர்மாண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நானாவித கொள்வனவுகளிற்காக ஒப்பந்ததாரர்கள் மற்றும் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் சபைகளிற்கு அதிகாரசபையால் வழங்கப்பட்ட ரூபா 5,174.78 மில்லியன் கூட்டுமொத்தமான முற்பணங்கள் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் தீர்ப்பனவு செய்யப்படாமல் தொடர்ந்து காணப்பட்ட போதிலும் அத்தகைய முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது அறவிடுவதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## ஒப்பந்ததாரர்களின் தாமதங்கள்

ஒப்பந்ததாரர்களிற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் நிர்மாணித்தல்களை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர்கள் தவறியமை காரணமாக அவர்களிடமிருந்து தாமதக் கால நட்டங்களின் பெறுமதி அறவிடப்பட வேண்டும். 2010 ஆம் ஆண்டிற்கு முன்னரும் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையும் 344 ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய தாமதக் கால நட்டங்களின் பெறுமதி (Liquidation Damages) ரூபா 116.02 மில்லியன் ஆகும். வீதி அபிவிருத்தி அதிகாரசபை அவற்றின் மீது பின்தொடர் நடவடிக்கை எதுவும் எடுத்திருக்காதமையால் மீளாய்வாண்டின் இறுதியிலும் உரிய ஒப்பந்ததாரர்களிடமிருந்து தாமத நட்டங்களை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

## வாடகை வருமானத்தை சேகரித்தல்

கண்டியில் சுரங்கப் பாதையிலுள்ள 02 கடைகளிற்கான 04 ஆண்டு காலப்பகுதிக்கு அறவிடப்படாதிருந்த ரூபா 699,463 வாடகை வருமானத்தையும் பொறளையில் சுரங்கப் பாதையிலுள்ள கடையொன்றிற்கான 09 ஆண்டு காலப்பகுதிக்கு அறவிடப்படாதிருந்த ரூபா 1.47 மில்லியன் வாடகை வருமானத்தையும் அறவிடுவதற்கு 2016 திசெம்பர் 31 வரையிலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## வாடிக்கையாளர் வைப்புக்களை தீர்ப்பனவு செய்தல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வெளித் தரப்பினர்கள் சார்பாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக 03 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையும் 05 ஆண்டுகளிற்கு மேலாகவும் வாடிக்கையாளர்களால் வழங்கப்பட்ட 148 வேலைகளிற்குரிய ரூபா 205.94 மில்லியன் கூட்டுமொத்தமான வாடிக்கையாளர் வைப்புக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையினை மேற்கொண்டு அவ் வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## பயன்படுத்தப்படாத உதிரிப் பாகங்கள் மற்றும் இருப்புக்கள்

2012 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாமல் களஞ்சியங்களில் காணப்படுகின்ற ரூபா 32.14 மில்லியன் பெறுமதியான மெதுவான அசைவிலுள்ள உதிரிப்பாக இருப்புக்களையும் 2008 ஆம் ஆண்டிலிருந்து களஞ்சியங்களிலுள்ள ரூபா 5.28 மில்லியன் பெறுமதியான பழுதடைந்த சீருடைகள், சப்பாத்துக்கள் மற்றும் சான்டில்கள், ரயர்கள் போன்ற இருப்புக்கள் மற்றும் அஸ்பால்ற் பொறி என்பவற்றையும் கைதவிர்ப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## உள்நாட்டு வரிகளை விடுவித்தல்

தேசிய வீதி வலையமைப்பின் மண்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டம் மற்றும் தெற்கு வீதி இணைப்புச் செயற்திட்டம் என்பவற்றின் ஆலோசனையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பில் உள்நாட்டு வரிகளை விடுவிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களால் ரூபா 23.39 மில்லியன் கூட்டுமொத்தமான பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரி என்பன செலுத்தப்பட்டிருந்தன.

## அறவிடப்படாத வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள்

தேசிய வீதி வலையமைப்பின் மண்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டத்தின் ஆலோசனையாளர்களிற்குச் செலுத்தப்பட்ட ரூபா 78.88 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ஆலோசனை சேவை உடன்படிக்கையின் பிரகாரம் 2016 யூன் 08 இல் முழுமையாக அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதிலிருந்து ரூபா 9.78 மில்லியன் தொகை வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் 2016 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## முரண் கட்டளைகளிற்கான அங்கீகாரம் பெறப்படாமை

மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் நிர்மாணத்திலிருந்து சீன அரசாங்கத்தின் முதலீட்டாளர் விலகியமையால் உள்நாட்டு ஒப்பந்ததாரர்களுடாக நிர்மாணிப்புக்களை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. வீதி நிர்மாணம் மீதான சாத்தியவள ஆய்வறிக்கை புதிதாக தயாரிக்கப்பட வேண்டியிருந்ததால் வெளிநாட்டு ஆலோசனை நிறுவனத்திற்கு ரூபா 161.09 மில்லியன் மேலதிக தொகை செலுத்த வேண்டியிருந்தது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சாத்தியவள ஆய்வறிக்கையின் மீளாய்வு தொடர்பாக ஏற்பட்ட மேலதிகப் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரால் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 செப்தெம்பர் 30 வரையிலும் குறிப்பிடப்பட்ட குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மேலதிகமாக அதிகரிக்கப்பட்ட பெறுமதி மீது செலுத்தப்பட்ட ரூபா 30 மில்லியன் தொகை தொடர்பாக அமைச்சின் செயலாளரால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## சிக்கனமற்ற செலவினங்கள்

ருவன்வெல்ல பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் மகநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1.5 மில்லியன் தொகை உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் செலவிடப்பட்டு நடைபாதை தொகுதிகளை இணைத்து 806.7 மீற்றர்கள் நீளமாக்கப்பட்டு வீதி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நடைபாதை தொகுதியை முழுமையாக அகற்றுவதற்கு மோட்டார் கிறேடர் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், அவற்றின் மீதான செலவினம் சிக்கனமற்றதாக காணப்பட்டது.

## விற்பனை செய்யப்பட்ட பெற்றோலிய அளவின் மீது விதிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுதல்

2005 ஒக்தோபர் 26 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2006 சனவரி 01 இலிருந்து செயற்படும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்படுகின்ற ஒவ்வொரு லீற்றர் டீசலிற்காக ஐம்பது சதங்களும் ஒவ்வொரு லீற்றர் பெற்றோலிற்காக ரூபா 1 உம் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு செலுத்தப்பட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் 2015 மற்றும் 2016 ஆம் அண்டுகள் தொடர்பாக ரூபா 4,486 மில்லியன் தொகையை அறவிடுவதற்கு அமைச்சால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## வேலை ஆரம்பிப்பு முற்பணங்களின் மேலதிகக் கொடுப்பனவு

ஒன்றிணைந்த வீதி முதலீட்டுச் செயற்திட்டத்தின் (i-Road) ஒப்பந்ததாரர்களிற்கு உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ரூபா 5,097 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு

முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. குறிப்பிடப்பட்ட முற்பணத்தை கணிப்பிட்டிருந்த போது ஏற்பாட்டுத் தொகையை கழிக்காமல் மொத்த ஒப்பந்தப் பெறுமதி தனித்தனியாக கணிப்பிடப்பட்டிருந்தமையால் ரூபா 974 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகக் கொடுப்பனவை அறவிடுவதற்காக அமைச்சினால் முறையாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பான சொத்துக்கள் அறிக்கை

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் பெருந்தொகையான இழப்பீடுகளை செலுத்தி 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை அதிக எண்ணிக்கையான காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட காணிகள் தொடர்பில் சரியான சொத்து அறிக்கையை (பதிவேடு) அமைச்சு பேணியிருக்கவில்லை. சந்தர்ப்பமொன்றாக, வெளிச் சுற்றுவட்ட நெடுஞ்சாலை கட்டம் II செயற்திட்டத்தின் கீழ் இழப்பீட்டை செலுத்துவதன் மூலம் சுவீகரிக்கப்பட்ட 1,205 லொட்களில் 614 லொட்களை மாத்திரம் சொந்தமாக்குவதற்கு 2...... இன் ......... ஆம் இலக்க காணி சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், அமைச்சின் தலையீடின்றி செயற்திட்டங்களால் மாத்திரம் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் விபரங்கள் தொடர்பான அறிக்கையை அமைச்சு பெற்றிருக்கவில்லை. பிணைமுறிகளுடாக கொள்வனவு செய்யப்பட்ட காணிகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### நெடுஞ்சாலை செயலகத்திற்கான கட்டிடத்தை நிர்மாணித்தல்

நெடுஞ்சாலை செயலகத்திற்கான எட்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதன் முதலாவது கட்டத்தில் 3 மாடிகளை நிர்மானிப்பதற்காக ரூபா 599.30 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தம் 2010 ஆகஸ்ட் 17 இல் தனியார் தரப்பிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 நவம்பர் 04 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 3 மாடிகளின் நிர்மாணத்தில் 90 சதவீதம் பூர்த்தி செய்யப்படட்டதன் மூலம் ஏனைய 5 மாடிகள் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் முதலாவது ஒப்பந்தத்தின் முரணாக கருதப்பட்டிருந்ததுடன் அதே ஒப்பந்ததாரரிற்கு ரூபா 568.14 மில்லியன் மேலதிகக் கிரயத்தில் அந்த ஒப்பந்தத்துடன் வழங்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 795.72 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேலும் 2 மாடிகளுடன் கட்டிடத்தை விஸ்தரிப்பதற்கு 2012 யூனில் செயற்திட்ட வழிகாட்டல் குழு தீர்மானித்திருந்தது. ஆகையால், பத்து மாடிக் கட்டிடத்தின் மொத்த எதிர்பார்க்கப்பட்ட கிரயம் ரூபா 2,506.54 மில்லியனை அடைந்திருந்தது. இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பினூடாக மேலதிகக் கிரயத்தை ஏற்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்ட அனைத்துக் கட்டங்கள் தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

- மின் ஜெனரேட்டர், நிலக்கீழ் எரிபொருள் தாங்கி, தகவல் முறைமை, சேவை முறைமை, மின் உயர்த்திகள் மற்றும் வளிப்பதனாக்கி முறைமை போன்ற பல துணைக்கருவிகளை ரூபா 495.39 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்ததாரரிடமிருந்து கொள்வனவு

செய்வதன் மூலம் கட்டிட நிர்மாணமானது பிரதான ஒப்பந்தத்தின் முரணாக கருதப்பட்டிருந்ததுடன் அத்தகைய பொருட்கள் ஆரம்ப அளவீட்டுப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்காததால் மேந்தலைக் கிரயங்கள், பொருத்துக்களின் கட்டணங்கள் மற்றும் இலாப எல்லை தொடர்பாக 35 சதவீதம் வரை மேலதிக கட்டணங்களை கோருவதற்கு ஒப்பந்ததாரரிற்கு வழிவகுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, வாகனத் தரிப்பிடத்திற்கான இடம் கருத்தில் கொள்ளப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் மேலதிக இடங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தது.

- தகவல் முறைமை, சேவை முறைமை, பொது முகவரி முறைமை, மின் பொருத்துக்கள், வளிப்பதனாக்கி முறைமை மற்றும் மின் உயர்த்திகள் போன்ற கட்டிட உபகரணங்கள் மற்றும் பொருத்துக்கள் ரூபா 259.42 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. களப் பரீட்சிப்பின் போது காணப்பட்ட குறைபாடுகள் குறிப்பிடப்பட்ட போதிலும் குறைபாடுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உபகரணம் மற்றும் பொருத்துக்கள் நீண்ட காலப்பகுதிக்கு மேலாக நிர்மாண தளத்தில் விளைவற்றிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் அவற்றின் உத்தரவாதக் காலம் முடிவடைந்திருந்தது.

### வீதிகளின் பூர்த்திசெய்யப்பட்ட பகுதிகளைக் கையேற்றல்

ஒப்பந்த உடன்படிக்கையின் 8.7 ஆம் நிபந்தனையின் பிரகாரம், தேசிய நெடுஞ்சாலை துறைச் செயற்திட்டத்தின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட மொறட்டுவ – பிலியந்தலை வீதி மற்றும் றத்மலானை – மிரிஹானா வீதி என்பவற்றின் பகுதிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஒப்பந்ததாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 66.11 மில்லியன் தொகையில் ரூபா 38.51 மில்லியன் தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

# திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி

கல்வி, தொழில்துறை மற்றும் தொழில்நுட்ப பயிற்சி மூலம் இளைஞர்களை பலப்படுத்தவதன் மூலம் உழியப் படையொனறை நிர்மாணிப்பதினூடாக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு தேவையான கொள்கைகள் மற்றும் விதிகளை உருவாக்குவது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேற்றை அடைந்து கொள்வதற்காக திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு, திணைக்களமொன்றுடன் 10 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்கள் மூலம் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

- கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் பின் தொடர் நடவடிக்கை எடுத்தலும் மதிப்பீடு செய்தலும்.
- பல்கலைக்கழக கல்விக்காக தகைமை பெறாத மாணவர்களுக்கு தொழில் கல்வி தேவைப்பாட்டினை விரிவாக்குவதற்கு கொள்கைகளைத் தயாரித்தலும் வசதிகளை வழங்குவதும்.
- தொழில் சந்தைக்கு பொருத்தமான ஊழியர் அணியொன்றை ஏற்படுத்துவதற்காக தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை நவீனமயப்படுத்தல்.
- பயிலுனர் பயிற்சி சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும்.
- தொழிசார் கல்விப் பயிற்சிக்காக உள்ள விருப்பத்தைமேம்படுத்துவதற்காக தந்திரோபாயங்களை உருவாக்குதலும் செயற்படுத்தலும்.

இதன் பிரகாரம் தரமான தொழில் பயிற்சியை வழங்குவதினூடாக உலகிற்கு தேவையான மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அமைச்சின் கீழ் உள்ள 07 நிறுவனங்களுடன் இணைந்து 397 நிலையங்கள் செயற்படுகின்றன. ஒரு அந் நிறுவனங்களின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## தொழில் பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக வசதிகளை உருவாக்குதல்

கைத்தொழில் மற்றும் பயிற்சி நுழைவினை அதிகரிப்பதற்காக ஆண்டினுள் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் புதிய பயிற்சி நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி சந்தர்ப்பங்கள் போதியளவில் அதிகரித்திருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டளவில் கல்விப் பொதுத்தராதர சாதாரண (சாதாரண தரம்) மற்றும் கல்வி பொதுத்தராதர (உயர்தரம்) சித்தியடையாத 210,695 மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்பை இழந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்குரிய பல்கலைக்கழக கல்லூரிகள் உட்பட 08 நிறுவனங்களால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தொழில் பயிற்சிக்காக 97,925 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதன் பிரகாரம் உயர்கல்வி வாய்ப்புக்களை இழந்த

மாணவர்களுக்கு ஒப்பாக தொழில் பயிற்சி சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால் உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில் பயிற்சி நிலையங்கள் மூலம் பாடநெறிகளை நடாத்திச் செல்வதற்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் போதியளவில் அதிகரிப்பதற்கு அமைச்சின் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

### தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துதல்

1990 இன் 20 ஆம் இலக்க மூண்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழில் தகைமையுடன் கூடிய (NVQ) பாடநெறிகளை நடாத்துவதற்காக பயிற்சி பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட வேண்டியிருந்தன. எவ்வாறாயினும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் கீழ் செயற்படும் நிறுவனங்கள் நடாத்தப்படும் 2148 பாடங்களுக்கு இடையே 526 பாடநெறிகள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆய்வுகூடங்களை பயன்படுத்தக் கூடிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை பயிற்சி பாடநெறிகளின் தரம் குறைவடைவதற்கு தாக்கமளித்திருந்தன. அதன் பிரகாரம் உரிய தரமில்லாமல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அங்கீகாரத்துடன் கூடிய தரமான பாடநெறிகளை நடாத்துவதினூடாக உலகலாவிய பலப்படுத்தப்பட்ட தொழிலில் ஈடுபடுத்த கூடிய ஆளணி படையொன்றை உருவாக்குவது அமைச்சின் நோக்கமாக இருந்த போதிலும் அது எதிர்பார்த்த அளவில் இடம் பெற்றிருக்கவில்லை.

### பயிற்சி பாடநெறிகளுக்காக மாணவர்களை பங்குபெறச் செய்தல்

பயிற்சி பாடநெறிகளுக்காக மாணவர்களின் பங்குபற்றுகை போதியளவில் அதிகரிப்பொன்று இடம் பெறாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் அமைச்சிற்குரிய பல்கலைக்கழக கல்லூரிகள் உட்பட 09 நிறுவனங்களில் 70 சதவீதத்திற்கும் குறைந்த மாணவர்களை அனுமதித்திருந்த 306 பாடநெறிகள் காணப்பட்டன. அவ்வாறே அமைச்சின் கீழ் உள்ள 05 நிறுவனங்கள் தொழிற்பயிற்சிக்காக தேவையான வசதிகள் மற்றும் தேசிய தொழில் தகைமைகளுடன் கூடிய 375 பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் வரவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. அதன் பிரகாரம் 5 மாணவர்கள் முதல் 10 மாணவர்கள் எண்ணிக்கையான அனுமதிக்கப்பட்ட 204 பாடநெறிகளும் 5 மாணவர்களுக்கு குறைந்த மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட 40 பாடநெறிகளும் காணப்பட்டதுடன், 131 பாடநெறிகளுக்கு மீளாய்வாண்டின் போது மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பயிற்சி நிலையங்களிலுள்ள வளங்கள் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.
எவ்வாறாயினும் கைத்தொழில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறை தொடர்பில் இளைஞர் சமூகத்தின் கவர்ச்சியை அதிகரிப்பதற்காக போதியளவு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படாமை பிரதானமாக காரணங்களாக இருந்தன. ஒவ்வொரு நிறுவனத்தினதும் பாடநெறிகள் தொடர்பாக சமூகத்தை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் தொழில்வழிகாட்டி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டுச்சென்ற மாணவர்களை

அறிவூட்டுதல் ஊடாக பாடநெறிகளுக்காக தொடர்புபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், இது தொடர்பில் அமைச்சின் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்பட்ட காரணத்தினால் பாடநெறிகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட போதியளவு பெறுபேறுகளை அடைவதற்கு முடியாதிருந்தது.

### பயிற்சி நிலையங்கள் நடுத்தரமாக அமைந்திருத்தல்

அமைச்சின் கீழ் உள்ள வெவ்வேறு நிறுவனங்களில் சமமான பாடநெறிகள் நடாத்தப்படும் பயிற்சி நிலையங்கள் கேந்திரமாக அமைந்துள்ளமை காரணமாக மாணவர்களுக்கு பாடநெறிகளை தெரிவுசெய்வதில் சிக்கல்கள் ஏற்படக்கூடியதாக இருப்பதுடன் பாடநெறிகளுக்காக மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கு அவை காரணங்களாக இருந்தது. பொருளாதார சமூக சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பமொன்றை வழங்குவதற்காக பயிற்சி நிலையங்கள் பிராந்திய ரீதியாக இருப்பதன் தேவைப்பாடு காணப்பட்டபோதிலும் இது தொடர்பாக அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

பாடநெறிகளுக்காக மாணவர்களை கவர்வதனை மேம்படுத்தும் நடைமுறையொன்றைத் தயாரித்தல், பாடநெறிகளின் சதவீதம், புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல், நிறுவனங்களின் பாடநெறிகளை கூட்டிணைத்தல், பிரதேசத்திற்கு பொருத்தமான கைத்தொழில்களுக்குரிய பாடநெறிகளை ஏற்படுத்துதல் பிராந்திய பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துதல், ஆய்வுகூட வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் மேற்குறித்த நிலைமையை குறைத்துக் கொள்வதற்கு அமைச்சின் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

### தொழில் பயிற்சி நிலையங்களின் நிர்மாணங்களை மேம்படுத்தும் செயற்திட்டம்

கொழும்பு தொழில் பயிற்சி நிலைய நிர்மாணம் மற்றும் கம்பஹா தொழில்நுட்ப கல்லூரியினை மேம்படுத்தும் செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2013 நவம்பர் 19 ஆந் திகதி செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டு 36 மாதங்களுக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. மதியுரை சேவைகள் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 09 மாத காலம் எடுத்திருந்தமையும் நிர்மாண ஒப்பந்தத்திற்காக கேள்வி கோரிய திகதி முதல் கேள்வி மதிப்பீடு செய்து ஒப்பந்தத்தை வழங்குவதற்காக 15 மாதங்களிற்கு அண்மித்த காலம் எடுத்திருந்தமையால் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. இதன் காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட 2016 நவம்பர் 19 ஆந் திகதி முதல் 2018 யூன் 12 ஆந் திகதி வரை செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை.

### பல்கலைக்கழக கல்லூரிகளின் செயற்பாடு

பல்கலைக்கழக வாய்ப்புக்கள் இழக்கும் தொழில்நுட்ப பாடங்களை பின்பற்றிய மாணவர்களுக்காக திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய தொழில் தகைமை 5 மற்றும் 6 உடன் கூடிய பாடநெறிகளை நடாத்தி நடுத்தர மட்டத்தில் தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்கும் நோக்கில் 20 பல்கலைக்கழக கல்லூரிகளை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

2016 ஆம் ஆண்டளவில் இரத்மலான, குளியாப்பிட்டிய, யாழ்ப்பாணம், மாத்தறை, அநுராதபுரம் மற்றும் படங்கல ஆகிய 06 பல்கலைக்கழக கல்லூரிகள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழக கல்லூரிகளின் பணிப்பாளர்கள் சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல், சேவையை வரிதாக்கிச் செல்லல் மற்றும் அவ்வப்போது கல்லூரிகளுக்கு இடையில் தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக தொடர்ச்சியான சேவையொன்று ஒரு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு முடியாததன் பேரில் கல்லூரிகளின் நிர்வாக நடவடிக்கைகள் உட்பட மாணவர்களின் கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினரின் ஒழுக்கத்தை பேணிச் செல்வதில் தாக்கமளித்திருந்தது. அவ்வாறே கல்லூரிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் அரசின் நிர்வாக ஒழுங்குகள் சுற்றறிக்கைகளுக்கும் நிதிக் நடைமுறைகளுக்கு இணங்கவும் மேற்கொள்வதற்காக முறையான வழிகாட்டலொன்றும் மேற்பார்வையொன்றும் தொழில்சார் பல்கலைக்கழகத்திலோ அல்லது அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. கல்லூரிகளின் கல்விசார் பதவியணியின் தொழில் தகைமை தன்மை மற்றும் தொழில் முறைகளை பாதுகாப்பதற்காக ஒழுக்க கோவையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக கல்லூரிகளின் ஒழுக்கத்தைப் பேணிச் செல்வதற்கு முடியாத வகையிலான நிலைமைகள் உருவான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே கல்லூரிகளில் நடாத்திச் செல்லப்படும் டிப்ளோமா பாடநெறிகளுக்காக மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழுவின் பதிவு செய்தல், தராதரப்படுத்த வேண்டிய போதிலும், குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்லூரியில் நடாத்தப்படும் 08 பாடநெறிகள் தவிர ஏனைய கல்லூரிகளில் பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பாடநெறிகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக கல்லூரிகளில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்குரிய விடயப்பரப்பு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட கல்வி காலப்பகுதி, மாணவர் அறிக்கைப் புத்தகங்கள், விரிவுரைக் குறிப்புகள், விரிவுரை செயலாற்றல் அறிக்கை மற்றும் தொடர்ச்சியான மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான நடைமுறை என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் கல்லூரிகளுக்காக தொடர்ச்சியான உள்ளகக் கணக்காய்வுக் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பல்கலைக்கழக கல்லூரிகளின் 49 பாடநெறிகளுக்காக மொத்த மாணவர் இயலளவு 1470 அளவில் காணப்பட்டது. எவ்வறாயினும் மீளாய்வாண்டில் 1380 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன். அதில் 245 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். 51 விரிவுரையாளர்கள் 22 காட்சியாளர்கள் 01 மதியுரையாளர் என கல்விசார் பதவியணியில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் பயிற்சி உபகரணங்கள் பயன்பாட்டிற்காக தேவையான ஆய்வுகூட வசதிகள் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. இதன் காரணமாக பல்கலைக்கழக கல்லூரிகளில் செயலாற்றல் முறையாக செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### பாடநெறிகளுக்காக தரச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்.

தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி துறையில் டிப்ளோமா தகைமைகளைப்

பெற்றுக்கொண்டவர்களுக்கு உயர் கல்லி வசதிகளை வழங்குவது வாழ்க்கை தொழில்சார் பல்கழைக்கழகத்தின் பிரதான நோக்கமொன்றாகும். அவ்வாறே தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்விக்காக பாடப்பரப்புக்களை அபிவிருத்தி செய்வதற்காக பங்களித்தல் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்காக ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமை பெற்றுள்ள மத்திய தர தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு கல்விப் பாடநெறிகளை வழங்குதல் தேசிய தொழில் தகைமைகளை உடைய அவர்களின் திறமைகளை மேம்படுத்தவதற்காக தேவையான பாடநெறிகளை சமர்ப்பித்தல், மற்றும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக விரிவாக்கல் பாடநெறிகளை சமர்ப்பித்தலும் தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்காக விரிவாக்கல் பாடநெறகளை முன்வைத்தலும் நோக்கங்களாக இருந்தன. அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உரிய பல்கலைக்கழகத்தை பேணிச் செல்லும் பொறியியலாளர் பட்டப்படிப்பு பாடநெறிக்காக இலங்கை பொறியியலாளர் நிறுவனத்திடமிருந்து தராதரத்தை பெற்றுக் கொள்வதற்கும் மொறட்டுவ பேராதெனிய மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் மூலம் பாடநெறிகளை தராதரத்தை பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக வெளிநாட்டில் ஏற்றுக் கொண்ட பல்கலைக்கழகங்களிலிருந்து தராதரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 07 ஆண்டு காலம் கடந்திருந்த போதிலும் எதிர்பார்த்த மட்டத்தில் பட்டப்பிடிப்பு பாடநெறிகளின் தரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு முடியாதிருந்தது.

## பட்டப்படிப்பு பாடநெறிகளை நடாத்துதல்.

வாழ்க்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து கல்வி மாணவர்களை அனுமதிப்பதை ஆரம்பித்திருந்ததுடன் 07 முழு நேர பாடநெறிகளும் 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்தன. 2012 ஆம் ஆண்டிலிருந்து முழு நேர பாடநெறிகளுக்காக புதிய பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டு வரையிலும் அதில் 05 பாடநெறிகளுக்காக மாத்திரம் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய பாடநெறிகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

2013 ஆம் ஆண்டு முதல் முழு நேர பாடநெறிகளுக்கு மேலதிகமாக வார இறுதி நாள் பாடநெறிகளுக்காகவும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் முழு நேர பாடநெறிகளுக்கு ஒப்பாக வார இறுதி நாள் பாடநெறிகளுக்காக மாணவர்களை ஆட்சேர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

தேசிய தொழில் தகைமை தகைமையுள்ள நபர்களின் நவீனத்துவத்தை மேம்படுத்துவதற்காக கல்வி பாடநெறிகளை வழங்கும் வாழ்க்கைசார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும், அந் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் போது பாடநெறிகளை உயர்ந்த இயலளவில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது பீடங்களில் 06 பாடநெறிகளுக்கு மாணவர் ஆட்சேர்ப்பு வெவ்வேறாக கருதும் குறைப்பயன்பாடு 23 சதவீதம் 100 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டது.

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சதவீதமானோர் பாடநெறியை விட்டுச் செல்லும் போக்கொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் 11

பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட 342 மாணவர்களில் 98 பேர் ஆண்டில் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். பாடநெறிகளை தனித்தனியாக கருதும் பொது சதவீதம் 12 முதல் 67 சதவீதம் வரையான அளவுகளில் காணப்பட்டன. அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகளை காண்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துதல்.

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய தகைமைகள் உள்ள நடுத்தர மட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்காக கல்விப் பாடநெறிகள் வழங்குவது பல்கலைக்கழகத்தின் அடிப்படை நோக்கமாக இருந்தது. எனினும் துறைசார் நிபுணத்துவ அபிவருத்தி செயற்திட்டத்தின் மூலம் நடாத்தப்படும் டிப்ளோமா பாடநெறி (National Diploma in Technical Teacher Education) தவிர ஏனைய டிப்ளோமா பாடநெறிகளுக்காக 2015 ஆம் ஆண்டின் போது மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழகத்தினால் 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) 05 ஆம் மட்டத்தில் 02 டிப்ளோமா பாடநெறிகளுக்காக தேசிய தொழில் தகைமைகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் பாடநெறிகளைப் பின்பற்றும் மாணவர்களுக்கு தரமான உயர்தர பாடநெறிகளை வழங்குவதற்கு பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

டிப்ளோமா பாடநெறிகள் சித்தியடைந்த மாணவர்கள் தொடர்பாக பரிசோதித்த போது 03 பாடநெறிகள் தவிர ஏனைய பாடநெறிகளின் சித்தியடைதல் சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 7 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையான வீச்சளவிலான அளவுடன் காணப்பட்டது.

### இரத்மலான பல்கலைக்கழக கல்லூரி

2014 இன் 1 ஆம் இலக்க தொழில் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரி வழிகாட்டியின் பிரகாரம் தேசிய தொழில் தகைமை 5,6,7 மட்டத்தில் பாடநெறிகள் மற்றும் அதற்கு சமமான மட்டங்களில் ஏனைய தொழில்நுட்ப பாடநெறிகளை வழங்குதல் பல்கலைக்கழக கல்லூரியின் நோக்கமாக குறிப்பிட்டிருந்தது. எவ்வாறாயினும் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் பாடநெறிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படும் 09 பாடநெறிகள் தொடர்பாக 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழில் தகைமை (NVQ) உடன் பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட வேண்டியிருந்ததுடன் பாடநெறி தராதரத்தை பெற்றுக் கொள்வதற்காக தேவையான ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுத்திக்கவில்லை. இதன் காரணமாக எதிர் பார்க்கப்பட்ட சர்வதேச தரத்துடன் கூடிய பாடநெறிகளை வழங்குவதற்கு கல்லூரிக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இயலுமை கிடைத்திருக்கவில்லை.

கல்லூரியின் ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் குறைந்தது 30 மாணவர்கள் வீதம் அனுமதிப்பதற்கு வசதிகள் காணப்பட்ட போதிலும், 06 பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின்

எண்ணிக்கை 16 முதல் 26 வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் கல்லூரியிடமுள்ள வளங்கள் ஆக்கபூர்வமாக உயர் இயலளவில் பாடநெறிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

கல்லூரியால் நடாத்தப்படுகின்ற 09 பாடநெறிகளில் 08 பாடநெறிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 219 மாணவர்களில் 30 மாணவர்கள் ஆண்டின் போது பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். அதன் பிரகாரம் ஒவ்வொரு பாடநெறியும் தனித்தனியாக கருதும் போது அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 7 சதவீதம் முதல் 33 சதவீதம் வரையான அளவில் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகளை காண்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கல்லூரியால் தயாரிக்கப்பட்டிருந்த கல்வி கால அட்டவணையின் பிரகாரம் அந்தந்த பிரிவிற்காக மாணவர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த காலப்பகுதிகள் உள்ளடக்கப்படாமல் இருந்ததுடன் 03 பருவகால பரீட்சைப் பெறேகளை வெளியிடுவதின் கால தாமதம் 06 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது.

### துறை ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் Skills Sector Development Programme

தொழில் பயிற்சி துறையில் போதியளவில் தரத்தினை அதிகரிப்பதற்காக தொழில் பயிற்சி துறை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஏழு ஆண்டு திட்டமொன்று அடிப்படையில் துறை நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 ஆம் ஆண்டிலிருந்து திறன் தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 125,891 மில்லியன் (961 அ.டொ. மில்லியன்) ஆக இருந்தது. இதற்காக வரவு செலவுத் திட்ட உதவி முறையின் கீழ் 100 பில்லியன் அ.டொலர் வீதம் சர்வதேச அபிவிருத்தி சங்கம் (IDA) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மூலமும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய 2 வது செயற்திட்டத்திற்கு ஜேர்மன் அரசிடமிருந்து 15.4 மில்லியன் டொலர்களும் கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கி மூலம் 26 மில்லியன் டொலர் வழங்குவதற்கு இணங்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 200 மில்லியன் டொலர் நிதிப் பற்றாக்குறையொன்று காணப்படுவதுடன் அந்நிதிப்பற்றாக்குறையை தீர்ப்பதற்காக நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு 2016 ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு பின்னால் வரும் ஆண்டுகளில் மேலும் 100 அபிவிருத்தி வங்கி இணக்கப்பாட்டை தெரிவித்துள்ளது. திரட்டிய நிதி தேவைப்பாட்டில் 54 சதவீதம் அல்லது 5198 மில்லியன் டொலர் இலங்கை அரசினால் செலவிடப்பட வேண்டியிருந்தது.

விஷேடமாக இனங்காணப்பட்ட துறைகளுக்குரிய 9 செலவின தொடர்பான குறிகாட்டி (Disbursement link Indicators) அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்துவதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 15,372 மில்லியன்கள் வெளிநாட்டுக் கடன் உட்பட மொத்தம் ரூபா 36,819 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்தும் மொத்தம் ரூபா 20,016 மில்லியன் மீள் நிரப்பட வேண்டியிருந்தது.

இந்நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படாமை

நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும் போது கடிதத்தின் பிரகாரம் அதன் மொத்தக் கிரயம் ரூபா 125,891 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அப்பணம் பயன்படுத்தப்பட்ட முறையை குறிப்பிடும் கூட்டிணைந்த திட்டமொன்று நிகழ்ச்சித்திட்டங்களாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தாமை

2016 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் நிதிஏற்பாடுகள் மூலம் ரூபா 3,020 செலவு செய்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 42 நிகழ்ச்சித்திட்டங்களில் ரூபா 1,279.6 மில்லியன் செலவு செய்து செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட 12 நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்த முடியாமல் போயிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட தொழில் பயிற்சி துறையில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வருடாந்த மதிப்பிட்டிலிருந்து ரூபா 11,100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 7,939 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டிருலிருந்து 72 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில் பயிற்சி துறையில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் (Public Private Parnership) அமைச்சினால் 2015 ஆம் ஆண்டளவில் 05 பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதில் 03 கல்லூரிகளே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதன் பிரதான நோக்கம் தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி துறையின் தரம் மற்றும் ஏற்றுக்கொள்ளலை அதிகரிப்பது ஆக இருந்த போதிலும் அமைச்சின் காணப்படும் பயிற்சி நிலையங்களில் 2016 ஆம் அண்டில் நடாத்தப்பட்ட 442 பயிற்சி பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### பல்கலைக்கழக கல்லூரிகள் தொடர்பான செயலாற்றல்

கல்வி பொது தராதர (உயர்தர) தொழில்நுட்ப விடயப்பரப்பினை பின்பற்றி தேசிய பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறமுடியாத மாணவர்களுக்காக துறை நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20 பல்கலைக்கழக கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தன. அவ்வாறே 2015 ஆம் ஆண்டு இறுதியளவில் அதில் 14 கல்லூரிகளில் பயிற்சி பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தன. எனினும் 2017 யூன் மாதம் இறுதியளவிலும் 06 பயிற்சி பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

2016 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களிடமிருந்து பாடநெறிக் கட்டணங்களை அறவிடாமல் இருப்பதற்கு அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக

பாடநெறிகளுக்காக விண்ணப்பித்த எண்ணிக்கை கருத்திற் கொள்ளக்கூடியளவில் அதிகரித்திருந்தன. அவ்வாறே அனுமதிக்கக்கூடிய 1470 மாணவர்களில் 1380 அனுமதிக்கப்பட்டிருந்தனர். எனினும் ஆண்டினுள் பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 245 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட கல்வி பதவியணியினரில் 168 இல் 74 அதாவது 44 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்தது.

இரத்மலான மற்றும் படங்கல பல்கலைக்கழக கல்லூரிகளுக்காக 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட முறையே ரூபா 2.83 மில்லியன் மற்றும் ரூபா 98.69 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் உரிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படாததன் காரணமாக விளைவற்றுக் காணப்பட்டன. இரத்மலான பயிற்சி நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7.31 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் ஆய்வுகூடங்களுக்கு தேவையான மின்சாரம் நீர் மற்றும் ஆய்வுகூட இடவசதிகள் போதியளவில் இல்லாமை காரணமாக மேலும் விளைவற்றுக் காணப்பட்டன.

## இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை சட்டத்தின் கீழ் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. உலகளாவிய ரீதியில் தொழில் சந்தையில் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இலங்கையில் ஊக்கமான மற்றும் பயிற்சிகளை வழங்கும் முன்னனியான நிறுவனமொன்றாக வருவது இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நோக்கமாகும். மேலும் தொழில் பயிற்சி மற்றும் கல்வித் துறைகளில் நவீன முறைகள் தொழில்நுட்பத்தின் மூலம் ஆட்களிடமுள்ள நிபுணத்துவத்தை அபிவிருத்தி செய்து உலகளாவிய பயிற்சி உழைப்பு கேள்வியை பூர்த்தி செய்யும் வகையில் வசதிகளை ஏற்படுத்துவது அதிகாரசபையின் பிரதான செயற்பாடாகும்.

தொழில்பயிற்சி திட்டமிடல் மற்றும் பயிற்சி வழங்கல்

2016 ஆம் ஆண்டின் போது 18 துறைகளுக்குரிய 133 பயிற்சி பாடநெறிகளின் கீழ் 1952 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 31537 பயிலுனர்கள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் அதில் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதில் 10 சதவீதமான அதிகாரிபொன்று தென்பட்டது. முன்னைய ஆண்டுகளில் மதியுரையாளர்கள் இல்லாமையால் மூடப்பட்ட பாடநெறிகள் 2016 ஆம் அண்டின் போது மீண்டும் ஆரம்பித்தல் மற்றும் இலக்கிடப்பட்ட 13 நிகழ்ச்சித் திட்டங்களில் அதிகரித்தமை அதற்கான காரணங்களாக இருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டில் பயிலுனர்களைச் சேர்க்கும் இலக்கு 35175 இலிருந்து 35,460 வரை 0.81 சதவீதத்தினாலும் அனுமதித்தல் 28,745 இலிருந்து 31,537 வரை 9.7 ஆலும் அதிகரித்திருந்தது.

## தொழிலில் ஈடுபடுத்தல்

தொழிலில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டங்களின் கீழ் மீளாய்வாண்டின் பொது இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டிருந்த வெளிநாட்டு தொழில், உள்நாட்டு தொழில் மற்றும் சுய வேலைவாய்ப்பு என 6,052 பயிலுனர்கள் 2016 ஆம் ஆண்டின் போது தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதில் உள்நாட்டு தொழிலில் ஈடுபடுத்துதல் 84 சதவீதமாக

இருந்தது. தொழில் ஈடுபடுத்துவதில் சதவீதமாக வெளிநாட்டு தொழில் ஈடுபடுத்தல் 3 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. இதனால் தொழில் பயிற்சி பெறும் பயிலுனர்கள் வெளிநாட்டு தொழிலுக்காக ஈடுபாடு காட்டுவது குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

தொழிலில் ஈடுபடுத்துதல் துறையின் பிரகாரம் முன்னுரிமை ஒழுங்கில் உயர்ந்த இடத்தை மின்சாரம், இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு துறைக்கு உரித்தாக இருந்ததுடன் அத்துறையின் மொத்த தொழில் ஈடுபடுத்துதல் அளவு 978 ஆக இருந்தன. அத்துறைக்காக ஆட்சேர்ப்பு சதவீதம் 29 ஆக இருந்தது. எனினும் அத்துறைக்காக 2016 ஆம் ஆண்டின் போது பயிலுனர் ஆட்சேர்ப்பு முன்னுரிமையின் பிரகாரம் இடத்தை பெற்றிருந்தது.

### விளைவற்ற சொத்துக்கள்

திறன்தொழில் துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் அஹுங்கம, குச்சவெளி மற்றும் காரைநகர் ஹோட்டல் பாடசாலைகளுக்காக செயற்திட்ட நிதியத்தின் கீழ் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 19,087,138 தொகையான பயிற்சி உபகரணங்கள் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாததன் காரணமாக 2017 யூலை 31 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டன.

### நிர்மாணிப்புக்கள்

திறன்தொழில் துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் ரூபா 279.52 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதி கீழ் குச்சவெளியில் நிர்மாணிக்கப்படும் ஹொட்டல் பாடசாலை மற்றும் அஹுங்கமவில் நிர்மாணிக்கப்படும் மாதிரி ஹொட்டெல்களின் நிர்மாண நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 மார்ச் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்ட நிதியத்தைப் பயன்படுத்தி அஹுங்கமவிலும் பொத்துவிலும் நிர்மாணிக்கப்படும் மாதிரி ஹொட்டெல்களின் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் நோக்கில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. தற்போது அந்த ஹோட்டெல்கள் தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் மாதிரி ஹொட்டெல்களாக பேணப்பட்டு அந்த போதிலும் அதற்குத் தேவையான விஷேட அறிவு, மனித வளங்கள் மற்றும் வியாபார அறிவு என்பன அதிகாரசபையிடம் காணப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

## தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

### பயிலுனர்களை அனுமதித்தல்

2016 ஆம் ஆண்டின் போது நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டு அனைத்து பயிற்சி நடவடிக்கைகளுக்காக 27,625 பயிலுனர்களை அனுமதிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. அதிகாரசபையின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 31,947 பயிலுனர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 40 சதவீத அதிகரிப்பாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இந்த அனுமதிகளில் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண விஷேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்ட 9,250 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளமையால்

சாதாரண அனுமதி 22,697 ஆக மாத்திரம் இருந்தன.

மீளாய்வாண்டின் தேசிய நிறுவனங்களுக்காக இலக்கிடப்பட்ட பயிலுனர்கள் 1,535 ஆக இருந்த போதிலும் 1,373 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பயிலுனர்களின் 10 சதவீதம் அதாவது 139 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். 2016 ஆம் ஆண்டின் போது மொறட்டுவ கைத்தொழில் பொறியியலாளர் பயிற்சி நிறுவனத்தின் பிடர்(விஷேட) மற்றும் புத்தக கட்டுநர் போன்ற பாடநெறிகளுக்காக (NVQ) பயிலுனர்கள் அனுமதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில 11 பாடநெறிக்காக பயிலுனர்கள் அனுமதியின் சராசரி 57 சதவீதமாக இருந்தது.

## முறையற்ற ஆட்சேர்ப்பு

கட்டுநாயக்க பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா பாடநெறியின் 2016 குழுவிற்காக பயிலுனர்கள் ஆட்சேர்ப்பதற்காக எழுத்து மூலப் பரீட்சைக்காக பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்த வெட்டுப்புள்ளி எண்ணிக்கை பெற்றுக்கொள்ளாத 29 பயிலுனர்கள் நிர்வாக அதிகாரியினால் முறையற்ற விதத்தில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## நிர்மாணம் மற்றும் புனர் நிர்மாண நடவடிக்கைகள்

கொழும்பு மாவட்ட அலுவலகத்தினுள் முழுமையான கூட்டமண்டபமொன்றை அமைப்பதற்காக ரூபா 2 மில்லியன் துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கூட்டமண்டபம் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

ஆண்டினுள் 03 பயிற்சி நிலையங்களை 03 மதிப்பீட்டு நிலையங்களாக அபிவிருத்தி செய்வதற்காக தேவையான பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 9.5 மில்லியன் செயல்நடவடிக்கை திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

.

# அனர்த்த முகாமைத்துவம்

இயற்கையாகவும் மனித செயற்பாடுகளின் காரணமாகவும் ஏற்படுகின்ற அனர்த்தங்களிளை குறைப்பதற்கும் தடுப்பதற்கும் வினைத்திறனான நடவடிக்கைகள் எடுப்பதனால் வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்கல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் நோக்கமாகும். அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 நியதிச்சபைகள் மற்றும் நிறுவனங்களால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியுள்ளளது.

- அனர்த்த முகாமைத்துவத்தின் விடயத்துடன் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல்.
- இயற்கையானதும் மனித செயற்பாடுகளினுடையதுமான அனர்த்தத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் ஒருஙகிணைப்பு மற்றும் முகாமைத்துவம்.
- தேசிய கொள்கைகளை அடிப்படையாக கொண்ட தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் மற்றும் தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டத்தை உருவாக்குதல்.
- அனர்த்த குறைப்பு, பதிலளிப்பு மற்றும் மீண்டெழுதல போன்றவற்றிற்கான வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.
- சுற்றாடல் பிரச்சனைகளுடனான தொழில்நுட்ப ரீதியான நியமங்களுடன் வீடமைப்பு நிர்மாணத்தை ஊக்குவித்தல்.
- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைகளிற்காக முறைமையான தொழில்நுட்பத்தினூடாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை ஊக்குவித்தல்.
- வளிமண்டலவியல் அளவைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்
- இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளல் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய உரிய துறைகளுக்கு விழிப்புணர்வூட்டல்.
- இயற்கை மற்றும் மனித செயற்பாடுகளினால் ஏற்படுகின்ற அனர்த்தங்களின் போது செயற்பாடுகளிலிருந்து மீள்வதற்காக நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்
- சர்வதேச மனித மீட்சி சேவை நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்

மேற்குறிப்பிட்ட நிறுவனங்களால் செயற்பாடுகளை நிறைவேற்றுகையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

## அனர்த்தங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

மீளாய்வாண்டின் போது 602 இயற்கை அனர்த்தங்களையும் 84 இயற்கையல்லாத அனர்த்தங்களையும் சேர்த்து 686 மொத்த எண்ணிக்கையான அனர்த்தங்களாகவிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அனர்த்தங்களின் எண்ணிக்கை முறையே 571 இயற்கை அனர்த்தங்களையும் 70 இயற்கையல்லாத அனர்த்தங்களையும் உள்ளடக்கி மொத்தமாக 641 அனர்த்தங்களை உள்ளடக்கியுள்ளது.

அதற்கிணங்க, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இயற்கை மற்றும் இயற்கையல்லாத அனர்த்தங்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில், 2014 ஆம் ஆண்டிற்கு பின்னரான அதிகூடிய இயற்கை அனர்த்தங்களின் எண்ணிக்கை முன்னைய 4 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏற்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, இயற்கையல்லாத அனர்த்தங்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு போக்கு அவதானிக்கப்பட்டுள்ளன. நிலைமை கீழே உரு 23 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 23 இடம்பெற்ற அனர்த்தங்களின் எண்ணிக்கை
மூலம்- அனர்த்த முகாமைத்துவ நிலையம்




உரு 24 அனர்த்தங்களால் இறந்த மற்றும் தவறியவர்களின் எண்ணிக்கை
மூலம்- அனர்த்த முகாமைத்துவ நிலையம்

முன்னைய 5 ஆண்டுகளின் போது அனர்த்தங்களால் மரணமடைந்த மற்றும் தவறிய நபர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்திருந்தது. விபரங்கள் உரு 24 இல் காட்டப்படடுள்ளன, முன்னைய 5 ஆண்டுகளின் போது அனர்த்தங்கள், மரணமடைந்த மற்றும தவறிய நபர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்த போதிலும் முழுமையாக சேதமடைந்த வீடுகள் மற்றும் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. விபரங்கள் உரு 25 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 25 முன்னைய ஐந்து ஆண்டுகளின் போது அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகள்

## அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான உதவிக்கொடுப்பனவு

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக அனர்த்தத்திற்கு பிந்திய உதவிக்காக கொடுப்பனவு செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று 2016 ஏப்ரலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க,இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிக் கொடுப்பனவானது தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

## இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் மீதான சட்ட அமைப்பு

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் 2005 இன் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதில் அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட சட்ட தேவைப்பாடுகளை விரிவாக்குவதற்கான அவசியத்தன்மை அதிகரித்திருந்ததுடன் அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டததிற்காக 2013 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு அங்கீகரித்தலிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பானது நியதிச்சட்ட ஏற்பாடுகளின் மீது ஸ்தாபிக்கப்பட்டிருக்காத நிறுவனமொன்றாக இருப்பதுடன் அதனால், நிலச்சரிவுகளின் இடர்கள் மீதான மதிப்பீட்டு அறிக்கைகள் தொடர்பில் சட்ட ஏற்பொன்று இருக்கவில்லை. அதனால், ஆராய்ச்சி அமைப்பானது எச்சரிக்கைகளை கருத்திற்கொள்ளாமல் நிர்மாணங்களை மேற்கொள்ளும் தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

## இலங்கையிலுள்ள சாத்தியமான அனர்த்தங்களை இனங்காணல்

இலங்கையில் 21 சாத்தியமான அனர்த்தங்கள் 2005 இன் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் கீழ் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அணுக்கள் மற்றும் ஏனைய குண்டு வெடிப்பு, பொது தடைகள், கிளர்ச்சிகள், ஏனையவை போன்றவற்றால் ஏற்பட்டவை அனர்த்தங்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்ட அனர்த்த இடரை குறைக்கும் நடவடிக்கைகள் வெள்ளங்கள், நிலச்சரிவுகள், மற்றும் வறட்சி போன்ற சில அனர்த்தங்களுக்கு வரையறுக்கப்படடிருந்தது.

## அனர்த்தங்களை குறைப்பதிலுள்ள திட்டங்கள்

சட்டரீதியான அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் அனர்த்தங்களை குறைப்பது தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய 03 ஆண்டுகளிற்கான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்டங்களில் அனர்த்தங்களை குறைப்பது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய ஆண்டுகளில் ஏற்பட்ட அனர்த்தங்கள் அட்டவணை 31 இல் தரப்பட்டுள்ளன.

| மாவட்டம் | 2014 | | | 2015 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | ஏற்பட்ட அனர்த்தங்களின் எண்ணிக்கை |
| | | ரூபா மில்லியன் | | | ரூபா மில்லியன் | | | ரூபா மில்லியன் | |
| யாழ்ப்பாணம் | - | - | 08 | 01 | 30.00 | 20 | 01 | 19.94 | 13 |
| வவுனியா | 02 | 10.20 | 10 | 04 | 10.00 | 16 | 02 | 21.20 | 06 |
| கிளிநொச்சி | 01 | 23.79 | 04 | 06 | 4.30 | 07 | 01 | 7.89 | 01 |
| முல்லைத்தீவு | 01 | 3.06 | 09 | 03 | 28.90 | 16 | 03 | 23.50 | 08 |
| மன்னார் | 01 | 26.50 | 04 | - | - | 03 | - | - | 01 |
| அனுராதபுரம் | 02 | 1.40 | 07 | 03 | 12.45 | 03 | 05 | 27.80 | 04 |
| பொலனறுவை | 05 | 7.11 | 02 | 01 | 18.83 | 03 | | 33.37 | 06 |
| திருகோணமலை | 02 | 34.00 | 08 | 04 | 7.00 | 05 | 02 | 5.27 | 07 |
| மட்டக்களப்பு | 01 | 4.00 | 03 | 01 | 4.41 | 09 | 02 | 5.63 | 01 |
| அம்பாறை | 02 | 5.00 | 02 | 02 | 6.68 | 06 | - | - | 01 |
| அம்பாந்தோட்டை | 51 | 163.45 | 08 | 40 | 150.34 | 19 | - | - | 05 |
| மாத்தறை | 01 | 6.17 | 10 | 01 | 685.00 | 18 | - | - | 14 |
| காலி | 01 | 1.00 | 07 | 04 | 6.127 | 26 | 01 | 9.50 | 20 |
| களுத்துறை | 02 | 7.15 | 06 | 01 | 10.00 | 10 | 01 | 24.00 | 04 |
| கொழும்பு | 02 | 10.30 | 16 | - | - | 39 | 01 | 8.00 | 12 |
| கம்பஹா | 02 | 10.50 | 08 | - | - | 04 | 01 | 483.20 | 11 |
| புத்தளம் | 06 | 13.55 | 08 | 04 | 23.08 | 10 | 04 | 32.27 | 08 |
| குருநாகலை | 01 | 59.58 | 13 | 02 | 76.80 | 16 | 49 | 153.23 | 04 |
| மாத்தளை | 01 | 1.33 | 07 | 02 | 23.76 | 04 | 01 | 5.20 | 03 |
| கண்டி | 03 | 11.52 | 22 | 02 | 50.00 | 16 | 03 | 7.36 | 06 |
| நுவரெலியா | 05 | 4.38 | 56 | 04 | 7.82 | 53 | 04 | 12.77 | 22 |
| கேகாலை | 02 | 7.43 | 36 | 04 | 14.38 | 75 | 01 | 16.32 | 44 |
| இரத்தினபுரி | 05 | 4.77 | 09 | 07 | 9.22 | 07 | 49 | 63.79 | 16 |
| பதுளை | 03 | 10.91 | 10 | 01 | 925.96 | 03 | 03 | 10.14 | 01 |
| மொனராகலை | 05 | 6.04 | 13 | 02 | 4.40 | 12 | 02 | 7.00 | 03 |

அட்டவணை 31 அனர்த்தங்களை குறைப்பது தொடர்பான செயற்திட்டங்கள் மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள்
மூலம் - அனர்த்த தரவுகள்

மேற்குறிப்பிட்ட குறிப்பின் பிரகாரம், அனர்த்தங்களை குறைப்பது தொடர்பான நடவடிக்கைகளுக்காக 2014 மற்றும் 2015 ஆம் அண்டுகளில் அம்பாந்தோடடை மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் குருநாகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு முன்னரிமை கொடுக்கப்பட்டிருந்தது. அதிகளவு இயற்கை அனர்த்தங்கள் அதிகளவில் இடம்பெற்ற நுவரெலியா,கேகாலை மற்றும் காலி மாவட்டங்களில் போதுமானளவு செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தீர்மானித்திருக்கவில்லை.

## அனர்த்த இடரை இனங்காண்பதற்காக பயன்படுத்திய உபகரணங்கள்

இலங்கையில் அனர்த்த இடரை இனங்காண்பதற்குமாக காலநிலையை எதிர்நோக்குவதற்குமாக பயன்படுத்திய உபகரண முறைமை வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. வேறுபட்ட வெளிநாட்டு முகவர்களால்

வழங்கப்பட்ட உபகரணங்கள் இலங்கை காலநிலை நிலமைக்கேற்ப இருக்காமையால் உரிய உபகரணங்களின் முறைமை வினைத்திறனாக பயன்படுத்த முடிந்திருக் காததுடன் முறைமையான திட்டங்களில் லாமல் உபகரணம் பெறப்பட்டிருந்ததுடன் பழமைவாய்ந்த மற்றும் காலாவாதியான உபகரணம் முன்கணிப்பிற்காக பயன்படுத்தியிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளன.

- ரூபா 320 மில்லியன் பெறுமதியான டொய்லர் நாடா முறைமை 2006 ஆம் ஆண்டில் பாதீட்டு முன்மொழிவுகளிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ரூபா 400 மில்லியன் ஏற்பாடுகபைப் பயன்படுத்தி உலக வளிமண்டலவியல் அமைப்புக்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆணடில் தெனியாய பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. வேறுபட்ட தொழில்நுட்ப குறைபாடுகளால் 2016 திசெம்பர் 31 இலும் இது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது ஐக்கிய அமெரிக்காவில் 2010 ஆம் ஆண்டில் உற்பத்தி நிறுவனத்தினால் றாடர் முறைமையை செயற்படுத்துவதற்கான முதல் பரீட்சிப்பானது வெற்றிகரமாகவில்லாதிருந்ததுடன் இரண்டாவது பரீட்சையில் வெற்றிகரமான செயற்பாடு இருந்த போதிலும், இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் அலுவலர்கள் பரீட்சையில் பங்குபற்றியிருக்கவில்லை. றாடர் முறைமையானது இறக்குமதியிலிருந்து நீண்ட காலத்திற்காக விளைவற்றிருந்ததுடன் அதனால் முறைமையில் செயற்பாடற்ற நிலைமையை விளைவித்திருந்தது. றாடர் முறைமைக்குச் சொந்தமான ரூபா 8114 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள், வெளித்தரப்பினர்களால் 2016 ஜனவரி 29 இல் திருடப்பட்டிருந்தது என அறிக்கையிடப்பட்டிருந்தது. முறைமையானது 2017 ஏப்ரல் 21 இல் துண்டிக்கப்பட்டிருந்தது எனவும் ஐக்கிய அமெரிக்காவின் உற்பத்தி நிறுவனத்திற்கு இது திருப்பப்பட்டிருந்ததும் எனவும் அவதானிக்கப்பட்டது.

- உலகத்திலிருந்து அனர்த்தங்களை இல்லாமல் செய்வது தொடர்பானதும் அதற்காக உலக வளிமண்டலவியல் அமைப்பின் நிபந்தனையை பின்பற்றுவது தொடர்பான வளிமண்டலவியல் தகவல்களை பெறுவதற்காக பாதரச உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக வளிமண்டலவியல் திணைக்களமானது தானியங்கி வளிமண்டலவியல் உபகரணமுறைமையை ஸ்தாபிப்பதற்கு 2008 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியின் போது நடவடிக்கையை எடுத்திருந்தது. அதற்காக ஜப்பான் சர்வதேச கூட்டிணைப்பு முகவராண்மையால் பெறப்பட்ட ரூபா 570 மில்லியன் தொகையான மானியங்களை பயன்படுத்தி 37 வளிமண்டலவியல் நிலையங்களில் தானியங்கி வளிமண்டலவியல் உபகரணம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த முறைமையால் தகவல்களை பெறுதல் செய்மதிகள் மற்றும் தரவு பதவிகளின் ஊடாக மேற்கொள்ளளப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், உரிய செய்மதிகள் 2016 ஆம் ஆண்டில் உரிய செய்மதி புவியின் சுற்றுவட்டத்திலிருந்து வெளியிலிருந்ததுடன் தகவலானது திட்டமிட்டவாறு பெறப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, மட்டக்களப்பு, பொத்துவில், மலிம்பட, தவலாம,

கொழும்பு மற்றும் சிறிகந்துர பிரதேசங்களிலுள்ள நிலையங்பகளிலிருந்து தரவு பதிவுகளினூடாக பெறவேண்டிய தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. இந்த முறைமையானது செயற்பாடற்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் தொடர்ச்சியாக உட்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த முறைமையின் பராமரிப்பிற்காக 2011 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது ரூபா 73.12 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

- எழுபத்தி ஏழு சுனாமி எச்சரிக்கை கோபுரங்கள் இலங்கையை சுற்றி நிறுவப்பட்டிருந்ததுடன் அவைகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அத்தகைய கோபுரங்களிலிருந்து எடுக்கப்பட்ட சமிக்ஞைகள் தொலைத்தொடர்பு செய்மதி தொழில்நுட்பத்துடனும் இலத்திரனியல் வலைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் 2017 மார்ச் இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் பிரகாரம், வேறுபட்ட தொழில் நுட்ப பிரச்சனைகளால் செய்மதிகளினூடாக இந்த கோபுரங்களளிலிருந்து 2017 ஜனவரியில் தகவல்கள் பெறப்பட்டிருக்காததுடன் அந்த தொழில்நுட்பத்தினூடாக 2017 மார்ச் இல் 30இல் இந்தக் கோபுரங்களிலிருந்து மாத்திரம் தகவல்கள் பெறப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, 2017 மார்ச் 31 இலும் 30 கோபுரங்களுக்கு மேலதிகமானவற்றிலிருந்து இலத்திரனியல் வலைகளினூளடாக தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

### மனித வளங்கள் முகாமைத்துவம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிற்கான நிபுணர்களின்மையானது அத்தகைய நிறுவனங்களின் நோக்கங்களை அடைவதில் பெரிய தடையாகவிருந்தது. விஞ்ஞானிகளின் 104 பதவிகள் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பிற்காக அங்கீகரிக்கப்படிருந்த போதிலும் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 77 மாத்திரமேயாகும். ஒதுக்கீட்டு அடிப்படையில் இந்த சேவைக்கு முப்பத்தைந்து ஏனைய விஞ்ஞானிகள் சேவைகளில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். எனினும், கடமையினூடாக அவர்களுடைய பொறுப்பு பிரச்சனையாகவிருந்து. அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 344 ஆகவிருந்த போதிலும் அதில் 2016 திசெம்பர் 31 இல் 114 பதவிகள் வெற்றிடமாகவிருந்தது

# விளையாட்டு அலுவல்கள்

தேகாரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக தேசிய பிரதிபலிப்பினை சர்வதேச ரீதியாக மேம்படுத்தும் நோக்கில் உள்நாட்டு மற்றும் சர்வதேச விளையாட்டுகளுக்காக கொள்கைகளை தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல் விளையாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களாக இருந்தன. அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக விளையாட்டு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 4 நியதிச்சட்ட சபைகள் நிதியமொன்று 61 விளையாட்டு சங்கங்கள் என்பவற்றால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- விளையாட்டுகளுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் கண்காணித்தல்.
- விளையாட்டு அலுவல்களை ஊக்குவிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்தலும், விளையாட்டுத்துறைக்கு தெவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும்.
- விளையாட்டுக் கல்வியை மேம்படுத்தல்.
- இலங்கையின் பிரதிபலிப்பினை சர்வதேச ரீதியாக கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக விளையாட்டைப் பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் புதிய தந்திரோபாயங்களை உருவாக்குதலும் நிகழச்சித்திட்டங்களையும் செயற்படுத்துதல்.
- பொது மக்கள் சரீர சுகத்துடன் வாழக்கூடிய விதத்தில் திட்டமிடுவதற்கு தேவையான வசதிகளை மேம்படுத்தல் மற்றும் கூட்டிணைத்தல்.
- நிறுவனங்களைக் கண்காணித்தல்.

விளையாட்டு அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் செயற்படுகின்ற நிறுவனங்களால் மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### விளையாட்டு அபிவிருத்திக்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 11 விளையாட்டரங்குகளையும் 10 விளையாட்டு தொகுதிகளுக்காகவும் ரூபா 1,348 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி விளையாட்டு தொகுதிகள், கிராமிய விளையாட்டரங்குகள், 54 பாடசாலை விளையாட்டரங்கு அபிவிருத்தி செயற்திட்டங்கள், மாவட்ட பயிற்சி நிலையமொன்று, 01 தேசிய விளையாட்டு நூதனசாலை மற்றும் 18 மாகாண மற்றும் மாவட்ட விளையாட்டு தொகுதிகள் உள்ளடக்கப்பட்ட 74 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,136.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதில் 54 செயல்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 20 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 50 கிராமிய விளையாட்டரங்குகளை நிர்மாணித்தல்.

09 மாகாணங்கள் மேவுகை செய்யப்படும் வகையில் 50 கிராமிய விளையாட்டரங்குகளை நிர்மாணிப்பதினூடாக கிராமிய விளையாட்டரங்குகளுக்காக விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் ரூபா 320 மில்லியன் 2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 59.2 மில்லியன் மேலதிக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், இதன் கீழ் 263 கிராமிய விளையாட்டரங்குகளின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 363.09 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதில் 242 விளையாட்டரங்குகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், எஞ்சிய விளையாட்டரங்குகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## விளையாட்டு சக்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

கிராமிய விளையாட்டு வீரர்களின் விளையாட்டு திறன்களை மேம்படுத்துவதற்காக விளையாட்டு வீரர்களை தெரிவு செய்து, விளையாட்டில் ஈடுபடுத்துவது விளையாட்டு சக்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களாக இருந்தன. வருடாந்தம் விளையாட்டு வீரர்களை இனங்காணலும் இடம் பெற வேண்டும். விளையாட்டு சக்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 60 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 25.7 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 34.3 ஆன நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த எஞ்சிய நிதியேற்பாடுகள் வேறு செயற்திட்டமொன்றுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்காக பிள்ளைகளுக்கு செலுத்த வேண்டிய போசனைப்படி மற்றும் பயிற்சியாளர் படிகளாக மொத்தம் ரூபா 11 மில்லியன் தொகை 2017 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது இந்நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்காக அதற்கு முன்னைய ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட பிள்ளைகள் நிகழ்ச்சிகளில் தரித்து இருக்காமையால் 2016 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் முதல் செப்தெம்பர் வரை நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்த முடியாதிருந்தது.

## சர்வதேச விளையாட்டுக்களில் வெற்றி பெறுவதற்காக பாடசாலைகளில் மாணவர்களுக்கு பயிற்சியளித்தல்.

அமைச்சரவை தீர்மானத்தின் பேரில் 2016 ஆம் ஆண்டின் போது நாட்டின் சகல பாடசாலைகளிலும் 7 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 75,000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அம்மாணவர்களின் விளையாட்டு திறன்களை விஞ்ஞான ரீதியாக இனங்கண்டு 2024 மற்றும் 2028 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்படும் ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றி பெறுவதற்காக விளையாட்டு திறன்களின் நுழைவினை உறுதிப்படுத்தும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.
அச்செயற்திட்டத்திற்காக வருடாந்தம் ரூபா 400 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 174 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 119.9 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. பயிற்சிகளுக்காக மாணவர்களைத் தெரிவுசெய்தல் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

2016 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக தேவையான விளையாட்டுப் பொருட்கள்

மற்றும் உபகரணங்கள் கொள்வனவு அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் 2 வகையான விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் 14.49 மில்லியன் சாதகமற்ற கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் அரசின் கொள்வனவு வழிகாட்டலுக்கு முரணாக பெறுமதி சேர் வரி அடிப்படையிலான கொடுப்பனவு அறிக்கை தொடர்பாக முறைப்படி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் செயற்திட்டத்திற்காக விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது ஒரு கேள்விதாரருக்கு பெறுமதி சேர் வரி அடிப்படையிலான கொடுப்பனவாக ரூபா 1.45 மில்லியன் போலியாக செலுத்தப்பட்டிருந்தது.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு விழாக்களுக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டு மூலம் ரூபா 250 மில்லியனான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 15 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ஒரு தேசிய விளையாட்டு விழாவிற்கும் 28 சர்வதேச விளையாட்டு விழாக்களுக்கும் விளையாட்டு வீர வீராங்கனைகள் சமூகமளித்திருந்தனர். அப்போட்களுக்கு சமூகமளித்த தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல பதக்கங்கள் முறையே ---- 827 மற்றும் 371 பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. இதற்காக ரூபா 263.25 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## சுகததாச விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை

உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக தடகள விளையாட்டு விழாவை நடாத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய தேசிய சுகததாச விளையாட்டுத் தொகுதி, விளையாட்டு அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனமொன்றாக 1999.09.01 ஆந் திகதி முதல் சுகததாச விளையாட்டுத் தொகுதி அதிகாரசபை என்ற பெயரில் செயற்படுத்தப்பட்டிருந்தது. இவ்வதிகாரசபையின் 2016 ஆம் ஆண்டில் மொத்த செலவினம் ரூபா 333.57 மில்லியனாக இருந்ததுடன் உழைக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 99.62 மில்லியன் ஆக இருந்தது.

இவ்விளையாட்டு தொகுதியின் ஓட்டப் பாதை 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 126 மில்லியன் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்நிர்மாணங்களின் தரம் தேவையான தரத்தில் இல்லாமையால் அதனை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 350,159 கூட்டுத்தொகை செலவு செய்து கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், அக்கேள்வி வழங்கலுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு காரணமாக ஓட்டப்பாதை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை வழங்க முடியாதிருந்தது. அதனால் 05 வருடங்களில் ஓட்டப்பாதையை பயன்படுத்த முடியாமல் இருந்தது. அதன் மூலம் விளையாட்டை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்த இவ்விளையாட்டரங்கில் சர்வதேச போட்டிகளை நடாத்தும் வாய்ப்பு இழக்கப்பட்டமை விளையாட்டுத்துறையின் பின்னடைவிற்கு காரணங்களாக இருந்தது.

சுகததாச விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்காக ரூபா 9.107 மில்லியன் செலவு செய்து இரண்டு LED டிஜிடல் பெயர்ப்பலகைகளைப் பொருத்துவதற்காக ஒப்பந்தக் காரர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதில் ஒரு பெயர்

பலகை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு எஞ்சிய பணம் வேறு கட்டிட நிர்மாணமொன்றிற்காக செலவிடப்பட்டிருந்தது.

இவ்விளையாட்டு தொகுதியில் அமைந்துள்ள விளையாட்டு ஹொட்டெல் நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 63 மில்லியன் மதிப்பீடொன்று மதியுரை கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மதியுரைக் கம்பனி அங்கீகாரமின்றி 03 ஆம் கட்டத்தின் கீழ் அதனை நவீனமயப்படுத்துவதற்கு விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளரால் (பொறியியல் சேவைகள்) மதிப்பீடு வகைப்படுத்தப்பட்ட காரணத்தினால் ஒன்றுடன் தொடர்புபட்ட நவீனமயப்படுத்தல் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமையால் விளையாட்டு ஹொட்டெல் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் நவீனமயப்படுத்தப்படவில்லை.

### ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை

2013 இன் 33 ஆம் இலக்க விளையாட்டுக்களின் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் ஊக்குவிப்பு பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிராக விதிகளை உருவாக்கி அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரித்து அமுலாக்கப்பட வேண்டியிருந்தது. நிறுவகம் உருவாக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அத்தடைசெய்யப்பட்ட ஊக்குவிப்பு மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கு எதிராக செயற்படுவதற்குரிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

அமுலாக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் இல்லாமல் 2014 ஆம் ஆண்டின் போது தடைசெய்யப்பட்ட ஊக்குவிப்பு பொருள் பயன்பாடு தொடர்பாகஉலக தடைசெய்யப்பட்ட ஊக்குவிப்பு விதிமுறைகளுக்கு முரணாக விளையாட்டு வீரரர்களுக்கு வழங்கப்பட்ட 08 மாத போட்டித் தடையின் பேரில் உலக ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை சர்வதேச தீர்ப்பாளர் நீதிமன்றத்தினால் வழக்கு தொடரப்பட்டதன் பின்னர் 5305 பிரான்க் அதாவது ரூபா 795,750 தீர்ப்பாளர் கட்டணங்களாக செலுத்துமாறு நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

### தேசிய விளையாட்டுக்கள் நிதியம்

2016 ஆம் ஆண்டின் போது தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 58.4 மில்லியனாக இருந்துடன், மொத்த செலவினம் ரூபா 119.3 மில்லியனாக இருந்தது. தெற்காசிய விளையாட்டு விழாவில் வெற்றிபெற்ற வீரர்களை பாராட்டுவதற்கான விளம்பரத்திற்காக அதில் ரூபா 95.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதற்காக நிதியை வழங்குவதற்காக நிதியத்தின் நிலையான வைப்புக்களிலிருந்து ரூபா 63.3 மில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்நிலையான வைப்புக்கள் முதிர்வடைவதற்கு முன்னர் மீளப்பெற்றுக்கொண்டமையால் நிதியத்திற்கு ரூபா 440,228 ஆன நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

### விளையாட்டு சங்கங்கள் ஒழுங்குபடுத்துதல்

விளையாட்டு சங்கங்களை ஒழுங்குபடுத்துவது விளையாட்டு பணிப்பாளரின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடொன்றாக இருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 61 சங்கங்களில் 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய முறையே 19, 18 மற்றும் 29 விளையாட்டுச்

சங்கங்கள் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு 2 ஆண்டு காலம் தாமதம் ஏற்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டின் போது 47 விளையாட்டுச் சங்கங்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 226.97 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. விளையாட்டுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தும் போது அவற்றின் கணக்கு நடவடிக்கைகளை முறையாக தயாரிப்பதற்கான கைநூல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை கிரிக்கட் நிறுவனம்

இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழுவிற்காக இரண்டு வருடங்களுக்காக நியமிக்கப்பட்டிருந்த தலைவர் உட்பட 09 நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரால் ஆயட்கால பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டு உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றை தாபிப்பதற்காக இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினால் ரூபா 10.24 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அப்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இலட்சிணையை பயன்படுத்தி இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்கு மாத்திரம் வருமானம் உழைக்க முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக அந்த இலட்சிணையைப் பயன்படுத்தி மேற்குறித்த கம்பனிக்கு வருமானத்தை உழைப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது.

காலி மாநகர சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5.59 மில்லியன் தொகை 2016 ஆம் ஆண்டளவிலும் காணப்பட்டதுடன் அவ்வாறு பெறவேண்டிய பணம் கிரிக்கட் போட்டி நுழைவுச்சீட்டுகளின் பேரில் களியாட்ட வரி செலுத்தும் போது ஈடுசெய்யப்பட்டிருந்தது. மீண்டும் ஒருமுறை அப்பணம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அதனை மீள செலுத்தாமல் செலுத்த வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கிரிக்கட் நிறுவனத்திற்குச் சொந்தமான சூரியவெவ ராஜபக்ஷ விளையாட்டரங்கை நிர்மாணிப்பதற்குரித்தாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,187.28 மில்லியன் பொறுப்புக்கள் மற்றும் அதற்குரிய சொத்துக்கள் என்பவற்றை நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக இரண்டு நிறுவனங்களின் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இரண்டு நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளவதற்காக ரூபா 2.40 மில்லியன் தொழில்சார் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு கொடுப்பனவு செய்ய முடியாமையால் உரிய செலவினம் பயனற்றதாக இருந்தது.

## இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனம்

இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனத்தின் 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 168.33 மில்லியனாகவும் மொத்த செலவினம் ரூபா 164.32 மில்லியனாக இருந்தமையால் ரூபா 3.99 மில்லியன் மிகையாக காணப்பட்டது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 8.5 சதவீத வீழ்ச்சியாக இருந்தது.

முன்னைய ஆண்டின் போது சங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீடு தொடர்பான குறைபாடுகள் காரணமாக கணக்காய்வு அறிக்கையின் அபிப்பராயம் பாதாகமாக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்கு மீதிகளுக்கு

இடையே காணப்பட்ட இணக்கமின்மைகள் காரணமாக அறிக்கையின் அபிப்பராயம் பாதாகமாக்கப்பட்டிருந்தது

## இலங்கை ரக்பி சம்மேளனம்

இலங்கை ரக்பி சம்மேளனத்தின் 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் மொத்த பெறுவனவுகள் ரூபா 157.61 மில்லியனாகவும் மொத்த செலவினம் ரூபா 151.91 மில்லியனாக இருந்தமையால் ரூபா 5.69 மில்லியன் மிகையாக காணப்பட்டது. அது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 11 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்தது.

விளையாட்டு சங்கங்களின் தெரிவுகளுக்காக விண்ணப்பம் செய்வது தொடர்பாக விளையாட்டு சங்கங்களின் கட்டளைகளில் உள்ளடங்கியுள்ள பிரிவொன்றை நீக்கும் நோக்கத்தில் ரக்பி சங்க உத்தியோகத்தரொருவரால் சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 1.93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## சர்வதேச வெற்றிகள்

விளையாட்டின் மூலம் இலங்கையின் பிரதிரூபத்தை சர்வதேச ரீதியாக கட்டியெழுப்புவதற்கு புதிய தந்திரோபாயங்களைத் தயாரித்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதன் கீழ் 2016 ஆம் ஆண்டின் போது இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 28 சர்வதேச போட்டிகளில் பெற்றுக்கொண்ட பதக்கங்களின் எண்ணிக்கை 371 ஆக இருந்தன. அது முறையே 35 தங்கம், 122 வெள்ளி மற்றும் 164 வெண்கலப் பதக்கங்களை கொண்டிருந்த போதிலும் பங்குபற்றிய விளையாட்டு வீர வீராங்கனைகளின் எண்ணிக்கை தொடர்பான தரவுகள் திணைக்களத்தில் பதிவேடுகளுக்கு உள்ளடக்கப்ப்டிருக்கவில்லை.

# பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள்

மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்திலிருந்து விடுபட்ட சமூகமொன்றை உருவாக்குவது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறாகும். இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டியிருந்தன.

- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் தொடர்பிலான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தயாரித்தல். பின்தொடர் நடவடிக்கைகளும் மதிப்பீடு செய்தலும்.
- அரச அலுவல்களின் போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுல் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும், செயற்படுத்தலும்.
- குறிப்பாக மோதல்களினாலும் வறுமையினாலும் பாதிக்கப்பட்ட பெண்களை மையமாகக் கொண்ட குடும்பங்களின் உடல், உள ரீதியாக வலுப்படுத்த தேவையான நடவடிக்கை எடுத்தலும் ஆண், பெண் இருதரப்புக்கிடையே சமநிலையையும் நியாயத்தையும் ஏற்படுத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை எடுத்தலும்.
- மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தவிர்ப்பதற்காக சட்டங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்தலும் செயற்படுத்தலும்.
- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்களுக்கு உரிய அபிவிருத்தி அபிலாஷைகளை நிறைவுற்றுதல்
- மகளிர் மற்றும் சிறுவர் பட்டயங்களை நடைமுறைப்படுத்தல்.
- உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமான பிள்ளையொன்றை உருவாக்கும் நோக்கில் மன்பள்ளி பருவ பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை தயாரித்தல்.
- பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளை தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இயைபானவாறு உயர்ந்த மட்டத்தில் வைத்துப் பேணுவதுடன், அத்தகைய சிறுவர்களுக்கான சமவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்.
- செவண சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

மேற்குறித்த செயற்பாடுகளை மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சும் அதன் கீழுள்ள திணைக்களமொன்றும் 03 நியதிச் சட்ட சபைகளும் / நிறுவனங்களும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## அமைச்சினால் தயாரிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகளைச் செயற்படுத்துதுல்

சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நள்ளாளுகை பயன்பாடுகளை உறுதிப்படுத்தும் முகமாக தொடர்புடைய தேவைகளை வழங்குதல் மற்றும் கொள்கைகள் தயாரித்தல், அமுல் நடத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தல் அமைச்சின் செயற்பணியாக இருந்த போதிலும், அதற்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வலுப்படுத்தி அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை.

## நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்துதல்

கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்குப் பொதி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 7,500 மில்லியனும் பால் குவளை நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 128 மில்லியனும் ஆக நலன்புரி விடயங்களுக்காக ரூபா 7,628 மில்லியன் இற்கான நிதி ஏற்பாடுகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்நிதியேற்பாடுகளைப் பயன்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

## கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்குப் பொதி வழங்கும் நிகழ்ச்சித் திட்டம்

கர்ப்பிணித் தாய்மாருக் போசாக்குப் பொதி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 7,500 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றில் ரூபா 5,746 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. போசாக்கு பொதி வழங்கும் நடவடிக்கை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,354 மில்லியன் என பிரதேச செயலகங்களால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன அமைச்சினால் அறிக்கையிடப்பட்டிருந்த செலவினம் மற்றும் பிரதேச செயலகங்களால் உறுதிப்படுத்தப்பட்ட செலவினத்திற்கிடையே ரூபா 1,392 மில்லியன் வேறுபாடு கண்டறியப்பட்டன. அவ்வேறுபாடுகளை இனங்கண்டு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## பால் குவளை நிகழ்ச்சித் திட்டம்

2 வயதிற்கும் 5 வயது வரையான பிள்ளைகளின் போசணை மட்டத்தினை அதிகரிக்கும் நோக்கில் பிரதேச செயலக மட்டத்தில் முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்காக பால் குவளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. போசாக்குள்ள வளர்ந்தோர் உணவு வகைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் எனவும் 100 மில்லிலீற்றர் பாலில் 87.5 மில்லிகிராம் நீர் உள்ளடங்கியுள்ளதாகவும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட போசணை மட்டம் அதிகரிக்கவில்லையென தாய்மார் மற்றும் சிறுவர் சுகாதார பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எனினும் அந்த ஆலோசனையைக் கருத்திற் கொள்ளாமல் பால் குவளை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்நடத்துவதற்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 127.9 மில்லியன் நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 106.43 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## சுழற்சி கடன் நிகழ்ச்சித் திட்டம்

இலங்கை மகளிர் பணியகத்தின் மூலம் 1990 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ரூபா 93 மில்லியன் வழங்கப்பட்டு 304 பிரதேச செயலக வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்குரிய 274 பிரிவுகளின்

விபரங்கள் மாத்திரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அத்தகவல்களின் பிரகாரம் அப்பிரிவுகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 85.46 மில்லியன் கூட்டுத்தொகையில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 51 மில்லியன் மீதி வங்கிக் கணக்குககளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் சுழற்சி கடன் நிகழ்ச்சித்திட்டமொன்றாக செயற்படுத்தப்படவில்லை.

## மகளிர் பாதுகாப்பு நிலையங்கள்.

பெண்களுக்கு எதிராக உள்ளக வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2015 அறிக்கையின் பிரகாரம் இலங்கை பெண்களில் 60 சதவீதத்திற்கு மேற்பட்டோர் வீட்டிலேயே இம்சைக்குட்படுத்தப்படுகின்றனர். அந்நிலைமையை தவிர்ப்பதற்கு வீட்டுக்குள்ளே இம்சைகளை தவிர்ப்பதற்கான சட்டத்தை சட்டமாக்கி பாதிக்கப்பட்டோரை இனங்கண்டு அவர்களை பாதுகாப்பினை வழங்குவதற்கும் வியாபாரத்திற்கு உட்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் நோக்காகக் கொண்டு மகளிர் பாதுகாப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டின் போதும் 2017 இன் முதல் 03 மாதங்களிலும் 1,251 பெண்கள் வன்முறைக்குட்படுத்தல் மற்றும் சிறவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றதாக பத்திரிகைகளில் அறிக்கையிடப்பட்டிருந்தன, இரத்மலான பாதுகாப்பு நிலையத்தின் மீளாய்வாண்டில் பாதிக்கப்பட்ட 15 பேருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் மீரிகம மகளிர் பாதுகாப்பு நிலையத்திற்கு பாதிக்கப்பட்டவர்கள் எவரும் சமூகமளித்திருக்கவில்லை.

2015 ஆம் ஆண்டில் இரத்தினபுரி மாவட்டத்தில் ரூபா 10.57 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட மகளிர் காப்பு நிலையம் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் உரிய செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. கண்டி மகளிர் பாதுகாப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 10 மில்லியன் 2015 யூலை 17 ஆந் திகதி பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டதற்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலையங்களின் குறைபாடுகள் மற்றும் செயன் முன்னேற்றம் என்பவற்றை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட உபகுழு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூடப்படாதிருந்நதுடன் அமைச்சினால் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தவிர்ப்பதற்கான செயற்திட்டம்

இச்செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 66 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதுடன் மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தவிர்க்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக அதில் ரூபா 37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. குழந்தை தாய்மார்கள், சைபர் குற்றங்கள் மற்றும் பெண்கள் வன்முறை தொடர்பாக தோட்டப்புற பெண்களுக்கு இடம்பெறும் இம்சைகளுக்காக மூன்று ஆய்வுகளை இரண்டு தனியார் துறை நிறுவனங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 3.65 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2016 மே மாதத்தில் அவ்வறிக்கை கிடைத்திருந்த போதிலும் அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பரிந்துறைகளை செயற்படுத்துவது தொடர்பான தகவல் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## அரசியல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.

முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 6 மில்லியனும் மீளாய்வாண்டின் போது ரூபா 0.67 மில்லியன் செலவு செய்து அரசியல் துறையில் மகளிர் பிரதிநித்துவத்தை அதிகரிக்கும் ஆறு மாத பாடநெறிகள் 5 இனை நடாத்தி 141 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தன. அவர்களில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்

அநாதைகள், கைவிடப்பட்ட அநாதரவான பிள்ளைகளும் சட்டப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கும் பிள்ளைகளையும் விசேடமாகக் கொண்டு தேசிய கொள்கைகளையும் சர்வதேச நியமங்களுக்கு இணங்க சகல சிறுவர்களினதும் உரிமைகளை பாதுகாக்கும் அவர்களுக்கு சமமான சந்தர்ப்பங்கள ஏற்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் கொள்கைகளை உருவாக்குதல், செயற்படுத்தல், பின்தொடர் நடவடிக்கைளை எடுத்தல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடொன்றாகும். மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் மேற்கொள்ப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

## சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் இல்லங்களைக் கண்காணித்தல்

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தினால் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் தேசிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் சட்டங்களை இயற்றுதல் செயற்பாடு மீளாய்வாண்டின் போதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் 200 சிறுவர் இல்லங்களை கண்காணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்நிதியேற்பாடுகளைக் கொண்டு 165 சிறுவர் இல்லங்கள் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தன. எனினும் கண்காணிப்பு அறிக்கை மற்றும் அவதானிப்பு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் கண்காணிப்பிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

திணைக்களத்திற்கு கிடைத்திருந்த சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை 11,054 ஆக இருந்ததுடன் அதில் 7,031 இற்காக முழுமையான தீர்வுகளும், 2,419 முறைப்பாடுகளுக்காக குறுங்கால தீர்வுகளும் வழங்கப்பட்டிருந்தன. 53 முறைப்பாடுகள் தொடர்பாக தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 1,551 முறைப்பாடுகள் ஏனைய நிறுவனங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன் அம்முறைப்பாடுகளுக்காக தீர்வுகள் வழங்கல் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## சிறுவர் அபிவிருத்தி நிதியம்

சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினை தாபித்ததன் பிரதான நோக்கம் யுத்த சூழ்நிலைகள் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களினால் தமது பெற்றோர்களையோ பாதுகாவலர்களையோ இழந்த பிள்ளைகள் உட்பட பொருளாதார பிரச்சினைகளால் தமது கல்வி

நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் தேர்ச்சிகள் மற்றும் ஏனைய திறமைகள் என்பவற்றை அதிகரித்துக் கொள்ள முடியாத இலங்கை குழந்தைகளுக்கு நிதி உதவிகள் வழங்குவதாகும். 2014 சனவரி 24 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கொடி விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதியினைப் பயன்படுத்தி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆக்கபூர்வமான வகையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் கொடி விற்பனை மூலமும் நிலையான வைப்புக்கள் முதலீட்டின் மூலமும் பெற்றுக்கொண்ட ரூபா 1.99 மில்லியன் உட்பட ஆண்டில் கிடைத்த ரூபா 4.74 மில்லியனிலிருந்து எந்த சிறுவருக்கும் கொடுப்பனவு இடம்பெற்றிருக்கவில்லை.

### தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை சட்டரீதியாக்குதல்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உருவாக்கப்பட்டு 19 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### சேவ் த சில்ரன்ஸ் (Save the Children) செயற்திட்டம்

செயற்திட்டம் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சினால் சேவ்த சில்ரன்ஸ் (Save the Children) செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 23 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாடுகளில் ரூபா 10 மில்லியன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையால் ரூபா 8 மில்லியன் மாத்திரம் அதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கல்

2016 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 9,540 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 2,845 முறைப்பாடுகள் தீர்வுசெய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் கிடைத்த முறைப்பாடுகளில் 70 சதவீதம் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2011 - 2015 காலப்பகுதியில் கிடைத்திருந்த 48,417 முறைப்பாடுகளில் 51 சதவீதம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.
அதிகாரசபைக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு அறிக்கையிடுவதற்கு பிரதேச மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களின் செயற்திறனின்மை, தகவல் கோருதல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக முறையான கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்படாமை பொன்ற காரணங்களினால் தீர்வு செய்யப்படாமல் உள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை துரித வேகத்தில் அதிகரித்திருந்தன.

### சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டுதல்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டுதல் என்ற தலைப்பின் கீழ் 15 செக்கன் காலப்பகுதியில் ஒளிபரப்புவதற்கு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளில் 09 விளம்பரங்கள் தயாரிப்பதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 4 மில்லியன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது, எனினும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக அறிவூட்டுவதற்கு போதியளவு செய்தியொன்று அந்த அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் ரூபவாஹினி, வானொலி ஊடகங்கள் ஊடகங்கள் மூலம் ஒலிபரப்பு செய்வதற்கு ரூபா 17.62 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### மதியுரை சேவைகள் வழங்குதல்.

மீளாய்வாண்டின் போது மதியுரை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2.43 மில்லியன் 04 பேருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் அந்த மதியுரை அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### முன்பருவ பிள்ளை அபிவிருத்தி செயற்திட்டம்.

இலங்கையில் உயர் தரத்திலான முன் பிள்ளை பருவ அபிவிருத்தி செய்யும் நோக்கில் 50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் உலக வங்கி கடன் மானியங்களின் கீழ் இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததது. மீளாய்வாண்டின் போது ரூபா 473 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 115 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இங்கு முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 6 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்நிர்மாண நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்பின் கீழ் பெருந்தோட்டத்துறையின் 28 முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 112 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவற்றின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 35 முன் பிள்ளை பருவ அபிவிருத்தி நிலையங்களை திருத்தியமைப்பதற்காகவும் 77 விளையாட்டு பூங்காக்களைத் திருத்தியமைத்தல் / நிரமாணங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் முறையே அதில் 23, மற்றும் 46 இன் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

### ஆண், பெண் சமூகநிலையில் இடம்பெறும் வன்முறைகளை தவிர்க்கும் செயற்திட்டம்

ஆண், பெண் சமூகநிலையில் இடம்பெறும் வன்முறைகளை தவிர்க்கும் செயற்திட்டத்திற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 78 மில்லியனில் ரூபா 38.36 மில்லியன் செலவிடப்பட்டு சிறுவர் அலுவல்கள், அனர்த்த முகாமைத்துவம், பொருளாதார, அபிவிருத்தி, கல்வி, வெளிநாடு, சுகாதாரம், நிதி, ஊடகம், எழுச்சி மற்றும் நிவாரணம் ஆகிய பிரிவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு (2016 – 2020) ஐந்தாண்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 யூலை மாதம் வரையிலும் செயற்பாடு தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

# சுற்றுலா அலுவல்கள்

இலங்கை சுற்றுலா கேந்திரமாக மாற்றுவதற்குத் தேவையான கொள்கைகளை தயாரிப்பதன் மூலம் இலங்கையின் இணைய சமூகத்திற்கு நேரடி மற்றும் சுழற்சி அடிப்படையிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்திற்கு அதிகமான அந்நிய செலாவணியை ஈட்டுதல் சுற்றுலா அலுவல்கள் அமைச்சின் பிரதான நோக்கமாகியிருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு திணைக்களமொன்று மற்றும் நியதிச்சட்ட சபை 04 நிறுவனங்களால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

- சுற்றுலா அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல், பின்தொடர்தல் மற்றும் மதிப்பிடுதல்.
- சுற்றுலாக் கைத்தொழில் அபிவிருத்தி செய்தல் மற்றும் நியமங்களை இயற்றுதல்.
- சுற்றுலா முகவராண்மை நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விடுமுறை கழிப்பதற்காக களியாட்ட வசதிகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்பினை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

### சுற்றுலா பயணிகளின் வருகை மற்றும் அந்நிய செலாவணியை ஈட்டுதல்

மணம் கவரும் கடற்கரைகள், மனிதாபிமானம் மற்றும் சினேகபூர்வமான மக்களுடனான போசிக்கப்பட்ட இயற்கை, கலாச்சாரம் மற்றும் அரிய தன்மை கொண்ட உலகலாவிய சுற்றுலாப் பிரயாணிகளின் மனங்கவர் இடமொன்றாக உலகளாவிய சுற்றுலாப் பிரயாணிகளின் மனங்கவர் இடமொன்றான ஆசியாவின் சுற்றுலா கேந்திரமாக தம்மை மெருகேற்றி மீளாய்வாண்டில் ரூபா 512,293 மில்லியன் தொகையான அந்நிய செலாவணியை இலங்கைக்கு பங்களித்து 2,050,832 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர்.

நாடொன்று எனும் ரீதியில் சுற்றுலாக் கைத்தொழிலில் இலங்கையின் எதிர்பார்ப்பானது உச்சளவான அந்நிய செலாவணியை ஈட்டுவதாகும். அத்துடன், 2016 ஆம் ஆண்டின் போது இந்த கைத்தொழிலிருந்து 3,518.5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. இந்த அளவினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 18.1 சதவீதமான உயர்வான அதிகரிப்பொன்றாக குறிப்பிட முடியும்.

2016 ஆம் ஆண்டின் போது சுற்றுலாக் கைத்தொழிலானது சிறந்ததொரு செயற்திறனை காட்டியவாறு, சுற்றுலாப் பயணிகளின் வருகை 2 மில்லியனாக இருந்ததுடன், சுற்றுலாக் கைத்தொழிலுக்கான முதலீடானது கருத்திற் கொள்ளக்கூடிய அளவில் அதிகரித்தமை, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, புதியதொரு சுற்றுலா ஈர்ப்புடன் அரச துறை மற்றும் தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படுகின்ற மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வாறான சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தமைக்கான காரணங்களாக அமைந்துள்ளன. எவ்வாறெனினும், 2016 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையின் இலக்காகிய 2 மில்லியன் அளவினை அண்மிக்கக்கூடியதாக இருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வருகையிலான அதிகரிப்பு வேகம் 3.72 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

முன்னைய ஆண்டைப் போன்றே மீளாய்வாண்டிலும் பெரும்பாலான பிரதான வலயங்களின் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம்

கிழக்கு ஆசியாவில் 17.2 சதவீதமும், மத்தியக்கிழக்கு வலயத்திலிருந்து 6.5 சதவீதமும், மேற்கு ஐரோப்பாவிலிருந்து 16.5 சதவீதமும், தெற்காசியாவிலிருந்து 11.8 சதவீதமுமாக பொருண்மையான அதிகரிப்பொன்றினைக் காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறே நாடொன்று என்ற ரீதியில் அதிகளவு எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் கடந்த வருடம் இந்தியாவிலிருந்தே வருகை தந்திருந்தனர். அந்த எண்ணிக்கை 356,729 ஆகும். இந்த ஆண்டின் போது அதற்கடுத்த கவர்ச்சியான வருகையிலான அதிகரிப்பு இடம்பெற்றிருந்தது. மக்கள் சீனக் குடியரசிலிருந்ததாகும். அந்த அளவானது 271,577 ஆக இருந்த போதிலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 26.4 சதவீதமான அதிகரிப்பொன்றாகும். விபரங்கள் உரு 26 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 26 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை
மூலம்:- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த புள்ளிவிபர அறிக்கை – 2016

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தல் அத்துடன் சுற்றுலாப் பிரயாணியொருவரின் சராசரி நாளாந்த செலவினம் மற்றும் சுற்றுலாப் பிரயாணியொருவர் இலங்கையில் தங்கியிருக்கும் சராசரி நாட்களின் எண்ணிக்கை அதிகரித்தல் ஆகியன சுற்றுலா வருமானம் அதிகரிப்பிற்கு பிரதானமான காரணியொன்றாக குறிப்பிட முடியும். 2016 ஆம் ஆண்டின் போது சுற்றுலாப் பிரயாணி ஒருவரின் சராசரி நாளாந்த செலவினம் ஐக்கிய அமெரிக்க டொலர் 168.2 மில்லியனாக இருந்ததுடன், அந்த அளவானது 2015 ஆம் ஆண்டின் ஐக்கிய அமெரிக்க டொலர் 164.1 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் சுற்றுலாத்துறை வருமானம் யாதேனுமொரு விகிதத்தில் அதிகரிப்பதற்கும் இது தாக்கமளித்திருந்தது. அவ்வாறே சுற்றுலாப் பயணியொருவர் இலங்கையில் தங்கியிருக்கும் சராசரி நாட்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 10.2 நாட்களாக இருந்ததுடன், அது கடந்த வருடத்தில் 10.1 நாட்களாக இருந்தது. எனினும், 1987 ஆம் ஆண்டின் போது சுற்றுலாப் பயணியொருவர் இலங்கையில் தங்கியிருந்த சராசரி நாட்களான 13.2 உடன் ஒப்பிடும் போது அந்த இலக்கினை அண்மிக்க மீளாய்வாண்டின் போதும் இயலாதிருந்தது.

2016 ஆம் ஆண்டின் போது உலகின் அதி விசேட ஸ்தலங்களாக இனங்காணப்பட்ட கனவுச் சுற்றுலா ‘‘டிரீம் ஸ்டார்’’ இனை பார்வையிடுவதற்கான பிரபலமான 10 பிரயாண ஸ்தலங்களில் ஒன்றாக இலங்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஹாபர் பசார் சஞ்சிகை (ஐக்கிய இராச்சியம்) 2016 ஆம் ஆண்டின் போது பரபரப்பான சுற்றுலாப் பட்டியலில் இந்த வருடத்தில் கைவிட முடியாத சுற்றுலா ஸ்தலங்கள் எனும் 03 ஆம் இலக்க வகைப்படுத்தலின் கீழ் இலங்கை நிரப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கைக்கு இவ்வாறான நிலைமைகளை பெற்றுக் கொள்வதற்கும் உலக சுற்றுலாக் கைத்தொழிலின் உச்சமான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு 2016 ஆம் ஆண்டின் போது சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 3,637 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் அதன் அளவானது ரூபா 3,637 மில்லியனாகும். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் பணியகம், இலங்கை மாநாட்டு பணியகம் ஆகிய 04 நிறுவனங்களுக்காக 14 சதவீதம், 70 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 4 சதவீதம் எனுமானு நிதியீட்டம் செய்யப்பட்டிருந்தது. எனினும் 2015 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தினால் இந்த 04 நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன. பணிப்பொறுப்புகள் மற்றும் இடங்களில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யாமல் யாத்திரைகள் மற்றும் சுற்றுலா சேவைகளில் ஈடுபடும் ஏதேனுமொரு நபர் அல்லது நபர்கள் தவறொன்றிற்கான குற்றவாளியாக்குவதற்கான விதிகளை இடம், சுற்றுலா கைத்தொழில் அல்லது அதனுடன் தொடர்புடைய ஏயை கைத்தொழில்களுக்கு உரியதாக தேசிய

மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களை மேம்படுத்தல், அமுல்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்திச் செல்வதற்காக சுற்றுலா முயற்சியாளர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், அதிகாரமளித்தல் மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு ஒத்துழைப்பினை நல்குவதற்கான நிறுவனங்கள் மற்றும் முயற்சிகளை நிறுவுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம்

வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

- அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதி 69,70,72,73,74 மற்றும் சுற்றுலா அலுவல்கள் அதிகாரச்சட்டத்தின் 40(7) ஆம் பிரிவிற்கு முரணாக சுற்றுலா மேம்படுத்தல் பணியகத்திற்கு தகுதியற்ற உத்தியோகத்தரொருவர் 2016 பெப்ரவரி 08 ஆந் திகதி முகாமைத்துவ பணிப்பாளர் பதவியில் இணைத்துக் கொள்ளப்பட்டு ரூபா 1.56 மில்லியன் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

- அமைச்சின் அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி தகுதியற்ற பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு விழா சந்தர்ப்ப பணிப்பாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டு 2014 திசெம்பர் மாதம் முதல் 2016 மே மாதம் வரையிலும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1.69 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

- 2016 ஆம் ஆண்டில் பிரான்சின் சுற்றுலா முகவராண்மை தேசிய சங்கத்தின் (ளுயேஏ) வருடாந்த மாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்கான எயார்லைன் கம்பனிக்கு ரூபா 37.44 மில்லியன் தொகை பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றியும் 2016 ஒக்தோபர் 12 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் 7 (ளை) இற்கு முரணாக அந்த கம்பனியிடமிருந்து விலைக்கேள்வி கோரப்படாமல் மற்றும் நிதிப்பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 இற்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது.

- 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய 57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி ரூபா 26.28 மில்லியனான அனுசரணை செலவினம் மற்றும் வெகுமதியாக செலுத்தப்பட்டிருந்தது.

## இலங்கை மாநாட்டு பணியகம்

வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

- ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்திராத பொது முகாமையாளரொருவரை ஆட்சேர்த்து 2016 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 483,372 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

- வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது 155 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 97 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 14 பிரதான பணிகளுக்காக 212.85 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 104.14 மில்லியன் அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் 49 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது.

- பிரான்சின் சுற்றுலா முகவராண்மை தேசிய சங்கத்தின் வருடாந்த (ளுயேஏ) மாநாடு இலங்கையில் நடாத்தப்பட்டிருந்தது. அந்த கூட்டத்திற்கு 286 வெளிநாட்டவர்கள் பங்குபற்றியிருந்ததுடன், உள்நாட்டு விருந்தினர்களுடன் 325 பேர் பங்குபற்றியிருந்தனர். இதற்காக ரூபா 83.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

இந்த ஒன்றுகூடலில் பங்குபற்றியோருக்கான ஹோட்டல் வசதிகளை வழங்கும் போது ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில்

விலைக்கேள்விகள் கோரப்பட்டிருக்கவில்லை. ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவரிடமிருந்து பெற்றுக்கொண்ட விலைக்கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கூறுவிலைகளை அடிப்படையாகக் கொண்டு விலைக்கேள்வி சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மாநாட்டிற்காக அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த 10 சதவீதத்தை கழிக்காமையால் ரூபா 740,306 தொகை ஹோட்டல்களுக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

2016 செப்தம்பர் 15 ஆந் திகதிய அமைச்சரவை பிரமாணக் குறிப்பிற்கமைவான இணைப்பின் பிரகாரம் ஹோட்டல்களின் அறைகளுக்காக வரிகளுடன் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்த தொகை, தனி அறைகளுக்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 169 மற்றும் இரட்டை அறைகளுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 180 ஆன போதிலும், கொடுப்பனவு உறுதிச்சீட்டினை பரிசோதித்த போது அதனை விட வேறுபட்ட பெறுமதிகளில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் மேற்படி ஹோட்டல்களுக்கு ரூபா 329,592 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

286 வெளிநாட்டவர்கள் பங்குபற்றிய மாநாட்டிற்கு மேலதிகமாக விருந்தினர்களுடன் சுமார் 325 பேர் பங்குபற்றியதாக ஏனைய விடயங்களை ஒப்பிட்ட போது அவதானிக்கப்பட்டது. 2016 ஒக்தோபர் 31 ஆந் திகதி பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப விழாவினை நடாத்துவதற்காக ஒருவருக்கு ரூபா 6,550 படி 450 பேருக்கு ரூபா 2,947,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதனால் மாநாட்டில் பங்குபற்றியமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளை சமர்ப்பிக்காது 125 பேருக்காக ரூபா 818,750 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

மாநாட்டினை நடாத்துவதற்காக பிரான்ஸ் சுற்றுலா முகவராண்மை தேசிய சங்கத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தில் விமானப் பயணச்சீட்டுகளுக்காக என குறிப்பிட்டு ரூபா 4,029,000 தொகை கழிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை உறுதிப்படுத்துவதற்கு போதுமான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### சுற்றுலா நடவடிக்கைளிலான வளர்ச்சி

கடந்த வருடங்களுக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சுற்றுலாப்பயணிகளின் வருகை, தங்கியிருந்த இரவுகளின் எண்ணிக்கை, சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெறப்பட்ட வருமானம், தனிநபர் சுற்றுலாப் பிரயாண பெறுவனவு, மொத்த வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை ஆகியன அதிகரித்திருந்தது. விபரங்கள் உரு 27 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 27 சுற்றுலாத்துறையின் வளர்ச்சி
மூலம் :- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த புள்ளி விபர அறிக்கை 2016

# நகர அபிவிருத்தி

ஒவ்வொரு நகரத்திற்காகவும் பொருளாதார ரீதியான சர்ந்தப்பம் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை கட்டியெழுப்புகின்ற புதிய மாதிரியொன்றை வடிவமைத்தல், துண்டுக்கழிவுகள், குடிசை வாசிகளுக்கான வீட்டுப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான தீர்வினை வழங்குதல் மற்றும் நாட்டின் மேற்குப் பிரதேசத்திலும் சுற்றுப்புறங்களிலும் புதிய நகரங்களை நிர்மாணித்தல் இந்தத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களாக இருந்தன. அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு, அதன் கீழுள்ள திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட சபைகள் / 02 நிறுவனங்களினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி விடயங்களுக்குரிய நியதிச்சட்ட நிறுவனத்தின் விடயங்களுக்குரிய கொள்ளைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்களினை கையளித்தல், பின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு
- கொட்டாவ, கடுவெல மற்றும் கடவத்த நகர அபிவிருத்தி செயல்திட்டம் மற்றும் அது சார்ந்த செயற்பாடுகள்
- நகர பிரதேசங்களின் பொருளாதார, சமூக மற்றும் பௌதீக அபிவிருத்தி என்பவற்றை ஒன்றினைத்து முறையாக மேம்படுத்தல் மற்றும் நிர்ணயித்தல் செயற்பாடுகள்.
- நகர கழிவுப்பொருள் முகாமைத்துவம்
- தாழ் நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்திக்குரிய செயற்பாடுகள்
- நகர பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகள் மற்றும் வசதிகள் குறைவான பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலங்களை பொதுத் திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டல்.
- தேசிய பௌதீக திட்டம் மற்றும் பிரதேச பௌதீகத் திட்டம் என்பவற்றை தயாரித்தல்.
- ஒன்றிணைந்த நகர அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக தேசிய பௌதீக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு சகல நிர்மாண நடவடிக்கைகளையும் கையாளல் மற்றும் நிர்ணயித்தல்.
- அமைச்சின் பாடப்பரப்புக்குரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள சகல விடயங்களுக்குமான நடவடிக்கைகள்.

மேலே குறிப்பிட்ட நிறுவனங்களில் அந்த பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### வீடுகளை வழங்கும் செயல்திட்டம்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கொழும்பு நகரத்தில் குறைந்த வசதிகளுடன் மற்றும் அனுமதியற்ற காணிகளில் குடியிருந்து வருகின்ற குடியிருப்பாளர்களுக்கு வீடுகளை வழங்குவதற்காக 68,000 வீட்டு அலகுகளினை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 5,203 வீட்டு அலகுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## நகரத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டிய விடயங்களினை இனங்காணல்.

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நாட்டில் நகர அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வலயங்களை இனங்காணல் மற்றும் அந்த வலயங்களுக்காக அபிவிருத்தி திட்டங்களினை தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்படவேண்டியிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் 243 நகர அபிவிருத்தி வலயங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதில் அபிவிருத்தி திட்டங்கள் 42 வலயங்களுக்கு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தன.

## செயல்திட்டங்களினை அமுல்படுத்தல்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் மேல்மாகாணத்தில் 11 செயற்திட்டங்களும், தென்மாகாணத்தில் 09 செயற்திட்டங்களும், வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் ஒரு செயல்திட்டம் வீதமும், மதிப்பீட்டுக்கிரயம் ரூபா 3,252.09 மில்லியன் தொகையான 22 செயல்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் ஒரு திட்டமேனும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## அனுமதியற்ற நிலமீட்டலைக் கட்டுப்படுத்தல்.

நாடு முழுவதும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள தாழ்வான சதுப்பு நிலங்கள், செழிப்பற்ற மற்றும் சேற்றுக் காணிகளை இனங்கண்டு, அனுமதியற்ற நில மீட்டலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கு முடியுமான வகையில் அவற்றை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கு இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அவ்வாறு அறிவித்தல் மூலம் வர்த்தகமானியில் பிரசுரித்து பகிரங்கப்படுத்தப்பட்டு 04 மாகாண எண்ணிக்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 1995 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் கையேற்றிருந்த 307 ஏக்கர் காணிகளில் ஆண்டின் இறுதி வரையில் அபிவிருத்தி செய்யப்பட்ட அளவு 97 ஏக்கர் ஆன குறைந்த பெறுமதியாகக் காணப்பட்டது. 1996 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கொழும்பு பெரும்பாகத்தில் வெள்ளத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 378 ஹெக்டேயர் அளவிலான தாழ்நில நீர் தேங்கி நிற்கும் பிரதேசமாக பாதுகாத்து கொள்வதற்கு, அதனை நிர்வகிப்பதற்கு இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அதில் 400 ஏக்கர்கள் அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் கைப்பற்றப்பட்டிருந்தமை மற்றும் கூட்டுத்தாபனத்தினால் உரித்து கோரப்படாததன் (Divesting) காரணமாக அமைச்சரவையால் கூட்டுத்தாபனத்தில் எதிர்பார்க்கப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

## பெரும்பாக கொழும்பு பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்த்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்.

பெரும்பாக கொழும்பு பிரதேசத்தில் வெள்ளம் ஏற்படுவதைத் தவிர்த்தல் மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் செயல்திட்டம் மற்றும் வரிசை அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற

செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு திறைசேரியிலிருந்து ரூபா 2,360 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அதில் ரூபா 1,010.75 மில்லியன் அதாவது 43 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 361.87 மில்லியன் தொகையான செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமல் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருக்காத 14 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 626.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### தந்திரோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டம்.

தந்திரோபாய நகர அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் கொழும்பு தலைநகரை அண்மித்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 12,810 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது அதில் ரூபா 3,054 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 77 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. உரிய செயற்திட்டம் குறித்த இலக்கிடப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### கொழும்பு தலைநகரத்தை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டம்.

செயற்திட்டத்தின் கீழ் பெத்தகான உயிரியல் பல்வகைப்படுத்தல் பூங்காவை நிர்மாணித்தல் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனம் பூங்காவை நிர்மாணிக்கும் பணிகள் குறித்த திகதிக்கு 07 மாத தாமதத்தின் பின்னர் பூர்த்தி செய்திருந்தது. அவ்வாறே செயற்திட்டத்தின் பௌதீக பரிசோதனையின் போது ரூபா 92.07 மில்லியன் பெறுமதியான வேலைப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நியமங்களிற்கு இணங்க நிர்மாணிக்கப்படாதிருந்த பணிகளுக்காகவும் ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மட்டக்குளிய காக்கைத்தீவு கரையோர பூங்காவை 10 மாதங்களுக்குள் நிர்மாணிப்பதற்காக 2014 செப்தெம்பர் மாதத்தின் போது ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாண நடவடிக்கைகளில் அசாதாரண தாமதம் ஏற்பட்டமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூங்காவின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

ஒப்பந்தகாரர்களின் வேலை செய்யும் இயலுமை, ஒரே தடவையில் பல வேலைகளைச் செய்வதற்குள்ள நிதி மற்றும் ஊழிய சக்தி தொடர்பாக கவனத்தில் கொள்ளாமை ஒரு ஒப்பந்தகாரருக்கு ஒரே காலப்பகுதியில் பல ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டதன் மூலம் ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்தல் தாமதமாகியிருந்தது.

கொழும்பு தலைநகரத்தில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவது இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்ததுடன் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தலைநகரில் வெள்ள நீரால் தாழ்ந்து போகும் மற்றும் மழைநீர் கணிசமான அளவில் ஒன்றுசேருகின்ற பிரதேசங்களை இனங்கண்டு புதிய வடிகால் முறைகளைத் திட்டமிடல், நிர்மாணித்தல் மற்றும் பழைய வடிகாண் முறைகளை திருத்துதல் என்பன மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் சிறு வெள்ளம் சாதாரண மழையின் போதும் உடனடியாக

கொழும்பு நகரத்தின் வீதிகள் நீரினால் மூழ்குகின்ற நிலைமையை ஏற்படுத்துகின்றமையால் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

## பெரும்பாக கொழும்பு கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டம்.

பெரும்பாக கொழும்பு கழிவுப்பொருள் முகாமைத்துவ செயல்திட்டத்தின் கீழ் கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான செயல்நடவடிக்கை திட்டமொன்றினை தயாரித்தல் என்பவற்றுக்கு சர்வதேச மதியுரையாளர் நிறுவனங்களின் உதவியைப் பெற்று அந்த நிறுவனங்களுக்கு மீளாண்வாண்டின் போது ரூபா 65.92 மில்லியன் செலுத்தியிருந்ததுடன் தொடர்ந்தும் அந்த நிறுவனங்களிலிருந்து மேலதிக ஆலோசனை அறிக்கையும் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட ஆலோசனை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மற்றும் சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு அல்லது அது தொடர்பாக தொடப்பினை ஏற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. கடந்த இரண்டு வருடங்களில் அமைச்சிற்கு கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 4,000 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து 99.9 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கழிவுப்பொருள் முகாமைத்துவ வேலைத்திட்டங்களை முன்கொண்டு செல்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும், அந்த செயற்திட்டத்திற்காக செயற்திட்ட பணிப்பாளர் ஒருவர் முறையாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்காக அமைச்சின் உத்தியோகத்தார் பதில்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டு செயல்திட்டத்தின் நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான ஆய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்றமையினால் ரூபா 546,778 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக எந்தவொரு அறிக்கையும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## மேல் மாகாண பிரதேசத்தில் மாநகர திட்டமிடல் செயற்திட்டம்.

மேல் மாகாண பிரதேசத்தில் மாநகரங்களை திட்டமிடும் செயல்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 133 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செயல்திட்டத்திற்காக திறைசேரி மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களினால் செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 279 மில்லியனாக இருந்தது.

இந்த செயற்திட்டத்தின் மூலம் மேல் மாகாண பிரதேசத்தில் மாநகர அதிகாரசபையை உருவாக்கி வரைவு அறிக்கை தயாரித்தல், அதற்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற உள்ளூராட்சி கட்டளைச் சட்டங்களை திருத்துதல் மற்றும் அதிகாரசபையைத் தாபித்தல் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களிடையே ஏற்படுகின்ற பிரச்சனைகளை இனங்காணல் மற்றும் தீர்வுகள் என்பன மேல்மாகாண பிரதேச மாநகர அதிகாரசபையின் கட்டமைப்பிற்குள் உள்ளடங்கியிருக்கின்றதா என தீர்மானித்தல் என்பன பிரதான நோக்கங்களாக இருந்தன.

இந்த நோக்கங்களுக்குப் புறம்பாக அதிகாரசபை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய கட்டிட வரைபடத்திட்ட பிரமாணங்களை தயாரித்தல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் நகர திட்டங்களை தயாரித்தல், ஹொறண, மீரிகம நகர திட்டங்களினை தயாரித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த போதிலும், அதன் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2003 ஆம் ஆண்டு முதல் 2005 ஆண்டு வரை ரூபா 79.85 மில்லியன் இலங்கை முதலீட்டு சபையினால் செலவிடப்பட்டு இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த திட்டமிடல் செயற்திட்டம் தற்போதைய திட்டங்களுடன் இணங்காமையின் அடிப்படையில் முழுமையாக கைவிடப்பட்டமையினால் செலவிடப்பட்ட ரூபா 79.85 மில்லியனுக்கு அண்ணளவான பணம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

மேல்மாகாண பிரதேச மாநகர திட்டத்தைத் தயாரிப்பதற்கான கால அட்டவணையொன்று இன்றி தொடர்ச்சியாக செயல்திட்டம் பேணப்பட்டதுடன் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் செய்யப்படுகின்ற பணிகள் செயல்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் செயற்திட்டத்தின் பணிச் செயற்பாடுகள் தொடர்பாக செயல்நடவடிக்கைத் திட்டத்தை சரியாகத் தயாரிக்காமல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

செயல்திட்டத்திற்காக முறையான அங்கீகார மின்றியும் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்றியும் பதவியணியினர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த பதவியனியினரின் அனுபவங்களை கவனத்தில் கொள்ளாது ஒரு வருடத்திற்கு அண்மித்த காலமாக மதியுரையாளர் பதவிகளில் நியமிக்கப்பட்டு உயர்ந்த சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது மாத்திரம் 25 மதியுரையாளர்களுக்கு ரூபா 18.52 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

முன்னைய ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும், உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பிரயாணத்திற்காக செயற்திட்டத்திலிருந்து ரூபா 9.30 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த வெளிநாட்டு பிரயாணங்களிலிருந்து உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட அனுபவத்தை நாட்டிற்கு பெறக்கூடிய பயன்பாடுகளைக் காண்பிக்கின்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மாநகரத்திட்டங்களினை வெளியிடும் விழாக்களிற்காக ரூபா 8 மில்லியனுக்கு மேற்பட்ட தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் சில செலவினங்கள் நிதி ஏற்பாடு செயல்நடைமுறைகளைப் பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### கடவத்த, கடுவெல, கொட்டாவ நகர அபிவிருத்தி ஆக்கக்கூறுகளுக்கான செயற்திட்டம்.

பெரும்பாக கொழும்பு போக்குவரத்து வலைப்பின்னலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் கடவத்த, கடுவெல, கொட்டாவ நகர அபிவிருத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் நகர அபிவிருத்திக்கு பதிலாக அந்த நகரங்களின் சில வீதிகளுக்கு புதிதாக காபட் இடப்பட்டும் மாக்கும்புற பலநோக்கு போக்குவரத்து நிலையமொன்றை நிர்மாணித்தல் இந்த செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மேடைகளின்

நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கும், புகையிரதம் மற்றும் பேரூந்துகளை ஒன்றிணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த செயற்திட்டம் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) கடன் தொகையில் அமுல்படுத்தப்படுவதுடன் அந்தக் கடன் பணம் முழுமையாக பயன்படுத்துவதை காரணமாகக் கொண்டு 2016 ஆண்டு முதல் முழுமையாக திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் இந்த செயல்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் மீளாய்வாண்டின் போது திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 714.1 மில்லியனாக இருந்தது.

### கொழும்பு பெரும்பாக பிரதேசத்தில் வெள்ளநீரைத் தடுத்தல் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி செயற்திட்டம்.

இந்த செயற்திட்டத்தின் கீழ் 4 கிலோ மீற்றர் நீளத்தில் சிறிய வாய்க்கால் மற்றும் 2 கிலோமீற்றர் நீளத்தில் பெரியளவிலான வாய்க்காலைச் சுத்தம் செய்து வாய்க்காலைப் பராமரித்தல், மற்றும் 94 ஏக்கர் குளமொன்றை நிர்மாணித்தல் என்பன திட்டமிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 1,000 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 218.3 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 78.16 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாதருந்ததுடன் உரிய நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் தொடர்பாக எந்தவொரு அறிக்கையும் அமைச்சினால் பெறப்பட்டிருக்கவில்லை.

### டெங்கு ஒழிப்பிற்காக வாய்க்கால் மற்றும் வடிகாண்களை சுத்தம் செய்தல்.

டெங்கினை ஒழிப்பதற்காக வாய்க்கால் மற்றும் வடிகாண்களை சுத்தமாக்குவதற்கு குறைநிரப்பு மதிப்பிட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 11.11 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் வாய்க்கால் மற்றும் வடிகாண்களை சுத்தமாக்குவதற்கோ அல்லது அது தொடர்பாக நடவடிக்கையோ எடுக்கப்படாதிருந்ததுடன் மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

# கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள்

உலகலாவிய ரீதியில் போட்டியாளர்களின் அனுபவத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப உற்பத்திப் பிரிவொன்றை நிர்மாணித்தல், பெறுமதிசேர் வரியின் அடிப்படையில் ஏற்றுமதிகளை உயர்வடையச் செய்தல் மற்றும் மேம்படுத்துவதன் மூலம் ஆகக்கூடிய வருமானமொன்றைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் சாதகமான வணிக ரீதியான பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புதல் என்பன இந்த பிரிவின் பிரதான நோக்கங்களாக இருந்தன. அந்த நோக்கங்களை நிறைவேற்றுதவற்காக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வரும் 07 திணைக்களங்கள் நியதிச்சட்ட சபைகள் / 12 நிறுவனங்கள் மற்றும் 15 பொது முயற்சிகள் என்பவற்றினால் பின்வரும் செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- கைத்தொழில் மற்றும் வணிக விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை கையளித்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- கைத்தொழில் மேம்படுத்தலும் அபிவிருத் தியும்
- வியாபாரக் கண்காட்சிகளை நடாத்துதல்
- உள்நாட்டுச் சந்தையில் நுகர்வுப் பொருட்களின் தரமான நிலை மற்றும் நிலுவையின்றி சாதாரண விலையில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
- 1949 இன் 6 ஆம் இலக்க ஈட்டு அதிகாரச்சட்டத்தின் 114 ஆவது பிரிவின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்.
- நுகர்வோர் பொருட்களுக்குரிய தேசிய விலைக் கொள்கை வழங்கல் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடல்
- நுகர்வோர் பாதுகாப்பிற்கான வழிமுறைகளை எடுத்தல்
- இலங்கை கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளுக்காக அலங்கார அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்களைச் செய்தல்
- புலமைச் சொத்துக்கள் தொடர்பான சர்வதேச அமைப்பை நிர்வகிப்பதற்குரிய பணிகளின் வெளியிடல் உரித்து மற்றும் சர்வதேச புலமைச் சொத்து தொடர்பான அலுவலகங்களின் வெளியிடல் உரித்து தொடர்பான நடவடிக்கைகள்
- சீனிக் கைத்தொழிலுக்குரிய அரசாங்க வளங்களை முகாமைத்துவம் செய்தலும் பாதுகாத்தலும்.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## கைத்தொழில் பேட்டைகளின் நிர்மாணம்

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் அபிவிருத்திப் பிரிவினால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 55 கர்மாந்தபுற இன் நடவடிக்கைகளுக்காக ரூபா 556.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 கர்மாந்தபுற இன் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 153.88 மில்லியன்

செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த செலவினங்களுக்கு நிகராக பௌதீக செயல் முன்னேற்றமொன்று அடையப்பட் டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்திற்காக ரூபா 0.32 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டி ருக்கவில்லை. முதலீட்டுச் சந்தர்ப்பங்களை அதிகரித்தல், பிரதேசத்தின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புக்களை கட்டியெழுப்பும் நோக்கில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட 02 கர்மாந்தபுற இற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய காணிகள் இனங்காணப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### அரிசி பாதுகாப்பு இருப்பினைப் பேணல்

2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை உணவு ஆணையாளர் திணைக்களம் தயாரித்திருந்த சுட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான மெ.தொன் 50,000 பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு இணங்க மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது மெ.தொன் 50,000 அரிசி பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்ல வேண்டியமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெயாங்கொட 9 ஆம் 10 ஆம் இலக்க களஞ்சியங்களை விஞ்ஞான ரீதியான களஞ்சியமாக ஆக்குவதற்கு ரூபா 43.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 யூன் 30 ஆந் திகதி வரையான காலத்தில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களில் எவ்வித பாதுகாப்பு அரிசி இருபொன்றும் காணப்படவில்லை. உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான வெயாங்கொட களஞ்சிய சுற்றாடலில் 05 களஞ்சியங்களை விஞ்ஞான ரீதியான களஞ்சியமாக அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் ரூபா 214.00 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 38.22 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

### தேசிய மட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களைத் தாபித்தல்

தேசிய மட்டத்தில் 16 கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 03 சங்கங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

### கூட்டுறவுச் சங்கங்களின் மோசடிகளைக் குறைத்தல்

கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படுகின்ற மோசடிகளைக் குறைப்பதற்காக உரிய பரிசோதனை நடவடிக்கைகளை நடாத்துவதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் திட்டமிட்டிருந்த போதிலும், அது தொடர்பாக திணைக்களத்தால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போது கூட்டுறவுச் சங்கங்களில் காணப்பட்ட பிணக்குகளைத் தீர்த்தல் மற்றும் 750 நிதிமன்ற வேண்டுதல்களை முடிவுறுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அதில் உள்ளபடியாக 129 இற்கு மாத்திரமே தீர்வு வழங்கப்பட்டிருந்தது.

### கூட்டுறவுச் சங்கங்களில் பங்களிப்புப் பணம் அறவிடல்

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பங்களிப்புப் பணமாக ரூபா 44.77 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அதில் ரூபா 4.87 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கூட்டுறவு மிகை மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடனில் ரூபா 616.18 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது, அறவிட வேண்டியிருந்த போதிலும், ஆண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 3,000 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 1977 செயற்திட்டங்களை ஸ்தாபித்தல்

நுகர்வோர் அதிகாரசபைக்கு விரைவாக முறைப்பாடுகளை சமர்ப்பித்தல் மற்றும் நுகர்வோர்களுக்கும் விவசாயிகளுக்கும் சந்தையில் மொத்த மற்றும் சில்லறை விலைகளை அறித்து கொள்வதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது, ரூபா 9.19 மில்லியன் செலவிடப்பட்டு “1977 செயற்திட்டம்” ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை கையேற்பதற்காக உத்தியோகத்தரொருவர் தொடர்புபடுத்தப் படாதிருந்தமையால் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபையினால் சந்தை விலைத் தகவல்கள் நாளது வரையாக்கப்படாதிருந்தமையினால் இந்த செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### வியாபார அடையாளங்களை பதிவு செய்தல்

மீளாய்வாண்டின் போது இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தினால் பதிவு செய்யப்பட்ட வியாபார அடையாளங்களின் எண்ணிக்கை 3312 ஆக இருந்ததுடன் அவற்றைப் பதிவு செய்வதற்காக 01 வருடம் முதல் 39 வருடங்கள் வரையிலான காலமொன்று எடுத்திருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதிவு செய்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 55,506 ஆக இருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த கைத்தொழில் திட்டங்களின் எண்ணிக்கை 34 ஆக இருந்ததுடன் அதில் 2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைத்த விண்ணப்பங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் கைத்தொழில் திட்டத்திற்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்தல் 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலம் எடுத்திருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை 825 ஆகும்.

### பேடன்ட் அனுமதிப்பத்திரம் பதிவு செய்தல்

மீளாய்வாண்டின் போது இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்டிருந்த பேடன்ட் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 124 ஆக இருந்தது. அந்த பேடன்ட் அனுமதிப் பத்திரத்தைப் பதிவு செய்வதற்காக 09 மாதங்கள் முதல் 16 வருடங்கள் வரையிலான காலவீச்சினை எடுத்திருந்தது. பேடன்ட் அனுமதிப் பத்திரம் பதிவு செய்வதற்காக அதிகளவான காலம் எடுத்திருந்தமையால் புதிய புத்தாக்குனர்களுக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு இருந்த ஆர்வம் குறைந்து செல்லும் போக்கொன்று காணப்பட்டது.

அவ்வாறே பேடன்ட் அனுமதிப்பத்திரம் மற்றும் கைத்தொழில் திட்ட அனுமதிப்பத்திரங்களைக் கையளித்தல் தொடர்பாக 11 வெளித்தரப்பினர்களால் இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 11 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மேலும், அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்ட 131 வியாபார அடையாளங்களுக்குரியதாக வெளித்தரப்பினர்களால் தொடரப்பட்டிருந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக சாட்சியாளர் ஒருவராக இலங்கை புலமைச் சொத்து அலுவலகம் ஆஜராகியிருந்தது.

### வியாபார அடையாளங்களை சர்வதேச ரீதியாகப் பதிவு செய்தல்

வியாபார அடையாளங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான "மெட்ரீட் ஒன்றிணைவு பத்திரத்தில் நுளையும் செய்திட்டம்" இற்காக வரிசை அமைச்சினால் ரூபா 38.00 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தினால் ரூபா 37.96 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகள் பௌதீக வளங்களைக் கட்டியெழுப்புவதற்காக செலவிடப்பட்டிருந்தது. 2016 மே 15 ஆந் திகதி முதல் 2018 மே 14 ஆந் திகதி வரை மாதத்திற்கு ரூபா 175,000 வீதம் வாடகையொன்று செலுத்தும் அடிப்படையில் கட்டிடமொன்று வாடகைக்குப் பெறப்பட்டு 2017 மே மாதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 2.43 மில்லியன் வாடகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 3.88 மில்லியன் செலவில் அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. சட்டர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ரூபா 32.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 28 ஆந் திகதி வரையிலும் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை.

### புடவை மற்றும் ஆடைத் துறைகள் தொடர்பான பட்டப்பின்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம் 2009 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் 06 வருட காலத்தை கடந்திருந்தது. 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 04(அ) பிரிவின் பிரகாரம் புடவை மற்றும் ஆடைத் துறைகள் தொடர்பான பட்டப் பின்பிடிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தேவையான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### தரச்சான்றிதழ் விநியோகித்தல்

சர்வதேச மற்றும் தேசிய நியமங்களுக்கும் மற்றும் கம்பனி நியம முறைமைகளுக்கும் இணங்க புடவை மற்றும் ஆடைகள் கைத்தொழிலில் தொடர்ந்து ஈடுபடுகின்ற நபர்களுக்கு தரச்சான்றிதழ் விநியோகித்தல், இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் நோக்காக இருந்த போதிலும், நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற பாடநெறிக்காக தேசிய தொழிற்தகைமை மட்டத்தில் தகைமைத் தரம் (NVQ) பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின்

இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரித்தல்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனியால் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் முறையற்ற பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே தகைமைகளைத் தீர்மானிக்காமலும் உரிய திட்ட முறைமைகளை பின்பற்றாமலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 04 முகாமைத்துவ நிபுணர்களுக்காக ரூபா 186 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 3075 ஆக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் உள்ளபடியான பதவியணியினர் 3641 ஆனமையால் மிகையான பதவியணியினர் 566 ஆகும்.

### பதவியணியினர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல்

2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணானதாக உரித்தற்ற 22 உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க வணிக (பலநோக்கு) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 13.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1.05 மில்லியன் போக்குவரத்துப்படியாக கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

### அரசாங்க பெறுகைகள் நடைமுறைகள் பின்பற்றப்படாமை

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தால் ரூபா 108.36 மில்லியன் தொகையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் சுற்றாடல் மற்றும் சந்தை ஆராய்ச்சிகளின்றி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 107.39 மில்லியன் கிரயமான 50 நடமாடும் களஞ்சியங்களுக்கிடையே ரூபா 75.17 மில்லியன் கிரயமான 35 நடமாடும் களஞ்சியங்களை விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது. அந்த நடமாடும் களஞ்சியங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட ரூபா 81.64 மில்லியன் குறுங்காலக் கடனுக்கான வட்டியாக ரூபா 0.70 மில்லியன் தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# வீடமைப்பும் நிர்மாணங்களும்

உலகலாவிய ரீதியில் போட்டியாளர்களின் அனுபவத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப உற்பத்திப் பிரிவொன்றை நிர்மாணித்தல், பெறுமதிசேர் வரியின் அடிப்படையில் ஏற்றுமதிகளை உயர்வடையச் செய்தல் மற்றும் மேம்படுத்துவதன் மூலம் ஆகக்கூடிய வருமானமொன்றைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் சாதகமான வணிக ரீதியான பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்புதல் என்பன இந்த பிரிவின் பிரதான நோக்கங்களாக இருந்தன. அந்த நோக்கங்களை நிறைவேற்றுதவற்காக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வரும் 07 திணைக்களங்கள் நியதிச்சட்ட சபைகள் / 12 நிறுவனங்கள் மற்றும் 15 பொது முயற்சிகள் என்பவற்றினால் பின்வரும் செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- கைத்தொழில் மற்றும் வணிக விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை கையளித்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- கைத்தொழில் மேம்படுத்தலும் அபிவிருத்தியும்
- வியாபாரக் கண்காட்சிகளை நடாத்துதல்
- உள்நாட்டுச் சந்தையில் நுகர்வுப் பொருட்களின் தரமான நிலை மற்றும் நிலுவையின்றி சாதாரண விலையில் வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
- 1949 இன் 6 ஆம் இலக்க ஈட்டு அதிகாரச்சட்டத்தின் 114 ஆவது பிரிவின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரித்தல்.
- நுகர்வோர் பொருட்களுக்குரிய தேசிய விலைக் கொள்கை வழங்கல் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடல்
- நுகர்வோர் பாதுகாப்பிற்கான வழிமுறைகளை எடுத்தல்
- இலங்கை கைப்பணிக் கைத்தொழில் உற்பத்திகளுக்காக அலங்கார அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்களைச் செய்தல்
- புலமைச் சொத்துக்கள் தொடர்பான சர்வதேச அமைப்பை நிர்வகிப்பதற்குரிய பணிகளின் வெளியிடல் உரித்து மற்றும் சர்வதேச புலமைச் சொத்து தொடர்பான அலுவலகங்களின் வெளியிடல் உரித்து தொடர்பான நடவடிக்கைகள்
- சீனிக் கைத்தொழிலுக்குரிய அரசாங்க வளங்களை முகாமைத்துவம் செய்தலும் பாதுகாத்தலும்.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் மேற்கூறப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## கைத்தொழில் பேட்டைகளின் நிர்மாணம்

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் அபிவிருத்திப் பிரிவினால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 55 கர்மாந்தபுற இன் நடவடிக்கைகளுக்காக ரூபா 556.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 கர்மாந்தபுற இன் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 153.88 மில்லியன்

செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்த செலவினங்களுக்கு நிகராக பௌதீக செயல் முன்னேற்றமொன்று அடையப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்திற்காக ரூபா 0.32 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. முதலீட்டுச் சந்தர்ப்பங்களை அதிகரித்தல், பிரதேசத்தின் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புக்களை கட்டியெழுப்பும் நோக்கில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட 02 கர்மாந்தபுற இற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய காணிகள் இனங்காணப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### அரிசி பாதுகாப்பு இருப்பினைப் பேணல்

2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை உணவு ஆணையாளர் திணைக்களம் தயாரித்திருந்த சுட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான மெ.தொன் 50,000 பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு இணங்க மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது மெ.தொன் 50,000 அரிசி பாதுகாப்பு இருப்பொன்றை பேணிச் செல்ல வேண்டியமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெயாங்கொட 9 ஆம் 10 ஆம் இலக்க களஞ்சியங்களை விஞ்ஞான ரீதியான களஞ்சியமாக ஆக்குவதற்கு ரூபா 43.72 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 யூன் 30 ஆந் திகதி வரையான காலத்தில் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான களஞ்சியங்களில் எவ்வித பாதுகாப்பு அரிசி இருபொன்றும் காணப்படவில்லை. உணவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான வெயாங்கொட களஞ்சிய சுற்றாடலில் 05 களஞ்சியங்களை விஞ்ஞான ரீதியான களஞ்சியமாக அபிவிருத்தி செய்வதற்காக 2016 ஏப்ரல் 27 ஆந் திகதி அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் ரூபா 214.00 மில்லியன் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 38.22 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

### தேசிய மட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களைத் தாபித்தல்

தேசிய மட்டத்தில் 16 கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபிப்பதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 03 சங்கங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

### கூட்டுறவுச் சங்கங்களின் மோசடிகளைக் குறைத்தல்

கூட்டுறவுச் சங்கங்களில் காணப்படுகின்ற மோசடிகளைக் குறைப்பதற்காக உரிய பரிசோதனை நடவடிக்கைகளை நடாத்துவதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் திட்டமிட்டிருந்த போதிலும், அது தொடர்பாக திணைக்களத்தால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போது கூட்டுறவுச் சங்கங்களில் காணப்பட்ட பிணக்குகளைத் தீர்த்தல் மற்றும் 750 நிதிமன்ற வேண்டுதல்களை முடிவுறுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அதில் உள்ளபடியாக 129 இற்கு மாத்திரமே தீர்வு வழங்கப்பட்டிருந்தது.

## கூட்டுறவுச் சங்கங்களில் பங்களிப்புப் பணம் அறவிடல்

2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தின் போது கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் பங்களிப்புப் பணமாக ரூபா 44.77 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அதில் ரூபா 4.87 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கூட்டுறவு மிகை மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடனில் ரூபா 616.18 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது, அறவிட வேண்டியிருந்த போதிலும், ஆண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 3,000 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

## 1977 செயற்திட்டங்களை ஸ்தாபித்தல்

நுகர்வோர் அதிகாரசபைக்கு விரைவாக முறைப்பாடுகளை சமர்ப்பித்தல் மற்றும் நுகர்வோர்களுக்கும் விவசாயிகளுக்கும் சந்தையில் மொத்த மற்றும் சில்லறை விலைகளை அறித்து கொள்வதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது, ரூபா 9.19 மில்லியன் செலவிடப்பட்டு "1977 செயற்திட்டம்" ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளை கையேற்பதற்காக உத்தியோகத்தரொருவர் தொடர்புபடுத்தப்படாதிருந்தமையால் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. நுகர்வோர் அலுவல்கள் தொடர்பான அதிகாரசபையினால் சந்தை விலைத் தகவல்கள் நாளது வரையாக்கப்படாதிருந்தமையினால் இந்த செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## வியாபார அடையாளங்களை பதிவு செய்தல்

மீளாய்வாண்டின் போது இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தினால் பதிவு செய்யப்பட்ட வியாபார அடையாளங்களின் எண்ணிக்கை 3312 ஆக இருந்ததுடன் அவற்றைப் பதிவு செய்வதற்காக 01 வருடம் முதல் 39 வருடங்கள் வரையிலான காலமொன்று எடுத்திருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பதிவு செய்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 55,506 ஆக இருந்தன. 2016 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டிருந்த கைத்தொழில் திட்டங்களின் எண்ணிக்கை 34 ஆக இருந்ததுடன் அதில் 2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைத்த விண்ணப்பங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் கைத்தொழில் திட்டத்திற்கான விண்ணப்பங்களைப் பதிவு செய்தல் 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையிலான காலம் எடுத்திருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை 825 ஆகும்.

## பேடன்ட் அனுமதிப்பத்திரம் பதிவு செய்தல்

மீளாய்வாண்டின் போது இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்டிருந்த பேடன்ட் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 124 ஆக இருந்தது. அந்த பேடன்ட் அனுமதிப் பத்திரத்தைப் பதிவு செய்வதற்காக 09 மாதங்கள் முதல் 16 வருடங்கள் வரையிலான காலவீச்சினை எடுத்திருந்தது. பேடன்ட் அனுமதிப் பத்திரம் பதிவு செய்வதற்காக அதிகளவான காலம் எடுத்திருந்தமையால் புதிய புத்தாக்குனர்களுக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு இருந்த ஆர்வம் குறைந்து செல்லும் போக்கொன்று காணப்பட்டது.

அவ்வாறே பேடன்ட் அனுமதிப்பத்திரம் மற்றும் கைத்தொழில் திட்ட அனுமதிப்பத்திரங்களைக் கையளித்தல் தொடர்பாக 11 வெளித்தரப்பினர்களால் இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 11 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மேலும், அலுவலகத்தால் பதிவு செய்யப்பட்ட 131 வியாபார அடையாளங்களுக்குரியதாக வெளித்தரப்பினர்களால் தொடரப்பட்டிருந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக சாட்சியாளர் ஒருவராக இலங்கை புலமைச் சொத்து அலுவலகம் ஆஜராகியிருந்தது.

### வியாபார அடையாளங்களை சர்வதேச ரீதியாகப் பதிவு செய்தல்

வியாபார அடையாளங்களை சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்கான "மெட்ரீட் ஒன்றிணைவு பத்திரத்தில் நுளையும் செய்திட்டம்" இற்காக வரிசை அமைச்சினால் ரூபா 38.00 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், இலங்கை புலமைச் சொத்து அலுவலகத்தினால் ரூபா 37.96 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாடுகள் பௌதீக வளங்களைக் கட்டியெழுப்புவதற்காக செலவிடப்பட்டிருந்தது. 2016 மே 15 ஆந் திகதி முதல் 2018 மே 14 ஆந் திகதி வரை மாதத்திற்கு ரூபா 175,000 வீதம் வாடகையொன்று செலுத்தும் அடிப்படையில் கட்டிடமொன்று வாடகைக்குப் பெறப்பட்டு 2017 மே மாதம் வரை கூட்டுமொத்தமாக ரூபா 2.43 மில்லியன் வாடகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 3.88 மில்லியன் செலவில் அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத்தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பொருட்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. சட்டர் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு ரூபா 32.50 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 யூன் 28 ஆந் திகதி வரையிலும் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை.

### புடவை மற்றும் ஆடைத் துறைகள் தொடர்பான பட்டப்பின்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம் 2009 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் 06 வருட காலத்தை கடந்திருந்தது. 2009 இன் 12 ஆம் இலக்க இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவன அதிகாரச்சட்டத்தின் 04(அ) பிரிவின் பிரகாரம் புடவை மற்றும் ஆடைத் துறைகள் தொடர்பான பட்டப் பின்பிடிப்பு மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தேவையான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### தரச்சான்றிதழ் விநியோகித்தல்

சர்வதேச மற்றும் தேசிய நியமங்களுக்கும் மற்றும் கம்பனி நியம முறைமைகளுக்கும் இணங்க புடவை மற்றும் ஆடைகள் கைத்தொழிலில் தொடர்ந்து ஈடுபடுகின்ற நபர்களுக்கு தரச்சான்றிதழ் விநியோகித்தல், இலங்கை புடவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் நோக்காக இருந்த போதிலும், நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற பாடநெறிக்காக தேசிய தொழிற்தகைமை மட்டத்தில் தகைமைத் தரம் (NVQ) பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின்

இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### ஆட்சேர்ப்பு நடைமுறையினை அங்கீகரித்தல்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனியால் ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரித்துக் கொள்ளப்படாதிருந்ததுடன் முறையற்ற பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே தகைமைகளைத் தீர்மானிக்காமலும் உரிய திட்ட முறைமைகளை பின்பற்றாமலும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 04 முகாமைத்துவ நிபுணர்களுக்காக ரூபா 186 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 3075 ஆக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் உள்ளபடியான பதவியணியினர் 3641 ஆனமையால் மிகையான பதவியணியினர் 566 ஆகும்.

### பதவியணியினர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல்

2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணானதாக உரித்தற்ற 22 உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க வணிக (பலநோக்கு) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 13.63 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1.05 மில்லியன் போக்குவரத்துப்படியாக கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

அரசாங்க பெறுகைகள் நடைமுறைகள் பின்பற்றப்படாமை

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்தால் ரூபா 108.36 மில்லியன் தொகையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் சுற்றாடல் மற்றும் சந்தை ஆராய்ச்சிகளின்றி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 107.39 மில்லியன் கிரயமான 50 நடமாடும் களஞ்சியங்களுக்கிடையே ரூபா 75.17 மில்லியன் கிரயமான 35 நடமாடும் களஞ்சியங்களை விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது. அந்த நடமாடும் களஞ்சியங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்ட ரூபா 81.64 மில்லியன் குறுங்காலக் கடனுக்கான வட்டியாக ரூபா 0.70 மில்லியன் தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# போக்குவரத்து

இலங்கை, வலயத்தினுள் முதன்மையான பொதுமக்கள் கேந்திர முறைமையுடனான நாடாகக் கட்டியெழுப்பி தனது நோக்கின் கீழ் மற்றும் மக்களின் வாழ்க்கைநிலையை கட்டியெழுப்பும் வகையில் புதிய தொழில்நுட்ப ரீதியான உபாயங்களைப் பயன்படுத்தி மிகவும் உயர்ந்த போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை அமுல்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நிலைபேறாக நடாத்திச் செல்வதும் இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் 18 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் கீழ் இலங்கை போக்குவரத்துச் சபை, இலங்கை புகையிரதத் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம், விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் கம்பனி, சிவில் விமான சேவை அதிகாரசபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்பன ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களினால் உரிய செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டின் அமைச்சு தொடர்பான முக்கியமான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### மாத்தறை முதல் கதிர்காமம் வரையான புதிய புகையிரத பாதை

மீளாய்வாண்டின் போது அமைச்சு வெளிநாட்டு நிதிக் கடனின் கீழ் மாத்தறை முதல் கதிர்காமம் வரை புதிய புகையிரதப் பாதையை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தில் கடன் உடன்படிக்கை மற்றும் நிர்மாண உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 36,166 மில்லியன் ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபா 18,915 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் ரூபா 6,461 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டில் 66 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு 2016 யூலை 31 இல் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறு பௌதீக செயல்முன்னேற்றம் 72 சதவீதமானதால் இதன் நிர்மாணித்தல் காலம் 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

மாத்தறை முதல் கதிர்காமம் வரை புதிய புகையிரத வீதி செயற்திட்டத்தின் கீழ் மதியுரை ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 327 மில்லியன் ஓட்டுமொத்தமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்காக மதியுரை ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படாமையினால் ரூபா 28.57 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையொன்று செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட திகதியான 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் சேமிக்கப்பட்டிருந்தது.

### புகையிர வீதிச் செயற்திட்டம்

07 புகையிரத வீதி செயற்திட்டங்கள், புதிய புகையிரத வீதி அபிவிருத்திச் செயற்திட்டமாக இனங்காணப்பட்டு அதற்காக 06 வருட காலம் முதல் வருடாந்தம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 06 செயற்திட்டங்களுக்காக ரூபா 41 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 39.9 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

### புகையிரத போக்குவரத்து

இலங்கை புகையிரத போக்குவரத்துத் திணைக்களம் நாளொன்றிற்கு அண்ணளவாக 326 பயணிகள் புகையிர சேவைகளின் மூலம் நாடுமுழுவதும் 378 தரிப்பிடல் நிலையங்களுடாக அண்ணளவாக 370,000 எண்ணிக்கையிலான பிரயாணிகளை மொத்தமாகப் போக்குவரத்துச் செய்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

### இலங்கை புகையிரத சேவையின் செயற்பாட்டு நட்டம்

2016 ஆம் ஆண்டின் போது இலங்கை புகையிரத சேவையின் செயற்பாட்டு நட்டம் ரூபா 6,773 மில்லியனாக இருந்தது. அது 2012 ஆம் ஆண்டில் ரூபா 3,796 மில்லியன் செயற்பாட்டு நட்டத்துடன் ஒப்பீடு செய்த போது 78.42 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் செயற்பாட்டு வருமானம் ரூபா 1,771 மில்லியனால் அதாவது 36.50 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டு வரையில் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,748 மில்லியனால் அதாவது 54.90 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. விபரம் அட்டவணை 32 இல் காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம், செலவினம் மற்றும் செயற்பாட்டு நட்டம் | 2012 ரூபா மில்லியன் | 2013 ரூபா மில்லியன் | 2014 ரூபா மில்லியன் | 2015 ரூபா மில்லியன் | 2016 ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானம் | 4,852 | 5,425 | 5,910 | 6,335 | 6,623 |
| செயற்பாட்டு செலவினம் | 8,648 | 10,586 | 16,943 | 14,048 | 13,396 |
| செயற்பாட்டு நட்டம் | 3,796 | 5,161 | 11,033 | 7,713 | 6,773 |
| செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமான செயற்பாட்டு நட்டம் | 78.24 | 95.13 | 186.68 | 121.75 | 102.26 |

அட்டவணை :- 32 இலங்கை புகையிரத திணைக்களத்தின் செயற்பாட்டு வருமானம், செலவினம் மற்றும் நட்டம்.
மூலம் :- இலங்கை புகையிரத திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கை 2016

2012 ஆம் ஆண்டின் செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக செயற்பாட்டு நட்டம் 78 சதவீதம் முதல் 2016 ஆம் ஆண்டு வரையில் 102 சதவீதம் வரை சீராக அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது அந்த சதவீதம் 187 சதவீதமாக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டு வரையில் அது 102 சதவீதம் வரை சீராக குறைவடைந்திருந்தது. விபரம் உரு 28 இல் காண்பிக்கப்படுகின்றது.




உரு 28 இலங்கை புகையிரத் திணைக்களத்தின் செயற்பாட்டு இலாபத்தின் சதவீதமாக செயற்பாட்டு நட்டம்.
மூலம் :- இலங்கை புகையிர திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கை - 2016

### திட்டமிடப்பட்ட பிரகாரம் புகையிரம் ஓடுதல்

2015 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட பயணிகள் புகையிரதங்களின் எண்ணிக்கையில் 97.35 சதவீதம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது அது 97.81 சதவீதமாக இருந்தது. எனினும் திட்டமிடப்பட்ட புகையிரத தடவைகளின் அளவினை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் 8.4 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 3.9 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### குறிப்பிட்ட நேரத்தில் புகையிரம் பயணத்தை ஆரம்பித்தல்

திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்த நேரத்தில் பயணிகள் புகையிரதம் ஓடுதல் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட புகையிரத ஓட்டத் தடவைகளின் எண்ணிக்கையில் 39.49 சதவீதமாகவும் அது 2016 ஆம் ஆண்டின் போது 47.47 சதவீதமாகவும் பயணிகள் புகையிரம் குறித்த நேரத்தில் பிரயாணத்தை ஆரம்பித்திருந்தது. திட்டமிடப்பட்ட நேரத்தை விட 6 நிமிடங்கள் முதல் 59 நிமிடங்கள் வரையிலான காலதாமதத்தின் பின்னர் பிரயாணத்தை ஆரம்பித்த தடவைகளின் எண்ணிக்கை திட்டமிடப்பட்ட புகையிரத ஓட்டத் தடவைகளின் எண்ணிக்கையில் 52.21 சதவீதம் 2015 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது 2016 ஆம் ஆண்டின் போது 45.20 சதவீதமாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது குறித்த நேரத்தை விட ஒரு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட தாமதத்துடன் ஓடிய புகையிரத தடவைகளின் எண்ணிக்கை திட்டமிடப்பட்ட புகையிரத தடவைகளின் எண்ணிக்கையில் 5.65 சதவீதமாக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அது 5.14 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. திட்டமிடப்பட்ட பிரகாரம் புகையிரம் ஓடப்படாது புகையிரத பயணத் தடவைகள் இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டின் போது 2.65 சதவீதமாகவும், 2016 ஆம் ஆண்டின் போது அது 2.19 சதவீதம் வரையும் குறைவடைந்திருந்தது.

### புகையிரத பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தல்

2015 ஆம் ஆண்டின் போது 133.29 மில்லியன் பயணிகள் போக்குவரத்துச் செய்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது அந்த எல்லையை விஞ்சி 2.76 மில்லியன் பயணிகள் போக்குவரத்துச் செய்திருந்தனர். எனினும், போக்குவரத்துச் செய்த பயணிகளின் எண்ணிக்கையை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் 2.93 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் அது 2.07 சதவீதமாகக் காணப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டின் போது அதிகரிப்பில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

### புகையிரத பயணிகள் போக்குவரத்து வருமானத்தின் செயற்திறமை

2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 10 சதவீத வருமானமொன்றை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது 2015 இல் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானமாக ரூபா 6,000 மில்லியன் ஆகவும், 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 6,300 மில்லியன் ஆகவும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அது 2015 இன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானத்தில் 5 சதவீத அதிகரிப்பாகும். அதன் படி

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் இலக்கின் பிரகாரம் மதிப்பீடு தயாரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் புகையிரத்தின் மூலம் செல்லுபடியான பிரயாணச்சீட்டு இன்றி பிரயாணம் செய்த பயணிகளின் எண்ணிக்கை 13,267 ஆக இருந்தன. அது மாதமொன்றிற்கு அண்ணளவாக 1,106 பயணிகளின் எண்ணிக்கையாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அந்த எண்ணிக்கை முறையே 12,826 மற்றும் 1,069 ஆக இருந்தது. இதன் பிரகாரம் செல்லுபடியான பிரயாணச்சீட்டு இன்றி பிரயாணம் செய்கின்ற பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் உள்ளகக் கட்டுப்பாட்டின் நலிவினால் கணிசமான எண்ணிக்கையில் பயணிகள் புகையிரத பயணச்சீட்டு இன்றி பிரயாணங்களை மேற்கொள்வதனால் திணைக்களத்திற்கு வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்காக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய முறைமையொன்றை பயன்படுத்துவதற்கு திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### பொருள் போக்குவரத்து வருமானத்தின் செயற்திறமை

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் பொருள் போக்குவரத்து மெட்ரிக் தொன் 8.10 சதவீதத்தாலும், பொருள் கொண்டுசென்ற கிலோமீற்றர் 7.6 சதவீதத்தாலும் மற்றும் பொருள் போக்குவரத்து வருமானம் 5.3 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன. மேலும், புகையிரமொன்றிலிருந்து ஒரு மெட்ரிக் தொன்னை ஒரு கிலோமீற்றர் தூரம் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 58.10 கிரயம் ஏற்பட்டிருந்தது. புகையிரதத்திலிருந்து ஒரு மெட்ரிக் தொன் பொருட்களை போக்குவரத்துச் செய்வதனால் 01 கிலோமீற்றருக்கு உழைக்கக்கூடியதாக இருந்த வருமானம் ரூபா 1,024.20 ஆக இருந்ததது. அதற்கான கிரயத்துடன் ஒப்பீடு செய்த போது திணைக்களத்திற்கு ரூபா 966.10 வருமான மிகையொன்றை பெறக்கூடிய இயலுமை காணப்பட்டது.

### உள்நாட்டு நிதியத்திலிருந்து நிதியீட்டம் செய்யப்பட்ட செயற்திட்டங்கள்

புகையிரதத் திணைக்களத்தின் செயற்திட்ட இலக்கம் 4 இன் கீழ் திட்டமிடப்பட்ட ரூபா 4,664 மில்லியன் தொகையான 10 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 992 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடைய 09 செயற்திட்டங்களின் நிதிசார் செயலாற்றல் 01 சதவீதம் முதல் 49.99 சதவீத வீச்சினைக் கொண்டிருந்ததுடன் ஒட்டுமொத்த செலவினத்தின் செயலாற்றல் 17.49 சதவீதமாக இருந்தது. 2016 ஆம் ஆண்டில் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூபா 14,931.38 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 10,961.44 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### வாடகை வருமானம்

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளை வெளித்தரப்பினர்களுக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையில் நிலுவை வருமானம் ரூபா 1,887.9 மில்லியனாக இருந்தது.

### மரணப் பணிக்கொடை செலுத்தப்படாமை

புகையிரதத் திணைக்களத்தில் சேவையாற்றிக் கொண்டிருந்த போது மரணமடைந்த உத்தியோகத்தர்களுக்கு உரித்தான பணிக்கொடைகள் பராயமடையாத பிள்ளைகளுக்காக செலுத்துதல் தொடர்பான பரீட்சிப்பின் போது 1927 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை 1,482 பராயமடையாத பிள்ளைகளுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 1.55 மில்லியன் தொகையான உரித்தையும், 1996 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலஎல்லையில் மரணமடைந்த 646 உத்தியோகத்தர்களின் பராயமடையாத பிள்ளைகளின் உரித்துக்களைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### களஞ்சிய முற்பணக் கணக்கு

1999 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை இறக்குமதி செய்யப்பட்ட 223 இருப்புத் தொகுதிக்குரியதாகச் செலுத்தப்பட்ட சுங்கக் கட்டணம் மற்றும் ஏனைய வரிகளுக்காக ரூபா 166.16 மில்லியன் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அந்த இருப்பு திணைக்களத்திற்கு கிடைத்தமை பற்றி கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை 35 வருட கால எல்லையில் வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 12.06 மில்லியன் முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்குரிய ரூபா 10.89 மில்லியான கூட்டுமொத்தமாக ரூபா 22.95 மில்லியன் தொகையான முற்பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையான வேலைத் திட்டமொன்று திணைக்களத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2016 ஆம் ஆண்டின் போது 28 சந்தர்ப்பங்களில் 159 விலைப்பட்டியல்களுக்காக 02 நாட்கள் முதல் 994 நாட்கள் வரையிலான காலவீச்சில் பொருட்களை விடுவித்தல் தாமதப்படுத்தப்பட்டமையினால் ரூபா 2.44 மில்லியன் தாமதக் கட்டணமாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பயனின்றி செலுத்தப்பட்டிருந்தது.

1980 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான 36 வருட காலப்பகுதியில் பொருட்கள் குறைவாகப் பெறப்பட்டமை திணைக்களத்தின் தேவையின் பிரகாரம் கிடைக்காமை மற்றும் சேதாரங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 78.72 மில்லியனாக இருந்தது.

2011 ஆம் ஆண்டின் போது ரூபா 5.09 மில்லியன் நாணயக் கடிதம் விநியோகிக்கப்பட்டு 1,000 இலத்திரனியல் கட்டுப்பாடுகள் கட்டளையிடப்பட்டதன் பின்னர் அந்தப் பொருட்கள் களஞ்சியத்திற்குக் கிடைத்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட மாதிரிகளுக்கு இணங்காமையின் அடிப்படையில் அது தொடர்பாக உரிய கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2015 யூன் 07 ஆந் திகதி அந்தக் கம்பனியின் உத்தியோகத்தர்கள் திணைக்களத்திற்கு வருகை தந்து அந்தச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பமொன்று கோரப்பட்டிருந்தது. 2017 யூன் மாதம் வரை வழங்குனருக்கு அந்தப்பணிகளை பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பம் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் இருப்பு விடயங்களின் பெறுமதி ரூபா 5.09 மில்லியன் தொகையான பொருட்கள் 06 வருடகாலம் முழுவதும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## புகையிரத எந்திரம் கொள்வனவு செய்தல்

2001 ஆம் ஆண்டின் போது ரூபா 810 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட M9 வகையின் 05 எந்திரங்கள் 2004 ஆம் ஆண்டு முதல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. M9 873 என்ற எந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் இரண்டு வருட காலம் அளவில் ஓட முடியுமாக இருந்தது.

## வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

1998 இன் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன திருத்த அதிகாரச் சட்டத்தின் 213(அ) பிரிவின் பிரகாரம் 2005 ஏப்ரல் மாதத்தின் போது இலங்கை சனநாயகக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. வீதிப் பாதுகாப்பின் நோக்கங்களுக்காக மூன்றாம் தரப்பினரின் ஆபத்துத் தொடர்பாக சந்தர்ப்பத்திற்கேற்ற பிரகாரம் காப்புறுதி உறுதி அல்லது பிணையொன்று உரித்தான காப்புறுதியாளர் அல்லது நபரினால் நிதியத்திற்கு தவணைப்பணத்திலிருந்து 01 சதவீத பங்களிப்புப் பணம் வருடாந்தம் செலுத்த வேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஏற்பட்ட வாகன விபத்துக்களில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 13,050 ஆகவும், உயிரிழப்பு விபத்துக்கள் 12,181 ஆகவும் மோசமான காயங்கள் 37,801 ஆகவும் சிறுகாயங்கள் 68,134 ஆகவும் மற்றும் நட்டங்களின் எண்ணிக்கை 73,979 ஆகவும் அறிக்கையிடப்பட்டிருந்தன. அதில் இனங்காணப்படாத வாகனங்கள் மூலம் ஏற்பட்ட விபத்துக்கள் எவ்வளவு என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வீதி விபத்துக்களிலிருந்து மரணமடைந்த எண்ணிக்கை முன்னைய ஆண்டை விட 07 சதவீத அதிகரிப்பொன்று மீளாய்வாண்டின் போது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது 88 இழப்பீடு செலுத்தும் விண்ணப்பங்கள் சபைக்குக் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 7.7 மில்லியன் இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- வீதிப் பாதுகாப்பு தொடர்பாக தேசிய சபை மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் 213(அ) பிரிவின் பிரகாரம் 2005 ஏப்ரல் மாதத்தில் இலங்கை சனநாயகக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த சபை 2010 ஆகஸ்ட் மாதத்தில் வீதிப்பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைக்குப் பதிலாக அதன் கூட்டிணைப்பு கட்டமைப்பு செயற்பொறுப்புக்களை உள்ளடக்கிய புதிய அதிகாரச்சட்டமொன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் என்பவற்றை உள்ளடக்கிய 04 விடயங்களுக்காக அமைச்சரவைக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டு அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், உரிய அங்கீகாரம் கிடைத்து 06 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும் நியதிச் சட்ட நிறுவனமாக தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டில் நிரந்தர அபிவிருத்தி தொடர்பாக உள்ளக அரசாங்க திறந்த செயற்பாட்டுக் குழுவினால் 2030 ஆம் ஆண்டின் போது அடைந்து கொள்ள வேண்டிய நிலைபேறான 17 அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அதனுடன் இணைந்த

169 நோக்கங்கள் முன்மொழியப்பட்டிருந்தது. நிறைபேறான 03 அபிவிருத்தி இலக்குகளின் மூலம் வாகன விபத்துக்களிலிருந்து ஏற்படுகின்ற மரணங்கள் மற்றும் காயத்திற்குள்ளாகின்றவர்களின் அளவினைக் குறைப்பதற்கான இலக்கை எட்டவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் அந்த இலக்கிற்குரிய திட்டங்களும் செயலாற்றல் குறிகாட்டிகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- சபை தோற்றுவித்தலில் 11 பிரதான பணிகள் குறிப்பாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், சபை ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும் அந்த செயற்பாடுகளில் 02 செயற்பாடுகளுக்கு மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. ஏனைய பணிகளுக்காக நீண்டகால திட்டமோ அல்லது வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமோ உள்ளடக்கப்பட்டு அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

## இலங்கை போக்குவரத்துச் சபை

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 108 பிரதான டிப்போக்களினையும் 15 உப டிப்போக்களினையும் உள்ளடக்கியதாக அமுல்படுத்துவதுடன் தலைமை அலுவலகத்தை உள்ளடக்கிய 13 பிரதேச அலுவலகங்களையும் 11 பிரதேச வேலைத் தலங்களையும் 21 சாரதி பயிற்சி பாடசாலைகளையும் 05 சுற்றுலா விடுதிகளையும் மற்றும் 01 ஓய்வு மண்டபத்தையும் உள்ளடக்கியிருந்தன. இலங்கை போக்குவரத்துச் சபையினால் நிறைவேற்றப்பட்ட பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### பேரூந்துகளை பயணத்தில் ஈடுபடுத்துதல்

சபையின் நேர அட்டவணையின் தேவையின் அடிப்படையில் ஓட்டத்தில் ஈடுபட்ட பேரூந்துகளின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டின் போது 56 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், அது 2016 ஆம் ஆண்டு வரையில் சீராக அதிகரித்து 72 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே சபையினால் வருடாந்தம் ஓடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கிலோமீற்றர் எண்ணிக்கையில் 2012 ஆம் ஆண்டின் போது 56 சதவீதம் ஓடியிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு வரையில் அது 72 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. எதிர்பார்க்கப்பட்ட கிலோமீற்றர் அளவில் 28 சதவீதம் தொடர்ந்தும் ஓடுவதற்கு முடியாதிருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் 2,200 பேரூந்து வண்டிகள் கிடைத்திருந்த போதிலும், நாளாந்தம் ஓட்டத்தில் ஈடுபட்ட பேரூந்துகளின் அளவு அதன் பிரகாரம் அதிகரித்திருக்கவில்லை. முன்னைய 05 வருட காலத்தில் சபையின் பேரூந்துகளின் ஓட்டத்தின் செயல்முன்னேற்றம் அட்டவணை 33 இல் காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|
| நாளாந்த பேருந்து அணி | 7,768 | 7,779 | 7,669 | 7,143 | 7,756 |
| நாளாந்த நேர அட்டவணையின் தேவை | 7,257 | 7,235 | 7,204 | 7,168 | 7,172 |
| நாளாந்த ஓட்டத்தில் ஈடுபட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | 5,314 | 5,270 | 4,596 | 4,806 | 4,694 |
| நாளாந்த நேர அட்டவணைகளின் தேவையின் சதவீதமாக ஓட்டத்தில் ஈடுபட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | 73 | 73 | 64 | 67 | 61 |
| ஓட்டத்தில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கிலோமீற்றர் அளவு மில்லியனில் - ஆண்டிற்கு | 629.61 | 643.18 | 616.85 | 603.09 | 609.65 |
| ஓட்டத்தில் ஈடுபட்ட கிலோமீற்றர் - மில்லியன் அளவில் - ஆண்டிற்கு | 451.52 | 440.42 | 371.24 | 343.70 | 337.83 |
| ஓட்டத்தில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கிலோமீற்றர் மில்லியன் அளவில் ஓட்டத்தில் ஈடுபட்ட கிலோமீற்றர் அளவு சதவீதமாக | 72 | 68 | 60 | 57 | 55.5 |

அட்டவணை 33 சபையின் பேருந்து பயணங்களின் செயல்முன்னேற்றம்
மூலம் :- பேருந்து அணிகளின் நிலைமை அறிக்கை, ஓ.5 அறிக்கை, வருமானக் கூற்று

### முற்பணம் தீர்க்கப்படாமை

சபையின் தலைமை அலுவலகத்தால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணக் கணக்குகளுக்குரிய உதிரிப்பாகங்கள் தலைமை அலுவலகத்திற்கு பெறப்படாமல் அவற்றை நேரடியாக டிப்போக்களுக்கு வழங்கியமையால் தலைமை அலுவலகத்தின் கொள்வனவுகள் முற்பணக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,831.86 மில்லியன் தீர்க்கப்படாத மீதியொன்று காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கொள்வனவு முற்பணக் கணக்கின் மீதி ரூபா 1,907.29 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. உரிய வழங்குனரினால் உதிரிப்பாகங்கள் டிப்போக்களுக்கு வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### திட்டமிடப்பட்ட பிரகாரம் நிலுவை ஊழியர் சேமலாப நிதியத்தை செலுத்துவதற்கு முடியாமை

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 42 ஆசனங்கள் மற்றும் 54 ஆசனங்களுள்ள 2200 பேருந்து வண்டிகளை இந்தியாவின் அசோக் லேலண்ட் கம்பனியிலிருந்து அமெரிக்க டொலர் 72.62 மில்லியனுக்கு அதாவது அண்ணளவாக ரூபா 10,331.78 மில்லியனுக்கு குத்தகை முறையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கொள்வனவுகளுக்காக 2013 ஒக்தோபர் 17 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அதில் குறிப்பிடப்பட்ட சபைக்குச் சொந்தமான பொருளாதார ரீதியில் நலனற்ற பழுதுபார்க்க முடியாத பேருந்து வண்டிகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற பணத்திலிருந்து நிலுவையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றைச் செலுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2014 ஆம் ஆண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட

1,239 பேரூந்துகளிலிருந்து ரூபா 182 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் அமைச்சரவையினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்ளை நிறைவேற்றுவதற்கு சபை தவறியிருந்தது.

### வங்கி மேலதிகப்பற்று அதிகரித்தல்

மக்கள் வங்கியில் வங்கி மேலதிகப்பற்று வசதிகள் ரூபா 721.62 மில்லியனாக இருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், மேலதிகப்பற்று ரூபா 745.22 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. வங்கி மேலதிகப் பற்றுக்காக வங்கி காப்பீடொன்றாக ரூபா 325.00 மில்லியன் தொகையான நிலையான வைப்புக் கணக்கு பேணப்பட்டிருந்ததுடன் வங்கி மேலதிகப் பற்றுக்காக மாதாந்தம் 17 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் ரூபா 10.3 மில்லியன் மாதாந்தம் சராசரி வட்டித் தொகை செலுத்தப்பட்டிருந்தது. வங்கி காப்பீடாக வைக்கப்பட்ட வைப்பிற்காகக் கிடைத்த வட்டியையும் வங்கி மேலதிகப் பற்று வட்டியையும் ஒப்பீடு செய்த போது தேறியதாக மாதாந்தம் ரூபா 7 மில்லியன் அளவில் வட்டிக் கிரயமொன்று சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

### மிகையான பதவியணியினர்

2016 ஆம் ஆண்டு வரையில் சுயவிருப்பில் ஓய்வுப்பெறச் செய்யும் உத்தேசத்திட்டத்தின் கீழ் ரூபா 6,555 மில்லியன் நட்டஈடு செலுத்தி 3,227 ஊழியர்களை ஓய்வு பெறச் செய்யப்பட்டதன் பின்னரும், சபையின் மொத்த பதவியணியினர் 31,495 ஆக இருந்தனர். அதில் உள்ளடங்கியுள்ள நிரந்தர பதவியணியினர் 30,524 ஆகும். முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட 24,886 பதவியணியினர் உடன் ஒப்பிடும் போது மேலும் சபையில் நிரந்தர பதவியணியில் 5,638 பேரின் மிகையொன்று காணப்பட்டது.

### சாரதி பயிற்சிக் கல்லூரியை நடாத்தச் செல்லல்

சபையின் மூலம் 19 சாரதி பயிற்சிக் கல்லூரிகள் நடாத்தப்படுவதுடன் 2014 ஆம் ஆண்டின் போது சாரதிகள் பயிற்சிக் கல்லூரியின் மூலம் ரூபா 32.28 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. அதற்காக ஏற்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 37.84 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 5.56 மில்லியன் தேறிய இலாபமொன்று பெறப்பட்டிருந்தது. 19 பயிற்சிக் கல்லூரிகளில் பொது மேந்தலைச் செலவினம் அதிகரித்தமை இந்த நட்டத்திற்கு காரணமாக இருந்ததுடன் சாரதி பயிற்சி கல்லூரிகளில் பயிற்சி மதியுடையாளர்களை உள்ளடக்கிய ஏனைய வளங்களை அதிகரித்து இலாபகரமானதாக நடாத்திச் செல்வதற்கு முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### பேரூந்துகளை புனரமைத்தல்

143 பேரூந்துகள் ரூபா 97.46 மில்லியனுக்கு புனரமைப்பதற்காக 2002 ஆண்டின் போது வெஸ்கோ நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எனினும் வெஸ்கோ நிறுவனம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்படு நிலையில் காணப்படாதிருந்ததுடன் உரிய பேரூந்துகள் மீண்டும் சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### சபையின் பேரூந்துகளுக்கு புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்

இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்துகள் புகைப்பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாமல் நாளாந்தம் ஓடியிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்குரிய 10 பிரதேசங்களில்

மொத்தமாக 6,729 பேரூந்துகளில் 5,356 பேரூந்துகள் புகைப்பரிசோதனை சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டிற்குரியதாகக் கிடைத்த தகவல்கள் படி 04 பிரதேசங்களில் மொத்த பேரூந்துகள் 2,810 இல் அதாவது பேரூந்துகளில் 2,010 பேரூந்துகள் மேற்கூறப்பட்ட சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமையினால் சுற்றாடலுக்கு ஏற்படும் இழப்பை கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

### ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் மிகைக் கட்டணம் செலுத்துதல்

சபையினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 9.200 மில்லியன் தொகை மற்றும் அதற்கான மிகைக் கட்டணம் ரூபா 4,212 மில்லியனுடன் ரூபா 13,412 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மேலும் செலுத்த வேண்டிய மீதி ரூபா 6,006 மில்லியனாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 52 மில்லியான இருந்ததுடன் அதற்கான மிகைக் கட்டணம் ரூபா 11 மில்லியனாக இருந்தது.

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

2017 மே 28 ஆந் திகதி கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் போக்குவரத்து ஆணைக்குழுவினால் 03 பிரதான வழிகளின் கீழ் கட்டணம் அறவிடப்பட்டு அட்டவணை 34 இல் காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

| விபரம் | அனுமதிப்பத்திர உரித்தாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| வருடாந்தம் ரூபா 3,000 புதுபித்தல் கட்டணம் மாத்திரம் செலுத்துகின்ற அனுமதிப்பத்திரதாரர்களின் எண்ணிக்கை (கேள்வியற்ற) | 2,284 |
| வருடாந்தம் ரூபா 15,000 புதுபித்தல் கட்டணம் மாத்திரம் செலுத்துகின்ற அனுமதிப்பத்திரதாரர்களின் எண்ணிக்கை (கேள்வியற்ற) | 717 |
| வருடாந்த புதுபித்தல் கட்டணம் ரூபா 3,000 மற்றும் வருடாந்த கேள்விப் பெறுமதி என்ற இரண்டையும் செலுத்தும் அனுமதிப்பத்திர தாரர்களின் எண்ணிக்கை | 276 |
| மொத்தம் | 3,277 |

அட்டவணை 34 :- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறவிடப்படுகின்ற கட்டணம்

மூலம் :- 2017 மே 28 ஆந் திகதி கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்கள்

## வீதி அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போது கட்டணம் சமமாக இன்மை

ஒரு வீதிக்காக வருடாந்தம் ரூபா 3,000 மற்றும் ரூபா 15,000 தொகை செலுத்தி அனுமதிப்பத்திரங்களை உரித்தாக்கிக் கொண்ட பேரூந்து உரிமையாளர்கள் மற்றும் அந்த வீதிகளுக்காக மேலுமொரு பகுதிக்கு ஆகக் குறைந்த தொழில்நுட்பக் கட்டணம் அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விப் பெறுமதியுடன் வருடாந்தம் புதுப்பிக்கும் கட்டணமாக ரூபா 3,000 செலுத்தி அனுமதிப்பத்திரத்தை உரித்தாக்கிச் கொண்ட பேரூந்து உரிமையாளர்கள் இருத்தலின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அறவிடப்படுகின்ற கட்டணங்களில் கூடுதலான சமத்துவமின்மைகள் எழுத்திருந்தன. அவ்வாறே 2017 மே 28 ஆந் திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த 3277 மொத்த அனுமதிப்பத்திரங்களில் 70 சதவீதமும் ரூபா 3,000 வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்த அனுமதிபதப்திரங்களில் 22 சதவீதத்திற்கு ரூபா 15,000 தொகை வருடாந்த புதுப்பித்தல் கட்டணத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மொத்த அனுமதிப் பத்திரங்களில் 92 சதவீதத்திற்கும் குறைவாக வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன.

## பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்கு அதிகாரச்சட்டத்தின் 25(ஆ) பிரிவின் பிரகாரம் ஒரு ஆண்டிற்கு குறையாத மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக அமுலாகும் வகையில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 யூலை 25 ஆந் திகதி முதல் 2016 திசெம்பர் 28 வரையிலான காலப்பகுதியில் அதிவேக வீதியில் மாத்திரம் 65 சொகுசு பேரூந்துகளுக்கும் 02 சாதாரண பேரூந்துகளுக்கும் நாளொன்றிற்கு ரூபா 2,500 தொகை அறவிட்டு தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆகக் குறைந்த தொழில்நுட்ப பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கேள்வி மூலம் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்காமையினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பாரியளவிலான அனுமதிப்பத்திர வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

## பேரூந்தின் மூலம் பயணிகளைப் போக்குவரத்துச் செய்யும் தேசிய கொள்கை தயாரித்தல்

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பயணிகள் போக்குவரத்துச் செய்வதற்குரிய தேசிய கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அந்தக் கொள்கையை நடைமுறைக்கு கொண்டுவருதல் அதன் பிரதான நோக்கமாக இருந்தது. எனினும் ஆணைக்குழுவினால் 2009 ஆம் ஆண்டின் போது தேசிய போக்குவரத்து கொள்கைளைப் போல போக்குவரத்து துறைக்குரிய தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றும் 2016 ஆம் ஆண்டின் போது தேசிய போக்குவரத்து புள்ளிவியல் அறிக்கையொன்றும் மாத்திரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பேரூந்தின் மூலம் பயணிகளைப் போக்குவரத்துச் செய்வதற்கான

தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### "கெமி செரிய" பேரூந்து சேவை

மீளாய்வாண்டின் இறுதியளவில் 40 கெமிசெரிய பேரூந்து சேவைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 03 சேவைகள் மாத்திரம் ஓடியிருந்தது. இதற்காக வழங்கப்பட்ட ரூபா 23.5 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் ரூபா 19.78 மில்லியன் நிதிஏற்பாடு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### மாகாணங்களுக்கிடையிலான வீதிகளின் நேர அட்டவணை தயாரித்தல்

மீளாய்வாண்டின் போது மாகாணங்களுக்கிடையிலான 514 வீதிகளுக்கு நேர அட்டவணை தயாரித்து அமுல்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 234 மாகாணங்களுக்கிடையிலான வீதிகளுக்கான நேர அட்டவணை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த மொத்த நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட பிரகாரம் 280 நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கு முடியாதிருந்தது.

### ஜீபீஎஸ் முறைமையைக் கட்டியெழுப்புதல்

ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 17.57 மில்லியன் செலவில் கணனி மற்றும் அச்சிடல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஜீபீஎஸ் முறைமையைக் கட்டியெழுப்புவதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக இலக்கிடப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 2100 ஆக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அந்த இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக தேவையான தரவு அனுப்பும் சிம் அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட தரவு அனுப்பும் 438 சிம் அட்டைகள் மூலம் ஜீபீஆர்எஸ் இன் 438 அலகுகள் செயற்படு நிலைக்கு கொண்டுவர முடியுமான போதிலும், 2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த இலக்கில் 79 சதவீத இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

### பேரூந்து நிறுத்தி வைக்கப்படும் இடங்களின் நிர்மாணம்

ஆணைக்குழுவினால் தனியார் பேரூந்துக் கைத்தொழிலை கட்டியெழுப்புதல், பேரூந்து சேவைகளின் தரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்ற செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது திறைசேரியிலிருந்து ரூபா 75 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட வேண்டிய ஹிங்குரக்கொட பேரூந்து நிறுத்திவைக்கும் இடம் மற்றும் பெஸ்தியன் மாவத்தை பேரூந்து நிறுத்தி வைக்கும் இடம் என்பன நவீனமயப்படுத்தப்படாமல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ரூபா 43 மில்லியன் நிதிஏற்பாடு REPO இல் முதலீடு செய்யப்பட்டு ரூபா 26.11 மில்லியன் ஆண்டின் இறுதியில் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### பேரூந்து நிறுத்திவைக்கப்படும் இடம் நிர்மாணிக்கப்பட்ட காணி கையேற்கப்படாமை

1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 12 மற்றும் 13 ஆம் பிரிவுகளின் பிரகாரம் காணி மற்றும் அரசாங்கத்தின் ஆதனங்கள் கையேற்க

முடியுமாக இருந்ததுடன் ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டின் போது பேரூந்து நிறுத்தி வைத்தல் இடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 68.47 மில்லியன் மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்கள் மற்றும் அது அமைந்துள்ள காணி என்பன போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தத் தொகை மூலதனச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்

1997 இன் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவன அதிகாரச்சட்டத்தின் 03 ஆவது பிரிவில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்களை உள்ளடக்கி 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்ட 9 நோக்கங்களில் மருத்துவ சான்றிதழ் விநியோகிக்கும் இலக்கிற்குரிய நோக்கம் மாத்திரம் 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய சகல நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்குரிய இலக்குகள் மற்றும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

# இளைஞர் விவகாரம்

அறிவு, திறமை நிறைந்த, நாடடுப்பற்றுள்ள சர்வதேசத்தை வெற்றி கொள்ளக்கூடிய ஒழுக்கமான இலங்கை இளைஞர் சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில், இளைஞர் அபிவிருத்திக்குரிய பிரதான 14 நோக்கங்களின் கீழ் தேசிய இளைஞர் சேவை மன்றம் செயற்படுகின்றது. இத்தேசிய செயற்பணிக்காக 2016 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 1,136 மில்லியனும், வெளிநாட்டு அமைப்புக்களிலிருந்து ரூபா 15 மில்லியனும், அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்து பெறுவனவுகள் ரூபா 375 மில்லியன் என ரூபா 1,526 மில்லியன் கிடைத்திருந்தது. மேலும் பாடநெறிக் கட்டணங்கள், பண்ணை வருமானம், ஏனைய உள்ளக உழைப்பு ரூபா 193 மில்லியனும் உட்பட மொத்த வருமானம் ரூபா 1,719 மில்லியனாக இருந்தது. அதற்கு ஒப்பாக ஆண்டின் மொத்த செலவினம் ரூபா 1,798 மில்லியனாக ஆக இருந்தது. மேற்குறித்த நோக்கங்களை முன்னுரிமையாக கொண்டு இளைஞர் அபிவிருத்திக்குரிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

சமூகத்தின் சனநாயக கட்டமைப்பிற்கும் இளைஞர் தலைமுறையை இணைத்துக் கொள்ளும் நோக்கில் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மொத்தம் ரூபா 224 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் செலவினத்தில் ரூபா 24 மில்லியன் அதாவது 50 சதவீதம் இளைஞர் பாராளுமன்ற தேர்தல்களை நடாத்துவதற்கு செலவிடப்பட்டிருந்த போதிலும் பதிவு செய்யப்பட்ட 334,026 வாக்காளர்களில் 33 சதவீதம் அதாவது 112,367 வாக்காளர்கள் மாத்திரம் வாக்களித்திருந்தனர்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான 5 பாராளுமன்ற கூட்டத்தொடர்களில் நடாத்தப்பட்ட 13 கூட்டத்தொடர்களுக்காக 2,925 உறுப்பினர்களின் பங்குபற்றுகை எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக 1,716 உறுப்பினர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். அவ்வாறே முதலாவது கூட்டத்தொடருக்கான உறுப்பினர்களின் வருகை 98 சதவீதமாக இருந்த போதிலும் 4 ஆவது மற்றும் 5 ஆவது கூட்டத் தொடர்களுக்கான வருகை 44 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

2015/2016 ஆம் ஆண்டிற்கான இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் 5.1 ஆம் நிலையியல் கட்டளையின் பிரகாரம் அதன் அறுதிப் பெரும்பான்மை 75 சதவீதமாக இருக்க வேண்டிய போதிலும் நான்காவது மற்றும் ஐந்தாவது கூட்டத்தொடர் முறையே 60 மற்றும் 57 உறுப்பினர்களின் பங்களிப்புடன் நடாத்தப்பட்டிருந்தன.

### "யூத் கொட் டெலன்ட்" நிகழ்ச்சித்திட்டங்கள்

இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு செயற்படுத்தப்படும் நாடு பூராவும் இளைஞர் சமாஜ மட்டத்தில் 06 துறைகளின் கீழ் 1,500 பிரதேச அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 112.50 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

நிகழ்ச்சித்திட்ட திட்டத்தின் பிரகாரம் 06 துறைகளின் கீழ் செயற்திட்டங்களை தெரிவு செய்யக் கூடியதாக இருந்த போதிலும் செயற்படுத்தப்பட்ட 1,500 செயற்திட்டங்களில் 1,375 பொது தேவைப்பாட்டின் பேரிலான செயற்திட்டங்களாக இருந்தன. பிரதேசத்தின் சிறப்பான ஒரு செயற்திட்டமொன்றாகவோ செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தெரிவு செய்யப்பட்ட ஏனைய துறைகளிலிருந்து பொருளாதார அபிவிருத்தி உட்பட புதிய தொழில்களை உருவாக்குவதற்கு இலக்கிடப்பட்டு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான ஊக்குவிப்புக்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டங்களை செயற்படுத்தப்பட்ட 12 மாவட்டங்களிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் 2016 நவம்பர் 12 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 493 செயற்திட்டங்களுக்காக சபையால் ரூபா 33 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் மதிப்பிடப்பட்ட ரூபா 76 மில்லியன் கிரயமான 162 செயற்திட்டங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட 26 செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 06 செயற்திட்டங்களுக்குரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 1.29 மில்லியனாக இருந்த போதிலும், உள்ளவாறாக பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 678,366 ஆக மாத்திரம் இருந்தது. நிதி இல்லாமை காரணமாக ரூபா 814,252 மதிப்பிடப்பட்ட கிரயத்தினை 05 செயற்திட்டங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 5.37 மில்லியன் மதிப்பிட்டுக் கிரயத்திலான ஏனைய 17 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் 2017 பெப்ரவரி மாதம் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தோடு எதிர்பார்க்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படாத ரூபா 831,234 கிரயமான 4 செயற்திட்டங்கள் காணப்பட்டன. வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த ரூபா 814,120 கிரயத்திலான 3 செயற்திட்டங்களுக்காக ரூபா 225,000 வழங்கப்பட்டிருந்தது. ரூபா 1.91 மில்லியனான 08 செயற்திட்டங்களின் செலவினத்தை உறுதிப்படுத்துவதற்குரிய பற்றுச்சீட்டுக்கள் அல்லது ஏனைய ஏற்றுக் கொள்ளக்கூடிய சான்றுகள் கோவைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் இளைஞர் சமாஜங்களில் தொடர்ச்சியான பங்களிப்பிலிருந்து ரூபா 112.50 மில்லியன் செலவிடப்பட்டு ரூபா 337.50 மில்லியன் பெறுமதியான 1500 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்தல் இலக்கினை அடைவதற்கு முடியாதிருந்தது.

### பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை உயர்மட்டத்தில் பேணிச் செல்லல்.

மீளாய்வாண்டின் போது மன்றத்தின் 49 பயிற்சி நிலையங்களில் செயற்படுத்தப்பட்ட 471 பயிற்சி பாடநெறிகளில் 15,691 மாணவர்கள் காணப்பட்டதுடன் அதில் 6,793 மாணவர்கள் 201 முழு நேர பாடநெறிகளும் 77 மொழிப்பாடநெறிகளிளும் உட்பட 8,898 மாணவர்கள் 270 பாடநெறிகளை பின்பற்றுகின்றனர் 2,293 மாணவர்கள் சமூகமளித்த 471 பாடநெறிகளில் 80 பாடநெறிகள் தேசிய தொழில் தகைமை (NVQ) அல்லாத பாடநெறிகளாக இருந்தன.

## பேருவள பயிற்சி நிலையத்தின் நிர்மாண வேலைகள் மேலும் தாமதித்தல்.

இளைஞர் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக பேருவளையில் அமைந்துள்ள 01 ஏக்கர் அளவிலான காணி 2000 யூலை 07 முதல் 50 ஆண்டுகளுக்கு குத்தகை காலத்திற்கு ரூபா 3.33 மில்லியன் செலவு செய்து நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அக் காணியை அபிவிருத்தி செய்வதற்காக மேலும் ரூபா 467,184 செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டு இறுதியளவில் காணியைப் பெற்று 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும் உரிய நிலையம் நிர்மானிக்கப் பட்டிருக்கவில்லை.

## முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபைக்குரிய மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களின் உத்தியோகத்தரின் வருகை மற்றும் வெளியேறல்களை பதிவு செய்வதற்காக ரூபா 2.79 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டு இரண்டு சந்தர்ப்பங்களின் போது தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் 60 கைவிரலடையால இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் 09 இயந்திரங்கள் கணக்காய்வு திகதியான 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் உரிய வழங்குனரால் மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்டிருந்த 51 இயந்திரங்களில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக 03 இயந்திரங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. பொருத்தப்பட்டிருந்த 29 இயந்திரங்களுக்கு மென்பொருள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் மென்பொருள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் வருகை அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்த 16 இயந்திரங்கள் காணப்பட்டன. இக் கொள்வனவிற்கு உரிய செயலாற்றல் பிணை முறியொன்றினைப் பெற்றுக் கொள்ளாமலும் இயந்திரத்தை உரிய அளவிலும் எதிர்பார்க்கப்பட்ட தரத்திலும் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தாமலும் மேற்படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

மன்றத்தினால் இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 15.86 மில்லியன் செலவு செய்து 327 டெப் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த டெப் கணனி இயந்திரங்களில் 23 டெப் இயந்திரங்கள் வழங்குனர் களஞ்சியத்திற்கு கையளிக்கும் சந்தர்ப்பத்தில் செயற்படு நிலைமையில் காணப்படவில்லை. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அவ்வியந்திரங்கள் நல்ல நிலைமையில் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் வழங்கப்பட்ட டெப் இயந்திரங்களில் அதிகளவு தவறுகள் இருப்பதாக இளைஞர் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு அளவின் பிரகாரம் வியாபாரக் கழிவு வழங்ககக்கூடிய இயலுமை காணப்பட்ட போதிலும் சந்தை விலையை விட கூடிய விலைக்கு இவ்வியந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

துறைசார் நிபுணத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிலாபம் பயிற்சி நிலையத்திற்காக ரூபா 7.93 மில்லியன் செலவு செய்து 75 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- தேசிய போட்டி பெறுகை நடைமுறை பின்பற்றப்பட வேண்டிய போதிலும் சந்தை ஒப்பீட்டு விலை முறையை பின்பற்றப்பட்டிருந்தது.
- 05 நிறுவனங்களினால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும்

காரணங்கள் குறிப்பிடப்படாமல் 03 கூறுவிலைகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

- கொள்வனவு செய்யப்பட்டிருந்த 75 கணனிகளில் 07 கணனிகள் வெவ்வேறு தொழில்நுட்ப தவறுகள் காரணமாக கொள்வனவு சந்தர்ப்பத்திலேயே இயங்காமல் இருந்தன.
- அரசின் பெறுகை வழிகாட்டி கோவையின் 8.9.1 வழிகாட்டியின் பிரகாரம் முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.
- அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.10 வழிகாட்டியின் பிரகாரம் செயலாற்றல் பிணையொன்று வைப்பதற்கும் உத்தரவாதக் கால எல்லைக்குள் இடம் பெறக்கூடிய சேதங்கள் தொடர்பாக ஒப்பந்த பெறுமதியில் 5 சதவீத நிறுத்தி வைத்தல்களும் இடம் பெற்றிருக்கவில்லை.

### வேறு நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த மன்றத்தின் ஊழியர்கள்.

1972 இன் 5 ஆம் இலக்க சுங்க அதிகாரச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கட்டுப்பாட்டிலும் மேற்பார்வைக்கு உட்படும் நிறுவனமொன்றான வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் நடவடிக்கைகளுக்காக முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் மன்றத்தின் 19 ஊழியர்கள் முழு நேரமாகவும் இன்னும் இரண்டு ஊழியர்கள் அரைக் காலப்பகுதியிலும் சேவையில் ஈடுபட்டிருந்தனர். அதில் 05 பேர் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்தும் அவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். முழு நேரசேவையில் ஈடுபட்டிருந்தவர்களுக்காக மன்றம் 2016 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 8.47 மில்லியன் சம்பளமாக செலுத்தியிருந்தது.

1980 இன் 37 ஆம் இலக்க சுயாதீன அமைப்புக்கள் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை) அதிகாரச்சட்டத்தின் கீழ் சமூக சேவை அமைப்பொன்றாக பதிவு செய்யப்பட்ட இளைஞர் சமாஜ சம்மேளனத்திற்கு சட்டரீதியான அடிப்படையொன்று இல்லாமல் மன்றத்தின் 04 ஊழியர்கள் முழு நேரமாக விடுவிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டிற்காக மன்றத்தினால் ரூபா 1.39 மில்லியன் சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### துறைசார் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

துறைசார் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவ பிரிவினால் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்காக தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் (Disbursement Link Indicators) DLT 6 இன் கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 1,353 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. 2016 ஆம் அண்டு முடிவடையும் போது அதில் ரூபா 435 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்ட 06 பிரதான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 230 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அந்நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ரூபா 218 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளின் செயலாற்றல் பின்வருமாறு.

- 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை 10 பயிற்சி நிலையங்களை நவீனமயப்படுத்துவதற்கு ரூபா 385 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மன்றத்தினால் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 339 மில்லியன் செலவிடப்பட்டு 06 பயிற்சி நிலையங்கள் நவீனமயப்படுத்தப்பட்டு வந்தன. அந்நிலையங்களுக்கு பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 2014 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2020 வரை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 16 மில்லியனுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியிருந்தன. எனினும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 78 மில்லியன் அளவிலான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு ஆரம்ப திட்டத்தை கருத்திற் கொள்ளாமல் நடவடிக்கை எடுத்தமையால் நிலையத்தின் நவீனமயப்படுத்தல் பூர்த்தி செய்ய முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட 8 மில்லியன் அளவிலான பயிற்சி உபகரணங்கள் விளைவற்ற வகையில் வைத்திருப்பதற்கு காரணமாக இருந்தது. அவ்வாறே பாடநெறிகளை ஆரம்பித்தல் மற்றும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் இலக்கினையும் அடைய முடியாமல் இருந்தது.

- நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்ட 04 பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பாடநெறிகளை விட்டுச்செல்லும் சதவீதம் 35 முதல் 50 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சளவினைக் கொண்டிருந்தது.

- நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவான செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 1.5 மில்லியன் செலவு செய்து 10 பயிற்சி நிலையங்களுக்காக 10 வியாபாரத் திட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அத்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2015 ஆம் ஆண்டின் இறுதியில் சபையின் பயிற்சி நிலையங்களில் தகவல் முகாமைத்துவ முறைமை மீளாய்வு செய்யப்பட்டு தர முகாமைத்துவ முறைமை ஸ்தாபிக்கப்பட்டு அதற்குரிய பயிற்சி வழங்கலுக்காக ரூபா 7.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கடந்த 3 வருட காலப்பகுதியில் இந்நடவடிக்கைகளுக்காக ரூபா 7.18 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2016 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் பயிற்சி நிலையங்களுக்காக உரிய தர முகாமைத்துவ முறைமை மற்றுமு் தகவல் முகாமைத்துவ முறைமை ஸ்தாபித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பனி

தேசிய இளைஞர் சேகைள் மன்றத்தின் 98 சதவீத பங்கு உரிமை அடிப்படையில் 56 துறைகள் ஊடாக வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் 1981 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு வழங்கப்பட்ட 2015/2016 ஆம் நிதியாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## இணக்கமின்மை

சங்க சட்ட விதிகளுக்கு இணங்க கம்பனியின் ஒவ்வொரு பணிப்பாளரும் ஆகக் குறைந்தது 100 பங்குகளை கொள்வனவு செய்ய வேண்டிய போதிலும் கம்பனியில் தற்போது இருக்கும் பணிப்பாளர்களால் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

2016 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கம்பனியின் சேவையில் ஈடுபட்டுள்ள 767 பதவியணியினருக்காக வருடாந்த பணிக்கொடைக்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

சேவை வழங்குகின்ற நிறுவனமொன்றான கம்பனியால் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்புதல் வரிச் சட்டங்களில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய வரியை செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

2015 ஒக்தோபர் மாதம் முதல் 2016 மார்ச் மாதம் வரையான 06 மாத காலப்பகுதியில் கம்பனியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் 11 சதவீதம் அளவானோருக்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக பங்களிப்புத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

கணிப்பீடு செய்யும் போது இடைக்காலப் படிகள் மற்றும் விசேட படிகள் தவிர ஏனைய உழைப்புக்களை உரித்தாக்கிக் கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியால் ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை கருத்திற் கொள்ளாமல் பாதுகாப்பு சேவை நிர்மாணம் தொடர்பாக சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டு ஆகக் குறைந்த மாதச் சம்பளத்திற்கு மாத்திரம் பங்களிப்புத் தொகை கணக்கிடப்பட்டிருந்தது.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு முறை கம்பனியின் இயக்குனர் சபையால் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடாத்த வேண்டிய போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய பொதுச் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## முகாமைத்துவ செயற்திறனின்மை

கம்பனியின் இலக்குகளை குறிப்பாக இனங்கண்டு நீண்டகால மற்றும் குறுங்கால திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மற்றும் குறுங்கால திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளை பேணிச் செல்வது தொடர்பில் முகாமைத்துவம் கவனத்தை செலுத்தியிருக்கவில்லையென்பது பின்வரும் விடயங்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

- கம்பனியின் அகவிதியின் பிரகாரம் வ/ப இளைஞர் சேவைகள் (தனி) கம்பனிக்கு 56 வெவ்வேறு துறைகளின் கீழ் தமது சேவைகள் விரிவாக்கி வியாபார நடவடிக்கைகளை செய்வதற்கு இயலுமை காணப்பட்ட போதிலும், கம்பனி ஆரம்பிக்கப்பட்டு 35 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அச்சகம், சிற்றுண்டிச்சாலை சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகிய 4 துறைகளுக்காக மாத்திரம் வியாபார நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

- கம்பனிக்கு கடன்கொள்கையொன்று உட்பட கடன் அடிப்படையில் சேவைகளை வழங்கும் போது முறையான மற்றும் உடன்படிக்கை கட்டப்பாடொன்றும் இல்லாதிருந்துடன் 2016 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனிக்கு கிடைக்க வேண்டிய ரூபா 98 மில்லியனான கடன் மீதிகளிலிருந்து ரூபா

36 மில்லியன் ஓராண்டிற்கு மேற்பட்ட பழைய மீதிகளாக இருந்தன. அக் கடன்களை அறவிடுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று கம்பனி இயலாதிருந்ததன் காரணமாக தமது தொழிற்படு மூலதன தேவைப்பாட்டினை கூடிய வட்டியின் கீழ் வங்கி மேலதிகப்பற்று மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

- புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் போதும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும் போதும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடக்கப்பட்ட சம்பள அளவுகளில் உத்தியோகத்தர்கள் வைக்கப்பட வேண்டிய போதிலும் ஒரே பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வெவ்வேறு அளவுகளில் வைக்கப்பட்டு அதன் பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

# சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பல்

கிராம மக்கள் மற்றும் ஆபத்திற்குட்பட்ட குழுக்களை வலுப்படுத்தல் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் மூலம் சௌபாக்கியத்திற்கு வழிவகுத்தல் இந்த துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பிரதிபலனொன்றாகும். அந்த பிரதிபலனை அடைந்து கொள்வதற்காக பின்வரும் கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

- சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி உள்ளடங்கலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை உருவாக்குதல்.
- முதியோரைப் பேணுதல் மற்றும் அரவணைத்தல்.
- விசேட தேவைப்பாடுடைய நபர்களின் குறைகளை இனங்காணுதல் மற்றும் புனரமைப்பு செய்தல்.
- தேசத்தின் எழுச்சி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி கிராமிய மற்றும் பிரதேச பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- மக்கள் உதவி முன்மொழிவு முறையினை மீளாய்வு செய்தல், மீள் கட்டமைப்பு மற்றும் பொருத்தமான புதிய சீரமைப்புகளை அறிமுகப்படுத்தல்
- காச நோயாளர்களுக்கு, சிறுநீரக நோயாளர்களுக்கு, தொழு நோயாளர்களுக்கு நோயாளர்களுக்கு, புற்று நோயாளர்கள், மனவளர்ச்சி குன்றிய நோயாளர்களுக்கு மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கு உதவிகளை வழங்குதல்.
- மதியுரை சேவைகளை நடைமுறைப்படுத்தல்.
- ஊனமுற்ற நபர்களுக்காக தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கும், வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் தேவையான நடைமுறைகளை ஒழுங்கமைத்தல்.
- சமூக காப்புறுதி முறைமைகளை நடைமுறைப்படுத்தல்.

சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சு, இரண்டு திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் மற்றும் 05 நிறுவனங்கள் மூலம் மேற்குறிப்பிட்ட செயற்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

## குறைந்த வருமானம் பெறும் 70 வயதிற்கும் கூடிய பிரசைகளுக்கான கொடுப்பனவொன்றினை வழங்குதல்

குறைந்த வருமானம் பெறும் 70 வயதிற்கும் கூடிய பிரசைகளுக்காக ரூபா 2,000 தொகையான படியொன்றினை வழங்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 9,262.37 மில்லியன் தொகையான நிதியேற்பாடுகள் அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 9,059.59 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டில் ரூபா 202.78 மில்லியன் எஞ்சியிருந்தது. அவ்வாறே இந்த கொடுப்பனவில் மீண்டும் ரூபா 100 தொகை பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் முதியோர் பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு வழங்குவதற்கு 2016 ஆகஸ்ட் 30 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் அவ்வாறு கிடைத்திருந்த ரூபா 427.70 மில்லியன் தொகை 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

## சிறுநீரக நோயாளிகளுக்கான உதவிகளை வழங்குதல்

சிறுநீரக நோயாளிகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக ரூபா 667.22 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவற்றுள் ரூபா 486.80 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் 180.42 மில்லியன் தொகையான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட 19,645 நோயாளிகளில் 15,453 நோயாளர்களுக்கு மாத்திரம் உதவு தொகைகள் செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், காத்திருப்பாளர் பட்டியலில் உதவிகளை எதிர்பார்த்தவாறு 4,192 நோயாளர்கள் காணப்பட்ட போதிலும், அது தொடர்பில் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## தீர்வை வரிச் சலுகைகளைப் பெற்ற பொருட்களை பகிர்ந்தளித்தல்

மீளாய்வாண்டின் போது அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளால் சமூக சேவையொன்றாக இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த பெறுமதி மதிப்பிட முடியாத ரூபா 1.5 மில்லியன் தொகையான 08 வகையான உபகரணங்களின் 24,610 அலகுகள் தீர்வை வரியிலிருந்து விலக்களிக்கும் சான்றிதழொன்று அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வெகுமதிகள் ஊனமுற்ற நபர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் இந்த பொருட்களை பகிர்ந்தளித்தல் தொடர்பான தகவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## ஊனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவிகளை செலுத்துதல்

குறைந்த வருமானம் பெறும் ஊனமுற்றோருக்கு வீடமைப்பு உதவு தொகைகளை செலுத்துதல் 2007 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 22 மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்ள 329 வீடுகளுக்காக ரூபா 3.58 மில்லியன் செலுத்த வேண்டியதாக இருந்த போதிலும், அதற்காக 21.58 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வீடமைப்பு உதவிகளை வழங்கும் நடைமுறை திட்டமிட்டு இடம் பெற்றிருக்கவில்லை.

## இனங்காணப்படாத வைப்புக்கள்

சமூக பாதுகாப்பு முறைமையின் கீழ் வங்கிகளால் சேகரிக்கப்படும் தவணைகளை பதிவு செய்யும் போது பங்களிப்பாளரை இனங்காண்பதற்கான குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்று இல்லாதிருந்தது. இதன் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 9.57 மில்லியன் இனங்காணப்படாத வைப்புக்கள் காணப்பட்டன.

## தொழில்சார் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணிகளை சுவீகரிக்காமை

சமூக சேவைகள் திணைக்களத்திற்குரிய 08 தொழிற் பயிற்சி நிலையங்களுக்குரிய மொத்த காணியின் பரப்பளவு 24.45 ஹெக்டயர்களாக இருந்ததுடன், அந்த காணிகளை முறைப்படி சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## வயது முதிர்ந்தோருக்கான தேசிய மன்றத்திற்குரிய காணிகள்

வயது முதிர்ந்தோருக்கான தேசிய மன்றத்திற்குச் சொந்தமான கதிர்காமம் முதியோர் இல்லம், கதிர்காமம் சுற்றுலா விடுதி, மாலிகாதென்ன முதியோர் இல்லம் மற்றும் நிவிதிகல நில்வலா செவன ஊனமுற்றோருக்கான நிலையத்திற்குரிய காணி மற்றும் கட்டிடம் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டு முறையாக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## நிலையான சொத்துக்களின் கட்டுப்பாடு

திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களால் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் பேணப்பட்டிராமையால் மற்றும் திணைக்களத்தால் சொத்துக்களை பதிவு செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிராமையால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களின் கலைத்தல் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,340.26 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் திணைக்களம் நிறுவப்பட்டமையின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 29.04 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## பெறவேண்டிய கடன் மீதிகளை அறவிடல்

திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒன்றிணைந்த இலங்கை சமூர்த்தி அதிகாரசபை, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை மலைநாட்டு அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய 03 அதிகாரசபைகளின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் அறவிடப்பட வேண்டிய மீதிகள் முறையே ரூபா 289.03 மில்லியன், ரூபா 26.58 மில்லியன் மற்றும் ரூபா 0.64 மில்லியன் எனுமாறு ரூபா 316.25 மில்லியன் கூட்டுத்தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## திணைக்களத்தின் விடயப்பரப்பிற்கு உட்படாத பணிகளை மேற்கொள்ளல்

திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் விடயப் பரப்பிற்கு புறம்பான பணிகளாக பஹறத்த ஹேவாஹெட்ட குடிநீர் உத்தேச முறைமையினை நடைமுறைப்படுத்துதல், ரிகில்லகஸ்கட பேரூந்து தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் பஹாத ஹேவாஹெட்ட பிரதேச செயலாளர் பகுதியின் பாடசாலைகளிலுள்ள பிள்ளைகளுக்கு மாணவர் அணிகளை கொள்வனவு செய்தல் போன்ற பணிகளுக்காக மீளாய்வாண்டின் போது மத்திய மாகாண சபைக்கு ரூபா 46.83 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் பஹாத்த ஹேவாஹெட்ட குடிநீர் உத்தேச முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 32.5 மில்லியனுக்குரிய பணி பூர்த்தி செய்யப்படாது மாகாண சபைக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகுதல்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுரைகளுக்கு புறம்பாக செயற்பாட்டு ரூபா 7.17 மில்லியன் செலவிட்டு சமூர்த்தி வியாபாரத்தின் புதிய பாதை தொடர்பான செயலமர்வொன்றினை நடாத்துதல், திணைக்களத்தின் கீதத்தை திருத்தியமைத்தல் மற்றும் 25 மடி கணனி இயந்திரங்களை கொள்வனவு செய்தல் போன்ற கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தன. சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் 3771 வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்காக முறையான எழுத்துமூல உடன்படிக்கையொன்று இல்லாது ரூபா 97.58

மில்லியன் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

### நிதி மோசடிகளை அறவீடு செய்யாமை

2014 சனவரி மாதம் முதல் 2016 சனவரி மாதம் வரையான காலப்பகுதியினுள் கண்டி மாவட்ட திவிநெகும அலுவலகத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 23.41 மில்லியன் தொகையான நிதி மோசடி மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது பண்டாரகம பிரதேச செயலாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.02 மில்லியன் தொகையான நிதி மோசடியினை அறவிடுவதற்கு திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கி மற்றும் 81 சங்கங்களில் பல வருடங்களாக இடம்பெற்றிருந்த ரூபா 120.93 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அந்த நட்டத்திலிருந்து அறவிடுவதற்கு திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் வங்கிகள் மற்றும் 25 வங்கிக் சங்கங்களில் இடம்பெற்றிருந்த நிதிமோசடியின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### பணிக்கொடைக்கான மிகை அறவீடுகளை செலுத்துதல்

திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்ததாக மூன்று அதிகார சபைகளினதும் 14,403 உத்தியோகத்தர்களுக்காக கணிப்பிடப்பட்ட ரூபா 3,327.66 மில்லியன் தொகையான பணிக்கொடை தொகையினை செலுத்துவதற்கு திறைசேரியின் மானியங்கள் தாமதமடைந்தமையின் காரணத்தால் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 30 சதவீதம் படியாக கணிப்பிடப்பட்ட மிகை அறவீடு ரூபா 998.30 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அதில் 3,307 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 292.04 மில்லியன் தொகையான மிகை அறவீடு செலுத்தப்பட்டிருந்தது.

### திவிநெகும சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்கள் நடாத்திச் செல்லப்படும் காணி மற்றும் கட்டிடங்கள்

திவி நெகும சமூக அடிப்படை வங்கி மற்றும் 1,405 வங்கி சங்கங்களிடையே 1,115 வங்கிகள் நடாத்திச் செல்லப்படும் காணிகளின் உரித்தினை சுவீகரிப்பதற்கு திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### திவிநெகும சமூக அபிவிருத்தி மன்றம்

சர்வதேச புகையிலை மற்றும் போதைத் தடுப்பு தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும் கொடி விற்பனை நிகழ்ச்சித்திட்டத்தினால் சேகரிக்கப்படும் பணத்தில் குறைந்த வருமானம் பெறும் வரிய மக்களின் பிரச்சினைகளுக்கு உதவி புரியும் நோக்கில் திவிநெகும சமூக அடிப்படை வங்கிகளில் செல்லப்படும் திவிநெகும சமூக அபிவிருத்தி மன்றத்தை நியதிச்சட்டமாக்கி அதன் பணிகளை முறையாக திட்டமிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த நிதியத்தின் மீதி ரூபா 218.28 மில்லியனாக இருந்தது. மேலும், குறிப்பானதொரு விற்பனை விலையொன்று இல்லாது கொடிகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 229.63 மில்லியன் வருமானத்தின் சரியான தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

# விஞ்ஞான தொழில்நுட்பமும் ஆராய்ச்சிகளும்

விஞ்ஞானம் சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை பிரயல்யப் படுத்துதலினூடாக இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ரீதியில் உயர்ந்த நாடொன்றாக மாற்றுவது இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறாக இருந்தது. அப்பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நியதிச்சட்ட சபைகள் மற்றும் 13 நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. ஆந்நிறுவனங்களினால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல்
- விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் சர்வதேச ரீதியாக இடம்பெறும் கண்டுபிடிப்புகளுக்கு இணங்கும் வகையில் உள்நாட்டு ஆராய்சசி மற்றும் கண்டுபிடிப்புகளுக்காக தேவையான வசதிகளை ஏற்படுத்ததுல்
- விஞ்ஞானம் சார்ந்த, கைத்தொழில், சமூக மற்றும் பொருளதார ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்குரிய வசதிகளை வழங்குவதினூடாக ஆராய்ச்சிகளைத் திட்டமிடலும் செயற்படுத்தலும்
- புதிய ஆராய்ச்சி பெறுபேறுகளுக்குரிய தரப்பினருக்கு வழங்குதல்
- தரங்களை விதித்தலும் கட்டுப்படுத்தலும்
- ஏனைய அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் ஆராய்ச்சி நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் ஆராய்ச்சிகளுக்காக தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்
- புதிய கண்டுபிடிப்புகளுக்காக சமூகத்தை தொடர்புபடுத்துதல், முன்வருவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- நிர்மாணக் கைத்தொழில்களை மேம்படுத்தல், அபிவிருத்திக்காக ஆராய்ச்சிகளை செயற்படுத்தல்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களால் மேற்படி கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

### விதாதா வள நிலையங்களின் மேற்பார்வை

விஞ்ஞானம் சார்ந்த, தொழில்நுட்பம், சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சி அபிவிருத்திகளை விரிவாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த விதாதா நிலையங்களின் நடவடிக்கைகளுக்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 30 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 23.8 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சின் கீழ் பேணப்படும் விதாதா வள நிலையங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக்

கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- நிலையத்திற்கு போதியளவு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்படாமை, போதியளவில் வளங்களைப் பெற்றுக்கொள்ளாமல் அவற்றை முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.
- வருகை வெளியேறல் பதிவேடு முறையாக பேணப்படாமை மற்றும் சேவை நிலையத்தின் உத்தியோகத்தர்கள் தரித்திருத்தல் தொடர்பாக மேற்பார்வையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.
- விதாதா நிலையங்களினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சினால் மேற்பார்வை செய்யப்பட்டமைக்கான தகவல்கள் காணப்படாமல் இருந்ததுடன் அமைச்சிற்கு இடையே தொடர்பு பலவீனமான மட்டமொன்றில் காணப்பட்டன.
- அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த இயந்திர உபகரணங்கள் முறைப்படி பயன்பாட்டிற்கு எடுக்காமையால் அவை விளைவற்று அல்லது பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.
- தயாரிக்கப்பட்ட சில செயற்திட்டங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் பணம் வழங்கல் தாமதமாக்கப்பட்டிருந்தது.

## பரிசோதனைக் கூடங்களினதும் தர நிறுவனங்களினதும் தராதரம்

இனங்காணப்பட்ட தராதரத்திற்கு உட்படுத்த வேண்டிய பரிசோதனைக் கூடங்களிலும் வைத்திய நிறுவனங்களின் எண்ணிக்கை 184 ஆக இருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் 72 நிறுவனங்கள் மாத்திரம் தராதரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இணக்கப்பாட்டு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையிடமிருந்து தராதரச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டிருந்த 72 நிறுவனங்களில் 11 நிறுவனங்கள் மீண்டும் தராதரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்து விலகியிருந்தன.

## மருத்துவ ஆய்வுகூடங்களை தராதரப்படுத்தல்

இனங்காணப்பட்ட தராதரத்திற்கு உட்படுத்த வேண்டிய 311 மருத்துவ கூடங்கள் காணப்பட்ட போதிலும், இலங்கை தராதர அங்கீகார சபையினால் 22 நிறுவனங்கள் மாத்திரம் தராதரத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. தராதரச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டிருந்த 22 நிறுவனங்களில் 05 நிறுவனங்கள் மீண்டும் தராதரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதிலிருந்து விலகியிருந்தன.

## சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தராதர அங்கீகாரத்திற்காக விண்ணப்பிப்பதனை செயற்திறனாக ஆக்குவதற்காக இணக்கப்பாட்டு மதிப்பீட்டிற்கான இலங்கை தராதர அங்கீகார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த இணைய கணனி முறைமையின் சேவைக் கட்டணமாக 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 2.53 மில்லியன் தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த மென்பொருளின் செயற்பாடு தொடர்பாக 2016 மார்ச் 31 ஆந் திகதி தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப முகவர் நிறுவனத்திடமிருந்து (ICTA) விசாரிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிறுவனத்தினால் மென்பொருட்கள் தற்போதைய தேவைப்பாடுகளுடன்

இணங்கவில்லையென தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

### மாஜரீனுக்கான தரத்தைப் பரிசோதித்தல்

மீளாய்வாண்டின் போது தனியார் கம்பனியொன்றினால் 32 சந்தர்ப்பங்களின் போது இறக்குமதி செய்யப்பட்ட 501,472 அ.டொலர் பெறுமதியான 732,703 கிலோ கிராம் மாஜரீனிற்காக மாதிரிப் பரிசோதனை இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மாஜரீனுக்கான இலங்கை தரம் 1427:2011 இல் 5.6 ஆம் பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வன் உலோகம் தொடர்பான பரிசோதனை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை தரக்கட்டளை நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### புத்தாக்குனர்களுக்காக நிதி, தொழில்நுட்ப மற்றும் சந்தை உதவிகளை வழங்குதல்

புத்தாக்குனர்களுக்காக நிதி, தொழில்நுட்ப மற்றும் சந்தை உதவிகளை வழங்குவதற்காக புத்தாக்குனர்களை தெரிவுசெய்வதற்காக இரண்டு நிகழ்ச்சித் திட்டங்கள் இலங்கை புத்தாக்குணர் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டிருந்தன. அதில் “Invent - 2015” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 14 புத்தாக்குணர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு புத்தாக்குணர் மாத்திரம் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் 07 புத்தாக்குணர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் உதவிகள் வழங்குவதற்கு பொருத்தமானதென மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்த போதிலும், அந்த ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. “புதிய கண்டுபிடிப்புக்களை மேம்படுத்தல்” - 2016 நிகழ்ச்சித்திட்டத்தில் 16 புத்தாக்குனர்களுக்கு நிதி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு வழங்குவதற்கு மதிப்பீட்டுக்குழு பரிந்துரைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### புத்தாக்கங்கள், புத்தாக்கங்களை தாபித்தல் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல்.

மீளாய்வாண்டின் போது பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் வர்த்தகத் துறையிலும் ஆராய்ச்சி நிறுவனங்களில் புத்தாக்கங்களை தாபித்தல் மற்றும் புத்தாக்கங்கள் தொடர்பான அறிவூட்டுதல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக இலங்கை புத்தாக்குணர் ஆணைக்குழுவினால் ரூபா 1.12 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது எவ்வித் ஆக்கதிறனான சங்கமொன்று அத்துறைகளில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் தாபிக்கப்பட்ட 163 புத்தாக்கங்களில் 136 பாடசாலைகளுக்குரியதாக இருந்தன. எவ்வாறாயினும் பாடசாலை பிரிவிற்கு ஒப்பாக தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஆக்கத்திறன் இயலுமை மற்றும் புத்தாக்கங்களை வணிகமயப்படுத்தல் இயலுமை உயர்மட்டத்தில் காணப்பட்ட போதிலும், அப்பிரிவுகளில் சங்கமொன்று மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தது.

### புத்தாக்கங்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வர்த்தக மயப்படுத்துதல்

புத்தாக்குணர்களின் புத்தாக்கங்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வர்த்தக மயப்படுத்துவதற்காக உபகாரமளித்தல் ஆணைக்குழுவின் பணியாக இருந்த

போதிலும் மீளாய்வாண்டில் வர்த்தக மயப்படுத்தலுக்காக 04 புத்தாக்கங்களுக்கு மாத்திரம் ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருந்தது.

## ஒத்துழைப்பு ஆக்கத்திறன் கண்காட்சி 2016

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்பட்ட "ஒத்துழைப்பு ஆக்கத்திறன் கண்காட்சி 2016" நிகழ்ச்சித்திட்டத்திற்காக திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் வர்த்தக துறையினரிடமிருந்து முன்வைக்கப்படுகின்ற ஆக்கங்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது 41 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது 4 சதவீதம் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டின் போது இந்நிகழ்ச்சிகளுக்கான செலவினம் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 25 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேலும் பாடசாலைகள் பிரிவு தவிர ஏனைய சகல பிரிகளிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்களின் அளவு குறைவடைந்திருந்தது.

## ஆராய்ச்சி செயற்திட்டங்களை செயற்படுத்தல

தேசிய ஆராய்ச்சி சபையால் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 303.08 மில்லியன் பெறுமதியான 82 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பாகபின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 41 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக ரூபா 127.08 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த ஆராய்ச்சிகளிலிருந்து எவ்வித உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- 51 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக ரூபா 160.18 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், பொருளொன்று அல்லது சேவையொன்று வடிவமைக்கப்பட்டிருந்த 31 செயற்திட்டங்களிலிருந்து 02 செயற்திட்டங்களுக்கு மாத்திரம் தேசிய ஆராய்ச்சி சபையினால் ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

- தேசிய ஆராய்ச்சி சபையினால் ஆராய்ச்சி செயற்திட்டங்களிற்கான நிதிஏற்பாட்டை வழங்கும் போது ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது 03 வருட காலப்பகுதிக்குரிய முழுமையான நிதிஏற்பாடும் அந்தந்த செயற்திட்டத்தின் கீழுள்ள நடைமுறைக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதித் தேவையினை உரியவாறு இனங்காணாமல் ஒரே தடவையில் பணம் வழங்கப்பட்டிருந்தது. இதனால் 2011 முதல் 2016 வரையிலான காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட 138 செயற்திட்டங்களிற்காக ரூபா 504.13 மில்லியன் அதே நடைமுறைக் கணக்குகளுக்கு பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. இதனால் அப்பணத்திலிருந்து நடைமுறை கணக்குகளின் மீதிகள் 2016 திசெம்பர் 31 அந் திகதிவரையிலும் எவ்வித பயனொன்றும் கிடைக்காது விளைவற்றுக் காணப்பட்டன.

## ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக தொழில்நுட்ப பணிப்பொறுப்பு வழங்கல்

2014 - 2016 காலப்பகுதியில் ரூபா 111.29 மில்லியன் பெறுமதியான 64 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அந்த 64 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் இறுதி பெறுபேறாக உள்நாட்டு வெளிநாட்டு விஞ்ஞானம் சார்ந்த பிரசுரங்களை வெளியிடுதல், பட்டப்படிப்பு முதுமானி, தத்துவமானி பட்டப்பின் படிப்பிற்காக பயன்படுத்துதல் மற்றும் சனாதிபதி விருதுகளுக்காக பரிந்துரைத்தல் போன்ற நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன எனினும் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் அந்த 64 செயற்திட்டங்களில் எந்தவொரு செயற்திட்டத்திற்காகவும் தொழில்நுட்ப மட்டத்தில் (வணிக ரீதியாக்குவதற்காக மேம்படுத்துதல்) வழங்கலோ அல்லது

எந்தவொரு செயற்திட்டமொன்றுக்கும் ஆக்கவுரிமை வழங்கலோ இடம்பெறவில்லை.

### வருடாந்த ஆராய்ச்சி விருதுகள் பூர்த்தி செய்யப்படாமை

தேசிய விஞ்ஞான மன்றத்தினால் 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 27.53 மில்லியன் பெறுமதியான 21 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் ஒரு ஆராய்ச்சி செயற்திட்டமேனும் 2016 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி விருததுகளை உரித்தாக்குவதற்கு தகைமையைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

# தொடர்பாடல்

டிஜிடல் கைத்தொழில் மற்றும் அண்மித்த சேவைகளை அடைந்து கொள்ளும் இயலுமையை அதிகரிப்பதன் மூலம் டிஜிடல் சேவைகள் மற்றும் உற்பத்தியை பிரபல்யப்படுத்துவதன் மூலமும் மக்களின் டிஜிடல் தேவைப்பாட்டை அதிகரிப்பதன் மூலமும் டிஜிடல் அமுலாக்க சமூகமொன்றை கட்டியெழுப்புதல் இத்துறையின் நோக்கங்களாக இருந்தன. இந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தொலைத்தொடர்பு மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 03 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.
அந்நிறுவனங்களினால் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன.

- தொலைத்தொடர்பு மற்றும் டிஜிடல் உட்கட்டமைப்பு வசதிகள் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைவருக்கும் தொலைத்தொடர்பு வசதிகள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.
- அரச துறையின் சேவைகள் வழங்கலின் செயற்திறன் மற்றும் வினைத்திறன என்பவ்றை அதிகரிப்பதற்காசக பொருத்தமான தகவல் தொழில்நுட்ப தீர்வுகளை பயன்படுத்துவதற்கு ஒத்துழைத்தல்.
- கணனி தொழிற்பாட்டை அதிகரிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாவனையை ஊக்குவிப்பதற்காக தந்திரோபாயங்களை தயாரித்தல்

மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## நிலையான தொலைபேசி சேவைகள் அழைப்பாளர் எண்ணிக்கை

இலங்கையின் நிலையான தொலைபேசி சேவைகள் அழைப்பாளர் எண்ணிக்கை2011 ஆம் ஆண்டில் 3.6 மில்லியன் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை 2.55 மில்லியன் வரை 29 சதவீதம் குறைவடைந்திருந்ததுடன் கடந்த 10 ஆண்டுகளில் செல்லிடத் தொலைபேசி துறையுடன் இணைந்த வருடாந்த அதிகரிப்பொன்று காண்பித்ததுடன் 2005 ஆம் ஆண்டிலிருந்து 3.36 மில்லியன் அளவிலான செல்லிட தொலைபேசி அழைப்பாளர் எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 26.23 மில்லியன் வரை 680 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. இங்கு தொலைபேசி 100 நபர்களுக்கு 123.7 வரை அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டில் உள்ள அழைப்பாளரை இனங்காணும் அடையாள மொடியுல் பத்திரங்கள் (sim cards) கருத்திற் கொள்ளக்கூடிய அளவு தனியாக மற்றும் ஒரே நபர்களால் பயன்படுத்தப்படுவதால் இப்புள்ளிவிபரங்களின் மூலம் உள்ளவாறான நிலைமையை பிரதிபலிக்கவில்லை. விபரங்கள் உரு... இல் காட்டப்பட்டுள்ளன.

## இணையத்தள சந்தாதாரர்களின் எண்ணிக்கை

நிலையான இணையத்தள சந்தாரர்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டின் போது 929,089 வரை 36 சதவீதத்தினாலும் செல்லிட தொலைபேசி இணையத்தள சந்தாரர்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் 3,408,408 முதல் 2016 ஆம் ஆண்டின் போது 3,991,465 வரை 17 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன. விபரங்கள் பின்வரும் உரு 29 இல் காட்டப்பட்டுள்ளன.




உரு 29 - நிலையான தொலைபேசி, செல்லிட தொலைபேசி மற்றும் இணையத்தள அழைப்பாளர் எண்ணிக்கை

## அரச கம்பனி கைப்பற்றியுள்ள சந்தைப்பங்கு

தொலைத் தொடர்பு கைத்தொழிலில் நிலையான தொலைபேசிகளின் மொத்த எண்ணிக்கை 2016 ஆம் ஆண்டின் போது 2,550,432 ஆக இருந்த பொதிலும் அந்த எல்லையை விஞ்சிய செல்லிடத் தொலைபேசி அழைப்பாளர்களின் எண்ணிக்கை 26,227,631 ஆக இருந்தது. இணையத்தள சந்தாதார்களின் எண்ணிக்கை நிலையான தொலைபேசிகள் மூலம் 929,089 ஆக இருந்த போதிலும் அந்த அளவினை விஞ்சி செல்லிட தொலைபேசிகள் பாவனையில் இணையத்தள வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் சந்தாதாரர் எண்ணிக்கை 3,991,465 ஆக இருந்தது. விபரங்கள் பின்வரும் உரு 30 இல் காண்பிக்கப்பட்டுள்ளன.




உரு 30 தொலைத்தொடர்பு தொழிலில் நிலையான மற்றும் செல்லிட தொலைபேசி பாவனை

கொள்கை மாறியமை இதற்காக தாக்கமளித்திருந்தன.

இலங்கை டெலிகொம் மற்றும் மொபிடல் கம்பனிகளின் தொலை தொடர்பு கைத்தொழில் சந்தைப் பங்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொலைபேசிகள், இணையத்தளம், சந்தாதாரர்கள் 3 புள்ளிவிபர தரவுகள் பின்வரும் உரு 31 இல் காட்டப்பட்டுள்ளன.

.




உரு 31 - இலங்கை டெலிகொம் மற்றும் மொபிடல் கைப்பாற்றியுள்ள சந்தைப் பங்கு

தொடர்பாடல் உரையாடல் காலத்தை ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டு வரை படிப்படியாக அதிகரித்த உள்நாட்டு கதைக்கும் காலம் 2016 ஆம் ஆண்டின் போது 64,206,794 நிமிடங்களால் அதாவது 8 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தன. 2012 ஆம் ஆண்டில் 2,023,274,456 நிமிடங்களான கதைக்கும் காலம் 2016 ஆம் ஆண்டின் போது 1,083,162,251 வரை 46 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. ஸ்மாட்போன் (Smart Phone) பயன்பாட்டிலும் ஓவா் த டொப் (Over - the - top) மொபைல் அப்ளிகேசன் பயன்பாடு மற்றும் அரசின் வரிக் கொள்கை மாறியமை இதற்காக தாக்கமளித்திருந்தன.

## பாடசாலை கணனி ஆய்வுகூட செயற்திட்டம்

2016 ஆம் ஆண்டில் 1 கட்டத்தின் கீழ், தற்போது கணனி ஆய்வுகூடங்கள் காணப்படும் 45 பாடசாலைகளுக்காக கணனி மற்றும் உப பாகங்கள் வழங்கலும் 2 ஆம் கட்டிடத்தின் கீழ் புதிய கணனி ஆய்வுகூடம் மற்றும் புதிய தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களை தாபிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 250 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் I ஆம் கட்டத்தின் கீழ் 38 ஆய்வுகூடங்களுக்காக மாத்திரம் கணனிகள் மற்றும் உப பாகங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 06 பாடசாலைகளுக்காக சில உப பாகங்கள் வழங்கப்பட்டிருந்தன. 2 ஆம் கட்டத்தின் கீழ் 59 புதிய ஆய்வுகூடங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. அதற்காக ரூபா 146.37 மில்லியன் செல்லிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 103.63 நிதிஏற்பாடு எதிர்பார்த்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

- 2016 ஆம் ஆண்டின் போது 11 ஆம் கட்டத்தின் கீழ் கணனி ஆய்வுகூடங்கள் மற்றும் புதிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்கள் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட அளவினை கணக்கிட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2016 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட 59 கணனி

ஆய்வுகூடங்களில் 30 பதுளை மாவட்டத்திற்கு வழங்கியமையால் வளப் பகிர்வில் முரண்பாடு காணப்பட்டது.

- பதுளை மாவட்டத்தின் பாடசாலை கணனி திருத்த வேலை நிகழ்ச்சித்திட்டத்திற்காக ப/ பாரதி மஹா வித்தியாலத்திற்கும் ப/உதயராஜ் மஹா வித்தியாலயத்திற்கும் ரூபா 200,000 வீதம் ரூபா 400,000 வழங்கப்பட்டிருந்த போதும், அக் கணனிகள் தொடர்பாக எவ்வித திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

- தாபிக்கப்பட்ட கணனி ஆய்வுகூடங்களுக்காக 2016 ஆம் ஆண்டின் போது 500 ஆசிரியர்கள் பயிற்சியளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 432 ஆசிரியர் மாத்திரம் பயிற்றப்பட்டிருந்தனர்.

### மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையம்

மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் நாடு பூராகவும் 25 மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் குறைபடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- 2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கையின் பிரகாரம் 06 கணனி தொழில்நுட்ப நிலையங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி அதில் எவ்வித தகவல் நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2014 ஆம் ஆண்டிலிருந்து தொடர்வேலையாக காணப்பட்ட அம்பாறை, களுத்துறை, புத்தளம், காலி மாத்தளை, கேகாலை வவுனியா மற்றும் பதுளை ஆகிய இடங்களில் 08 மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையங்களை ஸ்தாபிப்பதற்கும் மீளாய்வாண்டின் போது கணனி மற்றும் ஏனைய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. செலவினம் 19.02 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் கேகாலை, காலி, பதுளை மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்கள் போன்ற மாவட்ட தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் செயற்படு நிலைமையில் காணப்படவில்லை.

- வவுனியா அம்பாறை, புத்தளம் மற்றும் களுத்துறை தகவல் நிலையங்களின் செயன் முன்னேற்றம் அறிக்கையிடப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைத்தல்

பிரதேச மக்களின் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் நோக்கில் யாழ்பாணம் மற்றும் மன்னாரில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காக்களுக்காக வருடாந்தம் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் உரிய மாவட்ட செயலகங்களின் மூலம் அமைச்சு மேற்கொண்டிருக்கவில்லை.

### யாழ்ப்பாண தகவல் தொழில்நுட்ப பூங்கா

2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த தொழில்நுட்ப பூங்காவிற்காக ரூபா 27.98 மில்லியன் செலவிடப்பட்டு 525 பேருக்கு கணனி பயிற்சிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

இக் காலப்பகுதியில் வருமானம் ரூபா 953,489 ஆக இருந்த போதிலும் செலவினத்திற்கு ஒப்பாக வருமான் 3.4 சதவீதமாக இருந்தது. 2016 ஆம் ஆண்டினுள் 13 பாடநெறிகளை நடாத்துவதற்கும் அதில் 245 மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும் இரண்டு பாடநெறிகளுக்கு 81 பேர் மாத்திரம் சமூகமளித்திருந்தனர்.

## இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் முகவராண்மை

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் முகவராண்மை இலங்கை அரசிற்கு முழுமையாக உரித்துடைய கம்பனியொன்றாக 05 ஆண்டு காலப்பகுதிக்காக 2003 இன் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நட்ப அதிகாரச் சட்டத்தின் கீழ் 2003 மே 18 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2003 யூலை 16 ஆந் திகதி நிறுவகத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் கம்பனிக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. 05 ஆண்டுகள் முடிவடைந்ததன் பின்னர் நிறுவனத்தின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு 2008 இன் 33 ஆம் தொடர்பாடல் தொழில்நட்ப அதிகாரச் சட்டத்தின் திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த தீர்மானம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

ஆரம்ப காலப்பகுதியில் “ஈ ஸ்ரீ லங்கா செயற்திட்டம்” உலக வங்கி கொரியா EXIM வங்கி மற்றும் ஏனைய அபிவிருத்தி நிறுவனங்கள் மூலம் நிதியத்தை வழங்கி செயற்படுத்தப்பட்ட போதிலும் தற்போது முழுமையாக அரசின் நிதியத்தின் கீழ் செயற்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் முகவராண்மை 2003 அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இதுவரை பூரண சுதந்திரத்துடன் செயற்பட்டு வருவதுடன் அரசின் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்பற்றியிருக்கவில்லை.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் முகவராண்மையின் இரண்டு துணைக் கம்பனிகளாக Computer Emergency Response team கம்பனி Cyber Security இற்காக 2005 மே 19 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 2005 ஆகஸ்ட் 15 ஆந் திகதி தாபிக்கப்பட்டிருந்தன. Lanka Government Information Infrastructure கம்பனி 2011 யூன் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரச வலையமைப்பை செயற்படுத்தும் நோக்கில் 2011 யூலை 18 ஆந் திகதி தாபிக்கப்பட்டிருந்தது.

நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று காணப்படவில்லை. நிர்வாக மற்றும் நிதிப்பிரிவின் உத்தியோகத்தர்கள் உட்பட நிறுவனத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும், மதியுரையாளர்களும் ஊழியர்களும் உட்பட சகல உத்தியோகத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை 187 ஆக இருந்தது. முகராண்மை 2003 யூன் 02 ஆந் திகதிய பீ.டி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் எதனையும் பின்பற்றியிருக்கவில்லை.

2003 இன் 27 ஆம் தொடர்பாடல் தொழில்நட்ப அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2008 இன் 33 ஆம் இலக்க திருத்த

அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தாபிக்க வேண்டிய அனைத்து அமைச்சுளுடனான குழு 12 ஆண்டுகளுக்கு பின்னர் 2015 ஒக்தோபர் 16 ஆந் தகிதி தாபிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் முகவராண்மை 12 ஆண்டுகளாக இடைக்கால அமைச்சுக் குழுவின் கண்காணிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை.

## செயற்திட்ட செயலாற்றல்

2016 ஆம் ஆண்டின் போது 65 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்கு இடையே 55 செயற்திட்டங்களுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இந்த முகவராண்மைக்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 963 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 651 மில்லியன் அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

முகவராண்மையால் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் பௌதீக செயலாற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் “ஈ - சுவஹிமாணி” சிறந்த தேசிய இலத்திரனியல் உள்ளடக்கத்திற்கான விருது விழா மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

எஞ்சிய 54 செயற்திட்டங்களிலிருந்து 20 செயற்திட்டங்கள் 0 சதவீதம் முதல் 30 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவிலும், 27 செயற்திட்டங்கள் 31 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான அளவும், 7 செயற்திட்டங்கள் 61 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான அளவிலும் செயலாற்றல் அடையப்பெற்றிருந்தன. இச் செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் போது ஏற்பட்ட தாமதங்கள், கொள்வனவுச் செயற்பாடு தாமதம் அடைந்தமை, செயற்திட்டங்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்வதில் தாமதம், கொள்வனவு செயற்திட்டங்களின் விடயப்பரப்பு மாற்றப்பட்டல், இலங்கை அரச வலையமைப்பு (LGN) செயற்திட்டத்தை செயற்படுத்துவதில் தாமதம் என்பன விஷேட காரணங்களாக இருந்தன. அதற்கு மேலதிகமாக கட்டுநிதி பெற்றுக் கொள்வதில் தாமதமும் இதற்காக தாக்கமளித்திருந்தமை நிறுவனத்தின் கருத்தாக இருந்தது.

## நெனசல செயற்திட்டம்

கிராமிய மக்கள், தகவல் மற்றும் தொழில்நுட்பத்துடன் அண்மித்த சேவைகளுக்காக தொடர்புபடுத்துவதில் மேம்படுத்துவது இச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதின் பிரதான நோக்கங்களாக இருந்தன. எவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 1,005 நெனசல நிலையங்கள் 336 நிலையங்கள் முழுமையாக மூடப்பட்டிருந்தன.

.

# உயர் கல்வி

உயர் கல்வி அனுமதிக்கான சர்நதப்பங்களை அதிகரித்தல், தரமான அபிவிருத்தி மற்றும் தேசிய மட்டத்திலான பல்கலைக்கழகங்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு நிறுவனங்களை உருவாக்குவதனூடாக அறிவை அடிப்படையாக கொண்ட பொருளாதாரமொன்றினை நோக்கி நகர்வதற்கு இயலுமான வரையில் பரந்தளவிலான கல்வி வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல் இந்தத் துறையின் நோக்கமாக இருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் தென் கீழான ஒரு திணைக்களம் மற்றும் 04 நியதிச்சட்ட சபைகள் / நிறுவனங்களை கொண்டமைந்த நிறுவனங்களால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்தது.

- உயர் கல்வி பாடங்களுக்கும் அதன் சட்டவாக்க நிறுவனங்களின் பாடங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை தயாரித்தல்.

- பல்கழைக்கழகம் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுக்குரிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் ஒன்றினைந்த தேசிய கொள்கையினை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை தொடர்புபடுத்தல்.

அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் மேற்படி பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் செயலாற்றல்.

### ஆசியாவின் தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் நீர் முகாமைத்துவம் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு முகங்கொடுத்தல் தொடர்பான நிறுவனங்களின் இயலளவு அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டம்.

மேற்குறிப்பிடப்பட்ட (WASO – ASIA) இற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 20.6 மில்லியன் மற்றும் ரூபா 25 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது அந்த நிதியேற்பாடுகளில் எதுவித பயன்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் 52 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

### ருஹுனு பல்கலைக்கழகத்தில் கலையரங்கினை நிர்மாணிக்கும் செயற்திட்டம்.

மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்துக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 306 மில்லியன் மற்றும் ரூபா 180 மில்லியன் படியாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அநத செயற்திட்டம் 2017 நவம்பர் 06 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்டது. மீளாய்வாண்டில் இறுதியவில் செயற்திட்டத்தில் பௌதீக செயலாற்றல் 30 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டது.

## 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி செயற்திட்டம்

இந்த செயற்திட்டத்தின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- இந்த செயற்திட்டத்தின் கீழ் தெஹிவளை இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் தர அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ நிலையக் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 80 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 மே மாதமளவில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. எனினும் 2016 யூன் 30 ஆந் திகதியளவில் அந்த செயற்திட்டத்தின் நிர்மாணங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 60 சதவீதமான அளவைக் கொண்டிருந்தது. குறித்த திகதியில் செயற்திட்டம் பூர்த்தி செய்யாமையால் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 19 மில்லியன் தொகையான நிதியேற்பாடு திறைசேரிக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

- 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி செயற்திட்டத்தின் கீழ் 13 தேசிய பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியின் 240 உத்தியோகத்தர்களுக்காக பட்டப்பின் படிப்பு கலாநிதி பாடநெறிகளை தொடர்வதற்காக ரூபா 367 மில்லியன் தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் முடிவின் போது 30 நலனாளிகளினால் பட்டப் பாடநெறிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- செயற்திட்டத்தின் கீழ் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் வியாபார விஞ்ஞுதக பீடத்துக்குரிய வெளிவாரி பயிற்சி அலகினை தாபிப்பதற்காக 2016 மார்ச் 29 ஆந் திகதி ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள், பாதுகாப்பு தலைக்கவசங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த வளாகத்தினை நிறுவுவதற்கு தேவையான இடவசதி ஒதுக்கப்படாமை மற்றும் உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டிராமையால் 2017 ஏப்ரல் மாதம் வரையிலும் அந்த பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்டன.

## பல்கலைக்கழக மாணவ மாணவியருக்காக 60 விடுதிகளை நிர்மாணிக்கும் துரித செயற்திட்டம்.

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மாணவர் விடுதிகளை முன்னேற்றும் நோக்கில் அரசாங்க பல்கலைக்கழக கட்டமைப்பின் வதியும் மாணவர்களின் எண்ணிக்கையை 12,000 இனால் அதிகரிப்பதற்காக விடுதியொன்றிற்காக ரூபா 220 மில்லியனான சாதாரணமான செலவினம்

மதிப்பிடப்பட்டு பல்கலைக்கழகங்களினுள் 60 விடுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் உயர்கல்வி அமைச்சினால் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

- அதன் முதலாவது கட்டத்தின் கீழ் 30 விடுத்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 2013 யூலை 26 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், எஞ்சிய 30 விடுதிகளின் பணிகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டியதாக இருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் 15 விடுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதம் 95 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. அது வரையிலும் 45 விடுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்படாத விடுதிகளின் எண்ணிக்கை 11 ஆக இருந்தது.

- விடுதிகளை நிர்மாணிக்கும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகங்களுக்கு குறித்த கட்டிடத்தை கையளித்ததன் பின்னர் ஒரு வருட காலப்பகுதியிலான நிர்மாணங்களிலான குறைபாடுகள் அந்த கட்டிடங்களை பயன்படுத்துவதன் மூலம் இனங்கண்டு, அந்த குறைபாடுகளை ஒப்பந்ததாரருக்கு அறிவித்ததன் பின்னர் உரிய திருத்தங்களை மேற்கொள்ளும் இயலுமை காணப்பட்ட போதிலும், மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கப்படாத 11 விடுதிகள் தொடர்பில் நிர்மாண புறைபாடுகளை இனங்காண முடியாதிருந்தது. கட்டிட நிர்மான நடவடிக்கைகளுக்கு புறம்பாக தளபாட உபகரணங்கள், நீர், மின்சாரம், இடிதாங்கி ஆகியவற்றை பொருத்துதல் போன்ற வசதிகளைப் போன்றே குறித்த உட்கட்டமைப்புக்களின் நிர்மாணம் நிறைவடைந்ததுடன் இணைந்ததாக நிறைவேற்றல் தொடர்பான கண்காணிப்பொன்று மேற்கொள்ளப்படாமையால் இந்த நிலைமை உருவாகியிருந்தது.

## சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை அரசின் சனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பேராதனை விவசாய பீடத்தின் விலங்கியல் கட்டுப்பாடு மற்றும் கடல்வாழ் உயிரின விஞ்ஞானம் மற்றும் விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ பாடநெறிகள் (BSC Animal Science & Fisheries Agricultural Technology and Management) ஆகிய பாடநெறிகளுக்காக வருகைதந்து பதிவு செய்யப்பட்டுள்ள இரு பாக்கிஸ்தான் மாணவர்களின் பின்னர் அரச சார்பற்ற பட்டமளிப்பு நிறுவனமொன்றில் மருத்துவ பட்டப் பாடநெறிக்கு பதிவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டு உயர்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. இந்த இரு மாணவர்களுக்காக உயர்கல்வி அமைச்சினால் அரசசார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனத்திற்கு 2017 யூன் மாதம் வரையிலும் ரூபா 3.15 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய முறையான அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்குறிப்பிட்ட புலமைப்பரிசில் முன்மொழிவு திட்டத்தின் கீழ் பல்வேறு பாடநெறிகளுக்காக இலங்கையின் பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யும் வெளிநாட்டு மாணவர்கள் குறித்த

பாடநெறியை பூர்த்தி செய்யாது 2012/2013, 2013/2014, 2014/2015 மற்றும் 2015/2016 வரையான 4 கல்வியாண்டுகளின் முறையே 04 பேர், 07 பேர், 10 பேர் மற்றும் ஒருவர் எனும் வகையில் பாடநெறியை கைவிட்டுச் சென்றிருந்தனர். அதன் பிரகாரம், 2012/2013 கல்வியாண்டின் போது பாடநெறிகளை கைவிட்டுச் சென்றிருந்த நான்கு மாணவர்களுக்காக ரூபா 1.73 மில்லியன் உயர்கல்வி அமைச்சினால் பல்கலைக்கழகங்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த பணத்தில் அந்த நான்கு மாணவர்களிடமிருந்து எஞ்சிய பாடநெறி காலப்பகுதிக்குரிய ரூபா 335,000 தொகையினை குறித்த பல்கலைக்கழகங்களிடமிருந்து மீளபெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### பல்கலைக்கழகங்களுக்கு உள்நாட்டு மாணவர்களை சேர்த்துகொண்டதன் பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள்

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் கொழும்பு, களனி, ஜயவர்த்தனபுர போன்ற பிரதான பல்கலைக்கழகங்கள் போன்றே, ஏனைய பல்கலைக்கழகங்களினால் நடாத்தச் செல்லப்படும் பௌதீக விஞ்ஞானம், விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம், உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கணனி விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடநெறிகளுக்காக தகைமையினை பூர்த்தி செய்துள்ள சில மாணவர்கள் அந்த பாடநெறிகளின் கீழ் பதிவுசெய்யப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதன் காரணமாக ஏற்படும் மாணவர் பற்றாக்குறையினால் தொடர்ந்தும் விண்ணப்பித்துள்ள மாணவர்களிடையே பின்னர் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2013/2014 ஆம் கல்வியாண்டு ஆம் கல்வியாண்டு தொடக்கம் 2015/2016 கல்வியாண்டு வரையிலும் முறையே 1794, 1455 மற்றும் 1695 மாணவர் பற்றாக்குறைகள் நிலவின. அதன் பிரகாரம், பல்கலைக்கழக நுழைவிற்கான தகைமை பெற்றுள்ள பெருந்தொகையான மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

2015/2016 கல்வியாண்டின் போது நிலவிய 1,695 வெற்றிடங்களில் 990 வெற்றிடங்களுக்காக பல்கலைக்கழகங்களில் பல்வேறு பாடநெறிகளுக்காக தகைமை பெற்றுள்ள மாணவர்களை பதிவு செய்யுமாறு கோரியிருந்த போதிலும், சில பாடநெறிகளில் காணப்படும் காலங்கடந்த மற்றும் நடைமுறைக்கு பொருந்தாமையின் காரணத்தால் பல்கலைக்கழக நுழைவினை பெற்றுக்கொள்ளாமையால் வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பீடாதிபதிகளினால் பல்கலைக்கழகங்களின் கல்விசார் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், மாணவர்களை இணைத்துக்கொள்ளக் கூடாதென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்தமையால் அந்த வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்தன.

### பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக்கொண்டதன் பின்னர் ஏற்படும் வெற்றிடங்கள்

2011 சனவரி 25 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், இலங்கையின் பல்கலைக்கழகங்களுபக்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கடந்த 3 கல்வியாண்டுகளுக்காக பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின்

எண்ணிக்கை மற்றும் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றுக்கிடையில் பாரியளவான விலகல் நிலவியது.

உள்நாட்டு பல்கலைக்கழகங்களுக்காக தெரிவு செய்யப்படும் வெளிநாட்டு மாணவர்கள் கொழும்பினை தவிர்ந்த பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்படாத போக்கொன்று இந்த வெற்றிடங்கள் தொடர்பில் பிரதானமாக தீர்மானித்திருந்ததுடன், அந்த பல்கலைக்கழகங்களின் தரத்தினை அதிகரித்தலுடன் போக்குவரத்து வசதிகள், தங்குமிடம், உணவு மற்றும் சுகாதார வசதிகள் உள்ளடங்களான ஏனைய வசதிகளும் சர்வதேச தரத்திற்கு பொருந்தும் வகையில் மேம்படுத்தப்படாமை இதற்கான காரணமாக அமைந்திருந்தது.

## ஒப்பந்தங்கள் மற்றும் பிணைமுறிகளை மீறுதல்

ஒப்பந்தங்கள் மீறப்படுகின்றமையின் காரணத்தால் பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணம் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 10(2) மற்றும் 99(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும் அதற்கு முரணாக பல்கலைக்கழகத்தின் அங்கீகாரமின்றி 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கையை மீறிய பேராசிரியர்களின் நிதியம் “Bond Violation/Breach Fun” எனும் பெயரிலான நிதியம் தாபிக்கப்பட்டு அந்த நிதி முதலீட்டிலிருந்து கிடைக்கும் வருமானம் பல்கலைக்கழகத்தின் பல்வேறு செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் ஆணைக்குழு உள்ளடங்கலான 6 பல்கலைக்கழகங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய நிதியங்களின் கூட்டுத்தொகை ரூபா 265 மில்லியனாக இருந்தது.

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 4 பல்கலைக்கழகங்களின் உடன்படிக்கைகயை மீறிய பேராசிரியர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டியதுடன், அந்த பணத்தை அறவிடுதல் தொடர்பில் பல்கலைக்கழகங்களின் தாபனவிதிக் கோவையின் ஏ ஆம் அத்தியாயத்தின் 7.6 மற்றும் 7.8 பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## நிதியங்களின் குறைப்பயன்பாடு

திறைசேரியினால் மீளாய்வாண்டின்போது குறைநிரப்பு மதிப்பீடுகளை ஒதுக்குவதன் மூலம் 05 மூலதன பணிகளுக்காக ரூபா 3,855 மில்லியன் தொகையான நிதியேற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றுள் 03 மூலதன பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 1,750 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் இறுதியளவில் 2016 திசெம்பர் 29 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 900 மில்லியன் தொகையில் ரூபா 409 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது.

பல்வேறு வகையான புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக ஆணைக்குழுவினால் ரூபா 24 மில்லியன் கூட்டுத்தொகையான 30 நிதியக் கணக்குகள் பேணப்பட்டிருந்த போதிலும், குறித்த பணிக்காக 05 நிதியக் கணக்குகளில் ரூபா 15 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. பயன்படுத்தப்படாத 25 நிதியக் கணக்குகளில் ரூபா 9 மில்லியன் கூட்டுத்தொகையான மீதியொன்று நிலவியது.

அந்த பணம் வங்கி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை உயர்கல்வி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்திற்கு 2016 ஆம் ஆண்டின் போதும் ரூபா 978 மில்லியன் தொகையான மூலதன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் ரூபா 545 மில்லியன் காசாக பெறப்பட்டிருந்தது. இந்த பணத்தில் ரூபா 395 மில்லியன் அல்லது 72 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 150 மில்லியன் அல்லது 28 சதவீதமான நிதியேற்பாடு குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்விக்கான நிறுவனம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்குரிய 12 வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 518 மில்லியன் ஆன மீதியொன்று நிலவியதுடன், எஞ்சிய பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### மஹாபொல புலமைப்பரிசில் வழங்குதல்

இலங்கை உயர் தொழில்நுட்பத்திற்கான கல்வி நிறுவனத்தின் 2013/2014 ஆம் கல்வியாண்டிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு மஹாபொல உயர்கல்விக்கான புலமைப்பரிசில் நிதியத்தின் கீழ் வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்காக மாணவர்களை தெரிவு செய்வதற்கான தேவைப்பாட:டு குறிகாட்டி (Need Index) இணை பயன்படுத்தி அந்த குறிக்காட்டிக்கு தரவுகளை உட்செலுத்தும் பொது புலமைப்பரிசிலுக்கு தகுதியற்ற உயர்ந்த வருமானம் பெறும் பெற்றோரின் குடும்பங்களின் மாணவர்கள், வருமானமற்ற மாணவர்களாக கருதி தரவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக மஹாபொல புலமைப்பரிசிலுக்காக தகுதியற்ற உயர்ந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்களுக்கு மஹாபொல நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் உரித்தாகின்றமையால், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மாணவர்களுக்கு புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் இழப்பாகியுள்ளமை புலமைப்பரிசில் வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

# மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி

இலங்கையில் சக்தி துறையில் தன்னிறைவு உடையதாக மாற்றுவதுடன் மின்வலு உற்பத்திக்காக புதுப்பிக்கக்கூடிய சக்தி மூலாதாரங்களிலிருந்து கிடைக்கும் பங்களிப்பினை மேம்படுத்துவதும் மொத்த மின்வலு தேவை புதுப்பிக்கத்தக்க மற்றும் ஏனைய உள்நாட்டு சக்தி மூலகங்களிலிருந்து நிறைவேற்றிக் கொள்வதற்கும் சக்தி துறையில் முதலீடு செய்வதற்காக பிணைகள், கடன்கள் அரச மற்றும் தனியார் பங்குடமை மற்றும் ஏனைய நிதி வளங்களை பயன்படுத்துதல் இத்துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. அந்நோக்கங்களினை நிறைவேற்றுவதற்காக மின்வலு மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 7 நியதிச்சட்ட சபைகள் என்பவற்றால் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைய வேண்டியிருந்தன.

- மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான விடயங்களுடனும் கொள்ளைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் கண்காணித்தலும் மதிப்பிடலும்.
- மின்வலு வளமூலங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குறுத்துகை, பயன்பாடு ஆகியவற்றுக்குத் தகுந்த மின்வலுக் கொள்கையொன்றை வகுத்தமைத்தல்.
- நீர், அனல், நிலக்கரி மற்றும் காற்று ஆகிய மூல வளங்களின் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்தல் தொடர்பான அலுவல்கள் மீதான ஆராய்வும், திட்டமிடலும் கண்காணிப்பும் அபிவிருத்தியும்.
- கிராமிய மின்வலுப்படுத்துகை.
- எரிசக்தி வினைத்திறன் கேள்விப்பாட்டின் அடிப்படையில் கேள்வியை முகாமை செய்தலும், புதுப்பிக்கத்தக்க மின் சக்தியை அபிவிருத்தி செய்தலும்,

அமைச்சின் மற்றும் அதன் கீழ்வரும் செயற்படுகின்ற நிறுவனங்களால் மேற்குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

## திட்டமிடப்பட்ட அனல் மின்நிலையங்களை ஆரம்பித்தல்.

2025 ஆண்டு வரையில் அனல் மின் நிலையத்திலிருந்து 2000 மெகாவோட் இயளலவினை மின்சக்தி முறைமைக்கு சேர்த்துக் கொள்வதற்கு மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 500 மெகாவொட்டுடன் கூடிய உத்தேச சம்பூர் அனல் மின் நிலைய செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்ததுடன் 600 மெகாவாட்டுடன் கூடிய அம்பாந்தோட்டை செயற்திட்டம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## வெளிநாட்டு உதவி பயன்பாடு

மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் 10 செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு வருடாந்தம் ஒதுக்கீட்டு

அதிகாரசட்டத்தின் கீழ் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் கீழ் ரூபா 768 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 161 மில்லியன் அதாவது ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாட்டிலிருந்து 21 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. ரூபா 290 மில்லியன் மதிப்பீட்டு கிரயத்திலான 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆண்டு வரை செயற்படுத்தப்பட்ட நிலைபேறுதகு எரிசக்தி துறை 2 ஆம் கட்ட செயற்திட்டம் (ADB), மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் கீழ் 19 சிறிய நீர் செயற்திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு தேசிய மின்சக்தி முறைமைக்கு சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் ஒரு சிறிய நீர் செயற்திட்டம் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. 18 நீர் செயற்திட்ட உரிமையாளர்கள் தமது பங்களிப்பினை அதற்காக வழங்குவதற்கு இணங்காத காரணத்தினால் அச்செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்த போதிலும் மதியுரை மற்றும் நிர்வாகச் செலவினமாக ரூபா 6.89 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி அடிப்படையில் மாற்று எரிசக்தி நுழைவினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ஸ்ரீ ஜயவர்த்தனபுர முறைமை கட்டுப்பாட்டு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,863 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் மாதம் வரையிலும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதற்காக ரூபா 714 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் பௌதீக செயலதற்றல் 37 சதவீதமாக இருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி அடிப்படையில் நிரந்தர எரிசக்தி துறை ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் கீழ் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சினால் கிரிபத்கும்புற தள உபநிலையத்தை மேம்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,042 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 862 மில்லியன் அதாவது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 83 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறு அதன் பௌதீக செயலாற்றல் 47 சதவீதமாக இருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கி கடனின் கீழ் இலங்கை மின்சார சபையினால் செயற்படுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்படாமையால் ரூபா 60 மில்லியன் தாமதக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

### இலங்கை மின்சார சபையின் செயற்பாட்டு விளைவு

இலங்கை மின்சார சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வரைவு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இலங்கை மின்சார சபையினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 13,234 மில்லியன் வரிக்கு முன்னரான நட்டமொன்றை அடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது ரூபா 19,409 மில்லியனான வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 32,643 மில்லியன் வீழ்ச்சியாக இருந்தது. எரிபொருள் கொள்வனவுக் கிரயம் 117 சதவீதத்தினால் அதிகரித்தமை, அனல் மின்சாரத்தின் கொள்வனவின் கிரயம் 59 சதவீதத்தால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு அடிப்படை காரணமாக இருந்தது.

## மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை.

மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டின் நீர் மின் உற்பத்தி 1,749 கி.வொ. மணித்தியாலங்கள் அதாவது 29 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும், 2016 ஆம் ஆண்டில் அனல் மின் உற்பத்தி 14 சதவீத்தினாலும் எரிபொருள் அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி 96 சதவீதத்தினாலும் அதிகரித்து இருந்தது. ஒவ்வொரு மூலங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் தொடர்பான பொழிப்பு அட்டவணை 35 இல் காட்டப்பட்டுள்ளது.

| மூலங்கள் | மின் உற்பத்தி கி.வொ.மணி | | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக அதிகரிப்பு / (குறைவு) | |
|---|---|---|---|---|
| | 2016 | 2015 | கி.வொ.மணி | சதவீதம் |
| நீர் மின்சாரம் | 4,220 | 5,969 | (1,749) | (29.30) |
| எரிபொருள் | 4,461 | 2,275 | 2,186 | 96.09 |
| நிலக்கரி | 5,047 | 4,443 | 604 | 13.59 |
| மரபு ரீதியற்ற புதுப்பிக்கத்தகு எரிசக்தி | 421 | 402 | 19 | 4.73 |
| **மொத்தம்** | 14,149 | 13,089 | 1,060 | 8.10 |

அட்டவணை 35 ஒவ்வொரு மூலத்தினாலும் எற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம்
மூலம்- இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களிலிருந்து

சபையினால் தனியார் மின் உற்பத்தியாளர்களிடமிருந்து அனல் மின்சார கொள்வனவிற்காக 2016 ஆம் ஆண்டின் போது செலவினமொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. அச் செலவின அதிகரிப்பு ரூபா 22,682 மில்லியன் அதாவது 59 சதவீதமாக இருந்தது.

## உழைக்கும் போதே வரி செலுத்துதல்

2007 திசெம்பர் 13 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் சம்பள மீளமைப்பிலிருந்து ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய உழைக்கும் போதே வரிப் பொறுப்பை அவ்வாறு அறவிடாமல் இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பேரில் சபைக்கு ரூபா 2,617 மில்லியனான மேலதிக கிரயமொன்று செலவிட நேர்ந்திருநதது.

## பதவியணியினருக்கு படிகள் கொடுப்பனவு

1994 யூன் 04 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக அமைச்சரவையின் அங்கீகாரமின்றி பதவியணியினருக்கு படிகளாக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,222 மில்லியன் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்காக ரூபா 1,993 மில்லியனாக மொதததம் ரூபா 3,215 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## “விதுலக்பாய” கட்டிட நிர்மாணம்

இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்திற்காக “விதுலக்பாய” கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 418 மில்லியன் செலவிடப்பட்டதன் பின்னர் நிர்மாண வேலைகள் 2014 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதனை மாற்று நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## லக்விஜய மின்நிலையம் - விளைவற்ற சொத்துக்கள்

2009 இல் நிலக்கரியை போக்குவரத்து செய்யும் நோக்கத்திற்காக ரூபா 1,077 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 02 அகன்ற படகுகள் மற்றும் மூன்று இழுவைப் படகுகள் நிலக்கரி இறக்கும் செயற்பாட்டிற்கு பொருத்தமற்றதாகவிருப்பதால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன. அவ்விரண்டு படகுகளும் திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டமைக்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 36 மில்லியன் தொகை இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

## பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

இலங்கை மின்சார சபையால் போதிய அறவீட்டு நடவடிக்கைகள் எடுக்காமல் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள மீதிகள் ரூபா 2,289 மில்லியனாக இருந்தது.

## உரித்து உறுதிப்படுத்தப்படாத சொத்துக்கள்

அப்போது காணப்பட்ட மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் பெயரில் 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 47 மில்லியன் பெறுமதியான 06 வாகனங்கள் இலங்கை மின்சார சபையின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டு வந்திருந்த போதிலும் அச்சொத்துக்களை இலங்கை மின்சார சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## காணாமல் போன வாகனங்கள்

அப்போது காணப்பட்ட மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 7 மில்லியன் கிரயமான 11 வாகனங்கள் பல வருடங்களிற்கு முன்பிருந்தே காணாமல் போயிருந்தன.

# பெற்றோலிய வள அபிவிருத்தி

உள்நாட்டு பெற்றோலியம் மற்றும் எரிவாயுவை சிறப்பாக உற்பத்தி செய்வதன் மூலம் இலங்கையை மின்வலுவில் தன்னிறைவடைந்த நாடாக மாற்றுவது மற்றும் நாட்டின் பெற்றோலிய உற்பத்தி வேண்டுதலை உள்நாட்டில் இனங்காணப்பட்ட உற்பத்திச் செயற்பாடுகளின் மூலம் பூர்த்திசெய்து கொள்வதுடன் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்ட பிளாஸ்ரிக்களைப் பயன்படுத்தி பெற்றோலிய உற்பத்திகனை மேற்கொள்வதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்தல் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவின் குறிக்கோளாக இருந்தது. அக்குறிக்கோளை அறிந்து கொள்வதற்காக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சினாலும் அதன் கீழுள்ள 04 நிதியச்சட்ட நிறுவனங்களாலும் பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றவேண்டியிருந்தது.

- பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி தொடர்பான விடயத்திற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்கள் என்பவற்றை தயாரித்தல், பின்தொடர் நவடிக்கை மேற்கொள்ளல், மதிப்பாய்வு செய்தல் என்பன.
- பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள், இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்தல், சுத்திகரித்தல், களஞ்சிப்படுத்தல், பகிந்தளித்தல் சந்தைப்படுத்துதல் என்பன
- பெற்றோலிய உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு சம்பந்தமான நடவடிக்கைகள்
- பெற்றோலியத்தை கண்டுபிடித்தலும் அது சார்ந்த நடவடிக்கைகளும்
- பெற்றோலிய உற்பத்தி மூலங்களிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்தலும் பகிந்தளித்தலும்
- எரிபொருளை வழங்குதல் மற்றும் பகிந்தளித்தலுடன் தொடர்புபட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களினால் மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கி கீழே தரப்படுகின்றன.

### திருகோணமலை எண்ணெய்த் தாங்கி தொகுதியை அபிவிருத்தி செய்தலும் புனரமைத்தலும்

1930 ஆம் ஆண்டின் போது தேற்றுவிக்கப்பட்ட பூகோள அமைவிடத்தின் பிரகாரம் உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ள உலகின் இரண்டாவது ஆழமான துறைமுகம் திருகோணமலை துறைமுகமாக இருந்தது. அதிலுள்ள எண்ணெய்த் தாங்கி முறைமையானது 12500 கனமீற்றர் கொள்லளவைக் கொண்டுள்ள 102 தாங்கிகளையும் ஏனைய அவை சார்ந்த வசதிகளையும் உள்ளடக்கியிருந்தன. தற்பொழுது 99 எண்ணெய்த் தாங்கிகள் காணப்டுவதுடன் கீழ்ப் பகுதியிலுள்ள 14 எண்ணைய்த் தாங்கிகள் லங்கா இந்தியன் எண்ணெய்க் கம்பனியால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத மேல் பகுதியிலுள்ள 84 எண்ணைய்த் தாங்கிகளைப் புதுபிப்பதற்காக அடிப்படைத் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கை 2011 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மீளாய்வாண்டின் இறுதி வரை இறுதி தீர்மானம் எடுக்கப்படாததன் காரணமாக புதுப்பித்தல் செயற்திட்டத்தை அமுல்படுத்த முடியாதிருந்தது.

### பிளாஸ்ரிக் கழிவுப்பொருட்களிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்தல்

பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக்களினால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுத்தல் மற்றும் வெளிநாட்டு நாணயத்தை சேமித்தல் என்னும் குறிக்கோளுடன் பொலிப்டோ இலங்கை தனியார் கம்பனியானது பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பிலாஸ்ரிக்களிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தை 2009 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்து 2010 திசெம்பர் மாதத்தின் போது பூர்த்தி செய்திருந்தது இம் முன்னோடி செயற்திட்டத்தை வணிகரீதியான செயற்திட்டமாக உருவாக்குதல் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 மே 07 ஆந் திகதி வணிக செயற்திட்டத்தின் முதலாவது அதிகாரமளித்தல் இடம் பெற்றிருந்தது. 2015 செப்தெம்பர் 03 ஆந் திகதி வணிகம் சார்ந்த பொறிமுறையானது அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. முன்னோடி செயற்திட்டத்தையும் உள்ளடக்கி வணிகரீதியான செயற்திட்டத்திற்காக 2017 யூலை 15 ஆந் திகதி வரை திறைசேரியிடமிருந்து அவ்வப்போது ரூபா 250.36 மில்லியன் இச் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்தது.

செயற்திட்டத்ததை அமுல்படுத்தும் போது முறைப்படியாக கிரய பிரதிபலன்களை மீளாய்வு செய்யாமை, உற்பத்திக்கான சந்தைகளை இனங்காணாமை, முன்னோடி செயற்திட்டங்களை வணிகம் சார்ந்த செயற்திட்டமாக அமுல்படுத்தம் போது ஏற்படுகின்ற தடைகள் மற்றும் சிக்கல்களை இனங்கண்டு அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்காக திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்தாமை, செயற்திட்டத்திற்கு தேவையான போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை, வணிகம் சார்ந்த செயற்திட்டத்திற்கான நிதிகள் உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளாமை, வணிகம் சார்ந்த செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது உற்பத்தி முகாமைத்துவம் மிகவும் பலவீனமான நிலையில் காணப்படுகின்றமை என்பனவற்றின் காரணமாக இச் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளமுடியாது வெற்றியளிக்காத செயற்திட்டமாக மாறியிருந்தது.

செயற்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பின்வரும் செயலாற்றல் குறிகாட்டிகளின் பிரகாரம் செயலாற்றலை அடைந்து கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் வணிகம் சார்ந்த செயற்திட்டமாக 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட இச் செயற்திட்டத்தின் செயலாற்றல் உரிய செயலாற்றல் குறிகாட்டிகளின் பிரகாரம் இலக்குகளை அடைந்திருக்கவில்லை. விபரம் 36 ஆம் அட்டவணையில் தரப்படுகின்றது.

.

| பிரதான செயலாற்றல் குறிகாட்டி | செயலாற்றல் | இலக்குகளை அடைந்து கொள்ளும் சதவீதம் |
|---|---|---|
| பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக்கை சுற்றாடலுக்குள் விடுவிப்பதனைத் தவிர்ப்பதற்காக ஒரு ஆண்டிற்கு பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட 660,000 கிலோ கிறாம் பிளாஸ்ரிக்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளல் | உற்பத்திக்கான மூலப் பொருளாகப் பயன்படுத்தப்பட்ட பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட 22000 கிலோ கிறாம் பிளாஸ்ரிக்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது | 3.3 சதவீதம் |
| பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் இறக்குமதிக் கிரயத்தை குறைப்பதன் மூலம் ஆண்டிற்கு ரூபா 30 மில்லியன் வெளிநாட்டு நாணயத்தைச் சேமித்தல். | உற்பத்தி செய்யப்பட்ட 39600 லீற்றர் மசகு எண்ணெயை ரூபா 40 விதம் விற்பனை செய்ததன் மூலம் ரூபா 1.584 மில்லியன் வருமனம் உழைக்கப்பட்டிருந்தது. எனினும் ஒரு லீற்றர் மசகு எண்ணெயை உற்பத்தி செய்வதற்காக ரூபா 350 இற்கு மிகையான செலவு செய்யப்பட்டிருந்தது. | ஒரு லீற்றரில் இருந்து ரூபா 40 வெளிநாட்டு நாணயத்தை சேமிக்க முற்படுகையில் அதற்காக உண்மையில் ரூபா 350 தொகையான உற்பத்தி கிரயத்தை செலவு செய்திருந்ததனால் இலக்கினை அடைந்து கொள்ளல் - 40.92 சதவீதமாக இருந்தது. |

அட்டவணை 36 பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்களிலிருந்து எரிபொருளை உற்பத்தி செய்யும் இலக்கினை அடைந்து கொள்ளல்

### பொற்றோலிய உற்பத்திக்காக விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தல்

இலங்கையின் வருடாந்த பெற்றோலிய இறக்குமதிச் செலவு மொத்த இறக்குமதிச் செலவில் 12 சதவீதம் அளவில் காணப்பட்டதுடன் அது நாட்டின் மொத்த வருடாந்த வருமான ஏற்றுமதி வருமானத்தில் 20 சதவிதத்திலிருந்து 40 சதவீதம் வீச்சுடையதாகக் காணப்பட்டது. உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலைகள் உயர்வடைகின்ற அளவுக்கு சமமாக அல்லது திறைசேரியால் பெற்றோலியத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற பல்வேறு வரிகளால் குறைவடைகின்ற அதிகரிக்கின்ற சதவீதத்திற்கு அல்லது உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலியத்தைச் சந்தைப்படுத்துகின்ற விலைகளில் மாற்றமடையாத சந்தர்ப்பங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனத்திற்கு ஒரு லீற்றர் டீசல் மற்றும் பெற்றோலை இறக்குமதி செய்வதற்கு ஏற்படும் செலவை விடக் குறைந்த விலைக்கு சற்தைப்படுத்த வேண்டியிருந்தது. பொது மக்களுக்கு நிவாரண விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்காக அரசாங்கத்தினால் காலத்துக்கு காலம் எடுத்துக்கொள்ளப்படும் கொள்கைகள் மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள பாதகமான நிதி நிலைமையின் காரணமாக பெற்றோலியத்தை எடுத்துச்செல்லும் குழாய் வழி முறைமையை அபிவிருத்தி செய்தல், ஒரு முனை நங்கூரத் தள உருளை முறைமையை பொருத்துதல், சுத்திகரித்தலை புனரமைத்தல் ஆகிய பெற்றோலியக் கைத்தொழில் துறையின் முன்னுரிமையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளில் உரிய காலத்தில் முதலீடு செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நவடிக்கைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் இல்லாமையின் அடிப்படையில் அதன் விளைதிறனற்ற செயற்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக நாளாந்தம் பாரிய கிரயத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

எனவே நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சமமான வகையில் பெற்றோலியத்தின் விலைகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் பெற்றோலியத்தின் விலைகளை நிரந்தரமாக பேணிச்செல்லல் அவசியமாக உள்ளது. அதற்காக பெற்றேலிய உற்பத்திக்கான நிதி

ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக பொதுவான சூத்திரத்தை தயாரிப்பதற்கு 2015 பெப்ரவரி 02 ஆந் திகதி பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சரவையின் உப குழு கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டில் இறுதி வரையும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## எண்ணெய் சுத்திகரித்தலை புத்துருவாக்குதலும் விரிபடுத்துதலும்

1969 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் பொற்றோலிய உற்பத்திகள் உள்நாட்டு தேவைப்பாட்டில் 35 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரையான வீச்சுடைய அளவைப் பூர்த்தி செய்திருந்தது. நிகழ்கால பெற்றோலிய உற்பத்தியை நிகழ்காலத்துக்குப் பொருத்தமான வகையில் சுத்திகரித்தலை புத்துருவாக்குதலும் விரிபடுத்துதலும் அத்தியாவசியமான செயற்பாடாக உள்ளது அதன் மூலம் மின்வலுவைப் பாதுகாத்தல், பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்தல், உற்பத்தியின் தரத்திற்கு சிக்கல் ஏற்படுவதைக் குறைத்தல் மற்றும் முடிவுப்பொருளாக பெற்றோலியத்தை இறக்குமதி செய்யும் போது செய்யப்படவேண்டிய அதிக செலவை ஏதாவது ஒரு அளவுக்கேனும் குறைக்கக்கூடியதாக இருத்தல் ஆகிய நலனை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

நிகழ்கால எண்ணெய் சுத்திகரிப்பை புத்துருவாக்குதலும் விரிபடுத்துதலும் சம்பந்தமாக பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக அமைச்சரவையின் உப குழு நியமிக்கப்பட்டிருந்தது. அக்குழு 2015 மார்ச் 15 ஆந் திகதியிலிருந்து குழுவின் பல கூட்டங்களில் எண்ணெய் சுத்திகரித்தலை புத்துருவாக்குதலும் மற்றும் விரிபடுத்துதலும் சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டிருந்தது. 2016 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது உத்தேச செயற்திட்டத்தின் நிதிசார் சாத்தியவள ஆய்விற்காக இலத்திரனியல் குழு நியமிக்கப்பட்டிருந்தது. நிகழ்கால எண்ணெய் சுத்திகரிப்பை புத்துருவாக்குதலும் விரிபடுத்துதலும் மிகவும் முக்கிய விடயமாக உள்ள போதிலும் அது தொடர்பாக அதிக முன்னுரிமை வழங்குவதற்கு உரிய தரப்பினர்களால் அக்கறை காட்டப்படவில்லை.

## பண்டாரநாயாக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு குழாய் முறைமையை புத்துருவாக்குதலும் விரிவுபடுத்துதலும்

பண்டாரநாயாக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு குழாய் முறைமையை புத்துருவாக்குதலும் விரிபடுத்துதலும் செயற்திட்டத்தின் கூறாக மேலதிக களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதல், தற்பொழுது காணப்படும் எண்ணெய் வழங்கும் குழாய் முறையை புத்துருவாக்குதல் மற்றும் விரிவுபடுத்துல் அம்சம் உள்ளடக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பொறியியலாளர் மதிப்பீடானது அமெரிக்க டொலர் 61 மில்லியனாக இருந்தது. பண்டாரநாயாக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு குழாய் முறைமையை புத்துருவாக்குதல் மற்றும் விரிபடுத்துவதற்காக பெறியியலாளர் கொள்வளவு மற்றும் நிர்மாண நடைமுறைகளுக்கு இணங்க சர்வதேச கேள்விகள் கோரப்பட்டதாக 2015 திசெம்பர் 09 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை இது சம்பந்தமாக போதிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக் கவில்லை.

## பெற்றோலியம் இறக்குமதி செய்தல்

இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது இலங்கைக்கு பெற்றோலியத்தை இறக்குமதி செய்வதற்காக ரூபா 333 பில்லியன் (ஐக்கிய குடியரசு டொலர் 2.3 மில்லியன் ) செலவு செய்யப்பட்டிருந்தது. அந்த இறக்குமதிச் செலவு 2016 ஆம் ஆண்டின் நிகழ்கால சந்தை விலைக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதத்தை பிரதிநிதிதுவப்படுத்தியிருந்தது. அவ்வாறே அச்செலவு 2016 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவில் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. பூர்த்தியான மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 244 பில்லியன் மற்றும் 246 பில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரு பரல் மசகு

எண்ணெயின் வருடாந்த சராசரி விலை 2014 ஆம் ஆண்டின் போது ஐக்கிய குடியரசு டொலர் 104.53 ஆக இருந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டின் போது அமெரிக்க குடியரசு டொலர் 54.80 வரை 47.6 சதவீதத்தாலும் 2016 ஆம் ஆண்டின் போது அமெரிக்க குடியரசு டொலர் 46 வரை 16 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ஒரு பெரல் 92 ஒக்டேன் பெற்றோல் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட 95 ஒக்டேன் பெற்றோலின் வருடாந்த சராசரி இறக்குமதி விலை முறையே அமெரிக்க குடியரசு டொலர் 71 மற்றும் அமெரிக்க குடியரசு டொலர் 74 ஆக இருந்தது. அது 2016 ஆம் ஆண்டின் போது முறையே ஐக்கிய குடியரசு டொலர் 58.2 மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 60.5 ஆக இருந்தது. அதற்கிணங்க 2016 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ஒரு பெரல் 92 ஒக்டேன் பெற்றோல் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு பெரல் 95 ஒக்டேன் பெற்றோலின் வருடாந்த சராசரி இறக்குமதி விலை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 18.0 சதவீதத்தாலும் 18.2 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ஒரு பெரல் பீஎம் 10 டீசல் மற்றும் பீஎம் 500 டீசலின் சராசரி இறக்குமதி விலை முறையே ஐக்கிய குடியரசு டொலர் 68.2 மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 68.5 ஆக இருந்தது. அது 2016ஆம் ஆண்டின் போது முறையே ஐக்கிய குடியரசு டொலர் 56.9 மற்றும் ஐக்கிய குடியரசு டொலர் 54.7 ஆக இருந்தது. அதற்கிணங்க 2016ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட ஒரு பெரல் பீஎம் 10 டீசல் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட பீஎம் 500 டீசலின் வருடாந்த சராசரி இறக்குமதி விலையை 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 16.6 சதவீதத்தாலும் 20.1 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் (கணக்காய்வு செய்யப்படாதது) 2016 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 69,620 மில்லியன் வரிக்கு முன்னைய தேறிய இலாபத்திற்கு எதிராக முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னைய தேறிய இலாபம் ரூபா 19,886 ஆக இருந்தது. அதற்கிணங்க 2016ஆம் ஆண்டின் நிதிசார் விளைவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பு ரூபா 89,506 மில்லியனாக இருந்தது. சர்வதேச சந்தையில் பெற்றோலியத்தின் விலைகளின் குறைவு காரணமாக இறக்குமதி கிரயத்தில் குறைவு, உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலியத்தின் வேண்டுதல் அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள விற்பனைகளின் முன்னேற்றமானது 2016 ஆம் ஆண்டின் ஐக்கிய குடியரசு டொலருக்கு நேரொத்த வகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும் போக்கில் குறைவும் முன்னைய ஆண்டிற்கு நேரொத்த வகையில் நிதிச் செலவுகளில் குறைவு ஆகிய விடயங்கள் இந்த இலாபத்திற்கு காரணமாக இருந்தது. மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நிதி செயலாற்றலில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை (2014 ஆம் ஆண்டை தவிர்த்து) அதிக இலாபம் கிடைத்ததன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் நிலைமையானது 2016ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 185,886 மில்லியனான பாதக நிலைமை வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எனவே அரசாங்கத்தின் நிதி உதவி இல்லாது கூட்டுத்தாபனத்தை தற்பொழுது தொழில் முயற்சி ஒன்றாக தொடர்ச்சியாக பேணுவதற்குள்ள இயலுமையானது சச்சரவுக்குரியதாகக் காணப்படுகின்றது. 2016ஆம் ஆண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்காக கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் / நட்டம் மற்றும் தேறிய சொத்துக்கள் நிலைமையானது உரு 32 இல் தரப்படுகின்றது.




உரு. 32 கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபம் / (நட்டம்) மற்றும் தேறிய சொத்துக்கள் நிலைமை)
மூலம் :- கூட்டுத்தாபனத்தின் சான்றுபடுத்திய நிதி அறிக்கை

கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 43,099 மில்லியன் வரிக்குப் பிந்திய இலாபம் ஈட்டப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தை நடாத்துவதன் மூலம் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல், அரசாங்கத்திற்கு வரி செலுத்துதல் அரசாங்கத்திற்கு விசேட கட்டணங்களைச் செலுத்துதல் மற்றும் பெறுமானத்தேய்வின் அளவை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் 2016 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 153,184

மில்லியன் பங்களிப்பும் வழங்கப்பட்டிருந்தது. கூட்டுத்தாபனம் நாட்டிற்கு வழங்கியுள்ள பங்களிப்பையும் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொண்டிருந்த இலாபம் / நட்டம் அதாடர்பான நிலைமையையும் உரு 33 இல் தரப்படுகின்றது.




உரு 33 கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த இலாபம் / (நட்டம்) மற்றும் நாட்டுக்கு சேர்க்கப்பட்ட பெறுமதி.

## எதிர்கால பாதுகாப்புக் கொடுக்கல் வாங்கல்கள் (ஹெஜிங்)

கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட எதிர்கால பிணைக் கொடுக்கல் வாங்கல்கள் (ஹெஜிங்) மூலம் 2017 பெப்ரவரி 20ஆந் திகதி வரை நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 14.03 பில்லியனாக இருந்தது. விபரம் அட்டவணை 37 இல் தரப்படுகின்றது

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| பிணைக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் (ஹெஜ்ஜிங்) அனைத்து பெறுவனவுகள்: | | |
| **கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் நட்டம்** | 137,988,404 | |
| **தீர்ப்பனவின் அடிப்படையில் பெறுவனவுகள்** | 152,160,848 | |
| | | **290,149,252** |
| கூட்டுத்தாபனத்தின் மூலம் மேற்கொண்ட பெறுமதிகள் | | |
| **கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் நட்டம்** | 1,278,531,706 | |
| **தீர்த்து வைத்தல்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள்** | 11,577,356,580 | |
| **சட்டச் செலவுகள்** | 799,393,492 | |
| **போக்குவரத்துச் செலவுகள்** | 5,261,827 | |
| **வங்கி வட்டி** | 250,570,863 | |
| **ஏனைய செலவுகள்** | 20,139,947 | |
| | | **13,931,254,415** |
| எதிர்கால பிணைக் கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் (ஹெஜிங்) கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் | | **13,641,105,163** |
| கூட்டுத்தாபனம் தொடர்பாக மத்திய வங்கியினால் மேற்கொண்ட சட்ட செலவுகள்: | | |
| **மீள் நிரப்பப்படாத செலவுகள்** | 3,145,971 | |
| **மத்திய வங்கியினால் மேற்கொண்ட செலவுகள்** | 370,558,963 | |
| **இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொண்ட ஒதுக்கீடுகள் - டொயிஸ் வங்கி ஏஜி** | 13,079,333 | |
| | | 386,784,267 |
| எதிர்கால பிணைக் கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் (ஹெஜிங்) நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் | | **14,027,889,430** |

அட்டவணை 37 எதிர்கால பிணைக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் (ஹெஜிங்) 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த நட்டம்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எதிர்கால பிணைக் கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் பல வணிக வங்கிகளுடன் மேற்கொள்ளப்பட்ட எதிர்கால பிணை உடன்படிக்கைகள் சம்பந்தமாக தீர்த்துவைத்தல் நடவடிக்கையின் ஒரு தரப்பினராக கூட்டுத்தாபனம் அழைக்கப்பட்டிருந்தது. தரப்பினர்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட தீர்த்து வைத்தல் உறுதி முறைமையின் கீழ் ஐக்கிய குடியரசு டொலர் 60 மில்லியனை (ரூபா 7,713 மில்லியன்) ஸ்டேன்ட் சாட்டட் வங்கி (SCB) 2013 யூன் 03 ஆந் திகதி செலுத்தியிருந்தது. அவ்வாறே ஐக்கிய குடியரசு டொரர் 27 மில்லியன் (ரூபா 3,881 மில்லியன்) டொயிஸ் வங்கிக்கு ஆகஸ்ட் 04 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை கூட்டுத்தாபனம் ரூபா 13,641 மில்லியன் நட்டம் அடைந்திருந்தது.

கூட்டுத்தாபனம் எதிர்கால பிணை கொடுக்கல் வாங்கல்கள் (ஹெஜிங்) சம்மந்தமாக இலங்கை மத்தி வங்கியினால் சட்டச் செலவுளாக ரூபா 941.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 370.6 மில்லியன் இலங்கை மத்திய வங்கியினால் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 567 மில்லியன் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை மத்திய வங்கிக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 3.1 மில்லியன் கூட்டுத்தாபனத்தினால் 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

கிடைக்கப்பெற்ற மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 27.77 மில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 8.65 மில்லியன் மொத்தத் தொகைகள் (வட்டியைத் தவிர்த்து) முறையே மக்கள் வங்கிக்கும் கொமர்ஷல் வங்கிக்கும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் இது சம்பந்தமான பதிவுகளைக் காட்டியிருக்கவில்லை.

மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 8.65 மில்லியன் உரிமைக்காக கொமர்ஷல் வங்கியினால் கொழும்பு வணிக மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

## பெற்றோலிய உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள்

47 ஆண்டுகள் பழைமையான சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து நாட்டின் அதிகரித்த பெற்றோலிய உற்பத்தி தேவைப்பாட்டை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. மிகவும் குறைந்த கிரயத்தில் எரிபொருளை உற்பத்தி செய்வதற்கான வசதிகள் உள்ள மற்றும் அவற்றின் மூலம் சுத்திகரிப்பு செயற்பாடுகள் ஆக்கபூர்வமாகவும் உச்ச அளவிலும் மேற்கொள்ளக்கூடிய வகையில் நவீன உலகத்தின் உயர்ந்த தொழில்நுட்பத்துடன் செயற்படுகின்ற ஏனைய சுத்திகரிப்புக்களுடன் ஒப்பிடும் போது சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் மிகவும் குறைந்த வினைத்திறனுடன் செயற்பாடுகள் இடம் பெற்றிருந்தது.

எவ்வாறாயினும் கிரயமானது வினைத்திறனான வகையில் பெற்றோலிய உற்பத்தியை சந்தைக்கு வழங்குவதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உத்தேச சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை விரிவுபடுத்துதல் மற்றும் புத்துருவாக்குதல் செயற்திட்டம் (எஸ்ஓஆர்ஈஎம்) அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இச்செயற்திட்டத்திற்காக 2016 திசெம்பர் 31 வரை ரூபா 837 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அச்செலவுகள் சிக்கனமற்றதாக இருந்தது.

## எண்ணெய் எடுத்துச் செல்வதற்கான குழாய் வழி முறைமை

கொழும்பு துறைமுகத்திலருந்து கொலன்னாவையில் அமைந்துள்ள பெற்றோலிய குதங்களுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோல், டீசல், மண்ணெண்ணை, கறுப்பு எண்ணெய் ஆகிய பெற்றோலியத்தின் பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்லுதல் பல பத்தாண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட குழாய் முறைமைகளின் மூலம் இடம் பெற்றிருந்தது. அக்குழாய் வழிகள் பழுது பார்க்கக்கூடிய நிலையில் காணப்படுவதுடன் அவற்றில் பல பழுதுபார்க்க முடியாத நிலையில் காணப்படுவதன் காரணமாக தற்பொழுது கைவிடப்பட்டிருந்தது. பெற்றோலிய உற்பத்திகளின் தேசிய தேவைப்பாட்டில் அதிகளவானவை இந்த இத்துப்போன குழாய்களின் மூலம் கொலன்னாவை எரிபொருள் களஞ்சிய வளவிற்கு எடுத்துச்செல்லப்படுவதனால் இக்குழாய் வழிகளைத் திருத்தம் செய்தலும் புத்துருவாக்கம் செய்தலும் உடனடியாகச் செய்ய வேண்டிய தேவைப்பாடாக இருந்தது. அந்த பழுதடைந்த குழாய்களால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்வதன் காரணமாக பாரதூரமான எரிபொருள் சிக்கல் ஏற்படும் ஆபத்தை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது.

இக்குழாய் வழி முறைமைகளினால் கொழும்பு துறைமுகத்திலிருந்து சபுகஸ்கந்த எண்ணெய்

சுத்திகரிப்பு நிலையம் வரை மசகு எண்ணையை எடுத்துச் செல்வதற்காக (24" விட்டமான குழாய்) மற்றும் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கொலன்னாவ பெற்றோலிய குதம் வரை பெற்றோலியம் சார்ந்த பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திகளை எடுத்துச் செல்வதற்காக (12" , 8" மற்றும் 6" விட்டமான குழாய்) ஸ்தாபிக்கப்பட்ட குழாய் வழி முறைமை கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்டது. கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை பெற்றோலிய குதத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட பூர்த்தியான பெற்றோலிய உற்பத்திகளை எடுத்துச் செல்வதற்காகத் தாபிக்கப்பட்ட குழாய் முறைமையானது கூட்டுத்தாபனத்தினால் துணைக் கம்பனியான இலங்கை பெற்றோலியக் களஞ்சிய நிலையக் கம்பனிக்குச் (CPSTL) சொந்தமானதாகும். பெற்றோலியக் களஞ்சிய நிலையக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற எரிபொருள் குழாய் வழி தொடர்பான விபரம் அட்டவணை 38 இல் தரப்படுகின்றது.

| குழாயின் அளவு | உற்பத்தி | தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 10" | டீசல் | செயற்படும் நிலையில் காணப்படுகின்றது. |
| 10" | ஏனைய சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் (Other white Oil) | செயற்படுத்தப்படாது காணப்படும் கொலன்னாவையிலிருந்து களனிதிஸ்ஸ வரை (நெப்தா) எடுத்துச் செல்வதற்காக ஒரு பகுதி மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. |
| 10" | உற்பத்தி | செயற்படாதுள்ளது. |
| 12" | நெப்தா | செயற்படாதுள்ளது. CPSTL நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. |
| 14" | கறுப்பு எண்ணெய் | செயற்படும் நிலையில் காணப்படுகின்றது. |

அட்டவணை 38

# கிராமியப் பொருளாதார அலுவல்கள்

கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சு மற்றும் கிராமிய மக்களுக்கும் பாகுபாடின்றி பொருளாதார மற்றும் சமூகநலன்களினை வழங்குவது இத்துறையின் நோக்கமாவதுடன் அமைச்சின் கீழ் திணைக்களமொன்றும் மற்றும் 08 நியதிச்சட்ட அமைப்புக்கள் / நிறுவனங்கள் தொழிற்படுவதுடன் மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

- கொள்கைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களினை நிறுவுதல், கிராமிய பொருளாதாரம் தொடர்பாக கண்காணித்தலும் மற்றும் மதிப்பிடலும்.
- கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி செயற்திட்டங்களினை அமுல்படுத்தல்.
- பிராந்திய மற்றும் கிராமிய அபிவிருத்தி கொள்கைகளினையும் மற்றும் தந்திரோபாய அபிவிருத்தி கொள்கைகளினையும் உருவாக்குதல்.
- கிராமிய பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிதிசார் உதவிகளின் ஏற்பாடு.
- கால்நடை உற்பத்திகளின் விரிவாக்கத்திற்கு தேவையான வசதிகளினை வழங்குதல்.
- மிருக நலன்புரி மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள்.
- கால்நடை சம்பந்தமான பொருட்களினுடைய மேம்படுத்தலுக்கு, அவற்றின் பரவலான அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ஆய்வின் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில், நவீன தொழில்நுட்பத்தினையும் பயன்படுத்தியும், மற்றும் பொருட்களின் பண்பு மற்றும் அளவு ரீதியான அபிவிருத்திக்கு தேவையான அளவீடுகளைக் கொண்டும் கால்நடைத் துறை தொடர்பான ஆய்வுக் களத்தை விரிவாக்கம் செய்தல்.
- கால்நடைத்துறையில் மிருக சனத்தொகையினை பெறுவதற்கான விஞ்ஞான ரீதியான இனப்பெருக்க முறைகளை விரிவாக்கம் செய்தலும் தடுக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான நடத்தை மற்றும் நோய்களிலிருந்து மிருகங்களினை பயன்படுத்தல்.

குறித்த நிறுவனத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளினை நிறைவேற்றுவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### பால் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றிருத்தல்

பால்மாவின் இறக்குமதியினை குறைத்தல் மற்றும் பால் உற்பத்தியினை அதிகரிப்பதன் பொருட்டு 2010 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான 7 வருடங்கள் காலப்பகுதியொன்றினுள் கிராமிய பொருளாதார அமைச்சின் கால்நடைப் பிரிவு ரூபா 5,557.38 மில்லியனை செலவழித்திருந்தது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது (விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் செலவினத்தை உள்ளடக்காது) 2016 ஆம் ஆண்டில் பால் உற்பத்தி ரூபா 136.5 மில்லியன் லீட்டர்களினால் அதிகரித்திருந்தது. அதற்கமைய, ஒரு லீட்டர் பாலின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு ரூபா 40.72 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டதிற்கு இணங்க பால்

அடிப்படையிலான உற்பத்தி மற்றும் பால் அடிப்படையிலான உற்பத்திகளின் இறக்குமதி, 2010 ஆம் ஆண்டில் நாட்டினுடைய பால் அடிப்படையிலான நுகர்வு முறையே 22.29 மெட்ரிக் தொன்கள் மற்றும் 72.53 மெட்ரிக் தொன்களாகக் காணப்பட்டது. அதற்கமைய, 2010 ஆம் ஆண்டில் நாட்டினுடைய பால் தேவை 23.5 சதவீதம் மாத்திரம் நாட்டினுள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் மற்றும் இது 2014 ஆம் ஆண்டில் 26.67 சதவீதமாக காணப்பட்டது. மேலும், 2014 ஆம் ஆண்டில் 86.37 மெட்ரிக் தொன் பால்மா இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன் மற்றும் 2016 ஆம் ஆண்டில் அது 94.01 மெட்ரிக் தொன்களாகக் காணப்பட்டது. ஆகையினால், திட்டமிடப்பட்டதிற்கிணங்க பால்மாவினுடைய இறக்குமதி குறைந்திருக்கவில்லை.

## திரவ பால் பிரபல்யப்படுத்தும் செயற்திட்டம்

திரவ பால் பிரபல்யப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் 1250 பால் விற்பனைக் கடைகளை நிறுவுவதற்கு திட்டங்கள் வரையப்பட்டதுடன் 2004 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 வரை 685 பால் விற்பனைக் கடைகள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 283 பால் விற்பனைக் கடைகள் தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபையினால் நிறுவப்பட்டிருந்தது. அவ் பால் விற்பனைக் கடைகளின் சாத்தியவள ஆய்வொன்றினை மேற்கொள்ளாது நிறுவப்பட்டிருந்ததுடன் மற்றும் அதன் விளைவாக, 2016 திசெம்பர் 31 இல் செயற்பாட்டு நிலையில் 43 எண்ணிக்கையான அல்லது 15 சதவீத பால் விற்பனைக் கடைகள் மீதமாகக் காணப்பட்டன. மாகாண மட்டத்தில் அமைச்சினால் நிறுவப்பட்ட 402 பால் விற்பனைக் கடைகளில், 112 அல்லது 28 சதவீத பால் விற்பனைக் கடைகள் மாத்திரம் செயற்பாட்டு நிலையில் மீதமாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், பால் விற்பனைக் கடைகளை இடைநிறுத்தி மூடுவதற்கு அமைச்சு தேவையான நடவடிக்கைகளினை மேற்கொண்டிருக்கவில்லை.

## குளிர் களஞ்சியசாலைகளின் நிர்மாணம்.

கிராமிய சந்தையில் விலை ஸ்திரத்தன்மை பேணுவதற்கு மற்றும் அறுவடைக்கு பின்னரான சேதங்களினை குறைப்பதற்கான நோக்கத்திற்காக, இலங்கை அரசு மற்றும் தனியார் துறை இரண்டையும் ஒன்றிணைத்து 05 குளிர் களஞ்சியசாலைகளை நிர்மாணித்து அமுல்படுத்துவதன் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் கிராமிய விவகாரங்கள் அமைச்சின் கீழ் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 2,000 மில்லியன் தொகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அமைச்சினுடைய செயல்நடவடிக்கைத் திட்டத்தில், அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவின் கீழ் 2016 சனவரியிலிருந்து 2017 திசெம்பர் வரை ஒரு வருட காலப்பகுதியொன்றினுள் இந்தத் திட்டம் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 யூன் 26 வரை அவர்களினுடைய நிர்மாணங்கள் கட்ட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

குளிர்க் களஞ்சியங்கள் மீதான கற்கையொன்றிற்கு 02 மார்ச் தொடக்கம் 2016 மார்ச் 10 வரை இஸ்ரேல் மற்றும் தாய்லாந்துக்கு சுற்றுலாக்களில் ஐந்து உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்த போதிலும், இவ் சுற்றுலாவில் சாத்தியவள ஆய்வு குழுவினுடைய தலைவருடன் மூன்று வெளித்தரப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சர் மாத்திரம் சம்மந்தப்பட்டிருந்தனர். இந்த சுற்றுலாவினுடைய செலவினங்களுடன் தொடர்புடைய எவ்வித ஆதாரங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

செயற்திட்டத்திற்கு சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழு 2 சந்தர்ப்பங்களில் கூட்டங்களினை நடாத்தியிருந்ததுடன், 05 சந்தர்ப்பங்களில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட எழுத்துமூல வேண்டுகோள்களின் பின்னர் குழுவினுடைய 10 ஏனைய உறுப்பினர்களுடைய கையொப்பங்கள் இல்லாது 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி குழுவினுடைய தலைவரின் கையொப்பத்துடன் மாத்திரம் 6 பரிந்துரைகளுடன் மாத்திரம் அறிக்கையொன்று அளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சாத்தியவள ஆய்வொன்றினுள் உள்ளடக்கவேண்டிய தவிர்க்க முடியாத விடயங்களினை அவை கொண்டிருக்கவில்லை.

### பொருளாதார நிலையங்கள்

விவசாயிகளினுடைய விவசாய பொருட்களின் நேரடி விற்பனை மற்றும் வெளியீட்டாளர்கள் கையிருப்பு, வியாபாரிகள் மற்றும் நுகர்வோர்களை ஒன்று சேர்ப்பதனூடாக விலை நுட்பத்தினை விளைத்திறனாக அமுல்படுத்துதலை மேற்கொள்ளும் நோக்கத்துடன் விஷேட பொருளாதார நிலையங்கள் நிறுவப்பட்டன. எவ்வாறாயினும், அவ்வாறான உண்மையான மற்றும் விளைத்திறனான விலைப் பொறிமுறையொன்று அமுல்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பொருளாதார நிலையங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஈ/423 ஆம் இலக்க பொது நிதிகள் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் உறுப்புரைகளுக்கமைய கணக்குகளின் ஆண்டு முடிவடைந்ததிலிருந்து இரண்டு மாத காலப்பகுதியொன்றினுள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 யூன் 30 ஆந் திகதி வரையேனும் 2008 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான தொடர்புடைய காலப்பகுதிக்கு கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமையப்பெற்ற 06 பொருளாதார நிலையங்களினுடைய எட்டு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2003 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை 2003 பெப்ரவரி 05 இல் ஆரம்பிக்கப்பட்ட எம்பிலிபிட்டிய பொருளாதார நிலையத்தின் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கிளிநொச்சி மற்றும் அம்பாறையிலுள்ள பொருளாதார நிலையங்கள் முறையே ரூபா 96.7 மில்லியன் மற்றும் 29.2 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 வரையிலும் அவ் சிறு குடிசைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

- சாத்தியவள ஆய்வுகளினை மேற்கொள்ளாது 3 பொருளாதார நிலையங்கள் நிறுவப்பட்டமையினால், 2016 திசெம்பர் 31 இல் ரூபா 136 மில்லியன் கிரயமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட பொருளாதார நிலையங்கள் ஏனைய நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. 2014 ஆம் ஆண்டில் ரூபா 21 மில்லியன் கிரயமொன்றில் நிறுவப்பட்ட 25 பால் விற்பனைக் கடைகளுடனான கந்தகண்டிய பொருளாதார நிலையம் மற்றும் 2014 ஆம் ஆண்டில் வெலிகம தெனிப்பிட்டிய

சந்தையின் எல்லைக்குள் ரூபா 6.9 மில்லியன் கிரயத்தில் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட விஷேட பொருளாதார நிலையம் தொடர்பில், ஏனைய நிறுவனங்களுக்கு அவ் பொருளாதார நிலையங்களினை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம்

2013 ஆம் ஆண்டில், தொழிற்சாலைகளின் நவீனமயப்படுத்தலுக்கு HSBC வங்கி மற்றும் பொதுத் திறைசேரியின் வெளிவளங்கள் திணைக்களம் மற்றும் வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனிகளுக்கிடையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேற்குறித்த உடன்படிக்கைகளுக்கு அமைய ரூபா 5,854.45 மில்லியன் (யூரோ 33.78 மில்லியன்) கடன் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு, 2 சதவீத வர்த்தகமற்ற வட்டி மற்றும் 6 சதவீத வர்த்தகக்கடன் வட்டிவீதத்துடன் + LIBOR யினை செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது. பொலன்னறுவ, திகன்ன மற்றும் அம்பேவல தொழிற்சாலைகளினுடைய நவீனமயப்படுத்தலுக்கு தொடர்புடைய செயற்திட்டத்துக்கு கேள்விகளினை கோராது டிரங்கி முறையின் (Turnkey Method) கீழ் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். இக்கடன் தொடர்பில், 2017 யூன் 15 வரை வங்கிக்கு கடன் தவணைகளாக ஐக்கிய அமெரிக்க டொலர் 16.60 மில்லியன் அல்லது ரூபா 2,436.18 மில்லியன் மற்றும் வட்டிகளாக ஐ.அமெரிக்க டொலர் 3.80 மில்லியன் அல்லது ரூபா 554.17 மில்லியனை வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் செலுத்தியிருந்தது. கடன் மற்றும் வட்டிகளாக பொதுத் திறைசேரிக்கு வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி எவ்வித தொகையினையும் செலுத்தியிருக்கவில்லை.

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி மற்றும் ஒப்பந்தக் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தினை தொடர்ந்து, 2014 யூலை 12 இல் செயற்திட்டத்தின் ஒப்பந்த காலம் முடிவுறுத்தப்படல் வேண்டும். இருப்பினும், 2017 யூலை 31 வலையிலும், திகன்ன மற்றும் அம்பேவல பால் தொழிற்சாலைகளின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த காலத்தினை நீடிப்பதற்கு அல்லது முடிவுறுத்தும் நட்டங்களாக செலுத்துவதற்கு இணங்கப்பட்ட தொகையினை மீளப்பெறுவதற்கு இரு தரப்பினருடைய எவராலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தகுந்த எவையேனும் இது தொடர்பில் பரிமாற்றஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

தகுந்த திகதியில் அம்பேவல மற்றும் திகன்ன தொழிற்சாலைகளுடன் தொடர்புடைய ஒப்பந்த நடவடிக்கைகள் ஒப்பந்தக் கம்பனியால் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, 2016 திசெம்பர் 31 வரை HSBC வங்கி மற்றும் பொதுதிறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்குமிடையில் ஏற்படுத்திக்கொண்ட கடன் உடன்படிக்கை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 யூலை 31 வரையிலும் இந்த செயற்திட்டத்தினுடைய செயற்பாடுகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. ஆனால், வங்கியுடன் கொண்டுள்ள உடன்படிக்கையின் காலப்பகுதியினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது, உடன்படிக்கைக்கு முரணாக 2016 மார்ச் 27 இல் வங்கி பிணையொன்றின் மீது ஒப்பந்த பெறுமதியின் 10 சதவீதத்திற்கு சமனான (ஐக்கிய அமெரிக்க டொலர் 3,071,693) இறுதி பிடிகாசு ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்த வேண்டியிருந்தமை செலுத்தப்பட்டது.

### பால் சேகரிப்பு நிலையங்களின் மேற்பார்வை.

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியினால் நாட்டினுடைய பால் சேகரிப்பு நிலையங்களினை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் மற்றும் அவற்றின் மீது மேற்பார்வைகளினை முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் பால் சேகரிப்பு நிலையங்கள் நவீனமயப்படுத்தப்பட்டிருக்காததுடன், 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட பால் அளவினை விட முறையே 320,893 பால் லீட்டர்கள் மற்றும் 587,247 பால் லீட்டர்களுக்கான செலுத்துகைகள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் முறையே ரூபா 20.52 மில்லியன் மற்றும் 39.61 மில்லியன் நிதிசார் நட்டமொன்று தாங்கிக்கொள்ளப்பட்டது. மேலும், சேகரிக்கப்பட்ட பால் தொழிற்சாலைகளுக்கு விநியோகித்ததன் பின்னர், 2016 ஆம் ஆண்டில் ரூபா 2.50 மில்லியன் பெறுமதியான 35,681 லீட்டர் பால் பாவனைக்கு உகந்த நிலையில் காணப்படாதிருந்தது.

2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆண்டு வரை நாட்டினுடைய பால் உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும், நாட்டினுடைய மொத்த பால் உற்பத்தியில், 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியால் சேகரிக்கப்பட்ட லீட்டர் பாலினுடைய சதவீதம் முறையே 19 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. விபரம் உரு 34 இல் காட்டப்பட்டுள்ளது.




உரு 34 நாட்டின் மொத்த பால் உற்பத்தி, கம்பனியினால் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு மற்றும் சதவீதம்.

மூலம் :- மத்திய வங்கியின் புள்ளி விபரம்.

### குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட யோகட் கலவை

தேவையினை முறையாக இணங்காணாமல் குத்தகையின் அடிப்படையில் கொழும்பு தொழிற்சாலைக்கு யோகட் கலவையொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி தீர்மானித்திருந்தது. அரச பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு முரணாக ரூபா 104.17 மில்லியன் கிரயமொன்றில் யோகட் கலவை கொள்வனவு செய்யப்பட்டு 2011 சனவரி 20 இல் பொலநறுவை தொழிற்சாலையில் நிறுவப்பட்டதுடன், ஆகையால் அது 2017 யூலை வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## பால் பசுக்களின் இறக்குமதி

வெல்லாட் திட்டத்தின் (Wellard Project) 2 ஆம் கட்டத்தின் கீழ், 2014 யூலை 14 இல் இருந்து 2 வருடங்களினுடைய காலப்பகுதியொன்றுக்கு பசுவொன்று ஐக்கிய அமெரிக்க டொலர் 3,032.87 வீதம் 2500 பால் பசுக்களின் இறக்குமதிக்கு தேசிய கால்நடை அபிவிருத்தி சபை உடன்படிக்கையொன்றினை ஏற்படுத்தியிருந்தது. அதற்கமைய, யூலை 13 மற்றும் 12 ஒக்டோபர் 2015 இல் 2495 பால் பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இது தொடர்பில், 2016 ஒக்டோபர் 11 இல் பிடிகாசு உள்ளடங்கலாக ஐக்கிய அமெரிக்க டொலர் 7,576,101 செலுத்தப்பட்டது. 5 பசுக்களினுடைய பற்றாக்குறையொன்றுடன் பால் பசுக்கள் விநியோக்கிக்கப்பட்டிருந்த போதிலும், உடன்பட்ட தொகைக்கு அமைவாக ஐக்கிய அமெரிக்க டொரல் 9,098.59 மிகைத்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பசுவொன்று ரூபா 415,372 ஆன ரூபா 1,036.35 மில்லியன் கிரயமொன்றில் இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடுகள் காப்புறுதி செய்யப்பட்டிருக்காமையால், இறந்த பால் பசுக்கள் 133 இனால் தாங்கிக்கொள்ளப்பட்ட ரூபா 55.24 மில்லியன் நட்டத்தினை பெறுவதற்கு சாத்தியகூறு காணப்படவில்லை. உடன்படிக்கைக்கு அமைய, இறக்குமதி நோக்கில் பசு மாடுகள் கருத்தரித்ததாகக் காணப்படல் வேண்டும். ஆகையினால், இறக்குமதி நேரத்தில் இதுவரையில் 79 பசுக்கள் கருத்தரித்துக் காணப்படவில்லை. முதலாவது கன்றினுடைய வெளியீட்டிற்கு பிறகு 260 எண்ணிக்கையான பசுக்கள் பாலினை வழங்குவதற்கு வெற்றிகரமற்றவையாகக் காணப்பட்டதுடன் மற்றும் 2016 மே 30 வரையில் இரண்டாவது செயற்கையான கருத்தரித்தல் செயன்முறையில் அவை கருத்தரிப்பதற்கு தவறியிருந்தன. அதற்கமைய, 472 இறக்குமதி செய்யப்பட்ட பசுக்களின் மீது ஏற்பட்ட ரூபா 196.06 மில்லியன் செலவினம் திட்டத்தினுடைய நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு பங்களிப்புச் செய்யவில்லை.

.



படம் 07 இறக்குமதி செய்யப்பட்ட பால் பசுக்கள்

அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து ரிதியகம பண்ணை வரை 38 கிலோமீட்டர் தூரமொன்றுக்கான 2500 பாற்பண்ணை பசுக்களின் போக்குவரத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 260,555 மதிபபிடப்பட்டிருந்தது. தேசிய கால்நடை அபிவிருத்தி சபையினால் உரிமையைக் கொண்டுள்ள மோட்டார் வாகனங்களுக்கான வீதங்களின் விலைக்கமைய, 38 கிலோமீட்டரினுடைய தூரமொன்றிற்கான 2500 பாற்பசுக்களின் போக்குவரத்திற்கு தேவையான சராசரிக் கிரயம் ரூபா 570,000 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, அசாதாரண மிகை மதிப்பீட்டின் தயாரிப்புக் காரணமாக 2495 பசுக்களின் போக்குவரத்திற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 260,347.11 அல்லது ரூபா 35.87 மில்லியன் செலுத்தப்பட்டது. சபையினுடைய மோட்டார் வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம் 2495 பாற்பசுக்களின் போக்குவரத்திற்கு ரூபா 568,860 தொகை செலவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவற்றின் மீது ரூபா 35,299,208 மேலதிக செலவினமொன்று நேரிட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் பாற் பசுக்களின் ஏற்றுமதி தொடர்பில் 2013 யூலை 11 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மீது நிதியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளுக்கமைய, முதலாம் கட்டத்தின் கீழ் உள்ளூர் சூழலுக்கு தனியொருவர்க்கான பால் நுகர்வினை அதிகரிக்கும் நோக்குடன் 2012 ஆம் ஆண்டில் 2000 பால் பசுக்களின் இறக்குமதி வெற்றிகரமாக பொருந்தியிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய, இரண்டாம் கட்டத்தின் கீழ் 2500 பால் பசுக்களின் இறக்குமதிக்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தினுடைய முதலாம் கட்டத்தின் ஆரம்பித்தலுக்கு முன்னர் 2009 மார்ச் 24 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட சாத்தியவள ஆய்விற்கு அமைய, இறக்குமதி செய்யப்பட்ட பாற் பசுவொன்றிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட சராசரிப் பாலினுடைய அளவு நாளொன்றிற்கு 20 லீட்டராக மதிப்பிடப்பட்டிருந்தது. அந்த எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பெற்றிருக்காத போதிலும், இந்த நடைமுறை நிலமையில் அக்கறையில்லாது இரண்டாம் கட்டத்தின் கீழ் பாற் பசுக்களின் இறக்குமதிக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

## கிரவல் வீதிகளின் நிர்மாணம்

5 கிலோமீட்டர் நீளமுள்ள கிரவல் வீதியொன்றின் நிர்மாண செயற்திட்டத்துடன் தொடர்புடைய மதிப்பிடப்பட்ட பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 94,868.89 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது தொடர்புடைய நிர்மாணத்திற்கு ரூபா 12,734,115 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டிற்காக தெற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்ட வீதி அலகு வீதத்திற்கு அமைய, மேற்குறித்த வீதிக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,450,228 ஆகக் காணப்பட்டமையினால், செயற்திட்டத்திற்கு ரூபா 11,283,927 தொகையொன்று மேலதிகமாக செலுத்தப்பட்டது. அதற்கமைய, நாட்டில் பொதுவாகவுள்ள சராசரி விலைகளினை மிகைத்து வழமைக்கு மாற்றமான மிகைமதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மற்றும் அதன் விளைவாக, தேசிய கால்நடை அபிவிருத்தி சபை மேலதிக செலுத்துகைகளினை மேற்கொண்டிருந்தது. நிர்மாணிப்பினுடைய பூர்த்தியிலிருந்து ஒரு வருடம் கழிப்பதற்கு முன்னரே மேற்குறித்த வீதி சேதமடைந்திருந்தமை 2016 யூன் இல் நடாத்தப்பட்ட பௌதீக பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. புகைப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது.



படம் 08 நிர்மாணிப்பின் பின்னர் வீதி சேதமடைந்துள்ளமை.

## பயிர்ச்செய்கை மற்றும் குழாய்கிணறுகளின் நிர்மாணம்.

செயற்திட்டத்தின் விபரகுறிப்புகளுக்கமைய, 6 பயிர்ச்செய்கை கிணறுகளின் நிர்மாணிப்புக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 31,267 தொகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒரு பயிர்ச் செய்கை கிணறு மற்றும் இரண்டு குழாய்க் கிணறுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய, மேற்குறித்த நிர்மாணத்துடன் தொடர்புடைய செலுத்தவேண்டிய ஐக்கிய அமெரிக்க டொலர் 15,633 பதிலாக ஐக்கிய அமெரிக்க டொலர் 31,267 அல்லது ரூபா 4,340,176 திருப்பிக் கொடுத்து ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் மற்றும் அதன் விளைவாக, தேசிய கால்நடைகள் அபிவிருத்தி சபையினால் ஐக்கிய அமெரிக்க டொலர் 15,634 அல்லது ரூபா 2,170,157 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

## களஞ்சிய பெட்டிகளின் கொடுப்பனவு

2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நெற்களினை களஞ்சியப்படுத்துவதற்கு நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமாகக் காணப்பட்ட களஞ்சியங்கள் போதுமையற்றதாகக் காணப்பட்டதனால், 15 களஞ்சியப் பெட்டிகளின் (தற்காலிக களஞ்சியங்கள்) கொள்வனவுக்கு அரச கூட்டுத்தாபனத்தொன்றிற்கு ரூபா 39.33 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில், 2017 பெப்ரவரி 06 ஆந் திகதி வரையிலும் அநுராதபுரம் மற்றும் திருகோணமலை வலயங்களுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 10.49 மில்லியன் பெறுமதியான 04 களஞ்சியங்கள் நெற்களினை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

10 தொடக்கம் 15 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமொன்றிற்கு ஒரு களஞ்சியப்பெட்டி பயன்படுத்த முடியும் என தொடர்புடைய கம்பனி குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகையினால், அம்பாறை வலயத்திற்கு விநியோகிக்கப்பட்ட 6 களஞ்சியங்களில் 2 மாத்திரம் 2015 யால பருவகாலத்தில் நெற்களினை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மற்றும் அவற்றினுடைய திருத்தங்களினை நிறைவேற்றாமல் எதிர்வரும் பருவகாலத்திற்கு மேற்குறித்த களஞ்சியங்களினை பயன்படுத்துவது சாத்தியக்கூறு அற்றது என அம்பாறை வலயத்தின் முகாமையானரனால் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த

# நகராக்கத் திட்டமிடல்கள் மற்றும் நீர் வழங்கல்

பிரஜைகளுக்கு பாதுகாப்பான குடிநீருக்கான பிரவேசம், நாடு முழுவதும் குழாய்நீர் மற்றும் கழிவுநீர் குழாய்களை நிர்மாணித்தல், மேவுகையை உறுதிப்படுத்துதல் மற்றும் நாடு முழுவதும் நகரங்களைப் போன்று திட்டமிடல் இந்தத் துறையின் நோக்கங்ககளாக இருந்தன. அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு, அதன் கீழுள்ள திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட சபையினால் பின்வரும் பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்ற வேண்டியிருந்தது.

- நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் விடயங்களுக்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைக் கையளித்தல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீடு.
- விஷேட நகரத் திட்டமிடலும் அபிவிருத்தியும்
- நகர அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்காக தேசிய பௌதீக திட்டமிட்டலை அடிப்படையாகக் கொண்டு சகல நிர்மாண நடவடிக்கைகளையும் கையாளல் மற்றும் அமுல்படுத்துதல்.
- சகல பிரஜைகளுக்கும் தூய்மையான குடிநீர் வழங்குதலை உறுதிப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- நீர் வழங்கல் சேவை, நீர் வடிகாலமைப்பு முறைமை மற்றும் சுகாதார வசதிகளை ஆராய்தல்.
- திட்டமிடல், வடிவமைத்தல், நிர்மாணம், கையாளல் மற்றும் பராமரித்தல்
- சமூக நீர்வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டங்களை செயற்திறனாகவும் முறையாகவும் நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

மேற்கூறப்பட்ட செயற்பொறுப்புக்கள் அந்த நிறுவனத்தால் நிறைவேற்றப்படும் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பை வழங்குதல்

2016 ஆம் ஆண்டு வரையில் 2,092,471 மொத்த நீர் வழங்கல் இணைப்புக்கள் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட 78,199 இனால் குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டு வரையில் மொத்த சனத்தொகையில் 47.7 சதவீதத்திற்கு குடிநீரை வழங்குவதற்கும், சனத்தொகையில் 2.08 சதவீதத்திற்கு நீர்க் குழாய்களைப் பதிப்பதற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் முடியுமாக இருந்தது.

நீர்வழங்கல் மற்றும் சுகாதார பாதுகாப்பிற்காக சபையினால் பெரிய அளவிலான 42 வெளிநாட்டுதவி செயற்திட்டங்களும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 62 செயற்திட்டங்களும், சுனாமி ஆபத்துள்ள பிரதேசங்களுக்கான 06 நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு செயற்திட்டங்களும், நீர்த் தேக்கங்களில் சமூக வசதிகளுக்காக 14 உத்தேசத் திட்டங்களும், உள்நாட்டு கடன் உதவியின் கீழ் 15 செயற்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் 12 புதிய நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு செயற்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி, பகிர்ந்தளித்தல் மற்றும் கிரய மீளாய்வு

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி, நுகர்வு செய்யப்பட்ட நீரின் அளவு மற்றும் வருமானம் கிடைக்காத நீரின் அளவு என்பன முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டின் போதும் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. விபரம் அட்டவணை 39 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|
| சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி (Cum மில்லியன்) | 547.00 | 575.00 | 600.14 | 649.00 |
| பயன்படுத்தப்பட்ட அளவு (Cum மில்லியன்) | 381.60 | 410.92 | 436.27 | 483.00 |
| வருமானம் கிடைக்காத நீர் (Cum மில்லியன்) | 165.40 | 164.08 | 163.87 | 166.00 |

அட்டவணை :- 39 நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர்வழங்கல்

நீர் உற்பத்தி மற்றும் நீர் நுகர்வு 2013 ஆம் ஆண்டு முதல் சீராக அதிகரித்திருந்தது. வருமானம் கிடைக்காத நீரின் அளவு 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சீராகக் குறைவடைந்திருந்த போதும் மீளாய்வாண்டின் போது அது 2013 ஆம் ஆண்டில் காணப்பட்ட அளவினையும் விஞ்சி 166,000 Cum மில்லியன் வரை அதிகரித்திருந்தது. நீர்க்கசிவு சட்டரீதியற்ற நீர் இணைப்புக்கள் மற்றும் இலவசமாக வழங்கப்படுகின்ற நீரின் காரணமாக நீர் உற்பத்தியில் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவான வருமானமொன்றை சபை இழந்திருந்தது. நாடு முழுவதும் வருமானம் கிடைக்காத நீர் விகிதாசாரம் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை சீராகக் குறைவடைந்திருந்தது. 25.58 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் கொழும்பு நகரத்திற்குரிய நீர் உற்பத்தியில் வருமானம் கிடைக்காத நீர் விகிதாசாரம் 2016 ஆம் ஆண்டின் போது 45.72 சதவீத உயர்ந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது. விபரம் உரு 35 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

தாமதத்தின் காரணமாக ஒட்டுமொத்த நீர் உற்பத்தியில் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு போதியளவான அதிகரிப்பொன்று காணப்படாமையினால் மக்களின் குடிநீர் தேவையினை நிறைவு செய்வதற்கு சபை தவறியிருந்தது.

## தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதி விளைவு

2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை (2015 ஆம் ஆண்டு தவிர) சபையின் நிதி விளைவுகள் சாதகமானதாக இருந்தது. அவ்வாறே 2015 ஆம் ஆண்டு தவிர ஏனைய ஆண்டுகளில் மொத்த விரிவான வருமானம் சீராக அதிகரித்துக் காணப்பட்டது. விபரம் உரு 36 இல் காண்பிக்கப்பட்டுள்ளது




உரு35 வருமானம் கிடைக்காத நீரின் சதவீதம்
மூலம் :- முகாமைத்துவ தகவல் அறிக்கை - 2016 திசெம்பர்




உரு. 36 முன்னைய 06 ஆண்டுகளில் சபையின் நிதி விளைவு
மூலம் :- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் 2011 முதல் 2016 வரையான நிதிக்கூற்றுக்கள்

கவனத்திற் கொள்ளப்பட்ட 06 வருடங்களின் தரவுகளை அவதானிக்கும் போது நீர் விற்பனை வருமானத்தில் சீரான அதிகரிப்பொன்று நிரூபணமாகியிருந்ததுடன் அதற்கு ஒப்பாக அதிக அளவில் விற்பனைக் கிரயம் அதிகரிப்பைக் (2013 ஆம் ஆண்டு தவிர) காணக்கூடியதாக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் வருமானத்தை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 5 சதவீதம் அதிகரித்திருந்த போதிலும் விற்பனைக் கிரயம் 9 சதவீதத்தால் அதிகரித்தமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டின் போது கிரயத்தின் மிகை 2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் சபையின் புரள்வு 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 20 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

தேறிய நிதி வருமானத்தை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் 215 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், அதற்கு பிரதான காரணம் சபை பொதுத் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் மற்றும் அதற்குரிய வட்டி அரசாங்கத்தின் மூலதன மாற்றங்களைச் (Equity) செய்வதற்கு திறைசேரி அங்கீகாரம் வழங்குதல் மற்றும் திறைசேரி வழங்கிய பிணை முறியில் முதலீடு செய்வதால் கிடைத்த வருமானமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. கடந்த 6 வருட காலத்தினைக் கவனத்தில் கொள்ளும் போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 2,914 மில்லியன் தொகையான அறிக்கையிடப்பட்ட வரிக்குப் பிந்திய இலாபத்தை உழைத்துக் கொள்வதற்கு சபைக்கு முடியுமாக இருந்ததுடன் அதனை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 183 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை செயற்பாட்டு இலாபத்தில் சீரான அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும், 2015 ஆம் ஆண்டின்போது அது 104 சதவீதத்தால் குறைவடைந்து செயற்பாட்டு இலாபமொன்று ஏற்பட்டிருந்தது. நிர்வாகச் செலவினங்கள் 43 சதவீதத்தால் அதிகரித்தமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது. எனினும், சபையின் புரள்வு 2016 ஆம் ஆண்டின் போது 20 சதவீதத்தால் உயர்வடைந்தமையின் காரணமாக செயற்பாட்டு இலாபமும் அதற்கு இணையாக 1829 சதவீதம் அளவில் அசாதாரண பெறுமதியால் அதிகரித்திருந்தது.

## உள்நாட்டு நிதியம் மற்றும் வெளிநாட்டுதவி நிதிஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

### செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதில் தாமதம்

நீர் வழங்கல் செயற்திட்டத்தை எதிர்பார்த்த காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக எதிர்பார்த்த நீர் இணைப்புக்களின் அளவை முறைமைக்குள் சேர்க்காமையினால் வருமானம் இழக்கப்பட்டமை செயற்திட்ட மதிப்பீட்டுக் கிரயம் உயர்வடைந்தமை, அந்நிய செலாவணி நாணயமாற்று முரண்கள் ஏற்பட்டமை மதியுரைக் கட்டணங்களை தொடர்ச்சியாகச் செய்ய வேண்டியிருந்தமை மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் (Commitment Charges) என்பன அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. இந்த நிலைமைகளை மாற்றியமைப்பதற்காக நடவடிக்கை எடுப்பதன் மூலம் கிரயத்தை இழிவுபடுத்துவதற்கு முடியுமாக இருந்த போதிலும், சபை அவ்வாறு செய்திருக்கவில்லை.

### செயலாற்றல் இயலுமையை கவனத்தில் கொள்ளாமல் ஒப்பந்தங்களைக் கையளித்தல்

விசல் தம்புள்ள நீர்வழங்கல் செயற்திட்டம் 2012 மார்ச் 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 செப்தெம்பர் 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தக் காலம் 02 வருடங்களும் 06 மாதங்களும் ஆகியிருந்தது. எனினும், போதியளவான தொழிலாளர்கள் இன்மை, உப ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தங்களை இடைநடுவில் கைவிட்டுச் சென்றமை மற்றும் இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை வழங்குவதற்கு தவறியமை போன்ற விடயங்களின் அடிப்படையில் செயற்திட்டம் 2017 மே 31 வரை 04 சந்தர்ப்பங்களின் போது திகதி நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. 2017 யூன் 30 ஆந் திகதி வரையில் இதன் பௌதீக மற்றும் நிதிச் செயலாற்றல் முறையே 88.6 சதவீதம் மற்றும் 85.0 சதவீத அளவைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்ட தாமதக் காலம் மாத்திரம் 2 வருடங்களும் 09 மாதங்களுமாகியிருந்தது. அந்த செயற்திட்டம்

தொடர்பாக அவ்வாறு செயற்திறமையின்மை காணப்படும் போது சபையினால் அந்த ஒப்பந்தகாரருக்கு முறையே ஐக்கிய அமெரிக்க டொலர் 108 மில்லியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 91.30 மில்லியன் தொகையான இரண்டு நீர்வழங்கல் ஒப்பந்தங்கள் 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி மற்றும் 2015 ஆகஸ்ட் 02 ஆந் திகதிகளில் கையளிக்கப்பட்டிருந்தது.

கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயற்பாடுகள் திட்மிடப்பட்ட முறையில் அமுல்படுத்தப்படாமையினால் கடன் உடன்படிக்கையின் அடிப்படையில் கடன் பங்களிப்பு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2015 திசெம்பர் 31 வரை ரூபா 104.51 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

## மதியுரைச் சேவைக் கட்டணம்

வெளிநாட்டுதவி செயற்திட்டத்திற்காக மதியுரைச் சேவைகள் வேறு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டமையின் காரணமாக அதற்காக ஏற்படும் செலவினம் மொத்த செயற்திட்டக் கிரயத்தில் 4 சதவீதம் முதல் 10 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. நீர் வழங்கல் செயற்திட்டங்களில் மதியுரைச் சேவைகளை வழங்குவதற்காக நீர்வழங்கல் மற்றும் அதற்குரிய பணிகள் தொடர்பாக விஷேட அறிவைக் கொண்டுள்ள நிறுவனம் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்க வேண்டியிருந்தது. சபையில் 115 பிரதான பொறியியலாளர்களும், 423 பொறியியலாளர்களும் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் உத்தியோகத்தர்கள் செயற்திட்ட மதியுரைச் சேவை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் வெளி நிறுவனங்களுக்கு செல்லுகின்ற பணத்தை நிறுத்தக் கூடியதாக இருந்ததுடன் கடன் மீளச் செலுத்துதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளைக் கழிப்பதன் மூலமும் சபையின் நிதி நிலைமையை மிகவும் நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கிருந்த இயலுமை தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## சுற்றாடல் தாக்கம்

இறத்மலான / மொறட்டுவ மற்றும் ஜாஎல /ஏக்கல கழிவு நீர் அகற்றும் செயற்திட்டத்தில் கழிவு நீர் சுத்திரிகரிப்பிலிருந்து வெளியேறுகின்ற கழிவு நீர் மற்றும் வடிக் கழிவுகள் (Wastewater Sludge) என்பன சுற்றாடலுக்கு அல்லது மனிதர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தாத வகையில் சரியான பிரகாரம் அகற்றுதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் கழிவுநீர் சுத்திகரிப்பிலிருந்து வெளியேறுகின்ற வடிக்கழிவுகள் உரிய பிரகாரம் அகற்றும் முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

## ஒப்பந்தங்களைக் கையளித்தல்

உள்நாட்டு வங்கிக் கடன் செயற்திட்டங்களில் ஆரம்ப பொறியியல் மதிப்பீடு, ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட பெறுமதிகளுடன் ஒப்பீடு செய்யும் போது உயர்ந்த சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் அடிப்படையில் செலுத்துவதற்கு ஏற்படுகின்ற கடன் சேவைக் கிரயம் (வட்டி + தவைணப்பணம்) அசாதாரணமான உயர் பெறுமதியைக் கொண்டிருத்தல் மற்றும் இந்த செயற்திட்டங்களின் சொத்துக்கள் உயர் பெறுமதியில் மூலதனமாக்கப்படல் என்பவற்றினால் சொத்துக்களில் அதிக பெறுமானத்தேய்வு ஏற்படக்கூடியதாக இருந்தது. அதன் மூலம் உற்பத்திக் கிரயம் உயர்ந்து செல்வதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் அட்டவணை 40 இல் காண்பிக்கப்படுகின்றது.

| செயற்திட்டம் | ஆரம்ப பொறியியலாளர் மதிப்பீடு<br><br>ரூபா. மில்லியன் | ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட பெறுமதி<br><br>ரூபா. மில்லியன் | பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சுதல்<br><br>ரூபா. மில்லியன் | பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சுதல் சதவீதமான |
|---|---|---|---|---|
| கலகெதற - மாவத்தகம நீர்வழங்கல் செயற்திட்டம் | 700 | 3,064 | 2,364 | 337 |
| கந்தகெட்டிய நீர்வழங்கல் செயற்திட்டம் | 750 | 1,662 | 912 | 121 |
| அம்பாறை பகரிந்தளித்தல் நீர்வழங்கல் செயற்திட்டம் | 3,000 | 6,848 | 3,848 | 128 |
| வில்கமுவ நீர்வழங்கல் செயற்திட்டம் | 1,000 | 3,113 | 2,113 | 211 |
| கொழும்பு கிழக்கு நகர செயற்திட்டம் (தொகுதி i) | 3,000 | 5,170 | 2,170 | 72 |
| கொழும்பு கிழக்கு நகர செயற்திட்டம் (தொகுதி iii) | 4,000 | 10,049 | 6,049 | 151 |

அட்டவணை 40 பொறிறியலாளர் மதிப்பீட்டை விஞ்சி ஒப்பந்தம் கையளித்தல்

உள்நாட்டு வங்கி மூலம் பெறப்பட்ட கடனுக்காக சந்தை வட்டி விகித்தை அடிப்படையாகக் கொண்டு கடன் பெறவேண்டி ஏற்பட்டமையால் வெளிநாட்டுதவி செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட கடன்களுக்கு ஒப்பாக வட்டி விகிதம் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமையினால் கடன் சேவைக் கிரயம் அதிகரிப்பது தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## ஒப்பந்தகாரரிடமிருந்து வரி அறவிட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புதல்

கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம் மற்றும் பெரும்பாக கொழும்பு நீர் புனரமைப்பு செயற்திட்டம் என்பவற்றின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒப்பந்தகாரர்களுக்கு பணம் செலுத்தும் சந்தர்ப்பத்தின் போது நிர்மாணக் கைத்தொழில் சான்றிதழ் நிதிய வரி (CIGFC) நிறுத்தி வைத்தல் வரியாக கழிக்கப்படாமையின் காரணமாக ரூபா 9.21 மில்லியன் தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புதல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினாலும் அந்த செயற்திட்டத்தினாலும் முடியாதிருந்தது.

## கைவிடப்பட்டிருந்த அத்தியவசிய விடயங்கள்

மேல்மாகாண நீர்வழங்கல் பிரதான திட்டத்தை நாளதுவரையாக்குதல், நிறுவன அபிவிருத்தி மற்றும் வருமானம் கிடைக்காத நீரின் அளவு என்பவற்றின் ஆய்வு மற்றும் அறிக்கையின் சிபாரிசுகளின் பிரகாரம் நீர்க் கோபுரங்கள் மற்றும் பூகோள ரீதியில் நீர்த்தேக்கங்களில் நீர் உட் செல்லும் மற்றும் வெளியேறும் இடங்களில் தரை மாணிகள் (Floor Meters) பொருத்துதல் முக்கியமான தேவையாகச் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. சபையினால் அந்த சிபாரிசுகள் கவனத்தில் கொள்ளப்படாமல் பெரும்பாக கொழும்பு நீர் புனரமைப்புத் திட்டத்தில் ரூபா 12.86 மில்லியன் மற்றும் யப்பான் யென் 11.70

மில்லியன் பெறுமதியான மாணிகள் வழங்கி பொருத்துதல் மற்றும் பொருத்தும் கொட்டகை என்பவற்றை கைவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

## நீர்த் தேக்கங்களை தீர்மானித்தல்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதார பாதுகாப்பு செயற்திட்டத்தின் மூலம் இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து நீரைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக எழுந்திருந்த பிணக்குகளின் காரணமாக அதனைக் கைவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. இதற்காக பெறப்பட்ட கடனின் அடிப்படையிலான கடப்பாட்டுக் கட்டணம், மதிப்பீட்டுக் கட்டணம், வட்டி மற்றும் கடன் பணம் என்பன இரத்துச் செய்யப்பட்டமையால் செலுத்துகின்ற இழப்பின் பூரண நட்டஈடாக 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 84.94 மில்லியன் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தமை நாட்டிற்கு பாதகமான நிலைமையொன்றாக இருந்தது.

# நீர்ப் பாசனம் மற்றும் நீர் வளங்கள்

இலங்கையின் சுபீட்சத்திற்காக நீர்ப்பாசன வசதிகள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவம் என்பவற்றை வழங்குவது இந்த துறையின் நோக்கமாகும். நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் இரண்டு நியதிச்சட்ட சபைகள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றியிருக்க வேண்டும்.

- நீர்ப்பாசனம், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர் முகாமைத்துவத்தின் நோக்கெல்லையின் கீழ் ஒவ்வொரு விடயத்துடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் செயற்திட்டங்களை முறைப்படுத்தி அமுல்ப்படுத்துதல்.
- நீர்ப்பாசனத் திட்டங்கள், வடிகாலமைப்பு மற்றும் வெள்ளப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் உப்பு நீர் நீக்கல் திட்டங்களினை ஊக்குவித்தல், நிர்மாணித்தல், செயற்படுத்துதல், பராமரித்தல், மீள அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமை செய்தல்.
- ஆறுகள், கால்வாய்கள், ஓடைகள் மற்றும் ஏனைய நீர் வழிகள் மாசடைதலை தடுத்தல்.
- மழை நீரை சேகரித்தல்.
- பொறியியல் ஆலோசனை சேவைகள் மற்றும் நிர்மாணித்தல்கள்.
- நீர் வளங்கள் சபை அதிகாரச்சட்டத்தை அமுல்ப்படுத்துதல்.

மேற்குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

## கிங் நில்வளா திசைதிருப்பல் செயற்திட்டம்

நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு கிங் நில்வளா திசைதிருப்பல் செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் ரூபா 998.58 மில்லியன் மற்றும் 2015 ஆம் ஆண்டின் ரூபா 3,012.48 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 4,011.05 மில்லியன் கூட்டுமொத்தமான வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை வெளிநாட்டுக் கம்பனியொன்றிற்கு வழங்கியிருந்தது. இருந்த போதிலும், செயற்திட்ட நடவடிக்கைகள் எதுவும் 2017 யூலை 31 வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2014 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 998.58 மில்லியன் முற்பணம் அந்த ஆண்டின் செலவினமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட முற்பணம் ஆண்டின் செலவினமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததால் ரூபா 2,972.49 மில்லியன் தொகையான மிகை செலவினத்தை செலவின விடயம் சுட்டிக்காட்டியது. ரூபா 4,000 மில்லியன் நிதியேற்பாடு 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## அமைச்சின் நோக்கெல்லையுடன் தொடர்புபடாத நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்

பாதுகாப்பு அமைச்சின் சார்பில் முப்படைகளிற்கும் பொலிஸிற்கும் பகிர்ந்தளிப்பதற்காக முன்னதாக உருவாக்கப்பட்ட கட்டிடங்களின் கொள்வனவிற்காக 2012 யூலை 05 இல் சீனாவிலிருந்த கம்பனியுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிருந்ததுடன் 7 தவணைகளில் கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,774.80 தொகையை செலவிட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 திசெம்பர் 31 வரை மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 12,442.5 மில்லியன் கூட்டுமொத்தமாகும். முன்னதாக உருவாக்கப்பட்ட கட்டிடங்களின் கொள்வனவு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் காணப்படாத அதேநேரம் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, கட்டிடங்களின் மொத்த எண்ணிக்கை முப்படைகளுக்கும் பொலிஸிற்கும் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடங்கள் திருப்திகரமாக பொருத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பான நிறுவனத் தலைவர்களின் சான்றிதழ்கள் 2017 ஏப்ரல் 30 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## போலியான ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு இணைந்த படிகளைப் பெறுதல்

மீளாய்வாண்டில் வெளிநாட்டிற்குச் சென்ற அமைச்சின் இரண்டு உயர்நிலை உத்தியோகத்தர்கள் போலியான ஆவணங்களை பயன்படுத்தி ஐ.அ.டொலர் 8,800 பெற்றிருந்தனர்.

## நிலக்கீழ் நீர் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

நிலக்கீழ் நீர் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் நீர் வளங்கள் சபையின் பிரதான நோக்கமாக உள்ளதுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ஆரம்பிக்கப்பட்ட 11 ஆராய்ச்சிக் கற்கைகள் மீது ரூபா 112.29 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆராய்ச்சிகள் எதுவும் 2017 யூன் 30 வரையிலும் திட்டமிடப்பட்டவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## ஏனைய நிறுவனங்களிற்கு சபையின் ஊழியர்களை விடுவித்தல்

சபையின் ஆறு ஊழியர்கள் ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக அவர்களிற்கான சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 1.35 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

# நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகளின் பாதுகாப்பு

சூழல் மாற்றங்கள் மற்றும் காபனின் அடிப்படையில் தங்கியிருத்தலை குறைத்தல், வனசீவராசிகளைப் பேணுதல் மற்றும் வனசீவராசிகள் வாழும் பிரதேசத்தில் சுற்றுலாவை ஊக்குவித்தல் போன்றன இந்தத்துறையின் முக்கிய நோக்கங்களாகும். நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சாலும் மூன்று திணைக்களங்களாலும் மற்றும் அதன் அதிகார எல்லையிலுள்ள நியதிச்சபைகள் மற்றும் நிறுவனமொன்றினாலும் இந்த நோக்கங்களை அடைவதற்கான பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

- நிலைபேறான அபிவிருத்தி விடயங்களுடன் தொடர்புடையதும் உரிய திணைக்களங்களின் நியதிச்சபைகளுடன் தொடர்புடையதுமான உரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நிறுவுதல்.
- பொருளாதாரத்தை குறைந்தபட்ச சுற்றாடல் மாற்றங்கள் மற்றும் ஆகக்குறைந்த காபனின் பயன்பாட்டுடன் உருவாக்குவதற்கான விதிகள் மற்றும் தந்திரோபாயங்களை தயாரித்தல்.
- நிலைபேறான அளவீடுகள் மற்றும் சுற்றாடல் குறிகாட்டிகளை தயாரித்தல்.
- நிலைபேறான அபிவிருத்திக்கான செயலகத்தை தாபித்தல்.
- இலங்கையில் தாவரங்களின் பேணுகை, தாவரவியல் தோட்டங்களை பராமரித்தல் மற்றும் இலங்கையில் தாவரவளர்ப்பில் அபிவிருத்தி.
- நான்குகால் விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வனங்கள் போன்ற வேறுபட்ட மிருகங்களின் ஒட்டுமொத்தம் மற்றும் கண்காட்சி தொடர்பான நடவடிக்கைகள்
- வனசீவராசிகளின் வளங்களினை பாதுகாத்தல்.
- வனசீவராசிகள் வசிக்கின்ற பிரதேசங்களில் சுற்றுலாவைத் தூண்டுவதன் மூலம் உரிய சூழல் முறைமைகளினை பாதுகாத்தல் மீது அத்தியவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

மேற்தரப்பட்ட தொழிற்பாடுகளை நிறுவனங்களினால் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

### யானைகள் மற்றும் மனிதர்களுக்கிடையிலான பிரச்சனைகளால் மரணங்கள் அதிகரித்தமை.

நிலப்பயன்பாடு சுழற்சி மாற்றங்கள் மற்றும் பயன்படுத்தக்கூடிய தங்குமிடங்களின் தரக்குறைவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு உயரிய தரத்துடனான தங்குமிடங்கள் குறைவடைந்தமையால் இலங்கையின் காட்டு யானைகளின் சனத்தொகை அதனுடைய வாழ்வு தொடர்பான தடையாகவிருந்தது. அதனால், மனிதர்களுடனான பிரச்சனைகளால் இரு தரப்பினர்க்கும் ஏற்பட்ட சேதங்கள், மனிதர்களின் மரணம், காட்டு யானைகளின் மரணங்கள், பௌதீக சேதங்கள் மற்றும் சொத்துக்களிற்கான சேதங்கள் போன்றன அவற்றில் முக்கியமாகவிருந்தது. காட்டு

யானைகளின் மரண எண்ணிக்கை, மனிதர்களின் மரண எண்ணிக்கை, சொத்துக்களுக்கான சேதங்கள் மற்றும் பௌதீக சேதங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 36 சதவீதம், 40 சதவீதம், 8 சதவீதம் மற்றும் 50 சதவீதத்தால் யானைகளிற்கும் மற்றும் மனிதர்களுக்கிடையிலான பிரச்சனைகளால் அதிகரித்தது. மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வாக திணைக்களத்தால் பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் மனிதர்கள் வாழும் பிரதேசத்தில் காட்டு யானைகள் வருவதை தடுப்பதற்காக மின்சார வேலி, பாதுகாப்பு வேலி மற்றும் நவீன முறைகளால் பௌதீக தடைகளாக தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், யானைகள் மற்றும் மனிதரின் மரணங்களின் எண்ணிக்கை 05 வருடங்கள் அண்ணளவான காலப்பகுதியில் அதிக பெறுமதிகளிலிருந்தும் விபரங்கள் கீழுள்ள உரு 37 இல் தரப்பட்டுள்ளன.




உரு :- 37 முன்னைய 07 ஆண்டுகளின் போது மரணமடைந்த யானைகள் மற்றும் இறந்த மனிதர்களின் எண்ணிக்கை.

### மின்சார வேலியின் நிர்மாணம்.

மின்சார வேலியின் நிர்மாணமானது மீளாய்வாண்டின் இறுதியளவில் காட்டு யானைகள் மற்றும் மனிதர்களுக்கிடையிலான பிரச்சனையை தடுப்பதற்கான பிரதான பொறிமுறையாக உட்படுத்தப்பட்டது. மின்சார வேலியொன்று மீளாய்வாண்டின் இறுதியளவில் 3,860.73 கிலோமீற்றர்கள் தூரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதில், மீளாய்வாண்டில் மின்சார வேலியானது 287.1 கிலோமீற்றர்கள் தூரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மின்சார வேலியை நிர்மாணிப்பது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

- வில்மன்னா உறானயா (மோடறபலசல அடல) மின்சார வேலியின் 20 கிலோமீற்றர்கள் நிர்மாணத்திற்காக ரூபா 2.81 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 6 கிலோமீற்றர் தூரத்துடன் 1 வலு வீடு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த தவறாக அமைக்கப்பட்ட மின்சார வேலியின் நிர்மாண நடவடிக்கைகள் மீது செலவழிக்கப்பட்ட ரூபா 2.03 மில்லியன் பயனற்ற செலவீனமாகவிருந்தது. மேலும், குடியிருப்பாளர்கள் இலத்திரனியல் வேலியின் கம்பிகளை எரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

- கொகலான்கலவிலிருந்து கஹம்பாவெவ வரையிலும் 46 கிலோமீற்றர்கள் வீதியின் நிர்மாணத்திற்காக ரூபா 4.14 மில்லியன்

தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த தூரத்தின் 25.5 கிலோமீற்றர்கள் குழிகளை தோண்டுவதற்கு ரூபா 2.95 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்த போதிலும், அரசியல் செல்வாக்குகளால் அது விடுபட்டிருந்தது.

- காணிகள் தொடர்பான பிரச்சனைக்காக அலுத்ஹானற தொடக்கம் உனதுவேவ வரையிலான 60 கிலோமீற்றர்கள் தூரத்துடன் நிர்மாணிக்கப்படவேண்டிய மின்சார வேலியில் 19.5 கிலோமீற்றர்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 3.23 மில்லியன் தொகை மின்சார வேலி பூர்த்தி செய்யாமையால் அது பயனற்றதாகவிருந்தது. அதற்கு மேலதிகமாக, சண்டலஹம இலுபலச மஹணருல மின்சார வேலியின் 24 கிலோமீற்றர்களை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், காணிகளின் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகளால் இதுவும் தவறவிடப்பட்டிருந்தது.

- உடவலவ தேசிய பூங்காவில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக மின்சார வேலியை நிர்மாணிப்பதன் மீது மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு தெரிவுச் செவ்வையில், அவ் மின்சார வேலியின் பராமரிப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென நிரூபிக்கப்பட்டது. வேலியின் 01 மற்றும் 02 வரைபடங்களானது இலத்திரனியல் வேலிகள் உடைக்கப்பட்டமையும் அவற்றின் கம்பிகளால் யானைகளால் சேதமாக்கப்பட்டமையும் சான்றுறுதிப்படுத்துகின்றது.

- .



புகைப்படம் 09 மின்சார வேலிகள் உடைக்கப்பட்ட விதம்



புகைப்படம் 10 மின்சார வேலியின் கம்பிகள் சேதமாக்கப்பட்ட விதம்

# அரசாங்க சேவைகளிற்கான ஓய்வூதிய நலன்

அரச சேவை ஓய்வூதியக்காரர்களுக்கும் மற்றும் அவர்களது நலனாளிகளுக்காகவும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிலைபேறான முகாமைத்துவ முறைமைமைளைப் பயன்படுத்துவதன் மூலமும், தனியார் மற்றும் அரச துறைகளுடன் இணைந்து அவர்களில் உயர்ந்த சேவை பெறுனர் மற்றும் சேவைப் வழங்குனர்களின் திருப்தியை உறுதிப்படுத்துவதனூடாக சட்டரீதியான நலன்களை கொடுப்பதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக திருப்திகரமான ஓய்வூதிய சமூகமொன்றை உருவாக்குதல் ஓய்வூதியத் திணைக்களத்தின் நோக்காகும்.

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் செயற்பாட்டிலுள்ள 579,414 ஓய்வூதியக்காரர்களுக்கு நலன்கள் வழங்கப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் ரூபா 172,276 மில்லியன் ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அது அரசாங்கத்தின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் 10 சதவீதமாக இருந்ததுடன் அது அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 9.8 சதவீதமாக இருந்தது.

பிரதேச செயலகம் ஊடாக ஓய்வூதியத்தைச் செலுத்தும் போது மேலதிகமாகச் செலுத்துதல், இரட்டைக் கொடுப்பனவு, மோசடிகளுடன் கொடுப்பனவு செய்தல் என்பன இடம்பெற்றிருந்தன. இந்த நிலைமைகளைத் தடுப்பதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட மீள் கட்டமைக்கப்பட்ட செயற்பாடுகளின் பல்வேறு படிமுறைகளின் கீழ் 2015 சனவரி மாதம் முதல் மத்தியமயப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டு ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் மாதாந்த ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஒக்தோபர் மாதம் முதல் ஓய்வூதியத் திணைக்களத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற ஓய்வூதிய முகாமைத்துவ முறைமை (PMS) மூலம் 2,600 அளவிலான அரசாங்க நிறுவனங்கள் இணையதளம் மற்றும் ஒன்லைன் (Online) தொடர்பையும் ஏற்படுத்தி ஆரம்ப ஓய்வூதிய விண்ணப்பங்களைப் பெற்று ஓய்வூதியம் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும் 2014 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படுகின்ற மீள்கட்டமைத்தல் செயற்பாடுகளுக்குரிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ஓய்வூதியத் திணைக்களத்தால் அரசாங்க சேவையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும் போது வெளிப்படுத்தப்பட்ட சில கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்துதல்

ஓய்வூதியக் கொடுப்பனவுகளை மீள்கட்டமைக்கும் போது ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாடுகளில் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அமுல்படுத்தப்படாமையின் காரணமாக மாதாந்த ஓய்வூதியம் கூடுதலாகச் செலுத்துதல் இடம் பெற்றிருந்தன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- 2016 சனவரி மாதம் முதல் 2016 திசெம்பர் மாதம் வரையிலான காலத்தில் ஓய்வூதியம் செலுத்தும் தரவு முறைமையில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 13 ஓய்வூதியக்காரர்களுக்காக அவர்களுக்கு உரித்தான மாதாந்த ஓய்வூதியம் இரு தடவைகள் வீதம் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 4.7 மில்லியன் தொகையும், 10 ஓய்வூதியக்காரர்களுக்காக நிலுவை ஓய்வூதியம் இரு தடவைகள் வீதம் செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 0.58 மில்லியனும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- 2006 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களுக்காக 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய 5/2015 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியம் சரியாக திருத்தம்

செய்யப்படாமையின் காரணமாக ரூபா 0.55 மில்லியன் தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- ஒன்றிணைக்கப்பட்டு செலுத்த வேண்டிய இரட்டை ஓய்வூதியம் ஒன்றிணைக்கப்படாமல் 18 ஓய்வூதியக்காரர்களுக்கு உரித்தான இரட்டை ஓய்வூதியத்திற்கும் இடைக்காலப் படி செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 1.82 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- அரசாங்க ஊழியர்ரொருவருக்காக கிடைக்க வேண்டிய ஆகக்கூடிய வாழ்க்கைச் செலவுப் படியை விஞ்சி 522 சிவில் மற்றும் ஆயுதப்படை சேவை ஓய்வூதிய உத்தியோகத்தர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்பட்டமையின் காரணமாக ரூபா 81 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியக்காரருக்கு செலுத்த வேண்டிய ஆகக்கூடிய எல்லையை விஞ்சி வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் இடைக்காலப் படிகள் செலுத்தியமையின் காரணமாக ரூபா 0.16 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ரூபா 37.2 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

- 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இனங்காணப்பட்ட ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டவைகளின் பெறுமதி ரூபா 320.25 மில்லியனாக இருந்தது. அந்த ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டமை தொடர்பாக நிதிப்பிரமாணம் 102 முதல் 113 வரை நடவடிக்கை எடுத்து நிதிப்பிரமாணம் 119 இன் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அவரிடமிருந்து அது அறவிடவேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே 5 வருடங்களுக்குக் குறைந்த ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்துதல் ரூபா 125,257,219 மற்றும் ரூபா 262,718,954 ஆகவும் 5 - 10 வருடங்களில் ஓய்வூதியம் மேலதிகமாகச் செலுத்துதல் ரூபா 63,789,453 ஆகவும் மற்றும் ரூபா 168,088,603 ஆகவும் என மேலும் காணப்பட்டன.

### வருடாந்தம் உயிர்வாழ்வுச் சான்றிதழ் பெறப்படாமல் ஓய்வூதியம் செலுத்துதல்

ஓய்வூதிய மத்தியமயப்படுத்தப்பட்ட தரவு முறைமையின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்தம் உயிர் வாழ்கின்றமைக்கான சான்றிதழ் வழங்கியிருக்காத 109,842 ஓய்வூதியக்காரர்களுக்காக ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

### ஓய்வூதிய கோவையின்றி ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்துதல்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது கொலன்னாவ மற்றும் திவுலப்பிட்டிய பிரதேச செயலகங்களில் ஓய்வூதியக் கோவையின்றி 112 ஓய்வூதியக்காரர்களுக்காக ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

### ஓய்வூதிய திருத்தங்களைத் தயாரித்தல்

2015 யூன் 25 ஆந் திகதிய 16/2015 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் மாத இறுதிவரையில் 06/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 7,343 ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதிய முரண்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### ஓய்வூதியத் தகவல்கள் மெய்மையாய்வு செய்யப்படாமல் ஓய்வூதியம் செலுத்துதல்

பன்முகப்படுத்தப்பட்ட ஓய்வூதியக்காரர் தகவல்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதிய மத்தியமயப்படுத்தப்பட்ட முறைமையைத் தயாரிக்கும் போது பன்முகப்படுத்தப்பட்ட தரவுகள் ஓய்வூதிய தொகைமதிப்புக்களின் மூலம் மெய்மையாய்வு

செய்யப்படாது நேரடியாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### பாரயமடையதவர்களின் சேமிப்புப் பாஸ் புத்தகம்

ஓய்வூதிய நலன்களை உரித்தாக்கிக் கொள்ளும் திட்டத்தின் கீழ் பராயமடையாதவர்களுக்கு உரித்தாகின்ற பணம், தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புக் கணக்கொன்றில் அல்லது நிலையான வைப்பொன்றில் வைப்பிடப்பட்டு வயது பூர்த்தியடையும் போது பராமடையாதவர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு உரிய அரசாங்க நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த செயல் நடவடிக்கைகள் தொடர்பான மேற்பார்வையொன்று ஓய்வூதியத் திணைக்களத்தால் மேற்கொள்ள வேண்டியிருந்தது. வயது பூர்தியடைந்த பாரயமடையாதவர்களுக்கு உரித்தான நலன்கள் செலுத்தப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- கொலன்னாவ மற்றும் கோட்டே பிரதேச செயலகங்களினால் பராயமடையாதவர்களின் வயது பூர்த்தியடைந்த முறையே 24 பாஸ் புத்தகங்களும் மற்றும் 5 நிலையான வைப்புக்களும் 8 பாஸ் புத்தகங்களும் அந்த செயலகங்களில் காணப்பட்டன.

- புகையிரதத் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 1927 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 1482 பராயமடையாதவர்களுக்காக வைப்பிலிடப்பட்ட ரூபா 1.55 மில்லியன் தொகை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் பராயமடையாதநிலையைப் பூர்த்தி செய்த நலனாளிகளுக்கு அந்த பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 1995 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 943 பராயமடையாதவர்களின் வயது பூரணமாகியிருந்த போதிலும், அவர்களின் பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தால் பராயமடையாதவர்களின் பாஸ் புத்தகங்களில் வைப்புச் செய்யப்பட்ட பணத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- பாஸ் புத்தகங்கள் வழங்கும் பழைய முறைமையில் காணப்பட்ட நலிவுகளின் காரணமாக 2015 செப்தெம்பர் 14 ஆந் திகதிய 09/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் மூலம் பராயமடையாதவர்களுக்கு நலன்கள் உரித்தாகின்ற ஆரம்ப சந்தர்ப்பத்தின் போதே பாஸ் புத்தகங்கள் பொறுப்பாளரின் கையில் வழங்கப்பட்டிருந்தது. எனினும், பழைய முறைமையின் கீழ் காணப்பட்ட பாஸ் புத்தகங்கள் மற்றும் நிலையான வைப்புக்களின் நலன்களை உரித்தாளிகளுக்கு வழங்குவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று ஓய்வூதியத் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### பணிக்கொடையிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற கழிப்பனவுகள் கணக்கீடு செய்யப்படாமை

ஓய்வூதியத் திணைக்களத்தால் ஓய்வூதியப் பணிக் கொடையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கழிப்பனவுகளை அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் சரியாக கணக்கீடு செய்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டது. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- வரிசை அமைச்சு மற்றும் 05 திணைக்களங்களால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் பிரகாரம் ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களினால் பெறப்பட்ட சம்பள முற்பணக் கடன் அவர்களின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அல்லது மரணப் பணிக்கொடையிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 94.99 மில்லியன் அறவிடப்பட்டிருந்த போதிலும், அந்த அறவீடுகளின் மூலம் அவர்களின் சம்பள முற்பணக் கடன் மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

- வரிசை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் முறையே 27 இற்கும் 64 இற்கும் உரியதாக பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் பிரகாரம் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 21.58 மில்லியன் தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 116.44 மில்லியன் தொகையுமாக ரூபா 138.02 மில்லியன் பணிக்கொடை கழிப்பனவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

- 2016 ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திணைக்களத்தால், மத்திய அரசாங்கத்திற்குரிய 4318 உத்தியோகத்தர்களினது ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கழிப்பனவுகள் ரூபா 19.79 மில்லியன் தொகை செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## கழிக்கப்பட்ட பணத்துடன் ஓய்வூதியக்காரருக்கு பணிக்கொடை செலுத்துதல்

ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கழிப்பனவுகளைக் குறைக்காமல் மொத்த பணிக்கொடையும் ஓய்வூதியக்காரருக்குச் செலுத்தப்பட்டமையின் காரணமாக 182 ஓய்வூதியக்காரர்களுக்காக ரூபா 9.96 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. ஓய்வூதியப் பணிக்கொடை 12 சதவீத வட்டியின் அடிப்படையில் 18 வருடங்களில் வங்கிக் கடன் மூலம் செலுத்தப்படுதன் காரணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணிக்கொடைக்கான கடனுக்காக மாத்திரம் 18 வருட இறுதியில் ரூபா 10.80 மில்லியன் வட்டி மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

## அரசாங்க சேவை சேமலாப நிதியம்

அரசாங்க சேவை சேமலாப நிதியத்தின் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2016 சனவரி 01 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்படாத 5,604 விண்ணப்பங்களின் எண்ணிக்கையை உள்ளடக்கி செலுத்த வேண்டியதாகக் காணப்பட்ட மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 12,158 ஆக இருந்தது. அதில் மீளாய்வாண்டின் போது 5,109 விண்ணப்பங்களுக்கு மாத்தரம் நலன்கள் ஷெலுத்தப்பட்டிருந்தது.

# மாகாண சபைகளிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்களின் பொழிப்பு

# மேல் மாகாண சபை

மேல் மாகாண சபையினால் 2016 ஆம் அண்டிற்காக ரூபா 36,929 மில்லியன் தொகையான அரசாங்க மானியம் மற்றும் சேமிப்பின் மூலமும், உள்ளக மார்க்கங்களிலிருந்து ரூபா 38,465 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 75,394 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 60,476 மில்லியன் தொகையும், மூலதனச் செலவினத்திற்காக ரூபா 14,918 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 75,394 மில்லியன் தொகையை பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியங்களின் மூலம் ரூபா 24,102 மில்லியன் தொகையும், உள்ளக மார்க்கங்களிலிருந்து ரூபா 41,203 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 65,305 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினம் ரூபா 54,326 மில்லியன் மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 7,382 மில்லியன் தொகையுமாக ரூபா 61,708 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

## வருமான முகாமைத்துவம்

நீண்ட காலரீதியாகவும், வருடாந்தமும் காணிகளை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் 06 பிரதேச செயலகங்களில் ரூபா 80.76 மில்லியன் நிலுவை வருமானமொன்று காணப்பட்டது.

மஹர பிரதேச செயலக அதிகாரபிரதேசத்தில் நீண்டகால அடிப்படையில் 04 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் உரிய வேலைகள் குறித்த பிரகாரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அந்தக் காணிகளிலிருந்து குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இரண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் உரிய வேலைகள் குறித்த பிரகாரம் ஆரம்பிக்கப்படாதிருந்தமையால் அந்த 02 நிறுவனங்களிலிருந்து அறவிட முடியுமாக இருந்த ரூபா 6.36 மில்லியன் தொகையான குத்தகைப் பணம் இழக்கப்பட்டிருந்தது.

## விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 04 மலசலகூட முறைமைகளை தாபிப்பதற்காக மாகாண சுற்றுலா சபையினால் ரூபா 11.04 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ஒரு மலசலகூட முறைமை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் காணப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் போது ரூபா 9.5 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டு மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கரையோரங்களை சுத்தம் செய்யும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த இயந்திரம் உள்ளூராட்சி, பொருளாதார மேம்படுத்தல், மின்சக்தியும் வலுசக்தியும், சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சிற்காகக் கொள்வனவு

செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த அமைச்சிலிருந்து பணம் கிடைத்தமைக்கு அல்லது மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த இயந்திரத்தை உரிய தரப்பினருக்கு கையளிப்பதற்கோ அல்லது பயனுள்ள பணிகளில் ஈடுபடுத்துவதற்கோ இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

## முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவில் சேவையாற்றி இலங்கை நிர்வாக சேவையின் விஷேட தரத்திற்கு பதிவியுயர்வு பெறாத இலங்கை நிர்வாக சேவையின் I ஆந் தரத்தின் பெண் உத்தியோகத்தருக்கு இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்திற்கு உரித்தான SL - 01 சம்பள படி நிலைக்குப் பதிலாக 2007 மே மாதத்திலிருந்து இலங்கை நிர்வாக சேவையின் விஷேட தரம் மற்றும் அதற்குரிய SL - 03 சம்பள படிநிலையை அடிப்படையாகக் கொண்டு சம்பளம் செலுத்துவதற்கு அளுனரின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் அடிப்படையில் வருடாந்த சம்பள அதிகரிப்பைச் செலுத்துதல், காலரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற சம்பள திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் ஒய்வூதியம் கோருவதற்காக மற்றும் அதற்குரிய ஏனைய நலன்களுக்காகவும் SL - 03 சம்பள படிநிலை அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது.

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளராக செயற்பட்டிருந்த பெண் உத்தியோகத்தருக்கு எதிராக ஆரம்ப விசாரணையொன்று நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது பிரதம செயலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அந்த உத்தியோகத்தருக்கு மேல்மாகாண சபையில் அலுவலக இடவசதிகள் மற்றும் பதவியொன்று வழங்கி கடமைகள் கையளிக்கப்பட்டு மாகாண சபையில் சேவையாற்றியிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு சேவையொன்று பெறப்படாதிருக்கும் போது 2015 பெப்ரவரி மாதம் முதல் 2017 சனவரி மாதம் வரை மாகாண சபை நிதியத்திலிருந்து சம்பளம் மற்றும் படியாக கூட்டுமொத்தமாக (கழிவுகளுக்கு முன்) ரூபா 2.11 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகம் மற்றும் 09 பிரதேச வைத்தியசாலைகள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 129 வரையான மருந்து வகைகளின் கீழ் 1,270,611 அலகுகள் காலாவதியாகியிருந்தமை மற்றும் தரத்தில் குறைவடைந்தமையின் காரணமாக பாவனையிலிருந்து அகற்றுதல் அல்லது அழிவடைந்திருந்தது. அந்த மருந்துகளின் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 2.33 மில்லியனாகும்.

## சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கொழும்பு பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் உயிரியல் வைத்திய அலகினால் மீளாய்வாண்டின் போது ரூபா 22 மில்லியன் அளவிலான சுகாதார உபகரணங்களும் உதிரிப் பாகங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்காக பெறுகை வழிகாட்டி நடைமுறைகள் பின்பற்றப்படாதிருந்ததுடன், ஒரு வழங்குனரிடமிருந்து கேள்வியை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் கொள்வனவுகளில் மாதிரிகளுக்கு

இணங்காதிருந்ததாக சிபாரிசு செய்யப்பட்ட 04 பொருள் வகைகளின் கீழ் ரூபா 8.07 மில்லியன் பெறுமதியான 213 அலகுகள் மற்றும் மாதிரிக்கு இணங்காதது என பரீட்சிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தாத 04 பொருள் வகைகளின் கீழ் ரூபா 13.81 மில்லியன் பெறுமதியான 22 அலகுகளுக்குரிய பொருட்கள் காணப்பட்டன.

## செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்

கம்பஹா வலயக் கல்வி அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 57 பாடசாலைகளில் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டிருந்த 61 கட்டிடங்கள் அவதானிக்கப்பட்டன. அந்தக் கட்டிடங்களுக்காக ரூபா 277.69 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதில் 04 பாடசாலைகளில் ரூபா 12.01 மில்லியன் செலவிட்டு 08 வேறு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

மாகாணத்தில் அறநெறிப் பாடசாலைகளை கட்டியெழுப்பும் நோக்குடன் “சறுதம் அறுணெல்ல” பெயருடைய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பிரதம செயலாளரின் செலவினத் தலைப்பின் கீழ் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ரூபா 665.73 மில்லியன் மேல்மாகாண மேலதிக மேம்பாண்டுப் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பணியகத்தால் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த தொகையில் ரூபா 29.30 மில்லியன் வேறு செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் மாகாணத்தின் அறநெறிப் பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதற்காக ரூபா 572.80 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 63.63 மில்லியன் தொகையிலிருந்து ரூபா 13.06 மில்லியன் நிறுவனத்தின் நிர்வாகச் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சேமிக்கப்பட்டிருந்த தொகை ரூபா 5.41 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 45.16 மில்லியன் தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நோக்கத்துடன் “நெதட்ட அறுண” பெயருடைய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பிரதம செயலாளரின் செலவினத் தலைப்பில் 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் ரூபா 53.36 மில்லியன் தொகையொன்று மேல் மாகாண பொருளாதார மேம்படுத்தல் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பணியகத்தால் அந்த செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கமான மூக்குக் கண்ணாடி வழங்குதல் மற்றும் கண் பரிசோதனைக்காக முறையே ரூபா 39.59 மில்லியன் மற்றும் ரூபா 2.56 மில்லியன் என கூட்டுமொத்தமாக ரூபா 42.15 மில்லியன் அளவில் செலவிடப்பட்டிருந்தது. சேமிக்கப்பட்ட தொகையில் ரூபா 1.90 மில்லியன் அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டிருந்த ஏனைய செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. தாபன மற்றும் நிர்வாகச் செலவினங்களாக ரூபா 2.68 மில்லியன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எரிபொருள், பெனர், விழாக்கள் போன்ற நடவடிக்கைகளுக்காக ரூபா 0.25 மில்லியன் (கட்டம் 2) செலவிடப்பட்டிருந்தது. பிரதம செயலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பணத்துடன் ஒப்பீடு செய்த போது ரூபா 6.38 மில்லியன் தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

# மத்திய மாகாண சபை

மத்திய மாகாண சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 12,989 மில்லியன் அரசாங்கத்தின் மானியத்தின் மூலமும், உள்ளக மூலங்களிலிருந்து ரூபா 6,766 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 19,755 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினமாக ரூபா 30,030 மில்லியன் தொகையும், மூலதனச் செலவினமாக ரூபா 12,989 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 43,019 மில்லியனைப் பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியம் மூலம் ரூபா 5,097 மில்லியன் தொயைும், உள்ளக மூலங்களிலிருந்து ரூபா 6,980 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 12,077 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினம் ரூபா 29,299 மில்லியன் மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 5,097 மில்லியன் தொகையுமாக ரூபா 34,396 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 5,097 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

மத்திய மாகாண சபைக்குரியதாக 2016 ஆம் ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படாமல் நிதியை விடுவித்தல்

மத்திய மாகாண விவசாய அமைச்சில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த 4 விவசாய வீதிகளுக்காக ரூபா 8.12 மில்லியன் தொகையும் 6 தோட்ட வீதிகளுக்காக ரூபா 4.65 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 12.77 மில்லியன் தொகை வேலை பூர்த்தி செய்யப்பட்டதாகக் கருதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

மத்திய மாகாண சுகாதார அமைச்சின் கட்டிட நிர்மாணங்களை 08 செயற்திட்ட நடவடிக்கைகளில் நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டின் போது, ரூபா 128.7 மில்லியன் கட்டிடங்கள் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அதற்குரிய பெறுகைகள் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

மத்திய மாகாண விவசாயத் திணைக்களத்தில் நாலந்த நாற்று மேடை நிலையத்தை நவீன மயப்படுத்துதல் மற்றும் உள்நாட்டு உணவை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் உள்ளூர் உணவுச்சாலைகளுக்காக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மாகாண சபையின் நிதி விதி 471.2 இற்கு முரணாக ரூபா 2.21 மில்லியன் தொகை உரிய வியாபார நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த உபகரணங்கள் 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் திணைக்களத்திற்குக் கிடைத்திருக்கவில்லை.

மத்திய மகாண விவசாயத் திணைக்களத்தின் கல்பாலம நாற்றுமேடையின் நிர்மாணம் தொடர்பாக 2017 ஏப்ரல் மாதத்தில் பௌதீக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிராத ஒரு நிர்மாணத்திற்காக ரூபா 0.17 மில்லியன் தொகையும் மேலும் 04 நிர்மாணங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலை

உரிய பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரின் சான்றிதழின்றி ரூபா 3.36 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 3.53 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணானவைகள்

2013 மார்ச் 13 ஆந் திகதிய 2013/11 ஆம் இலக்கம் மற்றும் 2015 சனவரி 29 ஆந் திகதிய 05/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு முரணானதாக சரசவி உயன மகா வித்தியாலத்தில் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முதலாம் ஆண்டிற்கு மாணவர்களை உள்ளீர்க்கும் போது ஒரு மாணவரிடமிருந்து ரூபா 15,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 4.88 மில்லியன் உரிய பிள்ளையின் பெற்றோர்களினால் ஒரே தடவையில் மற்றும் தவணையாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

2015 யூன் 05 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/83 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் வெளிநாட்டு சுற்றுலாக்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், அந்த ஆலோசனைகளுக்கு முரணாக 2016 ஆம் ஆண்டில் மத்திய மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் 83 உறுப்பினர்களை உள்ளடக்கிய 22 உத்தியோகத்தர்கள் 02 வெளிநாட்டு சுற்றுலாவிற்காக முறையே ரூபா 24.92 மில்லியன் மற்றும் ரூபா 29.15 மில்லியன் என கூட்டுமொத்தமாக ரூபா 54.07 மில்லியன் மாகாண சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

### அரசாங்க பெறுகைகள் நடைமுறைகளுக்குப் புறம்பாக மரத்தளபாடங்களை கொள்வனவு செய்தல்

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மத்திய மாகாண ஆளுனரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்காக ரூபா 3.99 மில்லியன் செலவில் மரத்தளபாடப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய வீதிகளைப் பராமரிப்பதற்காக ரூபா 190.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 39 சதவீதமான ரூபா 73.94 மில்லியன் மாத்திரம் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து 61 சதவீதம் அதாவது ரூபா 116.06 மில்லியன் நிதிஏற்பாடு, ஊழியர் சம்பளக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### பாடசாலைகளில் ஆசிரியர்களின் பற்றாக்குறை மற்றும் மிகைகள் காணப்பட்டமை

மத்திய மாகாண பாடசாலைகளில் 4,308 ஆசிரியர்களில் மிகையொன்று காணப்பட்ட போதிலும், கலேவல வலயத்திற்குரிய 108 பாடசாலைகளில் பல்வேறு பாடங்களுக்காக 157 ஆசிரியர் வெற்றிடங்களும், நுவரெலியா மற்றும் கொத்மலை வலயங்களுக்குரிய பாடசாலைகளில் 710 ஆசிரியர் வெற்றிடங்களும் காணப்பட்டன.

## செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மத்திய மாகாண மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சின் 2009 , 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது 9 மின் நீடிப்புக்களை அமைப்பதற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 2.73 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் ஏனைய மாற்றுவழி முன்மொழிவுகளின் மூலம் அமுல்படுத்தப்பட்டிருந்ததாக இலங்கை மின்சார சபையினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த பணம் மாகாண சபை நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2016 சனவரி 06 ஆந் திகதிய பீடீ/ஜீபீஎஸ்/130/9/14/எம்சீ ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி மத்திய மாகாணத்தில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மோட்டார் சைக்கிள்கள் பெற்ற உத்தியோகத்தர்களில், மோட்டார் சைக்கிள் உரித்தற்ற பதவிகளுக்கு நியமிக்கப்படும் போது அந்த மோட்டார் சைக்கிளின் சந்தைப் பெறுமதி 04 மாதங்களுக்குள் தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மோட்டார் சைக்கிள்களைப் பெற்று வேறு பதவிகளுக்குச் சென்ற 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,617,180 தொகை 2017 மார்ச் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

குறுதெணிய கல்வி அபிவிருத்தி நிலையத்தின் விடுதி முறையான பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்படாமல் 2010 சனவரி மாதம் முதல் 2015 சனவரி 09 ஆந் திகதி வரை மத்திய மாகாண கௌரவ பிரதம அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பாவனைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய நிலுவை விடுதிக் கட்டணமான ரூபா 2.54 மில்லியன் தொகை வள நிலையத்திலிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

குண்டசாலை பிரதேச சபைக்குரிய “ஜனசவிகம” விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கும் நடக்கும் ஒற்றையடி பாதையை அமைப்பதற்காகவும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது நிதி ஆணைக்குழுவின் அங்கீகாரதின்றி சொத்துக்கள் பராமரிப்பு செலவின விடயத்தின் கீழ் ரூபா 7.13 மில்லியன் தொகை மற்றும் சமநிலையான பொருளாதார அபிவிருத்தி செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 3.29 மில்லியன் தொகையுமாக கூட்டு மொத்தமாக ரூபா 10.42 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நடக்கும் ஒற்றையடிப்பாதை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காடுகள் வளர்ந்திருந்தது.

## வெளிப்படையான மோசடிகள்

ஹற்றன் சீடா நிலையத்தில் 2014 மார்ச் 21 ஆந் திகதி முதல் 2016 யூன் 26 ஆந் திகதி வரை 407 சந்தர்ப்பங்களின் போது முறையற்ற வகையில் ரூபா 2.63 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணத்தை செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிலையப் பொறுப்பு இணைப்பு உத்தியோகத்தரினால் தாம் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

# வடமத்திய மாகாண சபை

கடந்த 29 வருட காலத்தில் வடமத்திய மாகாண சபையினால் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு 5.4 சதவீதமான கீழ் மட்ட பங்களிப்பினை வழங்கியிருந்தது. மாகாணத்தின் வறுமைநிலை 7.3 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. இந்த நிலைமையை இனங்கண்டு வடமத்திய மாகாணத்தினால் 2016 ஆம் ஆண்டின் போது மாகாண விவசாயம், கல்வி, சுகாதாரம், கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக முன்னுரிமையொன்றை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 17,404 அரசாங்க மானியம் மூலமும் ரூபா 20,981 தொகை உள்ளக வருமானமாக கூட்டுமொத்தமாக ரூபா 38,385 மில்லியன் வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்காக மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 16,914.5 மில்லியன் தொகையும், மூலதனச் செலவினத்திற்காக ரூபா 5,382.2 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 22,296.7 மில்லியன் தொகையான செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்கத்தின் மானியமாக ரூபா 15,578 மில்லியன் தொகையும் உள்ளக வருமானம் மூலம் ரூபா 3,535 மில்லியன் தொகையுமாக ரூபா 19,113 மில்லியன் வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினம் ரூபா 16,948 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 3,145 மில்லியன் தொகையுமாக ரூபா 20,093 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையானதும், முக்கியமானதுமான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### விவசாயம்

வடமத்திய மாகாணத்தில் வாழ்ந்து வருகின்ற 1.4 மில்லியன் அளவிலான சனத்தொகையில் 79 சதவீதமானவர்களினது பிரதான ஜீவனோபாய வழியாக விவசாயம் விளங்குகின்றது. அதன் பிரகாரம் மாகாண விவசாய அமைச்சினால் “இசுறுமத் பூமஜயக் அசிரிமத் கொவிகெலெக்” என்ற தூர நோக்கின் கீழ் மாகாண விவசாயம் சார்ந்த உற்பத்திகளின் அபிவிருத்திக்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 302.2 மில்லியன் தொகையான மீண்டெழும் செலவினம் மற்றும் ரூபா 335.1 மில்லியன் தொகையான மூலதனச் செலவினம் என்பவற்றுக்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் அந்த நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 279.6 மில்லியன் தொகையும் ரூபா 181.5 மில்லியன் தொகையும் ஆக இருந்தன. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் அண்டில் ரூபா 176.2 மில்லியன் நிதிஏற்பாடு அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய உற்பத்திகளின் அதிகரிப்பு குறைவடைந்திருந்தது. விபரம் கீழே அட்டவணை 41 இல் காண்பிக்கப்படுகின்றது.

| | 2016 ஆம் ஆண்டு | 2015 ஆம் ஆண்டு | 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவு |
|---|---|---|---|
| நெல் பயிரிடும் நிலத்தின் அளவு | | | |
| பெரும்போகம் (ஹெக்டேயர் ஆயிரத்தில்) | 161.5 | 174.6 | 13.1 |
| சிறுபோகம் (ஹெக்டேயர் ஆயிரத்தில்) | 112.5 | 112.5 | - |
| வருடாந்த நெல் உற்பத்தி (மெ.தொன் ஆயிரத்தில்) | | | |
| பெரும்போகம் | 657.3 | 703.5 | 46.2 |
| சிறுபோகம் | 466.3 | 466.3 | - |
| மேலதிக பயிர் உற்பத்தி (மெ.தொன்) | 144 | 185 | 41 |
| வருடாந்த மரக்கறி உற்பத்தி (மெ.தொன்) | 93 | 101 | 07 |
| வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தி (மெ.தொன்) | 7,705 | 23,860 | 16,155 |
| வருடாந்த பால் உற்பத்தி (லீற்றர் ஆயிரத்தில்) | 35.56 | 32.03 | 3.53 |

அட்டவணை:- 41 வடமத்திய மாகாணத்தின் விவசாய உற்பத்தி

மூலம் :- இலங்கை மத்திய வங்கி – 2016 இன் வருடாந்த அறிக்கை மற்றும் வடமத்திய மாகாண சபையின் செயலாற்றல் அறிக்கை

2016 – 2018 காலப்பகுதியில் தேசிய உணவுப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுபோகத்தில் 4000 ஏக்கர் சோளம் பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விவசாயிகளுக்கு சோள விதைகளை வழங்குவதற்காக சோள விதைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விவசாயிகளின், விவசாய உத்தியோகத்தர்களின் கோரிக்கை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகளுக்கு இணங்காத வகையில் பெறுகைகள் குழுவினால் S.A 501 இனத்திற்குரிய சோள விதை 8,755 கிலோகிராம் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அந்த விதைகள் முளைக்காமையின் காரணமாக தேசிய உணவுப் பயிர் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

பெரிய வெங்காய விதை உற்பத்திக்குரிய 05 ஏக்கர் வயல் 20 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறித்த காலத்தில் விவசாயிகளுக்கு பெரிய வெங்காயம் விதைகளை வழங்குவதற்கு மாகாண விவசாயத் திணைக்களம் தவறியிருந்தது. இதன் காரணமாக 100 ஏக்கர் பெரிய வெங்காய விளைச்சல் தேசிய உற்பத்தியில் இழக்கப்பட்டிருந்தது.

உப பயிர்ச் செய்கையாக விவசாயிகளுக்கு மேலதிக வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் இஞ்சி பயிர்ச் செய்கையை பரவலாக்கும் நோக்கில் மீளாய்வாண்டின் போது ரூபா 6.61 மில்லியன் செலவில் 67.5 ஏக்கரில் 270 பயிர்ச்செய்கை மாதிரிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 5.75 ஏக்கரில் 23 பயிர்ச்செய்கை மாதிரிகளில் மாத்திரம் விளைச்சல் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் விளைச்சலின் தன்மை 8.5 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

மாகாண விவசாய திணைக்களத்தில் 02 குளிரூட்டிக் கூடத்திற்காக கட்டிடத்தை நிர்மாணித்தல மற்றும் குளிரூட்டிக்கூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் என்பவைகளுக்காக ரூபா 6.55 மில்லியன் மதிப்பீடொன்றின் அடிப்படையில் பெறுகைகள்

நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மாகாண விவசாய அமைச்சினால் அதன் நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டமையினால் அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 8.51 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும், அந்த செயற்பாடுகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

வடமத்திய மாகாணத்தில் 18 குளங்களைப் புனரமைப்பதற்காக பிரதம அமைச்சினால் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 26.55 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணம் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் செலுத்தப்பட்டிருந்த முற்பணமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## கல்வி

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் 48.9 சதவீத நிதிஏற்பாடு கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. 345 ஆசிரிய ஆலோசகர்கள், 46 விடய பணிப்பாளர்களுடன் புதிதாக 1065 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 37 கல்விக் கல்லூரிகள் மற்றும் டிப்ளோமா பட்டதாரிகள் ஆகியோரை ஆட்சேர்த்து மீளாய்வாண்டில் கல்வித் துறையினை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், 2016 ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

- கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சைகளில் உயர்தரத்திற்கு தகைமைபெற்ற மாணவர் 2015 ஆம் ஆண்டில் 66.61 சதவீதத்திலிருந்து 2016 ஆம் ஆண்டில் 66.34 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. ஒட்டுமொத்தமாக இலங்கையின் உயர் தரப் பரீட்சையில் சித்தியடையும் சதவீதமான 69.94 சதவீதத்துடன் ஒப்பிடும் போது அது கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

- கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக நுழைவிற்காக தகைமைபெற்ற எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டில் 59.56 சதவீதம் முதல் 2016 ஆம் ஆண்டில் 59.27 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. இலங்கையின் உயர்தரப் பரீட்சையின் சித்தியடைதல் அதற்குரிய சராசரியான சதவீதமான 63 சதவீதத்துடன் ஒப்பிடும் போது அது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

- கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) மற்றும் (சாதாரண தரம்) பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவர்களில் சகல பாடங்களிலும் சித்தியடையாத சதவீதத்தின் சராசரி 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது முறையே 8.56 சதவீதம் மற்றும் 4.01 சதவீதமாகக் காணப்பட்ட போதும், வடமத்திய மாகாணத்தில் அதற்குரிய பெறுமதியில் முறையே 9.64 சதவீதம் மற்றும் 10.51 சதவீதமாகக் காணப்பட்டது.

- வடமத்திய மாகாணத்தில் 06 வலயக் கல்வி அலுவலகங்களுக்குரிய பாடசாலைகளில் 1,235 அரசாங்க விடுதிகள் காணப்பட்ட போதும், அதில் 691 விடுதிகள் அதாவது 56 சதவீதம் பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

- 2016 ஆம் ஆண்டு வரையில் வடமத்திய மாகாண கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் இலங்கையின் கல்வி மட்டத்தில் 7 ஆவது இடத்தை உரித்தாக்கிக் கொண்டதுடன் கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சையின் பெறுபேறுகளின் படி 9 ஆவது இடத்தை உரித்தாக்கிக் கொண்டிருந்தது.

### சுகாதாரம்

கடந்த யுத்த காலத்தின் போது செயற்படு நிலையில் காணப்பட்ட பதவிய வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக்கூடத்திற்கு சத்திரசிகிச்சை வையத்தியர் இல்லாமையினால் 5 வருடங்களுக்கு அண்மித்த காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது சத்திரசிகிச்சைக் கூடத்தின் இயந்திரம் மற்றும் சத்திரசிகிச்சை மருத்துவ உபகரணங்கள் ரூபா 1.47 மில்லியன் செலவில் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், இந்த வைத்தியசாலைக்கு சத்திரசிகிச்சை வைத்தியர் நியமிக்காமையின் காரணமாக சிகிச்சை பெறுவதற்கு வரும் நோயாளர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு வரவேண்டியுள்ளது.

மதவாச்சி சிறுநீரக ஆயுர்வேத வைத்தியசாலை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் ரூபா 5.84 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த போதும் அது வரையில் ரூபா 85.37 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மேலும், வைத்தியசாலை வைத்தியர்களின் உத்தியோகபூர்வ இல்லம், தாதியர் உத்தியோகபூர்வ இல்லம் போன்ற விடுதிகளில் தரைக்கு டைல் பிடித்தல், கதவு மற்றும் யன்னல் பொருத்துதல், மின்சாரம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன. வைத்தியசாலையைச் சுற்றி மதில் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

மிஹிந்தலை மைத்திரிபால சேனானயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை மற்றும் ஆவணக்கூடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 31.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையலும், பயன்பாட்டிற்கு எடுக்காமையினால் கட்டிடத்திற்கு அருகில் காடுகள் வளர்ந்து புறாக்கள் கூடுகள் கட்டியிருந்தன.

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய 20 வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய வழங்கல் பிரிவு என்பவற்றில் ரூபா 5.08 மில்லியன் பெறுமதியான 361 மருந்து அலகுகள் மற்றும் மேலும் 4 வைத்தியாலைகளில் பெறுமதி கணிப்பீடு செய்ய முடியாத 98 மருந்து அலகுகள் என்பன காலாவதியாகியிருந்தன.

மீளாய்வாண்டின் போது வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனங்களின் மூலம் வைத்திய வழங்கல் பிரிவிற்கு ரூபா 5.43 மில்லியன் பெறுமதியான தரம் கெட்டுப்போன 48 மருந்து அலகுகள் கிடைத்திருந்ததுடன் ரூபா 95,265 பெறுமதியான 10 மருந்து வகைகள் 4 வைத்தியசாலைகளின் களஞ்சியங்களில் காணப்பட்டன.

வைத்தய வழங்கல் பிரிவில் மீளாய்வாண்டின் போது தரம் கெட்ட நிலையில் ரூபா 1.92 மில்லியன் பெறுமதியன 4 மருந்து

வகைகளுக்குரிய 766,000 அலகுகள் வடமத்திய மாகாண சபையின் சுகாதாரத் திணைக்களத்திற்கு கிடைத்திருந்தது. அதில் ரூபா 1.38 மில்லியன் பெறுமதியான 433,356 மருந்து அலகுகள் வைத்தியாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தன.

### மாகாண வீதி அபிவிருத்தி

வடமத்திய மாகாணத்தில் 2016 ஆம் ஆண்டில் 16 வீதிகளின் நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்திகளுக்காக பாதீட்டு நிதிஏற்பாட்டின் மூலம் ரூபா 341.83 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதிஏற்பாட்டின் அடிப்படையில் 7 வீதிகளில் 16.9 கிலோமீற்றருக்கு காபட் இடுவதற்கும் 5 வீதிகளில் உடைந்த இடங்களை சரிசெய்து தார் இடுவதற்கும் திட்டமிடப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 336.42 மில்லியனுக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இந்த 12 வீதிகளின் பௌதீக செயலாற்றல் 10 சதவீதத்திற்கும் 85 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்ததுடன் செலவினம் ரூபா 76.1 மில்லியனாக இருந்தது. அது மதிப்பிடப்பட்ட தொகையில் 22.6 சதவீதமாகும். அதற்கு மேலதிகமாக வெள்ளத்தால் பாதிப்புற்ற 04 வீதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்காக ரூபா 18.1 மில்லியன் பெறுமதியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அந்த செயற்திட்டத்தைக் கையளிப்பதற்கு தவறியிருந்தது.

### மலர்ந்துவரும் பொலன்னறுவை

2015 இன் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்த மலர்ந்துவரும் பொலன்னறுவை தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2016-2020 கலப்பகுதிக்காக அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 5 பிரதான பணிகளுக்குரிய 20 துறைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 60,000 மில்லியன் கிரயமான மொத்த செலவின மதிப்பீடொன்று அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இதற்காக ஐந்து வருட திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருடாந்தம் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்களைக் காண்பித்து செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 8,316 மில்லியன் தொகையான நிதிஏற்பாடுகளிலிருந்து 854 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 265 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிராததுடன் 7 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூா 4,642 மில்லியன் செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது. அது 2016 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 57 சதவீதமாக இருந்தது.

202-2016 காலப்பகுதியில் மலர்ந்துவரும் பொலன்னறுவை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை 2016 ஆம் ஆண்டின்போது அதன் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு வரையிலும் தாமதிக்க முடியாது என இனங்காணப்பட்ட 152 செயற்திட்டங்களை 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 756.42 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 360.73 மில்லியன் பெறுமதியான 11 செயற்திட்டங்கள் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

# தென் மாகாண சபை

தென் மாகாண சபையினால் 2016 ஆம் ஆண்டிற்க்காக ரூபா 28,692 மில்லியன் அரசாங்கத்தின் மானியத்தின் மூலமும் உள்ளக மார்க்கங்களில் இருந்து ரூபா 7,449 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 36,141 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானத்தில் ரூபா 29,543 மில்லியன் மீண்டெழும் செலவின விடயங்களுக்காவும், ரூபா 8,753 மில்லியன் தொகை மூலதன செலவின விடயங்களுக்காகவும் பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அரசாஙங்கத்தின் மானியத்தின் மூலம் ரூபா 23,640 மில்லியன் தொகையும், உள்ளக மார்க்கங்களில் இருந்து ரூபா 7,229 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 30,869 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினமாக ரூபா 28,239 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 5,054 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 33,293 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானத்தை விஞ்சிய செலவினம் காணப்பட்டமையால் மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 1,473 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

தென் மாகாண சபையில் 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

### செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமை

மீளாய்வாண்டின் போது மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 66 செயற்திட்டங்களும் பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி மானியத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 65 செயற்திட்டங்களும் மற்றும் பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி மானியம்-உறுப்பினர் நிதி ஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 97 செயற்திட்டங்களின் வேலைகளும் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### நிலுவை வருமானங்களை சேகரித்தல்

2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் 7 வருமான குறியீடுகளின் கீழ் கூட்டுமொத்தமாக ரூபா 952.91 மில்லியன் வருமானம் நிலுவையாக காணப்பட்டது. இதன் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் செயல் முன்னேற்றம் திருப்பிகரமான நிலையில் காணப்படவில்லை.

### நீண்டகால வாடகை அறவிடல்

8 பிரதேச செயலகங்களினால் நீண்ட கால வாடகை அடிப்படையில் காணியை வாடகைக்கு வழங்கியமைக்காக 73 பிணை முறிகளுக்காக அறவிட வேண்டிய நிலுவை வாடகை மற்றும் தண்ட பணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 33.45 மில்லியனாக இருந்தது.

### நோக்கங்களுக்கு முரணாக பிரமாண அடிப்படையிலான நிதியத்தின் பயன்பாடு.

தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கங்களின் பிரகாரம் விவசாயத்தை கட்டியெழுப்புவதற்காக பிரமாண அடிப்படையிலான நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்பட்ட “சறுபிம்” நிகழ்ச்சி

திட்டத்தின் கீழ் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு பாதுகாப்பு இரும்பு வேலியை நிர்மாணித்தல் மற்றும் பூங்காவினை அழகுபடுத்தல் என்பவற்றுக்காக ரூபா 2.05 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### பதிவு இரத்து செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு பெறுமதி சேர்வரி செலுத்துதல்

கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி.... அமைச்சினால் பதிவு இரத்துச் செய்யப்பட்ட 17 ஒப்பந்தகாரர்களுக்கு அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் 2016 ஆம் ஆண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 14.98 மில்லியன் பெறுமதி சேர் வரி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் சேவையில் ஈடுபடுகின்ற பொறியலாளர்களுக்கு படி செலுத்துதல்.

2011 திசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காமல் இலங்கை பொறியிலளாளர் சேவைக்குரித்தற்ற அதிகாரசபையில் சேவையில் ஈடுபடுகின்ற பொறியியலாளர்களுக்கு மாதமொன்றிற்காக ரூபா 15,000 வீதம் 2015 ஆம் ஆண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2.72 மில்லியன் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 2.43 மில்லியனுமாக பொறியியலாளர் படி செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் இந்தப்படிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் உரித்தற்று இருந்ததாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

### விளைவற்ற மற்றும் குறைவால் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பாடசாலைகளை கல்வி அனுபவத்தின் கேந்திர நிலையமாக மாற்றியமைக்கும் செயற்திட்டத்தின் (TSEP) கீழ் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி.... அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக ரூபா 24.31 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி இயந்திரங்களிலிருந்து பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 08 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 147 கணனிகள் வருடமொன்றிற்கு மேற்பட்ட காலமாக அந்த அலுவலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட செயல்திட்டத்தின் கீழ் இசைக்கருவிப் பொருட்கள் வழங்குவதற்காக ரூபா 3.33 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களில் ரூபா 1.51 மில்லியன் தொகையான 224 சங்கீத உபகரணங்கள் பாடசாலைகளுக்கு பசிர்ந்தளிக்கப்படுவதற்காக அமைச்சின் களஞ்சியத்தில் பாதுகாப்பற்ற வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த பொருட்களில் 25 கீழைத்தேய றப்பான், 22 இரட்டை மிருதங்கம் மற்றும் 04 புல்லாங்குழல் என்பன பாவனைக்கு எடுப்பதற்கு முடியாத வகையில் பிராணிகளினால் சேதப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய பொருட்களும் அழிந்து செல்லும் ஆபத்துக் காணப்பட்டது.

## வறுமை ஒழிப்பு நிதியம்

தென் மாகாண வறுமை ஒழிப்பு நிதியத்தின் கீழ் 29 பிரதேச செயலகங்களினால் 242 கடன் பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1.82 மில்லியன் கடன் பணத்திலிருந்து எந்தத் தொகையும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## ஆசிரியர்களின் பணியிடமாற்றம்

2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆசிரியர்களின் சேவைக்காலம் ஒரு பாடசாலைக்கு 06 வருடங்களாக வரையறுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணானதாக தென் மாகாணத்தின் 03 மாவட்டங்களுக்குரிய 1024 பாடசாலைகளில் 11,960 ஆசிரியர்கள் 06 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான காலம் முழுவதும் ஒரு பாடசாலையில் சேவையாற்றியிருந்தனர். அவ்வாறே 20 வருங்களுக்கு மேற்பட்ட காலமாக பணியிடமாற்றம் பெறாமல் அதே பாடசாலையில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை 1518 ஆக இருந்தது.

## சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென் மாகாண கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் அலுவல்கள், கிராமிய கைத்தொழில், மின்வலு மற்றும் கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் “எம்புல்தியல்” (மீன் வத்தல்) உற்பத்தி செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டை உள்ளடக்கிய இரண்டு வருடங்களில் ரூபா 11.11 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளைப் பேணிச் செல்வதற்காக தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருத்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

# கிழக்கு மாகாண சபை

கிழக்கு மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டிற்காக அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 20,351 மில்லியன் தொகை மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 2,770 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 23,121 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினத் திற்கான ரூபா 20,351 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 4,882 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 25,233 மில்லியன் கூட்டுமொத்தம் 2016 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படுவதற்கு மதிப்பிடப் பட்டிருந்தது. அதற்கிணங்க, அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 17,016 மில்லியன் மற்றும் உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,317 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 20,333 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் 2016 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 20,276 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 1,308 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 21,584 மில்லியன் தொகை 2016 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட பொருண்மை யானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### ஒப்பந்ததாரரால் கைவிடப்பட்ட வேலைகளிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்

கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறியின் (Night Soil Treatment Plant) நிர்மாணத்திற்காக 2012 சனவரி 28 இல் திருகோணமலை நகர சபையால் வழங்கப்பட்ட ஒப்பந்தமொன்று ரூபா 4.49 மில்லியன் கொடுப்பனவைப் பெற்ற பின்னர் ஒப்பந்ததாரரால் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மாகாணப் பொறியியலாளர் முழு நிர்மாண வேலைகளும் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருந்தன என 2014 நவம்பர் 20 ஆம் திகதிய அவரின் கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தியிருந்தார். அதற்கிணங்க, இன்றுவரை வேலைகளின் 50 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் சபையானது ஒப்பந்ததாரரிற்கு நிறுத்திவைத்தல் பணத்தை விடுவித்திருந்தது.

### பவுசருடனான உழவு இயந்திரம் பயன்படுத்தப்படாமை

அரச சார்பற்ற நிறுவனத்திடமிருந்து சாய்ந்தமருது வைத்தியசாலையால் கையேற்கப்பட்ட நேரத்தில் 06 கிலோமீற்றர்கள் மாத்திரம் செயற்பட்டிருந்த பவுசருடனான உழவு இயந்திரமானது அரச சார்பற்ற நிறுவனத்தால் கையளிக்கப்பட்ட பின்னர் தனியொரு கிலோமீற்றரேனும் பயன்படுத்தப்படாமல் 10 ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருந்தது.

### கணனிகள் பயன்படுத்தப்படாமை

திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தின் பாடசாலையொன்றின் மஹிந்தோதய ஆய்வுகூடத்திற்கு வழங்கப்பட்ட அறுபத்து நான்கு கணனிகளும் கந்தளாய் வலயக்

கல்வி அலுவலகத்தின் இரண்டாம் தரப் பாடசாலையொன்றின் கணனி வள நிலையத்திற்கு வழங்கப்பட்ட இருபத்து நான்கு கணனிகளும் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருந்ததுடன் அக் கணனிகளிற்காக வழங்கப்பட்ட உத்தரவாதக் காலம் ஏற்கனவே முடிவடைந்திருந்தது.

### மருத்துவ உபகரணத்தை பயன்படுத்தாமை

மூதூர் மற்றும் கிண்ணியா ஆதார வைத்தியசாலைகளில் இரத்த சுத்திகரிப்பு பிரிவுகள் (Dialysis Units) காணப்படாததுடன் சிறுநீரக நோயாளர்கள் எவரும் இன்றுவரை இந்த இரண்டு வைத்தியசாலைகளிலும் பதிவுசெய்திருக்கவில்லை. எவ்வாறாயினும், மாகாண சுகாதாரத் திணைக்களம் இவ் வைத்தியசாலைகளிற்காக 2016 திசெம்பர் 19 இல் ரூபா 19.17 மில்லியன் கிரயத்தில் இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைக்கான (dialysis treatment) உபகரணத்தை கொள்வனவு செய்திருந்தமையால் அவ் உபகரணம் விளைவற்றிருந்தது. மேலும், கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்கு ரூபா 1.75 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட கண் சத்திரசிகிச்சை உபகரணம் கண் சத்திரசிகிச்சை நிபுணர் இல்லாமையால் ஒரு வருடத்திற்கு மேலாக பயனற்றிருந்தது.

### சேதனப்பசளை நிலையம் செயற்படுத்தப்படாமை

ரூபா 12.8 மில்லியன் கிரயத்தில் நிலாவெளியில் நிர்மாணிக்கப்பட்டு அனைத்து இயந்திரங்களுடன் 2016 மார்ச் 26 இல் நிலாவெளி பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட சேதனப்பசளை நிலையம் இன்றுவரை பயனற்றிருந்தது.

### பொது நிதிகளை முறைகேடாக பயன்படுத்துதல்

கிழக்கு மாகாணத்திலுள்ள மாகாண மற்றும் மத்திய அரசாங்க நிறுவனங்களிற்கு ஆலோசனை சேவைகளை வழங்குதல் மாகாண கட்டிடத் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடொன்றாகும். எவ்வாறாயினும், அலுவலக கட்டிட நிர்மாணத்துடன் தொடர்புடைய ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திடமிருந்து ஆலோசனைக் கட்டணங்களாக பெறப்பட்ட ரூபா 6.30 மில்லியன் தொகை மாகாண திறைசேரிக்கு அனுப்பப்படாமல் பிரதம செயலாளர் மற்றும் பொறியியல் சேவைகள் பிரதிப் பிரதம செயலாளர் உள்ளடங்கலாக கிழக்கு மாகாண சபையின் இருபத்தொரு உத்தியோகத்தர்களிற்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. பின்னர், இந்த வகையான ஆலோசனை சேவைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தில் நிபுணர்கள் இல்லாமை காரணமாக கட்டிடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் முடிவுறுத்தியிருந்ததுடன் அதனால் அலுவலக கட்டிட நிர்மாணம் இரண்டு வருடங்களிற்கு மேலாக தாமதமாகியிருந்தது.

### விளைவற்றிருந்த தையல் இயந்திரம்

2015 திசெம்பர் 31 இல் ரூபா 1.95 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஐம்பத்தேழு தையல் இயந்திரங்கள் தையல் நிலையத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக 2017 யூன் 30 வரையிலும் விளைவற்றிருந்தது.

### வீதி நிர்மாணித்தல் இயந்திரங்கள் விளைவற்றிருத்தல்

வீதி நிர்மாண வேலைகளிற்காக பயன்படுத்தப்பட்ட மாகாண வீதி அபிவிருத்தித்

திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 140.28 மில்லியன் பெறுமதியான நாற்பத்தெட்டு இயந்திரங்கள் திருத்தம் செய்து பயன்படுத்தவோ அல்லது அவ் இயந்திரங்களை ஏலமிடுதல் மூலம் விற்பனை செய்யவோ முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் 06 ஆண்டுகளிற்கு மேலாக விளைவற்றிருந்தன.

### குத்தகை வருமான நிலுவைகள்

ரூபா 169.98 மில்லியன் கூட்டுமொத்தமான அரசாங்க காணிகளிற்கான குத்தகை வருமானம் 1991 ஆம் அண்டிலிருந்து அத்தகைய வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிலுவையாகவிருந்தது.

### மாகாண சபையின் முன்னாள் அங்கத்தவர்களின் கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப்படாமை

ரூபா 0.9 மில்லியன் கூட்டுத்தொகையான கடன் மீதிகள் 07 ஆண்டுகளிற்கு மேலாக மாகாண சபையின் முன்னாள் அங்கத்தவர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்தன.

### எல்ஈடி காட்சிப்படுத்தல் (டுநுனு னுளைிடயல) விளம்பரப் பலகை பயன்படுத்தப்படாமை

சேருவில பிரதேச சபையால் 2014 மார்ச் 10 இல் ரூபா 0.94 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எல்ஈடி காட்சிப்படுத்தல் (LED Display) விளம்பரப் பலகையானது இன்றுவரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### மோசடியான நடவடிக்கை

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது வருமான சேகரிப்பு உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட ஒன்பது பெறுவனவுப் புத்தகங்களிலிருந்து அவர்களால் சேகரிக்கப்பட்ட வீதவரிகள் தம்பலாகாமம் பிரதேச சபைக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. பின்னர், முன்னாள் செயலாளர் மற்றும் ஐந்து ஏனைய உத்தியோகத்தர்கள் 2015 பெப்ரவரி 17 இல் ஒன்பது பெறுவனவுப் புத்தகங்களில் இரண்டு பெறுவனவுப் புத்தகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 160,900 தொகையை மீளளிப்பதற்கு இணங்கியிருந்தனர். எவ்வாறாயினும், மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### மடிக் கணனிகள் மற்றும் பக்ஸ் இயந்திரங்களை திருப்பிக் கொடுக்கத் தவறியமை

முன்னாள் மாகாண சபை அங்கத்தவர்கள் 2008 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் போது 37 மடிக் கணனிகளையும் 37 பக்ஸ் இயந்திரங்களையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், அவற்றில் 25 மடிக் கணனிகளும் 25 பக்ஸ் இயந்திரங்களும் 2017 யூன் 30 வரை திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

### வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் வீடுகளை நிர்மாணித்தல்

மாகாண வீடமைப்பு அதிகாரசபையின் வீடமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,687 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 5,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் போது எந்தவொரு வீடும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

### கொரிய மொழி வகுப்புக்களிற்கான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படாமை

2008 ஆம் ஆண்டின் போது வேலையற்ற இளைஞர்களிற்காக கொரிய மொழி வகுப்புக்களை நடாத்துவதற்கு முதலமைச்சரினால் முன்னாள் செயலாளரிற்கு ரூபா 2.0 மில்லியன் தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிடப்பட்ட வகுப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு நடாத்தப்பட்டிராததுடன் செலுத்தப்பட்ட முற்பணம் 2017 யூன் 30 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

# வட மாகாண சபை

வட மாகாண சபையானது அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 22,912 மில்லியன் மற்றும் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 2,430 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 25,342 மில்லியன் தொகையான வருமானத்தை 2016 ஆம் ஆண்டிற்காக மதிப்பிட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தில், அரசாங்க மானியங்களிலிருந்தான ரூபா 20,415 மில்லியன் மற்றும் ஏனைய உள்ளக மார்க்கங்களிலிருந்தான ரூபா 3,115 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 23,530 மில்லியன் தொகையான வருமானம் 2016 ஆம் ஆண்டிற்காக சேகரிக்கப்பட்டிருந்தது. மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 19,366 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 6,185 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 25,551 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் மீண்டெழும் செலவினத்திற்கான ரூபா 19,312 மில்லியன் மற்றும் மூலதன செலவினத்திற்கான ரூபா 4,241 மில்லியன் உள்ளடங்கலாக ரூபா 23,553 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த செலவினம் 2016 ஆம் ஆண்டின் போது ஏற்பட்டிருந்தது.

### நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் எழுதப்பட்ட காசோலைகள்

வவுனியா மாவட்டத்தில் ரூபா 5 மில்லியன் கிரயத்தில் கபடி விளையாட்டுத்திடல் நிர்மாணிக்கப்படுவதற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் செலவினத்தை எதிர்கொள்வதற்காக ரூபா 3.80 மில்லியன் இற்கான இரண்டு காசோலைகள் மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் எழுதப்பட்டிருந்தது. பின்னர் ரூபா 1.98 மில்லியன் பெறுமதியான காசோலையொன்று 2016 செப்தெம்பர் 14 இல் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1.82 மில்லியனிற்கு எழுதப்பட்ட ஏனைய காசோலை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன. இந்த கபடி விளையாட்டுத்திடல் கணக்காய்வுத் திகதியான 2017 ஆகஸ்ட் 31 வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

### கால்நடைப் பண்ணையின் செயற்பாடுகள்

வட மாகாணத்தில் கால்நடை அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கான விசேட செயற்திட்டத்தின் கீழ், அனிஞ்சயன் குளம் இனவிருத்திப் பண்ணையானது உயர் எண்ணிக்கையான இனவிருத்தி உற்பத்தி, கன்னிப்பசு இனப்பெருக்கத்திற்கான காளைகள் மற்றும் ஆடுகளினை ஏனைய பண்ணைகளுக்கிடையில் விநியோகித்தல் ஆகிய நோக்கங்களுடன் 2013 இல் 50 ஏக்கர் பரப்பளவான காணியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதேநேரம், அண்ணளவாக 36,000 லீற்றர் பால் மற்றும் 25 மெற்றிக்தொன் இறைச்சி என்பன பால் மற்றும் இறைச்சி உற்பத்தியின் தேசிய இலக்கினை அடைவதற்கு பங்களிப்புச் செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்தப் பண்ணையில் 17 பசுக்கள் மற்றும் 08 கன்றுகள் மட்டும் காணப்பட்டமையால் பண்ணையானது ஆக்கபூர்வமாக செயற்பட்டிருக்கவில்லை. மேலும், இந்தப் பண்ணை காட்டிற்கு அருகில் அமைந்துள்ளதால் 08 பசுக்கள் வன விலங்குகளால் கொல்லப்பட்டிருந்தன.

2003 இல் ரூபா 3.7 மில்லியன் கிரயத்தில் பால் பெறுவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கருவிகள் பண்ணையால் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் பயனற்றிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக ரூபா 245,460 தொகை வருமானமாக சேகரிக்கப்பட்ட அதேநேரம் ரூபா 4,632,674 செலவினம் பண்ணையின் நடவடிக்கைகளிற்காக ஏற்பட்டிருந்தது. ரூபா 1.2 மில்லியன் பெறுமதியில் ஆட்டுக் கொட்டகை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் ஆடுகள் எதுவும் கொட்டகையில் காணப்படவில்லை. மேலும், பண்ணையை அமைப்பதற்கு காணிப் பகுதியிலிருந்து அகற்றப்பட்ட பெறுமதியான மரங்களின் விபரங்கள் கணக்காய்வுப் பரீட்சிப்பிற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### விசேட தேவைகளையுடைய குடும்பங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்

நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட 2015 மே 26 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், வட மாகாணத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட நபர்களின் வருமான மட்டத்தை முன்னேற்றுவதற்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் (ஆர்டிஎஸ்) மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் (டபிள்யூஆர்டிஎஸ்) என்பவற்றினூடாக கால்நடைப் பண்ணையை அமைத்தல், சில தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மற்றும் சுயதொழில்கள் போன்றவற்றிற்கான உதவிகளை வழங்குதல் என்பவற்றிற்காகவும் ரூபா 56 மில்லியனிற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டிருந்தது. மேலும், மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்திலிருந்து (பிஎஸ்டிஜி) ரூபா 20 மில்லியன் தொகையும் காரணிகளினடிப்படையிலான மானியத்திலிருந்து (சீபீஜி) ரூபா 5 மில்லியன் தொகையும் நிதி ஆணைக்குழுவிடமிருந்து அங்கீகாரம் பெறப்படாமல் 517 மீளக்குடியமர்த்தப்பட்ட நபர்களிற்கு சுயதொழில் உதவிகளை வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மேற்குறிப்பிடப்பட்ட தொகையில், ரூபா 68.8 மில்லியன் தொகை மாத்திரம் 1377 மீளக்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் சார்பில் செலவிடப்பட்டிருந்தன.
- நிதி ஆணைக்குழுவால் அறிவுறுத்தப் பட்டவாறு ஆர்டிஎஸ் மற்றும் டபிள்யூஆர்டிஎஸ் என்பவற்றினூடாக இந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்து வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அறிவுறுத்தப்பட்டவாறு இது அமுல்படுத் தப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னர் நிலவிய அரசியல் நிலைமை காரணமாக பிரதேச செயலாளர்களின் அங்கீகாரத்துடன் உரிய கிராம சேவையாளரிடமிருந்து சிபாரிசு பெற்றுக்கொள்ளாமல் கௌரவ அமைச்சரின் பணிப்புக்களினூடாக நேரடியாக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் எனக்கு அறிவித்திருந்தார்.

### மருத்துவ உபகரணத்தை பயன்படுத்தாமை

பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைகளில் இரத்த சுத்திகரிப்பு பிரிவுகள் (Dialysis Units) காணப்படாத போதிலும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகங்களால் ரூபா 107.48 மில்லியன் பெறுமதியான ஹேமோடையாலிஸிஸ் (Hemodialysis) இயந்திரங்கள் மற்றும் ஏனைய பல்வேறு வகையான துணைக்கருவிகள் 2016 திசெம்பர் 19 இல் கொள்வனவு செய்யப்பட்டு 2017 சனவரி 27

இல் மேற்குறிப்பிடப்பட்ட 03 ஆதார வைத்தியசாலைகள் உள்ளடங்கலாக 09 வைத்தியசாலைகளிற்கு வழங்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டின் போது ஒவ்வொரு வைத்தியசாலையிலும் 200 நாட்பட்ட சிறுநீரக நோயாளர்கள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் பயிற்சியளிக்கப்பட்ட மனித வளங்கள் காணப்படாமையாலும் கட்டிட வசதிகள் உள்ளடங்கலாக மேற்குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகளில் இடவசதிகள் இல்லாமையாலும் இந்த உபகரணங்களை பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பொறியை ஸ்தாபித்தல்

காற்றாடிகளை நிறுவுவதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பொறியை ஸ்தாபிப்பதற்காக வட மாகாண பிரதம செயலாளரிற்கும் இரண்டு தனியார் கம்பனிகளிற்கும் இடையில் 2014 நவம்பர் 07 இல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மேற்படி உடன்படிக்கையின் பிரகாரம், விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டறிக்கையை பெற்றுக்கொள்ளாமல் முதல் 10 ஆண்டுகளிற்கு ரூபா 20 மில்லியன் வீதமும் அடுத்த 10 ஆண்டுகளிற்கு ரூபா 23 மில்லியன் வீதமும் குத்தகை வாடகைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. மேலும், இந்த நோக்கத்திற்காக காணியை பயன்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளிடமிருந்து முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், இலங்கை மின்சார சபையானது தேசிய வலையமைப்பிற்கான மின்சாரத்தை விநியோகிப்பதற்காக 2014 திசெம்பர் தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியின் போது மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு கம்பனிகளிற்கும் ரூபா 2,933.81 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது.

அதேநேரம், 2014 – 2017 காலப்பகுதிக்காக அக் கம்பனிகளிடமிருந்து பெறப்பட்ட ரூபா 60 மில்லியன் தொகையான குத்தகை வாடகை மாகாண வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்காததுடன் அதில் ரூபா 0.84 மில்லியன் தொகை எவ்வித அங்கீகாரமும் இல்லாமல் இரண்டு மாகாண திணைக்களங்களிற்கு இணைக்கப்பட்டிருந்த 20 உத்தியோகத்தர்களிற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

### முறையற்ற கொள்வனவுகள்

- ரூபா 3 மில்லியன் பெறுமதியான விளையாட்டுப் பொருட்கள் வட மாகாணத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களிற்கிடையில் விநியோகிப்பதற்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பற்றுச்சீட்டுக்கள் அல்லது விளையாட்டுக் கழகங்களிற்கு அவ் விளையாட்டுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டமை தொடர்பாக சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை. கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் அங்கீகாரம் மற்றும் சான்றுறுதிப்படுத்தல் என்பன மாகாண நிதி ஒழுங்குவிதி 107 இற்கு முரணாக விளையாட்டுப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.
- வட மாகாணத்தில் விளையாட்டு அபிவிருத்திக்காக விளையாட்டு அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபா 1.2 மில்லியன் தொகை உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர், இந்த தொகை 2017 ஆம் ஆண்டின் போது விளையாட்டுத் திணைக்களத்தால்

ஏனைய சில நோக்கங்களிற்காக விடுவிக்கப்பட்டிருந்தது.

### வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்ற செயற்திட்டத்தில் (நெல்சிப்) மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி

மாகாண சபையால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் நடாத்தப்பட்ட புலனாய்வுகளின் பிரகாரம், வல்வெட்டித்துறை நகர சபை மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை என்பவற்றின் அதிகாரப் பிரதேசத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கிராமிய வீதிகள் மற்றும் பொதுச் சந்தைகளின் நிர்மாணம் தொடர்பாக மாகாண சபையின் செயற்திட்டப் பணிப்பாளரால் ரூபா 4.35 மில்லியன் நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர், இந்த நிதி மோசடியை புலனாய்வு செய்வதற்காக பிரதம செயலாளரால் இன்னொரு குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்தக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், ரூபா 57 மில்லியன் நிதி மோசடி இந்த உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பாக மாகாண சபையால் இந்த உத்தியோகத்தரிற்கெதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி

2012 ஆம் ஆண்டின் போது மன்னார் மாவட்டத்தில் தீயால் அழிவடைந்த கடைகளின் உரிமையாளர்களிற்கு கடைக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தால் விடுவிக்கப்படட்ட ரூபா 6 மில்லியன் கட்டுநிதியில், ரூபா 4.97 மில்லியன் தொகை 2017 செப்தெம்பர் 30 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 5 வருடங்கள் கடந்த பின்னரும் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### நெல்சிப் இன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்கள் பயன்படுத்தப்படாமை

வட மாகாணத்திலுள்ள முசலி, நானாட்டான், மன்னார், மாந்தை மேற்கு பிரதேச சபைகளில் தொலைவிலுள்ள மற்றும் குறைந்த மக்களையுடைய பகுதிகளில் ரூபா 459.91 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்காக்கள், சந்தைகள், பஸ் முடிவிடங்கள், கடைத் தொகுதிகள், பயிற்சி நிலையங்கள் மற்றும் கலாச்சார மண்டபங்கள் போன்ற முப்பத்தியிரண்டு அபிவிருத்தி வேலைகள் 03 வருடங்களிற்கு மேலாக பயன்பாடற்றிருந்தன. மேலும், தலைமன்னார் புகையிரத நிலையம், இரணை இலுப்பைக்குளம், பெரியமடு மற்றும் ஆண்டான்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதிகள் மற்றும் நல்லூர் பிரதேச சபையில் உள்ளக விளையாட்டரங்கு, சிறுவர் பயிற்சி நிலையம் மற்றும் கலாச்சார மண்டபம் என்பவற்றிற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் என்பன உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்துவதற்குப் பதிலாக 2014 இலிருந்து ஏனைய சில நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

### ஆசிரியர் சம்பளக் கொடுப்பனவுகளிற்காக மக்கள் வங்கியால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்படாமை

2009 சனவரி மாதத்திற்கான ஆசிரியர் சம்பளக் கொடுப்பனவுகளிற்காக மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளரிற்கு துணுக்காய் கல்வித் திணைக்களத்தால் மாங்குளம் இலங்கை வங்கிக்கு சொந்தமான ரூபா 5.2 மில்லியன் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மாங்குளம் மக்கள் வங்கியால் உரிய பாடசாலைகளின் கணக்கிற்கு பணம்

செலவு வைக்கப்பட்டிருந்தது. தீர்வைக்காக மாங்குளம் இலங்கை வங்கிக்கு இந்தக் காசோலை அனுப்பப்பட்டதன் பின்னர், இலங்கை வங்கி இந்தக் காசோலைக்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நிராகரித்திருந்தது. இது தொடர்பாக, 08 வருடங்கள் கடந்த பின்னரும் கல்வி அமைச்சின் செயலாளரால் அர்த்தமுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### வாகன விபத்து தொடர்பாக ஏற்பட்ட நட்டங்கள்

மன்னார் வலயக் கல்வி பணிப்பாளரின் ஒதுக்கப்பட்ட வாகனம் 2015 ஒக்தோபர் 16 இல் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட திருத்தக் கிரயம் ரூபா 1.74 மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும், வடக்கு மாகாண சபை நிதி ஒழுங்குவிதியின் பிரகாரம் இது பொலிஸிற்கு அறிக்கையிடப்பட்டிருக்காததுடன் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்வாங்க விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அதே சாரதியால் வாகனம் செலுத்தப்பட்ட போது முன்னர் இரண்டு தடவைகள் அதே வாகனம் விபத்திற்குள்ளாகியிருந்தது. இந்த வாகனம் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டிருந்த போதிலும் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து நட்டங்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 செப்தெம்பர் 30 வரையிலும் பொறுப்பான உத்தியோகத்தரிற்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் வாகனத்தை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### இனங்காணப்பட்ட நட்டங்கள்

1999 – 2015 காலப்பகுதியின் போது ஏற்பட்ட ரூபா 49.06 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் தொடர்பாக நான்கு மாகாணத் திணைக்களங்களால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

# சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 22,794 மில்லியன் தொகை அரசாங்கத்தின் மானியம் மூலமும், உள்ளக மூலங்களிலிருந்து ரூபா 3,220 மில்லியன் தொகையுமாக ரூபா 26,014 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினமாக ரூபா 21,439 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினமாக ரூபா 4,575 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 26,014 மில்லியன் தொகையைப் பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் மானியம் மூலம் ரூபா 20,766 மில்லியன் தொகையும் உள்ளக மூலங்களிலிருந்து ரூபா 4,090 மில்லியன் தொகையுமாக ரூபா 24,856 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மீண்டெழும் செலவினம் ரூபா 22,116 மில்லியன் மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 4,557 மில்லியனுமாக ரூபா 26,673 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

சப்ரகமுவ மாகாண சபைக்குரிய 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### வெளிநாட்டு சுற்றுலாவிற்காக செலவிடல்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய வெளிநாட்டுப் பிரயாணச் செலவினங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அனுசரணை நிறுவகத்தால் தங்குமிடங்கள், உணவு பானம் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த 03 வெளிநாட்டு சுற்றுலாவின் போது கூட்டுமொத்தமாக ரூபா 4.01 மில்லியன் தொகை இணைந்த படியாக இரண்டு மாகாண அமைச்சர்களுக்கும் 05 உத்தியோகத்தர்களும் செலுத்தப்பட்டிருந்தன. அந்த வெளிநாட்டு சுற்றுலாவின் போது மாகாண அமைச்சரொருவருக்கும் 04 உத்தியோகத்தர்களுக்கும் ரூா 0.81 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

- 02 வெளிநாட்டு சுற்றுலாவின் போது 03 மாகாண அமைச்சர்களுக்கும் 19 உத்தியோகத்தர்களுக்கும் அமையப்படியாக ரூபா 1.00 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் ஒரு வெளிநாட்டு சுற்றுலாவின் போது உபசரணைப் படியாக ரூபா 0.11 மில்லியன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- 05 வெளிநாட்டு சுற்றுலாவின் போது விமானப் பயணச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 2.88 மில்லியன் கூட்டு மொத்தமாச் செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அந்தக் கம்பனியிலிருந்து விமானப் பயணச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் 02 வெளிநாட்டு சுற்றுலாவிற்கு மாத்திரம் ரூபா 1.01

மில்லியன் நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டிருந்தது.

- 2015 யூன் 05 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/83 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக சப்ரகமுவ மாகாண சபையின் 02 அமைச்சர்களையும் 24 உறுப்பினர்களையும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட 07 உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கிய 33 பேர்களுக்கு இத்தாலியில் சுற்றுலா மேற்கொள்வதற்காக மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 20.65 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

- மாகாண சபையில் பல்வேறு செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக தேவையான அறிவு மற்றும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மாகாண பிரதம அமைச்சர் மற்றும் அவரின் பிரத்தியேக செயலாளர் என்போருக்கு 2015 மற்றும் 2016 என்ற இரண்டு வருடங்களில் இரண்டு வெளிநாட்டு சுற்றுலாக்களுக்கு மாகாண சமூக நலன்புரி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொண்டிருந்த ஒரு வெளிநாட்டு சுற்றுலாவிற்காக மாகாண சபை நிதியத்திலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 4.34 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் மூலம் சப்ரகமுவ மாகாணத்திற்குரிய நலன்கள் எதுவும் 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

- வைத்தியத்துறையின் நிர்வாகத்தில் ஈடுபட்டிருக்கின்ற வைத்திய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஐக்கிய இராச்சியத்தின் தனியார் வைத்தியசாலையினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் 2016 மார்ச் 27 ஆந் திகதி முதல் 2016 ஏப்ரல் 03 ஆந் திகதி வரை வைத்தியத்துறை தொடர்பான எந்தவொரு உத்தியோகத்தரினதும் பங்குபற்றலின்றி மாகாண அமைச்சரினாலும் அவரின் பிரத்தியேக செயலாளரினாலும் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு சுற்றுலாவிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 1.67 மில்லியன் மாகாண சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. அந்த சுற்றுலாவின் பின்னர் அல்லது வைத்தியத்துறையின் உத்தியோகத்தர்களுக்காக பயிற்சி சந்தர்ப்பம் இழக்கப்பட்டமையின் காரணமாக ஏற்பட்டிருந்த செலவினம் பயனற்றதாக இருந்தது.

### நிர்மாண ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது ஏற்பட்டிருந்த மோசடிகள்

- சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை புனரமைத்தல் மற்றும் நவீனமயப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 4.92 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டைத் தயாரித்தல், அங்கீகரித்தல் மற்றும் கொடுப்பனவு செய்யும்போது ஏற்பட்டிருந்த குறைபாடுகள் மற்றும் மோசடிகளின் காரணமாக மாகாண சபை நிதியத்திற்கு ரூபா 1.98 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

- 15 கிலோமீற்றர் நீளமான உடவளவ தேசிய வனப் பூங்காவின் ஹந்தகிரிய இரண்டாம் நுளைவு வீதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக சிபாரிசு செய்யப்பட்ட பட்டியலின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட வேலைக்காக இயந்திர பொறிமுறை மணித்தியாலங்களின் எண்ணிக்கையையும் உள்ளபடியாக

நிர்ணயிக்கப்பட்ட வேலைக்காக ஈடுபடுத்த வேண்டிய இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கையையும் கவனத்தில் கொள்ளும் போது 349.08 இயந்திர மணித்தியாலங்களுக்காக ரூபா 1.33 மில்லியன் தொகை நிறைவேற்றப்படாத வேலைக்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

### சிறையிலிருக்கின்ற மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு படிகளைச் செலுத்துதல்

மகாண சபையினைப் பிரதி நிதித்துவப்படுத்திய இரண்டு உறுப்பினர்களுக்கு 2014 பெப்ரவரி மாதம் முதல் 2016 பெப்ரவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் சிறையிலிருந்தனர். அக்காலப்பகுதியில் அந்த உறுப்பினர்கள் சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் நடாத்தப்பட்ட சபைக் கூட்டங்கள் எதற்கும் சமூகமளித்திருக்கவில்லை. சிறையிலிருந்த காலப்பகுதியில் சப்ரகமுவ மாகாண சபைக்கு அவர்களின் சேவை கிடைக்கப் பெறாதிருந்த போதிலும், அக் காலப்பகுதிக்காக சம்பளத்திற்கு மேலதிகமாக, சாரதி படி எரிபொருள் படி, தொலைபேசிப்படி மற்றும் உபசரணைப் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 1.19 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

### அரசாங்க வீடுகளின் வாடகை அறவீடு முறையான பிரகாரம் இடம்பெறாமை

மாகாண சபைக்குச் சொந்தமான 12 அரசாங்க வீடுகளில் 2003 ஆம் அண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வீட்டு வாடகை அறவிடப்பட்டமையின் காரணமாக ரூபா 2.58 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானமொன்றை மாகாண சபை இழந்திருந்தது.

### மாகாண சபை நிதிஏற்பாட்டிலிருந்து ஞாபகச் சின்னங்களை கொள்வனவு செய்து வழங்குதல்

2015 ஆம் ஆண்டின் போது ஆளுனரினால் பல்வேறு தரப்பினர்களுக்கு ஞாபகரர்த்தமாக பல்வேறு பொருட்களை பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 4.07 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம் குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை.

- மாகாண கல்வி அமைச்சின் மூலம் சப்ரகமுவ மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளுக்கு கூட்டுமொத்தமாக ரூபா 133.29 மில்லியன் செலவில் மஹிந்தோய தொழில்நுட்ப ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 5 தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் 2017 மார்ச் மாதம் வரையிலும் உத்தியோகபூர்வமாக மாணவர்களுக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

- மஹிந்தோதய ஆய்வுகூடத்திற்காக 2015 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 83.50 மில்லியன் தொகையான கணனிகளும் துணைக்கருவிகளும் மற்றும் கதிரைகளையும் மேசைகளையும் உள்ளடக்கிய 25 உபகரண வகைகள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த உபகரணங்கள் கிடைக்கப்பெறாத பாடசாலைகளின்

தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### உக்காத கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் வழங்காமை

சப்ரகமுவ மாகாண விஷேட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கூட்ட அறிக்கையின் பிரகாரம் உக்காத கழிவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு வசதிகள் காணப்படாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு களஞ்சிய வசதிகளை வழங்குவதற்காக கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2017 யூன் 30 ஆந் திகதி வரையிலும் சப்ரகமுவ மாகாணத்தில் களஞ்சிய வசதிகள் காணப்படாத 12 உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக களஞ்சிய வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

# வடமேல் மாகாண சபை

வடமேல் மாகாண சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 35,346 மில்லியன் அரசாங்கத்தின் மானியம் மூலமும், உள்ளக மூலங்களிலிருந்து ரூபா 7,711 மில்லியன் தொகையுமாக ரூபா 43,057 மில்லியன் கூட்டுமொத்தமான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் மீண்டும் வரும் செலவினமாக ரூபா 29,359 மில்லியன் தொகையும், மூலதனச் செலவினத்திற்காக ரூபா 13,697 மில்லியன் தொகையும் பயன்படுத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் மானியத்தின் மூலம் ரூபா 25,701 மில்லியன் தொயும், உள்ளக மூலகங்களிலிருந்து ரூபா 7,518 மில்லியன் தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 33,219 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மீண்டுவரும் செலவினம் ரூபா 28,224 தொகை மற்றும் மூலதனச் செலவினம் ரூபா 4,778 மில்லியன் தொயுமாக ரூபா 33,002 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.

வடமேல் மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்குரிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களின் சுருக்கம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### வாடகைப் பணம் அறவிடப்படாமை

மீளாய்வாண்டிற்காக 12 கரைவலை உரிமையாளர்களிடமிருந்து ரூபா 0.36 மில்லியன் கூட்டுத்தொகையும், 167 உப்பளங்களில் இருந்து ரூபா 3.68 மில்லியன் தொகையும இறால் செயற்திட்டத்திலிருந்து ரூபா 0.18 மில்லியன் தொகையுமாக ரூபா 4.22 மில்லியன் தொகையுமாக ரூபா 4.22 மில்லியன் கூட்டுத்தொகையான வாடகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை வருமானத்தைச் சேகரிப்பதற்கு கற்பிட்டி பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அரசாங்கத்தின் காணி நீண்காலமாக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2003 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் அறவிட வேண்டிய ரூபா 1.46 மில்லியன் கூட்டுத்தொகையான வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு பண்டுவஸ்நுவர (மேற்கு) பிரதேச செயலகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

மீளாய்வாண்டில் 38 சந்தர்ப்பங்களின் போது மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் ரூபா 134.62 மில்லியன் தொகையான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக உயிரியல் வைத்திய பொறியியலாளரின் சிபாரிசு இன்றி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபாரிசுகளை வழங்கியிருந்தது.

### கழிவுப்பொருள் முகாமைத்துவம்

நவகத்தேகம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் ஒன்றுசேர்கின்ற துண்டுக் குப்பைகளுக்காக கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நவகத்தேகம பிரதேச செயலாளரால் பொருத்தமான காணியொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்பாட்டிற்காக ரூபா 1.78 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு

முடியாதிருந்தமையால் அந்த நிதிஏற்பாடு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

### நிதியத்திற்காக பங்களிப்புப் பணம் செலுத்தாமை

மாகாண இயந்திர உபகரண அதிகாரசபையினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கூட்டுமொத்தமாக ரூபா 6.19 மில்லியன் பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பங்களிப்புப் பணம் செலுத்தாமையின் அடிப்படையில் ரூபா 5.24 மில்லியன் தண்டப்பணமும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

### சிறுநீரக நோயாளர்களை பரீட்சித்தல்

அம்பன்பொல, கொபெய்கனே, பொல்பித்திகம, கல்கமுவ, கிரிபாவ, நிகவெரட்டிய மற்றும் மஹவ பிரதேசங்களில் சிறுநீரக நோயாளர்களை இனங்காண்பதற்கும் உரிய நோயாளர்களை பரிசோதனை செய்வதற்கும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு ரூபா 5.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின்போது அந்த நிதிஏற்பாட்டில் ரூபா 1.58 மில்லியன் கட்டுநிதி கிடைத்திருந்தது. இதனால் மீளாய்வாண்டின்போது சிறுநீரக நோயாளர்களை பரிசோதனை செய்தல் எதிர்பார்த்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

### சுற்றாடல் மாசுபடுவதைத் தடுத்தல்

சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமல் கைத்தொழில்களை நடாத்திச் செல்லுகின்ற கைத்தொழில் உரிமையாளர்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக சுற்றாடல் விஞ்ஞாபனமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான கைத்தொழில்களின் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற இழப்புக்களை இழிவுபடுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வயம்ப சுற்றாடல் அதிகாரசபை உருவாக்கப்பட்டு 21 வருடங்களைக் கடந்திருந்த போதும் அதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### தொழில்நுட்ப ஆய்வுகூடத்திற்காக ஆசிரியர்கள் காணப்படாமை

வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள இரண்டாம் நிலை பாடசாலையில் 126 தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிசரையில் 36 பாடசாலைகளில் மாத்திரம் உயர்தர விஞ்ஞான/ கணித வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்த பாடங்களுக்குரிய ஆசிரியர்களின் பற்றாக்குறை 47 ஆக இருந்தது. 2015 ஆம் ஆண்டின் கல்விப் பொதுத்துராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சைக்கு 20 பாடசாலைகளிலிருந்து விஞ்ஞானம்/ காணிதப் பிரிவிலிருந்து 127 மாணவர்கள் தோற்றியிருந்த போதிலும் அதில் 11 மாணவர்கள் மாத்திரம் சித்தியடைந்திருந்தனர்.

### ஆகக் குறைந்த கேள்வியை நிராகரித்தல்

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் 15 Multipara Monitors கொள்வனவு செய்யும் போது சகல தொழில்நுட்ப மாதிரிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பராமரிப்புக் கிரயத்துடன் ரூபா 3.75 மில்லியனுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி நிராகரிக்கப்பட்டு பராமரிப்புக்

கிரயத்துடன் ரூபா 6.23 மில்லியன் தொகை குறிப்பிடப்பட்ட கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. இதனால் மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 2.48 மில்லியன் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### கைவிடப்பட்டிருந்த நிர்மாணச் செயற்பாடுகள்

மாகாண விதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு மற்றும் நிர்வாகம், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சினால் அட்டமுனே வித்தியாலய வளவில் கிராம அபிவிருத்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 900,000 செலவிடப்பட்டிருந்தது. பின்னர் அந்த நிர்மாண செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன.

### பெறுகைகள் வழிகாட்டி நடைமுறைகள் பின்பற்றப்படாமை

மாகாண விவசாயத் திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது 20,300, கன்னிவைக்கும் பொறிகள், 6250 மீற்றர் தடை வலைகள், 120 பப்பாசி அறுவடை செய்யும் உபகரணங்கள், 20 ஏணிகள், 755,300 கறுப்பு நிற பொலித்தீன் பைகள், 700 பொலித்தீன் துண்டுகள் மற்றும் 20,000 உறைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக போட்டியாளர் கேள்வி கோரப்படாமல் கூட்டுமொத்தமாக ரூபா 13.35 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 5 ஆம் வருட மாணவர் உதவிப்பணம் செலுத்தாமை

குருணாகல் வலய கல்வி அலுவலகத்தால் 15 பாடசாலைகளில் 176 புலமைப்பரிசில் பெறுனர்களுக்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 210,500 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### நீர் சுத்திகரிப்பு இயந்திரம் செயலிழந்தமை

உத்தரவாதக் கால எல்லையில் முழுமையாக செயலிழந்திருந்த ரூபா 3.40 மில்லியன் பெறுமதியான கிரிபாவ இஹலமரதன்கடவல இற்கு அண்மித்த நீர் சுத்திகரிப்பு முறைமைக்குப் பதிலாக புதிய சுத்திகரிப்பு முறைமையொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளில் வளங்களைப் பயன்படுத்தாமை

பொல்பித்திகம ரம்பே கலாசார நிலையம் ரூபா 9.02 மில்லியன் செலவில் 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 மே மாதம் வரையிலும் எதிர்பார்த்த பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மடஹபொல ஆரம்ப மருத்துவ சிகிச்சை நிலையத்தின் மேல் மாடியை பயன்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் கூறுகளாக்குவதற்காக ரூபா 1.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2017 மே மாதம் வரையிலும் அந்த மேல் மாடி எந்தப் பணிக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### நியமத்திற்குப் புறம்பாக இயந்திரக் கொள்வனவு

2014 ஆம் ஆண்டின் போது மாகாண கைப்பணித் திணைக்களத்தால் 60 கிலோ கிராம் இயலளவினையுடைய நூல் உலர்த்தும் இயந்திரம் ரூபா 1.76 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த இயந்திரத்திலிருந்து உலர்த்தக்கூடிய நூலின் அளவு 12.5 கிலோகிராம் ஆக

இருந்தமையால் அதன் பிரகாரம் தினமொன்றிற்கு 25 கிலோகிராம் நூல் மாத்திரம் உலர்த்தக்கூடியதாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட இயலளவு மட்டத்தில் காணப்படவில்லை.

### குளியாப்பிட்டி வைத்தியசாலையின் கழிவகற்றல் முறைமை செயலிழந்தமை

2008 ஆம் ஆண்டின் போது ரூபா 18.5 மில்லியன் செலவில் குளியாப்பிட்டி தள வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவகற்றல் முறைமை 2012 ஆம் அண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தொடர்ச்சியாக செயலிழந்தமையினால் கலிபவுசரின் மூலம் கழிவுகளை அகற்ற வேண்டியயேற்பட்டிருந்தது. இந்த மலசலகூட முறைமையை மீண்டும் புனரமைப்பதற்காக 2016 ஆம் ஆண்டின் போது மாகாண குறித்தொதுக்க நிதிஏற்பாட்டிலிருந்து ரூபா 15.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் செயற்படக்கூடிய நிலையில் காணப்படவில்லை.

# ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக கூட்டுமொத்தமாக ரூபா 22,979 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 18,587 மில்லியன் அரசாங்கத்தின் மானியம் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் ரூபா 2,685 மில்லியன் தொகையை உள்ளக மார்க்கங்களிலிருந்து சேகரிப்பதற்கும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதில் ரூபா 18,935 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காகவும் ரூபா 3,570 மில்லியன் மூலதனச் செலவினத்திற்காகவும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் அரசாங்க மானியத்தின் மூலம் ரூபா 18,588 மில்லியன் கிடைத்திருந்ததுடன் ரூபா 3,296 மில்லியன் உள்ளக மார்க்கங்களின் மூலம் சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 19,386 மில்லியன் தொகையும் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,998 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

ஊவா மாகாண சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் சுருக்கம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

## பிலிபைன்ஸ் மற்றும் தாய்லாந்தில் செயலமர்வு

அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கிய மனித மூலதன அடிப்படையிலான செயற்றிட்டத்தின் (TSEP) கீழ் 2016 சனவரி 10 ஆந் திகதி முதல் 24 ஆந் திகதி வரை பிலிபைன்சிலும் தாய்லாந்திலும் நடைபெற்ற பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம் மற்றும் பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் தொடர்பு செயலமர்விற்காக ஊவா மாகாண சபையின் 30 அரசாங்க உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். அதற்காக ஊவா மாகாண கல்வி அமைச்சால் ரூபா 30.88 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்காக செயற்திட்டத்தின் பெறுகைகள் திட்டத்தில் காண்பிக்கப்பட்ட இயலளவு அபிவிருத்தியின் நோக்கமான வலயக் கல்வி மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்கு முரனாக ஏனைய துறைகளிலுள்ள 10 உத்தியோகத்தர்கள் பங்குபற்றி அதற்காக ரூபா 10.67 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பயிற்சி நிறுவனத்தின் கணனிச் செயற்பாடு மற்றும் இயலுமை தொடர்பான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமல் அந்த நிறுவனத்திற்கு ரூபா 8.36 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## கிராமிய மின்வலு மற்றும் வலுசக்தி செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்

ஊவா மாகாண பிரதான அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி, காணி, கலாசார, சமூக நலன்புரி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாண அமைச்சின் கீழ் கிராமிய மின்சாரம் மற்றும் வலுசக்திக்காக ரூபா 10.00 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த செயற்பாட்டிற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 8.60 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. நிதி ஆணைக்குழு செயலாளரின் 2015 நவம்பர் 26 ஆந் திகதிய எப்சீ/3/2/2016 ஆம் இலக்க 2016 ஆம் ஆண்டின் வருடாந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்குரிய வழிகாட்டிக் கோவையின் 2.12 வழிகாட்டியின் ஏற்பாடுகளின் படி பொது மின்சார

நீடிப்பிற்காக மாத்திரம் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணானதாக வீடுகளுக்கு ஒற்றைமின்சார சுற்றுக்களை இழுப்பதற்காக நிதிஏற்பாடு செலவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. மாற்றுவழியில் மின்சார உற்பத்தியை வழங்குதல் மற்றும் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துதல் தொடர்பாக அமுல்படுத்த வேண்டிய வேலைத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### வெலிமட பிரதேச சபை மலம் அகற்றல் செயற்திட்டம்

உள்ளுராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் உதவியின் அடிப்படையில் வெலிமட நகரத்தில் மலம் அகற்றல் முறைமையை அமைப்பதற்கு 2011 பெப்ரவரி 10 ஆந் திகதி ரூபா 92.51 மில்லியன் தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மேலதிக வேலைகளை உள்ளடக்கி 2012 ஏப்ரல் 05 ஆந் திகதி ரூபா 109.61 மில்லியன் தொகையில் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரக் கம்பனியினால் 2013 சனவரி 14 ஆந் திகதி வெலிமட பிரதேச சபைக்கு செயற்திட்டம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் போது ரூபா 10.96 மில்லியன் தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்படாமல் நிறுத்தி வைத்தல் பணம் உள்ளடங்கலாக மொத்த உடன்படிக்கை செய்யப்பட்ட தொகையும் ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

- நலனாளிகளின் மலசலகூடங்களை விட உயர்வாக செயற்திட்டத்தின் மலம் அகற்றும் குழாய் முறைமை அமைக்கப்பட்டிருந்தது.
- மலக்கழிவுகள் களஞ்சியப்படுத்தப்படும் தாங்கியில் நீர் கசிந்தமை
- மதிப்பீடுசெய்யப்பட்ட மலம் அகற்றல் இணைப்புக்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்த போதிலும், பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் வழங்கப்பட்டிருந்த இணைப்புக்களின் எண்ணிக்கை 17 ஆக இருந்தது.
- மலம் அகற்றல் குழாய் முறைமை வெடித்துச் செல்லல் மற்றும் பிரதான ஒன்று சேரும் தாங்கியில் மலக்கழிவுகளுடன் நீர் வெளிச்சுற்றாடலுக்கு கசிந்து சென்றிருந்தது.

### அரசாங்கத்தின் காணிகள் வணிகச் செயற்பாடுகளுக்காக குத்தகைக்கு வழங்கல்

வெலிமட பிரதேச செயலக பிரிவிற்குரிய மீபிலிமானயில் அமைந்துள்ள 11.056 ஹெக்டேயர் உடைய நிலப்பகுதி வணிக நடவடிக்கைகளுக்காக 30 வருடகாலத்திற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு 2011 மே 09 ஆந் திகதி காணி ஆணையாளர் நாயகத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. காணி குத்தகைக்கு வழங்குதல் தொடர்பான குத்தகை உடன்படிக்கையில் கைச்சாததிடுவதற்கோ அல்லது குத்தகை உறுதியொன்றைத் தயாரிப்பதற்கோ வெலிமட பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணியில் 19 ஏக்கர் நில அளவொன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் வருடமொன்றிற்கு ரூபா 2.76 மில்லியன் வாடகைக்கு 2012 நவம்பர் 06 ஆந் திகதி முதல் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்காக தனியார் தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட

மதிப்பீட்டாளரின் 2012 யூன் 14 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2012 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஊவா மாகாண சபையின் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 8.68 மில்லியன் தொகையான வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணியில சட்டரீதியான அனுமதியின்றி பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மற்றும் குடியிருப்பு நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கின்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தேசிய இளைஞர் படையணி மற்றும் தனியார் தரப்பினர் தொடர்பாக வெலிமட பிரதேச செயலகத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

1979 இன் 42 ஆம் மாநகர சபை மற்றும் நகர சபை (திருத்த) அதிகாரச்சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 02 மாநகர சபைகள், 01 நகர சபை மற்றும் 25 பிரதேச சபைகள் என்பவற்றிலிருந்து அறவிடவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 77.59 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணமான ரூபா 74.32 மில்லியன் என்பன உள்ளுராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## கல்விச் செயற்பாடுகள்

ஊவா மாகாண சபையின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மொழிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றன.

- பண்டாரவல கல்வி வலயத்தில் 2014 – 2016 வரையான காலப்பகுதியில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (உயர் தரம்) பரீட்சை மற்றும் 2014 – 2015 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சை என்பவற்றுக்கு தோற்றிய மணவர்களில் ஒரு பாடசாலையில் மாத்திரம் 50 சதவீதத்திற்கு குறைவான மாணவர்கள் அந்த பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

- தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தின் கீழ் 68 பாடசாலைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3.59 மில்லியன் தொகையொன்று இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வலயக் கல்வி அலுவலகத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு 2016 யூன் மாதத்தின் போது அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தரத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

- ஊவா மாகாண பிரதம அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளுராட்சி, காணி, கலாசார, சமூக நலன்புரி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்மாண அமைச்சினால் ரூபா 15.00 மில்லியன் செலவில் ஊவா மாகாணத்தின் பாடசாலைகளுக்காக 2600 மாணவர் மேசைகளும், 2600 மாணவர் கதிரைகளும், 867 மாணவர் மேசைகள் மற்றும் 1734 சிறுவர் கதிரைகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதில் சில மாணவர் மேசைகள் மற்றும் கதிரைகள் அங்கீகரிக்கப்பட்ட

மாதிரிகளுக்கு இணங்காத வகையில் பலகை இடப்பட்டிருந்ததுடன் ஆணித் தலைகள் மறைக்கப்படாமையினால் பலகைகளுக்கிடையே இடைவெளிகளும் காணப்பட்டன. சில மாணவர் மேசைகளில் சுற்றிவர பலகை வெடித்திருந்தது.

## விவசாய நடவடிக்கைகள்

மாகாண விவசாயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றது.

- ஊவா மாகாணத்தில் வாழ்ந்து வருகின்ற 1.33 மில்லியன் அளவான சனத்தொகையில் 0.4 மில்லியன் அதாவது 30 சதவீதமானவர்களின் பிரதான ஜீவனோபாய மார்க்கம் விவசாயமாகும். அதன் பிரகாரம் மாகாண விவசாய அமைச்சால் "போசணையென் சப்பிரி சௌபாக்கியமத் ஊவ வெல்லஸ்ஸக்" என்ற தூர நோக்கின் கீழ் மாகாண விவசாயம் சார்ந்த உற்பத்தி அபிவிருத்திக்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 370 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் அந்தச் செலவினம் ரூபா 80 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டில் ரூபா 290 மில்லியன் அதிகமாக செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய உற்பத்திகளின் அளவில் குறைவு ஏற்பட்டிருந்தது. விபரம் அட்டவணை 42 இல் காண்பிக்கப்படுகின்றது.

| பயிர் வகைகள் | ஆண்டு | | 2015 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக குறைவு |
|---|---|---|---|
| | 2015 | 2016 | |
| நெல் பயிரிடும் நிலத்தின் அளவு | | | |
| பெரும் போகம் (ஹெக்டேயர்) | 525,575 | 45,140 | 480,435 |
| சிறு போகம் (ஹெக்டேயர்) | 26,264 | 23,057 | 3,207 |
| வருடாந்த நெல் உற்பத்தி | | | |
| பெரும் போகம் (மெ.தொன்) | 1,944,627 | 167,017 | 1,777,610 |
| சிறு போகம் (மெ.தொன்) | 97,179 | 85,312 | 11,867 |
| உருளைக் கிழங்கு | | | |
| பயிரிட்ட நிலத்தின் அளவு (ஹெக்டேயர்) | 4,296 | 3,757 | 539 |
| வருடாந்த உற்பத்தி (மொ.தொன்) | 64,438 | 56,367 | 8,071 |
| மேலதிக பயிர்கள் | | | |
| மேலதிக பயிர் உற்பத்தி (ஹெக்டேயர்) | 45,678 | 32,609 | 13,069 |
| மேலதிக பயிர் உற்பத்தி (மெ.தொன்) | 121,576 | 100,313 | 21,263 |
| மரக்கறி | | | |
| மரக்கறி பயிரிடப்படுகின்ற நிலத்தின் அளவு (ஹெக்டேயர்) | 13,114 | 12,202 | 912 |
| வருடாந்த மரக்கறி உற்பத்தி (மெ.தொன்) | 167,752 | 151,521 | 16,231 |

அட்டவணை :- 42 ஊவா மாகாணத்தில் பயிர்செய்யப்பட்ட விவசாய நிலத்தின் அளவும் விளைச்சலும்

மூலம் :- ஊவா மாகாண விவசவா மாகாண விவசாய திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவின் தரவுகள்

- ஒக்கம்பிட்டிய நாற்று மேடையில் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த 03 உழவு இயந்திரங்கள், கை உழவு இயந்திரம் ஒன்று மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரம் அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஊவா மாகாண விவசாயத் திணைக்களத்தினால் அலுவலக உதவியாளர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக மாகாண விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட 06 தொழிலாளர்களுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 3.19 மில்லியன் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

- பதுளை பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும், பிரதேசங்களில் தொடர்பினை ஏற்படுத்துவதற்குத் தேவையான 37 விவசாய போதனாசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஊவா மாகாண நிதி விதி 510.2 இன் பிரகாரம் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிலிருந்து உருவாகின்ற

இலாபம் மாகாண சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை மூலதன மாற்றக் கூற்றின் பிரகாரம் திரண்ட இலாபம் ரூபா 9.35 மில்லியன் மாகாண சபை நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

- ஊவா மாகாண நிதி விதி 501.3 இ விதிக்கு முரணாக உரிய விடய இலக்கம் 71402 என்ற ஒக்கம்பிட்டிய நாற்றுமேடை முற்பணக் கணக்கின் நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டிற்குரிய ஆகக்கூடிய வரவு மீதி எல்லை ரூபா 1.91 மில்லயனால் விஞ்சியிருந்தது.

## சுகாதார நடவடிக்கைகள்

மாகாண சுகதாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் சுருக்கமாக்கப்பட்டு கீழே காண்பிக்கப்படுகின்றன.

- 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாணசபையின் சுகாதார சேவையின் முக்கியமான பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 2,861 ஆக இருந்ததுடன் அதில் 608 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

- 06 மாகாண வைத்தியசாலைகளுக்கு 2016 ஆம் ஆண்டில் பச்சை/ சமைத்த உணவு வழங்கல் தெடர்பாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவயின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்திருந்த கேள்வி நிராகரிக்கப்பட்டு அதற்கு கூடிய விலை சமர்ப்பித்த கேள்வி ஏற்றுக்கொள்ளப்படாமையின் காரணமாக மாகாண சபை நிதியத்திற்கு ரூபா 7.80 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

- மஹியங்கனை வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் 2014 ஆகஸ்ட் 13 ஆந் திகதி முதல் 2016 ஆகஸ்ட் மாதம் வரையான காலத்தில் ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 2.08 மில்லின் சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது.

- மஹாவலி செயற்திட்டத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டின் போது கிராந்துறுக் கோட்டே பிரதேச வைத்தியசாலை ஸ்தாபிக்கப்பட்டு 32 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் வைத்தியசாலைக்குரிய நிலத்தை ஊவா மாகாண சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- பதுளை பிரதேச சுகாதார சேகைள் பணிப்பாளர் அலுவலத்திற்குரிய ஒட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 06 வாகனங்கள் 04 வருடங்கள் அளவிலான காலத்திலிருந்து உரிய அகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குச் சொந்தமான சுகாதார கல்விப் பிரிவில் தரித்து வைக்கப்பட்டிருந்தன.

- வெலிமட ஆதார வைத்தியசாலைக்குச் சொந்தமான 0.409 ஹெக்டேயர் காணி அளவு 11 வெளித்தரப்பினர்களினால் அனுமதியற்ற வகையில் கைப்பற்றி உரித்து கோரியிருந்ததுடன் அந்த

அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- வெலிமட ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட ரூபா 9.29 மில்லியன் பெறுமதியான சத்திரசிகிச்சை உபகரணங்கள் மற்றும் ரூபா 3.56 மில்லியன் பெறுமதியான துணி கழுவும் இயந்திரமொன்று என்பன 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலகமாக விளைவற்றுக் காணப்பட்டது.

- தியத்தலாவ ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட Ophthalmoscopy உபகரணம் 2017 பெப்ரவரி வரையும் பயன்படுத்தப்படாது விளைவற்று தியத்தலாவ ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பொருள் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

- மஹியங்கனை வைத்தியசாலைக்குரிய சகல வசதிக்கும் பூரணப்படுத்தப்பட்ட கண் சத்திர சிகிச்சைக்கூடமொன்று காணப்பட்ட போதிலும், கண் சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர் நியமிக்கப்படாமையின் காரணமாக 2013 மே மாதமம் முதல் அது விளைவற்றுக் காணப்பட்டது.

- 2016 ஆகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பாதுகாப்புக் கொட்டகையின் வருகை மற்றும் வெளிச் செல்லும் பதிவேட்டின் பிரகாரம் பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் 05 வாகனங்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போது 39 சந்தர்ப்பங்களில் 6597 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபட்டதாக போலியாக ஓட்ட அட்டவணையில் எழுதப்பட்டிருந்தது.

- மாகாண சபை நிதி விதி 762.1 இன் பிரகாரம் போதியளவான இருப்பு மட்டமொன்றைப் பேணிச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தாதிருந்தமையின் காரணமாக தியத்தலாவ ஆதார வைத்தியாலையில் ரூபா 888,184 பெறுமதியான 29 வகையான மருந்து இருப்புக்களும், பெறுமதி கணிப்பிடப்படாத 15 வகையான மருந்து இருப்புக்களும் காலாவதியாகி, பழுதடைந்து பாவனையிலிருந்து அகற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது.